# அறிஞர்களின் பார்வையில் பேரறிஞர் அண்ணா




பதிப்பாசிரியர்

**மு. வளர்மதி**



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# அறிஞர்களின் பார்வையில்
# பேரறிஞர் அண்ணா

(கருத்தரங்கச் சொற்பொழிவுகள்)

பதிப்பாசிரியர்
முனைவர் மு. வளர்மதி

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Ariñarkaḷ pārvaiyil pērariñar aṇṇa |
| Editor | : | Dr. M. Valarmathy<br>Associate Professor<br>Department of Overseas of Tamil<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 671 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | xvii + 309 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.145/- (Rupees One Hundred Forty Five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>43/95, Millers Road<br>Kilpauk, Chennai - 600 010. |
| Subject | : | Speeches on Anna |

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

அண்ணா நூற்றாண்டு விழாவினைத் தமிழகம் கொண்டாடி அண்ணாவையும் அவர்தம் கொள்கைகளையும் நினைவு கூர்ந்துள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பேரறிஞர் அண்ணாவைப் போற்றும் வகையில் அண்ணாவோடு உறவாடியவர்கள் அண்ணாவின் கொள்கைகளை இத்தலைமுறைக்கு எடுத்துக் கூறிவருவோர் என உள்ளோரை அழைத்துப் பேசச் செய்து அவர் தம் பேச்சுக்கள் எழுத்துருவாக்க நிலை பெற்றிட வழிவகை செய்தோம். அம்முயற்சியின் விளைவிலேயே இந்நூல் மலர்ந்துள்ளது.

மேனாள் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப. அவர்கள் தமது வாழ்த்துரையில், அண்ணா ஒரு தமிழ் இலக்கியவாதி, சிறந்த அரசியல்வாதி, மொழிப்புலமைவாதி, சமூகச் சிந்தனைவாதி, பகுத்தறிவாதி, சமூகச் சுடரொளி, தமிழ் இனப் போராளி, சமூக நீதிப் போராளி எனப் பல்வேறு தளங்களில் அண்ணாவின் பரிமானங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்ட அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் வழங்கிய சிறப்புரையில் அண்ணாவின் அரசியல் நிலைப்பாடு, மனிதநேயம், தமிழ் உணர்வு ஜனநாயகம் குறித்தெல்லாம் சுட்டி அண்ணாவின் ஆளுமைத் தன்மையை விளக்கியுள்ளார்.

பேராசிரியர் மருதநாயகம் அவர்களின் உரை நாடாளுமன்றத்தில் அண்ணா முன் வைத்த மொழிக் கொள்கை, இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்பு, பொருளாதாரக் கொள்கை போன்ற பல பொருண்மைகளை விளக்குவதாக அமைந்துள்ளது.

முனைவர் அவ்வை நடராசன் அவர்கள் அண்ணாவின் தமிழ் உணர்வு குறித்துப் பேசியது இங்கு எழுத்துருவாக அமைந்துள்ளது. ''தம்பிக்கு கடிதங்கள்'' எனும் பதிவியிலிருந்து பின்வரும் கருத்துப் பொதிந்த எழுத்துக்களை நினைவு கூர்ந்தார். ''தம்பி தம்பி ஏன் பிறந்தோம் இந்த நாட்டில் பிறந்திடினும் தொதவர், தொம்பரவர் போல் பிறந்து தொலைந்திடக் கூடாதா! ஏனோ நம்மை எல்லாம் தமிழர் என்ற இன உணர்வும், அதனாலாய பெருமையினையும் பெறுமாறு நாவலரும் பாவலரும் செய்துவிட்டனர். அதனாலன்றோ நமக்கு நமது நாட்டின் அந்நாள் ஏற்றம் தெரிகிறது; தெரிவதனாலன்றோ இன்றுள்ள இழி நிலையும், இனி எதிர்காலம் எப்படியோ என்ற அச்சமும் பிடித்தாட்டுகிறது. அல்லற்படுகிறோம். அழுது நிற்கிறோம்'' என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

அண்ணாவின் கவிதைகள் குறித்து பேரா. கவிவேந்தர் மு.மேத்தா தன் பேச்சினை எழுத்துருவாக்கி இந்நூலில் தந்துள்ளார். அண்ணாவின் கவிதைகளை பெரியார், கலைஞர் எழுத்துக்களோடு பொருத்திக் காட்டிய ஆய்வுரையாக அது அமைந்திருந்தது.

'அண்ணா: வாழும் இலக்கியம்' குறித்து பேரா. முனைவர் கா. செல்லப்பன் அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு, சந்திரமோகன், நல்ல தம்பி போன்ற நாடகப் பிரதிகள் வழியிலும், அண்ணாவின் புதினங்கள் வழியிலும் சிறுகதைகள் வழியிலும், கவிதைகள் வழியிலும் பல சான்றாதாரங்கள் தந்து விளக்கியுள்ளார்.

அண்ணாவின் நாடக இலக்கியப் பணி குறித்து முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பல எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கியுள்ளார். 'இலக்கியத்தோடு கலந்து மக்களுக்கு அவர் ஊட்டிய கருத்துக்களால் தான் இயக்கம் வேகமாக வளர்ந்தது. நாங்கள் எல்லாம் அப்போது மாணவர்கள். பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள், 'மாணவர் முன்னேற்றக் கழகம்' என்ற ஓர் அமைப்பு எல்லாக் கல்லூரிகளிலும் இருந்த கால கட்டம்'. எனப் பல நினைவுகளை அண்ணாவின் இலக்கியச் சிந்தனைகளை முன் வைத்து உரையாற்றியுள்ளார்.

திரு. சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் பேச்சுக்கலை என்பதைக் குறித்தும் அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள் குறித்தும் ஒரு வரலாற்றுப் பார்வையுடன் மிகுந்த எடுத்துக்காட்டுகள், செய்திகள் அடங்கிய ஒரு எழுத்துருவை வழங்கியுள்ளார். அண்ணாவின் சொற்பொழிவுத் திறமைகளை அவர் எடுத்துச் சொல்லும் விதம் சிறப்பாகவும், மிகுந்த சுவைபடவும் அமைந்துள்ளன. இது வாசக பெருமக்களைக் கவரும் என்பதில் சிறிதளவும் அய்யமில்லை. மேலும் சிலம்பொலி அவர்களின் விரிந்த, ஆழ்ந்த வாசிப்புத் தன்மையையும் இது காட்டுவதாக அமைந்துள்ளது.

'அண்ணாவின் பயிற்று மொழிக் கொள்கை' குறித்து பேரா. முனைவர் அ. இராமசாமி அவர்கள் ஆட்சிப் பீடத்திலே ஆங்கிலம், ஆலயத்திலே சமஸ்கிருதம், இசையரங்கிலே தெலுங்கு, எல்லை ஓரத்திலே இந்தி, இப்படித் தமிழுக்குத் தொல்லை எல்லாப் பக்கமும் வந்து கொண்டிருந்தது. இந்தச் சூழலில் அண்ணாவின் மொழிக் கொள்கையின் தேவை என்பதைத் தம் உரையில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

நீதியரசர் பு. இரா. கோகுலகிருட்டிணன் அவர்கள் பேரறிஞர் அண்ணா ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து சமூதாயம் போற்றும் மாமனிதராக வளர்ந்தார் என்பதை விளக்கும் வகையிலும், அண்ணாவின் ஆட்சிக்காலத்தில் நடைப்பெற்ற மாற்றங்களை விளக்கும் வகையிலும் அண்ணாவோடு தனக்கு ஏற்பட்ட தொடர்பு குறித்தும் தன்னுடைய உரையை மிகச் சிறப்பாக வழங்கியமைக்கு நன்றி.

திங்கள் கருத்தரங்கு வரிசையில் முதலாவதாக இடம்பெற்றுள்ள திரு. டிகே.எஸ். இளங்கோவன் பேரறிஞர் 'அண்ணாவின் அரசியல் நாகரிகம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இதில் அரசியல் வாழ்வில் மாற்றுக் கருத்துக்களை உடைய தலைவர்களிடையே அண்ணா எத்துணைப் பெருந்தன்மையுடன் போற்றிப் பாராட்டும் வகையில் நடந்துக் கொண்டார் என்பதைப் பல நிகழ்ச்சிகளை சான்றுகளைக் கொண்டு சிறப்பாக விளக்கினார். 'அண்ணாவும் பிறநாட்டறிஞர்களும்' எனும்

தலைப்பில் கவிஞர் தமிழச்சி தங்க பாண்டியன் அவர்கள் உலக இலக்கியங்களுடன் அண்ணாவின் சிந்தனைகளை ஒப்பிட்டுப் பேசிய பேச்சு எழுத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது. 'கிரேக்கம் ரோம, இத்தாலி, அமெரிக்கா எனப் பல நாட்டறிஞர்களுடன் அண்ணா ஒப்பீடு செய்யப்பட்டதாக அந்த உரை அமைந்திருந்தது நினைவில் பசுமைப் பதிவுகளாயின. தமிழ் மறுமலர்ச்சியில் அறிஞர் அண்ணாவின் பங்களிப்பு குறித்து பேரா.முனைவர் மறைமலை இலக்குவனார் சிந்தனைக்கு விருந்தாகப் பல கருத்துகளை முன்வைத்துள்ளார் காட்டாக: அண்ணா உருவாக்கிய மறுமலர்ச்சி தமிழ் மொழியையும் தமிழையும் ஒருங்கே உயர் நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றல்மிக்கது என முன் வைத்து எடுத்துக் காட்டுகள் தந்து விளக்கியுள்ளார்.

பேரா. முனைவர் அருணா இராசகோபாலன் அவர்கள் வரலாற்று நோக்குடன் இந்திய சமூக அமைப்பையும், அதில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், சாதிய ஒடுக்குமுறைகளை குறிப்பிட்டு, சமுதாய நீதி, பொதுஉடைமை நோக்குடன் அறிஞர் அண்ணாவின் அறிவு விழிப்புணர்ச்சி மிக்க செயல்பாடுகள், அவர் படைத்த புரட்சி இலக்கியங்கள், அவருடைய போராட்டங்கள், அவருடைய சொற்பொழிவுகள் அனைத்தும் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ளன என்பதை ஒரு சிறு நூல் அளவிற்கு தன்னுடைய உரையை எழுத்துருவாக்கி வழங்கியுள்ளார்.

'மகளிர் முன்னேற்றத்தில் அண்ணாவின் பங்களிப்பு' குறித்து திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன் அவர்கள் அண்ணாவின் கொள்கைகளான சுயமரியாதைக் கொள்கை வாழ்க்கை வாழ்ந்து வருகின்றமையை நினைவு கூர்ந்தார். அண்ணாவின் வாழ்க்கையை 4 வகைப்படுத்தி கல்வி, பெரியார் நினைவுக் காலம், பெரியாரிடமிருந்து பிரிந்தகாலம், திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கி 1967இல் ஆட்சிப் பொறுப்பேற்றமை எனச் சிறப்பாக விளக்கிப் பேசினார். அறிஞர் அண்ணாவின் மக்களாட்சி நோக்கு குறித்து எஸ்.பி. சற்குணபாண்டியன் தன் அரசியல் அனுபவத்துடன் கலந்து அண்ணாவின் சிந்தனைகளை

காலவாரியாக 1935, 1944, 1947, 1957, 1965 என அமைத்து வழங்கியுள்ளது சிறப்புக்குரியதாகும்.

பேரா. முனைவர் சா. வளவன் 'அறிஞர் அண்ணாவின் படைப்புகள்' குறித்துப் பேசினார். பொருளியல், அறிவியல், படைப்பியல், இலக்கியவியல்-முதலியவற்றையெல்லாம் அண்ணாவின் கொள்கை மற்றும் சிந்தனைகளுடன் அண்ணாவின் நாடக எழுத்துருக்களுடன் பொருத்தி அண்ணாவின் சிறப்புக்குரிய சிந்தனைகளை விளக்கியுள்ளார்.

வழக்குரைஞர் வீ.சு.இராமலிங்கம் 'பேரறிஞர் அண்ணாவின் ஆளுமை' எனும் தலைப்பில் உரையாற்றும் பொழுது அண்ணாவின் மறைவு தமிழ் மக்களை எவ்வாறெல்லாம் பாதித்தது, எப்படியெல்லாம் துயருற்றனர், அவருடைய இறுதி ஊர்வலம் தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது என்பதைக் குறிப்பிட்டார்.

இந்திய மெய்யியல் வரலாற்றில் அறிஞர் அண்ணா எனும் கருத்து முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்களால் முன்வைக்கப்பட்டது. ஆரியம் கண்டாய், தமிழன்கண்டாய், வாய்மையும் சத்தியமும் எனும் பல நிலைகளின் வழி விரிவான சிந்தனைக் கருத்துக்கள் மிளிர்ந்தன.

பகுத்தறிவுச் சிந்தனைகள் அண்ணாவின் நாடகங்களில் எவ்வளவு அழுத்தமாக, ஆழமாக பதிவு செய்யப்பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை வழக்குரைஞர் அ. அருள் மொழி விளக்கியுள்ளார்.

'தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும்' என்ற தலைப்பில் உரையாற்றிய கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்கள் பெரியாரும் அண்ணாவும் ஒன்றிணைந்து தமிழகத்தில் ஏற்படுத்திய மறுமலர்ச்சிகளை பலவாறு எடுத்துக்காட்டி விளக்கினார். மேலும் இருவரும் ஒருவருக்கொருவர் எத்துணை அன்போடும் பாசத்தோடும் வாழ்ந்தனர் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் பல சுவையான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ளார்.

இலட்சிய நடிகர் ‘கலை வானில் அண்ணா’ எனும் தலைப்பில் அவர் பேசிய பேச்சில் அண்ணாவுடன் வாழ்ந்த அரசியல் வாழ்க்கை; கலை வாழ்க்கை நினைவு கூறப்பட்டிருந்தது. கலைமாமணி கவிஞர் வேழவேந்தன் தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் என்னும் உரை இந்தத் தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டிய அனுபவப் பாடங்களாகவே இருந்தன. இவ்வாறு இந்த ஆண்டு முழுவதும் பலரும் எம் ஆய்வு மாணவர்களிடையேயும் பல தமிழ் ஆர்வலர் மற்றும் அறிஞர்களிடையேயும் செய்த பொழிவுகளின் சாரங்கள் இங்கு எழுத்துருக்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அண்ணா பிறந்த நாள் நூற்றாண்டின் அடையாளமாக அண்ணாவால் முன்னெடுக்கப்பட்ட இந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன் பங்குக்கு இந்த அருமைவாய்ந்த அண்ணா குறித்த சிந்தனைப் பெட்டகத்தை மலராக உங்கள் கரங்களிலே சிந்தைகளிலே கொண்டு வருவதிலே எமக்குப் பெரும் மகிழ்ச்சி.

இத்தகைய அரும்பணி ஆற்றிட ‘பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை’ எனும் பெயரில் தமிழக அரசு 2004-2005ஆம் ஆண்டு ரூபாய் பத்து இலட்சம் வழங்கி நிறுவனத்திற்குத் தனிச் சிறப்பை அளித்துள்ளது. அப்பொழுது நிறுவனத்தின் இயக்குநராக இருந்த பேரா. முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி இந்த அறக்கட்டளை வழி பேரறிஞர் அண்ணாவைப்பற்றி ஆய்வு செய்யும் ஆய்வியல் நிறைஞர் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் ஒரு திட்டத்தினையும் தொடங்கிட வழிவகைசெய்தமைக்கு நன்றி. பெருந்தொகை வழங்கி பேரறிஞர் அண்ணாவின் பெயரில் அறக்கட்டளை நிறுவிய தமிழக அரசுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம் மலர் உருவாகத்துணை நின்ற பேரா. வளர்மதி அவர்களுக்கு எனது நன்றி. பலபெருமக்கள் இம்மலர் உருவாகிடத் தங்கள் எழுத்துருக்களைத் தந்துள்ளமைக்கு எம் நன்றிகள் என்றும் உண்டு. கருத்தரங்கு நிகழ்வுகளில் தலைமையுரை வழங்கி சிறப்பித்த அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும் எமது நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன் பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. ஆர். சிவக்குமார் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# பதிப்புரை

ஒரு நாட்டில் வாழும் மக்களின் முதல் அடையாளம் மொழி. 'தமிழ்' என்னும் சிறந்த மொழி அடையாளத்தைப் பெற்றிருக்கும் தமிழர்களுக்கு அதைப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் முக்கியக் கடமையாகும். தமிழ் மொழி வளர்ச்சி என்ற நிலையில் பாமரர் முதல் புலவர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள், புரவலர்கள், ஆட்சியாளர்கள் எனப் பலரும் தொன்று தொட்டு பங்களிப்புச் செய்து வருவதால் தற்காலத்தில் மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முயற்சியால் 'தமிழ் செம்மொழி' எனும் தகுதியைப் பெற்று பெருமைக்குரிய ஒன்றாக விளங்குகிறது.

இருபதாம் நூற்றாண்டில் விடுதலைக்குப் பின் தமிழகத்தை ஆண்ட ஆட்சியாளர்கள் தம் தாய்த் தமிழை வளர்ப்பதைக் கருத்தில் கொண்டு உலகத் தமிழ் மாநாடுகளையும், தமிழ் ஆய்வு நிறுவனங்களையும் தொடங்கினர். அவ்வாறு தொடங்கப்பட்ட நிறுவனங்களில் குறிப்பிடத்தக்கது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். 1968ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் 'தமிழிற்கு உயர் மைய ஆராய்ச்சி நிறுவனம்' ஒன்றைத் தொடங்க வேண்டும் என்னும் கருத்தைத் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சராக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிஞர்கள் முன் எடுத்துரைத்தார். அதே வேளையில் பூனேயில் உள்ள தக்கணக் கல்லூரி முதுகலை ஆராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராக இருந்த டாக்டர் கத்ரே என்னும் அறிஞர் உலகத் தமிழராய்ச்சி நிறுவன அமைப்பிற்கு உரிய முன் வரைவுத் திட்டம் ஒன்றை, அக்கருத்தரங்கில் ஆய்வுரையாக வழங்கினார். அத்திட்டத்தில் பரந்துபட்ட நிலையில், தமிழ்மொழி, இலக்கிய, பண்பாட்டு ஆராய்ச்சியை நடத்துவதற்குரிய நெறிமுறைகளை அவர் வகுத்தளித்தார்.

மாநாட்டின் நிறைவு விழாவில் அத்திட்டத்தினை அறிஞர் அண்ணா மகிழ்வுடன் வரவேற்றார். அவர் தம் உரையில்

> **பிரான்சு நாட்டிலுள்ள பிரெஞ்சு மொழிக் கலைக்கழகத்தைப் போன்ற நிலையில் நாம் அதனை உருவாக்க வேண்டும். அக் கலைக் கழகத்தின் அடிப்படைகளையும் நெறிமுறைகளையும் பின்பற்றி இங்குத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை அமைப்போமானால் சிறப்பு மிகு 'இந்தியக் கலைக்கழகத்தை' அல்லது 'தமிழகக் கலைக் கழகத்தை' நாம் உருவாக்க இயலும். அப்பொழுதுதான், நமது தமிழ்மொழி ஆராய்ச்சிக் கழகம் உலகளாவிய நிலையில் வீறுடன் விளங்க இயலும்**

என்று அவர் தெரிவித்தார். இந்தக் கருத்தரங்கில்தான் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தை நிறுவவேண்டும் என்னும் எண்ணம் முதன்முதலாக எழுந்தது. இந்த எண்ணத்தின் விளைவாக இந்த நிறுவனத்தை உருவாக்குவதற்கு யுனெஸ்கோவின் உதவியை அறிஞர்கள் நாடினர். அறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கும் இம்முயற்சிக்கு யுனெஸ்கோவின் முக்கிய பொறுப்பிலிருந்த (Director General) மதிப்பிற்குரிய டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, போற்றுதலுக்குரிய அறிஞர் தனிநாயகம் அடிகள் ஆகியோரின் செயலாக்கம் மிக்க நடவடிக்கைகளால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாக்கம் பெற்றது.

அறிஞர் அண்ணாவின் நினைவுக்குரிய ஒன்றாக, விளங்குகின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அவருடைய நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் **'பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை'** கருத்தரங்கு *18.9.2008-19.9.2008* ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. இந்த அறக்கட்டளையை நிறுவிய தமிழக அரசுக்கும், அப்பொழுது இயக்குநராக பணியாற்றிய பேரா. முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் **'பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா'** தொடர் கருத்தரங்கு, திங்கள் கருத்தரங்காக *30.10.2008* முதல் *12* கருத்தரங்குகள் நடைபெற்றன. இவ்விரு நிகழ்வுகளிலும் பங்கு பெற்று பேரறிஞர் அண்ணாவின் சிறப்புகளை, பல்வேறு நினைவுகளை அறிஞர்கள் எடுத்துக்கூறி ஆற்றிய உரைகளின் தொகுப்பாக **'அறிஞர்களின் பார்வையில் பேரறிஞர்**

**அண்ணா'** எனும் ஒரு பொதுத் தலைப்பில் இந்நூல் வெளியிடப்படுகிறது.

சில அறிஞர் பெருமக்களின் உரைகளை ஒலிப்பேழையிலிருந்து கேட்டு எழுத்துருவாக்கி வழங்கிய முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் சு. அன்னியப்பன், பிரபுக்கண்ணன், ஆ. குபேந்திரன், ச.லோகேஷ், சி. முடியரசன், எ. பாவலன், ஆ. ஜீவா, ப. ஜெயசெல்வி ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றி.

18.9.2009-19.9.2008 ஆகிய இருநாட்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை நிகழ்வில் பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன் பேராளர்களை வரவேற்று உரையாற்றினார்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலர் **திரு. க. முத்துச்சாமி இ.ஆ.ப.,** அவர்களும் மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் **பேரா. முனைவர் ப. மருதநாயகம்** அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். அவருடைய எழுத்துரை 'மாநிலங்களவையில் அண்ணா' எனும் தலைப்பில் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்ட அமைச்சர் **திரு. துரைமுருகன்** அவர்கள் சிறப்புரையாற்றினார். 1. **முனைவர் ஔவை நடராசன்** (அண்ணாவின் தமிழ் உணர்வு) 2. **பேரா. கவிவேந்தர் மு. மேத்தா** (அண்ணாவின் கவிதைகள்) 3. **பேரா முனைவர் கா. செல்லப்பன்** (அண்ணா: வாழும் இலக்கியம்) 4. **பேரா. முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்** (அண்ணாவின் இலக்கியப்பணி) 5. **முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்** (அண்ணாவின் சொற்பொழிவுகள்) 6. **முனைவர் அ. இராமசாமி** (அண்ணாவின் பயிற்றுமொழிக் கொள்கை) ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்று தங்கள் சொற்பொழிவுகளை வழங்கிச்சிறப்பித்தனர். **நீதியரசர் பு.இரா.கோகுல கிருட்டிணன்** அவர்கள் நிறைவுரையாற்றினார்.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டில் 2008 ஆம் ஆண்டு திங்கள்தோறும் நடைபெற்ற கருத்தரங்கில்- 1. **திரு டி.கே.எஸ். இளங்கோவன்** (அண்ணாவின் அரசியல் நாகரிகம்-30.10.2008) 2. **கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்** (அண்ணாவும் பிறநாட்டு அறிஞர்களும் - 28.11.2008) 3. **பேரா. முனைவர் மறைமலை இலக்குவனார்** (தமிழ் மறுமலர்ச்சியில் அறிஞர் அண்ணாவின் பங்களிப்பு - 4.12.2009) 4. **முனைவர் அருணா**

**இராசகோபாலன்** (அறிஞர் அண்ணா பண்பாட்டு மறுமலர்ச்சியின் தாய்-30..1.2009) 5. **திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்** (மகளிர் முன்னேற்றத்தில் அண்ணாவின் பங்களிப்பு-27.2.2009) 6. **திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்** (அறிஞர் அண்ணாவின் மக்களாட்சி நோக்கு-16.3.2009) 7. **பேரா. முனைவர் சா. வளவன்** (பேரறிஞர் அண்ணாவின் படைப்பிலக்கியங்கள்-23.4.2009) 8. **வழக்குரைஞர் வீ.சு. இராமலிங்கம்** (பேரறிஞர் அண்ணாவின் ஆளுமை - 6.5.2009) 9. **பேரா. முனைவர் க. நெடுஞ்செழியன்** (இந்திய மெய்யியல் மரபில் அறிஞர் அண்ணாவின் இடம்-30.6.2009) 10. **வழக்குரைஞர் அ. அருள்மொழி** (அண்ணாவின் நாடகங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்-23.7.2009) 11. **கவிவேந்தர் கா. வேழவேந்தன்** (தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் 27.8.2009) 12. **இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன்** (கலை வானில் அண்ணா-11.9.2009)

ஆகியோர் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா தொடர் கருத்தரங்கில் பங்குபெற்று தங்களின் பொழிவுரையை வழங்கினர். பல்வேறு பணிகளுக்கிடையே தங்கள் பங்களிப்பைச் செலுத்திய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி. தங்கள் பொழிவுரையை எழுத்துருவாக அளித்த அறிஞர் பெருமக்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தொடர் கருத்தரங்கிற்கு முறையே பேரா. முனைவர் இராம குருநாதன், பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன், பொறியாளர் கெ. பக்தவத்சலம், கவிஞர் கலி.பூங்குன்றன், பேரா. முனைவர் ப. இரா. அரங்கசாமி, பேரா. முனைவர் இராசகோபால், கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் இளையபாரதி, பேரா. முனைவர் நா. செயப்பிரகாசு, கலைமாமணி கவிஞர் பொன்னடியான் ஆகியோர் தலைமையேற்று அறிஞர் அண்ணாவின் சிறப்புகளை எடுத்துக்காட்டி தங்களின் பொழிவுரையை வழங்கிச் சிறப்பித்தனர். இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட இப்பெருமக்கள் அனைவர்க்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்கிற்கு அறிஞர் அண்ணாவைப் பற்றி உரையாற்ற பேராளர்களின் பட்டியலை வழங்கி இக்கருத்தரங்கு சிறப்புற நடைபெற உறுதுணையாக அமைந்த **மாண்புமிகு**

**நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி.கே.எஸ். இளங்கோவன் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களின் உரையை எழுத்துருவாக்கி உதவிய திரு. தி. சிற்றரசு அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்குகள் அனைத்தும் சிறப்புற நடத்தவும், அதன் பயனாக இவ்வுரைகள் நூல் வடிவம் பெறவும் பெரிதும் உறுதுணையாக அமைந்த **இயக்குநர் பேரா. கரு. அழ. குணசேகரன்** அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி. இந்நூல் இறுதி வடிவம் பெறும் நிலையில் பிழைதிருத்தம் சரிபார்த்து உதவிய முதுநிலை ஆராய்ச்சியாளர்-அயல்நாட்டுத் தமிழர் புலம் முனைவர் கு. சிதம்பரம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த எழுத்துருவை ஒளியச்சு வடிவமாக்கி வழங்கிய திருமதி பா. கௌசல்யா, திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றி.

**மு. வளர்மதி**

# பொருளடக்கம்

## பேரறிஞர் அண்ணா தமிழ்மேம்பாடு அறக்கட்டளை கருத்தரங்கச் சொற்பொழிவுகள்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | பதிப்புரை | |
| | வாழ்த்துரை<br>திரு. க. முத்துசாமி இ.ஆ.ப. | |
| | சிறப்புரை<br>திரு. துரைமுருகன் | |
| 1. | மாநிலங்கள் அவையில் அண்ணா<br>பேரா. முனைவர். ப. மருதநாயகம் | 11 |
| 2. | அண்ணாவின் தமிழ் உணர்வு<br>முனைவர் ஔவை நடராசன் | 26 |
| 3. | அண்ணாவின் கவிதைகள்<br>கவிவேந்தர் பேரா. மு. மேத்தா | 33 |
| 4. | அண்ணா : வாழும் இலக்கியம்<br>பேரா. முனைவர் கா. செல்லப்பன் | 43 |
| 5. | அண்ணாவின் நாடக இலக்கியப் பணி<br>பேரா. முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன் | 52 |
| 6. | அண்ணாவின் சொற்பொழிவுகள்<br>முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் | 72 |
| 7. | அண்ணாவின் பயிற்றுமொழிக் கொள்கை<br>முனைவர் அ. இராமசாமி | 97 |
| 8. | நிறைவுரை<br>நீதியரசர் பு.இரா. கோகுலகிருட்டிணன் | 106 |

## பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா
## தொடர் கருத்தரங்கச் சொற்பொழிவுகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அண்ணாவின் அரசியல் நாகரிகம்<br>திரு. டி.கே.எஸ். இளங்கோவன் | 116 |
| 2. | அண்ணாவும் பிறநாட்டு அறிஞர்களும்<br>கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் | 129 |
| 3. | தமிழ் மறுமலர்ச்சியில் அறிஞர் அண்ணாவின் பங்களிப்பு<br>பேரா. முனைவர் சி.இ. மறைமலை இலக்குவனார் | 144 |
| 4. | அறிஞர் அண்ணா-பண்பாட்டு மறுமலர்ச்சியின் தாய்<br>பேரா. முனைவர் அருணா. இராசகோபாலன் | 153 |
| 5. | மகளிர் முன்னேற்றத்தில் அண்ணாவின் பங்களிப்பு<br>திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன் | 187 |
| 6. | அறிஞர் அண்ணாவின் மக்களாட்சி நோக்கு<br>திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன் | 198 |
| 7. | அறிஞர் அண்ணாவின் படைப்புகள்<br>பேரா. முனைவர் சா.வளவன் | 209 |
| 8. | பேரறிஞர் அண்ணாவின் ஆளுமை<br>வழக்குரைஞர் திரு. வீ.சு. இராமலிங்கம் | 222 |
| 9. | இந்திய மெய்யியல் வரலாற்றில் அறிஞர் அண்ணா<br>பேரா. முனைவர் க. நெடுஞ்செழியன் | 235 |
| 10. | அண்ணா நாடகங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்<br>வழக்குரைஞர் அ. அருள்மொழி | 265 |
| 11. | தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும்<br>கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 274 |
| 12. | கலை வானில் அண்ணா<br>இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன் | 295 |

பேரறிஞர் அண்ணா
தமிழ் மேம்பாடு அறக்கட்டளை
கருத்தரங்கச் சொற்பொழிவுகள்

18.9.2009 – 19.9.2009

# வாழ்த்துரை

**திரு. க. முத்துசாமி இ.ஆ.ப.**
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி,
அறநிலையங்கள் மற்றும்
செய்தித்துறை
தமிழ்நாடு அரசு

அறிஞர் அண்ணாவின் நூறாவது பிறந்த நாள் விழாவினை நமது தமிழக அரசு நாடெங்கிலும் மகிழ்ச்சியோடும், எழுச்சியோடும் இந்த ஆண்டு முழுவதும் கொண்டாடி வருகிறது.

நம் தமிழக அரசு அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் அண்ணா நினைவாக இருக்கைகள் அமைத்து. அண்ணாவின் பன்முகத் தன்மைகளை ஆய்வுக்குட்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தமிழ், தமிழர், தமிழ்நாடு, தமிழரின் தன்மானம் என நாளும் பொழுதும் சிந்தித்து உழைத்தவர் அறிஞர் அண்ணா; தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழர் என எண்ணிப் பார்க்கும்போது தமிழ் இயக்கம் கூட்டி, தமிழர் ஆட்சி அதிகாரம் கொள்ள வேண்டும் என உழைத்து வெற்றிகண்ட அறிஞர் அண்ணாவை அனைவரும் எளிதில் நினைவுகொள்வார்கள்.

சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் என எழுதியுள்ள அண்ணா ஒரு தமிழ் இலக்கியவாதி; திராவிடக் கொள்கையை வகுத்து நாட்டு மக்களிடம் அரசியல் சிந்தனைகளை விதைத்துள்ள அண்ணா ஒரு சிறந்த அரசியல்வாதி; பேச்சுக் கலையைத் தமிழனுக்கு ஒரு புதிய கோணத்தில் அடுக்குமொழி நடையில் எடுத்துரைக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வித்திட்ட ஒரு **மொழிப் புலமைவாதி**.

நாடகப் பிரதிகளை தமிழ் மண், மரபு வழிநின்று தமிழ்ச் சமூகத்தில் களைந்தெறியப்பட வேண்டியவர்கள் குறித்தும் தமிழ்ச் சமூகத்தில் தகுதிப்பாட்டிற்கு உரியவர்கள் குறித்தும் அவரால் படைக்கப்பட்ட நாடக மாந்தர்கள் வழியே பாடங்கள் நடத்திக் காட்டிய அறிஞர் அண்ணா **ஒரு சமூகச் சிந்தனைவாதி**.

வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம் என்று நம்பித் தொழிலாளர் வாழ முடியாது. வாழக்கூடாது, பாரெங்கும் பல்கிப் பெருகிவரும் தொழிலாளர் இனம் பகுத்தறிவுடன் உலவவேண்டும் என்பதற்காகவே திராவிட இயக்கம் நாட்டில் நடமாடுகிறது என்பதை எடுத்துக்காட்டி திராவிட இயக்கம் என்பது தொழிலாளிகளின் மூச்சு என முழங்கி உழைத்த அண்ணா ஒரு **பகுத்தறிவுவாதி**.

சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கிய அண்ணா ஒரு **சமூகச் சுடரொளி**.

தாய்த்திருநாட்டிற்கு 'தமிழ்நாடு' எனப்பெயர் சூட்டிய அண்ணா ஒரு **தமிழ் இனப் போராளி**.

வகுப்புரிமை இன்று இந்திய அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வகுப்புவாரி உரிமை என அறுபதுகளிலே முழங்கிச் செயல்படுத்திய அண்ணா சமூக நீதிக் காவல் அரணாக விளங்கிய **சமூக நீதிப்போராளி**.

தமிழின உணர்வுடன் நம் வாழ்நாளில் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதியும், பேசியும், களப்பணி செய்தும், ஆட்சிப்பணி செய்தும், தமிழ்மொழியை, தமிழ் மக்களை, தமிழ்நாட்டினை உயர்தளத்துக்கு உயர்த்தியவர் அறிஞர் அண்ணா அவர்கள். அண்ணாவின் பன்முக ஆளுமைகள் குறித்துப் பல்வேறு தளங்களில் ஆய்வு செய்ய உள்ள காலமாக இந்த அண்ணாவின் நூற்றாண்டினைக் கொண்டாடுவோம்.

> மக்களின் மதியை மாய்க்கும் ஏடுகளல்ல நமக்குத் தேவை. தமிழரைத்தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தன்னம்பிக்கை ஊட்டி மதியைப் பெருக்கும் விளக்க நூல்கள் தேவை

எனும் அறிஞர் அண்ணாவின் பொன்மொழியை இந்த நல்ல நிகழ்வில் சான்றோர், பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களிடம் முன் வைத்து எனது வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

# சிறப்புரை

**திரு. துரைமுருகன்**
மாண்புமிகு பொதுப்பணி
மற்றும் சட்ட அமைச்சர்,
தமிழ்நாடு அரசு

இது கற்றறிந்தவர்களின் அவை. ஆராய்ச்சி வல்லுநர்கள் அமர்ந்திருக்கின்ற அவை. ஒவ்வொன்றையும் பல கோணங்களில் சிந்தித்து ஏடு எடுத்து எழுதி நாட்டுக்கு வழங்குகின்ற நல்ல பல பெரியவர்கள் நிறைந்திருக்கின்ற அவை. இந்த அவையில் அறிவின் சிகரமாக, ஆற்றலின் உருவமாக, பண்பாட்டின் ஒட்டுமொத்த உருவமாகக் காட்சி அளிக்கின்ற பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறீர்கள். அதில் நான் பேசுகிறேன் என்பதே பெருமைக்குரிய ஒரு செய்தி.

உலகத்தில் எத்தனையோ அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். அறிஞர் அண்ணாவும் ஒரு அரசியல்வாதிதான். ஒரு அரசியல் கட்சியை நடத்தியவர்தான். களத்திலே இன்னொரு அரசியல் கட்சியைத் தோற்கடித்தவர்தான். ஆட்சி அமைத்தவர்தான். ஆனால் எந்த ஒரு அரசியல்வாதிக்கும் இப்படிப்பட்ட ஒரு சிறப்பு கிடைத்திருக்காது என்றே நான் கருதுகிறேன். காரணம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமா, வழக்கறிஞர் சங்கமா, பூக்கடை வியாபாரிகள் சங்கமா, நொச்சிக் குப்பம், டும்மிங் குப்பம் ராக்காயி, ரங்கநாதன் திருமணத்தில் பேசுவதிலா, யேல் பல்கலைக்கழகத்திலே உரையாற்ற வேண்டுமா, சட்டமன்ற, பாராளுமன்றத்திலே உரையாற்ற வேண்டுமா என்று எல்லா இடத்திலும் உரையாற்றத் தகுதி படைத்த ஒரே தமிழ்நாட்டுத் தலைவர் பேரறிஞர் அண்ணா மட்டும்தான். பொதுவுடைமை என்று கேட்டால் பொதுவுடைமைதான். ஆனால், 'All in one' என்று வந்தால் அறிஞர் அண்ணா மட்டும்தான்.

ஒரு அரசியல்வாதியாக மட்டுமே அவர் இருந்திருந்தால் அண்ணாவிற்கு இந்த நிலைத்த புகழ் கிடைத்திருக்காது. அரசியலுக்கு அப்பால் மனிதநேயம் உடையவராக இருந்தார். இந்த மண்ணைப் பற்றியும் சிந்தித்தார். இந்த மனிதர்களைப் பற்றியும் சிந்தித்தார். இந்த மனிதர்கள் பேசுகின்ற மொழியைப் பற்றியும் சிந்தித்தார். ஆக, ஒரு அரசியல்வாதி ஒரு பெரும் ஆராய்ச்சியாளருக்குரிய, ஒரு பெரும்புலவருக்குரிய அத்தனை இலக்கணங்களோடு எழுத்திலும், பேச்சிலும், செயலிலும் காட்டியவர் அறிஞர் அண்ணா மட்டும்தான். கற்றறிந்த மேதை போல் ஆராய்ச்சி வல்லுநர் போல் தமிழிலே தனிக்கவனம் செலுத்தியவர் அறிஞர் அண்ணா, தமிழ்மொழி இருந்தால்தான் தமிழ் இனம் இருக்க முடியும் என்பது அண்ணாவின் திடமான சிந்தனை. நாடு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, இஸ்ரேலியர்களைப் போல் ஒரு நாட்டினை உருவாக்கமுடியும். ஆனால் மொழி இல்லாவிட்டால் மக்கள் இல்லை. மக்கள் இல்லாவிட்டால் நாடு இல்லை. நாடு இல்லாவிட்டால் கலாச்சாரம், பண்பாடு எதுவும் இல்லை. ஆகவே, இந்த நாட்டில் அரசியலை நடத்த வேண்டுமானாலும் மொழி உணர்வோடு கூடிய அரசியலைத்தான் நடத்த வேண்டும் என்று கருதினார்கள். எந்த மொழி பேசினாலும் சரி, படித்தாலும் சரி, எத்தனை மொழிகளை உங்கள் தலையிலே கொண்டுவந்து சேர்த்தாலும் சரி, வாக்கு மட்டும் எனக்குப் போடுங்கள் என்று கூறும் அரசியல்வாதிகள் தமிழ்நாட்டில் நிறையப் பேர் உண்டு. ஆனால், என் தமிழை அழித்துவிட்ட பிறகு எனக்கு அரசியல் வேண்டாம் என்று கருதியவர் அண்ணா. இன்றைய தமிழன், தான் தமிழன் என்ற உணர்வே இல்லாமல் இருக்கிறான். அவனுக்கு அந்த உணர்வை ஊட்ட வேண்டும் என்று கருதினார்.

அண்ணா ஒரு முறை கிறித்தவக் கல்லூரியில் பேசும் போது, அண்ணா கேட்டார் எனக்கு என்ன தலைப்பு என்று. அவர்கள் ‘தலைப்பு இல்லை'' என்று சொன்னார்கள். அண்ணா நான் ‘தலைப்பு இல்லை’ என்ற தலைப்பில் பேசுகிறேன் என்றார். அதில் தமிழனுக்குத் தலைப்பு, வரலாறு, ஆராய்ச்சி வரலாறு இல்லை. மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் இருந்து வரலாறு தொடங்கியிருக்க வேண்டும். வரலாற்றை கங்கைக் கரையிலிருந்து தொடங்கியிருப்பது வரலாற்றுப் பிழை என்பதைச் சுட்டிக்காட்டினார். இவ்வாறு பேசத் துவங்கி 1 மணி நேரம் பேசினார்கள். தமிழனுக்கு அடையாளமே அவனது மொழிதான். எனவே தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவே

பாடுபட வேண்டும் என்று கருதினார். ஆனால், அவர் காலத்தில் எப்படி இருந்தது நிலை. இசையா தெலுங்கில் தியாகராஜ கீர்த்தனைகள்; கோவிலில் வடமொழி வாசகங்கள்; பள்ளியில் ஆங்கிலம்; ஆட்சியிலே ஆங்கிலம். ஆக, தமிழனுக்கு என்று என்னதான் இருக்கிறது. சமதர்மத்தைத் தமிழோடு கலக்கவிட்ட காரணத்தால் தான், இங்கே இருக்கிற தண்ணீர் ஜலமானது, திருவிழா உற்சவமானது, சுவை ருசியானது, துன்பம் கஷ்டமானது. மகிழ்ச்சி சந்தோஷமானது, சோறு சாதமானது, மலர் புஷ்பமானது, கறி பதார்த்தமானது, சாறு சாம்பாரானது, மிளகு நீர் ரசமானது, மறைக்காடு வேதாரண்யமானது.

தமிழ்ப் புலவர்கள் இதை மாற்றவேண்டுமானால் வகுப்பறையில் தான் மாற்ற முடியும். "எட்டாத உயரத்திற்கு எட்டடி சுவர் எழுப்பி உள்ளே ஆடுது காளி, வேடிக்கைப் பார்க்க வாடி'' என்று அழைப்பதைப்போல் புலவர்கள் தொல்காப்பியத்தை உள்ளே அடுக்கி வைத்துக் கொண்டு, அதன் தொன்மை என்னவென்று கேட்டால் எவன் வருவான். என்று அண்ணா கூறினார். மாலை நேரக் கல்லூரியாக, பொதுக்கூட்டத்தைக் கூட்டினார். அதன் விளைவுதான் உபன்யாசத்தை உரையாக்கினார், ராஜ்ஜியம் அரசானது, 'சத்தியமேவ ஜயதே' என்பதை வாய்மையே வெல்லும் என மாற்றினார். இந்த மாற்றத்தைச் சாதாரண மாற்றமாகக் கருதக்கூடாது. மறைமலை அடிகள் தனித்தமிழ் இயக்கத்தை நடத்தினார். ஆனால் அது தோற்றுப் போனது. மறைமலையடிகளின் இந்தத் தனித்தமிழ் இயக்கத்தை மக்களிடம் சேர்த்த மகத்தான பணி அண்ணாவிற்கு உரியது. ஆக எழுத்தில், பேச்சில் ஒரு புதிய நடையை உருவாக்கினார். இன்றைக்குத் தமிழ்மொழி சாதாரணமாகப் பேசப்படுகிறது என்ற நிலையை உருவாக்கியவர் அண்ணாதான்.

ஒருமுறை கடற்கரைக் கூட்டத்தில் அண்ணா பேசினார். காங்கிரஸ்காரர்கள் நமக்கு நண்பர்களும் அல்ல, எதிரிகளும் அல்ல என்றார். அவர்கள் புது மலர்கள். இது புறநானூற்றுச் சொல் என்றார். மேடைப் பேச்சில் ஓர் எளிமை. நீ யாருக்காகப் பேசுகிறாய். உனக்காக அல்ல, எதிரிலே இருப்பவனுக்கு உன்னுடைய கருத்துபோய்ச் சேர வேண்டும். அது தானே நோக்கம். உனக்குத் தெரிந்ததையெல்லாம் அவனிடம் பேசக்கூடாது. அண்ணா சொன்னார், 'ஜனநாயகம்' என்பது வீட்டு விளக்கு. சர்வாதிகாரம் என்பது காட்டுத்தீ. விளக்கு

சிறியதுதான். ஆனால், ஆபத்தானதும் கூட. காற்றடித்தால் அணைந்துவிடும். ஜனநாயகத்தை அணைத்து அணைத்துதான் ஏற்றுகிறான். ஆனால், ஆபத்தில்லை. பெரிய ஆபத்தில்லை. காட்டுத்தீ ஓங்கி எரியும். ஆனால் பச்சைமரம், பட்டமரம், பழமரம், உயிர்கள் எல்லாத்தையும் அழித்துவிடும். சர்வாதிகாரத்தில் சில நேரங்களில் மடமடவென்று காரியங்கள் நடக்கும். ஆனால் அழித்துவிடும்' என்றார். Emergency என்று ஒன்று வந்தது. 5.05க்கு ரயில்னா 5.05க்குச் சரியாக வந்தது. தலைமைச் செயலகத்திற்குள் 10மணிக்குச் சரியாக நுழைந்து விடுவார்கள் அலுவலர்கள். 5 மணியென்றால் 5 மணிக்கு வீட்டுக்குப் போனார்கள். ஏன்? அது காட்டுத்தீ. கபகபன்னு எரிந்தது. பிறகு அணைந்து போய்விட்டது. பத்துநாள் தலைமைச் செயலகத்திற்குள் போனார்கள். பிறகு முடிந்துவிட்டது. இப்போதெல்லாம் ஏறத்தாழ கொஞ்சம் தாமதித்துத்தான் வருகிறார்கள். ஆனால் வேலை நடக்கின்றது. அதுதான் ஜனநாயகம். தமிழ்மொழி வீட்டுச்சாப்பாடு போன்றது. இந்தி எடுப்புச்சாப்பாடு போன்றது. எடுப்புச் சாப்பாட்டில் என்ன எண்ணெய் கலந்திருப்பார்களோ? என்னென்ன கலந்திருப்பார்களோ? உடல்நலத்தைக் கெடுத்துவிடும். எதையுமே திருப்பித் திருப்பிச் சொல்லக்கூடிய ஆற்றல், எளிமைப்படுத்தக்கூடிய ஆற்றல் அறிஞர் அண்ணாவிடத்தில் உண்டு. அண்ணா என்னிடம் ‘எளிமையாகப் பேசக் கற்றுக் கொள்ளுங்கள். அப்பேச்சு போய்ச் சேரவேண்டிய இடத்தில் சேரவேண்டும்’ என்று கூறுவார்.

பச்சையப்பன் கல்லூரிக்கு ஒரு முறை வந்தார். நாங்கள் தான் அவரை உள்ளே அழைத்துக்கொண்டு சென்றோம். உள்ளே தேநீர் அருந்திவிட்டு வந்தார். அந்த மண்டபத்திற்கு மேல், தாளாளர் அறை இருந்தது. அவருக்கு அந்த இடத்திலிருக்கின்ற கட்சிக்காரர்கள் அனைவரும் தெரியும். அப்பொழுது எல்லோரும் அவரைத் தேடிவந்து வணக்கம் தெரிவித்தனர். அவரும் வணக்கம் தெரிவித்தார். அச்சமயம் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் ஒருவர் இந்த 20வருட ஆட்சியில் இவ்வாட்சியால் நமக்கென்ன லாபம்? என்று அண்ணாவிடம் கேட்டார். அவர் சிரித்துக் கொண்டே போய்விட்டார். மேடையில் ஏறி நின்றார். பேசுவதற்கு முன், திரும்பி, தாளாளராக இருந்த ச.வி. இராஜேஸ்வரனிடம் எந்தத் தலைப்பில் பேச வேண்டும் என்று கேட்டார். அதற்குத் தாளாளர், அவருடைய முன்னாள்

ஆசிரியராக இருந்தவர் 'அண்ணாதுரை ஆங்கிலத்தில் பேசப்பா! உன் ஆங்கில உரையைக் கேட்டு வெகு நாட்களாகிவிட்டது' என்று கேட்டுக் கொண்டார். உடனே அண்ணாவும், அனைவரும் வியக்கும் வண்ணம் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

பேராசிரியர் மருதநாயகம் சொன்னார், அண்ணா மேடையறிந்து நன்றாகப் பேசக்கூடியவர் என்று. மக்களைத் தன் பக்கத்தில் ஈர்ப்பதிலே ஒரு அற்புதமான தலைவர். அவருக்கு எல்லாவிதமான செய்திகளும் தெரியும். அண்ணாவிற்கு மொழி மீதுள்ள காதல் அதிகம் என்று அவர் சொன்னார்.

தமிழ்மொழியின் மீது எவ்வளவு காதல் இருந்தால், அவர் கவிஞரல்ல, ஆனால், உற்று உற்றுப் பார்க்கிறார்; சொல்கிறார்; 'உலக முதல் மொழியாள், உயர் தனிச் செம்மொழியாள், புலவர் புகழ் மொழியாள், திகழ் செம்பொன் மிளிர் மொழியாள், நற்கனி மொழியாள், வடமொழியாள், தேனினும் சுவையுடையாள், அழகில் வளமுடையாள், காணினும் கமழுடையாள், ஆறினும் பயனுடையாள், இசை ஏழுடையாள், எல்லாப் பொருள்களிலும் இலக்கணமுடையாள், ஓதற்கினிய மொழியாள், இன்ப ஊற்று உடையாள், உயர் மாற்றுடையாள், ஈதற்குணமுடையாள், எளிதில் அடைந்திடும் ஒளியுடையாள், அறம் பொருள் இன்பமுடையாள், அகமுடையாள், அதன் புறமுடையாள், பொருள் நலமுடையாள், இலக்கியப் பெருங்கடலாள் என்று மொழியின் சிறப்பைக் கூறுகிறார். ஒரு மொழியைத் தானாகப் பார்த்து அதில் எவ்வளவு ஈடுபாடு இருந்தால் எப்படிப்பட்ட மொழியென்பதை இவ்வளவு பெரிய பேரறிஞர் எழுதி எழுதிப் பார்த்திருப்பார் என்று கருதுகிறீர்கள்.

என்னுடைய தமிழன் தான் வாழ்வதற்கு வீடும், எவனாவது வந்து தங்குவான் எனத் திண்ணையும் கட்டியவன். அண்ணா சொன்னார், 'உலகத்தில் எவனும் திண்ணை கட்டியது இல்லை. அதைப்போல் தனக்கிருக்கின்ற தமிழ்மொழியும் பிற மொழிக்காகத் திண்ணை கொடுப்பதுபோல், வந்த மொழிக்கெல்லாம் திண்ணையில் இடமொதுக்கிய காரணத்தால் ஏமாந்து போய்விட்டது' என்று அவர் அழகாகக் குறிப்பிடுவார். ஆகவே, இந்த மொழியுணர்வு இருக்கின்ற காரணத்தால்தான் இதை முதலில் நீண்டகாலமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கக்கூடிய, சமஸ்கிருதத்தினுடைய

பிடியிலிருந்து மீட்க வேண்டுமென்பது அண்ணா எடுத்துக் கொண்ட முயற்சிதான். தமிழ்நாட்டில் இன்று ஆற்றொழுக்கான நடையில் எழுதுவதும், ஆற்றொழுக்கான நடையில் பேசுவதும், தருக்க மொழியில் எழுதவும், கவிதைகள் பல பாடுவதும், இவையெல்லாம் அண்ணாவின் பெருமுயற்சியால் வந்த வினைகள், வந்த செயல்கள்.

வடமொழியினுடைய ஆதிக்கத்திலிருந்து வெளியே கொண்டு வந்த தமிழை, இன்னொரு புகா வாயில் சிங்க வாயில் இருப்பதைப்போல் இந்தி பிறகு வந்துவிட்டது. நீங்கள் நினைத்துப் பாருங்கள் அறிஞர் அண்ணா இருந்திராவிட்டால் இந்நேரம் தமிழை இந்தி விழுங்காமலா இருக்கும். அண்ணா சொன்னார், ''நான் மூன்று கையெழுத்துகளைப் போட்டிருக்கிறேன். இந்த நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்திருக்கிறேன். இந்த நாட்டுக்கு ஆங்கிலம், தமிழ் என்ற இருமொழிக் கொள்கை என்று போட்டிருக்கிறேன். மூன்றாவது சுயமரியாதைத் திருமணம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறேன். இந்த முன்று கையெழுத்தையும் அடித்து எழுதுகின்ற எவனும் இனித் தமிழ்நாட்டில் பிறக்க முடியாது என்று சொன்னார். இது நான் போட்ட கையெழுத்து. இதை யாரும் மாற்ற முடியாது என்று சொன்னார். ஆக இந்த இனத்தைக் காக்க வேண்டுமானால் மொழியைக் காக்க வேண்டும். மொழியுணர்வு, இன உணர்வு இருந்தால்தான் நாட்டுணர்வு வரும் என்பது அண்ணாவின் ஆழமான சிந்தனை. ஆகையினால் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற நேரத்தில், அவ்வை, சிலம்பொலி போன்றோர்க்குத் தெரியும். இதில் சிலம்பொலி செல்லப்பன் பெரும்பகுதி வகித்தவர்.

அண்ணா யேல் பல்கலைக் கழகத்திற்குப் போயும் திருக்குறளைத்தான் அங்கு வைத்துவிட்டு வந்தார். ஆகையினால் தமிழ் மொழி முதலில் இருக்க வேண்டும் என்று எண்ணினார். தமிழ் எந்தளவிற்குத் தெரியுமோ அந்தளவிற்கு ஆங்கிலம் தெரியும் அண்ணாவிற்கு.

அண்ணாவிடம் பழகிய பிறகுதான் 'ஷா'வின் நாடகங்களைப் பார்க்கிற வாய்ப்பும், ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படிக்கிற எண்ணங்களும் ஏற்பட்டன. ஆகவே இந்த உலகத்தைத் தெரிந்து கொள்வதற்கு Window of World ஆக இருக்கக்கூடியது ஆங்கிலம். இதைப்பற்றி அண்ணா

கூறும்பொழுது என்னைப் போய் ஆங்கிலத்துக்கு வக்காலத்து வாங்குகிறவன் என்று சொல்கிறார்கள். நான் வாலிபனாக இருந்த போது வாங்கியிருந்தால் பரவாயில்லை. எதையாவது வாங்கியிருக்கலாம். எல்லாவற்றையும் துறந்துவிட்டு வந்தவன்' என்ற அண்ணாவின் ஆங்கிலச் சொற்பொழிவைப் பற்றி மருதநாயகம் அவர்கள் சுட்டிக்காட்டிய பொழுதும் நான் மலரும் நினைவுகளோடுதான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.

எல்லாவற்றையும்விட அண்ணாவிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது எளிமை, எளிமை. அப்படிப்பட்ட எளிமையான தலைவரை நம்மால் பார்க்க முடியாது. 1967ஆம் ஆண்டு தேர்தல். நான் ரிஷிவந்தியம் பகுதியில் கூட்டத்தில் பேசிவிட்டு உளுந்தூர்ப் பேட்டையில் ஒரு லாட்ஜிலே தங்கியிருக்கிறேன். அந்த லாட்ஜுக்குக் கீழே தீப விலாஸ் ஓட்டல் இன்றும் இருக்கிறது. நான் 12 மணிக்கு குளித்துவிட்டுக் கீழே இறங்கினேன். உள்ளே அவ்வளவு கிராமத்து மக்கள் சாப்பிடுகிறார்கள். அண்ணாவுக்கு இடமில்லை. செழியனும் உடன் வந்திருக்கிறார். ரோடு பிளாட்பாரத்தில் இரண்டு இலைகளைப் போட்டு இரண்டு பேரும் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். நான், 'என்ன அண்ணா இங்கே சாப்பிடுகிறீர்கள்' என்று கேட்டேன். அண்ணா நடுத்தெருவைக் காண்பித்து அங்கே சாப்பிடாமல் இருக்கின்றேனே அதுவரையில் சந்தோஷப்பட்டுக்கொள் என்றார். 'நீ ஏன் இங்கே வந்திருக்கிறாய்?' என்று என்னைக் கேட்டார். 'தியாகத்துார் கூட்டத்தை முடித்துவிட்டு இங்கே வந்தேன்' என்று சொன்னேன். 'இன்றைக்கும் நாளைக்கும் கூட்டம் இருக்கு' என்று சொன்னேன். 'அப்படி என்றால் ஏன் அங்கிருந்து இங்கே வந்தாய்' என்று கேட்டார். 'அங்கே தங்குவதற்கு இடமில்லை' என்று சொன்னேன். அப்பொழுது சொன்னார் 'அங்கே இராமகிருஷ்ணன் என்று ஒருவர் இருக்கிறார். அவர் டென்ட் கொட்டாய் ஒன்று வைத்திருக்கிறார். அங்குத் தங்கிக் கொள்ளவேண்டியது தானே' என்றார். அதற்கு நான் 'அங்கே மனுஷன் தங்குவானா?' என்று கேட்டேன். அதற்கு அண்ணா, 'நான் அங்கு தானய்யா தங்குவேன்' என்றார். அண்ணாவுக்கு எளிமையாக இருக்க வேண்டுமென்பதில் அவ்வளவு நாட்டம். சுருக்கமாகச் சொன்னால் 'அண்ணா மனிதரில் தெய்வப்பிறவியாக விளங்கியவர்' என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். நான் உலகத்திலுள்ள அனைத்துத் தலைவர்களின் வரலாற்றையும் படித்திருக்கிறேன்.

அண்ணாவைப் போல் ஒரு தலைவரைப் பார்க்கவே முடியாது. நான் சர்ச்சிலின் நூல்களைப் படித்திருக்கிறேன். ஆப்ரகாம் லிங்கன், ஜெபர்சன், வாஷிங்டன் போன்றோர்களைப் படித்திருக்கிறேன். எத்தனையோ விடுதலை வீரர்களைப் படித்திருக்கிறேன். என் தலைவர் அண்ணாவிற்கு யாரும் ஒப்பாக மாட்டார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

அவர் காலத்தில் வாழ்ந்தோம், அவர் நூற்றாண்டு விழாவிலே பங்கு கொண்டோம், அதிலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலே பேசினோம் என்பது எனக்குப் பெருமை. அந்தப் பெருமையைத் தந்த உங்களுக்கு நன்றி. வணக்கம்.

# மாநிலங்கள் அவையில் அண்ணா

பேரா. முனைவர் ப. மருதநாயகம்

அறிஞர் அண்ணா அவையறிந்து பேசுவதில் வல்லவர்; "சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்" ஆதலின் அவையறிந்து ஆராய்ந்து சொல்லவும், "இடைதெரிந்து நன்குணர்ந்து" கூறவும் தெரிந்தவர். கேட்பவர் பாமர மக்களானாலும், தொழிற் சங்கத்தாரானாலும் கல்லூரி, பல்கலைக் கழக மாணவரானாலும், கற்றறிந்த பேராசிரியர்களும் மெத்தப்படித்த மேதைகளுமானாலும் அவர்களுக்கேற்பத் தம்பேச்சை அமைத்துக் கொள்வார். இலக்கியக் கழகத்திற்கும், கட்சி மாநாட்டிற்கும், சட்டமன்றத்திற்கும், மாநிலங்கள் அவைக்கும் ஏற்பச் சொற்பொழிவுகள் மாறுபடும். அவைக்குத்தக்க வேறுபாடுகளை உள்ளீட்டிலும் மொழிநடையிலும் காணலாம். வாக்கியங்களின் அளவு, உவமை, உருவகங்களின் தரம், எதுகை, மோனை, அடுக்கு மொழிகளின் விரவல், மேற்கோள், புள்ளி விவரங்களின் எண்ணிக்கை, எள்ளல், நகை, அங்கதம், வஞ்சப்புகழ்ச்சி, உயர்வு நவிற்சி போன்றவற்றின் நுட்பம், பாடுபொருளின் வீச்சு, கருத்தாழம் ஆகிய யாவற்றிலும் நுண்ணிய மாற்றங்கள் செய்யப்பெறும்.

பொதுமக்களுக்கான மேடைப்பேச்சில் சிறுசிறு முற்றுத் தொடர்கள், எளிய உவமைகள், குறைவான புள்ளி விவரங்கள், மிகக்குறைவான மேற்கோள்கள் ஆகியவற்றைக் கையாளும் அண்ணா, திராவிட நாட்டு இதழுக்கான கட்டுரைகளில் நீண்ட முற்றுத்தொடர்களையும் ஏராளமான எதுகை மோனைகளையும் பெய்து விருத்தப்பாக்களோ என்று ஐயுறும் வண்ணம் ஒரு மொழி நடையைப் பயன்படுத்துவார். உலகத் தமிழ் மாநாட்டிற்கான ஆங்கிலப்பேச்சில் இலக்கியம் பற்றிய கருத்துச் செறிவு இடம் பெறுமானால் "ஹோம் லேண்ட்" (Homeland) இதழுக்கான ஆங்கிலக்கட்டுரைகளில் அரசியல் முன்னுரிமைபெறும். மாநிலங்கள் அவையில் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவுகளில்

பொருளாதாரமும் வரலாறும் ஏனைய கூறுகளைப் பின்னுக்குத் தள்ளும். ஒரு பொதுக்கூட்டத்தில் அண்ணாவிற்கு முன் பேசிய பேச்சாளர்களெல்லாம் இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை விமரிசிக்கும்போது பொதுத்துறை, தனியார்துறை பற்றிப் பல்வேறு விளக்கங்களைத் தந்தனர். அவர் பேசும்போது "பொதுத்துறை என்பது வீட்டுப்பசு ; தனியார்துறை காட்டுப்பசு" என்று அவற்றை அறிமுகம் செய்தார். பலகட்சித்தலைவர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் ஒரு பொதுவுடைமைக்கட்சித் தலைவர் பல புள்ளிவிவரங்களை அடுக்கிக்கொண்டே போனார். அண்ணா தம் பேச்சைத் தொடங்கியவுடன், "என் அருமை நண்பர் தந்த புள்ளி விவரங்களில் எதை மறந்தாலும் ஒன்றை மறக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்வேன். இப்பொழுதைய ஆளும் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 150 ; எதிர்க்கட்சியினரின் எண்ணிக்கை 50. வரும்பொதுத் தேர்தலில் இவற்றை மாற்றி விட்டீர்களானால் பொருளாதாரம் பற்றிய பிற புள்ளி விவரங்களெல்லாம் சரியாகி விடும்" என்று குறிப்பிட்டார். ஒரு பெரிய தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி அண்ணாவைப் பற்றிப் பல குற்றச்சாட்டுகளைப் பொதுமேடைகளில் தொடர்ந்து முழங்கிக் கொண்டிருந்தபோது அவற்றையெல்லாம் முற்றுமாகப் புறக்கணித்துவிட்டு அத்தலைவர் கட்சியைவிட்டு நீக்கப்பட்டது குறித்து ஓர் உவமையை மட்டும் சொன்னார்:

> செல்வக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வைரத்தோடு அணிந்திருப்பார்கள். காதில் புண் வந்தால் கழற்றி வைத்து விட்டுப் புண் ஆறியவுடன் அணிந்து கொள்வார்கள். என்னுடைய காதிலிருந்த வைரத் தோட்டைத் தற்சமயம் கழற்றி வைத்திருக்கிறேன்; உரியநேரத்தில் மீண்டும் எடுத்துக் கொள்வேன்.

பொதுமக்கள் அண்ணாவின் பெருந்தன்மையைப் புரிந்துகொள்ள இந்த உவமை போதுமானதாயிற்று.

பல கூட்டங்களில் பேசிவிட்டுத் திருச்சியில் ஒரு கூட்டத்திற்கு இரவு ஒரு மணிக்குமேல் வந்த அண்ணா காத்திருந்தவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு "வழக்கமாக இருக்கின்ற இனிமையை இந்த நாதசுவரத்திடம் இன்று நீங்கள் எதிர்பார்க்காதீர்கள்" என்று குறிப்பிட்டார். பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் அவையடக்கத்தைக் கைவிடுவதும் உண்டு. பொதுவுடைமைக் கட்சித் தலைவராகிய

கலியாணசுந்தரம் ஒரு பொது மேடையில் தி.மு.க. தலைவர் கல்விக்குத் தரவேண்டிய இடத்தைத் தமது சட்டமன்றப் பேச்சுகளில் தரவில்லையென்று சாடியபோது அண்ணா, “கல்வியின் இன்றியமையாமை பற்றிக் கலியாணசுந்தரம் எம். எல். ஏ. அறிந்ததை அண்ணாதுரை, எம். ஏ.,எம்.எல். ஏ. அறிய மாட்டானா?” என்று விடையளித்தார். மாணவர்களுக்கான ஒரு பேச்சில் தாம் இலக்கியத்தால் ஒரு புறமும் அரசியலால் இன்னொரு புறமும் ஈர்க்கப்படுவதை, “இமயம் இப்பொழுது சீனர்களுக்குச் சொந்தமா, இந்தியர்களுக்குச் சொந்தமா என்ற போராட்டம் நிகழ்ந்து வருகிறது; அதுபோல் நான் இலக்கியத்திற்குச் சொந்தக்காரனா, அரசியலுக்குச் சொந்தக்காரனா என்று என் நண்பர்கள் வாதிட்டுக் கொண்டிருக்கிறார்கள்” என்று விளையாட்டாகக் குறிப்பிட்டார். இதிகாசங்களையும் புராணங்களையும் கீதையையும் மனுநூலையும் படித்து மோட்சம் அடைய வழியைத் தேடுங்கள் என்ற பிரச்சாரம் வலுப்பெற்றிருந்தபோது, தமிழ் இளைஞர்கள் சங்கச் சான்றோர் செய்யுட்களின் பெருமையை உணரவேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார்:

“இகம், பரம் என்ற பேச்சை நம்பி ஏமாந்து விடாதீர்கள்;

அகம், புறம் படித்து வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள்”.

மாநிலங்களவையின் உறுப்பினராக இருந்தபோது 1962 முதல் 1966 வரையிலான நான்கு ஆண்டுகளில் பதின்மூன்று முறை அண்ணா பேசினார். இவை பாராளுமன்றத்தைக் குலுக்கிய பதின்மூன்று பேச்சுகள் என்று வரலாற்றில் இடம் பெற வேண்டியவை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரே உறுப்பினர் என்ற முறையில் அவருக்கு வாய்ப்புகள் குறைவாகவே கிடைத்தபோதும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். அறுபதுகளில் மாநிலங்கள் அவை அறிஞர்கள் நிறைந்ததாகப் பல்துறை விற்பன்னர்களைக் கொண்டிருந்தது.

**கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்ற செலச்சொல்லு வார்** (722)

என்ற குறள் கூறும் உண்மையை உணரும் வாய்ப்பைப் பலர் பெற்றனர்.

**ஒளியார்முன் ஒள்ளியராதல்** (714)

**உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று** *(718)*

என்னும் குறள்களை அறிந்த அண்ணா தாம் மதிநுட்பம் நூலோடு உடையார் என்பதைப் பாராளுமன்றத்தில் நிலைநாட்டினார்.

இந்திய அரசியல், சமுதாய, பொருளாதார, சமய, மொழிச் சிக்கல்கள் பற்றியெல்லாம் தம் கருத்துகளை அண்ணா தெளிவாக்கிய பேச்சுகள் அவை. முதல் பேச்சிலேயே, "ஏன் திராவிடநாடு கேட்கிறோம்? ஏன் தனிநாடு கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்?" என்பன போன்ற கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையில் வரலாற்றுச் சான்றுகளை எடுத்துச்சொல்லி, இத்துணைக்கண்டத்திலுள்ள இன, மொழி, பண்பாட்டு வேறுபாடுகளை அடையாளம் காட்டினார். இந்த நாட்டைப் பீடித்துள்ள அரசியல், சமுதாய, பொருளாதார நோய்களை இன்னொரு பேச்சு தொட்டுக்காட்டியது. சீனப்படையெடுப்பின் போது நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவு நடுவண் அரசுக்கு அவரது கட்சியின் கட்டுப்பாடு அற்ற முழு ஒத்துழைப்பு உண்டு என்று உறுதி கூறியது. பதினாறாவது சட்டத்திருத்த மசோதா என்ற பெயரில் பிரிவினைத் தடைச்சட்டம் மாநிலங்களவையில் விவாதிக்கப்பட்டபோது, "சீனப்படையெடுப்பின் போது கள்ளங்கபடமில்லாமல் துணை நின்றோம்; எங்களை ஒடுக்க இப்படி ஒரு சட்டமா?" என்று கேட்டுவிட்டு எழுத்துரிமையும் பேச்சுரிமையும் பறிக்கப்படுவது கண்டித்தற்குரியது என்று அறிவுரை கூறினார். மக்களின் அடிப்படை உரிமைகள் குடியாட்சியில் காக்கப்படல் வேண்டும் என்று அவர் வலியுறுத்துவது மில்டனின் அரியோபஜிடிக்கா (Areopagitica)வை நினைவூட்டும். மற்றொரு பேச்சில் பிரிவினை கூடாது என்று தடுப்பவர்கள் மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் அளிக்க வேண்டும், எல்லா மாநிலங்களுக்கும் ஏற்றத்தாழ்வில்லாமல் நிதி ஒதுக்க வேண்டும் என்ற கருத்து அண்ணாவால் முன் வைக்கப்பட்டது. ஆட்சி மொழிச் சட்டம் பற்றிய கலந்துரையாடலின் போது அரசு அலுவலக மொழியாக ஆங்கிலம் ஏன் காலவரம்பின்றித் தொடர வேண்டும் என்று வற்புறுத்திய அண்ணா, தான் ஆங்கிலத்தின்பால் கொண்ட மோகத்தால் அவ்வாறு பேசவில்லையென்றும் ஆங்கிலம் பல மொழிகள் வழக்கிலுள்ள இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தேவையான, இன்றியமையாத கருவியாகப் பயன்படுமென்றும் விளக்கினார்.

தமிழகத்தில் 1965 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு பேசிய பேச்சில் அதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி சுமத்தி ஒதுங்கிக் கொள்ள முயல்வது தவறென்றும் அது தமிழகத்து மக்களின் பேரெழுச்சியென்றும் அதனை மேற்கொள்ளும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்களென்றும் எதிரிகளும் ஏற்கும் வண்ணம் எடுத்துரைத்தார். இப்பேச்சின் சிறப்புக்கூறு அது இயல்பான ஒற்றுமை இந்நாட்டில் நிலவ வேண்டும், அரசின் ஒடுக்கு முறையால் வன்முறையில் ஒரு நிலைப்படுத்தல் (unity and not uniformity) கூடாது என்ற எண்ணத்தைத் தூண்டியதே. இந்திய மாநிலங்களின் வளர்ச்சியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கோடிட்டுக் காட்டி மறைமுகவரிகளால் விளையும் தீமைகளைப் பட்டியலிட்டது மற்றொரு பேச்சு. வரிச்சுமை அதிகரித்துக் கொண்டே போனபோது மக்களுக்கு வரிப்பணத்தால் விளையும் பயன் உரிய அளவில் இல்லையே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியது வேறொரு சொற்பொழிவு. இந்திய-இலங்கை ஒப்பந்தம் (Indo-Ceylon pact) பற்றிய உரை ஈழத்தமிழர்கள் அம்மண்ணுக்கு உரியவர்கள் என்பதையும் அவர்களது உரிமைப்போர் உன்னதமானது என்பதையும் விளக்கியது; இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை அணிசேராமையால் மட்டுமே பெருமைக்குரியதன்று என்று அவலவுணர்வோடு சுட்டிக் காட்டியது.

தம் நுண்ணறிவையும் கல்விப்பரப்பையும் அறிஞர்அவை உணர்ந்து பாராட்டுமாறு அண்ணா எல்லாப் பேச்சுக்களையும் நிகழ்த்தினார். அப்பொழுது கேட்கப்பட்ட வினாக்களுக் கெல்லாம் தக்க விடைகள் தந்து,

**ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா**
**மாற்றம் கொடுத்தற் பொருட்டு** *(725)*

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டானார்.

மாநிலங்கள் அவையின் முதல் பேச்சிலேயே அண்ணா ஆங்கிலத்தைக் கையாள்வதில் யாருக்கும் இளைத்தவர் அல்லர் என்பதை நாடறியச் செய்தார். அவர் நாட்டுப்பிரிவினை பற்றிப் பேசியபோது பலர் குறுக்கிட்டுப் பல வினாக்களை எழுப்பினர். அப்பொழுது அவையின் தலை சிறந்த உறுப்பினராகக் கருதப்பெற்ற பூபேஷ்குப்தா என்ற பொதுவுடைமைக் கட்சித்தலைவர், "ஒருவருடைய கன்னிப் பேச்சின்போது யாரும்

குறுக்கிடக் கூடாதென்பதே இந்த அவையின் மரபு" என்று அண்ணாவுக்காகப் பரிந்து பேசினார். அண்ணாவோ, "இது எனது கன்னிப் பேச்சானாலும் நான் குறுக்கீடுகளைக் கண்டு நாணம் அடையவில்லை; அவற்றை விரும்புகிறேன்" என்று சொல்லி எழுப்பப்பட்ட கேள்விகளுக் கெல்லாம் விடைகளைச் சொல்லி மேற்சென்றார்.

> Bhupesh Gupta: There is hardly any precedent, Sir, to interrupt a maiden speech.
>
> Anna: Of course, Sir, this is my maiden speech, I am not bashful of interruptions therefore; I like them.

கன்னிப்பேச்சு என்னும் தொடரில் உள்ள உருவகத்தையே கையாண்டு அண்ணா "bashful" என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளது பாராட்டுக்குரியது. வேறு பேச்சாளர்களாக இருந்தால், "நான் குறுக்கீடுகளுக்கு அஞ்சவில்லை" என்றோ, "நான்குறுக்கீடுகளை வரவேற்கிறேன்" என்றோ, "அந்த மரபைக் காப்பாற்ற நீங்கள் யாரும் குறுக்கிடாதீர்கள்" என்றோதான் கூறியிருப்பர்.

தமிழகத்தின் பெயரை Madras State என்பதிலிருந்து தமிழ்நாடு என்று மாற்றவேண்டும் என்ற தீர்மானத்தின் மீது அண்ணா பேசும்போது தமிழ் மாநிலத்தைச் சேர்ந்தவர்களே குறுக்கிட்டு எதிர்த்துப்பேசினர். மாநிலத்திற்கும் தலைநகருக்கும் Madras என்ற ஒரே பெயர் இருப்பது நல்லதென்று ஓர் உறுப்பினர் கருத்தறிவித்தார். அதற்கு அண்ணா இந்த வாதத்தை ஏற்றுக் கொள்வோமானால், கேரளத்திற்குத் திருவனந்தபுரம் என்றும் ஆந்திராவிற்கு ஹைதராபாத் என்றும் பஞ்சாபிற்கு சண்டிகர் என்றும் குஜராத்திற்கு அஹமதாபாத் என்றும் பெயர் வைக்க வேண்டுமென்று அடுக்கிக் கொண்டே போனார். "தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் என்ன நன்மை உங்களுக்கு ஏற்படப்போகிறது?" என்று கேட்டவரை, "பார்லிமெண்ட்டை லோக்சபா என்றும், மாநிலங்களுக்கான அவை (Council of states)யை ராஜ்யசபா என்றும் பிரிசிடெண்டை ராஷ்ட்ரபதி என்றும், பெயர் மாற்றம் செய்ததால் நீங்கள் என்ன நன்மை பெற்றீர்கள்?" என்று கேட்டார். அதோடு விடாமல் "தமிழ்நாடு என்று பெயரை மாற்றினால் அதனால் உங்களுக்கு ஏதேனும் தீமை விளையுமா? நீங்கள் எதையேனும் இழந்து விடுவீர்களா? விலையுயர்ந்த எதேயேனும் இழப்பீர்களென்றால் நாங்கள்

இப்பெயர் மாற்றத்தை வற்புறுத்த மாட்டோம்" என்றும் சொன்னார்.

இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிய பேச்செழுந்தபோது, அண்ணா, "இமயத்திலிருந்து குமரி வரை இராமனும் கிருஷ்ணனும் வழிபடப்படுவதால் இந்தியா ஒருமைப்பாடு கொண்ட ஒரேநாடு என்ற மேதாவித்தனமான கருத்து கொஞ்ச காலத்திற்குமுன் வெளியிடப் பட்டது. உலகம் முழுவதும் ஏசு வழிபடப்படுகின்றார். ஆனால் ஐரோப்பா பலநாடுகளாகத் துண்டிக்கப் பட்டுள்ளது. உலகில் இன்னும் பல புதிய நாடுகளும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன" என்று கூறி அந்த வாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

பிரிவினை கேட்கும் கட்சிகளை, குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் தேசிய ஒருமைப் பாட்டுக்குழு (National Integration Committee) சர்.சி.பி. ராமசாமி அய்யர் தலைமையில் இந்திய நடுவண் அரசால் அமைக்கப்பட்டது. பிரிவினை பேசும் கட்சிகள் தேர்லில் நிற்கக்கூடாது என்ற சட்டத்தை எதிர்த்துப் பேசிய அண்ணா, "தேசிய ஒருமைப்பாட்டுச் குழுவின் தலைவராக ராமசாமி அய்யரைக் காங்கிரஸ்காரர்கள் நியமித்துள்ளார்கள். ஒருமைப்பாட்டின் காவலராக இன்று தோன்றும் இந்த ராமசாமி அய்யர் தான் திருவனந்தபுரத்துத் திவானாக இருந்தபோது திருவாங்கூர் தனி நாடு என்று அறிவித்ததோடு பாகிஸ்தானோடு ஒப்பந்தமொன்றும் செய்து கொண்டவர்," என்று எள்ளி நகையாடினார். இத்தடைச் சட்டம் பற்றிப் பேசும்போது பூபேஷ்குப்தா இது நடைமுறைக்கு வந்தால் தி.மு.க வினர் தலைமறைவாகலாம் என்று கருத்தறிவித்தார். அதற்கு அண்ணா அளித்த விடை நுட்பமானது.

> My friend Mr. Bhupesh Gupta was saying that we may go underground. Now, we always remain on the ground. We propose not to go underground. But surely the sullen discontent will go underground.

தலைமறைவாவது தங்கள் கட்சியின் நடைமுறையன்றென்று கூறிவிட்டு "இத்தடைச் சட்டம் பிரிவினை எண்ணத்தை நிரந்தரமாகத் தடுக்கக் கூடியதன்று; இதனால் தமிழர்களிடம் விளையப் போகும் ஏமாற்றமும் மன நிறைவின்மையும் அடிமன நிலையில் தங்கிவிடும்" என்று உளவியல் அடிப்படையில் ஏற்படப்போகும் தீமையினைத் தெளிவுபடுத்தினார்.

தென்னிந்தியாவும் தென்னிந்தியர்களும் நடுவண் அரசால் புறக்கணிக்கப் படுகிறார்களென்பதற்குச் சான்றாகப் புதுடில்லியில் உள்ள தெருக்களும், பெருஞ்சாலைகளும், பூங்காக்களும் தென்னிந்தியர் பெயரால் அழைக்கப்படவில்லை என்பதையும் அண்ணா குறிப்பிட்டபொழுது தியாகராஜா சாலை என்று ஒன்றிருக்கிறதே யென்று ஓர் உறுப்பினர் சொன்னார். அதற்கு அண்ணா "தியாகராஜா சாலையோடு உறுப்பினர் உள்ள நிறைவு அடைந்து விடுவாரானால், அது தெற்கிற்குப் போதாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

> Come to any southern town. You can saunter in Motilal Nehru Park; you can enter the Jawaharlal Nehru Reading Room; you can go to the Kamala Nehru Hospital. You can motor through Abul Kalam Azad Road. Why is it that such a thing is not found in this country?

நான் தெற்கை ஆதரித்துப் பேசும் போது என்னுடைய தென்னிந்திய, நண்பர்களே தெற்கிற்காகப் பரிந்து பேச வேண்டியதில்லை; நாங்கள் நன்றாகத் தான் இருக்கிறோம் என்று சொல்கிறார். தெற்கிலிருந்து வந்துள்ள உறுப்பினர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்டிருக்கும் அச்சவுணர்வே இதற்குக் காரணம். அவர்கள் ஏதாவது தெற்கிற்காகக் கேட்டார்களானால் பிரிவினைவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டுத் தி.மு.க. வில் சேர்ந்து விட்டார்களோ என்ற ஐயம் ஏற்பட்டு அவர்களது அரசியல் எதிர்காலம் இழக்கப்படலாம் .... நான் குடியாட்சி, சோசலிசம், தேசியம் ஆகிய மூன்று கோட்பாடுகள் பற்றிப் பேசினேன். குடியாட்சி திரிபடைந்துள்ளது; சோசலிசம் சிதைந்துள்ளது; தேசியம் தவறான விளக்கம் பெற்றுள்ளது" என்று நீண்ட விளக்கம் தந்தார். "I would conclude by saying that democracy is distorted, socialism is emaciated and nationalism misinterpreted." *(p.12)*

பதினெட்டு ஆண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியால் விளைந்த பயன் என்ன என்ற வினாவை எழுப்பி அவரே விடையும் தந்தார்: "நாம் விடுதலை பெற்றபோது நம்மிடமிருந்த கையிருப்பு 1800 கோடி ரூபாய்; இப்பொழுது நம் நிலை: நாம் கொடுக்க வேண்டிய கடன் 3,396 கோடி ரூபாய்."

> When the national flag was unfurled from the Red Fort, we had Rs.1800 crores of foreign balances and when delegates went to the Brettonwoods Conference, the main problem for the delegates was what to do with this

colossal sum, where to invest it, how to take it back, how to utilise it properly? But the present Govt. has solved the problem. Now, we have no money outside, therefore, no problem at all.

ஊதாரிச் செலவால் இருந்த செல்வத்தையெல்லாம் இழந்து விட்டோம் என்பதை நல்ல ஆங்கிலத்தில் நயம்படக் கூறினார்.

நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக இந்தி ஆக்கப்படுமானால் விளையும் தீமைகளைப் பலவகையில் கோடிட்டுக் காட்டினார். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் எவ்வாறு நன்மைகளைப் பெறுவார்கள், வேறு தாய்மொழி பெற்றவர்கள் எவ்வாறு கொடுமைகளுக்கு ஆளாவார்கள் என்பதை ஒரு சான்றின் மூலம் அவரால் உள்ளத்தைத் தைக்கும் வகையில் உணர்த்த முடிந்தது.

நீங்கள் தாயிடமிருந்து இயல்பாக உரிமையோடு பெற்றதை நாங்கள் அரிதின்முயன்று கற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறீர்கள். இதனால் எங்களை ஓர் இடர்ப்பாடுடைய ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளச் சொல்கிறீர்கள். இத்தகைய போட்டியை ரோமானியர்களே ஏற்படுத்தியிருந்தனர். தலைவர்கள் திறந்தவெளி அரங்கில் அமர்ந்து கொண்டு, போர்வீரர்களை ஆயுங்களின்றி வெறுங்கைகளுடன் கொடிய விலங்குகளை எதிர் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினர். சிலர் அவ்வாறு போரிட்டனர்.... மற்றவர் கொடிய விலங்குகளால் துண்டு துண்டாகப் பிய்த்தெறியப்பட்டனர். இவ்வாறு எங்களை நடத்துவதற்கு நாங்கள் உங்களுக்கு என்ன தீமை செய்தோம்? நீங்கள் ஒரு மொழியை எளிதாக உள்ளீர்த்துக்கொள்ள, நாங்கள் மட்டும் ஏன் அதனைக் கற்று உங்களோடு போட்டியிட வேண்டும்? அநீதி அங்குதான் உள்ளது.

What you inherit you want us to learn and you want us to have a handicap race. Only the Romans had the handicap race. The Roman satraps sat in the arena, asked the gladiators to go barehanded and fight ferocious beasts and some of them did.....But other gladiators were torn to pieces by the wild beasts. What have we done to merit such treatment? why is it that you imbibe a language and want us to learn it and compete with you? There lies the injustice (p.90).

இந்தியை எதிர்க்கும் தமிழரையெல்லாம் தமிழ் வெறியர்கள் என்று பட்டம் சூட்டியவர்களுக்கு இந்தி வெறியர்களை அடையாளம் காட்டிப் பேசினார் அண்ணா.

இந்தி மொழிக்காக வாதிடும் வாஜ்பேயிடம் எந்த விதத்திலும் எனக்கு மனவருத்தம் இல்லை. அவருடைய சொற்களை என்னால் புரிந்து கொள்ள முடியும். உண்மையைச் சொல்லப் போனால் அரசியலிலும் பிறதுறைகளிலும் ஒரு கோடியில் இருப்பவர்கள் இன்னொரு கோடியிலிருப்பவர்களைப் புரிந்து கொள்ள முடியும். இரண்டையும் கலக்கும் இடையில் இருப்பவர்கள்தான் இடையூறு விளைவிக்கின்றார்கள். எனது நண்பர் முழுக்கமுழுக்க இந்தியின் மீது ஆணையிட்டு, இந்தியின் மீது சத்தியம் செய்பவர். அவரது அஞ்சாமையை நான் பாராட்டுகின்றேன். எனது மாநிலமும் எவ்வளவு வாஜ்பேயிகளைப் பெற முடியுமோ அவ்வளவு வாஜ்பேயிகளைப் பெற வேண்டுமென்று விரும்புகிறேன். அவர் அவரது மொழிக்காகப் போராடுகிறார். அவரது மொழி மாநிலத்தின் ஆட்சி மொழியாக மட்டுமல்லாமல் அனைத்திந்தியாவின் ஆட்சிமொழியாக வேண்டுமென்று போராடுகிறார். என் நண்பர் வாஜ்பேயிக்கு முழு வாய்ப்பு கிடைக்குமானால் இந்தியை ஓர் உலக மொழியாகக் கூட ஆக்கி விடுவார் (p.74).

இவ்வாறு எள்ளலும் நகைச்சுவையும் கலந்து பேசுவதோடல்லாமல் வேண்டுகோள்களையும் தேவைப் பட்டபோது விடுத்தார். பிரிவினை கேட்டு அறச்சினத்தோடு ஆவேசமாகப் பேசியவர் ஒரு முறை வடவரின் உள்ளத்தைத் தொடுமாறு தமது கோரிக்கையை முன் வைத்தார்:

உங்களுடைய அனுமதியுடன் நான் என்னிடமே ஒரு வினாவை எழுப்பட்டுமா? இந்த அவையில் தனித்து நின்று கொண்டு உங்களுக்கெல்லாம் விருப்பமில்லாத ஒன்றைப் பேசுவதால் நான் என்ன நன்மை பெறப்போகிறேன்? உங்களுக்குக் கசப்புணர்வை உண்டாக்கும் அந்தப் பேச்சை நான் விட்டு விட்டால் நீங்கள் ஒவ்வொருவரும் என்னை உங்கள் இதயத்தில் இருத்திக் கொள்வீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்; இருந்தும் நான் ஏன் அதுபற்றிப் பேச வேண்டும்? ஒருவனாக, தனியனாக, நின்று அவ்வாறு செய்வதால் நான் என்ன நன்மை பெறப்போகிறேன்? நான் அதன் புதுமை கருதி மட்டும் அதனை வலியுறுத்துகிறேன் என்று அருள்கூர்ந்து எண்ணிவிடாதீர்கள். நாங்கள் இந்தியாவின் ஒரு பகுதியாகத் தொடர்வோமானால்,

இந்தியக் கூட்டாட்சியின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாகத் தொடர்வோமானால் மொழி அடிப்படையில் ஓர் ஏகாதிபத்தியம் உருவாகும்; பொருளாதாரத்தில் நாங்கள் பின்னுக்குத் தள்ளப்படுவோம்; பிரிவதால் கிடைக்கக் கூடிய மன அமைதி இல்லாதவராவோம்.

> We feel that if we remain a part and parcel of the Indian union, if we remain as a component part of the Indian federation, linguistically there would be an imperialism, economically our state would be backward and psychologically we would not have so much of solace as we would have if we were to separate (p.46).

ஆளும் கட்சியினர் சில கோட்பாடுகளில் தெளிவில்லாமல் இருக்கிறார்களென்பதை அண்ணா தாம் கையாண்ட சொற்களுக்கு விளக்கம் அளிப்பதன் மூலம் அறிவுறுத்தினார். அன்னார் அடிக்கடி தாங்கள் விடாப்பிடியாகக் கற்பனைக் கொள்கைகளைப் பிடித்துக் கொள்பவர்கள் அல்லர், நடைமுறை தெரிந்து பயனறிந்து செயல்படுபவர்கள் என்று சொல்வது வழக்கம். இதனைக் கண்டித்த அண்ணா, பயனறிதலும், நடைமுறையும் தெளிவான கொள்கை அடிப்படையில் அமைய வேண்டும் என்று விளக்கினார்.

> The members of the ruling party are fond of saying "We are not ideological. We are going to be pragmatic" Madam Deputy Chairman, pragmatism does not mean the dilution and debasement of ideology..... Pragmatism ought to be built upon ideology (P.23).

தங்களுடைய பொருளாதாரக் கொள்கை, முதலாளித்துவமும் சோசலிசமும் கலந்த கலப்புப் பொருளாதாரத்தை (mixed economy) ஆதரிப்பது என்று பெருமையுடன் பேசி வந்த நிலையில் கலப்புப் பொருளாதாரத்தின் கேட்டை அண்ணா அம்பலப்படுத்தும் முறை அழகானது.

> They have got what they fondly call mixed economy .... this is not a mixed economy but an adulterated economy. You are taking up the bad from capitalism and you are leaving out the good from socialism and you have got a curious mixture (P.23).

நல்லதை நீக்கிய சோசலிசத்தையும் முதலாளித்துவத்திலிருக்கும் கேட்டையும் இணைத்த கலப்படப் பொருளாதாரம் அது என்றார்.

அமெரிக்காவிடமிருந்து நிதியுதவி பெறுவதில் எச்சரிக்கை தேவை என்பதை எடுத்துச் சொல்லும் போது, பொதுவுடைமைக் கட்சியினரிடமிருந்து தாம் வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தபோதும் பொது மக்களிடமும் தம்மிடமும் ஆழப்பதிந்து விட்ட எண்ணம் அவர்கள் சொல்வது போல் அமெரிக்கப் பணம் கறைபடிந்தது என்பதேயாகும் என்று ஒப்புக் கொண்டார்.

> Therefore, somehow in the people's mind and in my mind, inspite of the fact that I have got my differences with the communists, Right and Left, American money seems to be tainted. The less of it the more we gain; the more of it the more we lose. (P.150).

அமெரிக்க நிதியை எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகப் பெறுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மை பெற்றவராவோம்; எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகப் பெறுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு இழப்பு நேரிடும்.

தேசிய ஒருமைப்பாடு (national integration) என்ற தொடரே ஒரு முரண்தொடராகும் என்று குறிப்பிட்ட அண்ணா, மக்கள் ஒன்றுபட்டவர்களானால் ஒரு நாடு உருவாகிறது; அப்படி அவர்கள் ஒரு நாட்டவர் ஆனால், வலுக்கட்டாயமான ஒருமைப்பாட்டிற்குத் தேவையேது என்று கேட்டார்.

> The very term "national integration" is a contradiction in terms. People integrated become a nation and if they become a nation where is the necessity for integration? (P.8).

நிதி மசோதாவொன்று வரிகளின் மூலம் மக்களின் குருதியை உறிஞ்சும் தன்மையில் அமைந்திருந்ததைச் சுட்டிக் காட்டிய அண்ணா, கம்பளி ஆட்டு மயிரைக் கத்தரிப்பது போர்வைகள் செய்வதற்கென்பதைப் புரிந்து கொள்ளமுடியுமென்றும் நிதி மசோதா ஏழை மக்களின் உடைமைகளை உறிஞ்சுவதாக இருப்பதைப்புரிந்து கொள்ள முடியவில்லையென்றும் விளக்கினார்.

The finance bill is a fleecing bill. I can understand fleecing rams and sheep for weaving blankets, but you are fleecing men, you are fleecing poor people, you are making the people look with horror at the plan (p. 106).

ஆங்கிலத்தில் மாநிலங்கள் அவையில் பேசும்போதும் தேவையானபோது அளவான அழகான அடுக்குமொழிகளையும் எதுகை மோனைகளையும் அண்ணா பயன்படுத்தக் காணலாம். மதிப்பிற்குரிய முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி மறைந்ததை,

the sad, sudden and shocking demise of the late lamented Prime Minister, ShriLal Bahadur Shastri" (14)

என்று குறிப்பிட்டார். தமிழர்கள் தேவையற்ற சிக்கல்களைக் கிளப்புவார்கள் என்று எண்ணாதீர்கள் என்பதை

Don't think that the Tamilians take up or rake up unnecessary issues (p.21)

என்று சொன்னார்.

"நாங்கள் தவறு செய்தோமானால் எங்களைத் திருத்துங்கள்; உங்களிடம் உறுதியான உண்மைகள் இருக்குமானால் எங்களை ஏற்கச் செய்யுங்கள்; உங்களுடைய கொள்கைக்கு எங்களை மாற்றுங்கள்; ஆனால் நீங்களோ எங்களைக் கட்டாயப் படுத்துகிறீர்கள்; சட்டம் மூலமாகக் கட்டாயப் படுத்துதல் என்பது மிக மோசமான வாதமுறையாகும்".

Correct us if we are erroneous. Convince us if you have got solid facts. Convert us to your point of view. Instead of that you are compelling us. Compulsion, especially through law ... is the worst form of argument (p.37).

எந்தச் சட்டத்தையும் கொண்டுவருமுன் நீங்கள் நூறு முறை எண்ணிப்பார்க்க வேண்டும். அது தேவைதானா என்று பார்க்கவேண்டும் ; மிக அவசரமானதா என்று பார்க்க வேண்டும்; தெளிவானதா என்று பார்க்க வேண்டும். இச்சட்டத்தைப் பொறுத்த மட்டில் தேவையும் இல்லை; அவசரமும் இல்லை; தெளிவும் இல்லை.

You should think a hundred times before you bring in any new legislation; see whether there is any necessity for it, whether there is any urgency for it, whether there is any cogency in it. Here there is neither urgency nor necessity nor cogency (p.49).

வரிக் கொடுமையை எதிர்க்கும்போது நாங்கள் வரியின் அளவு, வரி விதிக்கப்படும்வேகம், அதன் பின்னுள்ள பழிதீர்க்கும் மனப்போக்கு ஆகியவற்றைக் கவனத்தில் கொள்கிறோம்.

When we question the measure of taxation, we are concerned with the volume, the velocity and the vindictiveness of the taxation measure p.122).

நாட்டின் எல்லா மக்களிடத்தும் எல்லா முனைகளிலும் எல்லாத் தரப்பினரிடமும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது என்பதை ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் கொண்டுவந்து அழுத்தமாக, ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார்.

We find all - round frustration in this country. The labourers are frustrated. The farm hands are frustrated. The middle classes are frustrated. Certainly so are the backward classes frustrated. The scheduled castes too are frustrated ....

Our Govt servants are frustrated. Our scientists are frustrated. Our technicians are frustrated. May I add, Madam Deputy Chairman, we non - Hindi people are frustrated (P.19).

ஒருமுறை குடியரசுத் தலைவர் தமது பேச்சில் " நம்முடைய நோக்கங்கள் யாவரும் அறிந்தவை; நம்முடைய குறிக்கோள்கள் தெளிவானவை" (Our objectives are known and our goals are clear) என்றுரைத்தார். தமது பேச்சில் அண்ணா பல ஏதுக்களைக்காட்டி "நமது நோக்கங்கள் யாவரும் அறிந்தவை அல்ல; நமது குறிக்கோள்கள் தெளிவானவை அல்ல" (Our objectives are not known and our goals are not clear) என்ற வாக்கியத்தை மூன்று நான்கு இடங்களில் திரும்பச் சொன்னார். ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினரே ஒரு கூட்டத்தில் "எங்களுக்குக் குடிதண்ணீர் கொடுங்கள்" ("Give us drinking water") என்று கேட்டார். இதனைப் பயன்படுத்திக் கொண்ட அண்ணா, அரசின்

மெத்தனத்தை இடித்துரைத்து, இரண்டு மூன்று முறை "ஆளுங்கட்சி உறுப்பினரே எங்களுக்குக் குடி தண்ணீர் கொடுங்கள் போதும் என்று கேட்கும் நிலையில் நாட்டின் பொருளாதாரம் அவலநிலையில் உள்ளது" என்று ஆள்வோரின் பொறுப்பற்ற தன்மையைச் சுட்டிக் காட்டினார்.

மாநிலங்கள் அவையில் அண்ணா நிகழ்த்திய சொற்பொழிவுகள் அவரது அறிவின் ஆழத்தையும் வீச்சையும், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் கொண்டிருந்த பற்றையும், ஆங்கில மொழியைக் கையாளுவதில் அவர் பெற்றிருந்த ஆற்றலையும் காட்டும். அவை இந்திய அரசியல், பொருளாதாரம், வரலாறு ஆகியவை பற்றிய தெளிவான புரிதலுக்காக மட்டுமல்லாமல், பல காலம் நிலைத்து நிற்கக்கூடிய இலக்கியம் என்பதற்காகவும் படிக்கப்பெற வேண்டியவை. நம்முடைய கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கில இலக்கியம் பயிலும் இளங்கலை, முதுகலை மாணவர்களுக்கு "ஆங்கிலத்தில் இந்தியர்களின் படைப்புகள்" (Indian Writing in English) என்று ஒரு பாடம் உண்டு. அப்பாடத்திட்டத்தில் தாகூர், அரவிந்தர் போன்றோரின் கவிதைகளும் ஆர்.கே. நாரயணன், ராஜா ராவ், முல்க்ராஜ் ஆனந்த் போன்றோரின் நாவல்களும், அண்ணல் காந்தி, ஜவகர்லால் நேரு போன்றோர் எழுதிய கட்டுரைகளும் பிறவும் இடம்பெறும். இப்பாடத் திட்டத்தை உருவாக்கியபோது, நேருவின் கட்டுரைகளைப் பரிந்துரை செய்த கன்னடத்துப் பேராசிரியர் ஒருவர் அவற்றை மேலை அறிஞர் சிலரின் கட்டுரைகளோடு ஒப்பிட்டு "இங்கு உயர்ந்த ஆங்கிலமும் உயர்ந்த வரலாறும் (Here is better English, better history) உண்டு" என்று குறிப்பிட்டார். நாம் எந்த விதமான உயர்வுநவிற்சியுமின்றி அண்ணாவின் ஆங்கிலச் சொற்பொழிவுகளையும் கட்டுரைகளையும் பற்றி "இங்கு அவற்றிற்கு இணையான தரமுள்ள ஆங்கிலமும் வரலாறும் அவற்றிற்கு மேலான வாழ்க்கை நோக்கும் (world - view) இருக்கின்றன" வென்று கூறமுடியும். அண்ணாவின் வாழ்க்கைநோக்கு பெருஞ்சிறப்புடையது என்பதற்கு அதன் தோற்றத்திற்கு அடிப்படையாய் அமைந்த தமிழ் இலக்கிய, பண்பாட்டு மரபே காரணம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

# அண்ணாவின் தமிழ் உணர்வு

முனைவர் ஔவை நடராசன்

நாற்பத்து நான்கு, நாற்பத்தைந்துகளில் எங்களுக்குப் பயிற்றுவித்த தமிழாசிரியர்கள் அனைவரும் அண்ணாவின் ஆர்வலர்கள்தான். எங்கள் ஆசிரியர் வகுப்புக்கு வந்தவுடனே 'இமயத்தின் எல்லைக் கண்ட எந்தமிழ் என்றும் வாழ்க' என்று எழுதிவிட்டுத்தான் பாடமே தொடங்குவார். ஏறத்தாழ தமிழ் ஆசிரியர்கள் என்றாலே அவர்கள் அனைவரும் அண்ணாவின் வலையில் அகப்பட்டவர்கள், அண்ணாவின் பேச்சில் மயங்குபவர்கள், பகுத்தறிவுச் சிந்தனைக்கு ஆட்படுபவர்களின் அணி வகுப்பு தமிழாசிரியர்களிடமிருந்து தொடங்குகிறது என்கிற கருத்து நாற்பத்தைந்தில் மிகப் புகழ் வாய்ந்த கருத்தாக விளங்குகிறது. எண்ணிப் பாருங்கள். இன்று நாம் நின்று பேசுகிற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்ற அமைப்பு அண்ணா கண்ட கனவு. அண்ணா உருவாக்கியதுதான் இந்த நிறுவனம்.

அறுபத்தைந்து என்று நினைக்கிறேன் உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடந்தபொழுது அடுத்த மாநாட்டைத் தமிழகத்தில் நடத்த வேண்டுமென்று அவர்கள் கேட்பதற்கு முன் நான் நடத்துகிறேன் என்று சொன்னவர் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள். ஒரு வேளை காங்கிரஸ் அரசு நிலைத்திருக்கும் என்ற நிலையில், முதலமைச்சர் என்ற நிலையில் அவர் அழைத்துச் சென்ற பெருமக்களை எல்லாம், கேட்டு, அவர் அழைத்துச் சென்ற பெருமக்களுள் நாவலர் நெடுஞ்செழியன் ஒருவர்தான் இயக்கத்தைச் சார்ந்தவர். மகிழ்ச்சியோடு மாநாட்டை நடத்துகிறேன் என்று சொல்லி வந்து விட்டார். அறுபத்தேழில் முன்னேற்றக் கழக அரசு அமைந்து, தமிழக முதலமைச்சராக அண்ணா வடிவெடுத்தார். எவ்வளவு பெருமிதத்தோடு பக்தவத்சலம் எதை நினைத்தாரோ அதை அவர் மனம் மகிழவும், தமிழ் மக்கள் உள்ளம் நெகிழவும் இந்த உலகத் தமிழ் மாநாட்டை நான் சென்னையில் நடத்துவேன்; கலை வளரும் தலைநகராகிய சென்னை மாநகரத்தில் நம் அன்னைத் தமிழுக்கு நிகழும் மாநாடு

அவனி கண்டு வியக்கும் மாநாடாகத் திகழும் என்று அறிவித்தார் அண்ணாவினுடைய தமிழ் உணர்வு அப்படித் தான் தொடங்குகிறது. ஒன்றிரண்டு மட்டும் நினைவுகூற விரும்புகிறேன்.

1960-62களில் அமெரிக்க நாட்டின் இர்வின் வேலஸ் என்பவர் ஒரு நாவல் எழுதினார். எத்தனைப் பேர் அந்த வேலஸ் எழுதிய நாவலை வாங்கிப் படித்திருப்பார்கள் தமிழ்நாட்டில். ஆனால், ஆங்கிலம் படித்தவர்கள் அதைப் படித்திருக்கிறார்கள். அந்த நாவலின் கதை என்னவென்றால் 'The Man' என்பதாகும் அந்த நெடுங்கதையின் பெயர். அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் விமானத்தில் செல்லும்போது, அவர் சுடப்பட்டு இறந்துவிடுகிறார். குடியரசுத் தலைவர் இறந்ததும் அடுத்த இடம் துணைக் குடியரசுத் தலைவருக்கு வரவேண்டும். துணைக் குடியரசுத் தலைவரோ மாரடைப்பில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுவிட்டார். அமெரிக்கா ஆங்கிலேயர்களின் மரபை தொடர்ந்து வருவதால், ஒரு கணம் கூட குடியரசுத் தலைவர் இடம் காலியாக இருக்கக்கூடாது என்ற கலக்கம் வருகிறது. அந்த நிலையில் முதல்வர் இல்லை, இரண்டாமவரும் இல்லை, மூன்றாமவரும் இல்லை. இந்த நிலையில் நிதித்துறையில் பொறுப்புச் செயலாளர் அமைப்பில் இருந்த ஒரு கறுப்பர் தான் கிடைத்தார். அவரை அழைத்துத் தானாகவே குடியரசுத் தலைவர் பதவி அவரிடம் வந்துவிழுகிறது. அவர் போய் கேட்கவில்லை. அவர் இருந்த இருப்பினால், அவருக்கு அமைந்த அமைப்பினால் அவருக்குக் குடியரசுத் தலைவர் பொறுப்பு அமைகிறது. வெள்ளை மாளிகையில் இந்த கறுப்பு குடியரசுத் தலைவர் பொறுப்பேற்கிறார். வெள்ளை மாளிகையில் வேலை ஆட்கள் அவ்வளவு பேரும், வெள்ளையர்கள். அந்த வெள்ளையர்களுக்கு நடுவில் குடியரசுத் தலைவர் எப்படிப் பொறுப்பேற்று, நாள்தோறும் தன்னுடைய நடைமுறை அரசை நடத்தினார் என்று சொல்வது அந்தக் கதை.

அந்தக் கதை முடிந்து வந்த பிறகு அது பெரிய வெற்றிக் கதையாக மக்கள் பாராட்டியபொழுது வேலசின் துணைவியாரைக் கேட்டார்கள். 'உங்கள் கணவர் இந்தக் கதையை எதன் அடிப்படையில் எழுதினார்'. 'அவர் இப்படி ஒரு கனவு கண்டார். உடன் இருப்பவர் எளிமையானவர்கள், விலக்கப்பட்டவர்கள், வாய்ப்புகளை பல காலத்துக்கு முன்பு பறிக்கப்பட்டவர்கள் என்றிருக்கிற இனத்திலிருந்து எவரேனும் ஒருவர் ஒருநாள் குடியரசுத் தலைவராக வரமாட்டாரா? என்ற

எண்ணம்தான் அந்தக் கதையில் இருக்கிறது' என்றார். இந்தக் கதையை அண்ணா எடுத்து எழுதினால் திராவிட நாட்டில் அறிஞர் என்பதற்கும் பொருள் இப்பொழுது உங்களுக்கு விளங்கும் என்று நினைக்கின்றேன்.

பேரறிஞர் என்ற நிலையில் 'வெள்ளை மாளிகையில்' என்று அக்கதையை அப்படியே எழுதிக்காட்டினார். பிறகு சொன்னார். ஏன் இந்த அமெரிக்கக் கதையை எழுதுகிறேன் என்றால் சாமான்யர்கள் ஒரு நாள் அரசைப் பிடிப்பார்கள் என்பதை நினைத்துத்தான் என்று கூறினார். எப்படிப்பட்ட எண்ணம் அவருக்கு தோன்றியிருக்கிறது பாருங்கள்.

கவிதைகள் பிறந்த காலத்தில் பாரதியாரின் பாடல்களை தெருதோறும் உணர்ச்சிப் பொங்க அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அண்ணாவினுடைய இயக்கத்திற்கு என்ன பெயரென்றால், சாமியில்லாத கட்சி, சாதியில்லாத கட்சி சு.நா.மானா இப்படித் தான் சொல்வார்கள். என் பெற்றோரே சொல்வார்கள். சாதியில்லாதக் கட்சியில் சேர்ந்திருக்கிறான். சாமியில்லாதக் கட்சியில் திரிகிறான். சுயமரியாதைக்காரன் என்று, அந்த நிலையில் 'சுயமரியாதைக் கொள் தோழா!' என்ற ஒரு பாட்டு வரி பிறந்தது. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்ற பாட்டு வரி, சமாதானத்திற்குக் கொடுக்கும் சாட்டை வரியாக கவிதைப் பிறந்தது. பாரதியார் பாடல்களையே சொல்லிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு இதோ பாருங்கள். வால்ட் விட்மன், ஒரு புரட்சிக் கவிஞர் என்று அழைத்தார். அவர்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவருக்குப் பாரதிதாசனின் பாட்டு வரிகளைச் சொன்னால் போதும், அந்த வரிகளைப் பரப்பினால் போதும் என்று எண்ணுவதோடு மட்டுமில்லாமல், பாரதிதாசனுக்கு நிதித் திரட்டித் தருகிறேன் என்று முதன்முதலில் ஒரு கவியரசனுக்கு நிதித் திரட்டித் தந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான். எனவே அவருக்குப் பாட்டிலுள்ள தமிழுணர்வு என்னவென்று தெரியும்

அண்ணா அவர்கள் தமிழ்நாடு என்று பெயர் வைத்தார். தமிழ்நாடு என்பது புதிதில்லை. செந்தமிழ் நாடென்னும் போதினிலே- 'தமிழ் நாடு' என்று சொல்கிற வழக்கு பலகாலம் உண்டு. ஆனாலும் கூட, 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கலாமா? என்று கேட்ட பொழுது அதென்ன தமிழ்நாடு, இதனால் விளையப்போகிறது கேடு, இது வேண்டுமென்றே கழகக்காரர்கள் கிளப்பும் கலகம் என்றெல்லாம் பெரிய தலைவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் அண்ணா தமிழ்நாடு என்று

பெயர்வைத்தது மட்டுமில்லை, அப்பொழுது இராஜாஜி ஒரு விளக்கம் கேட்டார்; தமிழ்நாடு என்று பெயர் வைப்பதில் ஒன்றுமில்லை. ஆனால், எழுதுகிறபொழுது ஆங்கிலத்தில் நாடு, என்று போடவேண்டாம் என்று கூறினார். அதற்கு அண்ணா சொல்வார், 'நான் அன்றாடம் கண்டுவருவது புன்னைப் புலிகளையும், நயவஞ்சக நரிகளையுந்தான். எப்படி யெல்லாம் எழுத்துகளை மாற்றி ஏமாற்றலாம் என்று நினைக்கிறவர்கள் ஏராளம், இந்த தமிழகத்தில் தாராளமாக முளைத்து பதவியில் இருக்கிறார்கள்' என்று பேசுவார். அந்த 'U'வை எடுத்துவிடலாம். ஏனென்றால் அந்த 'U' என்பது இருந்தால் 'It may denotes that it became separate nation and a country. So that it could create any date a kind of sensation, mentality among the people which is not good for the India's Integration' என்று சொன்னார். "இதை நாடு என்று சொன்னால், 'தனிநாடு' என்ற உணர்வு மனத்தில் வரலாம் தமிழில் எழுதினால் வராதா? ஆங்கிலத்தில் 'U' என்பதை எடுத்துவிடலாம். எனவே நாடு என்பதற்கு இதுதான் பொருள்'' என்றார். அண்ணா விடை சொன்னார். "எனக்குத் தெரிந்த தமிழ் கொஞ்சம்தான். நாடு என்று நீங்கள் நினைப்பதுபோல் தனியாக இருக்கிற பெருநாடு என்கிற பொருள் இப்பொழுது வந்திருக்கலாம். ஆனால் நாடு என்பது விருப்புகளின் இடம் என்றுதான் பொருள். இராஜாஜி அவர்களே நான் தமிழ்நாடு என்று சொல்வது ஏன் தெரியுமா? மக்களே தமிழை விரும்புங்கள். தமிழை நாடுங்கள் என்று நான் சொல்லுகிறேன். அதற்கும் மேல் சொல்வதென்றால் தஞ்சைப் பக்கம் போயிருந்தால் ஓரத்த நாடு என்ற சிற்றூர் இருப்பதை நீங்கள் பார்க்கலாம். ஏன்? நம்முடைய முத்தையா செட்டியார் வாழ்கிற இடத்துக்குப் பெயர் செட்டிநாடுதான். எனவே நாடு என்பது மக்கள் சூழ இருக்கிற இடம் என்பதுதான் பொருளே தவிர, எனக்கு வராத வஞ்சகப் பிரிவினை எண்ணம் இராஜாஜியின் நெஞ்சத்தில்தான் இருக்கிறது என்று தெரிகிறது'' என்றார்.

பாருங்கள் நண்பர்களே தமிழ்ப் பேசுவதென்றால் சான்றுக்குச் சொல்கிறேன். நாகர்கோயில் தொடங்கி, சென்னை வரை பேசுகின்ற தமிழ் என்பது மாவட்டந் தோறும் சிறிது வேறுபடும். கொச்சைச் சொற்கள் வரும். வழக்காற்றுச் சொற்கள் கொஞ்சம் மிகுந்திருக்கும். அண்ணா பேசியது ஒரே நடை அந்த நடைதான் நாகர்கோவிலில் சட்டமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுக்க வைத்தது. அந்த நடைதான் சேலத்தில் ஒருவரை வெற்றிப் பெறவைத்தது. அவர் பேசுகிற நடை எளிய மக்களுக்கு எப்படி விளங்குகிறது என்றால் புதுமையான உவமைகள் மூலம்

சொல்லிவிடுகிறார். மனத் தெளிவில்லாமல் மான் கூட்டம் என்று மக்களை நினைத்துக்கொண்டு வஞ்சக வலைகளோடு வேடுவர்கள் வருகிறார்கள்'' என்பார்.

மாற்றுக்கட்சியினரைப் பற்றி பேசுவதாக இருந்தாலும் அந்த உவமைகள் மூலம் நயம்பட எடுத்துரைப்பார். ''கனி குலுங்கா மரம், நீர் இல்லா ஆறு, பட்டுப்போன பயிர், கெட்டுப்போன குடும்பம், அணைந்த விளக்கு, சிதைந்த சித்திரம், நரம்பறுந்த யாழ், தொண்டை கம்மிய வித்துவான், பொருளில்லாப் பாட்டு இவை பரிதாபத்திற்குரியனவாவது எப்படியோ அது போன்றுதான், செயலாற்றாத காங்கிரசுக் கட்சியும்'' என்று அவர் எடுத்துக் காட்டும் உவமைகள் புதுமையாகத் தோன்றும். திராவிட இதழில் அண்ணா தீட்டிய 'தம்பிக்குக் கடிதங்கள்' தமிழ்கூறு நல்லுலகமே விரும்பிச் சுவைத்த கருத்துக் கனிகள் என்றால் அது மிகையன்று. அண்ணா தம் நெஞ்சத்தை அந்தக் கடிதங்களில் ஊற்றி எழுதினார். தம் கடிதங்கள் வாயிலாகத் தம்பிகளுக்குப் பொருளியல், இலக்கியம், அரசியல் வரலாறு முதலான பல துறைகளையும் தொட்டு வாராவாரம் விளக்கம் தந்தார். தமிழின் சிறப்பையும், தமிழகத்தின் பெருமையையும், தமிழரின் அருமையையும் தம்பிக்கு எடுத்துச் சொல்லி, இப்போதைய நிலை என்ன? என்பதை அழகுத் தமிழில் எழுதிக் காட்டியிருப்பார் அந்தக் கடிதங்களில்,

> ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே காந்தாரமும் கனோசும், காமரூபமும் மாளவமும், கூர்ஜரமும் பிறவும் உருவாகாத நாட்களிலேயே, அயோத்தியும் அஸ்தினாபுரமும், காசியும் ஹரித்துவாரமும் 'திவ்யக்ஷேத்திரங்கள்' ஆகாததற்கு முன்பே, பூம்புகாரும், கொற்கை, தொண்டி, முசிறி எனும் பல்வேறு துறை முகங்கள் கொண்டதாய் விளங்கியது எந்த நாடோ, எந்த நாட்டிலே முரசு மூன்று, தமிழ் மூன்று வகை என்றும், தானை நால்வகை, போர் முறை பல்வேறு வகை, கருவிகள் பலப்பல என்றும் வகுத்து வைக்கப்பட்டிருந்தனவோ, எந்த நாட்டிலே நிலமே ஐவகையாக இயல்பும் எழிலும் பயனும் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டு இருந்ததோ, எந்த நாட்டு முத்தும் பவழமும் பிறநாட்டுப் பேரரசர்கள் தமது காதலைப் பெற்ற கட்டழகியர்க்குக் காணிக்கையாக்கிக் களித்தனரோ, எந்த நாட்டுப்

புலவர்கள் புவியாளுவோரையும் துச்சமென்றெண்ணி அறநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றனரோ, எந்த நாட்டிலே முகிலின் முழக்கமும் முழவின் ஒலியும், மின்னல் ஒளியும் கன்னல் சுவையும், ஆடலழகியரின் கடையிடையும் ஆற்றலரசர்களின் கட்டாரியும் கொல்லவும் வெல்லவும் பயன்பட்டனவோ, எங்கு,

நற்றிணை நல்ல குறுந்தொகை
ஐங்குறு நூறு, ஒத்த பதிற்றுப் பத்து
ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு
அகம் புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்றபடி, பேரிலக்கியங்கள், கற்றோர் ஈட்டிய கருவூலமாக உளதோ, அந்த நாடு, அதன் எல்லைகள் வெட்டப்பட்டு, வேற்றோரால் கவரப்பட்டு, அதன் பண்பு பாழ்படும் வகையினதான மொழிக்கும் கலைக்கும் இடமளித்துவிட்டு, இடர்ப்பட்டு, இழிநிலை பெற்று, இயல்பு கெட்டு, எழில் குலைந்து, கொற்றம் அழிந்து, கோலம் கலைந்து, மற்றையோர் கண்டு எள்ளி நகையாடத்தக்க விதத்தில் மானமழிந்த, ஈனர்க்குக் குற்றேவல் புரிந்து கிடக்கும் எடுபிடியாக்கப்படுகிறது! எட்டுத் திக்கும் ஒரு காலத்தில் புகழ்க் கொடி பட்டொளி வீசிப் பறந்திட்டதாம்! இன்றோ, திக்குத் தெரியாத காட்டிலே சிறகொடிந்த நிலையில், தத்தித் தத்திச் செல்லும் தத்தை போலாகிக் கிடக்கிறது! முத்துப் பந்தலளித்து முழங்காற்படியிட்டுப் பணிந்தான் ஓர் மன்னன்! தந்தக் குவியல்களைக் காலடியில் கொட்டி, அரசர்க்கரசே! என்று அஞ்சலி செய்தான் மற்றோர் வேந்தன். படைகொண்டு வருவேன் என்று கூறினதும், திறை கொண்டு வந்தேன் என்று பதிலிறுத்தனர் மன்னர் பலர். காவிரிக் கரையிலே காதல் கீதம் பாடிய கட்டிளம் காளை, கட்கம் ஏந்திக் கங்கைக் கரையினரைப் போரிலே வென்று, அவர்தம் தேர்ச்சிலைச் சிலையினை, தமக்கு அதரத்தேனளித்து ஆட்கொண்ட ஆரணங்குகள் விளையாட வைத்திருந்த பொம்மைகளுக்கு அளித்தானாம்.

தம்பி! தம்பி! ஏன் பிறந்தோம் இந்நாட்டில்! பிறந்திடினும், தொதவர், தொம்பரவர் போல் இருந்து தொலைத்திடக் கூடாதா! ஏனோ, நம்மை எல்லாம் தமிழர் என்ற இன உணர்வும், அதனாலாய பெருமையினையும் பெறுமாறு நாவலரும் பாவலரும் செய்துவிட்டனர். அதனாலன்றோ நமக்கு நமது நாட்டின் அந்நாள் ஏற்றம் தெரிகிறது; தெரிவதனாலன்றோ, இன்றுள்ள இழிநிலையும், இனி எதிர்காலம் எப்படியோ என்ற அச்சமும் பிடித்தாட்டுகிறது-அல்லற்படுகிறோம்-அழுது நிற்கிறோம்

என்று 'தம்பிக்கு கடிதங்கள்' பகுதியில் எழுதியுள்ளதை எவருடைய மனதையும் ஈர்க்க வல்லதாகும்.

அண்ணாவின் செய்தித் தலைப்புகள் தீர்க்கமானவை. இந்தி மொழிப் பிரச்சினையில் அன்றைய மைய அரசின் உறுதி காட்டாமையைக் கண்டித்தும், பழமை சான்ற தமிழும் வங்க மொழியும் ஆட்சி மொழிகளாக வேண்டுமென்று வங்காளத்தில் சுட்டிக் காட்டியும் 'கொங்குநாடு கேட்காததை வங்க நாடு கேட்கிறது' எனத் தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டார்.

தமிழ் மக்கள் நல்வாழ்வும், அறிவும் ஆற்றலும் மிக்க சுயமரியாதை மிக்க வாழ்வு பெற அவர் சுமார் 32 ஆண்டுகளில் அவர் எழுதியவையும், பேசியவையும் ஏறத்தாழ நூறாயிரம் பக்கங்கள் கொண்ட கருத்துக் குவியல்களாக அமையும். அவற்றையெல்லாம் தொகுத்துக் கலைக்களஞ்சியம் போல் வெளியிடுவதனால் ஏறத்தாழ 60 தொகுதிகளை உருவாக்க முடியும்.

அத்தகைய பேரறிஞரைப் பற்றி நினைக்கவும், பேசவும், எழுதவும் இந்த அரங்குப் பயன்படும் எனக் கருதுகிறேன்.

நன்றி.

# அண்ணாவின் கவிதைகள்

**கவிவேந்தர் பேரா. மு. மேத்தா**

இக்கருத்தரங்கில் அறிஞர் பெருமக்கள் பலரும் அண்ணாவைப் பற்றிய அனுபவங்களை அனைவரும் பகிர்ந்து கொண்டார்கள். அண்ணாவின் எளிமையைப் பாராட்டினார்கள்.

அவர் வாழ்க்கையில் எந்த அளவிற்கு எளிமையை கடைப்பிடித்தார் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அண்ணா-வார்த்தைகளில் எந்த அளவு வலிமையைக் காட்டினார் தெரியுமா? ஒரு சமயம் தேசிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அண்ணாவை மடக்குவதற்காக. 'தமிழ்த்தாய், தமிழ்த்தாய்' என்று பெருமைபேசிக் கொண்டிருக்கிறீர்களே, உங்களுடைய தமிழ்த்தாய் எந்த வீட்டில் குடியிருக்கிறாள் என்று கேட்டார்கள். எடக்கு மடக்காகக் கேட்டு எதிராளியை திகைக்க வைப்பது சிலர் பழக்கம். அதுபோலத்தான் கேட்டார்கள்.

அண்ணா சிறிது நேரமும் யோசிக்காமல், 'உங்கள் பாரதத் தாய் எந்த வீட்டில் குடியிருக்கிறாளோ, அந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் எங்கள் தமிழ்த்தாய் குடியிருக்கிறாள்' என்றார்.

அந்த ஞானம், அடாவடி வாதங்களையும் உடனுக்குடன் எதிர்கொள்கிற ஆற்றல்-அண்ணாவிற்கு உண்டு.

அண்ணா 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேசினார். அதைப் பற்றி இன்றைக்கும் பேசுகின்றனர். பல வருடங்களுக்கு முன்பு அவர் பேசிய பேச்சு, இன்றைக்கும் பேசப்படுகிறது. அவர் அற்புதமான சிந்தனையாளர். அடித்தட்டு மக்களுக்காகவே சிந்தித்த ஓர் அபூர்வ ஞானி. இன்றைக்குக் கலைஞரிடம் பல்துறை ஆற்றல்களைப் பார்த்து பிரமித்துப் போயிருக்கிறோம். பெருவியப்புக் கொள்கிறோம். இதற்கெல்லாம் வேரும் விலாசமும் எங்கே இருக்கிறது என்பதை அண்ணாவைப் பார்க்கும்போது

தெரிகிறது. அத்துணைத் துறைகளிலும் அண்ணா பிரகாசித்திருக்கிறார். பெருவெற்றிப் பெற்றிருக்கிறார்.

நாடகம், திரைப்படக் கதை, வசனம், பாட்டு, கட்டுரை என அண்ணா பல்வேறு விதமான வடிவங்களிலே எழுத்தைப் பரிசோதனை செய்து பார்த்திருக்கிறார். அண்ணா கவிதை எழுதுவது நிறையப் பேருக்குத் தெரியாது. அண்ணாவும் தன்னைக் கவிஞன் என்ற சொல்லிக் கொள்ளவில்லை. அவர் பொங்கல் மலர்களில், இன்னொரு பத்திரிகைக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் கவிதைகள் எழுதியிருக்கிறார். அண்ணா பெரும்பாலும் நெடுங்கவிதைகள் தான் எழுதுவார். அதாவது கதைக் கவிதைகள்! பல கதைகளைக் கவிதைகளாக எழுதியுள்ளார்.

பெரியார், அண்ணா, கலைஞர் மூவரும் பிரம்மாண்டமான யுக புருஷர்கள்!. இதில் ஒருவரைப் பற்றிச் சொல்லும் பொழுது இன்னொருவர் கட்டாயமாக ஞாபகத்திற்கு வந்துவிடுவார்.

என்னடா? அண்ணாவைப் பற்றிப் பேசச் சொன்னால், இவர் பெரியாரைப் பற்றியும், கலைஞரைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார் என்று நீங்கள் நினைக்கலாம். அதுபோலவே கலைஞரைப் பற்றிப் பேசச் சொன்னால் அண்ணாவை விட்டுவிட்டோ, பெரியாரை விட்டுவிட்டோ பேச முடியாது.

கால்டுவெல் இருந்திருந்தால், 'தந்தை', 'அண்ணன்', 'தலைவர்', 'தளபதி' இவை எல்லாம் திராவிடக் குடும்பத்தின் பெயர்ச் சொற்கள்" என்று எழுதியிருப்பார்.

'தந்தை' என்பது பெரியாரைக் குறிக்கிற பெயராகி விட்டது. 'அண்ணன்' என்பது அண்ணாவைக் குறிக்கிற பெயராகி விட்டது, அப்படி ஒரு பாச உறவோடு, பற்றி அணைத்து வளர்த்த இயக்கம், திராவிட இயக்கம். இந்தத் திராவிட இயக்கத்தினுடைய சிந்தனை, அடிப்படை சிந்தனை என்னவென்று சொன்னால் 'என் மொழியை, என் இனத்தைக் காப்பாற்ற வேண்டும். என் நாட்டை, நாட்டு மக்களை நலிவடையாமல் காப்பாற்ற வேண்டும்' என்பது தான். இந்த அடிப்படை உணர்வுகளோடுதான் எதை எழுதினாலும் எதைப் பேசினாலும் எதைச் சிந்தித்தாலும் அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள்.

பெரியாரைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் துணிவு! அண்ணாவைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் பணிவு!

கலைஞரைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் கனிவு.. துணிவு, பணிவு, கனிவு! மூன்றும் சேர்ந்த இயக்கமாக திராவிட இயக்கம் சிந்தனைகளைப் பரப்பி வந்துள்ளது. அண்ணா ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும் பொழுது ஒரு முறை எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள் "எல்லாம் முடிந்துபோய் விட்டது. நாற்காலியைக் காலி பண்ணிவிட்டுப் புறப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறீர்கள். நாட்கள் எண்ணப்படுகின்றன. "Your days are counted" என்று சொன்னார்கள். உங்களுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன என்றார்கள். அண்ணா பதிலுக்கு சொன்னார் "My steps are measured" என்றார். இதை இரண்டு விதமாக எடுத்துக்கொள்ளலாம். நான் வைக்கிற ஒவ்வொரு அடியையும் வரலாறு குறித்துக் கொள்கிறது என்றும் வைத்துக் கொள்ளலாம். "நான் அளந்து அளந்து தான் அடியெடுத்து வைக்கிறேன். வீழ்ந்து விட விடமாட்டேன்'' என்றும் கொள்ளலாம்.

அண்ணா மிகவும் பணிவானவர். எல்லோருக்கும் மரியாதை செலுத்துபவர். வார்த்தைகளை நேர்த்தியாக உடனுக்குடன் பயன்படுத்தும் ஆற்றல் அண்ணாவிடம் இருந்தது. அந்த ஆற்றலை, அபூர்வமான திறமையை அப்படியே கலைஞரிடம் காணலாம். ஒன்று சொன்னால் சட்டென்று தெறித்து, அதற்குப் பதில் வந்து விழும். நாங்கள் வியந்துபோய் நின்ற சந்தர்ப்பங்கள் உண்டு. ஒரு கவியரங்கில் நான் பாடுகிறேன். கலைஞர் தலைமை. ஒரு கவிதை நயத்துடன் நான் சொன்னேன். "கலைஞர் இரண்டு நாவுகளால் பேசுகிறவர்'' என்றேன். கூட்டத்தில் இருந்தவர்களுக்குக் கோபம். ஒரு நா செந்தமிழ் பேசும் செந்நா. மற்றொரு நா பைந்தமிழ் எழுதும் பேனா என்றேன். கூட்டம் கை தட்டியது. நான் முடித்துவிட்டு உட்கார்ந்தேன். உடனே கலைஞர் எழுந்து வாசித்தார். "தம்பி மேத்தா, நான் இரண்டு நாவுகளால் பேசுகிறவன்" என்று சொன்னார். "இல்லை, இல்லை. எனக்கு மூன்றாவதாக ஒரு நாவும் உண்டு. அந்த மூன்றாவது நா தான் முக்கியமான நா. அந்த நா அண்ணா'' என்றார். சக கவிஞர்களெல்லாம் வியந்துபோனார்கள்.

அவர்களுடைய சிந்தனைகளெல்லாம் அடித்தட்டு மக்களைப் பற்றி, பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி, பிற்படுத்தப்பட்ட மக்களைப் பற்றி, வாய்ப்புகள் பெற முடியாமல் வாடிப் போயிருப்பவர்களைப் பற்றி, எட்டாத உயரங்களைப் பார்த்து ஏங்குகிறவர்களைப் பற்றி, கலக்கத்தில் இருப்பவர்களைப் பற்றித்தான் இருந்தது. அண்ணாவினுடைய கவிதைகளும்

அப்படித்தான் இருக்கின்றன. ஆகாயத்தில் அளாவுகிற கற்பனைச் சிறகுகள் இல்லை. எது இதயத்திலிருந்து சட்டென்று வருகிறதோ அது கவிதை. கதவைத் தட்டி உள்ளே வரலாமா? என்று கேட்டுவிட்டு வருவது உரைநடை நாம் திரும்பிப்பார்க்கையில் நம் அருகில் அமர்ந்திருப்பது கவிதை. உரைநடை கேட்டுவிட்டு வரும். கவிதை வந்த பின் கேட்கும்.

அண்ணா கவிதை எழுதவேண்டுமென்னும் அவசியம் என்ன? அண்ணாவை இப்சன் என்று அக்ரகாரத்தினர் புகழ்மாலை சூட்டினர். அக்ரகாரம் அவ்வளவு சீக்கிரம் யாரையும் புகழாது. அண்ணாவுக்கு வ.ரா. புகழ்மாலை பாடினார். கல்கி அண்ணாவினுடைய நாடகத்தை ஒரு முறை பார்த்துவிட்டு, "நம் நாட்டிலே பெர்னாட்ஷா இல்லை, இப்சன் இல்லை என்றெல்லாம் சொல்கிறார்களே அது பொய். இதோ இருக்கிறார் தென்னாட்டு பெர்னாட்ஷா, இந்நாட்டு இப்சன்" என்று சொல்லி அண்ணாவைப் பற்றி எழுதுகிறார். வ.ரா. அண்ணாவினுடைய தாசனாகவே இருந்தார். எதிராளிகளைக் கூட ஈர்க்கக்கூடிய ஆற்றல்மிக்க அறிவும், ஞானமும் அண்ணாவிடத்திலே இருந்தது. ஏன் கவிதை எழுதினார்? வேறு ஏதாகிலும் எழுத வேண்டியதுதானே? அவர் வசனம் எழுதினாலே அது கவிதையாகத்தான் இருக்கிறது. வேலைக்காரி என்கிற நாடகத்திலே அவர் ஓர் இடத்தில் சொல்கிறார். "சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு". அதோடு நின்றுவிடாமல், நம்மை அவருடைய தோளிலே தூக்கி வருகிறார் அண்ணா. "சட்டம் ஒரு இருட்டறை வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெற முடியாது" என்கிறார். பாதிக்கப் பட்டவர்களுக்காக வந்தவன் நான் என்கிற அந்த உணர்வு அண்ணாவிடம் இருந்தது. அண்ணா தலை முடியைச் சரியாகச் சீவிக்கொள்ள மாட்டார். நரைத்துப் போன தலை, மழிக்காத முகம், கசங்கிப் போன சட்டை, ஆனால் எந்த மேடைக்குப் போனாலும் அவர்தான் சூப்பர் ஸ்டார். அவர் தனது சொற்பொழிவைத் தொடங்கினார் என்று சொன்னால், அருவி போல தமிழ் வந்து கொட்டும். 1969இல் கடைசியாக அவர் எழுதிய கவிதை,

**பாடுகிறேன் அண்ணன் பூங்கவிதை என்று**
**பரிவாக எண்ணாதீர் உடன்பிறந்தோரே.**
**எனக்குச் சீரும் தெரியாது**
**உவமை, உருவகம், அணியும் தெரியாது**
**சிந்தனை உந்தும் செய்திதனைத் தெரிவித்தேன்**
**ஆசையாலே**

உள்ளுக்குள் ஊறிய வெளிப்பாடுதான் இது என்கிறார். சீர், அணி, உவமை, உருவகம் மட்டும் கவிதையல்ல. எதில் உணர்ச்சி தானாகத் துள்ளி வெளிக்கிளம்புகிறதோ அதுதான் கவிதை. அவர் சொல்கிறார், "சிந்தை உந்தும், சிந்தனையை உந்தித் தள்ளிய உணர்ச்சியைக் கவிதையாகச் சொல்கிறேன்" என்கிறார்.

இதே போலத்தான் கலைஞரும் சொல்கிறார். 1967இல் திருச்சி வானொலியில் கலைஞர் பாடுகிறார். இதில் வியப்பு என்னவென்றால் சிலவற்றை அண்ணாவிடமிருந்து கலைஞர் எடுத்துக்கொள்கிறார். சிலவற்றைக் கலைஞரிடமிருந்து அண்ணா எடுத்துக்கொள்கிறார். இது ஒரு குடும்பத்தின் இயல்பான நிலை. "விடுதலை வீரர்" என்பது கலைஞருக்குக் கொடுத்த தலைப்பு. தலையறுத்த வீரர்களைப் பாடுவதால், தளையகற்றிப் பாடுகிறேன் நானும். இந்தியாவின் கட்டுகளை அறுத்த தியாகிகளைப் பற்றிப் பாடுவதால், நானும் தளையை அகற்றிவிட்டேன்" என்கிறார். இலக்கணத் தளையை அகற்றி விட்டேன், "இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப் பல்லக்கு, மோனைத் தேர்கள், தனிமொழிச் சேனை, பண்டித பவனி-இவை எதுவும் இல்லாத, கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக்கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை. இது இலக்கணமல்லாத கவிதைக்கு இலக்கணம். தளையை அகற்றிவிட்டுப் பாடுகிறேன். அவர்-தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால், தொடை தட்டும் என் பாட்டும். என் கவிதை யாப்பின்றிப் போனாலும் போகட்டும். நம் நாடு, இனம், மொழி, மான உணர்வெல்லாம் காப்பின்றிப் போகக்கூடாது எனும் கொள்கை ஒன்றால் எழுதுகிறேன்" என்கிறார். அண்ணா என்ன சிந்திக்கிறாரோ அதை கலைஞர் முன்னமே சிந்திக்கிறார். "நெஞ்சில் ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கி எழுதுகிறேன்" என்கிறார். கவிதை என்பது எது? உள்ளுக்குள்ளிருந்து தானாகக் கதவுகளை உடைத்துக் கொண்டு எது வெளிவருகிறதோ. அந்த உணர்ச்சிக்குப் பெயர்தான் கவிதை. கவிஞர் சிற்பி ஒரு கவிதை எழுதியிருக்கிறார், விளக்கை முன்னிறுத்தி! அகல் இருக்கிறது. திரி இருக்கிறது. எண்ணெய் இருக்கிறது. சுடர் சொல்லியதாம்- இந்த உலகில் நான்தான் பெரிய ஆள் என்று.

**அகன்ற உலகம் நான் என்றது அகல்**
**அழகிய உடல் நான் என்றது திரி**
**அசையும் உயிர் நான் என்றது சுடர்**
**உழைப்பு வடித்த உதிரத் துளிகளாய்த்**
**தேங்கிக் கிடந்த எண்ணெய்**
**வாய்திறக்கவேயில்லை!**

இவற்றில் எது பெரியதோ அது வாய் திறக்கவேயில்லை. ஏனென்றால் பேசுவதற்கான அனுமதி அதற்கு வழங்கப்படவில்லை. சிலர் நான் உழைப்பில் உயர்ந்தவன் என்று சொல்கிறார்கள், இல்லையா? நான் நிறைய யோசித்துப் பார்ப்பதுண்டு. இவரையெல்லாம் உழைப்பால் உயர்ந்தவர் என்கிறார்களே என்று. அதனால், எனக்குக் கெட்ட பெயரும் உண்டு. இவர் எப்போது இப்படித்தான் பேசிக் கொண்டே இருப்பார் என்பார்கள். இதயம் ஒப்புக் கொள்ளாததை எப்பொழுதும் நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம். அதனால் என்ன இழப்பெனினும் ஏற்போம். உழைப்பால் உயர்ந்தவர்களில் பல பேர் பிறர் உழைப்பால்தான் உயர்ந்தவர்கள்.

அவன் உழைப்பால் அவன் உயரவில்லை. அவனை 14ஆவது மாடியில் கொண்டு வந்து உட்கார வைத்த லிஃப்ட் எதுவென்று போய் பார்த்தால்தான் புரியும். உழைக்கும் வர்க்கத்தைப் பற்றி உணர்வுகளோடு இதைப் பார்க்க வேண்டும்.

அண்ணா ஒரு வார்த்தை சொன்னாலும் அந்த வார்த்தை கவிதையாகி விடுகிறது. கவிதை என்றால் இப்படித்தான் ஒரு வடிவத்தில் இருக்க வேண்டுமென்று அவசியம் இல்லை. வடிவத்தில் இருந்தால் அழகுதான். வடிவமில்லாமல் இருப்பதை என்ன செய்வது? ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். சிதறிக் கிடக்கும் மேகங்களை வேண்டாமென்று வானம் தள்ளி விடுகிறதா? அங்கங்கே குப்புறக் கவிழ்ந்தும் குவிந்தும் கிடக்கும் மலையின் துகள்களை வேண்டாமென்று இயற்கை வெறுத்துத் தள்ளிவிடுகிறதா?

அண்ணா மாஜிக் கடவுள்கள் என்றார். மாஜி மந்திரிகள் என்று சொல்லுவோம். மாஜி அதிகாரி என்று சொல்லுவோம். அது என்ன மாஜிக் கடவுள்? கடவுள் என்று ஒருவன் இருந்தால் அது எப்படி மாஜி கடவுள் ஆக முடியும்? மாஜி கடவுள் என்பதே ஒரு அற்புதமான கற்பனையில்லையா?

அதைவிட இன்னொரு அற்புதமான கற்பனை. ஒரு கட்டுரைக்குத் தலைப்பு வைக்கிறார். அந்தத் தலைப்பு: "இயற்கை ஓர் அழகான விதவை"!. விதவை என்றால் பரிதாபம் வரும். அழகான விதவை என்றால் பரிதாபத்தோடு கொஞ்சம் ஆசையும் சேர்ந்து வரும். இயற்கையைச் சொல்கிறார்.

'விதவை' என்ற சொல் பற்றி ஒரு மாணவன், ஒரு கவிதை எழுதியிருந்தான், "பெண்ணே! உன்னை எழுதுகிற எழுத்தில் கூட

உனக்கு ஒரு பொட்டு வைக்க முடியவில்லையே" என்று. அதற்குக் கலைஞர் பதிலளித்தார்-இன்னொரு மேடையில்! "விதவை" என்பது தமிழ்ச்சொல் அல்ல. அதனால்தான் பொட்டு வைக்க முடியவில்லை. விதவைக்குச் சரியான தமிழ்ச் சொல்லை எழுதிப் பாருங்கள். இரண்டு இடத்தில் பொட்டு வைக்கலாம் என்றார். அதுதான் "கைம்பெண்' என்ற சொல். "பொட்டுக்குமேல் பொட்டு வைக்கும் இனந்தான் பூந்தமிழர் இனமே தவிர, இருக்கிற பொட்டை அழிக்கிற இனமல்ல" என்று அதற்கு விளக்கமளித்தார். ஒரு சிந்தனையைக் கலைஞர் இன்னொரு சிந்தனையால் மேலே கொண்டு போனார்.

இயற்கை ஓர் அழகான விதவை என்று சொன்னால், பாதுகாப்பு இல்லாமலும் இருக்கிறாள். யாராலும் மரியாதை செய்யப்படாமலும் இருக்கிறாள். ஆகவே பூ பூத்துக் குலுங்குகிறது. அதற்கு மரியாதை செய்யாமல் போகிறாயே அயோக்கியனே என்று கேட்பதைப் போல இருக்கிறது. இந்த வானம் காலையில் சூரியக் கிரீடத்தைச் சுமந்து வருகிறது. அந்தக் கிரீடத்திற்கு ஒரு வணக்கம் சொல்லக்கூடாதா என்று கேட்பதைப் போல இருக்கிறது. ஒரு சொல்லிலேயே, அதே மாதிரி ஒவ்வொரு வார்த்தைகளிலும் அழகைக் கொண்டு வந்து நிறுத்துவார் அண்ணா. "காந்தி பன்னிரண்டு" என்று ஒரு கவிதை. அதில் பேச்சு நடையை எப்படி கொண்டு வருகிறார் என்று பாருங்கள். காந்தியினுடையப் பேச்சைக் கேட்கப் போகிறார். பக்கத்தில் இருப்பவன் சொல்கிறான் "என்னடா இதைத்தானே எல்லோரும் சொல்கிறார்கள்". அதை அண்ணா கிண்டல் செய்கிறார்.

"ஏனப்பா எம்மான் பேச்சு எப்படி இருந்தது"? என்றேன். "தேனப்பா, தெவிட்டாதப்பா, தேகமே கூசுதப்பா, ஆமப்பா' என்றான் நண்பன். அண்ணா சொல்கிறார்: "ஏனப்பா பேதம், பீடை தீமைகள் யாவும்?" என்றேன். அழகான ஒரு காட்சி! இராஜாஜி அப்பொழுது முதன் மந்திரி. அமைச்சரவை அமைத்திருக்கிறார். சுதந்திரத்திற்கு முன்னர் குற்றம் சொல்கிறார்கள் ஆட்சியின் மேல். இல்லாததற்கெல்லாம் குற்றம் சொல்கிற இன்றையச் சூழலுடன் ஒப்பிட்டுச் சிந்தித்துப் பார்த்தால், சும்மா இருப்பவர்களுக்கே நெஞ்சம் கொதிக்கும்.

ஆச்சாரியார் சொல்கிறார், "கோச்சு ஓட்டுகிறவனை உள்ளே உட்கார்ந்திருப்பவன் கேள்வி கேட்கக் கூடாது. அவனை ஒழுங்காக ஓட்ட விடுங்க". ஆட்சியில் இருப்பவரைக் கேள்வி கேட்கக் கூடாது என்கிறார், ஆச்சாரியார்- அவர் ஆட்சியில் இருந்தபோது.

அதை அண்ணா இராஜாஜியை சொல்கிறார் தன் கவிதையில் கிண்டலாக 'கோச்சு வண்டிக்கும்மே' என்று எழுதுகிறார்.

**கரடுமுரடான பாதையிலே அந்தக்**
**கருப்புக் கண்ணாடிக் கோச்சு மாலும்**
**காட்டுக் குதிரையைப் பூட்டியுமல்லே**
**படுவேகமாகக் கோச்சு ஓட்டலானார்**
**குலுங்குது, வயிறெல்லாம் நோகுதப்பா என்றால்**
**குந்து சும்மா குந்து எனக் கூறிவிட்டார்**

இன்னொருவர் கூறுகிறாராம்:

**கண்ணாடி எடுத்திட்டு ஓட்டுமய்யா**
**கொஞ்சம் கண்டிப்பாக சொல்லுகிறேன் கேளும்**

என்றார்.

**ஓட்டிட வந்தவன் நீயா, நானா என்று**
**ஒய்யாரம் பேசுகிறார் கோச்சு மால்**
**உயிருக்கு பயப்பட்டே கூறினார்கள்**
**ஓட்டிட வந்தது நீயென்றாலும்**
**உயிர் எங்களுடையது உணரும்**

என்றார்.

நேதாஜிக்குப் பரிந்து "கல்கத்தா கலக்கம்" என்று ஒரு கட்டுரை எழுதுகிறார். கல்கத்தாவில் நடந்த காங்கிரசில் நேதாஜியைத் தோற்கடித்துவிட்டார்கள். அந்தச் செய்தியை எண்ணும் இளையவர்களுக்கு இதயம் துடிக்கும். நேதாஜியைத் தோற்கடித்துவிட்டார்களே என்று. "காந்தியே சொன்னாராம், தோற்கடிக்கச் சொல்லி" என்று நேதாஜிக்காகக் குரல் கொடுக்கிறார் அண்ணா.

எந்த இராஜாஜி "எங்களைப் பற்றி எதுவும் கேட்காதே" என்று சொன்னாரோ, அந்த இராஜாஜிக்கு ஆறுதல் சொல்லி ஒரு பாட்டெழுதுகிறார். காங்கிரஸ்காரர்களைச் சிறையில் அடைத்துவிட்டார்களாம். இராஜாஜி மிகவும் சோகமாக இருக்கிறார். அப்பொழுது ஆறுதல் சொல்லி அண்ணா எழுதுகிறார். அவருடைய கட்டுரையில் தேயிலைத் தோட்டத்திலே என்று ஒரு மெட்டு, கருத்திற்கேற்ற மொழி நடையும் அண்ணாவிற்கு இயல்பாக அமையும். காங்கிரசார் சிறையில் வாடியபோது வருந்துகின்ற இராஜாஜிக்கு ஆறுதல் கூறுகிறார் அண்ணா.

"சிறைக் கோட்டத்திலே அவர் செய்வதென்னவென்று தெரியாமல் வாடுகின்றார்". (தேயிலைத் தோட்டத்திலே என்று பாரதி எழுதியிருப்பான். புலம்பவும் திறனற்றுப் போயினர் என்று பாரதி சொல்வான்).

**கதவு திறக்கக் காணோம் - இந்தக்**
**கஷ்டத்தை எண்ணினால் கலம் தண்ணீர் வருதே**
**கண்கள் சிவந்திடுதே**

என்று எழுதுகிறார்.

**அடுப்பிலிட்ட கட்டை போல அவர்**
**தேய்வதால் அணைத்திட வேண்டாமா?**

ஏகாதிபத்தியம் அவர்களைச் சிறையில் வைத்திருக்கிறது. அவர்களுக்கு விடுதலை வேண்டாமா? குரல் கொடுக்க வேண்டாமா? என்று எழுதுகிறார். யாரைப் பார்த்து என்னைக் கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது என்று இராஜாஜி சொல்லிக் கொண்டிருந்தாரோ, அவர்-அண்ணா-அந்த இராஜாஜிக்காக எழுதுகிறார்.

எதிரி கூட, சிறையில் இருக்கக் கூடாது என்று அண்ணா நினைக்கிறார். அதையே அவருக்குப் பின் வந்த கலைஞரும் நினைக்கிறார். இப்பொழுது கைதிகளையெல்லாம் விடுதலை செய்திருக்கிறார். கைதிகளை விடுதலை செய்ததற்காகச் சிலருக்குக் கோபம் வருகிறது. அதெப்படி நீ விடுதலை செய்யலாம் என்று! காந்தியின் நூற்றாண்டு சமயத்தில் ஆயுட்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இது ஒவ்வொரு சமயத்திலும் நடப்பதுதான். ஆனால் விடுதலை செய்துவிடக்கூடாது என்று குரல் கொடுக்கிறார்கள். வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். ஆனால் அண்ணாவின் பண்பாட்டைப் பாருங்கள். இராஜாஜியின் சோகம் தீர்க்க காங்கிரசாருக்கு விடுதலை வேண்டுமென்று கவிதை எழுதியிருக்கிறார்.

**டாட்டா பிர்லா கூட்டாளி**
**பாட்டாளிக்குப் பகையாளி**

என்று எழுதுகிறார். இன்றைக்கு இருக்கக்கூடிய சில வஞ்சகர்களை நீங்கள் நினைத்துக் கொள்ளுங்கள். சிலருடைய ஞாபகம் உங்களுக்கு வரும். அண்ணா எழுதிய "ஆரியமாயை" நூலில் "போற்றி" என்ற கவிதை அந்தக் கசடர்களுக்குப் பொருந்தி வரும்.

**பேராசைப் பெருந்தகையே போற்றி**
**பேசும்நா இரண்டுடையாய் போற்றி**
**தந்திரமூர்த்தி போற்றி**
**தாசர்களின் தலைவா போற்றி**
**வஞ்சக வேந்தே போற்றி**
**வண்கடல் நாதா போற்றி**
**சிண்டுமுடித்துவிடுவாய் போற்றி**
**சிரித்திடு நரியே போற்றி**
**ஈடிலாக் கேடே போற்றி**

என்று எழுதுகிறார்.

இந்த வரிகளைப் படிக்கும் போது நம் நினைவில் எத்தனையோ முகங்கள் எதிர்வந்து போகின்றன.

தீயவரை நோக்கிச் சீறுவதும் ஏழை எளியவர்க்காகக் குரல் கொடுப்பதும் சுயமரியதை, பகுத்தறிவுச் சுடரொளியை ஏற்று குரல் கொடுப்பதும் திராவிட இயக்கத்தின் பொதுவான போக்காக இருந்திருக்கிறது. இருக்கிறது.

பெரியார், அண்ணா, கலைஞர் மூவருமே ஒடுக்கப்பட்டவர்கள் உரிமை பெறவும், தன்மானத்தோடு தமிழர்கள் தலைநிமிரவுமே தம் பேச்சையும் எழுத்தையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்களுடைய எழுத்தும் பேச்சும் நம் இதயத்தில் ஒளிவிளக்கேற்றி ஊர்வலம் வரட்டும்.

அவர்கள் பாதையில் என்றென்றும் நம் பயணம் தொடரட்டும்.

வணக்கம். நன்றி.

# அண்ணா: வாழும் இலக்கியம்

பேரா. முனைவர் கா. செல்லப்பன்

காவியமாக வாழ்பவர்கள்தாம், ஒரு நல்ல காவியம் படைக்க முடியும் என்பார் ஆங்கிலக் கவி மில்டன். அறிஞர் அண்ணா வாழும் இலக்கியம் படைத்த வாழும் இலக்கியம். இலக்கியங்கள் பல படைத்த அவர், இலக்கியமாக வாழ்ந்ததோடு, மக்கள் இதயங்களிலும் இலக்கியமாய் வாழ்கிறார்.

'அவர் தொடாத பொருளில்லை; அவர் கைபட்டு அழகு படாத பொருளில்லை' என்று ஆங்கில எழுத்தாளர் கோல்ட் ஸ்மித் பற்றிக் குறிப்பிடுவார்கள். அறிஞர் அண்ணாவும் பேச்சு, எழுத்து இரண்டிலும் விற்பன்னரராக விளங்கியதோடு, கதை, கட்டுரை, நாடகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்து, தமிழை ஒரு ஆற்றல் மிக்க ஆயுதமாக மாற்றியதோடு, தமிழ் மக்களிடையே மொழி, இன உணர்ச்சியும், சமுதாய மறுமலர்ச்சியும் வளர வழி வகுத்தார்.

இலக்கியத்துக்கு, சமுதாயம் சார்ந்த இலக்கணம் வகுத்தார் அண்ணா.

**கவிஞன் ஓர் காலக்கண்ணாடி; பழமைச் சாயலின்**
**பிரதிபலிப்பல்ல.**
**உள்ளத்தின் ஆவேசம்; உணர்ச்சியின் புயல்.**
**எழுப்பிடும் அவனது இதயகீதம்.**
**எதுகைமோனை எழில்தரு உவமை.**
**வசீகர வர்ணனை; பழமைக்கு மெருகு;**
**இத்தனையும் தேடி, எங்கெங்கோ ஓடி**
**வார்த்தை முடையும் வலைஞன் அல்ல!**

என்ற அவர் சங்கக் கவிதையையும், பாரதி பாடலையும் பாரதிதாசன் கவிதைகளையும் வாழ்க்கை இலக்கியமாக, வாழும் மக்கள் இலக்கியமாகப் பார்த்தார். பாரதியை மக்கள் கவிஞராக மக்களுக்கு அறிமுகப்படுத்திய அண்ணா, பாரதிதாசனை பாட்டாளிகளின் குரலை எழுப்பிய தமிழினக் கவியாகப்

பாராட்டினார். பாவேந்தரை, அமெரிக்கக் குடியாட்சிக் கவிஞரான வால்ட் விட்மனுடன் ஒப்பிட்டுக் கட்டுரை எழுதினார்.

இவை அனைத்துக்கும் மூலச்சுரங்கமாக சங்க இலக்கியத்தைக் கண்டார். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வாச் செய்தொழில் வேற்றுமையான்' என்ற குறளையும், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமுலர் திருமந்திரத்தை தமது மூலமந்திரமாக ஏற்று, 'உடம்பார் அழியின் உயிரார் அழிவார்' என்ற திருமூலரின் கொள்கையையும், சங்க இலக்கியத்தின் வாழ்வு ஏற்பையும் பாராட்டினார். கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுமை நெறியைப் போற்றிய அவர், அதை இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் அடிப்படை வாசகமாகவும் அறிவித்தார். தமிழை உலகமே இணைப்பு மொழியாகவும், பொது மொழியாகவும் ஏற்கும், அது இந்தியாவின் ஆட்சிமொழியாகவும் அது விளங்கும் என்றார்.

இந்த அடித்தளத்தில் தான் அண்ணா தனது வாழும் இலக்கியத்தை உருவாக்கினார். அவரது மேடைத் தமிழ், மக்களின் இதயத்தோடு இதயம் பேசும் மொழியாயிற்று. அதனால் தமிழ்மக்கள் அத்துணைபேரும் அழகுத் தமிழைப் பேசி, அதை வாழும் மொழியாக வளப்படுத்த வழி வகுத்தார். அவரது கூற்றுக்கள் பல, தமிழர்களின் அன்றாட வாழ்வோடு இணைந்து விட்டன. எ-டு 'மறப்போம், மன்னிப்போம்', 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு', 'சட்டம் ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு'.

அண்ணாவின் எழுத்திலும், இதயத்தோடு இதயம் பேசும் எளிய பேச்சின் உயிர்ப்பாற்றல் இருந்ததால் தான், அவை வாழும் இலக்கியங்களாக முடிந்தது. எப்படி பாரதி கவிதையிலே, பேச்சுமொழியைச் சுடரொளியாக மாற்றினாரோ, அப்படி அண்ணா உரைநடைக்கு உரையாடலின் உயிர்ப்பாற்றலைத் தந்தார். அவரது அலங்காரச் சொற்கள், ஆடம்பர வாழ்க்கையின் அந்நியத்தன்மையைக் காட்டவே பயன்படுத்தப்பட்டன. 'தங்கத்தினால் அரிசி, கோமதேகக் கூட்டும், வைர வறுவலும், முத்துப் பச்சடியும், மோர்க் குழம்பிலே செம்பும் கலந்தா சாப்பிட முடியும்?' என்ற கூற்றால், பணமும் பகட்டும் வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாது என்பதை அலங்கார நடையால் காட்டுகிறார்.

ஆனால் அவரது நடையைவிட, அவரது எழுத்துக்களில் அடித்தளமாக விளங்குவது மனித நேயமும், மனித மாண்பும் தான். அவரது நாடகங்களில் சமுதாயக் கொடுமைகள், உயிருள்ள பாத்திரங்களின் உணர்ச்சி மோதல்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

அவரது 'வேலைக்காரி' நாடகம், வர்க்கப் போராட்டத்தையும், சாதி எதிர்ப்பையையும் மையமாகக் கொண்டது. இதில் பெண்ணடிமையும் இணைக்கப்பட்டுள்ளது. வேலை செய்வதால் 'வேலைக்காரி' என்று பரமானந்தத்தால் குறிப்பிடப்படும் கதை நாயகி, தமிழ் நாடக இலக்கிய உலகில் ஒரு புதுமை. அவளைப் பணக்கார வேதாசலத்தின் மகன் காதலிப்பதன் மூலம், காதலுக்கு ஜாதி, பணத்தளையைத் தாண்டும் சக்தியிருப்பதை அண்ணா காட்டியுள்ளார். இந்த நாடகத்தில் பணம் மனிதர்களை எப்படி மாற்றுகிறது, பொருளற்றவர்களைப் பொருளாக்கும் பொருளாகிறது என்பது பல நிலைகளில் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக ஆனந்தன் பணக்காரப் பரமானந்தமாக மாறும் போது வேதாசலத்துக்கு மருமகனாக முடிகிறது. அதேபோல் வேலைக்காரி அமிர்தம் சுமிர்தமாகும்போதும் வேதாசலம் அவளை மருமகளாக ஏற்க முன்வருகிறான். வாழ்க்கை நாடகத்தை, நாடகம் பல்வேறு மாறுவேஷங்கள் மூலம் காட்டுகிறது. குறிப்பாக, ஆனந்தன் வடநாட்டு வக்கீலாக மாறிப் பிறகு ஆனந்தனாக அடையாளம் காட்டுகிறான். அவனே சுந்தரகோஷின் வேஷத்தையும் கலைக்கிறான். இறுதியில் சுகிர்தம்தான் அமிர்தம் என்பதையும் காட்டுகிறான். இதன் மூலம் நாடகத்தில் திடீர் திருப்பங்கள் வருவதோடு சமுதாய வேடதாரிகளை அம்பலப் படுத்தும் உத்தியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவரது 'ஓர் இரவு' நாடகத்திலும் ஒரு ஏழைப்பெண், ஒரு பணக்காரனால் வஞ்சிக்கப்படுகிறாள். அந்தப் பெண்ணின் மகன் வறுமையில் திருடனானாலும், தனது தங்கைக்கு உதவிசெய்வதோடு, இறுதியில் தாயைத் தந்தையிடம் சேர்க்கவும் முயல்கிறான். பொருளாளி திருடர்களை விளைவிக்கிறான். ஆனால் திருடன் பொருளாளியைத் திருத்துகிறான். ஒரே இரவில் கதையின் முக்கிய நிகழ்ச்சிகளைக் காட்டி, 'ஓர் இரவு', இரு உலகங்களை உள்ளடக்கியதாக இருப்பதாகவும் அண்ணா உணர்த்துகிறார். இந்த நாடகத்தைப் பார்த்த பின், 'இங்கும் ஒரு

பெர்னாட்ஷா, இப்சன் இன்னும் கால்ஸ்வொர்த்தி கூட இருக்கிறார்' என கல்கி அண்ணாவைப் பாராட்டினார்.

அவரது 'சந்திரமோகன்' என்ற வரலாற்று நாடகத்தில் சனாதன, சாதீய சக்திகளுக்கும், வீரம், பகுத்தறிவு போன்ற பண்புகளுக்கும் உள்ள மோதல் (Conflict) சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்கு, வரலாறு நிகழ்கால வெளிச்சத்தில் விளக்கப்பட்டுள்ளது. இதை புதிய வரலாற்றியத்துக்கு (New Historicism) முன்னோடியாகக் கொள்ளலாம்.

அவரது 'நல்லதம்பி'யிலும் ஜமீன்தார் முறையை அன்பு வழியில் ஒழித்து, கிராமங்களில் புது வாழ்வு படைக்கும் பாங்கினைப் பார்க்கலாம். இதில் காந்தியச் சிந்தனைகள் கருவாக உள்ளன.

அவரது புதினங்களிலும் பெண்ணுரிமை, சமுதாயப் புரட்சிக்கு வித்தாகக் காட்டப்படுகின்றன. 'குமாஸ்தாவின் பெண்', 'பார்வதி பி.ஏ.', முதலிய புதினங்களில் பெண் போராளியாகவும் படிப்பாளியாகவும் படைக்கப்பட்டுள்ளாள். அவரது 'ரங்கோன் ராதா'வில், ஒரு பணத்தாசை பிடித்தவன், மூடநம்பிக்கைகளின் பிடியில் சிக்கி, பித்தளையைப் பொன்னாக்கும் ரசவாதத்திலும் ஈடுபடுகிறான் . பொன்னாசையோடு பெண்ணாசையும் சேர்ந்து, தன் மனைவி தங்கத்தின் தங்கையையும் மணக்க நினைக்கிறான். ஆனால் அவனைக் கொலைக் குற்றத்திலிருந்து காப்பாற்ற, கைக் குழந்தையான தன் மகனை அவளிடம் விட்டுவிட்டு, தான் இறந்ததாக நம்பவைக்கிறான். ரங்கூன் சென்று ஒரு மகளையும் பெற்றுத் திரும்பி வந்து தனது மகன் துணையால் அவளுக்கு நல்ல கணவனைப் பெற்றுத் தருவதோடு, தன் கணவனையும் திருத்துகிறாள். இதில் இப்சனின் The Ghosts என்ற நாடகத்தின் தாக்கத்தைக் காணலாம். இப்சனில், சமுதாய மூட நம்பிக்கைகள் பேய்களாக உருவகிக்கப்படுகின்றன. இந்த நாடகத்தின் மூடநம்பிக்கைகளால் பேய்விரட்டுதல் போன்ற காட்சிகள் காட்டப்படுகின்றன. 'I am Half inclined to think that we are all ghosts' என்று இப்சனில் Oswald கூறுவான். அண்ணாவின் நாடகத்தில் தங்கத்தைப் பேய் என்று, பணப்பேய் பிடித்த அவள் கணவன் கூறுகிறான்.

அண்ணா சிறுகதை இலக்கியத்துக்கும் சிறந்த பங்களிப்பு செய்துள்ளார். அவர் 1940களில் எழுதிய 'செய்வாழை' என்ற

சிறுகதை, ஒரு கூலி தன் விட்டில் ஆசையாய் வளர்த்த செய்வாழை, அவனது பிள்ளைகளின் கனவுகள், கற்பனைகளாய் வளர்ந்த வாழை, பண்ணையார் வீட்டு விஷேத்திற்காக எடுத்துச் செல்லப்படும்போது, குழந்தைகளும் கூலியும் குமுறியதைக் காட்டுகிறது. அத்தோடு நிற்காமல், உழைப்பில் உருவான குலை, நான்கு நாட்களுக்குப் பின் கடையில் தொங்கும் போது வியாபாரப் பொருளாகி விடுகிறது. அப்போது, அதன் உண்மையான சொந்தக்காரன் அன்னியப்படுத்தப் படுகிறான். வாழை பார்வதி பாட்டிக்கு பாடையாகிறது. உழைப்பில் உருவாகி, உணர்வால் கனவாகி முதலாளித்துவ அமைப்பால் வெறும் விலைபொருளாகி, இறுதியில் உயிரற்றப் பிணத்தைத் தூக்கும் பாடையாகி விடுகிறது. 'செவ்வாழை' என்ற உயிருள்ள (Organic) படிமம், உயிரற்றப் பொருளாக மாறிவிடுகிறது.

'இதோ இந்த செவ்வாழை, நமது கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது. எனவே, பலன் நமக்குக் கிடைக்கிறது. இது போல நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயலிருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்? அப்படி ஒரு காலம் வருமா?' என்று செங்கோடனைச் சிந்திக்க வைக்கிறார்-ஏன், நம் எல்லோரையும் சிந்திக்க வைக்கிறார். ஆழமான மார்க்சீயச் சிந்தனையை கலையுணர்வுடன் இந்தக் கதை காட்டுகிறது. 'ரொட்டித்துண்டு', 'பொங்கல் பரிசு' போன்றவையும் இப்படிப்பட்ட கதைகளே.

இறுதியாக அவரது கவிதையொன்றைக் காண்போம்.

**இனியன கேட்பின், என்னருந் தம்பி**
**இனிது இனிது இலட்சியம் இனிது**
**அதனினும் இனிது அதன் பகைவர்கள்**

இங்குதான் அண்ணாவுடைய மனிதம் மனிதநேயம் பளிச்சிடுகிறது, இவ்வளவு நேரம் தமிழ்ப் பண்பாட்டை பற்றியே சொல்லிக் கொண்டிருந்தேன். இவை தவிர அண்ணாவுடைய இலக்கியத்திலும் வாழ்க்கையிலும் மனிதம் மனிதநேயம் மிக முக்கியமான இடத்தைப் பெற்றது. மற்றவர்களையெல்லாம் மதிப்பார். மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகையாக இருந்தால் மணக்காமலா போய்விடும் என்று சொன்னார். Forget and Forgive என்று சொன்னார். இது மிகவும் முக்கியம். அண்ணாவினுடைய பெருந்தன்மை, எல்லோரையும் ஏற்கின்ற

தன்மை, ஜனநாயகம் என்றால் உண்மையான ஜனநாயகம் வாதியாக விளங்கினார். ஒருசமயம் சொன்னார். நான் படித்தவர்களையும் நம்புகிறேன், படிக்காதவர்களையும் நம்புகிறேன். நான் பார்ப்பனர்களை நம்புகிறேன். பார்ப்பனர் அல்லாதவர்களையும் நம்புகிறேன். நான் நல்லவர்களை எல்லாம் நம்புகிறேன், நான் எல்லோரையும் நல்லவர்களாக ஆக்கமுடியும் என்று நம்புகிறேன். எனவே நான் எல்லோரையும் நம்புகிறேன். அண்ணா ஒரு மிகப்பெரிய ஜனநாயகவாதியாக இருந்தார் என்றால் அதற்குக் காரணம் அவர் மனிதன் மேல் நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய கடைசிக் கடிதத்திலே அதைச் சொல்லுகிறார். எனக்கு 'இந்த மனிதத்தை நிலைபெறச் செய்வதுதான் வாழ்க்கையின் பெரும் சாதனையாகும் என்று நான் கருதுகிறேன்' என்கிறார்.

அண்ணா "தமிழியம்" என்று தொடங்கி மனித இயல் நிலைக்கு வந்துவிடுகிறார். 'தம்பி அந்த மனிதத் தன்மையில்தான் முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன் மனிதத் தன்மையை நிலை நிறுத்துவதைக் காட்டிலும் மகத்தான வேறுவெற்றியில்லை என்று கருதுகிறேன்' அந்தக் கடிதம் முழுவதும் இதைத்தான் சொல்லுகிறார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'மெய்ப்பொருள் காண்பது அரிது' இப்படி பல வரிகளைச் சொல்லி அண்ணா இறுதியில் ஜனநாயகம் சமதர்மம் இவை இரண்டும் சேர்ந்ததுதான் அவரது அரசியல் மூன்றாவது தத்துவம் "பெடரலிசம்" ஜனநாயகம், சோசலிசம், பெடரலிசம் இவை மூன்றும்தான் அவருடைய வாழ்க்கை தத்துவம். இந்த மூன்றும் பொதுவான கருத்து மனித உள்ளாற்றல் ஜன நாயகம், மனித சமத்துவம் (Dignity, Human potentiality, Democracy, Human equality) இந்த நான்கையும் ஒன்றாகப் பிணைத்து அவர் கேட்பார். அவர் இலட்சிய வாழ்க்கை நடத்தியதனால் அவர் மிகச் சாதாரண மனிதனாக இருந்தாலும் மிக அசாதரனமான ஒரு சக்தியாக உயர்ந்திருக்கிறார். "இது மிகவும் முக்கியம். அண்ணா யாராலும் எண்ணிப்பரர்க்க முடியாத அளவு உயர்ந்த ஒரு சிந்தனையாளர், அறிஞர் ஆனால் மிகச் சாதாரன மனிதன் கூட அவரைப் புரிந்துகொள்ள முடியும். இதுதான் மகாத்மா காந்திக்கும் இருந்தது. இதுதான் மகாத்மா காந்திக்கும், அண்ணாவுக்கும் இருந்த ஒற்றுமை. இந்த இரண்டு அசாதரணங்களும் சாதாரணமாக இருந்தன. நான் ஆங்கிலத்திலே

சொல்வது உண்டு 'Anna was an exordinary man'. ஒரு மிக அசாதாரணமான சாதாரண மனிதன், அவர் சாதாரணத்தின் அசாதாரணத் தத்துவத்தை நான் மிக நம்புகிறேன். அவருடைய அசாதாரணம் சாதாரணத்தை ஏற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிகிறது. இதுதான் முக்கியம். மகாத்மாகாந்தியோ அறிஞர் அண்ணாவோ அவர்கள் தங்களுடையதிலிருந்து மற்றவரைக் காட்டிலும் வேறுபட்டவராகி, மகாத்மா என்றால் A great soul என்கிறாய் அது அல்ல அர்த்தம். He identifies with the soul of the common man. இதுதான் முக்கியம். அண்ணாவும் சாதாரன மனிதனோடு தன்னை ஐக்கியப் படுத்திக்கொண்டு தன்னுடைய அசாதாரண ஆற்றலினால் சாதாரணத்தின் அசாதாரணத் தத்துவத்தை விளக்கிய மானிடத்தின் மகத்துவத்தை மகாத்மா நடத்தியதுபோல சாதாரணத்தின் அசாதாரணத்தை அண்ணா விளக்கினார், ஆக, இந்த முறையிலேதான் இப்படி வாழ்ந்ததனால் தான் அவருடைய வாழ்க்கை ஒரு வாழும் இலக்கியமாகியது, இப்படி வாழ்ந்து மற்றவர்களை வாழவைக்கவேண்டும் என்ற வாழ்வியலோடு தொடர்புபடுத்தினால் தான் அவர் படைத்தவை, அவர் பேசியவை, வாழும் இலக்கியமாகியன.

இதுதான் என்னுடைய தலைப்புக்கு நான் சொல்ல விரும்புவது, அண்ணா மனிதனாக மட்டுமல்ல இலக்கியமாக வாழ்ந்தார், அண்ணா இலக்கியம் மாத்திரம் படைக்கவில்லை மனிதனை இலக்கியமாகப் படைத்தார், அவர் இலக்கியமாக வாழ்ந்தார். இலக்கியம் வாழ்க்கையோடு வாழ்கிறது. வாழ்க்கை வளர வளர அவருடைய இலக்கியத்திறன் அனைத்தும் வளரும். இப்படிப்பட்ட ஒரு பெரிய மனிதரை நூற்றாண்டுக் கண்ட மனிதரை இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு தன்னுணர்வு வழங்கிய மனிதரை, இதற்குத் தமிழ்நாடு என்று பெயர்வைத்து தாலாட்டிய பெரிய மனிதரை, உலகத்தமிழ் மாநாட்டை உலகம் உணர நடத்திய பெரிய மனிதரை, அந்தமா மனிதனை தன் சாதரணத்துவத்தை மறவாத அந்த மாமனிதரை, இந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பாராட்டுகிறபோது நானும் கலந்து கொண்டு என்னுடைய வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் M.A. ஆங்கிலம் படித்து கொண்டிருந்தபோது ஆங்கிலத் துறையில் தமிழ் வாடையே வராது. கி.வீரமணி அங்கேயும் படித்துக் கொண்டிருப்பார். அவர்

சொல்லுவார் நீங்கள் இருக்கின்ற துறை ஒரு மாதிரி. நீங்கள் தமிழில் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லி ஜாக்கிரதையாக இருங்கள் என்று ஒரு முறை என்னிடம் சொன்னார். நான் அண்ணாவால் ஈர்க்கப்பட்டு நான் ஆங்கில இலக்கியம் படிக்கின்றபோது பைரன் ஷெல்லியைப் படிக்கிறபோதும் தமிழைப் படித்தேன் என்றால் அதற்கு அண்ணாவும் பாரதிதாசனும் காரணம். அதனால்தான் நான் சொன்னேன், ஆங்கிலப் பேராசிரியர் என்பதைவிட நான் தமிழ் மாணவன் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமையடைகிறேன் என்று. நான் சொல்கிறேன் 'ஆங்கிலம் எனக்கு பிழைப்புக்கு வழி', 'தமிழ் எனக்கு வாழ்வுக்கு வழி'. என்னதான் ஷெல்லியோடும், கீட்சோடும் உயர உயரப் பறந்தாலும் பாரதியோடும் பாரதிதாசனோடும் இந்த மண்ணுக்கு மனமுவந்து வருவதுதான் என்னுடைய வாழ்க்கையின் கூறு என்று சொல்வதற்கு எனக்கு வித்திட்ட பெரிய மனிதன் அறிஞர் அண்ணா, அந்த வித்துக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். அப்துல் ரகுமான் ஒரு அற்புதமான கவிதை எழுதி இருக்கிறார். 'விதைபோல் விழுந்தவன்' என்று சொல்லி அவற்றில் சிலவரிகளைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

**இறந்த காலத்தை**
**எழுத்தினால் எழுப்பினாய்;**
**நிகழ் காலத்தின்**
**நிசங்களைப் படம் பிடித்தாய்;**
**வருங்காலப் பூக்களுக்கு**
**வார்த்தை விதை தூவினாய்;**
**மூன்று வகைக் காலத்தை**
**முடிச்சிட்டு வைத்திருந்த**
**வினைத்தொகை நீ!**

அற்புதமானவரி 'வினைத்தொகை'. முக்காலத்தையும் கொண்ட அந்த வினைத்தொகை நீ அழுகின்றபோதும் மேகம்போல் அழுதவன் நீ, சிலபேர் சிரிக்கின்றபோதே அழுகின்ற மாதிரி இருக்கு. அண்ணா அழுகிறபோதே மேகம் மழைபெய்வது அழுகிறமாதிரியே இருக்கிறதாம். ஆனால் அது வாழவைக்க அழுகிறது. அழுகின்றபோதும் மேகம்போல் அழுதவன் நீ விழுகின்ற போதும் விதையைப்போல் விழுந்தவன் நீ. அழுவதும், வீழ்வதும் தவிர்க்கமுடியாது, ஆனால், பலபேர் வீழ்கிறார்கள்.

அப்படியே படுத்துவிடுகிறார்கள். ஆனால், வீழ்ந்தால் விதைதான் மேலேவரும். இதுதான் முக்கியம். மற்றவர்கள் எல்லாம் வீழ்ந்தால் மேலேமேலே வருவதில்லை. நீ விதைபோல விழுந்தாய் என்று சொல்லி அந்த விதைபோல விழுந்தவன், விட்ட விதை இந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமாக வளர்ந்திருக்கிறது. நாங்களும் நாமும் எல்லாரும் வளர்ந்திருக்கிறோம். இந்த தமிழ்ச் சமுதாயத்தை இப்போது கலைஞர் போன்றவர்கள், பேராசிரியர் போன்றவர்களால் உலகம் உணர ஆரம்பித்திருக்கிறது. இந்த வளர்ச்சிக்கு வித்திட்ட அந்தப் பேரறிஞருக்கு என் வணக்கத்தையும் இந்த அமைப்புக்கும் நிறுவன இயக்குநருக்கும் மற்றவர்களுக்கும் நன்றி.

# அண்ணாவின் நாடக இலக்கியப்பணி

பேரா. முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய "அண்ணா வாழும் இலக்கியம்" என்ற தலைப்பில் மிகச்சிறந்த உரையாற்றி அமர்ந்திருக்கின்ற முனைவர் பேராசிரியர் க. செல்லப்பனார் அவர்களே, இந்தக் கருத்தரங்கத்தை முன்னின்று நடத்திக் கொண்டிருக்கின்ற முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் மு. வளர்மதி அவர்களே, பேராசிரியர்கள் லாரன்ஸ் அவர்களே, பகவதி அவர்களே, மங்கையர்கரசி அவர்களே, புதுவை சிவம் அவர்களே, மாணவ மாணவியரே, உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெறுகிற பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளைக் கருத்தரங்கத்தின் பிற்பகல் நிகழ்வில் கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி உரையாற்றுகின்ற ஒரு நல்ல வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த இயக்குநர் அவர்களுக்கும், இந்த நிறுவனத்திற்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்ன தலைப்பில் பேசலாம் என்று என்னைக் கேட்டபோது "பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள்' என்ற தலைப்பில் பேசுங்கள் என்று அவர்களே சொன்னார்கள், நான்தான் அண்ணாவின் இலக்கியப்பணி என்று இருக்கட்டுமே, பொதுவாகப் பேசிவிடுகிறேன் என்று சொன்னேன். அதுதான் நான் செய்தபிழை. பேராசிரியர் செல்லப்பனார் அவர்கள் இந்த வாழும் இலக்கியம் என்ற தலைப்பிலே அண்ணாவின் இலக்கியப்பணி அனைத்தையும் ஓரளவு உங்கள் முன் படம்பிடித்துக் காட்டிவிட்டார்கள். அவை இலக்கியப்பணி என்பதுதான் இங்கு வாழும் இலக்கியமாக மாறி இருக்கிறது, அவ்வளவுதான். அண்ணா இலக்கியத்திற்கு என்னென்ன பணி செய்து இருக்கிறார் என்று பேசுவது அவர் படைத்த இலக்கியம்

எல்லாம் வாழும் இலக்கியம் என்று அவர் சொன்னதற்கும் ஒன்றும் வேறுபாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இன்றைக்கு நான் அவருடைய இலக்கியப்பணியைக் கோடிட்டுக் காட்டிவிட்டு குறிப்பாக நாடகங்களைப்பற்றி பேசிவிடலாம், என்று கருதுகிறேன். ஏனென்றால், ஆராய்ச்சி செய்கிறபோது தலைப்பை இவ்வாறு கொடுப்பது வழக்கம். ஒரு பொதுத்தலைப்பாக கொடுத்துவிட்டு குறிப்பாக (அ) சிறப்பாக என்று ஒன்றைப்போட்டு ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளே வரவேண்டுமென்று அப்படி போடுவார்கள். அதுமாதிரி இந்த பெரிய வட்டமாக இருக்கிற இலக்கியப் பணியிலிருந்து என்னைக் கொஞ்சம் விடுவித்துக்கொண்டு குறிப்பாக அண்ணாவின் நாடகங்களைப்பற்றி உங்கள் முன்னாலே சிறிது பேசலாம் என்று கருதுகிறேன்.

1961ஆம்ஆண்டு ஆறு ஆண்டுகளுக்கு முன்னாலே அண்ணா முதலமைச்சர் ஆவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை நான் சொல்லுகிறேன். பேராசிரியர் மா.கி தசரதன் என்னோடு பணியாற்றிக் கொண்டிருந்தார். எனக்கு மூத்தவர். அவர் அண்ணாவின் இன்னொரு வீட்டிலே குடித்தனம் இருந்தார். அவரைப்பார்க்க நான் சென்றபோதுதான் திண்ணையில் ஒருவர் பணியனோடு அந்த பக்கம் பார்த்துக்கொண்டிருந்தார். மா.கி தசரதன் இந்தப் பக்கமாக நின்று கொண்டிருக்கிறார். யாரோ உட்கார்ந்து கொண்டிருக்கின்றார் என்று நினைத்துக் கொண்டு நான் அவரிடம் பேசுவதற்காகச் சென்று கொண்டிருக்கிறேன் அப்பொழுதுதான் அண்ணா இருக்கிறார் என்று எனக்கு கைகாட்டுகிறார். முதன் முதலான அண்ணாவை நேரில் பார்த்தது அன்றுதான். நான் பயிற்றுநராகப் (டியூட்டராக) போய் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தபோது விரிவுரையாளராக இருந்த பேராசிரியர் மா.கி தசரதன் வீட்டில்தான் அண்ணாவை நேருக்கு நேராகச் சந்திக்கின்றேன். உடனே உட்கார் என்றார். நான் நின்று கொண்டே இருந்தேன். அன்றைக்கு அவரிடம் காட்டிய மரியாதையோடுதான் இன்றுவரைக்கும் இருந்து கொண்டு இருக்கிறேன்.

ஆகவே, இப்படி பேரறிஞர் அண்ணாவோடு பழகிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை ஒரு பெரும்பேறாகக் கருதுகிறேன்,

அதனால்தான் இலக்கியப்பணி என்று சொல்லுகிறபோது அவர்கள் நடத்திய "திராவிடநாடு' இதழ், "காஞ்சி" இதழ் இவைகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறவேண்டும், "திராவிடநாடு" இதழ் நின்றவுடனே காஞ்சி இதழ் துவக்கினார். அதற்கு அவர்கள் எழுதுகிற போதெல்லாம் எடுத்துக்கொள்கிற நேரம் இரவு இரண்டு மணிதான். அங்கே தம்பிக்கு மடல் எழுதத்தொடங்கி அவர்கள் படுக்கிறபோது ஏறத்தாழ நான்கு (அ) ஐந்து ஆகிவிடும். பிறகு எழுதுவது பகல் பத்துமணி. அண்ணா உழைக்கிற உழைப்பெல்லாம் வெளியே தெரியாது. இரவிலே அவர்கள் படித்துவிட்டு எழுதத்தொடங்கி அவர்கள் படுக்கப்போவது அதிகாலை ஐந்து மணி. அதன்பிறகு அவர் தூங்குவது ஐந்து மணிநேரம்தான். எழுவது பத்துமணிதான் என்பது உலகத்திற்குத் தெரிந்தது. அதற்கு முன்பு அவர் உழைத்த உழைப்பு அவர் எழுதிய எழுத்துக்களெல்லாம் இன்றைக்கு வெளிவந்திருக்கின்றனவே இவைகளெல்லாம் இரவு பனிரெண்டு மணிக்கு மேலே ஐந்து மணிக்குள் எழுதிய எழுத்துக்கள் தாம். அதற்கு முன்பு அவர்கள் எழுதுவதே இல்லை. பேசிக்கொண்டிருப்பார். நண்பரோடு பேசிக் கொண்டிருப்பார். சி.வி.ராஜகோபால், சி.எஸ். பூஞ்சோலை. சி.வி.எம். அண்ணாமலை, கே.டி.எஸ். மணி இவர்கள் எல்லாம் வந்தார்கள் என்றால் அவர்களோடு பேசிக்கொண்டிருப்பார்.

காஞ்சிபுரத்திலே இருக்கும்போது அந்த அளவுக்கு மற்றவரோடு பேசிக் கொண்டிருந்தாலும் கூட எந்த நேரத்திலும் இவர் பேசிக்கொண்டிருக்கிறாரே என்று நாம் நினைத்தாலும் கூட அந்த நேரத்திலும் கூட அவர் சிந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பதை பின்னாலே அவர் போய் எழுதத்தொடங்கும் போதுதான் மற்றவர்களுக்குத் தெரியும், நம்மோடு பேசிக் கொண்டிருப்பது போலத் தோன்றும் அவ்வளவுதான், அப்பொழுதும் இரவிலே எழுதுவதற்குண்டான சிந்தனை ஓட்டம் அவருடைய எண்ணத்திலே ஓடிக்கொண்டேதான் இருக்கும், என்பது எங்களுக்குப் பின்னாலேதான் தெரிந்தது. எழுதுகின்ற போது ஒவ்வொரு தாளாக எழுதி பக்க எண் இட்டு கோடுபோட்டு கீழே போட்டுவிடுவார். சின்ன தாள்தான். பெரியதாள் கிடையாது. பக்கம் போடுவது மட்டும்தான் தெரியும். எழுதி முடித்துவிட்டு எத்தனை தாள் என்று அவருக்கே தெரியாது, எல்லாம் எழுதி அங்குக் கிடக்கும். அவர் தூங்கப்போய்விடுவார். பிறகு திராவிட

நாடு பத்திரிக்கையில் இருந்த முனுசாமி, அந்தத் தாள்களை எல்லாம் எடுத்து அவர் எழுதிப் போட்ட பக்கம் வாரியாக அடுக்கிய பிறகுதான், அச்சுக்கோக்க வேண்டும். இப்போதெல்லாம் கணினி அச்சு வந்துவிட்டது, அப்போது அச்சுக் கோர்த்தல்தான். ஆகவே அந்த அச்சு கோர்த்து அண்ணா ஊரில் இருந்தால் அன்றைக்கு மாலையிலே பிழை திருத்தத்திற்கு அண்ணாவின் பார்வைக்கு வந்துவிடும். இதெல்லாம் பழக்கம். வெளியூருக்குச் சென்றுவிட்டால் இப்பொழுதெல்லாம் தொலைநகல் அனுப்பிவிடலாம். அப்பொழுது அந்த வசதி கிடையாது. அதை பேராசிரியர் மா.கி. தசரதனோ (அ) வேறு யாரோ பிழைதிருத்தி அதை அச்சுக்குக் கொடுப்பார்கள்.

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு மா.கி. தசரதன் சென்னைக்கு வந்து விட்டார். நான் காஞ்சிபுரத்திலே இருந்தேன். அண்ணாவுடைய மகன் சி.என்.ஏ. இளங்கோவன் பொறுப்பிலேதான் பத்திரிக்கை வந்தது. காஞ்சியில் என்னை ஒரு நாள் வீட்டிற்கு அழைத்தார்கள். போனேன். நீங்கள்தான் "காஞ்சி" பத்திரிகையைப் 'பார்த்துக்கணும்' என்றார்கள் "அண்ணா நடத்துன பத்திரிக்கையை நான் பார்த்துக்கணும் என்று மிக எளிமையா சொல்றீங்களேன்னு சொன்னேன். தலையங்கங்கள் எழுதவேண்டியவர்கள் நீங்கதான். அந்தந்த வாரம் அண்ணாவின் எழுத்து எது எது வரவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்கள்தான். அதற்குரிய திராவிடநாடு தொகுதிகள் எல்லாம் அந்த அலுவலகத்திலே இருக்கிறது என்றார்கள். அஞ்சல் மூலம் வந்து இருக்கிற எழுத்துக்கள் கவிதையாக இருந்தாலும், கட்டுரையாக இருந்தாலும், உங்க வீட்டுக்கு வந்துவிடும். நீங்க தேர்ந்தெடுத்து அனுப்புறதுதான் "காஞ்சி" இதழில் வரும் என்றெல்லாம் இளங்கோவன் அவர்கள் அன்போடு சொன்னார்கள். அவருடைய துணைவியர் திருமதி விசயா இளங்கோவன் அவர்கள் என் மீது மிகவும் பாசமாக இருக்கக் கூடியவர்கள். அவர்களும் நீங்கள்தான் அதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். உடனே இரண்டு ஆண்டுகள் "காஞ்சி" இதழை நான் தான் பார்த்துக்கொண்டேன். அண்ணாவின் ஒவ்வொரு தொகுதியையும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததனாலே அண்ணா அந்தந்த காலக்கட்டத்திற்கு ஏற்ப தன்னுடைய எண்ணங்களை எல்லாம் எங்ஙனம் வெளியிட்டுள்ளார் என்பதை என்னால் அறிய முடிந்தது.

ஏதோ அடுக்குமொழியில் பேசுகிறார் என்று நினைக்கிறார்கள். அடுக்குமொழியில் பேசவும் தெரியும், எழுதவும் தெரியும், அடுக்கு இல்லாமல் பேசவும் எழுதவும் தெரியும், அப்படிப்பட்ட ஓர் ஆற்றல் உள்ளவர். நீங்கள் வந்து இலக்கியப்பணி என்று சொல்லுகின்றபோது ஏதோ நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் என்றுதான் மற்றவர்களுக்குத் தெரியும். அவர்கள் "திராவிடநாடு" இதழில் எழுதிய அந்திக்கலம்பகம் என்ற ஒரு பகுதி, நீங்கள் எல்லாம் படித்திருக்கலாம் அந்திக்கலம்பகம் என்ற பகுதியில் உரையாடல் நாட்டு நடப்புகள் அதில் வரும். அதைப்பார்த்து விட்டுத்தான் இப்பொழுது "டீக்கடை பெஞ்செல்லாம்" வருகிறது. அண்ணாவின் அந்திக்கலம்பகம்தான் அதற்கு முன்னோடி. அப்பொழுது நாட்டில் நிலவிய அரசியல் நிலவரங்கள் மற்ற எல்லாமே அந்த அந்திக்கலம்பகத்தில் இடம்பெறும். இரண்டு மாமி பேசுவார்கள், மாமிபேசுவது போன்றுதான் அதில் வரும் மொழிநடை அவர்கள் பேசுவது மாதிரியே இருக்கும். நாட்டுப்புறமக்கள் எப்படிப் பேசுகிறார்களோ அதே நடையில்தான் இருக்கும். அண்ணாவின் நடைவேறு, இதுவும் அண்ணாவின் நடைதான், அண்ணாதான் எழுதுகிறார். அவருடைய மொழியிலேதான் அதை எழுதுவார். அவருடைய நோக்கம் அதிலே இருக்கும். ஆனால், உள்ளே நம்ம செய்தியை அவர்கள் மூலமாகச் சொல்லுவார். அதாவது எவ்வளவு பக்குவமாக அண்ணா இந்தக் கருத்துக்களை விதைத்தார் என்பதற்கு அதுதான் எடுத்துக்காட்டு. அவர் சொல்லும் கருத்துகூட அவர்கள் மூலமாக வரும். அந்த மொழியில் நம்ம கருத்து வரும். அதைப் படிக்கின்றவர்கள் யோசிக்கிறார்கள். அதனால்தான் தந்தை பெரியாரை விட்டு அண்ணா அவர்கள் பிரிந்து வந்த போது கூட திராவிட முன்னேற்றக் கழகத்திலே பிராமணர்களும் உறுப்பினர்கள் ஆனார்கள். இதெல்லாம் பலபேருக்குத் தெரியாது. உறுப்பினர்கள் ஆனவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். இன்று திருப்பத்தூரிலே மகாதேவன் என்ற ஒருவர், அந்தக்காலத்திலேயே உறுப்பினராகச் சேர்ந்தவர். இன்றைக்கும் அவர் உறுப்பினர். பார்ப்பனர்களைப்பற்றி வேகமாக எழுந்து பேசுபவர் மகாதேவன்தான். திருப்பத்தூரில் இன்றைக்கு அவருக்கு முக்கியபதவி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு வெறிபிடித்த திராவிட இயக்கத்தினராகக் கருதிக் கொண்டு பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுதுதான் நான் அதை அறிந்தேன், இவ்வளவு வேகமாகப் பேசுகிறாரே இவர் யார்

தெரியுமா என்று கேட்டார்கள். என்ன என்று நான் கேட்டேன். அவர் திருப்பத்தூர் ஐயர் என்று எனக்குச் சொன்னார்கள். அதற்குக் காரணம் அண்ணாவினுடைய மிதவாதப்போக்கு என்று சொல்லுவார்கள். அதைப் பலபேர் கேலி செய்தார்கள், அந்த மிதவாதம்தான் மக்கள்மத்தியில் தந்தை பெரியார் கொள்கையைக் கொண்டு சென்றது, நோக்கம் பெரியாரின் கொள்கை பரவவேண்டும் என்பதுதான். அதற்கு அண்ணா கையாண்ட முறை இலாவகமாக இருந்தது. பெரியார் மருந்து கொடுத்தார். அண்ணா கொஞ்சம் இனிப்பு கலந்து கொடுத்தார், அதுவும் மருந்துதான் அப்பொழுதுதான் அதை உண்பார்கள் என்பதற்காக அண்ணா கையாண்ட உத்தி என்று சொல்லலாம்.

இங்கே பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாட்டு அறக்கட்டளைக் கருத்தரங்கம் இந்த ஆண்டு முழுவதும் நடைபெறும் என்று இயக்குநர் பேராசிரியர் முனைவர் குணசேகரன் சொன்னார்கள். இதனை நூற்றாண்டு என்பதனாலேயே இன்றைக்குக் கருத்தரங்கம் தொடங்குகிறது நாளை நிறைவடைகிறது அப்பொழுதும் திங்கள் தோறும் ஒரு சொற்பொழிவு நடைபெறுகிறது, இந்த பேரறிஞர் அண்ணா மேம்பாட்டு அறக்கட்டளைக் கருத்தரங்கம் இந்த ஆண்டு முழுவதும் அண்ணாவின் புகழ்பாடக்கூடிய கருத்தரங்கமாக மிளிர இருக்கிறது என்று என்னிடம் கூறினார்கள். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அண்ணா நூற்றாண்டு என்று தொடங்குகிறபோது ஒவ்வொரு இடங்களிலும் இப்படிப்பட்ட கருத்தரங்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் நடக்க இருக்கின்றன. இது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது. அண்ணா அறுபது வயது நிறைவடைவதற்கு முன்பாகவே மறைந்தவர். அறுபதுவயது முடியும் வரை இருந்திருந்தால் அவருக்கு மணிவிழாக் கண்டிருப்போம்.

இந்தியா சுதந்திரம் அடைந்த 1947ஆம் ஆண்டை உங்களுக்கு நினைவுவைத்துக் கொள்வதற்கு எளிமையாக இருக்கும். அண்ணா இயக்கங் கண்டது 1949இல். ஆனால் 1967க்குள்ளாக காங்கிரஸ் பேரியக்கத்தை, ஆட்சியை தமிழகத்திலே வீழ்த்திக் காட்டுவதற்கு வியூகம் அமைத்தப் பெருமை அண்ணாவுக்கு உண்டு. மிகவும் எளிமையாக 57ல் ஒரு தேர்தல், 62ல் ஒரு தேர்தல் 67இல் ஒரு தேர்தல். அதில் ஆட்சி மாற்றம். இதெல்லாம் எப்படி சாத்தியமானது என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள். திரைப்படத்திற்கு உரையாடல் எழுதி

இருக்கலாம். நாடகங்களில் நடித்திருக்கலாம், அதற்குக் காரணமே அவரின் அரசியல் பிரவேசம் இலக்கியத்தொடு கலந்திருந்ததுதான்.

இலக்கியத்தொடு கலந்து மக்களுக்கு அவர் ஊட்டிய கருத்துக்களால்தான் இயக்கம் வேகமாக வளர்ந்தது. நாங்கள் எல்லாம் அப்போது மாணவர்கள், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ‘மாணவர் முன்னேற்றக்கழகம்’ என்ற ஒரு அமைப்பு எல்லாக் கல்லூரிகளிலும் இருந்த காலகட்டம். இன்றைக்குப் போல் இல்லை. அப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநாடு நடைபெறும். மாநாட்டில் அண்ணா எதை எழுதியிருக்கிறாரோ அவற்றில் இருந்துதான் தலைப்புகள் கொடுக்கப்படும், அரசியல் தலைவர்கள் யாரும் மாணவர் மாநாட்டிற்கு வரக்கூடாது என்பது அண்ணாவின் கட்டளை. பேசவேண்டியவர்கள் மாணவர்கள் மட்டும்தான். அந்த மாநாட்டின் தலைவராக மாணவர்தான் இருக்கவேண்டும். பொறுப்பாளராக மாணவர்தான் இருக்க வேண்டும். மாநாட்டின் ஏற்பாடுகள் மாணவரே முன்நின்று செய்ய வேண்டும். அப்படி நெல்லை மாவட்டத்தில் மாநாடு நடத்தப்பட்டபோது வரவேற்பாளராக ஆலடிஅருணா இருந்தார். செயலாளராக ஏ.எல். சுப்பிரமணியம். இப்பொழுது நெல்லை மேயர். அவர் இருந்தார். பொருளாளராக நான் இருந்தேன், இந்த பாலசுப்பிரமணியன் என்ற பெயரிலே அல்ல. மணிவேந்தன் என்ற இயக்கப் பெயரிலே. இப்படி நாங்கள் இயக்க மாணவர்களோடு சேர்ந்து முதல் மாநாட்டை நடத்தினோம். எல்லா மாவட்டங்களிலும் அண்ணா என்ற மந்திரச் சொல் ஒலித்தது, யார் ஊட்டியது இந்த மந்திரச் சொல்லை என்றால் கலைஞர், அவர்கள்தான் அண்ணா என்ற அந்தச் சொல்லை மந்திரச்சொல்லாக மாற்றியவர். அதனால்தான் இந்த அண்ணா நூற்றாண்டு ஒரு தனித்தன்மையைப் பெறுகிறது.

மக்களிடத்தில் சென்றடைய என்ன செய்யவேண்டுமோ அதை அண்ணா இலக்கியத்தின் மூலம் கொண்டு சென்ற பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். அதனால்தான் மக்கள் மனதில் ஒரு நீங்காத இடத்தைப்பெற்றார். அவர் சாமானியர் என்று சொல்லிக் கொண்டிருந்தார், அண்ணா ஒரு பொருட்டாகத் தம்மை நினைத்துக்கொள்ளவில்லை. அப்படி யார் தன்னைப் பெரிதாக நினைக்காமல் உள்ளனரோ மக்கள்

அவரைத்தான் பெரியவராக நினைப்பார்கள். கொஞ்சம் திறமையிருந்தாலே அதிகம் உயர்வாக தன்னை நினைப்பவர்கள் மத்தியிலே அண்ணா எளிமையாக இருந்து, எளிமையாக மற்றவரோடு பழகி இந்த இயக்கத்தை வளர்த்தது அவருக்கு அந்தப்பண்பை ஊட்டியது, பேராசிரியர் செல்லப்பனார் அவர்கள் சொன்னார்களல்லவா. திருக்குறளையும், சங்க இலக்கியத்தையும் மீட்டெடுக்கவேண்டும் என்று. அந்த மீட்டெடுக்கும் முறையில்தான் தன்னுடைய இலக்கியத்தினுடைய போக்குகளையும் அமைத்துக் கொண்டவர் என்று குறிப்பிட்டார்களே அப்படி அமைத்துக் கொள்ளுகிறபோதே அது அண்ணாவுக்குக் கிடைத்த ஒரு முக்கிய பேறாக அமைந்தது. அவருக்கு இருந்த ஆங்கிலப்புலமை, ஆங்கில இலக்கியத்தைப் படித்த தேர்ந்த அந்த அறிவு, தமிழ் இலக்கியங்களிலேயே புதிய உத்தியைக் கையாள்வதற்குத் துணையாக இருந்தது.

மிகவும் துணையாக இருந்ததே அவரது ஆங்கிலப்புலமை. ஆங்கிலப்புலமை என்று சொன்னால் ஆங்கிலத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபாடு. அதனால்தான் இங்கு சொன்னார் "ரங்கூன் ராதா" ஆங்கிலத்தில் இப்சன் எழுதிய "கோஸ்ட்" என்ற கதையை தழுவி அந்த மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெண் இங்கே படைக்கப்பட்டிருக்கிறாள் என்று சொன்னார்கள். நான் இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன். இதற்கு முன்பு எனக்குத் தெரியாது. ரங்கூன் ராதா திரைப்படமாகக் கூட வந்தது. அதில் பானுமதி நடித்தார்கள். அதற்கு முன்பு புத்தகமாகவும் நான் படித்திருக்கிறேன். இப்சனுடைய கோஸ்ட்தான் ஒரு புதிய வடிவம் பெற்று வந்திருக்கிறது என்ற செய்தி இப்பொழுதுதான் தெரிந்தது. ஆகவே அந்த அளவிற்கு அண்ணாவின் படைப்புக்களிலே ஆங்கிலம் கை கொடுத்து இருக்கிறது. அவரது ஆங்கிலப் புலமை அதன் மூலமாகப் பல கருத்துக்களை சொல்வதற்கும் அவருக்குத் துணையாக இருந்திருக்கின்றது.

பேரறிஞர் அண்ணாவினுடைய நாடகங்கள் அன்று தமிழக மக்களால் குறிப்பாக இளைஞர் சமுதாயத்தினரால் பெரிதும் வரவேற்கப்பட்டவை; பாராட்டையும், புகழ் மாலையையும் ஈட்டியவை; மாற்றாரும் மருளத்தக்க வகையில் மக்களிடையே கருத்துப்புரட்சியை உருவாக்கி பல ஆண்டுகளாய் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களைச் சமுதாயத்தில் மறுமலர்ச்சி கண்டிட வழியமைத்துத் தந்தவை; அதனால்தான் நாடகம் பற்றி இன்றும் பேசிக் கொண்டிருக்கிறோம்.

"சமுதாயத்தில் பலதிறப்பட்ட மாந்தரையும் அவரவர்தம் நிலையில் தோன்றும் நினைப்புடனும் விளைவுடனும் விவரித்திடும் கதைகளையும் புதினங்களையும் நாடகங்களையும் படைத்தார். அண்ணாவின் அகக்காட்சியின் புறத்தோற்றமே அவரது படைப்புக்கள். ஆங்கிலப் புதினங்கள், நாடகங்கள், திரைப்படங்கள்ஆகியவற்றில் அண்ணா கொண்டிருந்த ஈடுபாட்டால் அவரது படைப்புக்கள் மக்கள் மனங்கவரும் புதிய உத்திகளோடு வடிக்கப்பட்டு, கலைத்துறையில் பல புதுமைகள் இடம்பெற ஏதுவாயிற்று. மக்கள் மனத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது, எனில் மிகையாகாது" என்று பேராசிரியர் அன்பழகனார், அண்ணாவின் படைப்புகளைப் பற்றிக் கூறியுள்ள கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இவ்வாறு அண்ணா அவர்களுடைய எழுத்துக்கள், இலக்கியங்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாகச் சொல்லப்பட்டாலும், சிறுகதைகள் படைத்திருக்கிறார், நாவல்கள் படைத்திருக்கிறார், தம்பிக்கு மடல்கள் தீட்டி இருக்கிறார், அந்திக்கலம்பகம் மூலமாக உரையாடல்கள் வரைந்திருக்கிறார், கவிதை அல்ல என்ற தலைப்பிலே கவிதைகளை எழுதியிருக்கிறார், அது தொகுதியாகக் கூட வெளிவந்திருக்கிறது. அதோடு அங்கத இலக்கியங்கள், நாடகம், சிறுகதை என எல்லாவற்றிலும் வரும். நீதிதேவன் மயக்கமே அங்கதம்தான். 'வழக்குவாபஸ்' என்ற ஒரு நாடகம், அங்கத வடிவத்திலேயே அமைந்திருந்தது. அண்ணாவின் நாடகங்கள் சிலவற்றை உங்களுக்குச் சொன்னால் அவருடைய நாடகத்திறனை அறிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரியலாம்.

அண்ணாவின் 'சந்திரோதயம்' 1943ஆம் ஆண்டில் எழுதியது. அவர் எழுதிய முதல் நாடகம் அது. அண்ணா அந்த நாடகத்தைப் படைத்ததோடு அதிலே நடிக்கவும் செய்தார், அதில் பகுத்தறிவுவாதியாக ஒருவர் வருவார். துரைராஜ் என்ற பாத்திரத்தில் அண்ணாவே நடித்தார்; துரைராஜ் பகுத்தறிவாளர். சந்தர்ப்ப சூழ்நிலை அவரைத் திருடனாக்கி விடுகிறது. எதிர்பாராத விதமாக சாமியார் போல ஒரு தோற்றம் அவருக்கு இருந்ததனால், சாமியாரை ஒருவழியாக ஓரம்கட்டிவிட்டு வந்து அங்குள்ள பொருள்களை மக்களின் பொதுக்காரியங்களுக்காகச் செலவிடுகிறார். பொதுக்காரியங்களுக்காகச் செலவிடும் சாமியார் முதலில் ஒரு அயோக்கியனாக இருந்திருக்கிறான். பின்னால் உண்மையான குற்றவாளி யார் என்பது உலகத்துக்குத் தெரிகின்றபோது அவனை கொலை செய்ய வேண்டிய கட்டாயம்

துரைராஜ் பாத்திரத்திற்கு ஏற்றப்பட்டு விடுகிறது. திருவொற்றியூரில் அந்நாடகம் நடக்கிறது. அப்பொழுது அண்ணா துரைராஜாவாக வந்து அந்தக் கடைசி நேரத்தில் விஷத்தை சாப்பிடப்போகிறார். ஏன் அவனைக் கொன்றார் என்றால் அவன் ஒரு அயோக்கியன். நாட்டில் பல கொடுமைகளைச் செய்தவன். ஏழைகளை வாட்டி வதைத்தவன். அப்படிப்பட்ட ஒருவனைக் கொலை செய்வது சரிதான் என்று எண்ணக்கூடிய அளவிற்கு அண்ணாவின் உரையாடல் இருக்கும். பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் அண்ணா கொலை செய்தது சரிதான் என்று சொல்லக்கூடிய அளவு இருக்கும், அப்படித் தோணுகிற நேரத்தில் இவர் விஷம் குடித்து சாகப்போகிறார். உடனே கூட்டத்தில் இருந்து ஒருவர் எழுந்திருக்கிறார். அண்ணா நீங்கள் விஷத்தைக் குடிக்கக்கூடாது என்று கத்துகிறார். அண்ணா நடித்துக் கொண்டிருக்கிறார். உடனே நீங்க ஏன் சாகணும். அவன் அயோக்கியன் அவனைக் கொன்றது சரி. நீங்க விஷம் குடித்துச் சாகக்கூடாது என்றார். யார் அப்படிக் கத்தியது என்றால் திருவொற்றியூர் சண்முகம். இதைப்போன்று பார்ப்பவர் நெஞ்சத்தில்கூட அண்ணா பாத்திரமாகவே ஒன்றி நடித்து நிலையான இடத்தை பிடித்தார் எனலாம்.

அடுத்து "வேலைக்காரி" பற்றி பேராசிரியர் செல்லப்பனார் அவர்கள் பேசி இருக்கிறார்கள். இதன் தலைப்பே புதுமை, யாரும் தலைப்பை "வேலைக்காரி" என்று வைக்க மாட்டார்கள். அண்ணாதான் வைத்தார். அதிலே புதுமையைச் செய்தார். வீட்டு வேலைசெய்யும் பெண் நல்ல பண்புள்ளவளாகவும், கற்பு உள்ளவளாகவும் இருப்பாள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு பாத்திரத்தைப் படைத்தார். பொதுவாக வேலைக்காரி என்றால் மற்றவர்கள் மத்தியில் எண்ணம் வேறுமாதிரி இருக்கும். ஆனால், அந்த எண்ணத்திற்கு மாறாக படைத்த வேலைக்காரி ஒரு கற்புடைய பெண்ணாக, நற்பண்பு உடைய ஒரு பெண்ணாக உயர்ந்து நிற்கிறாள். காதல் வயப்பட்டு கலப்புமணம் செய்து கொள்ளும் ஒரு புரட்சிப் பெண்ணாக அவளைப் படைத்திருக்கிறார். அந்த வீட்டிலேயே திருமணம் செய்யக்கூடிய நிலைமை வருகிறது. அதனால், எதிர்ப்பு வருகிறது. அந்த வீட்டில் உள்ள பெரும்பணக்காரர்கள் விடுவார்களா, பணத்திமிர், சாதித் திமிர் என்று சொல்வார்களல்லவா அந்த பணத்திமிர் உள்ள ஒருவரின் பையனுக்குக் காதல் வேலைக்காரி மீது வந்தது. அதற்கு அவர் என்ன முடியும்? சாதி அதுவும் உயர்ந்த சாதி. வேலைக்காரி தாழ்ந்த சாதி. அப்போ காதல் வரும்போதே அது தெரிந்திருக்க

வேண்டும், அப்பாவுக்குத் தெரிந்தது பையனுக்கு தெரியவில்லை. ஆனாலும் கூட பையன் அவள்தான் எனக்கு வேண்டும் என்று விரும்பினானே, அதைத்தான் இந்த நாடகத்தின் மூலம் வேலைக்காரியைக் கதாநாயகி ஆக்கினார், வழக்கமாக வேலைக்காரி வேலைக்காரியாகத்தான் இருப்பாள், சங்க இலக்கியத்தில்கூட தலைவி, தோழி என்றுதான் சொல்லுவோம். அந்த தோழி என்பது ஒரு அடையாளம், ஒரு குறியீடு, தலைவி என்பவள் காதலிப்பவள், தோழி என்பவள் துணை செய்பவள் அவ்வளவுதான், தோழியும் காதலிப்பாள். அப்போது அவள் தலைவியாகி விடுவாள்; ஆகவே, இந்த் நிலைதான் அங்கே. வேலைக்காரி என்பவள் ஒரு தீண்டத்தகாதவள் என்ற காலம் போய், வேலைக்காரியை ஓர் உயர்ந்த பாத்திரமாகப் படைத்துக் காட்டினார். எனவே அண்ணா ஒரு புதுமையான சிந்தனையுள்ளவராக அன்றே இருந்தார்.

அடுத்து 'நீதிதேவன் மயக்கம்'. 1947இல் படைக்கப்பட்டது. தலைப்பே மற்றவர்கள் பிரமித்துப்போகும் அளவிற்கு "நீதிதேவன் மயக்கம்" அமைந்துள்ளது. கற்பனைதான். கவிச்சக்கரவர்த்தி கம்பர் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறார். அவர் என்ன குற்றம் செய்துவிட்டார். இராவணனை இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கன் என்று பாடிவிட்டார். இதுதான் அவர் செய்த குற்றம், இரக்கம் என்பதே இல்லாத அரக்கன் என்று இராவணனை கம்பர் பாடியிருக்கிறார். அப்படிப் பாடியது குற்றம் என்பது அவர் மேலுள்ள குற்றச்சாட்டு. குற்றச்சாட்டை சாட்டுபவன் யார்? இராவணன். இராவணன் கேட்கிறான் என்னை இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கன் என்று குறிப்பிடுகிறீர்களே, கம்பரே! நான் கேட்கிறேன் உங்களை, என்று ஒவ்வொரு கேள்வியாக அடுக்குகிறான். கேட்கப்படுகிறவர் யார் யார் என்றால் இராவணன் சொல்வதிலே இராமனும் வருகிறான், கைகேயியும் வருகிறாள். மூவரும், தேவரும் வருகிறார்கள் முனிவரும் வருகிறார்கள், இறையடியாரும் வருகிறார்கள், நாயன்மார்களும் வருகிறார்கள், இவர்கள் அத்தனைபேரையும் குற்றவாளிகளாக கம்பரிடத்தில் சொல்கிறார். இரக்கத்தைக் காட்டக்கூடிய நிலையில் இரக்கத்தைக் காட்ட முடியாதவர்கள். இவர்களையெல்லாம், உமது காவியத்தில் இரக்கம் இல்லாத அரக்கன் என்று எங்கேயாவது பாடியிருக்கிறீரா, கம்பரே பதில் சொல்லும் என்று இராவணன் கேட்கிறான்.

ஒவ்வொன்றிற்கும் ஓர் எடுத்துக்காட்டு, திருத்தொண்ட நாயனார் புராணத்திலே அவர் புகழப்படுகிறார். அவர் வீட்டுக்கு

சிவபெருமான் வருகிறார். உடனே எனக்குப் பிள்ளைக்கறி வேண்டும் என்று கேட்கிறார். அதுவும் மூத்த பிள்ளைக்கறி வேண்டும் என்கிறார். கடைக்குப் போனபிள்ளையைக் கூட்டி வந்து உள்ளே கூட்டிப்போய் மனைவியும், அடியவரும் சேர்ந்து அறுத்து இரத்தம் வந்தாலும் அதைச் சட்டியில் பிடித்து பிறகு குழம்பு வைத்து வறுத்துக் கொண்டு வந்து அவரிடம் வைக்கிறார்கள். இப்படியெல்லாம் ஒரு காட்சியை வைக்கிறபோது இராவணன் கம்பரிடத்தில் கேட்கிறான். பிள்ளையைக் கொண்டு வந்து அறுத்து கறியாக்கி போட்டார்களே, அப்ப அந்த சிவபெருமானுக்கு இரக்கம் வந்திருக்க வேண்டுமா இல்லையா, வந்ததா? வரவில்லையே! என்னைப்போய் இரக்கம் இல்லாதவன் என்று சொன்னாயே, நீ சொல்ல வேண்டியது சிவனையல்லவா? இப்படி ஒவ்வொரு காட்சியும் நடக்கும். கடைசியாக நாடகம் முடியும், கடைசியில் இவன் கேள்வி கேட்பான். இவ்வளவு காட்சிகளையும் பார்த்து நான் கேட்டேனே இதற்கு நீதிதேவனே நீ பதில் சொல். என்று கேட்டவுடனே, என்ன தீர்ப்பு சொல்வதென்று தெரியாமல் நீதிதேவன் மயங்கி விழுந்து விடுகிறார். அதுதான் நீதிதேவன் மயக்கம். தலைப்புக்கு ஏற்றவாறு எப்படிப் பொருத்தமாகக் கொண்டுவந்து முடிக்கிறார் பாருங்கள். இதுதான் அங்கதம்,

என்னுடைய பாசமிகு தங்கை சூர்ப்பனகை அவள் இராமனையே விரும்பி இருக்கட்டுமே. அது என்ன பெரிய தப்பா? ஒரு பெண் ஒரு ஆணைத்தானே விரும்பினாள். நீ புராணத்தில் ஆணை ஆண் விரும்புறானே இது அங்கு இல்ல, இராவணன் கேட்கல. இந்த ஒருபெண் விரும்புகிறாள். சரி அவன் என்ன சொல்லி இருக்கவேண்டும் எனக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டது, நீ விரும்புவது சரியல்ல, நீ ஒதுங்கிப் போய்விடு. அப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும், சொல்லவில்லை. உடனே அவன் தம்பிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவளுடைய மூக்கையும் அறுத்துக் கொடுமை செய்தானே அவர்களை விடவா நான் இரக்கமில்லாத அரக்கன் என்று கேள்வி கேட்கிறான். நீ எவனை கதாநாயகன் என்று காவியத்தில் படைத்திருக்கிறாயோ அவனே இரக்கமில்லாதவனாக இருக்கிறானே. என்னைப் போய் நீ இரக்கமில்லாதவன் என்று. பாடுகிறாயே அந்த நீதிதேவனுக்கே மயக்கம் வரும்படியாக கேட்கிறான். இப்படி ஒவ்வொரு நிலையிலும் கேள்வி கேட்டு

வாதாடுகிறான். இவ்வாறு அண்ணாவின் நீதிதேவன் மயக்கம் வெற்றிபெறுகிறது.

சிவாஜிகண்ட இந்து ராஜியத்தை அண்ணா ஏன் எழுத வேண்டும்? இந்து ராஜியம் சிவாஜி தானே கண்டான். ஏன் அதை இந்துராஜியம் கண்டான் என்று எழுத வேண்டும்? தேவை இல்லாமல் அண்ணா எதையும் எழுதமாட்டார் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தக் கருத்தை ஏன் அவர் எடுக்கவேண்டும், அவன் படைத்தது இந்துராஜியம் என்றால் அதை அப்படியே விட்டுவிட வேண்டும், அந்த இந்து ராஜியத்தைபற்றி ஏன் எழுதவேண்டும், அவருக்கு அதுதேவை இருந்தது. அவருடைய கருத்தை அங்கே சொல்ல முடியும் என்ற அவசியம் அவருக்குத் தெரிந்தது.

மொகலாயப்பேரரசு மராட்டிய மண்டலம் அவர்களுக்கு அடிமையான நேரம். அடிமையான நேரத்திலே மக்களைத் திரட்டிப் போராடி அவர்களை வென்று மராட்டிய மண்டலத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தோமே, இந்த இடத்திற்கு நம்மை மாமன்னன் என்று சொல்கிறார்கள்; சத்திரபதி என்று சொல்கிறார்கள்; அப்படியென்றால் நாம் முடிசூட்டி கொண்டால் என்ன என்று யோசிக்கிறான். வரத்தானே செய்யும். இவ்வளவு தூரம் போராடி வெற்றி பெற்றவனுக்கு முடி சூட்டவேண்டும் என்ற எண்ணம் வராதா? இவன் ஒரு நாட்டிற்கே விடுதலை வாங்கிக் கொடுக்கிறான். அவன்தான் மன்னன்; மக்கள் அவனை நம்பி இருக்கிறார்கள். ‘சத்திரபதி’ என்கிறார்கள்; நான் முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்று அவன் நினைக்கிறான், அதற்குத் தடை ஒன்று இருக்கிறது. என்ன அதற்கு தடை அவன் வெற்றிபெற்றான். நீ முடிசூட்ட வேண்டியது தானே, ஏன் இவனுக்கு முடிசூட்டக்கூடாது என்று நினைத்தான்? அவன் சத்திரியன், சத்திரியன் முடிசூட்டவேண்டுமானால் அதற்கு சில மந்திரங்கள் எல்லாம் ஓதணும், பிராமண உத்தமர்கள் அங்கு வந்து அவனுக்கு மந்திரம் உபதேசிக்கணும், அப்படி மந்திரம் உபதேசிக்கணும்னா அவர்களுக்கு தட்சணை வழங்க வேண்டும், எத்தனையோ பேருக்கு இவன் முடிசூட்டுவிழாவின் போது வாரி வாரி வழங்கவேண்டும், இவன் கேட்டு கேட்டுப் பார்த்தான். கடைசியில் காகப்பட்டர் என்ற ஒருத்தர். கங்கையில் ஆரிய வாழ் குலகுரு காகப்பட்டர்.

அவர்தான் சொல்கிறார், ‘சிவாஜி நீ மாவீரனாக இருக்கலாம் மண்டலத்தையே வென்றிருக்கலாம். ஆனால்

முடிசூடும் தகுதி உனக்கு இல்லை, ஆரியம் அதை அனுமதிக்காது, இவன் வெற்றிபெற்றவன். அவன் அனுமதி கொடுக்க முடியாதாம், இவன் கிரீடத்தை வாங்கி சூடிக்கொள்ள வேண்டியதுதானே. அவன் மந்திரம் ஓதி வைத்தால் அந்த கிரீடத்துக்கு முக்கியம் என்று அவன் நினைக்கிறான், அப்படி நினைக்கும் படியான ஒரு வைதிகம் இவன் உள்ளத்திலே ஊட்டப்பட்டிருக்கிறது. அவ்வளவு மாவீரன் சிவாஜியின் உள்ளத்திலே கூட அந்த வைதிகம் படிந்திருந்த காரணத்தினாலேயேதான், காகப்பட்டர் ...என் காலில் நீ மண்டியிடவேண்டும் என்கின்றான் அப்போது, சந்திர மோகன். சிவாஜியை நோக்கி மன்னா...!மண்டியிடாதே.....! மராட்டிய மண்டிலமே மண்டியிடாதே......! என்பான். மன்னன் சிவாஜி உணர்ச்சிவயப்பட்டு ஆசனத்தில் இருந்து எழுந்து காகப்பட்டர் இருக்கும் இடத்திற்கு வருகின்றான்.

மணிமுடியை மட்டும் மனதில் கொண்ட சிவாஜி காகப்பட்டரின் காலில் மண்டியிடுகிறான். இந்நிகழ்வுகளுக்கு முன்பாக சிவாஜி மணிமுடியைச் சூடிக்கொள்ள காகப்பட்டரின் ஆலோசனைப்படி அரசின் கஜானாவில் இருந்து பிராமணர்களுக்குப் பணத்தை எல்லாம் கொடுத்து கொடுத்து, நாட்டு மக்கள் பஞ்சத்திலும் பசியிலும் அல்லல் உற்று, மன்னன் முடிசூடிக் கொள்வதற்குள் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் இழிநிலை அடைந்து விட்டதாக அண்ணா காட்டுவார்.

மன்னன் முடிசூடிக் கொள்ளும் நேரத்தில் வந்து சந்திரமோகன் ஆரியத்தைத் தாக்கிப் பேசி ஆரியத்தால் நாடு அடைந்த இழிநிலையினை எடுத்துக்கூறி மன்னவனை காகப்பட்டரின் காலில் அடிபணிவதைத் தடுக்க முயல்வான் சந்திரமோகன். இவை யாவற்றையும் பொருட்படுத்தாது சிவாஜி காகப்பட்டரின் காலில் மண்டியிடுவான்.

நாடகத்தின் இறுதியாக யாராக இருந்தாலும் சரி, நீங்கள் ஆரியத்திற்கு அடிபணிந்தால் இழிநிலை அடைய நேரும் என்பதை "சிவாஜிகண்ட இந்து ராஜ்யம்" என்ற நாடகத்தில் உணர்த்துகின்றார் அண்ணா அவர்கள்.

மற்றுமொரு அண்ணாவின் நாடகம் 'சொர்க்க வாசல்'. அது திரைப்படமாகவும் 1954 களில் வெளியானது. அதில் கே.ஆர். இராமசாமி அவர்கள் நடித்திருப்பார். அந்நாடகத்தில் மடாதிபதி ஒருவன் சொர்க்க வாசல் ஒன்றைக் கட்ட, மன்னனின் அனுமதியோடு மக்களிடம் நிதி வசூலிப்பான். இதனை நாடகத்தின்

நாயகனான பாவலனும், கவிராயரும் சேர்ந்து சொர்க்க வாசல் தேவையில்லை என்று மக்களிடம் சொல்லி மக்களைத் திரட்டுவார்கள்.

நாடகத்தின் ஒருகட்டத்தில் பாவலனின் தங்கையும் தாயும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவர். சிறையில் அடைக்கப்பட்ட பாவலனின் தங்கை அரசனை கேலி செய்வாள். இதனை பொறுக்காத மன்னன் அவளைக் கடத்திச் சென்று அவளை கற்பழித்து விடுவான். இதனால் பாவலனின் தங்கை மனநலம் பாதிக்கப்பட்டவளாவாள். இதன் காரணமாக பாவலன் வீராவேசம் கொண்டு மக்களைத் திரட்டி மன்னனை எதிர்ப்பான்.

அந்தக் காட்சிகளில் மன்னனை எதிர்த்து மக்கள் பாடுவதாக அமைந்த பாடல் தான்

**எங்கே சொர்க்கம்....**
**எங்கே சொர்க்கம்...**
**என்றே பாடுவார்....**

என்ற பாடல். இதனை நாட்டு மக்கள் அனைவரும் பாடுவதாகக் காட்சி அமையும். இப்பாடலைப் பாடக் கூடாதென மன்னன் தடை விதிப்பான்.

இந்நிலையில் மன்னனின் ஏழு, எட்டு வயது மதிக்கத் தக்க மகள் தடைவிதித்த அப்பாடலைப் பாடுவாள். அவ்வாறு பாடிச் செல்கையில் மன்னனின் மகள் விபத்துக்குள்ளாகி மயங்கி விடுவாள். மருத்துவர் வந்து பார்த்தார். "எங்கே சொர்க்கம்" என்ற பாடலை பாடிக் கொண்டிருந்த போது மயக்கம் அடைந்ததால், அவள் மீண்டும் அப்பாடலைக் கேட்டால் உடல் நலம் பெறுவாள் என்பான். எனவே, அரசன் தனது தவறை உணர்ந்து பாவலனை அழைத்து அப்பாடலைப் பாடச்செய்வான். அதன் பின் அங்கு மக்களாட்சி மலரும்.

அதேவேளையில், பாவலனைக் காதலித்த பக்கத்து நாட்டு அரசி அப்பாடலைப் பாடுவாள். அவள் பாவலனைக் காதலிப்பது அறிந்து, அவள் அரச பதவி வகிக்கக் கூடாது எனத் தடை விதிக்கப்படும். அவள் அதனை ஏற்று அரசு பதவியைத் துறப்பாள். அங்கு மக்களாட்சி மலரும். அவ்வாறாக இரு நாடுகளிலும் மக்களாட்சி மலருவதாக நாடகம் முடியும்.

இந்நாடகத்தின் முக்கிய நோக்கமாக அமைவது மதவாதிகளின் மடமையில் இருந்து மக்களை மீட்கவேண்டும்

என்பது ஆகும். இதனை பாவலன் என்ற புரட்சிப் பாடகனின் பாத்திரத்தின் வழி சிறப்புற நாடகத்தைப் படைத்திருப்பார் அண்ணா.

இவ்வாறு எந்த நாடகமாக இருந்தாலும் சரி அவற்றில் மக்களுக்கு எது தேவையோ அதனை மையமாக வைத்து நாடகம் படைத்திருப்பார் அண்ணா. அவ்வரிசையில் அவரின் பாவையின் பரிசு, ரொட்டித்துண்டு, இன்ப ஒளி எனப் பல நாடகங்களை அடுக்கிக் கொண்டு செல்லலாம்.

மேலும், "வழக்கு வாபஸ்" என்ற நாடகத்தை இங்கு விவரிப்பது பொருத்தமாக அமையும். பக்தி இலக்கியத்தில் மாணிக்கவாசகரின் வரலாற்றைக் குறிப்பிடும்போது அமைச்சராக இருந்த மாணிக்கவாசகரிடம் அரசன் குதிரைகளை வாங்கி வரப் பணம் தந்து அனுப்புவான். சிவனால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகர், அரசன் தந்தனுப்பிய பணத்தைச் சிவத்தொண்டிற்காகச் செலவழித்துவிட்டு அரசவைக்குத் திரும்புவார். அங்கு அரசன் மாணிக்கவாசகரிடம் குதிரைகள் எங்கே? எனக் கேட்க, அவர் குதிரைகள் வரும் என்பார். அதன்படி சிவனும் மாணிக்கவாசகருக்காக நாட்டில் உள்ள நரிகளை எல்லாம் பரிகள் ஆக்கி, அதாவது, குதிரைகளாக மாற்றி அரசனிடம் அனுப்பி வைப்பார்.

பக்தி இலக்கியத்தில் காணக்கிடைக்கும் இந்நிகழ்வை கேள்விக்குட்படுத்தும் வகையில் அமைந்த நாடகம் "வழக்கு வாபஸ்" என்பதாகும். இந்நாடகத்தில் மளிகைக் கடை முதலாளி, கடையில் வேலை செய்யும் கடைப்பையனிடம் கற்பூரம் வாங்கி வரச்சொல்வான். கடைப்பையன் கற்பூரத்தை வாங்கி வரும் வழியில் கோயிலின் மணிஓசை கேட்டு பக்தி பரவசத்தால் தான் வாங்கி வந்த கற்பூரங்களை எல்லாம் கோயிலிலேயே ஏற்றி விட்டு, "ஆண்டவா..... ஆண்டவா..." என்று கைகளால் கன்னங்களில் போட்டுக் கொண்டு கடைக்குத் திரும்புவான். கடை முதலாளி தான் வாங்கி வரச்சொன்ன கற்பூரம் எங்கே எனக் கேட்பான். அதற்குப் பையன் கற்பூரங்களை ஆண்டவனுக்கு அற்பணமாக்கி விட்டேன் என்பான்.

அதற்குக் கோபங்கொண்ட கடைக்காரார் தான் வாங்கி வரச்சொன்ன கற்பூரங்களைக் கடைப்பையன் கொளுத்தி விட்டான். எனவே, இவனைத் தண்டிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கின்றார். நீதி மன்றத்தில் வழக்கு

விசாரணைக்கு வருகின்றது. கடைப்பையன் குற்றவாளிக் கூண்டிலே நிற்கின்றான். அவனைப் பார்த்து நீதிபதி: கடைக்காரர் சொல்வது உண்மையா? என்கின்றார், அதற்கு பையன் ஆமாம்! உண்மைதான் என்கின்றான். அவ்வாறு சொல்ல வைக்கிறார் அண்ணா.

நீதிபதி பையனை நோக்கி அவ்வாறு செய்யலாமா? என்று கேட்கிறார். பையன் அதற்கு அது சரியா தவறா என்று எனக்குத் தெரியவில்லை. பக்கத்தில் உள்ள ஒரு கோயிலில் பிரசங்கம் ஒன்று கேட்டேன். அதில் மாணிக்கவாசகர் என்பவரிடம் அரசன் பணம் கொடுத்து அனுப்ப, அதனை அவர் கோயில் கட்ட செலவழித்துவிட்டார். பின்பு அரசனிடம் வந்து நடந்த உண்மையைச் சொல்லாமல் குதிரைகள் வரும் என்றார். பின் மாணிக்க வாசகர் ஈசனிடம் வேண்டிக் கொள்ள, ஈசன் நாட்டில் உள்ள நரிகளை பரிகளாக மாற்றி அனுப்பினார். அவ்வாறு அரசன் கொடுத்த பணத்தில் கோயில் கட்டினார் மாணிக்கவாசகர். அதனால், அவருக்கு அருள் கிடைத்தது. அதனால், என் முதலாளி கொடுத்தப் பணத்தில் நான் ஆண்டவனுக்குத்தான் கற்பூரங்களை ஏற்றினேன். அதனால், அது எனக்குக் குற்றமாகத் தெரியவில்லை என்றான். இதனைக் கேட்ட நீதிபதி வழக்கை ஒத்திவைக்கிறேன் என்றார். முதலாளியும் தான் தொடுத்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்பதாகக் கூற நாடகம் முடிகின்றது.

இவ்வாறு அண்ணா அவர்கள் மளிகைக் கடையில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்வினை எடுத்துக்காட்டி அதன் மூலம் பக்தி இலக்கியத்தில் மண்டிக்கிடக்கின்ற புரட்டுகளை மக்களிடம் எடுத்துக்காட்டி அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டியுள்ளார். இத்தன்மையுடன் அவர் பல்வேறு நாடகங்களை அமைத்துள்ளார். அதற்குப் பல்வேறான நாடக உத்திகளை அவர் கையாண்டுள்ளார் என்பதை அவர்தம் நாடகங்களின் வழி அறிய முடிகின்றது.

எழுத்தாளர் கல்கி, அண்ணாவைப் பற்றி பாராட்டியதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்துவதாக அமையும். "ஓர் இரவு" என்ற அண்ணாவின் ஓர் நாடகம். இந்நாடகம் நாயகன் இரவு படுக்கச் சென்று, அவன் நினைவுகளால் கதை, பல திருப்பங்களைக் கொண்டு, நாயகன் காலை எழுந்து வருவதற்குள் நாடகம் முழுமைப் பெற்று அமையும். இந்நாடகத்தில் அண்ணா கையாண்டுள்ள உக்தி அதுவரையும் யாரும் கையாளாதது. இத்தகைய இந்நாடகம் தஞ்சாவூரிலே நடத்தப்பட்டிருந்தபோது அதனைப் பார்க்க நேர்ந்த கல்கி, அண்ணா அவர்களின்

நாடகத்தில் அமைந்த கருத்து வெளிப்பாட்டுக்கு மட்டும் அன்றி நாடகத்தின் அழகியல் போக்கையும் உணர்ந்து நமது நாட்டில் ஒரு "பெர்னாட்ஷா" தோன்றுவரா, "இப்சன்" பிறப்பாரா எனப் பலரும் கேட்கின்றனர். ஆம் இதோ ஒரு பெர்னாட்ஷாவாக, இங்கே ஒரு இப்சனாக அண்ணாதுரை கிடைத்திருக்கின்றார் எனப் பாராட்டியுள்ளார்.

அண்ணாவின் நாடகங்கள் கருத்துகளை மக்கள் மனதில் பதிய வைத்தது போல அவர் நாடகம் அமைக்கும் முறையிலும் மக்களை ஈர்த்தது என்பதை கல்கியின் மனதை அண்ணா கவர்ந்ததில் இருந்து புரிந்துக் கொள்ள முடிகின்றது. அண்ணா தன் நாடகங்களின் வாயிலாக மக்களைத் தட்டி எழுப்பிய நிலை ஒரு புறம். அண்ணாவை நாம் அடையாளம் கண்ட நிலை இன்னோரு புறம். அண்ணா யார் என்று ஓர் இலக்கிய வாதியாக நம்மை அடையாளம் காட்ட அமைத்த நாடகங்கள் பயன்பட்டனவே அவை ஒருபுறம். அப்படித்தான் அண்ணா அவர்கள் உயர்ந்தார், ஓர் இமயமாக உயர்ந்தார். கலைஞர் அவர்கள் திருக்குறளுக்கு உரை எழுதுகின்ற போது சொன்னார்கள். "திருக்குறள் ஒரு இமயம். அதற்கு நான் பொன்னாடை போர்த்த முயற்சி செய்கின்றேன். அது முடியுமா! என்னால் முடிந்ததைச் செய்திருக்கின்றேன்" என்றார். அது போல அண்ணா ஓர் இமயம். பன்முகத் தன்மை கொண்ட இமயம். அத்தகைய இமயத்தின் நாடகம் என்ற ஒரு முகத்தை எடுத்துக்காட்டி அவருக்குப் பொன்னாடை போர்த்த முயற்சி செய்துள்ளேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் நாடகம் மட்டும் அல்லாது பல இலக்கிய வகைகளைப் படைத்துள்ளார். தமது சங்க இலக்கியங்கள் மக்களிடம் சென்று அடைய வேண்டும் என்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டார். அவரின் 'திராவிட நாடு' என்ற இதழில் சங்க இலக்கியமான அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றின் காட்சிகளை ஓவியங்களாகத் தீட்டி அவற்றை இதழின் அட்டை பகுதியில் அமைத்தும் அதற்கான விளக்கங்களை அதன் அடுத்த பக்கங்களிலும் அமைத்து அச்சிட்டு வெளியிட்டார். இவ்வாறாக அண்ணா அவர்கள் அரசியல் பத்திரிக்கை என்ற நிலையிலும் இலக்கியங்கள் மக்களிடம் சென்றடையவேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு தனது இதழை வெளியிட்டார் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களை, தமிழகத்திற்குக் கிடைத்த பெரும் கொடையாக நாம் கருதவேண்டும். அவர் நமக்குக் கொடுத்த கொடையாக அவரின் இலக்கியப் படைப்புகள் கிடைத்துள்ளன. அதில் அருந்திறனாக அவரின் நாடகங்கள் திகழ்கின்றன. அந்நாடகங்கள் மூலமாக நாட்டு மக்கள் அடைந்த விழிப்புணர்வு பெரிது. மக்கள் மத்தியில் எழுந்த மாபெரும் புரட்சிக்கு, புரட்சி எண்ணத்திற்கு அண்ணாவின் எழுத்தோவியங்கள், அண்ணாவின் படைப்புகள் அடித்தளமாக இருந்தன என்பதை உங்கள் நெஞ்சத்திலே நிறுத்தி, அவர் முதல்வராக இருந்தபோது நான் எழுதிய "ஆண்டவன் அண்ணா" என்ற கவிதையை இங்கு குறிப்பிட்டுக் காட்ட விழைகின்றேன்.

**ஆண்டவனே அறிஞர் அண்ணாதான்**
**அன்பால் ஆண்டவனே அறிஞர் அண்ணாதான்**
**அகிலம் புகழ அனைவரும் மகிழ**
**அறிவால் உயர்ந்த அருந்தமிழ் நாட்டை**
**ஆண்டவனே அறிஞர் அண்ணாதான்**
**பழகும் முறையில் பண்பினை பிணைத்து**
**பலரும் வியக்க பகைவரை அணைத்து**
**அழகுத் தமிழை அகத்தினில் நினைத்து**
**அல்லும் பகலும் நமக்காய் உழைத்து**

**ஆண்டவனே அறிஞர் அண்ணாதான்**
**அன்பால் ஆண்டவனே அறிஞர் அண்ணாதான்**

**பார்க்கும் பார்வையில் பாசமே மிஞ்சிட**
**பாகுப் பேச்சினில் பைந்தமிழ் கொஞ்சிட**
**காக்கும் நெஞ்சினில் கண்ணியம் விஞ்சிட**
**கலக்கும் இந்தியும் கால்வைக்க அஞ்சிட**
**ஆண்டவனே அறிஞர் அண்ணாதான்**
**அன்பால் ஆண்டவனே அறிஞர் அண்ணாதான்**

நான் அறிஞர் அண்ணா அவர்கள் நிறுவிய 'காஞ்சி' இதழின் பொறுப்பாசிரியராக இருந்திருக்கிறேன். காஞ்சியில் இருந்த பொழுது அவருடன் பழகியிருக்கிறேன். அவர் இல்லத்தார் என்பால் கொண்டிருந்த அன்பும், பாசமும் இன்றளவும் என்

நெஞ்சை நெகிழ வைக்கும் நிகழ்வுகளாக மனதில் பதிந்துள்ளன. அண்ணா நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இவ்வேளையில் அறிஞர் அண்ணா பற்றி உரை நிகழ்த்த நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் இயக்குநருக்கும் பேராசிரிய பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

# அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

அண்ணாவின் நூற்றாண்டு விழாவை கொண்டாடுகின்ற இவ்வேளையில் அண்ணாவின் சொற்பொழிவுகளைப் பற்றி சில கருத்துக்களை உங்கள் முன் வைக்க விழைகின்றேன். சொற்பொழிவு என்பது தமிழகத்தைப் பொருத்த வரையில் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டு அளவிலேயே பெரிதும் நிகழ்த்தப்பட்டன எனலாம். சொற்பொழிவுகள் எவ்வெவ்வாறு அமையவேண்டும் எனத் தொல்காப்பியம் உரைப்பினும் நம்மிடையே மேலை நாடுகளில் இருப்பதுபோல் முறையான பேச்சுக் கலை வளர்ச்சி எழுதப்பெறவில்லை.

தான் சொல்ல வருவதைப் பிறர் மனங்கொள்ளும் படியாகப் பேசுவது ஒரு கலை. ஆய கலைகள் அறுபத்து நான்கனுள் பேச்சும் ஒன்று. மணிமேகலை, என்னெண் கலைகளும் கற்றிருந்தாள் என்பதைக் கூறவரும் சாத்தனார் 'கட்டுரை வகை'யை ஒரு கலை என்கிறார். கட்டுரை வகை என்பதற்கு உரையாசிரியர்கள் 'தொகுத்துக் கூறும் சொல்வன்மை' எனப் பொருள் தந்துள்ளனர். பலர் கூடியிருக்க அவர்கட்கு ஒருவன் தன் எண்ணங்களை எடுத்துரைப்பது சொற்பொழிவு எனப்படுகிறது. சொற்பொழிவுக் கலை என்பது தமிழகத்தில் எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதை அறிய இயலவில்லை. இயல், இசை, நாடகக் கலைகளைப் போலவே, பேச்சுக் கலையும் பண்டைக் காலத்திலே செழித்து வளர்ந்திருக்கிறது என்பதைச் சில குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது.

பூம்புகாரில் இந்திர விழா பற்றி முரசறைந்து மக்கள் விழாக் காலத்தில் நகரை எவ்வெவ்வாறு அலங்கரிக்க வேண்டும் என்பதைச் சொல்ல வருபவன்,

**தன்மனற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்**
**புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்**

என்கிறான். குளிர்மணல் பரப்பிய பந்தல்களிலும், மரங்கள் தாழ்ந்து நிழல் தரும் ஊர் மன்றங்களிலும் நல்லற நூல்களை விளக்கும் அறிஞர்கள் கூடி உரையாற்றுங்கள் என்கிறான். மேலும் அக்காலத்திலேயே பட்டிமன்றமும் இருந்ததென அறிகிறோம்.

**ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்**
**பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்**

என்றும் மணிமேகலை கூறுகிறது.

சொற்போர் பற்றிய குறிப்பினைப் பட்டினப்பாலையிலும் காணமுடிகிறது. புகார் நகரத்தில் கோயில் வாயிலில் கட்டப்படுள்ள கொடிகள், கப்பல்களில் பாய்மரங்களின் மீது பறக்கவிடப்பட்டுள்ள கொடிகள், கள் விற்கும் இடங்களை அறிவிக்கும் கொடிகள் எனப் பல்வேறு கொடிகள் பறக்கின்றன. பல நூல்களைக் கற்றும் கேட்டறிந்தும் வல்லவர்களாயுள்ளார் இங்கே வாதிட வரலாம் என அறிவிக்கும் கொடிகளும் பறந்தன. பேச்சாற்றல் கொண்டவர்களை 'வில்லேருழவர்' என்கிறார் திருவள்ளுவர்.

சொற்பொழிவை- விரிவுரை என்றும்; சமயம் சார்ந்த அறவுரையை புண்ணிய-நல்லுரை என்றும்; அறிவுரையாக வழங்கப் பெறுவதை-வாயுறை வாழ்த்து என்றும், பண்டைக் காலத்தே வழங்கிவந்தனர்.

நம் நாட்டில் நீதிக் கதைகளை எடுத்துரைத்த சமயச் சொற்பொழிவாளர்கள் பற்றித்தான் முதலில் அறிய முடிகிறது.

வள்ளலார், கிருபானந்த வாரியார், ஞானியார் அடிகள் போன்ற சமயப் பொழிவு ஆற்றக்கூடியவர்களைக் குறிப்பிடலாம். அதன்பின், நாட்டு விடுதலை என்று வருகின்றபோது நாட்டு மக்களுக்குக் கருத்தைச் சொல்லி மக்களிடம் விடுதலை உணர்வைப் பரப்புவதற்கு மேடைதோறும் ஏறி தம் பேச்சாற்றலால் மக்களைக் கவர்ந்தவர் என்று பார்க்கின்றபோது நல்ல தமிழில் பேசியவர்களில் முதலாக வருபவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள். அதன்பின்பு அண்ணாவும் அவர் போன்றவர்களும் மேடைப்பேச்சை வளர்த்தெடுத்ததன் மூலம் மேடைப் பேச்சானது தமிழகத்தில் வளர்ந்தது.

மேடைப்பேச்சு என்பது எளிமையானது அன்று. உள்ளத்திலே இருந்து கருத்துகள் ஊறி அதனை வளர்தெடுத்தால் தான் பேச்சாற்றல் வளரமுடியும். எல்லாரும் சிறந்த கவிஞர்களாக இருந்துவிடமுடியாது, எல்லாரும் சிறந்த பேச்சாளர்களாக

ஆகிவிட முடியாது, எல்லாரும் சிறந்த ஆராய்ச்சியாளராக இருந்துவிட முடியாது, எல்லாரும் சிறந்த ஓவியராக இருந்துவிட முடியாது. இயற்கையிலேயே உள்ளத்தில் அதற்கான ஒரு கரு இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குண்டு.

அண்ணா அவர்கள் கூட இதனைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''சிறந்தபேச்சாளனாக ஆவதற்கு பேச்சாளனிடம் உள்ளத்திலேயே இயற்கையாக ஒரு கரு இருக்க வேண்டும். அது பயிற்சியினால் நல்ல வலுப் பெற்று மேலே மெருகுபெற வேண்டும். பேச்சாற்றல் என்பது ஒரு கலையாக வளர்க்கப்படவேண்டும்'' என்கிறார். இத்தகைய சூழ்நிலை மேலைநாடுகளில் இருந்ததையும் அது குறித்த வரலாறுகளையும் காண முடிகின்றது. உலக அளவில் இன்றுவரையிலும் 'சிறந்த பேச்சாளர் யார்'? என்று கேட்டால் கிரேக்கப் பேச்சாளர் 'டெமஸ்தனிஸ்'ஐ குறிப்பிடுவார்கள்.

பேசுவது என்பது பெரிய செயல், மேடையில் முக்கால் மணிநேரம் பேச நினைத்து, வீட்டில் மனப்பாடம் செய்து, எதிரில் உள்ளவரை பார்த்துப்பேசிப் பழகி பின் ஒரு மேடையில் பேசத் தொடங்கும்போது இரண்டு தொடர்களே பேசியிருப்போம். அதற்குள் எல்லாம் மறந்து விடும். எதிரில் இருப்பவன் பேச்சாளனைக் கைதட்டிச் சிரிப்பான். அவனைக் கொண்டு வந்து பேசச் செய்தால் அவன் கைமட்டுமல்ல கால், தொடையெல்லாம் தட்டும். மேடைக்கு வரும்போது நன்கு பேசிப் பழகியிருக்க வேண்டும். அவ்வாறு பேசிப்பேசிப் பழகியவர்கள் தான் டெமஸ்தனிஸ் போன்ற பேச்சாளர்கள்.

அண்ணாவும்கூட, பேச்சுக்கலையை வளர்த்துக் கொள்ளுவதற்குப் பயிற்சியினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை நம்மால் உணரமுடிகின்றது. அண்ணா அவர்கள் தொடக்க காலப் பேச்சு பள்ளிப் பருவகாலத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. ஆனால், அண்ணா அவர்கள் மேடையில் பேசிய பேச்சுகளில் எது முதல் பேச்சு என்பது குறித்து இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. பச்சையப்பன் கல்லூரியில் டாக்டர் தர்மாம்பாள் கலந்து கொண்ட மேடையில் அண்ணா அவர்கள் பேசிய பேச்சுதான் அவரின் முதல் பேச்சு என்கிறார் கன. சிற்சபேசன். அண்ணாவுடன் இருந்த எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திருப்பூரில் நடந்த செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் பேசிய பேச்சே முதல் பேச்சு என்கின்றார்.

மேலை நாடுகளில் ஆயிரம் ஆண்டுகளுக்கான வரலாற்றுத் தெளிவு இருக்கிறது. நம்மிடம் அண்மையில் வாழ்ந்த ஒரு தலைவரின் வரலாறு என்பது தெளிவாக இல்லை. இந்த நிலையில் இளம் ஆய்வாளர்கள் எந்த வரலாற்று நிகழ்வுகளையும் பிழை ஏற்படாத வண்ணம் ஆய்ந்து அறிந்து தொகுத்து அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

தொடக்க காலத்தில் அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்தில் இருந்த போது மூன்று அல்லது நான்கு மணிநேரம் பேசியுள்ளார். ஒரு தலைவனுக்கு உள்ள அழகு தனது பேச்சைக் குறைத்துத் தன் தொண்டர்களுக்கு வாய்ப்பை அளிப்பதுதான். அத்தகைய மகத்தானவராக அண்ணா அவர்கள் இருந்தார்கள். தலைவர் ஆனபிறகு தனது பேச்சினைக் குறைத்துத் தனது தம்பிகளின் பேச்சிற்கு வழிவகை செய்தார். தம்பிகளை வளர வைத்ததில் அண்ணாவிற்கு நிகர் யாரும் இருக்க முடியாது. அன்பழகனாக இருந்தவரை, 'பேராசிரியர்' என்று பாராட்டிப் பேசினார். நெடுஞ்செழியனாக இருந்தவரை, 'நாவலர்' என்று மேடைதோறும் விளித்தார். 'தம்பி வா.. தலைமை தாங்க வா' என அன்போடு பாராட்டி அழைத்தார். அதுபோல சி.பி. சிற்றரசு அவர்களைச் 'சிந்தனைச் சிற்பி' எனப் பாராட்டினார். டி.கே. சீனிவாசனின் பேச்சைக் கேட்டுத் 'தத்துவ மேதை' என்றார். சம்பத் அவர்களை, 'சொல்லின் செல்வர்' என்றார். இவ்வாறு அண்ணா அவர்கள் தன்னோடு உடன் பேசிய இளைஞர்களைத் தட்டிக் கொடுத்து வளர்த்தார்.

அண்ணா அவர்கள் தனக்கு முன் எவர்பேசினாலும் அவருக்கு ஒருபடி மேலே போய் தனது கருத்தை வெளிப்படுத்த முடியும் என்ற நிலையில் இருந்ததனால்தான் தன்னுடன் இருந்த இளைஞர்களை வளர்த்தார். மேலும் அண்ணா அவர்கள் தம்பிகள் பேசியதில் எந்தச் சாரப்பொருளும் இல்லை என்றாலும் அவர்கள் பேசியதை வைத்துக் கொண்டு, தன்னுடைய உரை வளத்தால், தன் தம்பி இவ்வாறு இவ்வாறெல்லாம் பேசினான் என தம்பிகளின் பேச்சிற்கு மெருகு சேர்த்துத் தம்பிகளை வளர்த்தெடுத்தார். இதன்படி வளர்ந்தவர்கள் தான் நாஞ்சிலார் போன்ற பெரும் பேச்சாளர்கள். அண்ணா அவர்கள் சிறந்த பேச்சாளர் மட்டும் அன்று. பேச்சாளர்களை நல்லமுறையில் ஊக்குவித்து வளர்த்துவட்ட பெருந்தகையாளரும் ஆவார்.

எத்துறையாயினும் அண்ணா அத்துறை பற்றித் திறம்படப் பேசக் கூடியவர். அண்ணா அவர்கள் நாடகங்கள் பற்றிப் பேசிய

நுட்பமான கருத்துகளைக் கேட்டும் அவருடைய நடிப்புத் திறனை அறிந்தும் ஔவை. டி.கே.சண்முகம், 'அண்ணா மட்டும் நாடகத்தில் நடிக்க வந்திருந்தால் தொழில்துறை நடிகர்களாகிய நாங்கள் அவர்முன் ஒன்றும் செய்யமுடியாது போயிருப்போம்' என்று பெருமைப் பட பேசினார்.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் அண்ணா பெசுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அக்கூட்டத்திற்குப் புதுக்கோட்டை திவானாக இருந்த நீதிபதி வந்தார். அண்ணாவின் பேச்சை முழுமையாக அமர்ந்து கேட்ட பிறகு நீதிபதி மனந்திறந்து பாராட்டினார்.

> நான் தீர்ப்பெழுதும்போது மணிக்கணக்கில் உட்கார்ந்திருக்கிறேன். திருமதி எம்.எஸ்.சுப்பு லட்சுமியின் இசையைச் சுவைக்க வானொலிமுன் மணிக்கணக்கில் உட்கார்ந்திருக்கிறேன். என் வாழ்நாளில் மூன்றாவது முறையாக மணிக்கணக்கில் உட்கார்ந்திருந்தது அண்ணாவின் பேச்சுக்காகத் தான்.அண்ணாவின் பேச்சு என்னை அந்த அளவுக்குக் கவர்ந்துவிட்டது

என்று கூறி அண்ணாவின் அறிவாற்றலைப் பாராட்டினார்.

சிதம்பரம் வழக்கறிஞர் கூட்டத்தின் நூற்றாண்டு விழாவில் பேச அழைத்திருந்தார்கள். உயர்நீதிமன்ற நீதிபதி கைலாசம் அவர்கள் தலைமை வகித்தார்கள். பலகாலம் வழக்கறிஞராகப் பணியாற்றி முதிர்ச்சிபெற்ற ஒரு வழக்கறிஞரைப் போல் அண்ணா சட்டங்கள் குறித்தும் வழக்கறிஞர்கள் குறித்தும் சிறப்பாகப் பேசினார்கள்.
அப்பொழுது சட்டம் பற்றிக் குறிப்பிடும் பொழுது

**Making of Law**
**Maintenance of Law**
**Interpretation of Law**

சட்டத்தை உருவாக்குதல், சட்டத்தை நடைமுறைப் படுத்துதல், சட்டத்தை விளக்குதல் எனச் சட்டத்தின் வகைகளை விளக்கினார்கள்.

கேட்டுக் கொண்டிருந்த நீதிபதி கைலாசம் அண்ணவை வெகுவாகப் பாராட்டி 'நல்லவேளை அண்ணா அவர்கள் எங்கள்

துறைக்கு வரவில்லை. வந்திருந்தால் எங்களுக்குக்கெல்லாம் வேலையில்லாமல் போயிருக்கும் என்றாராம்.'

இவ்வாறு எத்துறை பற்றிப் பேசினாலும் பேச்சில் ஒரு சிறப்பும் அத்துறை பற்றிய செய்தியையும் சொல்லிப் பேசியவர்களில் தமிழகத்தில் மிக முக்கியமானவர் பேரறிஞர் அண்ணா எனலாம்.

பேசுகின்ற கூட்டத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை உடனுக்குடன் பேச்சில் இணைத்துப் பேச்சினை மேலே வளர்த்துச் செல்வது, பேச்சாளர்க்கு இருக்கவேண்டிய முக்கியமான திறமையாகும். அவ்வாறு அவ்வப்போது மேடையில் நடக்கின்றவற்றைப் பேச்சிலே வைத்து கேட்போரை வியக்கவைக்கும் ஆற்றலுடையவர் அண்ணா.

திண்டுக்கல்லில் ஓர் இந்தி எதிர்ப்புக் கூட்டத்திலே பேசுகின்றார். அண்ணா பேசிய அந்தக் காலங்களில் பெரிய பெரிய மேடைகள் கிடையா. நான்கு பலகைகளைப் போட்டு இரண்டு கம்பங்களை நட்டு ஒரு திரையினைக் கட்டி அதில் இரண்டு மின்விளக்குகளைத் தொங்கவிடுவார்கள். பல்புகளை கட்டுவார்கள், இரவில் பூச்சிகளின் தொந்தரவு அதிகமாக இருக்கும். அது பேச்சாளருக்கு தொந்தரவாக இருக்கக் கூடாது என்பதற்காக எண்ணையில் தாள்களைத் தோய்த்து விளக்கருகில் கட்டிவைப்பர். வரும் பூச்சிகள் தாள்களில் ஒட்டிக்கொள்ளும்; பேச்சாளரை தொந்தரவு செய்யாது.

திண்டுக்கல் கூட்டத்திலும் அவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அண்ணா அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது வண்டு ஒன்று அவரின் சட்டைக்குள் புகுந்துக் கொண்டது. அவர் எவ்வளவு முயற்சி செய்தும் அவரால் வண்டை வெளியே எடுக்க முடியவில்லை. பிறகு அருகில் இருந்தவரை அழைத்துச் சட்டையின் உள்ளே இருந்த வண்டை அடித்து எடுக்கச் சொன்னார். உடனே சொல்கின்றார்:

> எங்கோ பறந்துக் கொண்டிருந்த வண்டு விளக்குக்குப் பக்கத்தில் பறந்துக் கொண்டிருந்தால், என் சட்டைக்குள் வந்த புகாது இருந்திருந்தால் எனக்கு அதனை அடிக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. அதேபோல எங்கேயோ இருக்க வேண்டிய இந்தி, அங்கே இருப்பதை விட்டு எங்கள் நாட்டில் வந்து புகுந்தால் நாங்கள் இந்த வண்டை அடிப்பதுபோல் அடிக்காமல் என்ன செய்வது?

என்று பேசுகின்றார். இவ்வாறாகப் பேசும்போது கூட்டத்தில் நடப்பதை நடந்ததை பேசுகின்ற ஆற்றல் உடையவர் பேராசிரியர் அண்ணா அவர்கள்.

மேலும், சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் படத்திறப்பு விழாவின்போது பேசுகின்றார். அப்பேச்சு 'ஏ, தாழ்ந்த தமிழகமே' என்று நூலாகவும் வந்திருக்கிறது. பேசிய அந்தப் பேச்சு பாவேந்தரைப் பற்றியது, அப்பேச்சின் இறுதியில்,

> ஏ தமிழ்நாடே! ஏ தாழ்ந்த தமிழ்நாடே! தேய்ந்த தமிழ்நாடே! தன்னை மறந்த தமிழ்நாடே! தன்மானமற்ற தமிழ் நாடே! நன்றிகெட்ட தமிழ்நாடே! கலையை உணராத தமிழ்நாடே! கடவுளின் இலட்சணத்தை அறியாத தமிழ்நாடே' மருளை மார்க்கத்துறை என்றெண்ணிடும் தமிழ்நாடே! ஏ, சோர்வுற்ற தமிழ்நாடே! வீறு கொண்டெழு!.

என்று பேசினார். அது கொண்டு அந்நூலுக்கு 'ஏ, தாழ்ந்த தமிழகமே!' எனப் பெயர் வைத்துவிட்டனர்.

அக்கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்திய மாணவர் தலைவர் தண்டபாணி, அண்ணாவைக் குறித்து, 'இப்போது புரட்சியின் சிகரம் பேச இருக்கிறது' என்றார். அண்ணா, பேசத் தொடங்கியதும்

> உங்களுக்கு என்னை அறிமுகப்படுத்திய தோழர் தண்டபாணி பலபடச் சொல்லிவிட்டார்; அவர் என்னைப் புரட்சியின் சிகரம் என்றார். புரட்சி இவ்வளவு குள்ளமாயிராது. புரட்சியின் சிகரம் என்றால் அது இங்கே அமர்ந்திருக்கும் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களுக்குப் பொருந்தும்; அவர் மிகவும் உயரமானவர். ஆகவே, நான் புரட்சியின் சிகரத்திற்குப் பக்கத்தில், மலைச் சாரலிலே நின்று கொண்டு, ஏதோ சில பேசலாமென்றிருக்கிறேன்.

என்றார். இவ்வாறு அவ்வப்போது நடைபெறும் நிகழ்வினை வைத்துச் சிறப்புடன் பேச்சைத் தொடங்கிக் கூட்டத்தினரை தன்பக்கம் ஈர்க்கும் ஆற்றல் உடையவர், அண்ணா அவர்கள்.

பேசுகின்ற இடத்தைத் தொடர்புபடுத்திச் செய்திகளைச் சொல்வது, பேசுகின்ற வேளைக்கு ஏற்றவற்றைச் சொல்வது ஆகியவை பேச்சின் வெற்றிக்குத் துணையாக இருக்கும்.

1961 இல் தி.மு.க. சார்பில் கொத்தவால் சாவடிப் பகுதியில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு 'தேசியம்' என்றால் என்ன என்பது பற்றியும் திராவிடத் தேசியத்திற்கான பல்வேறு ஆதாரங்களையும் வரலாற்றுச் சான்றுகளையும் விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினார். அவர் பேசுகின்ற இடம் கொத்தவால் சாவடி. ஆகவே அந்த இடத்தை மையப்படுத்திப் பேச்சைத் தொடங்குகிறார்.

> பெரிதும் வணிகப் பெருமக்கள் நடமாடும் இந்த வட்டாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டம் ஏற்பாடு செய்து அருள்கூர்ந்து தேர்தல் நிதியும் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாகக் கொத்தவால் சாவடிக்கு நாம் வந்தால் காசு கொடுத்துவிட்டு அவர்கள் கொடுக்கும் சரக்கை எடைபோட்டு வாங்கிச் செல்வது தான் வாடிக்கை. ஆனால் இன்று நாம் கொடுக்கும் சரக்கை(பேச்சை) அவர்கள் எடைபோட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்

என்றார்.

மற்றொருமுறை ஓர் தேர்தல் கூட்டத்தில் பேசுகிறார். கூட்டத்தில் பெண்கள் பெரும்பகுதியினராக இருக்கிறார்கள். செய்தியையும் சொல்லவேண்டும்; அவர்கள் மனங்கொள்ளவும் பேசவேண்டும். ஆகவே அவர்களை வைத்தே பேச்சைத் தொடங்குகிறார்.

> நம்முடைய தாய்மார்கள் பானை வாங்கினால் தட்டிப்பார்த்து உடையாதிருக்கிறதா என ஒலியைக் கேட்டு வாங்குவார்கள். குழம்பு வைப்பதற்கு வெண்டைக்காய் வாங்கினால் நுனியை முறித்துப்பார்த்துப் பிஞ்சு என்று தெரிந்தால் வாங்குவார்கள். முருங்கைக்காய் வாங்கினால் முறுக்கிப்பார்ப்பார்கள். மொத்தமாக பருப்பு வாங்கவேண்டுமென்றால் சிறிதளவு எடுத்து சென்று வேகவைத்துப் பார்த்து வாங்குவார்கள். தேங்காய்

வாங்கும் போது குலுக்கிப் பார்ப்பார்கள். அரிசி வாங்கும்போது வாயில் போட்டுக் கடித்துப் பார்ப்பார்கள். எண்ணெய் வாங்கும்போது கையில் தடவி முகர்ந்து பார்ப்பார்கள். கத்தரிக்காய் வாங்கினால் பிஞ்சாக இருக்கிறதா என துருவிப் பார்ப்பார்கள். ஏன் கருவாடு வாங்கினால் கூட தீய நாற்றமடிக்கும் கருவாட்டில் நல்ல நாற்றம் கெட்ட நாற்றம் பார்த்து நல்ல கருவாடா? புதுக் கருவாடா? பழையக் கருவாடா? என்று ஆய்ந்துப் பார்த்து அதன்பிறகுதான் வாங்குவார்கள். வியாபாரிகள் ஆடு வாங்கும்போது ஆட்டின் தொடைகளை அழுத்துப் பிடித்துத் தசைப் பிடிப்பைப் பார்த்து வாங்குவார்கள். துணிக்கடைக்குச் சென்றால் நமது பெண்கள் புடவையை எடுத்துப் பார்த்து வண்ணங்களை ஆராய்ந்துப்பார்த்து கெட்டிச் சாயமா என்று கேட்டுப் பார்த்து வாங்குவார்கள்.

பொருள்களை வாங்கும் போது இந்த அளவு நோட்டம் பார்க்கிற நமது தாய்மார்கள், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நாட்டில் நடைபெறும் தேர்தலில் தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குரிமையைப் பயன்படுத்தும்போது யாருக்கு நமது வாக்கை அளிக்கிறோம் இந்தச் செயலால் விளையும் விளைவு என்ன என்பதைச் சற்று ஆராய்ந்துப் பார்க்க வேண்டாமா?

முன்னரே நமது வாக்குகளை ஏமாற்றி வாங்கிச் சென்று நாட்டைக் கெடுத்தவர்களுக்கு மீண்டும் நமது வாக்கை அளித்து கேட்டில் ஆழ்த்தலாமா? கொடுத்த வாக்குறுதிகளை மறந்து கொடுங்கோலாட்சி நடத்தியவர்களுக்கு மறுபடியும் வாய்ப்பளிக்கலாமா? கையூட்டால் கறைபடிந்தவர்களுக்கு இரக்கம் காட்டலாமா? தாய் மொழியைக் காப்பாற்ற மறந்தவர்களுக்குச் சட்டமன்றம் செல்ல வழிகோலலாமா? இந்தி நடைபாடை விரிக்கும் இழிகுணத்தோருக்கு இடமளிக்கலாமா? சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

என்று பேச்சை நிறுத்தினார். கேட்ட பெண்கள் பொருட்களை எப்படி வாங்குகிறார்கள் என்ற விதத்தைச் சொல்லிக்

காட்டியதிலேயே மயங்கி இருப்பார்கள். இதைக் கேட்ட பின்னரும் அடுத்தவருக்கு வாக்களிக்க எண்ணம் வருமா? இத்தகைய சக்திவாய்ந்த பேச்சுகள்தாம் அண்ணாவின் வெற்றிக்கு காரணம்.

தான் பேச எடுத்துக் கொண்ட பொருள் எதுவாயினும் முதலில் அதை நேரடியாகச் சொல்லாமல் கேட்பவருடைய கவனத்தை ஈர்க்குமாறு சில செய்திகளைச் சொல்லி அவையினர் பேச்சைக் கேட்க ஆர்வம் கொண்டிருக்கும் வேளையில் தான் சொல்ல வந்ததைத் தெளிவாகவும் விளக்கமாகவும் சொல்லி அந்தப் பேச்சினைக் கேட்டவர் எப்போதும் அதனை தன் மனத்தில் கொண்டிருக்குமாறு பேசுவதில் அண்ணா மிகவும் வல்லமைப் பெற்றவர். நான் முதன் முதலில் 1946 இல் அண்ணாவின் பேச்சினை திருச்சி பொன்மலையில் திராவிட கழகத்தார் நடத்திய மே தின விழாவில் கேட்டேன். தொழிலாளர்களிடையே மேதினம் பற்றிப் பேசவேண்டும். எடுத்த எடுப்பிலேயே மேநாள் என்பது என்ன? அது எதற்காக கொண்டாடப்படுகிறது என்றெல்லாம் தொடங்கினால் அவர்கள் அதைப் புரிந்துக் கொள்வது கடினமாக இருக்கும். ஆகவே ஒரு கதை சொல்வதைப் போலத் தொடங்கினார்.

> வைகாசியா கருட சேவை, ஆனியா மஞ்சனம், ஆடியா பதினெட்டு, ஆவணியா அவிட்டம், புரட்டாசியா கடைசி சனிக்கிழமை கோவிந்தா, ஐப்பசியா தீபாவளி, கார்த்திகையா தீபம், மார்கழிபா திருவாதிரை, தையா பூசம், மாசியா மகம், பங்குனியா உத்திரம், சித்திரையா பௌர்ணமி. இப்படி மாதந்தோறும் விழாக் கொண்டாடிப் பழக்கப்பட்டவர்கள் நாம். விட்டால் நாள் தோறும் இப்படி ஒரு விழாவைச் சொல்லிச் செல்லலாம். இவையெல்லாம் சமயம் தொடர்பான விழாக்கள். மேநாள் இத்தகைய விழாக்களில் ஒன்று அல்ல. அது வேறுபட்டது.

என்றதும் கூட்டத்தினர் ‘மே விழா’ பற்றி ஆவல் கொள்வர். அப்பொழுதும் கூட ‘மேநாள்’ பற்றி அவர் விளக்கவில்லை.

> உழைப்பாளர்கள் எட்டுமணி நேரம் உழைக்கவேண்டும். எட்டு மணி நேரம் குழந்தைக் குட்டிகளோடு குடும்பத்தோடு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும். எட்டு மணி நேரம் ஓய்வு வேண்டும்.

இப்படிச் சொன்னதும் ஓ! இது நமக்காக உள்ள விழா என்று அறிந்து கவனமாக கேட்கத் தொடங்குகிறார்கள்.

> ஜார் மன்னர்களின் ஆட்சிக் காலத்திலேயே மே நாள் உருசியாவில் நடந்திருக்கிறது. ஜார் மன்னர்களின் கொடுமையினால் மக்கள் வாடிய காலத்திலே ஜாரின் எதிர்ப்பையும் மீறி உருசியாவில் மேநாள் கொண்டாடியிருக்கிறார்கள். தமிழகத்திலே முதல் முதலில் இவ்விழாவைக் கொண்டாடிய கட்சி சுயமரியாதைக் கட்சிதான்.

என்று தன் கட்சிக்குள்ள உரிமையைக் கொண்டாடுகிறார். அதன் பிறகு இது 'கம்யூனிஸ்டுகளுக்கு' மட்டும் உரிமையல்ல என்றும் சொல்கிறார்.

> உரக்கப் பேசுவதாலோ அறிக்கைகள் விடுவதாலோ போராட்டங்களை நடத்துவதாலோ மட்டும் தொழிலாளர்கள் உரிமையை நாம் பெற்று விட முடியாது. எது நடந்தாலும், என்ன கொடுமைகள் நடந்தாலும் 'இது நமது விதியின் பயன்'; நடப்பதெல்லாம் ஆண்டவன் செயல்; அவனின்றி ஓரணுவும் அசையாது; நமக்கு கொடுத்துவைத்தது அவ்வளவுதான். தலையெழுத்தை நம்மால் மாற்றமுடியுமா' எண்ணுகின்ற மக்களே இன்று தொழிலாளர்களாக உள்ளனர். முதலில் இந்த எண்ணத்திலிருந்து அவர்களை மீட்க வேண்டும். அதற்கு முதலில்வேண்டியது அறிவுப் புரட்சி. அந்த அறிவுப்புரட்சி நடந்தால் தான் தொழிற்புரட்சியில் வெற்றி காணமுடியும். ஆகவேதான் திராவிடர் கழகம் அறிவுப் புரட்சியை ஆயுதமாகக் கொண்டிருக்கிறது.

என்ற வகையில் தன் பேச்சினை முடித்தார். எடுப்பு, தொடுப்பு, முடிப்பு அமைந்த அந்தப் பேச்சுதான் என்னுள் பேச்சாற்றல் என்ற கருவை உண்டாக்கியிருக்ககூடும் என்று நம்புகிறேன்.

மேடையில் பேசும்போது கலகம் விளைவிப்பவர்களை அண்ணா அடக்கும் முறையே தனியானது. 1950 ஆகஸ்ட் திங்களில் திருச்சியில் ஒரு கூட்டம். அப்போதைய அரசியல் தட்ப வெப்பத்தால் கூட்டம் சற்றுச் சூடாகவே இருந்தது. காமராசர் ஏற்கனவே ஆற்றியிருந்த ஒரு மேடைப்பேச்சில் 'திராவிட

நாடாவது, மண்ணாங்கட்டியாவது...! அதைத் தரமுடியாதுங்கறேன்' என்று பேசியிருந்தார். அந்த உரையைக் குறிப்பிட்ட அண்ணா,

> நான் காமராசரிடமா 'திராவிட நாடு' கேட்கிறேன்? பண்டித நேருவிடமல்லவா கேட்கிறேன். காமராசரிடம் அந்த அதிகாரம் இருந்தால் இந்நேரம் ஆசைத் தம்பியை விட்டு நயத்தாலோ பயத்தாலோ வாங்கியிருக்க மாட்டேனா?

என்று கேலியாகப் பதிலளித்தார்.

அவருடைய சொற்களால் கட்டுண்டிருந்த அவையில் திடீரென்று ஒரு சலசலப்பு. சிலர் அவசரமாக எழுந்து அங்குமிங்கும் ஓடினர். சலசலப்பிற்கிடையே பன்றி ஒன்று மேடையை நோக்கி வேகமாக ஓடியது. அது துரத்தப்பட்டு, வெளியே சென்ற பிறகு அண்ணா பேச்சை பேசிய பேச்சின் நயம் சொல்லி முடியாது. அவர் கேட்டார்,

> பன்றியைக் கண்டவுடன் அங்குமிங்கும் ஏன் அலறி ஓடினீர்கள். அது திருமாலின் அவதாரங்களில் ஒன்றல்லவா? அதைக் கண்டு நீங்கள் வணங்கியல்லவா இருக்கவேண்டும்?

என்று சொல்லிய பிறகு சொன்னார்,

> உங்கள் இடத்தில் நானிருந்தால் அதைப் பிடித்துக் கட்டி, 'ஏ மிருகப் பன்றியே! உன்னை இங்கே துரத்திவிட்ட மனிதப் பன்றி யார்?' என்று கேட்டிருப்பேன்

என்றார். பன்றியை அங்குத் துரத்தி விட்டது மற்றொரு பன்றி என அதனைத் துரத்தி விட்டவனை நையாண்டி செய்தவிதம் நினைக்க நினைக்கச் சுவைக்கிறது. இங்குக் கண்டனம் சற்று கடினமாகயிருக்கிறது. சில வேளைகளில் மிக மென்மையான சொற்களால் மிகவும் வலிமையான கண்டனத்தையும் அண்ணா தெரிவித்ததுண்டு.

தி.மு.க. தோன்றிய பிறகு பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் அண்ணாவைத் தரக்குறைவாக எழுதியும் பேசியும் வந்தார். படிப்பவர்கள், கேட்பவர்கள், ஒரு பெருங்கவிஞர் இப்படிப் பேசலாமா, எழுதலாமா என்றே எண்ணுவர். இந்நிலையில் மதுரையில் ஒரு கூட்டம்! அதில் அண்ணா பாவேந்தரைப் பற்றிப்

பேசுவதாக இருந்தது. அப்போது நான் திருச்சி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறேன். பாவேந்தர் அண்ணாவைப் பற்றி இவ்வளவு கேவலமாகப் பேசுகிறாரே, எழுதுகிறாரே! அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞரை என்னவாறு பேசுவார் என்று கேட்பதற்காகவே நானும் மற்றும் கல்லூரி நண்பர்களும் மதுரைக்குச் சென்றோம். அன்றைய கூட்டமே அண்ணா தன்னைக் கொச்சைப் படுத்திய பாவேந்தரைப் பற்றி என்ன கூறப் போகிறார் என்ற எதிபார்ப்பிலேயே கூடியிருந்தது. அண்ணா பாவேந்தரின் ஒரே ஒரு பாடலை எடுத்துக்கொண்டார். அதன் பொருள் கூறவே முக்கால் மணிக்கு மேல் எடுத்துக் கொண்டார். 'தாயின்மேல் ஆணை...' என்ற பாடல் என்று நினைக்கிறேன். (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் படத்தைத் திறந்து வைத்தபோதும் இந்தப் பாடலை விளக்கியிருக்கிறார்) பாடலில், 'எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்' என்ற தொடர் வருகிறது. 'கோடி இட்டழைத்தாலும் தொடேன்' என்று கவிஞர் எழுதியிருப்பதேன் என்பதை அண்ணா விளக்குகிறார்.

> கோடி ரூபாய் என்று சொல்லியிருந்தால், ஒருவன் கோடி வெள்ளி தருகிறேன்,உன் கொள்கையை விட்டுவிடுவாயா என்பான்; ஒருவன் வெள்ளியைச் சொன்னால் மற்றவர் தங்கம், வைரம் என எதைஎதையோ சொல்லலாம். ஆகவேதான் கவிஞர் நீ கோடி கோடியாக எதைக் குவித்தாலும் தமிழை, தமிழரை இகழ்ந்தவர்களை நான் விடேன் என்கிறார். அதனால்தான் கோடி என்றுமட்டும் சொல்லியிருக்கிறார்

என வரிக்குவரி பாடலுக்கு விளக்கம் வளர்கிறது. இவ்வாறு விரிவாகப் பாடலுக்கு விளக்கம் சொல்லிய பின் பேச்சை முடிக்கும் போது

> இப்படியெல்லாம் பாடிய வாய் இன்று ஏதேதோ பாடுகிறது; இப்படியெல்லாம் எழுதிய கை இன்று ஏதேதோ எழுதுகிறது

என்று முடித்தார். இதைவிடக் கடுமையான கண்டனம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆனால் அதை அண்ணா சொல்லிய விதம்...? எரிசொற்கள் காதில் விழும் என்று எதிர்பார்த்திருக்கும் வேளையில் குளிர்தென்றலைக் காதில் புகச் செய்துவிட்டார்.

உலகில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களுள் அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக்கழகமும் ஒன்று.

அப்பல்கலைகழகம் அண்ணா அவர்களை அழைத்து, 'சப் பெல்லோஷிப்' பட்டம் வழங்கி பெருமைப் பெற்றது. அங்கு பல்துறைப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு அண்ணா திருக்குறள் வகுப்பு நடத்தினார். அதைக் கேட்டு அண்ணாவின் அறிவை வியந்தனர். மாணவர்கள் சிலர் அண்ணாவிற்குப் பதில் தெரிந்திருக்க முடியாது என சில சிக்கலான கேள்விகளைக் கேட்டனர். அண்ணா எல்லாவற்றிற்கும் தக்கவாறு மறுமொழி அளித்தார். மாணவர்கள் முகம் மலரவில்லை. காரணம் இதற்குமுன்பு அப்பட்டம் பெறஅங்கு வரும் அறிஞர்களிடம் சில சிக்கலான கேள்விகளைக் கேட்டு அவர்களால் பதில் அளிக்கமுடியாதிருப்பதைக் கண்டு அந்த மாணவர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள். அண்ணாவிடம் அப்படி செய்ய முடியவில்லையே என்று ஏக்கம் அவர்கட்கு!. இதை அண்ணாவிடம் அவர்கள் சொன்னார்கள். அண்ணா 'பரவாயில்லை, நான் நயாகரா சென்று விட்டு இரண்டு நாட்களில் திரும்பி வருவேன். அதற்குள் சிந்தித்து என்னை தடுமாற வைக்கக் கூடிய கேள்விகளாக தயாரித்து வையுங்கள்' என்று கூறிச் சென்றார். அண்ணா திரும்பி வந்த போது மாணவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்தனர். அண்ணா மறுமொழி சொல்ல முடியாதவாறு சில கேள்விகளைத் தயாரித்து வைத்திருப்பதாக இறுமாந்திருந்தார்கள். 'கேள்விகள் தயாரித்து விட்டீர்களா?' என்று அண்ணா கேட்டார். அவர்களும் தயாரித்துவிட்டோம் என சில கேள்விகளைக் கேட்டனர்.

*கேள்வி:* ஒரே தொடரில் Because என்னும் சொல் மூன்று முறை அமையவேண்டும். அத்தகைய தொடரைச் சொல்ல வேண்டுகிறோம்.

*அண்ணா மறுமொழி :* No sentence begins with because, because because is a conjunction.

கேள்வி: A,B,C,D நான்கு எழுத்துக்களும் இல்லாத சில சொற்களை சொல்ல வேண்டுகிறோம்.

அண்ணா ஒருவரை நோக்கி- 'உங்களுக்கு ஒன்று இரண்டு மூன்று என்று வரிசையாக எண்ணத் தெரியுமா' என்று கேட்டார். அவர் தெரியும் என்றார். அப்படியானால் சொல்லுங்கள் என்றார். அவர் one, two, three... எனச் சொல்லிக் கொண்டே வந்தார். தொண்ணூற்று ஒன்பது(Ninety nine) சொன்னதும் நிறுத்தச் சொன்னார்.

இதுவரை நீங்கள் சொல்லி வந்த தொண்ணூற்றி ஒன்பது எண்களிலும் A, B, C, D என்ற எழுத்துக்கள் இல்லை என்று தெரியுமா? நூறு (Hundred) என்பதில்தான் முதன் முதல் d வருகிறது என்றார். மாணவர்கள் வியப்படைந்தனர்.

அண்ணாவிற்கு மாணவர்களிடையே பேசுவதில் தனிப் பிரியம் உண்டு. அண்ணாவை நாத்திகர், பிரிவினைச் சிந்தனையாளர் என்று சொல்லி கல்லூரி நிர்வாகம் அவரைப் பேச அழைக்க ஒப்புக் கொள்வதில்லை. அவர் படித்த பச்சையப்பன் கல்லூரியிலேயே அழைக்க முடியாத நிலை இருந்தது. கிறித்துவக் கல்லூரியில் கேட்க வேண்டுமா? மாணவர்கள் போராடி பேச அழைத்து வந்துவிட்டார்கள். அன்று அவர் பேச வேண்டிய தலைப்பு 'நல்ல தீர்ப்பு'. தான் கூட்டத்திற்குப் புறப்பட்டதை வைத்தே பேச்சைத் தொடங்குகிறார்.

> வீட்டை விட்டுப் புறப்பட்டேன். எனக்கு இரண்டு மூன்று நாட்களாக உடல் நலம் சரியில்லை. என்மனைவி சொன்னாள் 'உங்களுக்கு உடம்பு சரியில்லை. நீங்கள் கூட்டத்துக்குச் செல்ல வேண்டாம்' என்று. இது அவளைப் பொறுத்தவரை நல்ல தீர்ப்பு. நான் சொன்னேன்; நீண்ட நாட்களாக மாணவர்கள் போராட இப்பொழுதுதான் வெற்றி பெற்று இருக்கிறார்கள்; நான் சென்றே ஆகவேண்டும். சென்று பேசிவருகிறேன் என்றேன். என்னைப் பொறுத்தவரை எனக்கு அது நல்ல தீர்ப்பு. இரயில் நிலையத்திற்கு வந்தேன். கொஞ்சம் முன் கூட்டியே வந்து விட்டேன். வண்டி சற்று நேரம் கழித்து வந்தது. அங்கு நின்றிருந்தவாகள் எல்லாம் 'என்ன இந்த பாழாப்போன இரயில் இன்னும் வரலையே' என்றார்கள்! அது சரியான நேரத்திற்குத்தான் வருகிறது. இவர்கள் சற்று முன்னரே வந்து நிற்பதாலே 'இந்தப்பாழாப்போன இரயில் எப்போ வருவது நாம் எப்போ போவது' இப்படி எல்லாம் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரைக்கும் அது நல்ல தீர்ப்பு. இரயில் வந்தது. புறப்பட்டது. சற்றுக் காலம் கடந்து வந்தவர்கள் எல்லாம் ஓடி வந்து வேகமாக ஏறினார்கள், அவர்கள் 'நாசமாப் போற வண்டி இன்றைக்கு மட்டும் வேகமாக போகணுமா? முந்தி

வரணுமா' என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள். அவர்கள் நிலையில் அது நல்ல தீர்ப்பு. இந்தக் கல்லூரியில் இங்கே இருக்கக்கூடிய பேராசிரியப் பெருமக்களும் முதல்வரும் இவன் ஒரு நாத்திகன், எங்கே வந்தால் மாணவர்களைத் திசை திருப்பிவிடுவானோ! இவன் பேச்சு மாணவர்களை எங்கே இட்டுச் சென்று விடுமோ? என்ற அச்சத்தினால் என்னைப் பேச அழைக்க மறுத்திருக்கலாம். அவர்களைப் பொறுத்த வரைக்கும் அது நல்ல தீர்ப்பு. ஆசிரியர்கள் என்ன சொன்னாலும் சரி அண்ணா வருவார், நல்ல கருத்துக்களைத் தருவார், நாம் அதைப் பின்பற்ற வேண்டும் என்று மாணவர்களாகிய நீங்கள் போராடி வெற்றி பெற்று என்னை அழைத்திருக்கிறீர்கள் உங்களைப் பொறுத்த வரைக்கும் இது நல்ல தீர்ப்பு.

இவ்வாறு தலைப்பை பற்றியே விளக்கிச் சொல்லி கேட்போரை மகிழவைக்கும் ஆற்றலும் சிறப்பும் அண்ணா அவர்களுக்கு இருந்ததாலேயே அவரின் பேச்சு எல்லா வகையிலும் வெற்றிபெற்றிருக்கிறது.

கல்லூரிகளில் அண்ணாவுக்குப் பேச்சின் தலைப்புத்தரப்படாமல் அவர் பேச எழுந்திருக்கும் போது தலைப்பைச் சொல்லி அண்ணாவைச் சோதிக்க விரும்புவதுண்டு. இத்தகைய சோதனைகள் அண்ணாவுக்கு விளையாட்டு. ஒருமுறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'ஆற்றங்கரையில்' என்ற தலைப்பை அவர் பேச எழும்போது தந்தார்கள். அவர்கள் 'பூவார் சோலை மயிலாட புரிந்து குயில்கள் இசைபாட, காமர் மாலை அருகசைய' நடந்த காவேரின் எழில்பற்றிப் பேசப் போகிறாரா? சங்க இலக்கியங்களைக் காட்டப் போகிறாரா? குறுந்தொகை கலித்தொகைக்குள் நுழைவாரா? என்றெல்லாம் எண்ணியிருந்தார்கள். அவர்கள் அதைத் தானே விரும்பியிருப்பார்கள்? எதிர்பார்த்திருப்பார்கள். அண்ணாவுக்கு ஆற்றங்கரையில் மாணவர்கள் காண விரும்பும் அழகு அதுதான் என்பது தெரியாதா? தெரியும்; ஆயினும் இப்போது அவர்களுக்குத் தேவை சோலைக் குயில்களின் ஓசையல்ல; அவர்களுக்கு தேவை உலக வரலாறு; வீர வரலாறு; வெற்றி வரலாறு; மனித வரலாறு என்பதறிவார். ஆகவே சொன்னார்:

> உலகத்தில் ஆயிரக் கணக்கான நதிகள் ஓடுகின்றன. அவற்றையெல்லாம் நான் பேசமுடியாது. ஆயிரம் ஆயிரம் நதிகளைப் பற்றி நான் என்றைக்குப் பேசி முடிப்பது நீங்கள் என்றைக்கு வீட்டுக்குச் செல்வது? மூன்று ஆறுகளை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். அது கொண்டு நீங்கள் தெரிந்துக் கொள்ளவேண்டிய பாடத்தையும் சொல்கிறேன். முதலில் நைல் நதி. இரண்டாவது வடநாட்டு கங்கை. மூன்றாவது தமிழ்நாட்டு காவிரி. நைல் நதி கரையோரத்தில் ஆன்டனி போன்ற வீரர்கள் பலர் இருந்தனர். அவர்கள் வெற்றிகள் பல கண்டனர். ஆனால் அந்த வெற்றிகளையெல்லாம் கிளியோபாட்ரா போன்ற கட்டழகிகளின் காலடிகளிலேயே கொட்டினர். அடுத்து கங்கை கரை; அங்கேயும் சந்திரகுப்தன், அசோகன் போன்ற மன்னர்கள் களம் பல கண்டு வெற்றி பல குவித்தனர். அந்த வெற்றிகளையெல்லாம் சாணக்கியன் போன்றவர்களின் காலடிகளில் கொட்டி ஏமாந்தனர். காவிரிக் கரையில் இராசராசனும் இராசேந்திரனும் தாம் பெற்ற வெற்றிகளைத் தஞ்சைப் பெரிய கோயிலாக்கினர். கங்கை கொண்ட சோழபுரமாக உருவாக்கினர். கங்கை கொண்டான் என்ற வெற்றியும் கண்டனர்.

அழகுக்கும், அரசியல் சாணக்கியத்திற்கும் இடம் கொடாத வீரமே உயர்ந்த வீரம் என்பதை மாணவர்களின் உள்ளத்தே பதியவைத்தார்.

அண்ணாவின் பேச்சிலே உவமைகள் பின்னிப்பினைந்துக் கிடக்கும். மக்கள் நாள் தோறும் காணுகின்ற நிகழ்ச்சிகளை அல்லது மிகவும் தெரிந்த செய்திகளை அரிய உவமைகளாக்கி மக்கள் உள்ளத்திலே ஆழமாகப் பதியவைத்துவிடுவார்.

பழைய இலக்கியங்களிலிருந்து நமக்குத் தேவையான கருத்துக்களைத்தான் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்பதை உவமை வாயிலாகச் சொல்கிறார்.

> மண்ணிலே ஏராளமான தங்கம் புதைந்திருந்தாலும் நகை செய்யும் போது நமக்குத் தேவையான அளவுக்கே தங்கத்தைக் கொடுத்து நகை செய்யச் சொல்கிறோமே அது போல!

நூல்களைத் தரமறிந்து, படிக்கத்தக்கதறிந்து படிக்கவேண்டும் என்பதை

> பசுவின் இடத்திலே பால் இருக்கிறது என்றாலும் பசுவின் உடல் முழுவதிலுமா பாலைத் தேடிச் செல்கிறோம்? கறக்க வேண்டிய இடத்தில் முறைப்படித்தானே கறக்கிறோம்
>
> தேங்காயையும் மாங்காயையும் ஒரே மாதிரியா பயன்படுத்துகிறோம்? இல்லையே! தேங்காயின் உள்ளே இருப்பதைப் பயன்படுத்துவோம், மாங்காயில் உள்ளே இருக்கும் கொட்டையைத் தூக்கியெறிவோம்! மாங்காயிலோ தின்னக் கூடிய சத்து மேலே இருக்கும்.

என்னும் உவமைகள் கொண்டு விளக்குகிறார். இவ்வுவமைகள் உன்னுந்தோறும் உன்னுந்தோறும் பொருள் விரிந்து கொண்டே செல்லக் காண்கிறோம்.

அவர் கூறுவார்:

> நம் கையில் ஐந்து விரல்கள் அழகாக அமைந்திருக்கின்றன. நாம் நினைக்கும்போது நன்றாக அவற்றைச் சேர்த்துவிடமுடியும். இருந்த போதிலும்கூடக் கட்டைவிரல், ஆள்காட்டிவிரல், நடுவிரல், மோதிர விரல், சுண்டுவிரல் என்று ஐந்தாகப் பிரிந்துள்ளது. இப்படி ஐந்து விரல்களும் தனித்தனியாக இருந்தபோதிலும் அவை ஒன்று சேர்கிறபோதுதான் நாம் எதனையும் உருப்படியாக செய்யமுடியும்!
>
> நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பல கட்சிகள் இருப்பது நன்மைதான்? விரல்கள் தனித்தனியாக இருப்பது போல. அந்தக் கட்சிகள் எல்லாம் நாட்டு நலன் என்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்? தனித்தனியே இருக்கும் விரல்கள் எதைச் செய்தாலும் ஒன்று சேர்வதுபோல.

சொற்பொழிவுகளில் உவமைகளைக் கையாளும் பண்பு, அண்ணாவுக்குக் கைவந்த கலையாக இருக்கிறது. உவமைகள் மூலம் செய்தியை எளிமையாகப் புரிய வைக்க முடியும். உவமைகளைப் பொருத்தமாகக் **கையாளுதல்** எளிய செயலன்று; அது

பெரும்புலவர்களாலேயே இயலும். கவிஞர்கள் கவிதைகளில் உவமைகளைப் பெருமளவில் கையாள்வதுண்டு. சொற்பொழிவுகளில் உவமைகளைக் கையாளுதல் எளிதன்று. பேசிக் கொண்டிருக்கும் போதே உவமைகள் தோன்றவேண்டும்; அப்படித் தோன்றுவது பொருத்தமானதாக இருக்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவுகளில் மிகுதியான உவமைகளைக் கையாண்டு பெரும் வெற்றி பெற்றிருக்கிறார். உவமைகள் இல்லாத அவருடைய பேச்சே இருந்ததில்லை. கேட்கும்தோறும் உவமைகள் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும். கவிஞர்கள் கவிதைகளில் கையாள்வதைவிட அதிகமான உவமைகளை அண்ணா சொற்பொழிவில் கையாள்கிறார். இது கேட்போரை மகிழ வைத்து வியக்கச் செய்கிறது.

இளைஞர்களிடையே பேசும்போது அவர்கள் சுவைக்கும் வண்ணம் சில நகைச்சுவைகளைப் பெய்து கவர்கிறார். அந்தக் காலத்தில் தமிழை எவ்வாறு மாணவர்கள் புறக்கணித்தார்கள் என்பதை ஒரு உவமை வாயிலாக அண்ணா விளக்கியுள்ளார்.

> தமிழ் வகுப்பு நடந்து கொண்டே இருக்கும். தெய்வயானையை விட்டுவிட்டு வள்ளியைத் தேடிக் கொண்டு முருகன் போனதுபோல மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடுவார்கள்.

அடுக்கடுக்கான உவமைகளைக் கூறி வியக்கவைக்கும் திறமையினையும் அண்ணாவிடம் காணலாம். தீண்டாமை எத்துணைக் கொடுமையானது என்பதை விளக்க உவமைகளை அடுக்கிச் செல்கிறார்.

> வீணையை மீட்டத்தொடங்கியதும் இசைக் கேட்க வருபவனின் காதுகளை அடைப்பது போல, எழில்மிகு சித்திரத்தைத் தயாரித்துக் காணவாரீர் என்று அனைவரையும் அழைத்துக் காணவரும் சிலரின் கண்களைக் கட்டியிருப்பது போல, பழச்சாற்றின் இனிப்பைக் கூறிக்கொண்டே, 'பருக கொஞ்சம் தருக' என்று கேட்பவனை விரட்டுவது போல ? ஆலயங்களுக்கு மகிமையும் பயனளிக்கும் சக்தியும் இருப்பதாகக் கூறிவிட்டு, அங்கு வரக்கூடாது; நுழையக்கூடாது என்று சிலரை அல்ல, ஏறத்தாழ எட்டுக் கோடிமக்களைத் தடுத்துவருகிறோம்.

இத்தகைய அடுக்கு உவமைகள் சொற்பொழிவுக்கு எடுப்புத் தருவதுபோல சொல்லவரும் செய்தியை வலியுறுத்துவனவாய் உள்ளன.

பேச்சில் மட்டுமின்றி கட்டுரைகளிலும் இத்தகைய உவமைகளை கையாண்டு இருப்பதையும் காண்கிறோம். 1967 பொதுத்தேர்தலில் 'தி.மு.க. வுக்கு மரண அடி கொடுப்பேன், அதனை ஆழமாக குழிதோண்டிப் புதைப்பேன்' என்றார் காமராசர். அதற்கு மறுமொழியாக அண்ணா எழுதுகிறார்.

குற்றாலம் சென்று குழாயடியில் குளிப்பதுபோல
திருக்குளத்தில் இறங்கிப் பாசி எடுத்து வருவது போல,
சந்தனத்தைக் கரைத்து மாட்டுத் தொழுவத்தில் தெளிப்பது போல,
கரும்பைக் கொண்டுவந்து அடுப்பு எரிப்பது போல,
இசைப்புலமை பெற்றபிறகு கோட்டான் போலக் கூவிட முயல்வது போல,
பொன்னாடையை வாங்கிப் புழுதியைத் தட்டிடப் பயன்படுவது போல,
யானையின் மீது அம்பாரி அமைத்துப் பூனை பிடிக்கச் செல்வது போல,
உடைவாளை வாங்கி உருளைக்கிழங்கை வெட்டுவதைப்போல?
பூந்தோட்டம் சென்று ஊமத்தம்பூ கேட்பது போல?
கழனியை ஆழ உழுது கள்ளிச்செடி நடுவது போல?
சாமியாராகி விட்டு மாமியார்வீட்டுக்குச் சாப்பிட போவது போல?
திருவிளக்கு வெளிச்சத்தில் திருட்டுக் கணக்கு எழுதுவது போல?
இளநீர் பருகிடமறுத்துக் கழுநீர் குடித்திடத் துடித்திடப் போல?
தங்கத் தாம்பாளத்தில் தவிடுகொட்டி வைத்ததுபோல

'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்று வள்ளுவர் கூறிய ஓர் உவமைக்கு ஒன்றன்பின் ஒன்றாக பதினைந்து அடுக்குகள். இப்படி ஒரு உவமை அடுக்கினை நாம் வேறெங்கும் கண்டிருக்கமுடியாது? கேட்டிருக்கவும் முடியாது.

ஒருவர் தவறு செய்தால் அவரை மேடையில் வைத்துக்கொண்டே அவருடைய தவற்றினை நயமான உவமை மூலம் அவர்களே ஏற்குமாறு பேச அண்ணாவால் முடியும்.

தமிழகத்தில் முதன்முதல் இந்தியை நுழைத்தவர் இராசாசி. அதை எதிர்த்ததற்காக அண்ணா சிறைப்படுத்தப் பட்டார்.பிற்காலத்தில் இராசாசி தன் கருத்தை மாற்றிக் கொண்டு தமிழ்நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கக் கூடாது என்று இந்தியை எதிர்த்தார். அக்காலகட்டத்தில் மயிலாப்பூரில் அண்ணாவும் இராசாசியும் கலந்து கொள்ளும் கூட்டம். அதில் இராசாசி 'இந்தியை நுழைத்த நான் இப்பொழுது கூறுகிறேன் பள்ளிகளை விட்டு இந்தி வெளியேற வேண்டு மென்று' என்று பேசினார். அடுத்துப் பேசிய அண்ணா அவர்கள்,

> மிகுந்த நச்சுத் தன்மைக் கொண்ட பாம்பு ஒருவனைக் கடித்துவிட்டால் அந்தப் பாம்பு திரும்ப வந்து கடித்த இடத்திலே வாயை வைத்து தான் கக்கிய நஞ்சினை உறிஞ்சினால்தான் கடிபட்டவன் பிழைப்பான் என்பது மரபுவழிச் செய்தி. அதைப்போல இந்திமொழியைத் தமிழ்நாட்டிற்கு யார் கொண்டு வந்தார்களோ அவர்களே (ஆச்சாரியாரே) இந்தி வேண்டாமென்றுவிட்டார்.

இராசாசியோடு சேர்ந்து இந்தியை எதிர்க்கவேண்டும் என்று உவமை ஒன்றை கூறியிருந்தாலும் இராசாசியை மேடையில் வைத்துக் கொண்டே பாம்பு என்று சொன்னது பெரும் துணிச்சல் அல்லவா!

பல பேச்சுகளில் அண்ணா தன்னைப் பற்றிப் பேசியிருக்கிறார். ஒரு சமயம் ' என்னிடம் இருப்பதாகச் சொல்லப்படும் திறமைகளுக்கெல்லாம் காரணம் காஞ்சிபுரம்தான்' என்றார். அவர் கல்லூரியில் படித்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சியை மாணவர் கூட்டத்திலேயே சுவைபடச் சொல்லுகிறார்.

> நான் கல்லூரியில் படித்த பொழுது ஒரு பேராசிரியர் வகுப்புக்கு வந்ததும் பாடத்திற்குரிய பாடக் குறிப்புகளைக் கொடுப்பார். மாணவர்கள் அதை அப்படியே எழுதி மனப்பாடம் செய்து தேர்வு எழுதுவார்கள். நான் குறிப்புகளை எழுதாமல் உட்கார்ந்திருந்தேன். ஆசிரியர் 'ஏன்

> எழுதவில்லை' என்று கெட்டார். அதற்கு நான் 'நீங்கள் கொடுக்கும் குறிப்புகளை எழுதிப் படித்தால் எனக்கு 40 மதிப்பெண்கள் கிடைக்குமென்றால் நானாக எழுதினால் அதைவிட அதிகமாக மதிப்பெண் கிடைக்கும்' என்று பதில் சொன்னேன். அதைப் போலவே அந்த ஆண்டு மாநிலத்திலேயே நான் முதல் மாணவனாகத் தேர்ச்சிப்பெற்றேன். அதை அந்த ஆசிரியரிடம் சென்று சொன்னபோது, 'ஆமாம்பா, நீ சொன்னதுதான் சரி' என்று வாழ்த்தினார். அதை நான் சொல்வது நீங்கள் இதை அப்படியே கையாள வேண்டும் என்பதிற்கில்லை

என்றார். இதைச் சொல்வதன்மூலம் எழுதிவைத்து மனப்பாடம் செய்வதைவிட தாமே சிந்தித்து கருத்துக்களை அறியும்போது கூடுதல் பலன் பெறலாம் என்பதை எடுத்துரைக்கிறார்.

எழுத்தாளர்களைப் பற்றி அண்ணா எழுத்தாளர் மாநாட்டில் பேசுகிறார்.

> எழுத்தாளர்கள் என்றால் எழுதுபவர்கள் என்று பொருள் கொண்டால் போதாது. எழுதுவது குழந்தை பிறப்பது போல! கருவுறுவது போன்றது எண்ணம் ! கருவுக்கு ஆண் பெண் இருப்பது போல எண்ணம் பிறக்கக் காலமும் நோக்கமும் வேண்டும்; பிறகே எழுத்து.

இவ்வாறு குறிப்பிடும் அண்ணா எழுத்தாளர்கள் எப்படியெல்லாம் எழுதுவார்கள்; ஒரே பொருளை நோக்கினும் அவரவர் தன்மைக்கேற்ப எவ்வாறு எண்ணம் மாறுபடும் என்பதை அழகுற விளக்குகிறார்.

> குதிரை என்ற தலைப்பில் கட்டுரை தீட்டச் சொன்னால் ஒருவர், 'புயூசிபாலஸ் முதற்கொண்டு குதிரைகள் சிறப்படைந்தன' என்று எழுதுவார். அவர் அலெக்சாண்டர் என்னும் கிரேக்கவீரன் ஏறிவந்த குதிரையின் பெயரைத் தெரிந்து கொண்டவர்; மேல்நாட்டு சரித்திர நிகழ்ச்சியில் அறிவு பெற்றவராய் இருப்பார்.
>
> நீலவேணியை நினைவுக்குக் கொண்டு வருவார் இராஜா தேசிங்கு கதை தெரிந்த எழுத்தாளர்.

மாணிக்கவாசகரின் மந்திரி பதவி போகவும், இடர் நேரவும் குதிரைகளன்றோ காரணம்; ஆதலின் அவற்றைக் கண்டிக்கிறேன் என்று எழுதிவிட்டுப் பின்னர் மணிவாசகத்தை நாம் பெறக் குதிரைகளன்றோ காரணம், குதிரையே உன்னைக் கும்பிடுகிறேன் என்று முடிப்பார், ஓர் எழுத்தாளர்.

தாலி அறுக்கும் பிசாசே! தந்தைக்கும் தனயனுக்கும் பகை மூட்டும் சனியனே! சூது சூழ்ச்சியிலே மக்களைச் சிக்க வைக்கும் கருவியே! உன்னால் கெட்டன குடும்பங்கள்! கொழுத்தனர் மார்வாடிகள்! குதிரையே! கோரத்தின் சொரூபமே! பாவத்தின் கருவியே! பாதகத்தின் பங்காளியே! உன் குலம்அழிக! கூண்டோடு ஒழிக!.... என்று ஒருவர் எழுதுவார், கிண்டி குதிரைப் பந்தயத்தால் விளையும் தீமைகள் பற்றிய கோபக் கொதிப்பினால்.

இப்படிப் பல்வேறு கோணங்களில் எழுதினாலும் எழுத்தாளர்களை இரு சார்புகளில் அடக்கிவிடலாம்,

என அண்ணா குறிப்பிட்டு மேலும் பேசுகிறார்.

பழமை, புதுமை என்ற இரு சக்திகளுக்கும் இடையே போர் நடக்கிறது. எழுத்தாளர்களின் பேனா முனைகளே அப்போரிலே உபயோகமாகும் போர்க் கருவிகள்'. இவ்வாறு கூறும் அவர் எழுத்தாளர்களின் வகை பற்றியும் குறிப்பிடுகிறார். புதுமையை நிலை நாட்டும் எழுத்தாளர்கள்; சாதியை ஒழித்து நீதியை நிலைநாட்டும் எழுத்தாளர்கள்; மடமையை மாய்த்துக் கொடுமையைக் களைந்து, சிறுமையைக் காய்ந்து, மக்களின் பெருமையை வாழ்வின் அருமையை விளக்கும் எழுத்தாளர்கள்; கோபுர அளவுக்குக் குவிந்திருக்கும் பழமைக் குப்பைகளைத் தமது சிந்தனை என்னும் சண்ட மாருதத்தால் அழித்தொழிக்கும் எழுத்தாளர்; அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று அரண் அமைத்துப் பதுங்காது எவர் எப்படிச் சொல்லி யிருந்தால் எனக்கென்ன? என் கருத்து இது என்று எடுத்துரைக்கும் எழுத்தாளர்கள் எண்ணிக்கையில் பெருக வேண்டும்; வளம் பெற வேண்டும். அவர்களால் அநீதியையும் அறியாமையையும்

> அகற்ற முடியும். ஆணவத்தை இடுப்பொடித்து நான் வாழ்வை உருக்குலைத்து , ஊரார் எண்ணத்திலே புதுமுறுக்கு ஏற்றி, ஐயம் அகற்றி, ஒப்பற்ற ஓர் வெற்றியைக் காட்டமுடியும்.

என்று பேசிய இப்பேச்சில் எழுத்தாளர் யார்? எவ்வெவ் வகையினர் உள்ளனர்? எவ்வகை எழுத்தாளரேயாயினும் அவருடைய கடமை என்ன? என்ற செய்திகளை சிரிக்கவும் சிந்திக்கவுமாகப் பேசியிருக்கும் நேர்த்தியே நேர்த்தி.

வெளிநாடுகளில் சென்று குடியேறி வாழ்கின்ற தமிழர்களிடையே பேசும்போது, தாங்கள் வாழும் நாட்டின் குடிமக்களாகக் கருதி உயர் வாழ்வு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். வாழ்க்கை பற்றிய அறிவுரை நல்குகிறார்.

> வாழ்வு என்பது வேறு; நல்வாழ்வு என்பது வேறு! குழம்புக்கும் ஊசிப்போன குழம்புக்கும் உள்ள வித்தியாசமே வாழ்வுக்கும் நல்வாழ்வுக்குமுள்ள வித்தியாசமாகும். 'என்னுடைய மகன் என்னைவிட நன்றாக வாழவேண்டும்; என்னைவிட அதிகம் சம்பாதிக்கவேண்டும்' என்று நினைத்து வாழ்பவனின் வாழ்க்கை நல்வாழ்க்கையாகும்.
>
> 'நான் சம்பாதிக்கிறேன், செலவு செய்கிறேன், அதைக் கேட்க நீ யார் என்றும், எங்கே போகிறீர்கள் என்று கேட்கும் மனைவியிடம் எங்கோ போகிறேன், இந்திரலோகம் போகிறேன். உனக்கென்ன என்றும், சும்மா வீட்டோடு கிட' என்றும் பாதம் தரையில் படாமல் கூறுவனின் வாழ்க்கை கெட்ட வாழ்க்கையாகும்

என அண்ணா அவர்கள் மலேசியாவிலுள்ள ஜோகூர்பாரு என்னுமிடத்தில் நடந்த வரவேற்புக் கூட்டத்திலே கூறினார். வெளிநாட்டில் வாழும் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்னும் பொறுப்புணர்வை ஊட்டும் வகையில் அவருடைய வெளிநாட்டுப் பேச்சுகள் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

> **விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
> **சொல்லுதல் வல்லார்ப் பெறின்**

என்றார் வள்ளுவப் பெருந்தகை. 'சொல்ல வேண்டிய கருத்துகளை வரிசைப்படுத்தி இனிமையாகச் சொல்லக் கூடியவர் கிடைத்தால் மக்கள் அவர் சொற்படி நடப்பர்' என்பது இக்குறளின் பொருள், இப்படிப்பட்ட மக்கள் எளிதாகக் கிடைத்துவிட மாட்டார்கள்; கிடைப்பது அரிது என்பதாற்றான் 'பெறின்' என்ற சொல்லைத் பெய்திருக்கிறார் திருவள்ளுவர். இத்தகைய சொல்வன்மையாளர்களில் அண்ணா முதல் வரிசையில் நிற்பவர். அவரை நம் நாட்டுத் தலைவராக நாம் பெற்றது நமக்குக் கிடைத்த பெரும் பேறாகும்!.

அண்ணாவின் நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதில் நாம் பெருமை கொள்கிறோம்; பூரிப்படைகிறோம்.

# அறிஞர் அண்ணாவின் பயிற்றுமொழிக் கொள்கை

பேரா. முனைவர் அ.இராமசாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் கரு.அழ. குணசேகரன் அவர்களே, மரியாதைக்குரிய சிலம்பொலி செல்லப்பனார் அவர்களே, அன்பிற்குரிய பேராசிரியப் பெருமக்களே, மாணவக் கண்மணிகளே. பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளைக் கருத்தரங்கு ஏற்பாடு செய்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருப்பதை மனமாறப் பாராட்டி, அதில் கலந்து கொள்கின்ற வாய்ப்பினை எனக்கு வழங்கியமைக்காக என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சற்று முன்னர் நம்முடைய மதிப்பிற்குரிய சிலம்பொலியார் அவர்கள் மிகச்சிறப்பாக ஓர் உரையை ஆற்றியிருக்கிறார்கள். சிலம்பொலியின் பேச்சு நமக்கு சிறப்பொலியாகக் கேட்டது. சங்க காலத்துச் சிலம்பொலியால், எங்கள் மதுரைத் தீப்பற்றி எரிந்தது. ஆனால் இந்தக் காலத்துச் சிலம்பொலியால் நம்மனம் குளிர்ந்து மகிழ்கிறது. அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

நான் முதன்முதலில் எட்டாவது படிக்கும்பொழுது அண்ணாவின் பேச்சைக் கேட்டேன். மதுரையில் தமுக்கம் மைதானத்தில் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது அங்கு பேருந்து வசதி கிடையாது. அண்ணாவின் கூட்டம் முடிய இரவு மணி இரண்டு ஆகிவிட்டது. நான் வீட்டிற்கு நடந்துதான் வந்தேன். என் அப்பா என்னை வீட்டிற்குள் விடவில்லை. 'வெளியே போடா' என்றார். அன்றைக்கு வாசலில்தான் படுத்துக் கிடந்தேன். மறுநாள் காலையில் எங்கள் தெருவில் உள்ள பெரியவர்கள், 'தம்பியை உள்ளே விடுங்கள், இனிமேல் தவறு செய்ய மாட்டான்' என்று என் தந்தையிடம் சமாதானம் சொல்லி

வீட்டுக்குள் அனுப்பினார்கள். கறுப்புச் சட்டைக்காரன் என்றால் கேவலமாக நடத்தப்பட்டக் காலம் அது.

அண்ணாவை ஒரு இருபது முறைகளாவது பார்த்திருப்பேன். இலட்சக்கணக்கான தொண்டர்களோடு தொண்டர்களாக அவருடைய சொற்பொழிவைக் கேட்டிருக்கிறேன். பத்து முறைகளாவது அவருடன் மேடையில் இடம் பெற்றிருக்கிறேன். நான் மாணவர் தலைவராக இருந்ததினால் ஒரிரு முறை அண்ணாவின் மேடையில் பேசியிருக்கிறேன். பெரிய அரங்கச் சொற்பொழிவாளராக அல்ல. கடைசியில் அண்ணா அவர்களுக்கு நன்றி என்று கூறுவதற்குள் நான் திணறிப் போய் விடுவேன். மாணவராக இருக்கும் போது அந்த அளவுதான் அண்ணாவுக்கும் எனக்கும் உள்ள பழக்கம். அண்ணாவை நான் படித்தவன்; அண்ணாவினுடைய சொற்பொழிவுகள், எழுத்துக்கள் அனைத்தையும் படித்து ஆய்வு செய்தவன் என்ற வகையில் அண்ணாவைப் பற்றி பேசுகிறேன்.

பேராசிரியர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு மதுரைக்கு வந்த போது, 'ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு முடித்தால் உன்னுடைய ஆசிரியர் பணிக்கும் உன்னுடைய முன்னேற்றத்திற்கும் உதவியாக இருக்கும்' என்று கூறினார். அப்பொழுது நான் அரசு கல்லூரியில் ஆசிரியராக இருந்தேன். அவர் கூறிய பிறகுதான் அறிஞர் அண்ணாவைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று முடிவுசெய்தேன். முனைவர் தமிழ்க்குடிமகன் எனக்கு நெறியாளர். அவர்தான் எனக்கு வழிகாட்டி.

நான் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தலைப்புத் 'அண்ணாவின் மொழிக்கொள்கை'. ஆட்சி மொழிப் பிரச்சனையைத்தான் நான் ஆய்வு செய்ய வேண்டும். 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைப்பெற்றது. அதைப்பற்றி நான் ஆங்கிலத்தில் 630 பக்க அளவில் Struggle for Freedom of Languages in India என்ற ஒரு நூலை எழுதியிருக்கிறேன். இந்தி எதிர்ப்புப் போரட்டத்தில் மாணவர்களாகிய நாங்கள் ஈடுபட்டோம். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப் பெற்ற நாளிலிருந்து பதினைந்து ஆண்டு காலம் இந்தி திணிப்பை எதிர்த்து நாடு நகரம் எங்கும் பட்டித் தொட்டி எங்கும் பிரச்சாரமும் போராட்டமும் நடைபெற்றது.

'ஸ்டேட்ஸ்மேன்' என்ற ஆங்கில நாளிதழ் கல்கத்தாவிலிருந்து வருகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் முடிந்த பின்னர் "இந்தியா முழுவதும் சுதந்திரப் போராட்டம்

நடந்தது. இந்தியா பற்றி எரிந்தது. அந்த நேரத்தில் நகரத்தில் மட்டும்தான் போராடினார்கள். ஆனால் 1965 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப்போராட்டம் பட்டி தொட்டி கிராமங்களிலெல்லாம் பற்றி எரிந்தது" என்று எழுதியது. அந்த அளவுக்கு வேகம் இருந்தது. அப்படி வேகப்படுத்துவதற்குக் காரணம், பேரறிஞர் அண்ணாவினுடைய பேச்சு, தலைவர் கலைஞர் அவர்களின் உணர்ச்சியூட்டுகின்ற உரை, இவை இரண்டும் காரணம். மாணவர்கள் மக்களின் சக்தியைத் தட்டி எழுப்பினார்கள். அந்தப் போராட்டம் நடந்து முடிந்தது.

1966 ஆம் ஆண்டு பேராசிரியர் இலக்குவனாருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்தினோம். பேரறிஞர் அண்ணா அவர்களை அவ்விழாவிற்கு வரவழைத்திருந்தோம். அப்பொழுது, 'இவ்வளவு பெரிய போராட்டம் நடந்திருக்கிறது. மேலை நாடுகளில் இதைப்பற்றி ஒரு அருமையான புத்தகம் எழுதியிருப்பார்கள். ஆனால் தமிழ்நாட்டில் யாராவது இதைப்பற்றி எழுதுவார்கள் என்று பார்த்தேன். யாருமே எழுதவில்லை' என்று அண்ணா கூறினார். நான் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ. முடித்து முதல் மாணவராகத் தேர்வு பெற்று தர்மபுரியில் அரசு கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றச் சென்ற போதுதான் அண்ணா கூறியபடி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப்பற்றி எழுத முடிவுசெய்தேன். பிறகு ஊர் ஊராகச் சென்று அந்தப் போராட்டத்திலும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டவர்களை நேரில் சந்தித்து, பல பத்திரிகைகளை ஆராய்ந்து 'இரத்தத்தில் ஐம்பது நாட்கள்' என்ற நூலை எழுதினேன். அதற்குப் பிறகுதான் அண்ணாவின் மொழிக் கொள்கைகளை ஆய்வு செய்ய முடிவுசெய்து, 'அண்ணாவின் ஆட்சிமொழிக் கொள்கை' என்ற தலைப்பில் ஆய்வைத் தொடங்கினேன்.

அண்ணாவின் எழுத்துக்களையும் சொற்பொழிவுகளையும் படிக்கும்பொழுதுதான் பல்வேறு பிரச்சனைகளைப் பேசியிருக்கிறார், எழுதியிருக்கிறார் என்று அறிந்தேன். அண்ணாவின் மொழிக்கொள்கைகளை ஆறு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டேன். 1.தனித்தமிழ் கொள்கை, 2.பயிற்றுமொழிக் கொள்கை, 3. இசைமொழிக் கொள்கை, 4.வழிபாட்டு மொழிக் கொள்கை, 5. வழக்குமன்ற மொழிக் கொள்கை, 6.ஆட்சிமொழிக் கொள்கை ஆகிய ஆறு பிரிவுகளில் ஆட்சிமொழிக் கொள்கையை முதன்மையாக வைத்துக் கொண்டு என்னுடைய ஆய்வுப் பணியை

மேற்கொண்டேன். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் என் ஆய்வை முடித்து முனைவர் பட்டம் பெற்றேன்.

அண்ணாவின் மொழிக்கொள்கை உருவான வரலாற்றுப் பின்னணி என்ன என்று காணவேண்டும். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் அச்சு இயந்திரங்களின் வருகையால் நம்முடைய ஏடுகளிலிருந்த இலக்கியங்கள் நூல் வடிவம் பெற்றன. பாண்டித்துரைத் தேவர் மதுரையில் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கினார். தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து பல தமிழ்ச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. கிறித்துவ பாதிரியார்களின் சமயப்பணிக் காரணமாகவும் தமிழ்மொழியில் மறுமலர்ச்சி உருவானது. உரைநடை கிறித்துவ பாதிரியார்கள் வந்த பின்னர்தான் வந்தது. ஒருபுறம் தமிழ் மறுமலர்ச்சி அடைந்துகொண்டே இருக்கிறது. இன்னொருபுறம் தமிழ்மொழியை நசுக்குகின்ற வேலையும் நடந்துகொண்டே வந்திருக்கிறது.

பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிறகு குலசேகரப்பாண்டியன் மரணத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் தமிழன் ஆட்சி செய்யவில்லை. வேற்று மொழிக்காரர்கள்தான் இங்கு ஆட்சிச்செய்துகொண்டிருந்தார்கள். அண்ணா 1938 இல், ‘ஆட்சி பீடத்திலே ஆங்கிலம், ஆலயத்திலே சமஸ்கிருதம், இசை அரங்கிலே தெலுங்கு, எல்லை ஓரத்திலே இந்தி’ என்று மேடையில் முழங்குகின்றார். இப்படி தமிழுக்கு எல்லா பக்கமும் தொல்லை வந்து கொண்டு இருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் அண்ணாவின் மொழிக் கொள்கை உருவாக்கப்பட்டது.

தமிழ்மொழி தனித்து இயங்கக்கூடியது என்று அண்ணா வலியுறுத்திக்கொண்டே வந்தார். அப்போது பத்திரிகைகளிலும் நடைமுறையிலும் புழக்கத்திலிருந்து வந்த ‘அபேட்சகர்’, ‘பசுநிலையம்’ என்ற சொற்களையெல்லாம் மாற்றி ‘வேட்பாளர்’, ‘பேருந்து நிலையம்’ என்ற தனித்தமிழ்ச் சொற்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தார் அண்ணா. அப்பொழுது தமிழ் ஆசிரியர்கள் என்றால் கேலிப்பொருளாகக் கருதப்பட்டார்கள். தமிழ் ஆசிரியர்களுக்கு மரியாதைக்குரிய சூழலை உருவாக்கியது அண்ணாதான். தமிழுக்கு மரியாதை, தமிழாசிரியர்களுக்கு மரியாதை இப்படிப்பட்ட சூழ்நிலை வேண்டும் என்பதே அண்ணாவினுடைய கொள்கை.

நம் உயிரோடும் உள்ளத்தோடும் இரண்டறக் கலந்திருக்கும் தமிழ், எல்லா இடங்களிலும் கொலுவீற்றிருக்க

வேண்டும் என்று 'தம்பிக்கு கடித'த்தில் அண்ணா எழுதினார். நாடாளுமன்றத்தில் அண்ணா பேசுகையில், 'எந்தெந்த காரியத்துக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறதோ அந்தந்தக் காரியங்களுக்கு தமிழைப் பயன்படுத்த வேண்டும். இந்தியாவிலுள்ள மொழிகளில் எது தகுதியுடைய மொழி என்றால் அது தமிழ் என்று சொல்ல தயங்கமாட்டேன்' என்று குறிப்பிட்டார். அந்தளவுக்குத் தகுதிப்பெற்றத் தமிழ், தரமிக்கத் தமிழ் எல்லா நிலைகளிலும் ஏற்றம் பெறவேண்டும் என்பதில் அண்ணா உறுதியாக இருந்தார்.

தமிழ்நாட்டில் தமிழ்க் கல்வி கற்கும் நிலைமை எவ்வாறு இருந்தது? சங்க காலத்தில் சாதியில்லை என்பதனால் எல்லா சாதியினரும் கல்வி பயின்றார்கள் என்று சொல்லமுடியாது. ஏழாம் நூற்றாண்டிற்கு பிறகுதான் சாதிகளெல்லாம் வந்தன. அப்பொழுது திண்ணைப்பள்ளிக்கூடம்தான் இருந்தது. அப்பள்ளிகளில் உயர்சாதிக்காரன் மட்டும்தான் போய் படித்தான். ஆசிரியர் வீட்டுக்குப் போய் துணிமணி துவைத்துக் கொடுப்பதோடு அவருக்கு எல்லாவிதமான வேலைகளையும் செய்யவேண்டும்; இதற்கிடையில் அவர் கொஞ்சம்நேரம் திருக்குறள் சொல்வார்; வேறு ஏதாவது கற்பிப்பார். அப்பொழுதெல்லாம் ஸ்லேட் இல்லை, பேனா பேப்பர் இல்லை, புத்தகம் இல்லை. அக்காலத்தில் எல்லாம் மனப்பாட்டுத்தான். அந்த மாதிரியான திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தான் போய் படித்தார்கள். அப்போது ஆசிரியர் கணக்காயர் என்று அழைக்கப்பட்டார். ஆனால் ஆங்கிலேயர் வந்தபிறகு, பொதுவான இடத்தில் பள்ளிக்கூடத்தை அமைத்து அனைவரும் பள்ளிக்குச் செல்லும் நிலையை உருவாக்கினர். உயர்சாதிகாரன்தான் என்றில்லாமல் அனைவரையும் படிக்கவைத்தனர். ஆசிரியர் பள்ளிக்கூடம் இருக்கும் இடத்திற்கு சென்று பயிற்றுவித்தார். ஆசிரியர் வீட்டுக்கு மாணவர்கள் சென்று படிக்க வேண்டியதில்லை. எல்லோரும் பொதுவான ஒரே இடத்தில் சென்று படிக்கலாம் என்ற நிலை உருவானது.

இதற்கு முன்பு ஆசிரியர் கணக்காயர் என்று அழைக்கப்பட்டார். கணக்காயர் என்பது சங்ககாலப் பெயர். மதுரை கணக்காயர் மகனார் நக்கீரர். ஆசிரியருக்கு கணக்கு தெரிந்திருக்கவேண்டும் என்பதனால் அவர் கணக்காயர் என்றழைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. ஆயிரம் மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் குலபதி நக்கண்ணனார். சங்ககாலத்தில் இருந்து என்ன பாடம் சொல்லிக்

கொடுத்தார்கள்? இலக்கியம், இலக்கணம், கணிதம், வானவியல் போன்றவை பாடமாக இருந்தன. வானவியல் என்றால் நட்சத்திரங்களின் இயக்கம் பற்றிய பாடம். ஆனால் பதினாறு குதிரைகள் பூட்டிய தேரில் சூரியன் அமர்ந்து சுற்றி வருவாராம்; இவர்களெல்லாம் உட்கார்ந்திருப்பார்களாம்; அந்த மாதிரி கதையெல்லாம் விட்டாங்க. அதைத்தான் வானவியல் என்று அந்தக் காலத்தில் சொல்லிக் கொடுத்தார்கள்.

பெண்கல்வி அந்தக் காலத்தில் கிடையாது. பெண்கள் படிக்கக்கூடாது. அதுதான் ஒழுக்கம். ஒழுக்கநெறி என்பதெல்லாம் கட்டுப்படுத்துவதற்குதான். சோழரும், பல்லவரும் வடமொழிக் கல்லூரிகளை அமைத்தார்கள். பாண்டியரும் அதைத்தான் ஆதரித்தனர். தமிழ்க் கல்லூரிக்கு நன்கொடை அளிக்காமல், வடமொழிக்குத்தான் நன்கொடை அளித்து ஆதரித்தனர். 14 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டில் தமிழன் ஆட்சிச் செய்யவில்லை. ஆகவே தமிழில் படிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அதன் விளைவு, தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி, அரபு, பாரசீகம் போன்ற பல மொழிகளில் பயின்றனர்.

1800 இல் ஆங்கிலேயர் இருந்தபோதுதான் சென்னை மாகாணம் முதன்முதலில் உருவாக்கப்பட்டது. 1822 இல் தாமஸ் மன்றோ கவர்னராக இருந்தபோது அவர் ஓர் ஆய்வை மேற்கொண்டார். தமிழ்நாட்டில் மொத்தம் 12,498 திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்ததாக அறிந்து கொண்டார். இவை போதாதென்று மாவட்டத்திற்கு இரண்டு பள்ளிக்கூடங்கள் தொடங்கினார். அவற்றில் ஒன்று இந்துக்களுக்கு என்றும் இன்னொன்று முஸ்லீம்களுக்கு என்றும் ஒதுக்கப்பட்டது. அவற்றில் தமிழ்மொழியில் பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டது. தமிழ்மொழியில் பயில்வதையே மாணவர்கள் பெரிதும் விரும்பினார்கள். விருத்தாச்சலம், மாயவரம் போன்ற பகுதிகளில் தமிழில் பயில்வதையே விரும்பி வரவேற்றார்கள்.

1835 இல் மெக்காலே இந்தியாவிற்கு எத்தகைய கல்வி அளிக்கவேண்டும் என்ற அறிக்கையைக் கொடுத்தார். அப்போதிருந்த ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்திற்கு வேலை பார்ப்பதற்கு தேவையான கல்வியை அளித்தார். இந்தியர்களுக்குக் கல்வி அளிக்கவேண்டும் என்ற நோக்கம் அவருக்கு இல்லை.

பல்வேறு போராட்டங்கள் நடத்தியதன் விளைவாக, நீதிக்கட்சி ஆட்சியில் இருந்தபோது, சென்னைப் பல்கலைக்கழக செனட்டில் தமிழ் ஆர்வலர்கள் இடம் பெற்ற பிறகு அவர்கள்

முயற்சியால்தான் தமிழைப் பாடமாக வைத்தார்கள். அப்போது மருத்துவப் படிப்பு படிக்கவேண்டுமென்றால் சமஸ்கிருதம் படித்தாக வேண்டும். ஆனால் தமிழ் படிக்கக்கூடாது என்று சொன்னார்கள். இதை மாற்றவேண்டுமென்று சென்னைப் பல்கலைக்கழகம் தீர்மானம் இயற்றியது. 1938 இல் சுப்புராயன் கல்வி அமைச்சராக இருந்த போதுதான் அதுவரை அமுலிருந்த ஆங்கில பயிற்றுமொழியை நீக்கிவிட்டு முதன்முதலாக தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு வந்தார்.

சி.சுப்பிரமணி இருந்த காலத்தில் தமிழ் ஆட்சிமொழியாக வருவதற்கு சட்டமன்றத்தில் அதற்கானத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தமிழ் ஆட்சிமொழியாகவும் பயிற்றுமொழியாகவும் வருவதற்கு வழிகோலியது. அப்பொழுது தமிழ் பயிற்றுமொழியாக வரக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அப்போது அண்ணா, 'தமிழைப் பாடமொழியாக்கவேண்டும் என்று சொல்வது இந்த நாட்டிலேதான் தேவைப்படுகிறது. ஆங்கில நாட்டில் ஆங்கிலம் பாடமொழியாக வேண்டும் என்று சொல்லத் தேவை எழவில்லை. எந்த நாட்டிலும் இல்லாத விந்தை இந்த நாட்டிலே இங்கேதான் இருக்கிறது' என்று சொன்னார். தமிழ்நாட்டில் படிப்பது குற்றமா? எந்த பக்தவத்சலம் மீது நாங்கள் போராட்டம் நடத்தினோமோ அவர்தான் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டுவந்தார். காங்கிரஸ் ஆட்சியில் செய்த இந்த நல்ல செயல்பாடுகளை பாராட்டுகிறோம்.

மகாத்மா காந்தியும், நேருவும் அந்தந்தப் பகுதிகளில் தாய்மொழிக் கல்வியே இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். சுதந்திரப்போராட்டத் தலைவர்களும் வலியுறுத்தினார்கள். அண்ணாவும் தொடர்ந்து வலியுறுத்தினார். சி.சுப்பிரணியம் 'தமிழால் முடியும்' என்று ஒரு நூல் எழுதினார். எந்தப் பாடத்தையும் தமிழில் சொல்லித்தரமுடியும் என்று சொன்னார். தமிழர்களுக்கு, தமிழ் நாட்டில், 'தமிழால் முடியும்' என்ற நூல் எழுதிக் காட்டவேண்டிய நிலைமை இருக்கிறது என்று அண்ணா கவலைப்பட்டார்.

தமிழைப் பாடமொழியாக்கலாம் என்று சொன்னபோது சிலர், தமிழில் என்ன இருக்கிறது? திருக்குறள் இருக்கிறது; இராமாயணம் இருக்கிறது; தேவாரம் இருக்கிறது; திருவாசகம் இருக்கிறது. இவைகளைத் தவிர வேறு என்ன இருக்கிறது பாடங்கள் சொல்லிக் கொடுக்க என்று கேட்டார்கள். நம்மில் சிலர்

சரித்திரத்தை ஆங்கிலத்தில் தான் படிக்கமுடியும் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு தமிழில் எல்லாவற்றையும் கொண்டுவரமுடியும் என்று அண்ணா உறுதிபடக் கூறினார். பூகோளத்தை ஆங்கிலத்திலே படிக்கமுடியும். மருத்துவத்தை ஜெர்மன் மொழியிலேதான் படிக்க முடியும் என்ற மனப்பாங்கு நீங்கவேண்டுமென அண்ணா கூறினார்.

ஆனால் அண்ணா முதலமைச்சராக வந்தபிறகு சட்ட மன்றத்தில் ஆங்கிலத்தின் அவசியத்தைப் பற்றி கூறினார். நமக்கு ஆங்கில அறிவுப் புலமை இல்லாமல் போனால் உலகத்திற்கு நமக்கும் உள்ள தொடர்பு நல்ல முறையில் இருக்காது என்று சொன்னார். "துணைவேந்தரை கலந்து தமிழைப் பாடமொழியாகவும் பயிற்று மொழியாகவும் ஆக்கினால் ஆங்கில அறிவு குறையும் என்று கருதினால் ஆங்கில அறிவு அதிகப் படுத்த என்ன வழிகளை மேற்கொள்ளலாம் என்பதை ஆராய்ந்து ஆங்கில அறிவும் கெடாமல் தமிழ் வளமையும் பாதுக்காக்கக்கூடிய அளவில் நம்முடைய கல்வித் திட்டம் திருத்தியமைக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று அண்ணா தெளிவாகக் கூறினார்.

முன்பு சி.சுப்பிரமணியம் கல்வி அமைச்சராக இருந்தபோது 'நான் போட்டிருக்கும் கல்வித்திட்டம் இரு தண்டவாளங்களைப் போல. ஒரு தண்டவாளம் தமிழ். இன்னொன்று ஆங்கிலம். ஆங்கிலத் தண்டவாளம் இல்லையென்றால் ஒரு தண்டவாளத்தை வைத்துக் கொண்டு இரயில் ஓட்டமுடியாது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றமுடியாது. ஆங்கிலத்தை நாட்டை விட்டு விரட்டவேண்டும் என்று அவர் சொல்லவில்லை.

'தமிழ் பயிற்று மொழி வந்துட்டா இந்தி ஆட்சி மொழியாக வந்துவிடும். அதனால் ஆங்கிலமே இருக்க வேண்டுமென இராஜாஜி சொல்றார். இது சரியா' என்று காமராசர் கேட்டார். இதற்கு 'வட்டார மொழிகளின் பெயரால் இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணிக்க முயற்சி நடக்கிறது என்ற அச்சம் இருக்கத்தான் செய்கிறது. இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சிமொழிதான் என்று அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும். அப்படி செய்தால்தான் வட்டார மொழிகள் பல்கலைக் கழகப் பாடமொழி ஆவதைப் பற்றி எழுந்துள்ள அச்சம் விலகும்' என்று அண்ணா பதிலளித்தார்.

1963 ஆம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டம் வரவில்லை என்றால் ஆங்கிலம் இருக்காது. அண்ணாவின் நாடாளுமன்ற பேச்சில், குறிப்பாக ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தின்மீது ஆற்றிய உரையைக் கூர்ந்து கவனித்தால் எட்மண்ட் பர்க் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எவ்வாறு பேசினாரோ அதைவிட அருமையாகப் பேசினார் என்பது புலனாகும். எப்படியாவது தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்கவேண்டுமென அண்ணா விரும்பினார். அதனால் 1968 ஆம் ஆண்டு, சனவரி 23 ஆம் நாளில் கூடிய சட்டமன்ற கூட்டத்தில் 'தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கைதான் இருக்கும். தமிழ், ஆங்கிலம் இரண்டும்தான் இருக்கும். இந்திக்கு இங்கு இடம் இல்லை' என்று தீர்மானம் இயற்றினார். இவ்வாறு தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையின் அடிப்படையில் ஆட்சிமொழி, பயிற்றுமொழி நடைமுறைக்கு வந்தது.

தமிழ்நாட்டில் தமிழ் ஆங்கிலம் மட்டும்தான். தமிழ்நாட்டில் இருமொழி என்பது மகாசாசனம்தான். மாணவர்கள் நாங்கள் அப்படித்தான் கருதினோம். அண்ணா மாணவர்கள் நலனில் ஈடுபாடு கொண்ட காரணத்தில் அவர்கள் மீது அளவற்ற அன்பு காட்டினார். அதனால்தான் அண்ணா 'இரத்தத்தின் இரத்தம்' என்று சொன்னார். அதற்காகவே அறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலம் இல்லாமல் அடையார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தபோது மாணவர்களெல்லாம் தங்கள் இரத்தத்தை காணிக்கையாக்க முன் வந்தார்கள். அப்போது அறிஞர் அண்ணா அவர்களுக்கு இரத்தம் கொடுத்தவர்களுள் நானும் ஒருவன் என்று கூறி விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

# நிறைவுரை

## நீதியரசர் பு.இரா. கோகுலகிருட்டிணன்

மரியாதைக்குரிய முனைவர் கரு. அழ. குணசேகரன் அவர்களே, கருத்தரங்கில் உரையாற்றிய ஆன்றோர்களே, வருகை தந்துள்ள பேராசிரியர்களே, அன்பு மாணவ, மாணவிகளே, பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை கருத்தரங்கிற்கு வருகை தந்துள்ள உங்கள் யாவருக்கும் என் வணக்கம்.

இவ்வாண்டு அண்ணாவினுடைய நூற்றாண்டு விழா. அந்த விழாவினுடைய நிறைவு விழாவாக இன்றைய தினம் இந்த அறக்கட்டளை கொண்டாடுகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பேரறிஞர் அண்ணா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம். உலகத் தமிழர்களுக்கு மாநாட்டை பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட்டிப் பெருமிதம் அடைந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலும், அதற்குப்பின் வந்த முதலமைச்சர்களும் உலகத் தமிழ் மாநாடுகளை யாவரும் மகிழும் வண்ணம் நடத்திக் காட்டினார்கள். இத்தகைய மாநாடுகள் தமிழர்களுடைய பண்பாட்டை இலக்கியச் செறிவை இன்தமிழின் உயர்வை பாருக்குப் பறைசாற்றப் பெரிதும் பயன்படுகிறது

பேரறிஞர் அண்ணா ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்து சமுதாயம் போற்றும் மாமனிதராக வளர்ந்தார். தந்தை பெரியாரை தலைவராகக் கொண்டு சமுதாயச் சீர்திருத்தத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். உலகிலேயே ஒரு உன்னதமான நாகரீகத்திற்கு சொந்தக்காரர்களான திராவிட சமுதாயம் சீர்கெட்டு சிதைக்கப்பட்டிருப்பதை, அண்ணா அவர்கள் உணர்ந்தார். அந்த இனத்தின் முன்னேற்றத்திற்கு அல்லும் பகலும் உழைத்தார். உலக மொழிகளிலேயே ஈடு இணையற்ற மொழி தமிழ்மொழி என்பதை உணர பல இலக்கியங்களை கற்றுத் தெளிந்தார். எத்தனையோ தலைவர்கள் தோன்றியுள்ளனர் இவ்வுலகில். அவர்களில் சிலர்தான் கல்வியறிவோடு அனுபவ அறிவும் பெற்றவர்கள். அந்தப் பட்டியலிலே வந்தவர் பேரறிஞர்

அண்ணா. அவர் தொடாத பொருளே இல்லை. அதனை மக்களுக்கு எடுத்துச் சொல்லாத மேடைகளே இல்லை. ஆகவேதான் அவரை அனைவரும், பேரறிஞர் அண்ணா என்று அழைத்தனர். சிலர் அறிவும் ஆற்றலும் பெற்றிருப்பர். ஆனால் அகம்பாவம் நிறைந்திருக்கும். ஆனால் அண்ணா அவர்கள், ஆன்றவிந்த பெரியவர். ''அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்'' என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

அண்ணா அவர்கள் தனக்குள்ள ஆற்றல் மிகுதியால் ஒரு மாபெரும் இயக்கத்தையே துவக்கினார். அந்த இயக்கத்திற்கு 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரையும் சூட்டினார். அந்தக் காலக்கட்டத்தில் சனாதனிகளின் கை ஓங்கியிருந்த காலம். வருணாசிரம நிலையில் திராவிட சமுதாயம் கீழ்நிலையில் முடங்கிக் கிடந்த நேரம். அறிவாற்றல் இல்லாத சமுதாயமாக தமிழர் சமுதாயம் வாழ்ந்த காலம். தங்களுடைய இலக்கியம், நாகரீகம் தரணிக்கு எடுத்துரைத்த சீரிய பண்பாடுகள் இவற்றையெல்லாம் மறந்து ஆமைகளாய், ஊமைகளாய் தமிழர்கள் வாழ்ந்த நேரம். இதைத் தவிர, திராவிட உணர்வைத் தூண்டிய பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் பகையை சம்பாதித்த வேளை. இந்தக் கால கட்டத்தில்தான் அண்ணா அவர்கள் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற இயக்கத்தை 1949இல் துவக்கினார். அண்ணாவின் எழுத்தும் பேச்சும் எண்ணற்ற இளைஞர்களை அவர்பால் ஈர்த்தது. சமுதாயத்தை விழிப்புணர்வு அடையச் செய்த பெருமை அண்ணாவின் ஆற்றல் என்றால் அது மிகையாகாது. அவருடைய செயல்பாடுகள் வீழ்ச்சியுறு தமிழகத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. மாற்றாரும் அண்ணாவின் அறிவாற்றலைப் போற்ற ஆரம்பித்தனர். அண்ணாவின் அழைப்பில் எண்ணற்ற இளைஞர்கள் அவர் தலைமையில் பணியாற்றக் கூடினார்கள். அதிலே ஒருவன்தான் நானும். இறைவனைப் பற்றி அண்ணாவின் பிரச்சாரத்தில் திருமூலரின் ஒப்பற்ற தத்துவமான ''ஒன்றேகுலம் ஒருவனே தேவன்'' என்ற தத்துவத்தைக் கண்டேன். சாதிகள் ஒழிய வேண்டும் என்பதிலே அண்ணாவின் உறுதிப்பாடு கொண்ட பிரச்சாரத்தையும் கேட்டு மகிழ்ந்தேன். தமிழரும் தமிழும் நம்முடைய தொன்மை நாகரீகமும் அண்ணாவின் பிரச்சாரத்தால் உலகுக்கு அறிய வாய்ப்பு ஏற்பட்டது. பொய்யை எவ்வளவுதான் திரும்பத் திரும்பச் சொன்னாலும் அது ஒரு காலக் கட்டத்தில் சிதைந்து விடும். ஆனால் உண்மை அப்படியல்ல. திராவிட இனம்

வளர்ந்ததும், உலகத்தோர் போற்றும் அளவிற்கு அந்த இனம் தன்னுடைய இலக்கிய வளத்தைப் பெருக்கியதும், எண்ணற்ற கலைஞர்களுக்கு தமிழகம் இருப்பிடமாக இருந்ததும், வீரத்திற்கும் விவேகத்திற்கும் தமிழகம் கருவூலமாக அமைந்ததும், சரித்திர உண்மையாகும். அதற்கான சான்றுகள் ஏராளம் தமிழகத்தில் இன்றும் மறையாமல் இருக்கிறது என்பதும் உண்மை. இவைகளையெல்லாம் படித்து எடுத்துரைப்பார் இன்மையால் தமிழகம் தாழ்ந்தது. எடுப்பார் கைப்பிள்ளையாக தமிழர்கள் வாழ்ந்தார்கள். எது ஆன்மிகம் என்ற உணர்வில்லாமல் மூடப்பழக்க வழக்கங்களில் திளைத்தார்கள். இப்படி தாங்களே போட்டுக் கொண்ட அடிமைத்தளைகளை உடைத்தெறிந்த பெருமை, தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் உண்டு.

சமுதாயம் சீரடைந்தால், நம்முடைய வீழ்ந்த பண்பாடு திரும்பவும் கோலோச்ச முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் தந்தை பெரியார் அவர்கள். அவரை தலைவராகப் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், இதற்கு மேல் ஒரு படி சென்று, சமுதாயச் சீர்திருத்தத்திற்கு, சமுதாயப் பணி மட்டும் போதாது, அரசியலை, கைப்பற்றி ஆதிக்கமும் கையிலே இருந்தால் நாம் எண்ணுகின்ற சீர்திருத்தத்தை, தமிழர்களுடைய மேம்பாட்டை, இலக்கிய வளத்தை எடுத்துரைக்க சிறப்பான வாய்ப்புகள் கிட்டும் என்பதில் நம்பிக்கை கொண்டார். ஆகவே, சமுதாய இயக்கமாக மட்டுமல்லாமல் அரசியலிலே இவ்வியக்கம் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தந்தை பெரியாரின் கருத்திலிருந்து சிறிது மாறுபட்டு கழகம் அரசியலிலேயும் இறங்கவேண்டும் என்ற எண்ணத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை நம் தமிழ்நாட்டிலே நிலைநாட்டினார். அதன் காரணமாக 1949லே ஆரம்பிக்கப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் 1967லே ஆட்சியைப் பிடித்தது என்றால் அண்ணாவினுடைய அயராத உழைப்பும், அறிவாற்றலும் யாவரையும் அரவணைத்து அனுசரித்துப் போகும் பண்பாடும், அத்துணை தோழர்களையும் தொண்டர்களையும் தன்னுடைய தம்பிகளாகக் கருதும் மனப்பாங்கும் அண்ணாவின் வெற்றிக்குக் காரணமாக இருந்தன.

தனக்குப் பின்னால் எந்தவித தயக்கமுமில்லாமல், தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி சமுதாயத்தைச் செம்மைப்படுத்த சிறந்த தொண்டர்களைத் தலைமை ஏற்கும்

பண்புள்ளவர்களை அண்ணா அவர்கள் தன்னுடைய காலக் கட்டத்திலேயே உருவாக்கினார்கள். அதனுடைய வெளிப்பாடு தான் இன்றைய அரசியல்.

இன்றைக்கும் நம் சமுதாயத்தைப் பார்க்கிறோம். அரசியலைக் காணுகிறோம். இன்றைக்கும் கை ஓங்கி நிற்பதும் பெரியாருடைய தத்துவங்களும் அண்ணாவினுடைய அரசியல் ஆற்றலும்தான். அண்ணா அவர்களின் பெயரைச் சொல்லிதான் இங்கு கட்சிகள் இயக்க முடியும். அதுதான் தமிழருடைய அடிப்படைப் பண்பாடு. அண்ணா விட்டுச் சென்ற அருமையான தத்துவங்களைத் தான் தமிழன் தலைதூக்கி நிற்க சிறந்த வழிகாட்டி என்பதனை அனைவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய நாட்டைப் பொறுத்தவரை பல்வேறு மொழிகள், பலதரப்பட்ட பண்பாடுகள் வாழும் இடம். இவை எல்லாம் ஒன்று சேர்ந்ததுதான் இந்தியநாடு. ஒருவர் மொழியையோ, ஒருவர் பண்பாட்டையோ அடக்கி விடலாம் என்று கருதுவதும் அறிவின் பாற்பட்ட ஒன்று அல்ல. அதே நேரத்தில் தனித்தனியாக அவரவர்கள் இயங்கலாம் என்று படைக்கலன்கள் நிறுவகிப்பதற்கும் வெளிநாட்டு உறவுகளை வைத்துக் கொள்வதற்கும் ஒவ்வொரு இனமும் முயலுமானால் நாட்டினுடைய பாதுகாப்பிற்கு ஊறு செய்யும் என்பது உறுதி. இந்த நிலையை நன்றாக உணர்ந்த அண்ணா அவர்கள் federalism என்ற தத்துவத்திற்கு மிகுந்த ஆதரவை அளித்தவர்.

எனக்குள்ள ஒரே மகிழ்ச்சி என்னவெனில், எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு உயர்ந்த மாமனிதராக வளர்ந்திருந்த அண்ணாவுடன் தொடர்புகொள்ள முடிந்ததே என்பதுதான்.

நான் மாநிலக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் அங்கு தமிழ்ச் சங்கத்தை நிறுவி, அதற்கு செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றேன். அதன் துவக்க உரையை மறைந்த தமிழ் அறிஞர் இரா.பி. சேதுப்பிள்ளையைக் கொண்டு துவக்கி வைத்தேன். இந்த தமிழ்ச் சங்கம் துவங்குவதற்கு நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் பட்ட கஷ்டங்களும் ஏராளம். உயர்ந்த குலத்தில் பிறந்தவர்கள் அதிக அளவில் ஆசிரியர்களாகவும் மாணவர்களாகவும் இருந்த இடம் மாநிலக் கல்லூரி. தமிழ் வளர்ச்சியில் அதிகமாக நாட்டம் இல்லாதவர்கள். அத்தகைய இடத்தில், ஆர்வமுள்ள பலரைக் கொண்டு தைரியமாக தமிழ்ச் சங்கத்தை துவக்கியதோடு மட்டுமல்லாமல்

பல எதிர்ப்புகளைத் தாங்கி நிரந்தரமான ஒரு தமிழ்ச் சங்கத்தை மாநில கல்லூரியிலே ஏற்படுத்தினேன் என்று எண்ணுகிறபொழுது என் உள்ளம் நெகிழ்கிறது. இதற்கெல்லாம் காரணம் அண்ணா அவர்கள் தூண்டி விட்ட தமிழ் உணர்வுதான். அந்த பெரியவரை மாநிலக் கல்லூரியிலே பேச வைக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கிருந்தது அக்காலங்களில் கல்லூரிகளில் வெளியிருந்து பேச வருபவர்கள் இருந்தால் அந்தந்த துறையைச் சார்ந்த தலைமை பேராசிரியர்களை அணுகி அவர்களுடைய ஒப்புதல் பெறவேண்டும். அப்படிப்பட்ட ஒப்புதலை தமிழ் துறையிலே தலைவராக இருந்த விஸ்வநாத அய்யரிடம், தமிழ்ச் சங்கத்திற்கு பெறவேண்டியிருந்தது. அண்ணா அவர்களை அழைக்கிறேன் என்று சொன்னவுடன், முதலில் மறுப்பு தெரிவித்து பிறகு ஒப்புக் கொண்டார். அவர் ஏதாவது பேசிவிடுவாரோ என்று என்னை பலமுறைக் கேட்டார். இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அண்ணாவிடம் சொல்லி, நான் அண்ணாவை சொற்பொழிவாற்ற கேட்ட பொழுது, தயக்கமில்லாமல் அண்ணா அவர்கள் ஒத்துக் கொண்டார். ஒத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் தான் பேசுகின்ற தலைப்பையும் எனக்கு கொடுத்தார். நான் வந்தால் என்ன பேசுவேனோ என்று அச்சப்படும் உன்னுடைய தலைமை பேராசிரியரிடம், நான் 'அச்சம்' என்ற பொருள்பற்றி பேச விழைகிறேன் என்று தெரிவி என்று சொன்னார். பிறகு அதே தலைப்பிலேயே பேசினார். கேட்பதற்கு நூற்றுக் கணக்கான மாணவர்கள் குவிந்தனர். மாநிலக் கல்லூரியின் ஆசிரியர்கள் பலர் வந்து கேட்டனர். அண்ணாவினுடைய நாகரீகமான பேச்சைக் கேட்டு மகிழ்ந்ததோடு மட்டுமல்லாமல் அண்ணா ஒரு பண்பாளர், எதை பேசவேண்டுமோ அதை மாணவர்களிடம் பேசினார்கள். பிறர் மனம் கோணாதுபடி பேசினார்கள். சிறந்தவைகளைப் பற்றி எடுத்து விளக்கினார்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால், அண்ணா ஒரு 'பிறவி அறிவாளி' என்று மாநிலக் கல்லூரி பேராசிரியர்கள் பலர் என்னிடத்திலே சொன்னார்கள்.

தமிழிசை மங்கிக் கிடந்த காலங்களில், மாபெரும் புரட்சியைச் செய்தவர் இராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள். வீழ்ந்துவிட்ட தமிழிசையை, விடப்பட்ட திருமுறைகளை தூக்கி நிலைநிறுத்தியவர்தான் செட்டி நாட்டரசர். 1943இல் தமிழிசைச் சங்கத்தை சென்னையிலே நிறுவியர். ஒருமுறை அண்ணா அவர்கள் தமிழிசைச் சங்கத்தில்

சொற்பொழிவாற்றுகின்றபோது, சோழன் சபையிலே, 'சல்சல்ரே நௌ ஜவான்' என்ற பாட்டு பாடப்படவில்லை. பாண்டியன் சபையிலே, 'எந்தரோ மகானுபாவரு' என்ற பாட்டு பாடப்படவில்லை. அப்போது பாடப்பட்டவை எல்லாம் தமிழ்ப் பாடல்கள். அவை எங்கே மறைந்தது, எப்படி மறைந்தது என்ற வினா எழுப்பினார். இப்படி இலக்கிய உலகில், இசை உலகில், அறிவியல் உலகில் தமிழுக்கே மிகுந்த ஆக்கத்தை கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா மட்டும் இந்த சமுதாயத்தில் பிறந்திருக்காவிட்டால், நான் பெருமைக்காகச் சொல்ல வில்லை, நம்முடைய சமுதாயம் அதனுடைய முகவரியை மறந்திருக்கும்.

அண்ணாவைப் பற்றி பேசிக் கொண்டே செல்லலாம் ஒரு நாளில் அல்ல இரு நாட்களில் அல்ல, காலம் பூராவும் அவர் நம் சமுதாயத்திற்கும், மொழிக்கும், பண்பாட்டிற்கும் செய்த உதவிகளை பணபலமில்லாமல், மிட்டா மிராசுகளுடைய உதவி இல்லாமல், ஒரு சமுதாயத்தை தட்டி எழுப்பி தமிழ் உணர்வை ஊட்டி, ஒரு ஆட்சியை அண்ணா அவர்கள் பிடித்தார்கள் என்றால் அவருடைய ஆற்றலும், விவேகமும், எந்த அளவிற்கு உயர்ந்தது என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்.

''வாய்மையே வெல்லும்'' என்ற வாசகத்தை உண்மையாக்கியவர் அண்ணா அவர்கள். அவர் பேச்சிலே உண்மை இருந்த காரணத்தினால் தமிழ் சமுதாயத்தை அவரால் ஈர்க்க முடிந்தது. தமிழ் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி இந்த தமிழ் தரணியின் முதலமைச்சராகவும் நிர்வகித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்த சட்டத் திருத்தங்கள் ஏராளம். அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் ஒவ்வொரு அலுவலகங்களிலும் அந்தந்த அலுவலகங்களிலுள்ள உயர் அதிகாரிகளின் அறைகளிலே ஏராளமான கடவுள் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. எம்மதத்தையும் சாராத அரசியல் என்று அரசியல் பிரகடனம் சொல்லுகின்றபோது, பல கடவுளர்களின் படங்களை மாட்டி வைத்திருப்பது தவறு என்று சொல்லி அத்தகைய படங்களை அலுவலகங்களிலிருந்து எடுக்கச் செய்தவர் அண்ணா அவர்கள். 'தமிழுக்கு அமுது என்று பெயர், அது உங்கள் உயிருக்கு நேர்' என்று வார்த்தைகளால் சொல்வது மட்டும் போதாது இந்த பரந்து விரிந்த நாட்டிற்கு ''தமிழ்நாடு'' என்று பெயர் சூட்டவேண்டும் என்று சொன்னதோடு

மட்டுமல்லாமல் செய்து காட்டியதும் அண்ணாதான். அந்த காலக்கட்டத்தில் அண்ணாவிடம் பலர் கேள்வி கேட்டனர்''. சென்னைபட்டிணத்தை 'தமிழ்நாடு' என்று மாற்றுவதிலே என்ன கண்டீர்கள்? என்றனர். அதற்கு அண்ணா அவர்கள் இறுத்த பதில், மேல்சபை என்று இருந்த மத்திய சபையை 'இராஜ்ய சபா' என்று மாற்றினார்களே, 'கீழ்சபை' என்று இருந்த மக்கள் சபையை 'லோக் சபா' என்று மாற்றினீர்களே அதிலே என்ன இருந்தது? என்ற பதில் கேள்வியைக் கேட்டார். அண்ணாவை எதிர்த்தவர்களுடைய வாய் அடைக்கப்பட்டது. ஒருமுறை அண்ணா அவர் ஜப்பான் நாட்டிற்கு சென்றிருந்தார். ஜப்பானியர்கள் அண்ணாவை கேட்டார்கள். ''உங்கள் நாட்டிலே பலதரப்பட்ட மொழிகள், பல மதங்கள் இருக்கின்றனவே, இவைகளையெல்லாம் எப்படி சமாளிக்கிறீர்கள்?'' என்றனர். அதற்கு அண்ணா அவர்கள் சொன்ன பதில் ''ஜப்பான் நாட்டிலே பல இடங்களில் குமுறும் எரிமலைகள் உள்ளனவே, அவைகளையெல்லாம் சகித்துக் கொண்டிருக்கிற உங்களை விட எங்கள் நாட்டிலே மொழியாலும், மதத்தாலும் பெரிய அபாயங்கள் இல்லை'' என்று கூறினார். ஒருமுறை சட்டசபையில், எதிர்க்கட்சியிலே அண்ணா அமர்ந்திருந்த போது கட்சிகளுக்குள் வாதம் ஏற்பட்டது. ஒரு கட்சிக்காரரர் சொன்னார். ''எங்களுடைய ஆட்சியில் புளியினுடைய விலை இறங்கியிருந்தது'' என்று. ''இல்லையில்லை எங்களுடைய ஆட்சியில்'' என்று மற்றவர்கள் சொன்னார்கள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அண்ணா, புளிவிலை குறைவதற்கு நாம் காரணமல்ல, புளிய மரம் அதிகம் காய்க்க ஆரம்பித்துவிட்டது. அதனால்தான் புளிவிலை குறைந்திருக்கிறது என்று சொன்னார். அண்ணா அவர்கள் பதவியேற்றபோது, ''இறை தத்துவத்தைப் பற்றி நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?'' என்றார்கள். அதற்கு அண்ணா சொன்னது ''நான் பிள்ளையாரையும் உடைப்பது கிடையாது, அவருக்குத் தேங்காயும் உடைப்பது கிடையாது'' என்றார்.

அண்ணாவைப் பற்றி இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு புத்தகத்தில் அழகான ஒரு பகுதியை படித்தேன். அதிலே ஒரு கவிஞர் அழகாக எழுதியிருந்தார். அந்த கவிஞரின் பெயர் பல்லவன். அந்த கவிதை ''அன்பகத்தைக் காட்டுகின்ற கருணைக் கண்கள். அறிவகத்தைச் சுட்டுகின்ற அகன்ற நெற்றி, நேர்மையுடன் சென்று எதையும் தாங்கும் நெஞ்சம், மேதை என அறிவிக்கும் அடுக்குப் பேச்சு, புன்னகைக்கும் வெற்றிலை கொதப்பும் செவ்வாய்.

பொடியோடும் தொடர்பு கொள்ளும் மூக்கடைப்பு தென்னகத்தையே அளந்து வந்த வைரக்கால்கள் தெரிகிறதா? அண்ணாதானே'' என்று முடிக்கிறார்.

அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள் நாம் அத்தனை பேரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளே. ஆனால் ஒரு தாய் வயிற்றிலே இத்தனை பேரும் பிறக்கமுடியுமா? இல்லை முடியாது. அதைத்தான் பல்லவன் என்ற கவிஞர் சொல்கிறார். ''சொந்தமிகு ஒரு தாயின் வயிறு நம்மை சுமப்பதற்கு முடியாத காரணத்தால், பந்தமுடன் தனித்தனியே தாய் வயிற்றில் பாசமுடன் பிறந்துவிட்டோம்'' என்று.

அண்ணாவினுடைய பகுத்தறிவு பிரச்சாரத்தை நம்மிலே சிலர் சரியாக உணர்ந்து கொள்வதில்லை. பகுத்தறிவு என்பது இறைத்தத்துவத்தை தூற்றுவது அல்லது பிறர் சொல்வதை எதிர்ப்பது மட்டுமல்ல. எவை எவை நல்லவையாக இருக்கின்றதோ, எவை எவை நாட்டிற்கு உகந்ததோ அவைகளை பாராட்டுகின்ற தன்மைகளை நீங்கள் பெற்றால்தான் சிறந்த பகுத்தறிவு வாதிகள் ஆவீர்கள். அதைத்தான் அண்ணா சொன்னார். எனக்கு ஒழுக்கம் தான் பெரியது. உங்களுக்கு பணம் இருக்கலாம், பதவி இருக்கலாம். ஆனால் ஒழுக்கமற்ற நிலைமையில் யாராக இருந்தாலும் கண்டிக்கக் கூடிய பொறுப்பு மாணவர்களுக்கு உண்டு என்பதை அண்ணா வலியுறுத்தி பலமுறை கூறியிருக்கிறார்கள். தவறுகள் எங்கு நடந்தாலும் தட்டிக் கேட்க வேண்டும். இதைத்தான் தந்தை பெரியாரும் சொன்னார்.

இன்றும் சில மணித்துளிகளில் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். அண்ணா அவர்களுடைய சொற்பொழிவை பாரளுமன்றத்தில் முதல்முறையாக கேட்டவர்கள் வெகுவாக பாராட்டினார்கள். அவருடைய பேச்சு எப்படி இருந்தது என்பதை 16.2.1969 தேதிய 'Hindustan Time' என்ற பத்திரிக்கை வெகுசிறப்பாக வெளியிட்டுள்ளது. அது ஆங்கிலத்தில் அமைந்திருந்தது. அதற்கு நான் தந்த மொழிபெயர்ப்பு இதோ ''சலசலத்தோடும் ஆற்றின் ஒலியினை, உள்ளத்தை ஈர்க்கும் உன்னதப் பாடகர்களின் பாடலை, வண்டின் இசையை, கொட்டும் குளவியின் ரீங்காரத்தை, அழகிய பெண்ணின் குமிழ் சிரிப்பினை அண்ணாவின் சொற்பொழிவிலே காணலாம். இவற்றிற்கெல்லாம் மேலாக அண்ணாவின் சொற்பொழிவில் இடம்பெறும் அழகிய சொற்கள், உயர்ந்த

கோட்பாடுகள் மனதைமயக்கும் அடுக்கு மொழிகள், பிரமிக்கவைக்கும் உதாரணங்கள், இவற்றையெல்லாம் காணலாம்'' என்கிறது. இத்தகைய பெரியாருக்கு நாம் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம். கொள்கைப் பிடிப்பு என்றால் என்ன என்பதையும், நாம் எப்படி சாதாரண மனிதனாக வாழவேண்டும் என்பதையும் வாழ்ந்து காட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். உடல் நலிவுற்ற நேரத்திலும் கூட அமெரிக்காவிலிருந்து திரும்பியபோது, பங்களா வாசமும் வேண்டாம், பணத்தினுடைய படாடோபமும் வேண்டாம் என்று தன்னுடைய சொந்த வீட்டிலேயே முதலமைச்சராகப் பணியாற்றியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். எதையும் தாங்கும் இதயம் கொண்டவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை தன்னுடைய தாரகமந்திரமாக வைத்திருந்தார். நம்முடைய சமுதாயத்தை உயர்த்தி வாழ வழிகற்றுக் கொடுத்தவர். தமிழர்களின் பண்பாட்டையும் தமிழ்மொழியையும் அரியாசனத்தில் ஏற்றியவர்.

வாழ்க பேரறிஞர் அணணா! அவர்களின் புகழ். வளர்க நம்மவர்களின் தமிழ் உணர்வு. வணக்கம்.

# பேரறிஞர் அண்ணா

# நூற்றாண்டு விழா-தொடர் கருத்தரங்கச் சொற்பொழிவுகள்

30-10-2008 - 11-09-2009

# அண்ணாவின் அரசியல் நாகரீகம்

திரு. டி.கே.எஸ். இளங்கோவன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு மிகச் சிறந்த முறையிலே தொடங்கியுள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா, தொடர் கருத்தரங்கின் முதல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் நாட்டிலே நாகரீகமாக அரசியல் வளர்த்த தலைவர்கள் மிகக் குறைவான பேர். அதில் முன்னணியில் இருந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உலகத்திலே அரசியல் என்றால் என்ன? என்பதற்கு இதுவரை சரியான விளக்கம் சொன்னதில்லை. சனநாயக முறையை தோற்றுவித்த கிரேக்க, ரோமாபுரி பேரரசுகளில் சிந்தனையாளர்கள் எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். உதாரணமாக பிளேட்டோ சொல்லும் போது 'சனநாயகம் என்பது அனைத்துத் தரப்பு மக்களும் வாக்களித்து அமையக்கூடிய ஓர் அரசாங்க முறை என்று யாரும் கருதிடக்கூடாது. அறிஞர்கள் மட்டுமே வாக்களிக்க வேண்டும். ஏனென்றால் எல்லா மக்களுக்கும் அவ்வளவு திறமை இருக்காது. நல்ல அரசாங்கத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடிய அந்தத் திறமை இருக்காது' என்று சொல்லியவர்.

அறிஞர் சிசரோ மிகப்பெரிய வழக்கறிஞர். அந்த வழக்கறிஞன் தன்னுடைய நேர்மையான வாதத்தால் சமூகத்திற்கு எதிராக அநீதிகளை இழைத்தவர்களையெல்லாம் தண்டிக்கக்கூடிய, தண்டனை பெற்றுத்தரக்கூடிய அளவுக்கு வல்லமை வாய்ந்த வழக்கறிஞர். அரசியலியே ஈடுபடும் போது சொல்கிறார், ''அரசியல் என்பது அனைவருக்கும் நீதி செய்யும் களம் அல்ல. அது ஒரு தொழில். வெற்றி ஒன்றுதான் இலக்காக கொள்ள வேண்டும்'' என்று சொல்கிறார். ஆகவே ஒரு செயலே வெற்றி ஒன்று தான் இலக்காக இருக்க வேண்டும் என்றால் அந்த இலக்கை அடைய வழிமுறைகள் நம்முடைய வசதிப் படி

மாற்றிக்கொள்ள முடியும் என்றால் அங்கே அனைத்து விதமான குற்றங்களும் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆனால் அத்தகைய அரசியலிலே, நாகரீகமான முறையில் ஆட்களை எல்லாம் விமர்சனம் செய்யாமல், கொள்கைகளை விமர்சனம் செய்து, பிரச்சனைகளை விமர்சனம் செய்து அனைத்துத் தரப்பினரையும் நண்பர்களாக்கிக் கொண்ட திறமை யார் பெற்றிருந்தார்கள் என்றால் அத்தகைய பண்பினைப் பெற்ற அறிஞர் அண்ணா ஒருவராகத் தான் இருக்க முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதி வைத்ததில்லை. ஆனால் அவருடைய வாழ்க்கை வரலாறு சிறப்பாக விளங்கும். தனியாகப் படிக்கத் தேவையில்லை.

ஹிட்லர் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை 'மெயின் கேம்ப்' என்ற புத்தகத்தின் மூலம் எழுதி இருக்கிறார். ஆனால் ஹிட்லரின் எழுத்துக்களைப் படிக்கும்போது ஓர் ஈர்ப்பு ஏற்படும். அந்த மனிதன் எப்படி உயர்ந்தான் என்பதைப் பற்றி தெரிந்துக் கொள்ள முடியும். ஆனால், ஓர் நிர்வாகியாக, கொடுங்கோலனாக ஜெர்மனியை ஹிட்லர் ஆட்சி புரிந்தபோது எப்படி ஒரு மனிதன் இருக்கக்கூடாது. எப்படி ஒரு தலைவன் இருக்கக்கூடாது என்பது விளங்கும். ஆகவே, ஹிட்லர் எழுதிய வாழ்க்கை வரலாற்றுக்கும் ஹிட்லருடைய அரசியல் நடைமுறைகளுக்கும் வேறுபாட்டை பார்க்கிறோம். இப்படித்தான் பல தலைவர்களும், அவர்களுடைய வாழ்க்கை வரலாறு வேறாக இருக்கும். ஆனால், செயல்பாடு வேறாக இருக்கும். ஆனால், அண்ணாவைப் பொறுத்தவரை எதை எழுதி வைத்தாரோ, அவருடைய எழுத்துக்களை எல்லாம் நாம் படித்தபோது, இந்த மனிதன் இப்படி வாழ்ந்திருப்பார் என்பதை உணர்ந்து கொள்ளக்கூடிய வகையிலே, எதைச் சொன்னாரோ அதைச் செய்தார் என்ற நிலையிலே அரசியல் நடத்திய பெருந்தகையாளர் அறிஞர் அண்ணா அவர்கள். அவருடைய அரசியல் நாகரீகம் என்பது அவருடைய வாயினாலே சொல்லப்பட்டு ஒரு வரியில் அமைந்திருக்கிறது. 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்கிற அந்த ஒற்றை வரியிலே அவருடைய அரசியல் நாகரீகம் வெளிப்படும். என்னுடைய எண்ணம் எல்லாம் இந்த ஒற்றை வரியை விரிவாக்கி எந்த அளவுக்கு அரசியல் நாகரீகத்தை காத்தார் என்று சொல்ல வேண்டும் என்கிற ஆவலில்தான் உங்கள் முன்னே நிற்கிறேன்.

இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொருத்தவரை இங்கே காங்கிரஸ் தான் மிகப்பெரிய எதிர்க்கட்சியாக அண்ணா காலத்திலே இருந்தக் கட்சி. கம்யூனிஸ்ட்டுகள் இருந்தார்கள் என்றாலும் கூட, காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருந்த காலத்திலேதான் அண்ணாவின் வளர்ச்சியை இங்கே நாம் அறிந்துகொண்டோம். ஆகவே காங்கிரசை மையப்படுத்திதான் அண்ணாவின் அரசியல் இருந்தது.

காங்கிரஸ் என்றால் காங்கிரஸ் என்கிற கட்சியின் தலைவர்கள், நிறுவனங்கள் மீது அவர் தாக்குதல் நடத்தவில்லை. அந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அந்தக் கொள்கைகளை எப்படி ஏற்றுக்கொள்ள மறுத்தார் என்றால் காங்கிரஸ் கட்சியிலே இருந்த தலைவர்களிலே கூட இரண்டு பிரிவாக, இரண்டுவித சிந்தனையாளர்கள் இருந்தார்கள் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். அண்ணாவின் அரசியலுக்கு முன்னால் 1920களில் காங்கிரஸ் கட்சியில் பெரியார் மிகப்பெரிய தலைவராக இருந்தக் காலத்தில்கூட, காங்கிரசில் இரண்டு அணிகள் உண்டு. இங்கே இந்த வரலாற்றைத் தெரிந்தவர்களுக்குப் புரியும். ஓர் அணி இராசா கோபாலாச்சாரியார் தலைமையில் சித்தாந்தங்களிலே நம்பிக்கை கொண்ட அணி. அதற்கு எதிரான சித்தாந்தங்களிலே நம்பிக்கைக் கொண்ட அணி, அந்த அணிக்குக்கூட ஓர்பெயரைச் சொல்வார்கள். நாயக்கர் அணி, நாயுடு அணி, முதலியார் அணி என்று சொல்வார்கள். நாயக்கர் என்றால் அய்யா பெரியார் அவர்கள் இராமசாமி நாயக்கர் அணி, நாயுடு என்றால் வரதராஜிலு நாயுடு, முதலியார் என்றால் தமிழ்த் தென்றல் திரு.வி.க. என்று பொருள். ஆகவே, திரு.வி.க. வரதராஜலு நாயுடு, தந்தை பெரியார் ஆகியோர் திராவிட இன உணர்வுகளை, திராவிடச் சிந்தனைகளை, திராவிடப் பண்பாட்டை வலியுறுத்தி வந்தவர்கள். காங்கிரசில் இருந்த மற்ற தலைவர்கள் எல்லாம் அதற்கு மாறாக ஆரிய வைதீகச் சிந்தனைகளை ஏற்றுக்கொண்ட தலைவர்கள். தமிழையும், தமிழுக்கு உள்ள சிறப்பையும் தமிழ் இலக்கியங்களையும் கற்று, தமிழக நாகரீகத்தை உணர்ந்துக் கொண்ட ஒரு அரசியல் அணி. அதே நேரத்தில் மாற்றாக ஆரிய வைதீக அகில இந்திய நிலையிலே ஆரிய-வைதீக உணர்வுகளை வைத்து அரசியல் நடத்திய மற்றொரு அணி இருந்தது. திராவிட இயக்கத்திற்கும் மற்ற இயக்கத்திற்கும் உள்ள போராட்டமே இதுதான்.

தமிழன் 2500-3000 ஆண்டுக்கும் மேலான நாகரீகத்தை கொண்டவன். தமிழ் இலக்கியங்கள் கிறிஸ்துவுக்கு முன்னதாகத்

தோன்றிய தொல்காப்பியத்தில் தமிழர்களுடைய வாழ்வு இப்படிதான் இருந்தது என்று வரையறுக்கப்பட்டது. தொல்காப்பியத் தமிழர்கள் பிறப்பினால் வேறுபட்டவர்கள் அல்ல. தமிழகத்திலே சாதிகள் ஒரு வேளை இருந்திருக்கலாம். ஆனால் பிறப்பினால் தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்கிற நிலை இல்லை என்பது தான் திராவிடஇயக்கத்தின் சிந்தனை. அதற்காகத்தான் இந்த இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்திற்கு வேறு பெரிய அளவிற்கு காங்கிரசோடு மோதி அரசியல் களத்திலே ஆட்சியைக் கைப்பிடிக்க வேண்டும் என்கிற எண்ணத்திலேக்கூட இந்த இயக்கம் தோன்றவில்லை. சமுதாயத்திலே இப்படி ஒரு அடித்தளம் இருக்கிறது. பிறப்பினால் ஒருவர் மேலானவர், இன்னொருவர் கீழானவர் என்கிற எண்ணம் இருக்கிறது. இந்த எண்ணத்தை பிறப்பினால் கீழானவன் என்று கருதப்பட்டவர்களே ஏற்றுக்கொண்டு, அந்தப் பாதையிலே அவர்கள் நடந்து காட்டுகிறார்கள். மேல் சாதிக்காரர்கள் வரும் போது தன்னுடைய தோளிலே போட்டிருக்கிற துண்டை இடுப்பிலே இவர்களாகவே கட்டிக்கொள்கிறார்கள். தன்னுடைய காலிலே அணிந்திருக்கின்ற செருப்பைத் தள்ளி வைத்துவிட்டு வெறுங்காலில் நடக்கிறார்கள். இந்த அடிமைத்தனத்தை இவர்கள் கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் இவர்களே ஏற்றுக்கொண்டு நடக்கிறார்கள் என்கிற கருத்திலேதான் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசில் இருந்து வெளியே வந்து சுயமரியாதை இயக்கம் என்கிற பெயரிலே ஓர் இயக்கத்தைத் தொடங்கி பிறப்பினால் ஏற்றத்தாழ்வு இல்லை என்கிற ஒரு கருத்தை மையப்படுத்தி அதற்குத் துணையாக பல்வேறு கருத்துக்களைச் சொல்லி மக்களைத் திருத்தும் முயற்சியிலே ஈடுபட்டார்கள். இதற்காகத் தான் திராவிட இயக்கம்.

சமுதாய அவலங்களைச் சரி செய்ய வேண்டும். மக்கள் மனத்திலே படிந்திருக்கிற, மூளையிலே படிந்திருக்கிற அழுக்கைத் தூய்மைப்படுத்த வேண்டும். இதற்காக எந்த முறையைக் கையாளலாம் என்று பார்த்தபோது அவர்களுக்குப் பொது மேடைகள், பொதுக் கூட்ட மேடைகள், இதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், நாளிதழ்கள் இவற்றை எல்லாம் திராவிட இயக்கம் பயன்படுத்தியது. ஆகவே, திராவிட இயக்கத்தின் முக்கிய கல்வியாக எழுத்தும், பேச்சும் அமைந்த காரணம் இதுதான்.

நேரடியாக மக்கள் முன்போய் சொல்ல வேண்டும். பத்து பேர் இருந்தாலும், அந்த பத்து பேரிடம் போய் 'இதுதான் உன்நிலை உன்னை இழந்தவனாய் நிற்கிறாய், நீ ஏன் உன்னை பிறப்பால் தாழ்ந்தவன் என்று எண்ணிக்கொண்டு நிற்கிறாய்' என்று எடுத்துச் சொல்வதுதான் திராவிட இயக்கத்தினரின் பணி. தாழ்ந்தவன் என்று ஏற்றுக்கொண்டவனைத்தான் திருத்துவது முக்கிய நோக்கமாக இருந்தது. ஆகவே, திராவிட இயக்க அரசியல் நாகரீக நிலையிலே தொடங்கியது. தந்தை பெரியார் அவர்கள் நாகரீக அரசியலின் உச்சக்கட்டத்திலே இருந்தார். அவருடைய மாணவராகத் திகழ்ந்த அண்ணா அவர்கள் அதே வழியைப் பின்பற்றி நாகரீகத்தோடு நடந்தார் என்பது இதற்குக் காரணம். இந்த இயக்கத்தின் நோக்கம் அப்படிப்பட்டதாக இருந்தது என்பதுதான்.

பேரறிஞர் அண்ணாவைப் பற்றி சொல்லும் போது ஒற்றை வரியிலே சொல்ல வேண்டுமானால் 'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' எனும் ஓர் எடுத்துக்காட்டைச் சொல்ல வேண்டும். 1959ஆம் ஆண்டிலே சென்னை மாநகராட்சியை திராவிட இயக்கம் கைப்பற்றியது. முதல் முறையாக அதுவரை காங்கிரசிடமும், நீதிக்கட்சியிடமும் இருந்த சென்னை மாநகராட்சி முதல் முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று அ.போ. அரசு என்பவர் அப்போது முதன் முதலில் தி.மு.க.வின் மேயர் ஆனார். மேயரான அ.பொ. அரசு மாநகராட்சியின் சார்பில் சென்னையில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு சிலை வைக்க வேண்டும் என்று விரும்பினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்கிற வகையிலே அவர்களுக்குச் சிலை வைக்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்களிடம் போய் கேட்டார். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார் என்றால் 'எனக்கு சிலை வைக்காதே. இங்கே உள்ள ஏழைகள் எல்லாம் கல்வி அறிவு பெற வேண்டும் என்பதற்காக கல்விக் கட்டணத்தை எல்லாம் குறைத்தாரே அன்றைய முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர். அந்த காமராசருக்கு சிலை வை, ஏழை மக்கள் எல்லோரும் நம்மை மதிப்பார்கள்' என்று சொன்னார். இதுதான் அண்ணாவின் நாகரீகம், தன்னுடைய சொந்தக் கட்சிக்காரன், தன்னுடைய நிர்வாகத்தில் இருப்பவன், மாநகராட்சியில் இருப்பவன். தனக்கு சிலை வைக்க வேண்டும் என்று ஒருவர் கோரிக்கை வைக்கும்போது, அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் 'எனக்குச் சிலை

வைப்பது முக்கியமல்ல, நாம் யாரை எந்தக்கட்சியை கடுமையாக எதிர்க்கிறோமோ, அந்த அரசாங்கத்திடம் பல்வேறு காரணங்களுக்காகப் போரிட்டு வருகிறோமோ, சட்டமன்றத்திலே எதிர்கட்சியாக விளங்கி அவர்களுக்கு தொல்லை கொடுக்கிறோமோ அந்த அரசாங்கத்தின் தலைவராக விளங்குகிற முதலமைச்சர் காமராசர் அவர்களுக்குச் சிலை வைக்க வேண்டும் அவருக்கு செலுத்துகிற மரியாதை இந்தச் சமுதாயத்திற்கு செலுத்துகிற மரியாதை' என்று கருதி சொன்னாரே அதுதான் அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசியல் நாகரீகம். இதை யாரும் மறந்துவிட முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகக் கடுமையான எதிரி காமராசர். காரணம் அவர்தான் அப்போது காங்கிரசில் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக விளங்கினார். திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க கூடிய கட்டாயத்தில் அவர் இருந்தார். 1933ம் ஆண்டிலே இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே குலக்கல்வி திட்டம் என்று ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டது. அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டக் காரணத்தினால் காங்கிரசில் ஒரு சலசலப்பு ஏற்பட்டு இராஜாஜி அவர்கள் முதலமைச்சர் பதவியிலிருந்து விலக நேரிட்டது. பிறகு, காமராசர் அவர்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவர் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. அவர் சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்கு குடியாத்தம் தொகுதியில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர் இராஜினாமா செய்கிறார். அங்கே ~~காமராசர்~~ போட்டி இடுகிறார். காங்கிரசை நாம் எதிர்த்து வருகிறோம், குலக்கல்வித் திட்டத்தை வேண்டாம் என்று சொல்லி போராடி சிறையிலே இருக்கிறோம். நமது திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் காமராசர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் அவர் குடியாத்தம் தொகுதியிலேயே போட்டியிடுகிறார். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் ''தேர்தலில் காங்கிரஸை எதிர்த்து வேட்பாளர் நிறுத்தப்போவதில்லை காமராசருக்கு வாக்கு கேட்டுப் போகிறோம் என்றார். குணாளா! குலக்கொழுந்தே! என்று காமராசரை அழைத்து இந்தத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சிக்கு வேலை செய்து காமராசர்அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு காரணமாக இருந்தார் என்றால் அதுதான் அறிஞர் அவர்களுடைய அரசியல் நாகரீகம். ஒரு

மனிதன் எப்படி தலைவன் ஆகிறான் என்பதற்கு நாம் இதெல்லாம் ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அண்ணாதுரை என்கிற மனிதர் அண்ணா என்கிற தலைவராக இப்படித்தான் ஆனார் என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

பண்டித நேரு அவர்களை கடுமையாக எதிர்த்திருக்கிறோம். தமிழ்நாட்டுத் தலைவர்களை முட்டாள்கள் என்று சொன்ன காரணத்தினால், பண்டித நேரு அவர்கள் சென்னைக்கு வரும்போது பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு-திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் 'நேருவே திரும்பிப்போ' என்று கருப்புக்கொடி காட்டிய கட்சிதான் நம்முடைய கட்சி. அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆலோசனைப்படி நேரு அவர்களுக்கு எதிராக கருப்புக்கொடி போராட்டம் நடத்த வேண்டும் என்கிற எண்ணத்திலே கருப்புக் கொடி போராட்டம் சென்னையிலே நடந்தேறியக் காட்சி.

அந்தக் காலத்தில் இருந்த பெரியவர்கள் எல்லாம் மறந்திருக்க முடியாது. அதே பண்டித நேரு அவர்கள் 1964ம் ஆண்டிலே மறைவுற்ற போது அண்ணா அவர்கள் சிறையிலே இருந்தார். சிறையிலிருந்தபோது நேரு இறந்த தகவல் சில மணி நேரங்களில் தெரிகிறது. எப்படி தெரிகிறது என்றால் சிறையில் உள்ள கொடி அரைக்கம்பத்தில் பறக்கிறது. ஏன் அரைக்கம்பத்தில் பறக்கிறது என்பதை விசாரித்து இருக்கிறார். விசாரித்தபோதுதான் சொன்னார்கள் 'பண்டித நேரு மறைந்துவிட்டார்' என்று. அப்போது அவர் எழுதுகிறார், 'இந்தச் செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போனேன். நேரு மறைந்துவிட்டார் என்பது இந்தியாவிற்கு மட்டுமல்ல இழப்பு, உலகமே ஆழ்ந்த இருட்டில் விழுந்துவிட்டதைப் போல எண்ணத்தை தோற்றுவிக்கிறது. ஐம்பது ஆண்டுக்கால அரசியல் பாரம்பரியம் மிக்கத் தலைவர். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் எல்லாம் தாக்கிய கடுமையான குரல்களை பொறுமையாகக் கேட்டு அவற்றுக்கு முறையான பதில்களை அளிக்க வேண்டும். ஜனநாயகத்திலே ஆளும்கட்சியை தாக்கும்போது அந்த தாக்குதல்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டியது ஒருபிரதமரின் கடமை என்பதை உணர்ந்து செயலாற்றிய மாபெரும் வீரர். நான் அவரை சந்தித்ததில்லை, தனியாகப் பார்த்து பேசியது இல்லை. நான் மாநிலங்களவையில் முதல் உரையை நிகழ்த்தியபோதுகூட அவர் அவையிலே இல்லை. ஆனால், சில நாட்கள் கழித்து அவர் பேசிய பேச்சுக்களிலே

என்னுடைய உரையில் இருந்து குறிப்பிட்டுக் காட்டி சில இடங்களை சுட்டிக்காட்டிப் பேசியது என்னுடைய கவனத்திற்கு வருகிறது. ''ஜனநாயகத்தைக் காப்பாற்றிய மிகப்பெரிய தலைவர்களுள் நேரு ஒருவர் என்று நேரு அவர்களைப் பாராட்டுகிறார்'' என்று குறிப்பிட்டார். எந்த நேரு அவர்கள் தமிழர் தலைவர்களை தரக்குறைவாகப் பேசினார் என்பதற்காக கருப்புக்கொடி காட்டினாரோ அந்த நேருவின் இறப்பு ஜனநாயகத்துக்கு இத்தகைய விளைவுகளை உருவாக்கியிருக்கிறது என்பதை உணர்ந்து பாராட்டினாரே அவர்தான் அறிஞர் அண்ணா.

காமராசரை அவர் மதிக்காமல் இருந்ததில்லை. இந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்பது 1968லே தமிழ் மாநாடு நடைபெற்ற நேரத்திலே அதனை ஒட்டி உருவாக்கப்பட்ட நிறுவனம். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு காமராசர்தான் வரவேற்புரை ஆற்றினார் என்பதனை யாரும் மறந்துவிட முடியாது. அவர் எதிர்க்கட்சி. தோற்றுபோன கட்சி. தி.மு.க. ஆட்சிப் பீடத்திலே உள்ள கட்சி. இருந்தாலும் இது தமிழர் திருவிழா, தமிழகத்து விழா என்ற காரணத்தினாலே கட்சி வேறுபாடு மறந்து, அனைத்துக் கட்சிக்காரர்களையும் கூட்டி இந்த உலகத் தமிழாராய்ச்சிக்காக உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக்காட்டிய பெருமகனார் அறிஞர் அண்ணா அவர்கள்.

ஆட்சிப் பீடத்திலே அமர்ந்து பதவி ஏற்றவுடனே காயிதே மில்லத் இசுலாமியர் அவரைச் சந்தித்தார், மூதறிஞர் இராஜாஜியை சந்தித்தார். அதையும் மீறி பக்தவத்சலம் அவர்கள் வீட்டிற்குச் சென்று அவரையும் எப்படி ஆட்சி நடத்துவது என்று ஆலோசனைகளைப் பெற்றார். பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய வீட்டிற்குச் சென்று சந்தித்து அவருடைய ஆசியைப் பெற்றார். இதைவிட மேலாகப் பெரியார் ஏறத்தாழ 1949 திராவிட முன்னேற்றக் கழக கட்சி தொடங்கப்பட்ட நாள் முதல் 1967 தேர்தல் முடிவு வரை மிகக்கடுமையாக தி.மு.க.வைத் தாக்கிப் பேசி வந்தார். எந்த வகையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. 1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் தோற்க வேண்டும் என்பதற்காக என்னென்ன முயற்சிகள் மேற்கொண்டாரோ அந்தப் பெரியாரை சந்தித்து 'இந்த ஆட்சி தந்தை பெரியாருக்கு காணிக்கை' என்று சொன்னாரே இங்கே அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நாகரீகம் இருக்கிறது.

'கண்ணீர்த்துளிகள்' என்று பெரியார் குறிப்பிட்டார். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை எல்லாம் கண்ணீர்த் துளிகள் என்றார். இவர்கள் கரைந்து போவார்கள். இவர்களுக்கு எதிர்காலம் இல்லை, இவர்கள் கொள்கை மாறியவர்கள். இவர்களால் இந்தச் சமுதாயம் பயன்பெறப் போவதில்லை என்றெல்லாம் சொன்னார். அறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.க.வைத் தொடங்கும்போதே சொன்னார். இந்தக் கட்சிக்கு தலைவர் பெரியார்தான், தலைவர் என்ற நாற்காலி காலியாக இருக்கும் என்று அறிவித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். அன்று முதல் இறுதிவரை திராவிடக் கழகத்தில் எவ்வளவு வேகமான தாக்குதலை தி.மு.க.மீதும் வைத்தாலும் தந்தை பெரியாருடைய செயல்பாடுகளில் எந்தக் குறையும் காணாத ஒரு தலைவராக, தந்தை பெரியாரின் வழிதான் என்னுடைய வழி என்று சொன்ன தலைவராக, திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாகத் திகழும் என்று சொன்ன தலைவராக அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள். பெரியார் அவர்கள் இப்படி தாக்குகிறாரே என்று வேதனைப்பட்டு, கோபப்பட்டு பெரியாரைப் பேசவில்லை என்பதுதான் அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அரசியல் நாகரீகம்.

தந்தை பெரியார் அவர்களுடைய சகோதரர் மகன் ஈ.வே.கி. சம்பத், அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தை தொடங்கியபோது இருந்தவர். ஒரு கால கட்டத்தில் சம்பத்துக்கும், அண்ணாவுக்கும் இடையே மனக்கசப்பு. கட்சியில் இருந்தவாரே அணி சேர்த்து அண்ணாவைப் பற்றி குறை சொல்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினராக, பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருக்கிற சம்பத், தி.மு.க.விலே இருந்துக்கொண்டே குறை சொல்கிறார். அப்போது சம்பத், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, கவிஞர் கண்ணதாசன் எல்லாம் ஓர் அணியாக செயல்படுகிறார்கள். கண்ணதாசன்அவர்கள் 'தென்றல்' என்ற வார இதழை நடத்தி வந்தார். அறிஞர் அண்ணா 'திராவிட நாடு' இதழிலே எழுதுகிற எழுத்திற்கெல்லாம் அதற்குப் போட்டியாக தென்றலிலே கட்டுரையாக கண்ணதாசனும் ஆசைத்தம்பி அவர்களும் எழுதுவது வழக்கம். ஒரே கட்சியிலே இருப்பவர்கள். அந்தக் கட்சியை உருவாக்கியவர் அறிஞர் அண்ணா. உருவாக்கிய தலைவருக்கு எதிராக அவருடைய தம்பிமார்களாக இருந்த கண்ணதாசனும், ஆசைத்தம்பி அவர்களும், சம்பத் அவர்களும் அணி சேர்ந்துக்கொண்டு அண்ணாவைத் தாக்கி எழுதுகிறார்கள்.

மறைமுகமாக. நேரடியாக அல்ல. அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் கட்டுரை எழுதுகிறார்கள். 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' சிறு சிறு குற்றங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் உறவு நீடிக்காது. அதுவும் அறிஞர் அண்ணா அவர்களின் அணுகுமுறை நயத்தக்க அரசியல் நாகரீகமாக விளங்கியது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஒரு காலத்திலே பிளவுகள் ஏற்பட்டு விடுகிறது. சம்பத் வெளியேறி விடுகிறார். தனியாக 'தமிழ்த் தேசியக் கட்சி' என்று தொடங்குகிறார். அப்படி தொடங்கும்போது அண்ணன் என்று அழைத்த சம்பத், 'தோழர் அண்ணாதுரை' என்று அழைக்கத் தொடங்குகிறார். தொடர்ந்து கூட்டங்களிலே 'தோழர் அண்ணாதுரை' என்று அண்ணாவைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் அதற்கு அண்ணா சொல்கிறார், சம்பத் ''தோழர் அண்ணாதுரை'' என்று சொல்வது என்று காதுகளில் விழுகிறது. ஆனால் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அண்ணன் சொன்னார், என் அண்ணன் சொன்னார் என்று பேசினாரே, அந்தப் பேச்சுக்களை நினைத்துக்கொண்டு நான் இந்தப் பேச்சை நான் மறந்து போவேன்'' என்று பெருந்தன்மையோடு சொன்னார். அதுதான் அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசியல் நாகரீகத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு- இப்படி தன்னோடு இருந்தவர்கள் தன்னை தாக்கிப் பேசினாலும், தன்னுடைய எதிரிகள் தன்னைத் தாக்கிப் பேசினாலும், அவர்களுடைய செயல்பாடுகளிலேயே குறை இருந்தாலும் கூட அவர்களுடைய கொள்கையில் குறை இருந்தாலும் கூட தனிப்பட்ட முறையில் அவமானப்படுத்தியோ, கேவலப் படுத்தியோ அவர் பேசியது இல்லை.

ஓர் உதாரணம். பலருக்கு தெரிந்த உதாரணம் என்றாலும் கூட தன் மீது தாக்கப்பட்ட தாக்குதல்களை, தொடுக்கப்பட்ட கணைகளை அவர் எப்படி எதிர்கொண்டார் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், அவருடைய வீட்டு வாசலிலே, வீட்டிற்கு எதிரே உள்ள சுவற்றிலே அவரைப் பற்றி தவறாக எழுதி விட்டனர் காங்கிரஸ்காரார்கள். அண்ணாதுரை ஒரு வேசி மகன் என்று எழுதி விட்டார்கள். ஒரு தலைவர், பெரிய தலைவராக உருவான பிறகு தலைசிறந்த பேச்சாளராக, தலைசிறந்த எழுத்தாளராக, பலராலும் பாராட்டப்பெற்ற தலைவராக உருவான பிறகு அவருடைய வீட்டு வாசலிலே, அவர் வீட்டுக்கதவைத் திறந்தால் நேரே - எதிரே தெரியும் வகையில் அண்ணாதுரை ஒரு வேசி மகன் என்று எழுதிவிட்டார்கள். அண்ணா அவர்கள் மீது கோபம்

கொண்டதில்லை. ஆறுமணிக்கு ஓர் லாந்தர் விளக்கை ஏற்றி அங்கே ஓர் ஆணியை அடித்து மாட்டினார். கீழே 'அண்ணாதுரை உபயம்' என்று எழுதிவிட்டார் ஆகவே எழுதியவன் அவமானப் பட்டானே தவிர அண்ணாவுக்கு அந்த அவமானம் போய்ச் சேரவில்லை. அந்த அளவுக்கு அரசியல் பக்குவத்தோடு நடந்துக்கொண்ட ஒரு தலைவர். ஆகவேதான் அறிஞர் அண்ணா அவர்கள் மிகச்சிறந்த அரசியல் நாகரீகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

என்னுடைய தந்தையின் குறிப்பிலிருந்து கூறுகிறேன். முதல் நாள் கூட்டத்தில் தமிழிலே உரையாற்ற வேண்டும், இரண்டாவது நாள் கூட்டத்தில் ஆங்கிலத்தில் உரையாற்ற வேண்டும். முதல் நாள் கூட்டம் மிகச்சிறந்த அளவிலே, பெரிய அளவிலே மக்கள் கூடியிருக்கிறார்கள். அண்ணா பேசுகிறார் என்றால் அங்கு வருகிற கூட்டத்திற்கு குறைவு இருக்காது. பெரிய அளவிலே மக்கள் குவிந்திருக்கிறார். அண்ணா பேசிக்கொண்டிருக்கிறார். அப்போது ஓர் செய்தி வருகிறது. காங்கிரஸ்காரர்கள் அடுத்த நாள் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளையை அழைத்து அங்கே ஓர் கூட்டம் நடத்தவிருக்கிறார்கள் என்று தந்தையார் அவர்கள் மூலமாக அண்ணாவுக்கு கிடைக்கிறது. எனது தந்தையார் அதனை வைத்துக்கொண்டு 'நாளை சேதுப்பிள்ளை அவர்கள் பேசுகிறார்கள்' என்று சொன்னார். அப்போது அண்ணா சொல்கிறார். 'அப்படி என்றால் நாளைய கூட்டத்தை ரத்து செய்து விடு' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னபோது எனது தந்தையார் அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. 'சேதுப்பிளை பேச்சை யார் கேட்பார்கள். நீங்கள் ஆங்கிலேத்திலே முதல் முறையாக திருச்சியிலே பேசுகிறீர்கள் உங்களுடைய பேச்சைக் கேட்கத்தான் மக்கள் கூட்டம் வரும் போது சேதுப்பிள்ளை கூட்டத்திற்கெல்லாம் யாரும் போகமாட்டார்கள். நாம் கூட்டத்தை நடத்துவோம். அவர்களுக்கு ஓர் பாடம் கற்பிப்போம்' என்று என் தந்தையார் சொல்ல, அண்ணா அவர்கள் சொல்கிறார்கள், ''அதனால்தான் வேண்டாம் என்கிறேன். சேதுப்பிள்ளை மிகச்சிறந்த அறிஞர், தமிழறிஞர், தமிழுக்காக உழைத்துக் கொண்டிருப்பவர் அவருடைய கூட்டத்தில் ஆள் சேரவில்லையென்றால் தமிழுக்கு தமிழினத்திற்கு அவமானம். என்னுடைய கூட்டத்தை இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாம். சேதுப்பிள்ளை அவமானப் படுவதை பொறுத்துக் கொள்ள மாட்டேன். இப்போது கூட்டத்தை நீ ரத்து செய்கிறாயா அல்லது ரத்து செய்தவிட்டதாக

நான் அறிவிக்கட்டுமா'' என்று கேட்கிறார். அந்தக் கூட்டம் ரத்தானது.

கம்பராமாயணப் போரிலே எதிர்த்து வாதிட்டு தன் வாதத்திறமையால் வெற்றியை நிலைநாட்டிய அறிஞர் அண்ணா அவர்களே 'நாங்கள் தோற்றுவிட்டோம்' என்ற நாவலர் சோமசுந்தர பாரதியும், சேதுப்பிள்ளையும் சொன்ன அளவிற்கு வெற்றி பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள், இந்த நிலை எல்லாம் எண்ணாமல் அவர் ஒரு தமிழறிஞர். தன்னால் அவமானப் படுத்தப்பட்டு விட்ட ஒரு நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக தன்னுடைய கூட்டத்தை ரத்து செய்துவிட்டு சேதுப்பிள்ளைக்கு உரிய மரியாதையை செய்ததால்தான் அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நாகரீகம் மதிப்புமிக்கது; போற்றக்கூடியதாக விளங்குகிறது.

அவர் இருந்த காலம் முழுமையும் அப்படித்தான் செய்திருக்கிறார். தொண்டர்களுக்கு கதை எழுதுவார், கட்டுரை எழுதுவார், கடிதங்கள் எழுதுவார், உரையாற்றுவார் எல்லாவற்றிலும் அவர் தொண்டர்களுக்கு சொல்வது 'நாம் பொறுத்துக்கொள்ள பழக வேண்டும்'. அவருடைய கடுமையான வாசகம் இப்போது நினைவுக்கு வருகிறது. இங்கே சொல்வது மிகப்பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர் சொன்னார், 'மலையை பிளக்கிறோம் நாங்கள், மலை பிளவு படும்போது சிறு சிறு கற்கள் நம்மீது விழுந்து நம்மைத் தாக்கக்கூடும். அப்படி தாக்கும்போது நாம் துவண்டுவிடக்கூடாது. மலை பிளக்கிறதே என்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைய வேண்டும் தவிர நாம் காயப்பட்டுவிட்டோமே என்று துவண்டு போனால் மலையை நாம் முற்றிலுமாக பிளந்துவிட முடியாது. ஆகவே இதுபோன்ற பணிகளிலே நாம் எதிர்கொள்கிற துன்பங்களையும், இழப்புகளையும் தாங்கிக்கொண்டு பணியாற்ற வேண்டும் என்று அண்ணா அவர்கள் தம்பிமார்களுக்கு சொன்னார்.

தொண்டர்களை, தனது கட்சி உறுப்பினர்களை தம்பிமார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு குடும்பமாகவும் ஒரு தாய் பெற்று எடுத்தால் வயிறு தாங்காது என்ற காரணத்தினால் தனித்தனி தாய் பெற்ற பிள்ளைகள் என்றும், ஓர் குடும்பமாக அரசியல் களத்திலே இருக்கின்ற, அரசியல் திட்டம் இடுகிற கட்சியாகக் கருதாமல் சமுதாய சீர்திருத்த இயக்கமாகக் கருதினார். அந்தக் கொள்கையில் இறுதிவரை உறுதியாக நின்று கட்டிக்காத்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

பெரியாருக்கும், அவருக்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. பலபேர் பெரியார் வழியிலே அண்ணா வந்தார் என்று சொல்வார்கள். பெரும்பாலும் பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்தான் அண்ணா. நோய் என்ன என்பதை பெரியாரும் அண்ணாவும் புரிந்து வைத்திருந்தனர். பெரியார் அந்த நோய்க்கு அறுவை சிகிச்சைதான் சரி என்றவர். அண்ணா அந்த நோய்க்குத் தீர்வு அறுவைசிகிச்சை தேவையில்லை. சித்த வைத்திய முறையிலே நாம் அந்த நோயைத் தீர்க்க முடியும் என்று எண்ணினார். ஆகவே, கொண்ட கொள்கையை இலட்சியத்தை அடைவதற்கு இரண்டு பேரும் மேற்கொண்ட முறைகள் வேறாக இருந்தாலும் கொள்கையும், இலட்சியமும் நன்றாக இருந்து மிகப்பெரிய தலைவராக அறிஞர் அண்ணா அவர்கள் விளங்கினார் என்றால், அதற்குக் காரணம் அவர் காட்டிய அரசியல் நாகரீகம். அந்த அரசியல் நாகரீகம் தான் அவரின் மறைவின்போது தமிழகமே கொந்தளித்து, தமிழ்நாட்டிலே சென்னை மாநகரமே குலுங்கி ஏறத்தாழ 15-20 இலட்சம் தமிழர்கள் ஒரு இறுதி ஊர்வலத்திலே கலந்து கொண்டார்கள் என்றால் உலகத்திலேயே அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது நடந்த இறுதி ஊர்வலத்திலேதான். மக்கள் மிகுதியாகக் கலந்து கொண்டார்கள் என்பது கின்னஸ் புத்தகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு அரசியல் கொள்கைகளால் மட்டுமின்றி தன்னுடைய சொல்லால் மட்டுமின்றி, எழுத்தால் மட்டுமின்றி தன்னுடைய நாகரிகம் மிக்க பண்புகளால் தமிழர்களின் இதயத்தை கவர்ந்த ஒரு தலைவர் அண்ணா அவர்கள். தலைவர் அவர்களைப் பற்றி பேசுவதற்கு முதல் நாள் கருத்தரங்கத்திலே வாய்ப்பு அளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இங்கு வருகை தந்த பெருமக்களுக்கு வணக்கத்தை தெரிவித்து, விடை பெறுகிறேன். வணக்கம்.

# அண்ணாவும் பிறநாட்டு அறிஞர்களும்

**கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்**

பேரறிஞர் அண்ணா குறித்து, அதிலும் மிகக் குறிப்பாக, "அண்ணாவும், பிறநாட்டு அறிஞர்களும்" என்ற தலைப்பிலே பேசவேண்டும் என்பது குறித்து, ஓரிரு தினங்களாக, நான் எதைப் பேசுவது என்று நினைத்துப் பார்த்திருந்தாலும், நேற்றைக்கு நமது நாடு சந்தித்திருக்கிற அந்தத் தீவிரவாதத் தாக்குதலில், அண்ணா எத்தகையதொரு முக்கியமானதொரு படிப்பினையை நமக்கு விட்டுச்சென்றிருக்கிறார் என்பதை நினைவூட்டி, என்னுடைய இந்த உரையைத் தொடங்கலாம் என்று நினைக்கின்றேன்.

திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை உயிர்மூச்சாக நினைத்திருந்த அண்ணா, ஒரு காலகட்டத்தில் அதனைக் கைவிட நேர்ந்தது. ஆனால், எந்த சந்தர்ப்பத்திலே அதனை கைவிடுவதற்கான தன்னுடைய அறிவிப்பினை அவர் செய்தார் தெரியுமா? சீன ஆக்கிரமிப்பின்போது, அண்ணா சொல்கின்றார்,

> நாங்கள் நம்பியிருந்த திராவிடநாடு பிரிவினைக் கொள்கையைவிட, இந்தியாவின் பாதுகாப்பும், இறையாண்மையும் மிக முக்கியம் என்பதால், நாங்கள் இந்தக் கணத்தில் அதனைப் பின்னுக்குத்தள்ளி, இந்தியாவின் பாதுகாப்பையே மிக முக்கியமாக முன்னே வைக்கின்றோம்

என்று சொன்னார். அவருடைய அந்தக் கருத்து, நேற்றைய நிகழ்வுகளுக்குப்பின் எத்தகையதொரு அறிவூட்டலையும் படிப்பினையையும் நமக்குத் தந்திருக்கிறது என்பதை நினைவூட்டி, நான் இந்தப் பகிர்வினைத் தொடர்கின்றேன்.

உலகப் பரப்பிலே பல்வேறு மனிதர்கள் பிறந்திருக்கிறார்கள், மறைந்திருக்கிறார்கள், வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் பற்பலரும் சென்ற அந்தச் சுவட்டிலேயே பின்தொடர்ந்துச் சென்று, அவர்களிடம் இருந்து அனைத்தையும் எடுத்துக்கொண்டு, அவர்களின் அடியொற்றியே வாழ்ந்தவர்கள்

அனைவரும் பிறவித் தலைவர்களாகப் போற்றப்படவில்லை. தனக்கான ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, முதல் பயணம் தொடங்கியவர்களே உலகில் எல்லாவிதமான, முன்னோடியான பாதைகளுக்கும் வித்திட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, தனிப்பயணம் அமைத்துக் கொண்ட கலிலியோ, தாமஸ் ஆல்வா எடிசன், நியூட்டன், மேரி கியூரி இவர்கள் அனைவரும் தன்னந்தனியராய் தமக்கான ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தார்கள். தமக்கான முன்னோர்கள் விட்டுச்சென்ற அந்த பாரம்பரியமிக்க தோள்களின்மீது அமர்ந்துக் கொண்டதால்தான் என்னால் இந்த உலகத்தை மேலும் நன்றாகப் பார்க்கமுடிகிறது என்று சொல்கின்ற பெருந்தன்மை ஐன்ஸ்டினுக்கு இருந்தது. உண்மைதான், விஞ்ஞானிகளாகட்டும், மெய்ஞ்ஞானிகளாகட்டும் அல்லது இலக்கியவாதிகளாகட்டும், யாராக இருந்தாலும், முன்னோர்கள் விட்டுச்சென்ற அந்தத் தடத்தினை திரும்பிப் பார்த்து அவர்களிடமிருந்து செறிவான காலடிகளை எடுத்துக்கொண்டாலும், அதற்குப் பின்பு அவர்கள் தொடங்குகின்ற அந்தத் தனித்தப் பயணமே அவர்களைத் தனித்து நிற்கின்ற ஒற்றை நட்சத்திரமாக அந்தப் பால் வீதியிலே காட்டி வந்திருக்கிறது. அந்த வகையிலே பார்க்கும்போது, மேனாட்டு அறிஞர்கள் பலரையும் படித்து, கிரகித்து, அவர்களிடமிருந்த அரசியல், பொருளாதார நிலவழிச் சிந்தனைகளை தனக்குள்ளே செறித்துக்கொண்டு, தனித்ததொரு தமிழ்த் திராவிட தேசியம் பேசிய பேரறிஞர் அண்ணா, தனித்ததொரு நட்சத்திரமாகத்தான் பால்வீதியிலே இன்று வரை நமக்கு கண்ணுக்குத் தெரிகின்றார்.

> In the history of the art, genius is the thing of rare occurrant. Rarer still however are the competent reporters and recorders of that genius. The world has had many hundreds of admirable poets and philosophers; but of these hundreds, only a few, very few have had the fortune to attract a Bosewell or Eckerman

பேரறிஞராய்ப் பிறப்பதே அரிது, ஆனால் அரிதிலும் அரிது, அந்தப் பேரறிஞர் தமக்கென்று ஒரு தக்க வாரிசை ஈர்ப்பது. ஆனால் நம்முடைய பேரறிஞர் அண்ணா, தம் கருத்துக்களால், ஒருவரை, இருவரை அல்ல, லட்சோப லட்சம் தம்பிகளைக் கவர்ந்திழுத்து, ஓர் இயக்கத்தை நிறுவியிருக்கின்றார்.

திரு. அவ்வை நடராஜன் அவர்கள், அண்ணாவைப் பற்றிய தன்னுடைய பேருரையிலே ஓரிடத்திலே - "பேசா நாளெல்லாம்

பிறவாத நாளே'' என்று குறிப்பிட்டுள்ளார். இச் சிறப்புடன் வாழ்ந்த பேரறிஞரை பிற அறிஞர்களோடு ஒப்புநோக்கிப் பேச நான் முனையும்பொழுது, இந்த ஒப்பு நோக்குகின்ற தன்மை குறித்து "லெனினும், அண்ணாவும்' என்கின்ற அந்தப் புத்தகத்திலே, அந்தப் புத்தகம் அண்ணாவோடு மிக நெருங்கிப் பழகிய திரு. ஏ.எஸ். வேணு அவர்களால் எழுதப்பட்டது. அந்தப் புத்தகத்திற்கு மரியாதைக்குரிய திரு.கோவேந்தன் அவர்கள் முன்னுரை எழுதியிருக்கின்றார். அந்த முன்னுரையிலே, இந்த ஒப்புநோக்கும் தன்மையைப் பற்றி நகைச்சுவையோடு அவர் ஒரு செய்தியைச் சொல்லுகின்றார். அந்தச் செய்தி என்னவென்றால், ''இந்த ஒப்புநோக்குவதிலே மூன்று வகையுண்டு. யானைக்கும் பானைக்கும் ஒப்பிட்டு, பாவின் இடையில் நிற்கும் கோடில்லை, மற்ற வகையில் இரண்டிற்கும் வேறுபாடில்லை என்று எழுத்து ஒற்றுமை பார்ப்பது ஒரு வகை. உடல், குடல் இரண்டுமே நீளம், குழை, உள்ளீடு, உள்ளவை என்பதோடு எழுத்தளவில் முதல் எழுத்தைத்தவிர பின் இரண்டு எழுத்தும் ஒத்துள்ளன என்று ஒலி வடிவ ஒப்பீடு செய்வது இரண்டாவது வகை. புலியும், எலியும் நான்கே நான்கு கால்களும் ஒரு வாலும் கொண்டு, பிறருக்குத் தொல்லை தருவதில் ஒற்றுமை கொண்டு, அளவில் மட்டும் வேறுபட்டுள்ளன என்றாலும், இரண்டும் விலங்கினமே என்ற உள்ளீடற்ற உருவ ஒப்பிடு ஒரு வகை என்று சொல்லலாம்" என்று குறிப்பிடுகின்றார்.

ஆனால் என்னைப் பொறுத்தவரை, நான் எந்த வகையிலே பேரறிஞரையும், பிற நாட்டு அறிஞர்களையும் ஒப்பிட்டு நோக்குகிறேன் என்றால், எந்த அளவிற்கு தத்துவார்த்த ரீதியாகவும், எந்த அளவிற்கு சிந்தனா ரீதியாகவும், எந்த அளவிற்கு ஒரு பகுத்தறிவுவாதியாகவும், அவர்களுடைய அந்த சாராம்சங்களை தன்னிலே உள்வாங்கிக் கொண்டு, அதனைத் தனக்கான ஒரு தமிழ்த் தேசிய திராவிடமாக அண்ணா முன்னெடுத்தார் என்பதையே நான் என்னுடைய அனைத்து மேற்கோள்களிலும் ஒரு குறிப்பிட்ட திக்குத்திசையாக உங்களிடம் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏனெனில், பேரறிஞரைப் பொறுத்தவரை அவர் மிகப்பெரிய படிப்பாளி. புதிய புதிய சொல்லாடல்களை அவர் தமிழிலே புகுத்துவதற்கு அவருடைய கற்பனா சக்தியும் அவருடைய சிந்தனா சக்தியும் ஒரு காரணம் என்றாலும், அவருக்கு அடித்தளமாக அமைந்தது அவருடைய அந்தப் பரந்த படிப்பாற்றல்தான். ஆகவே, பிறநாட்டு அறிஞர்களிடத்திலிருந்து எதையதையெல்லாம் அவர் எடுத்துக்

கொண்டிருக்கின்றார், அதோடுகூட சிற்சில சம்பவங்களும், சிற்சில குணாதிசயங்களும் எப்படி அவருக்கு சில நாட்டு அறிஞர்களோடு ஒத்துப்போகின்றன என்பதைச் சொல்லியே என்னுடைய உரையின் போக்கினை நான் தீர்மானிக்கின்றேன்.

ஓரிடத்திலே அண்ணா, அடுக்கடுக்காக பிற நாட்டு அறிஞர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு, நம்முடைய தமிழகத்திலே மண்டியிருக்கின்ற அந்த வைதீகத்தின் அழுக்கையும், மௌடீகத்தின் போக்கையும் சாடுகின்றபோது எழுதுகின்றார்,

> விசித்திர வைதீகர்களை வீதி சிரிக்கச் செய்தார் சாக்ரடீஸ்! வைதீகத்தின் மடமையை விரட்டினார் வால்டேர்! மக்கள் மன்றத்திற்கு மதிப்புத் தரவேண்டும் என்று வாதாடினார் ரூசோ! வேதப் புத்தகத்தை விற்று விபச்சார விடுதிக்கு பணம் தரும் போக்கினைக் கண்டித்தார் விக்லிப்! ஆண்டவன் பெயரால் நடக்கும் அட்டூழியங்களை அம்பலப் படுத்தினார் மார்ட்டின் லூதர்! சீனரின் சிறுமதியைப் போக்க பாடுபட்டார் சன்யாட்சன்! துருக்கியின் மதி தேய்வதைத் தடுத்தார் கமால் பாட்சா! மதத்தின் பெயரால் மக்களை வதைப்பதை எதிர்த்தான் இங்கர்சால்! பேதமையைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னாட்ஷா! பொருளாதார ஏற்றத்தாழ்வை அடித்து நொறுக்கி பொதுவுடைமைக் கண்டான் காரல்மார்க்ஸ்!

இப்படி இந்தப் பெயர்களெல்லாம், அதுகாறும் பஜனையிலும், புராணக் கதாபாத்திரங்களின் பெயர்களையும், இன்ன இன்ன கடவுள்களைப் பூஜித்தால் இன்ன இன்னப் பலன்களைத் தரும் என்ற அளவிலே அறியப்படும் கடவுளர்களின் பெயர்களை மட்டுமே தெரிந்துவைத்திருந்த பொதுமையாக இருந்த ஒரு தமிழ்ச் சமூகத்திற்கு, இத்தனைப் பெயர்களையும் தான் பேசுகின்ற மேடைகளிலே கொண்டு அறிமுகப்படுத்திய அந்த அபாரத் துணிச்சலும், அவையெல்லாம் சென்று சேரும் என்ற நம்பிக்கையும் அந்தப் பேரறிஞருக்கு இருந்தது.

மிகக் குறிப்பாக ஒன்றைச் சொல்லவேண்டும் என்றால், அவர் ஓரிடத்திலே சொல்லுகின்றார் பேச்சுவழக்கிலே,

> கேட்டுப் பழகிய கை, போட்டுப் பழகிய பை, சொல்லிப் பழகிய பொய் இவையெல்லாம் என்றைக்கும் மாற்ற முடியாதவை

என்று சொல்லுகின்றார். இதே வாக்கியத்தைப் பேசிய பேரறிஞர்தான் நான் முற்சொன்ன அத்தனை சொற்றொடர்களையும் பேசுகின்றார். அவர் என்றைக்குமே பொதுமக்களிடம் பேசுகையில், இந்தப் பெயர்கள் எல்லாம் என்ன மாதிரி தெரியுமோ, அறியப்படுமோ என்கின்ற சந்தேகம் கொண்டு, சற்று தன்னை மாற்றிக்கொண்டு, அல்லது ஆங்கிலேத்திலே diluted language என்று சொல்லுவோம், கொச்சையாகப் பேசுகின்ற ஒரு வழக்கம். அந்த மாதிரியான நடைமுறையை தன்னுடைய சொல்லாடல்களிலோ, தன்னுடைய பேச்சு முறையிலோ அவர் கையாண்டதே இல்லை. மிகமிக அழுத்தமான நம்பிக்கையை, கேட்கின்ற அந்தப் பார்வையாளர்கள் மீதும் வைத்திருப்பதோடு, தன்னுடைய மேதமைத்தனத்தை மட்டுமே பறைசாற்றுகின்ற பேச்சாகவோ, உரையாகவோ, எழுத்தாகவோ என்றைக்குமே அவருடைய வெளிப்பாடுகள் இருந்ததில்லை. இத்தனை அறிஞர்களை அவர் அடுக்கடுக்காக சொல்வதற்குக் காரணம் என்ன? தூங்கிக்கிடந்த தமிழகம் எழும்ப வேண்டும், அதுவரையிலும் பாரம்பரியமிக்க நீண்ட நெடிய கலை, இலக்கியப் பண்பாடு, 3500 ஆண்டுகளைக் கொண்ட அந்தப் பண்பாடு, தமிழினம் தன்னுடைய பெருமையை மீண்டும் உணரவேண்டும். இவர்களுக்கு நிகராக இருந்தவன்தான் தமிழன். கங்கையிலே தன்னுடைய கொடியைப் பறக்கவிட்டு, கடாரத்திலேயும் புலிக்கொடியைப் பொறித்துவிட்டு, ரோம் நாட்டிற்கே பொன்னாடை விற்றவன் தமிழன் என்பதை சொல்லித்தான், இத்தனை அறிஞர்களையும் அவர் சொல்லியிருக்கின்றார். ஆக, அண்ணா எடுத்துப்பேசாத கிரேக்க நாட்டு அறிஞர்களோ, ரஷிய நாட்டு அறிஞர்களோ அல்லது இலக்கியவாதிகளோ கிடையவே கிடையாது.

கிரேக்கத்திலிருந்து நாம் தொடங்கலாம். கிரேக்கம் நாம் அனைவரும் அறிந்தபடி, நாகரிகத்தில் அல்லது அறிவியல் தர்க்கத்தில் அல்லது logic என்று சொல்லப்படுகின்ற அந்த உரையாடல் முறையின் ஆரம்ப அரிச்சுவடி என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த கிரேக்கத்திலே தோன்றிய முதல் பேரறிஞர் பெரிக்கிலிஸ். கிரேக்கச் சொற்பொழிவுகளை, முதன்முதலாக நன் மேடையைக் கண்டது கிரேக்கம், என்று சொல்லுவார்கள். நன் மேடை என்றால் பேச்சுமேடை. அந்தப் பேச்சு மேடையை மூன்று வகையாகப் பிரிக்கின்றார் அரிஸ்டாட்டில். விழாக்காலச் சொற்பொழிவு, அரசியல் சொற்பொழிவு, குறிப்பிட்ட நேரங்களிலே ஆற்றப்படுகின்ற

சொற்பொழிவுகள் என்று. பெரிக்கிலிஸ் விழாக்கால சொற்பொழிவுகளில் மட்டுமல்ல, மேலே சொன்ன அனைத்துச் சொற்பொழிவுகளிலும் சிறந்து விளங்கிய ஒரு பேச்சாளர். பெரிக்கிலிசிடமிருந்து அந்தப் பேச்சாற்றலின் முதல் விதையை தேர்ந்தெடுக்கிறார் அண்ணா.

பெரிக்கிலிசிற்குப் பிறகு, 25 ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தவர் சாக்ரடிஸ். உலகத்திலே முதன்முறையாக உரையாடல் முறை என்ற ஒன்றை, அதுகாறும் சொற்பொழிவுகளாக இருந்த அந்த தடத்தை முற்றிலுமாக அழித்து, உரையாடல் முறை dialogue method. என்கின்ற ஒன்றை அறிமுகப்படுத்தியவர் சாக்ரடிஸ். தத்துவத்தின் முதல் பலி, தத்துவத்தின் தியாகி என்று சொல்லப்படுகின்ற, அறிவு என்றஆயுதம் ஒன்றைக் கொண்டுதான் நீங்கள் இந்த உலகத்தை வெல்லவேண்டும் என்று சொல்லி, hemlock என்ற விஷத்தைப் பருகி, சாகின்ற அந்தக் கணத்திலும், தான் கடன் வாங்கிய அந்தக் கோழிக்குஞ்சை திருப்பிக்கொடுக்காமல் போகின்றேனே என்கின்ற வருத்தத்தோடு உயிர் துறந்த சாக்ரடீஸ், அண்ணாவோடு மிகச் சரியாக பொருந்திப்போகின்றார். எந்த விதத்திலே என்று நீங்கள் பார்த்தீர்கள் என்றால், அண்ணாவினுடைய அந்த சொல்லாற்றல், மிகமிக முக்கியமாக அந்த வினா-விடை என்று சொல்லப்படுகின்ற அந்த முறையிலே அமைந்திருக்கும். கேள்வியைக் கேட்டு பதிலைச் சொல்லுகிற முறை. அண்ணா சொல்லுகின்றார் ஒரு இடத்திலே,

> திருவாவடுதுறை தம்பிரானுக்கு பத்து விரலிலும் மின்னும் வைர மோதிரம் ஏன்? கையில் கமண்டலம் ஏன்? காதில் குண்டலம் ஏன்? குண்டலத்தின் நடுவே தங்கம் ஜொலிப்பதேன்? பக்கத்தில் பாடும் குயில்கள் ஏன்? ஆடும் மயில்கள் ஏன்? இதுவா துறவரம்?

என்று. இப்படிக் கேள்விகளைக் கேட்டு அதற்கான பதில்களைச் சொல்லும் பொழுதோ அல்லது கேட்பவர்களிடமிருந்து வாங்கும் பொழுதோ பேச்சிலே ஒரு பங்கு கொள்கின்ற தன்மை என்பது உருவாகின்றது. ஒரு மணி நேரம் நானே உரையாற்றும் பொழுது உங்களுக்கு ஏற்படுகின்ற மனச்சோர்வை இந்த உரையாடல் முறை அப்படியே அக்கு அக்காகப் பிய்த்து மாற்றிப் போடுகின்றது. அதனை ஆதிகாலம் தொட்டே கண்டெடுத்து தமிழகத்து பொன்மேடைகளிலே அறிமுகப்படுத்தியவர் பேரறிஞர் மட்டுமே.

டெமஸ்தனிஸிற்கு வரலாம். டெமஸ்தனீஸ், பிளேட்டோவின் மாணவர், அதோடுகூட ஐசோகிரிடிஸ் என்று

சொல்லப்படுகின்ற அந்நாளையப் பேச்சு அறிஞர ஐசோகிரிடிசிடமிருந்து பேச்சுக் கலையின் நுட்பங்களைத் தெளிவாகக் கற்றுக்கொண்டவர் டெமஸ்தனீஸ் என்று சொல்லுவார்கள். அண்ணாவை நாம் அனைவரும் "திராவிட டெமஸ்தனீஸ்' என்றே சொல்லுவோம். அந்த அளவிற்கு டெமஸ்தனீஸினுடைய அந்தத் தாக்கம் அண்ணாவிடம் இருக்கின்றது. கி.மு. 354லேயே, தன்னுடைய முப்பதாவது வயதில் டெமஸ்தனீஸ் ஆற்றிய முதல் சொற்பொழிவு, அவன் அரசியல் உலகின் அரிமா என்று போற்றப்பட்ட அளவிற்கு இருந்தது. அண்ணாவும் அப்படித்தான். அவருடைய முதல் சொற்பொழிவே அவரை அரசியல் அரங்கத்தின் அரிமா என்று உலகிற்கு அறிவித்தது. டெமஸ்தனீஸ் பேசுகின்றமுறை எப்படித் தெரியுமா? உலகச் செய்திகள் அனைத்தையும் குறிப்பிட்டு, அதிலும் மிகக் குறிப்பாக கிரேக்க நாட்டின் பழம்பெருமை, பண்டையப் பெருமையைச் சொல்லி, இப்படி இருந்த கிரேக்கம் இன்று எப்படி இருக்கவேண்டும்? என்பதை சுட்டிக்காட்டிப் பேசுகின்ற முறைதான். அண்ணாவும் அந்த வழியையே பின்பற்றினார் அவர் நெசவாளர்களுக்காகப் பரிந்து பேசுகையில் சொல்லுகின்றார்,

> சங்க இலக்கியத்தில், சிலப்பதிகாரத்தில் பெருங்கதையிலே, எலி மயிரினால் பட்டு நெய்த தமிழகத்தை கேள்விப்படுகின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பிற நாடுகள் துணி உடுக்கத் தொடங்குவதற்கு முன்பு, வட நாட்டில் அசோகன் ஆண்டதற்கு முன்பு, பட்டு நெய்த அந்த நெசவாளர் பரம்பரையில் வந்தவர்களே, நீங்கள் உங்களுடைய நிலையை இன்றைக்கு நினைத்துப் பாருங்கள். நீங்கள் மட்டுமல்ல, மற்ற தமிழர்களும் நினைத்துப் பார்க்க வேண்டும்

என்று குறிப்பிடுகின்றார்.

ரோம் நாட்டு அறிஞர்களில் முதன்மையாகத் திகழ்ந்தவர் சிசரோ. "மற்ற எல்லோருடைய பேச்சிலும் நாம் இலக்கியத்தைக் காண்கிறேன், ஆனால் சிசரோவின் பேச்சிலேதான் ரோம் நாட்டு மக்களையே காண்கின்றேன்'' என்று உலகம் சொல்லுகின்ற அளவிற்கு மிகமிக புகழ்பெற்ற பேச்சாளர். சீசருக்கு எதிராக சிசரோ பேசிய அந்தப் பேச்சானது உலக வரலாற்றிலே இன்றைக்கும் மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது.

*1961*ல் நேருவின் முன்னிலையில், அவருக்கு எதிரான கருத்துக்களை, அதாவது தான் சார்ந்திருந்த திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தி அவருக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்துப் பேசிய அண்ணாவின் பேச்சு, சீசருக்கு எதிராகப் பேசிய சிசரோவின் பேச்சோடு இன்றென்றைக்கும் ஒப்புமை வைத்து பார்க்கத்தக்க அளவிற்கு பெருமையுடையது. புதியதொரு சொல்லாடலை அண்ணா அன்றைக்கு எப்படிப் புகுத்தியிருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

> வயலிலே ஏர் பிடித்து உழும் உழவுத் தொழிலாளி திராவிடன்; இயந்திரங்களின் நடுவே உழன்று வேலை செய்பவன் திராவிடன்; கூலி வேலை செய்பவன் திராவிடன்; குப்பை கூட்டும் குப்பன் ஒரு திராவிடன்; மூட்டை சுமப்பவன், வண்டி இழுப்பவன் திராவிடனே; வாழ வீடு கட்டுபவன் திராவிடன்; காடுகளிலே கட்டை பிளப்பவன், பிளந்த கட்டைகளைச் சீவிக் கட்டிலும் மேசையும் நாற்காலியும் செய்பவன் திராவிடன்

என்று சொல்லுகின்றார். சிசரோ எழுதிய "மேடை நாவன்மை" என்ற நூலினை படித்துத்தான் பற்பலரும் உலகின் மிகச்சிறந்த சொற்பொழிவாளர்கள் ஆனார்கள் என்பது உண்மை. மிகக் குறிப்பாக கிளாட்ஸ்டன் என்ற புகழ்பெற்ற ஆங்கில சொற்பொழிவாளர், நாவலர், "அந்தப் புத்தகத்தைப் படித்த பின்பே நான் பேச்சுக் கலையில் மிகவும் வல்லவன் ஆனேன்" என்பதை தன்னுடைய சுயசரிதையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார். அண்ணாவினுடைய வானொலிப் பேச்சாகட்டும், மேடைப் பேச்சாகட்டும், அவருடைய பேச்சுக்கள் எல்லாம் நூல் வடிவிலே வந்தபின்பு, உதாரணத்திற்கு, "நிலையும் நினைப்பும்', "ஆற்றங்கரை', "தாழ்ந்த தமிழகமே', "திராவிடர் நிலை', "தலைப்பின்றி தவிக்கின்றது', "நாடு' ஆகிய இந்தப் புத்தகங்களையெல்லாம் படித்து, அன்றைய தமிழகத்திலே கணக்கற்ற பேச்சாளர்கள் உருவானார்கள்.

ஆன்டனியையும், அண்ணாவையும் எடுத்துக் கொள்வோம். மார்க்கஸ் அரலியஸ் ஆன்டனி என்பவர் பேச்சுக்கலை என்பதிலே சிம்மாசனமிட்டு அமரக்கூடிய அளவிற்கு வல்லுநர் அல்ல என்றாலும், ஓரிடத்திலே மிகமுக்கியமான பேச்சின் மூலம் சாதனை செய்கின்றான். சீசர் கொல்லப்பட்டுக் கிடக்கின்றான், புருடஸ் தன்னுடைய நாவன்மையால், சீசரைக்

கொன்றது சரிதான் என்று ரோம் நாட்டு மக்களை நம்பவைத்திருக்கின்றான். ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகத்திலே ஒரு காட்சி வருகின்றது, அந்தக் கணத்திலே அங்கு வருகின்றான் ஆன்டனி. ரோம் நகர மக்கள் சீசர் கொல்லப்பட்டது சரியே என்று நம்பியிருக்கும் கணத்திலே, உள்ள வந்த ஆன்டனி ஆரம்பிக்கின்றான், "புரூடஸ் உயர்ந்தவனே, ஆனாலும் அவனைவிட உயர்ந்தவன் சீசர்" என்று ஆரம்பித்து, அவன் ஆற்றிய சொற்பொழிவிலே ரோம் நகர மக்கள் மனம் மாறி, இறுதியாக புரூடஸ் தற்கொலை செய்ய நேரிடுகிறது. அப்படிப்பட்ட நாவன்மை உடையவர் நம்முடைய பேரறிஞர் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் சொல்லலாம். ஒரு சமயம், சட்டசபையிலே அவரிடத்திலே எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சொல்லுகின்றார், delayed judgement is denied judgement, தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி என்று, உடனடியாக இவர் சொல்லுகின்றார், hurried judgement is burried judgement என்று. உடனடியாக சமயோசிதமாகத் தலையிட்டு, அந்தக் கணத்திலே அந்த இடத்திற்கான நிவர்த்தியைத் தன்னுடைய பேச்சின் மூலமாக செய்வதிலே அண்ணாவை மிஞ்சுவதற்கு எவருமில்லை.

ஒரு கூட்டத்திற்கு அண்ணா, மிகத்தாமதமாகச் செல்லுகின்றார். பத்தரை மணி ஆகிறது. வெகு நேரம் காத்திருந்த மக்களுக்கு அண்ணா மீது எரிச்சல் வருகின்றது. அவர் பேச்சினை ஆரம்பிக்கும்போது சரியாக மணி பத்தரை. அண்ணா சொல்லுகின்றார்,

> மாதமோ சித்திரை, உங்களில் பாதி பேருக்கு
> நித்திரை, இங்கே சில பேருக்கு இருக்கலாம்
> சர்க்கரை, மணியோ பத்தரை, ஆனாலும் நான்
> பதிப்பேன் என் பேச்சிலே முத்திரை

என்று. கூடியிருந்த கூட்டம் கோபத்தை விட்டுவிட்டு அண்ணாவின் பேச்சிலே மயங்கிவிட்டது. இன்னொன்றைச் சொல்லவேண்டும், கலகம் எழுப்பாது, அமைதிப் புரட்சியை உருவாக்கியவர் மார்க்கஸ் ஆன்டனி. அண்ணாவும் அப்படித்தான், எந்தக் காலத்திலும் ஆணித்தரமானக் கருத்துக்களை முன்வைத்து தன்னுடைய கோர்வையான சொற்பொழிவை ஆற்றுவாரேயொழிய வன்முறையையோ, எந்தக் காலத்திலும் மிகப் பெரிய புரட்சியைத் தூண்டும் அளவிற்கான ஒரு வன்முறைப் பேச்சினையோ அவர் உபயோகித்ததே கிடையாது.

இங்கிலாந்து எண்ணற்ற சொற்பொழிவாளர்களை, நாவலர்களை நாட்டுக்குக் கொடுத்திருக்கின்றது. தலைசிறந்த நாவலராக சொல்லப்படும் எட்மண்ட் பர்க், நம்முடைய புரட்சிக்குப் பின்பு மின்சாரம் வந்தபொழுது ரஷ்ய நாட்டுமக்கள் மின்சார விளக்குகளை இல்யீச் விளக்குகள் என்றே அன்போடு அழைத்தார்கள். இல்யீச் என்பது லெனினுடைய இயற்பெயர். அதேபோல ஊ 120 என்று இலக்கமிட்ட இரயில் என்ஜினை ரஷ்ய மக்கள் என்றைக்குமே மறக்கமாட்டார்கள். ரஷ்யப் புரட்சியின்போது செஞ்சேனை வீரர்களுக்கு மிகவும் பிடித்த இரயில் பெட்டி அது. ஆதிக்க சக்திகளின் குண்டுகளால் துளைக்கப்பட்ட அந்த குறிப்பிட்ட இரயில் என்ஜினை இந்த மக்கள் புரட்சிக்குப் பின்பு புனரமைத்து, கம்யூனிஸ்டுகளுக்குப் பரிசாக வழங்குகின்றார்கள். லெனின் அதனுடைய கௌரவமான டிரைவராகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றார். அண்ணாவினுடைய வாழ்க்கையிலும் இதுமாதிரியாக சுட்டிக்காட்டப்படுகின்ற எத்தனையோ சம்பவங்கள் உண்டு. உதாரணத்திற்கு, பெரியார், "பெட்டிச்சாவியை உன்னிடத்தே தருகின்றேன்' என்று சொன்ன அந்தச் சம்பவம்.

முதலாளித்துவத்திற்கு எதிரான ஒன்றாக ரஷ்யா இருப்பது மட்டுமல்ல, முதலாளித்துவத்திற்கு எதிரான அமைப்பாக உலகமெங்கும் வந்து, எங்கும் பாட்டாளியினுடையக் கொடி பறக்கவேண்டும் என்று நம்பியவர்தான் லெனின். இதே கருத்தைத்தான் இங்கே முன்வைத்து, எப்பொழுதும் உழைக்கின்ற மக்களுக்காகவும், அதுகாறும் மேலோங்கியிருந்த அந்தக் குறிப்பிட்ட சாதியினுடைய ஆதிக்கத்தை ஒடுக்கி, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் கடைசிவரை தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதற்குமே சேர்த்து குரல் கொடுத்தவர்தான் பேரறிஞர் அண்ணா. இருவருமே பொருளாதார மெய்ப்பொருள் சொற்களை உருவாக்கி புதிதாக அதனை பேச்சு வழக்கிலே கொண்டுவந்தவர்கள். இருவருமே இளமைக் காலத்திலே பாடத்தை ஒழுங்காகப் படித்து வகுப்பிலே முதல் மாணவனாக வந்தவர்கள்.

லெனின் எப்பொழுதும் சொல்வார், "நமது ஆயுதம் அறிவு, ஆற்றல் என்பதுதான்'. அண்ணாவும் நம்மிடத்தே எப்பொழுதும், குறிப்பாக இளைஞர்களிடத்தில் அறிவையும், அது தருகின்ற ஆயுதத்தையுமே வலியுறுத்திப் பேசியவர். லெனின்தான் நமது ஆயுதம், நமது அறிவு, நமது ஆற்றல் என்று

கொண்டாடினார்கள் ரஷ்யர்கள். அண்ணாதான் நம்முடைய தளபதி, அண்ணாதான் நம்முடைய தலைவர், அண்ணாதுரையாக இருந்தவரை, அண்ணா, பேரறிஞர் என்று போற்றிக் கொண்டாடியது தமிழகம். ருஷ்ய மொழியை மேடைப் பேச்சிற்கும், கொள்கைப் பரப்பிற்கும் ஏற்ற ஒரு மொழியில் உருவாக்கி பயன்படுத்தியவர் லெனின். மிகக் குறிப்பாகச் சொல்லப்போனால், ருஷ்ய மொழியிலேயே ஒரு அகராதியை உருவாக்கிய பெருமை லெனினுக்கு உண்டு. அதே வழியிலேதான் அண்ணாவும், தனக்கான ஒரு நடையைச் சற்றேனும் நீர்த்துப்போகாத ஒரு நடையை உருவாக்கிக் கொண்டவர்.

அண்ணாவினுடைய நாடகங்கள் மிகப்பெரிய சமூக மாற்றத்தை உருவாக்கிய கருவிகள். அந்த நாடகங்கள் மட்டும் இல்லையென்றால், இன்றைக்குத் தமிழ்ச் சமூகத்திலே இப்படிப்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதற்குச் சாத்தியங்களே இல்லையென்று சொல்லலாம். அந்த நாடகங்களைப் பார்த்த பலரும் அண்ணாவை ஜார்ஜ் பெர்னாட்ஷாவோடு, கேல்ஸ்வொர்த்தோடு, இப்ஸனோடு ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மிகக் குறிப்பாக, அண்ணாவினுடைய முதல் நாடகம் "வழக்குவாபஸ்', அடுத்த நாடகம் "சந்திரோதயம்'. அந்த சந்திரோதயம் திராவிடநாடு இதழில் பணியாற்றிய பணியாளர்களாலும் அவருடைய நண்பர்களாலுமே நடத்தப்பட்டது. அடுத்து வந்தது "நீதி தேவன் மயக்கம்', அடுத்து வருகின்றது "ஓர் இரவு'. இத்தனை நாடகங்களையும் பார்க்கும்பொழுது, கிண்டல் தொனியோடு சமூகத்திலே புரையோடியிருந்த அந்த அவலங்களை ஒரு அங்கதச் சுவையோடு வெளிப்படுத்திய அண்ணாவைக் குறித்து பாரதிதாசன் சொன்னது நினைவுக்கு வருகின்றது. பாரதிதாசன் சொல்லுகின்றார்,

> புத்தெழுச்சியை, புதிய போக்கை புதிய வாழ்வை, புதிய சிந்தனையை, புதிய புதிய சொற்களைக் கொண்டவை அண்ணாவின் நாடகங்கள். நோக்கிலும், போக்கிலும் அவை மோலியர் போன்றோரின் நாடகங்களைக் காட்டிலும் சிறந்தவை

என்று. அண்ணா, திராவிட நாடு இதழிலே, "எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற தலைப்பிலே ஒரு அரசியல் விமர்சன விளக்கக் கட்டுரையை எழுதுகின்றார். அது ஜார்ஜ்

பெர்னாட்ஷாவினுடைய "ஆப்பிள் கார்ட்' என்கின்ற ஒரு நாடகத்தைத்தழுவி எழுதியது என்பதை நாம் அறிவோம். அதற்குப் பின்புதான், கல்கி அவர்கள், அண்ணாவை, "தென்னாட்டு பெர்னாட்ஷா' என்று புகழ்கின்றார்.

அண்ணாவினுடைய அரசியல் முன்னோடி, தத்துவ முன்னோடிகள் பலர் இருந்தாலும், சிந்தனைப்பூர்வமாக, இனவழிச் சிந்தனை, நிலவழிச் சிந்தனை, பொருளாதாரச் சிந்தனை ஆகிய மூன்றிற்கும் அவர் தன்னுடைய முன்னோடியாக எடுத்துக்கொண்டது ஹெரால்ட் லாஸ்கி என்கின்ற இங்கிலாந்து நாட்டு அரசியல் நிபுணருடைய புத்தகங்களையும், அவருடைய கருத்துக்களையும்தான். இங்கிலாந்து நாட்டின் தொழிற்சங்கத் தலைவராக இருந்த லாஸ்கி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும், யேல் பல்கலைக்கழகத்திலும் பணி புரிந்த மிகச்சிறப்பிற்குரிய ஒரு பேராசிரியர். அவருடைய தனிச்சிறப்பு என்ன தெரியுமா? வரிசைக்கிரமமாக, தர்க்கரீதியாகக் கருத்துக்களைத் தொகுத்துக் கொண்டு, பின்னர் எதிராளியை எதிர்கொள்வது என்பதாகும். அண்ணா அநேகமாக தன்னுடைய பேச்சு நடையிலும், உரைநடையிலும் இந்த ஒரு கருத்தாக்க முறையையே பயன்படுத்தினார் என்று சொல்லலாம்.

குடியரசுத்தலைவர் ராஜேந்திரப் பிரசாத்தின் உரை மீதான விவாதம் ஒன்றை நான் இங்கே எடுத்துக்காட்டாக சொல்லுகின்றேன். மூன்று வகையாக அண்ணா அதனைப் பிரிக்கின்றார். அந்த விவாதத்தின்போது அண்ணா பதிலளிக்கின்றார், அந்த மூன்று அம்சங்கள் என்ன தெரியுமா? முதல் அம்சமாக, தேர்தல் சுமுகமாக, சுதந்திரமாக நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். இரண்டாவதாக, குடியரசுத் தலைவரின் உரையிலே காணப்படுகின்ற உன்னத தத்துவங்களிலே, ஜனநாயகம் உருக்குலைந்துவிட்டது, சமதர்ம சாரமற்றதாகிவிட்டது, தேசியம் திரித்து கூறப்படுகின்றது என்று சொல்லுகின்றார். மூன்றாவதாக, புதியதேசிய திராவிட உணர்வுகளுக்கு அவர் இடமே கொடுக்கவில்லை என்று சொல்லுகின்றார். மிக முக்கியமாக அவர் ஹெரால்ட் லாஸ்கியிடமிருந்து எடுத்துக்கொண்ட கருத்து என்ன தெரியுமா? லாஸ்கியின் "சமத்துவம் என்பது எல்லோரையும் ஒரே விதமாக நடத்துவது அல்ல, எல்லோருக்கும் சம வாய்ப்பு தருவதாகும். Equality is not identity of treatment, but affording equal opportunity for all என்ற கூற்றைத்தான் சமூக நீதிக்கான முதல்

வித்தாக, முதல் முன்னோடியாக அண்ணா இந்த தத்துவத்தைத்தான் எடுத்துக்கொண்டார்.

அண்ணாவை இலக்கிய ரீதியாக டால்ஸ்டாயுடன் ஒப்பிடலாம்; எமலி ஜோலாவோடு ஒப்பிடலாம்; பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு ரஸ்ஸலோடு ஒப்பிடலாம், இப்படி எத்தனையோ அறிஞர்களைச் சொல்லி, சுட்டிக்காட்டி நீங்கள் அண்ணாவோடு அவர்கள் பொருந்துவது குறித்து வாதம் புரிந்துகொண்டே போகலாம். ஆனால் ஒன்றே ஒன்றை நீங்கள் கவனமாகப் பார்க்கவேண்டும். அவர்களிடத்திலே எடுத்துக்கொண்ட, கற்றுக்கொண்ட எதனையும் அப்படியே கிளிப்பிள்ளை சொல்லுவதைப் போல ஒருக்காலும் திருப்பித்தந்தவர் இல்லை அண்ணா. அதனை நம்முடைய நிலப்பரப்பிற்கு, நம்முடைய இனத்திற்கு ஏற்றவாறு, நமக்காக ஒரு தளத்திலே புதுமையானக் கருத்துக்களைப் புகுத்தி தன்னுடைய கருத்துக்களையும் இணைத்து, தனக்கான ஒரு தனிப் பாதையாகப் போட்டுக்கொண்டவர் தான் அண்ணா. செல்லப்பட்ட பாதையிலேயே சென்று அவர்கள் பின்னாலேயே சென்ற கிளிப்பிள்ளை அல்ல அவர். Robert Frost-இன் "two roads diverged in a wood, I took the one less travelled by and that is made the difference in journey" (மிகக் குறைவாகப் பயணப்பட்ட ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தேன், அதுதான் என்னுடைய வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது) என்று. ஆகவே, இத்தனை அறிஞர்கள் சொல்லியிருந்த கருத்துக்களை அவர் உள்வாங்கிக்கொண்டாலும் அந்த அறிஞர்கள் போட்டிருந்த பாதையிலே அவர் பயணம் செய்திருந்தாலும், கண்மூடித்தனமாக, அல்லது எடுத்துக்கொண்ட அந்த சாரங்களை அப்படியே பிழிந்தெடுத்துத் தருகின்ற அந்த வேலையை ஒருபோதும் அண்ணா செய்ததில்லை.

ஓரிடத்திலே அவருக்கு ஒரு கேள்வி கேட்கப்படுகின்றது. நீங்கள் இறைவன் மீதே எப்பொழுதும் குற்றஞ்சாட்டிப் பேசுகின்றீர்கள், ஆனால், இறை நம்பிக்கை உடைய எத்தனையோ பேர் இந்தத் தமிழகத்திலே இருக்கும்பொழுது அவர்களுடைய மனம் புண்படாதா? என்று. அவர் சொல்லுகின்றார், "நான் புதிதாகவா இதைச் சொல்லுகின்றேன், உங்கள் சமயங்கள்தான் இதைச் சொல்லுகின்றன, அதிலிருந்து நான் ஒன்றைச் சொல்லுகின்றேன்" என. இரண்டு புலவர்கள் இருக்கின்றார்கள். ஒருவர் முடவர், ஒருவர் குருடர். குருடர் எப்பொழுதும்

தன்னுடைய முதுகிலே முடவரை ஏற்றிச்செல்வார். இவர்கள் இருவரும் எழுதிய பாடல்கள் தமிழ் இலக்கியத்திலே பிரசித்தி பெற்ற பாடல்கள். அவர்களைக் குறித்து இந்த ஒரு கருத்தை அவர் முன்வைக்கின்றார். இந்த இரண்டு புலவர்களும் கோயம்புத்தூர் ஜில்லாவிலே இருக்கின்ற ஈங்கூறுக்குச் செல்லுகின்றார்கள். சிவபெருமான் கோவிலுக்குப்போய் சிவபெருமானை தரிசனம் செய்கின்றார்கள். அர்ச்சகர் ஆராதனை காட்டிவிட்டு தட்டின் மேல் துணியை மூடி எடுத்துக்கொண்டு சென்றுவிடுகின்றார். இவர்கள் இருவருக்கும் பிரசாதம் வழங்கப்படவில்லை. அதைப் பார்த்த குருடர் பாடுகின்றார்,

**தேங்குபுகழ் ஈங்கூர் சிவனே,**
**வில்லாளி அப்பா!**
**நாங்கள் பசித்திருக்க நியாயமோ**

-என்று. உடனே, சிவன் விடையளிப்பது போல அந்த முடவராய் இருக்கின்ற புலவர் பாடுகின்றார்,

**போங்காணும், கூறுசங்கு,**
**தோல் முரசு கொட்டு ஓசை அல்லாமல்,**
**சோறுகண்ட மூளி யார்சொல்,**

-என்று. அண்ணா இதனை எடுத்துக்காட்டிவிட்டுச் சொல்கின்றார். "நான் சொல்லவில்லை, நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள், திரும்பிப்பாருங்கள், புரட்டிப் பாருங்கள், எடுத்துப்பாருங்கள், கொஞ்சம் அதோடு சிந்தித்துப்பாருங்ள்" என்று. இந்த தடத்தையேதான் அண்ணா இறுதிவரை தன்னிடத்திலே கொண்டிருந்தார். அந்த வகையிலே நீங்கள பற்பல மேல்நாட்டு அறிஞர்களோடும், விற்பன்னர்களோடும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தாலும் தனக்கான ஒரு தனித்திருக்கின்ற உள்ளங்கையை அவர் வைத்திருந்தார்.

ஐந்து விரல்களையும் இந்த விரல்களோடும், பிற நாட்டு விரல்களோடும் கைகளோடும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஆனால் உங்களுக்கான ரேகை என்பதும், உள்ளங்கை என்பதும் மிகமிக வித்தியாசமானது, தனித்தன்மை வாய்ந்தது. அண்ணாவினுடைய கரங்களும் அப்படித்தான். ஆகவே, அவரை எத்தனைதான் நான் பிற நாட்டு அறிஞர்களோடு ஒப்பிட்டு நோக்கினாலும், அவருக்கான வரலாற்றிலே பதியப்பட்ட இடம் என்பது தனிச்சிறப்பு வாய்ந்தது. அண்ணாவை எனக்கு அறிமுகப்படுத்திய இந்த இயக்கம் என்பது என்னுடைய

வாழ்க்கைக்கும், என்னுடைய தந்தையினுடைய வாழ்க்கைக்கும் ஆதாரமான ஒரு இயக்கமாகும். அந்த இயக்கம் குறித்தோ, அதன் தலைவர் குறித்தோ ஓரிரு வார்த்தைகள் சொல்லாமல் அண்ணாவைக் குறித்தான என்னுடைய பேச்சு நிறைவு பெறாது என்று நான் நினைக்கின்றேன். நேரு ஒரு முறை சொன்னார், "அது ஒரு அழகான கரம், மென்மையும், வன்மையும், அழகும் நிறைந்த கரம், அதனை நான் தினமும் காலையில் எழுந்தவுடன் பார்ப்பேன், அது எனக்கு மிகவும் வலுவூட்டுகின்றது" என்று. அந்தக் கரம் பித்தளையினால் செய்யப்பட்டு அவருடைய மேஜையிலே அணிகலனாக வைக்கப்பட்டிருந்த லிங்கனுடைய கரம்தான். எனக்கும் எப்பொழுதும் வலிமையூட்டிக்கொண்டும், வலுவூட்டிக்கொண்டும் இருக்கின்ற கரமாகிய தலைவர் கலைஞர் அவர்களை இந்தக் நேரத்தில் நான் நினைவுகூர்ந்து, இந்த அருமையான வாய்ப்பினை எனக்கு நல்கிய இந்த நிறுவனத்திற்கும், முனைவர் குணசேகரன் அவர்களுக்கும், பசி நேரத்திலும் பொறுமையோடு இந்த உரையைக் கேட்ட உங்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன். கி.ராஜ நாராயணன் ஓரிடத்திலே சொல்லுவார், "மழைக்காகக்கூட நான் பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கியதில்லை, அப்படி நான் ஒதுங்கியபோதும் கூட பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல், மழையையே பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று. ஆனால் நான் நம்புகின்றேன், நீங்கள் ஒதுங்கியபோதும், மழையைப் பார்க்காமல் என்னைக் கொஞ்சம் கவனித்திருப்பீர்கள் என்று.

நன்றி, வணக்கம்!!!

பின் குறிப்பு : கட்டுரைக்கான கருத்துக்கள், மேற்கோள்கள் சில தமிழ்நாடு அரசு நூலகத்துறையின் பேரறிஞர் நூற்றாண்டு நினைவு மலரிலிருந்து (2008) எடுக்கப்பட்டு உள்ளன.

# தமிழ் மறுமலர்ச்சியில் அறிஞர் அண்ணாவின் பங்களிப்பு

**பேரா. முனைவர் சி.இ. மறைமலை இலக்குவனார்**

மறுமலர்ச்சி எனும் தமிழ்ச்சொல் குறிக்கும் "ரினைசான்சு" (Renaissance) என்ற சொல் பிரெஞ்சு மொழியிலிருந்து பெறப்பட்டது. இதனைப் பிரெஞ்சு வரலாற்றாளரான யூல்ஸ்சு மிசெலே (Jules Michelet) என்பவர் முதலில் பயன்படுத்தினார். இது பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுவிசு வரலாற்றாளரான யாக்கோபு புர்க்காட்டு (Jacob Burckhardt) என்பவரால் விரிவாக்கம் பெற்றது. இதன் நேரடிப் பொருள் மறபிறப்பு என்பதாகும். மறுபிறப்பு என்பது இரண்டு பொருளில் பயன்படுத்தப்படுகிறது எனக் கட்டற்ற கலைக்களஞ்சியம் நவில்கிறது.

"மறுமலர்ச்சி என்பதை இரண்டு வித்தியாசமான ஆனால் பொருள் பொதிந்த வழிகளில் பேசமுடியும்: பண்டைய நூல்களின் மீள் கண்டுபிடிப்பினூடாக செந்நெறிக்காலப் (Classic) படிப்பினைகளினதும், அறிவினதும் மறுபிறவி என்பதுமாகும்".

இவ்வரையறையை அடிப்படையாகக் கொண்டால், தமிழ்ச் செவ்வியியல் இலக்கியங்கள் (தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள்) புலவர் தம் வீட்டுப் பரண்களில் முடங்கிக்கிடந்த ஏட்டுச் சுவடிகளிலிருந்து அச்சு வடிவம் பெற்று அனைவர்க்கும் அறிமுகமாகிய காலமாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தமிழ் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். இங்ஙனம் செவ்விலக்கியங்கள், சிறுபான்மைப் புலத்துறையினிரிடமிருந்து மீட்டெடுக்கப்பட்டுப் பொதுநிலைக் கல்விக்கு மடை மாற்றப்பட்ட சூழலில், தமிழர்தம் தொல்பழம் நாகரிகச் சிறப்பும், பண்டைய வரலாற்றில் உரோமானியர்க்கும், கிரேக்கர்க்கும், சீனர்க்கும் எவ்வகையிலும் குறைவுபடாத பண்பாட்டுச் செழுமையும் துலக்கமாகத் தெரியவந்தமையால், தமிழின் எழுச்சி ஓங்கி வளர்ந்தமையும் தமிழ் மறுமலர்ச்சியை மேலும் முடுக்கிவிடும் உந்து திறன்களாக விளங்கின என்பதனையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

பரங்கியர்க்கு அடிமைப்பட்ட பாரத கண்டத்தில் சமற்கிருதம் ஒன்றே செம்மொழி எனவும் வேத, உபநிடதங்களே பண்டைய இந்தியப் பெருநிலப்பரப்பின் நாகரிகச் சின்னங்கள் எனவும் வெள்ளையர்கள் பிறழ உணர்ந்திருந்தக் காலத்தில், கால்டுவெல் ஆய்ந்தறிந்து வழங்கிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' சமற்கிருதத்தின் துணையின்றித் தனித்தியங்க வல்ல தமிழின் ஆற்றலையும், பல்வேறு மொழிகள் கிளைத்தெழுந்தற்குக் காரணமாக விளங்கிய தமிழ் எவ்வகையிலும் சமற்கிருதத்திற்குக் குறைவுபட்டதல்ல என்னும் தெளிவையும் அனைவர்க்கும் பறைசாற்றியது. மேலை நாட்டில் தோன்றியது "புதுமலர்ச்சி" எனவும் தமிழ்நாட்டில் தோன்றியதே "மறுமலர்ச்சி". எனவும் பேராசிரியர் சி. இலக்குவனார் கருதுகிறார். (பழந்தமிழ், ப.214).

கிரேக்க, இலத்தீன் இலக்கியங்கள் வழங்கிய படிப்பினையால் பிரெஞ்சு, ஆங்கில, செருமானிய மொழிகளின் இலக்கியங்களும் ஐரோப்பிய நாட்டின் கலையுலகும் பெற்றது புதுமலர்ச்சியாகும். ஏனெனில் அவற்றுக்குப் பண்டைப் பெருமை என்பதாக எதனையும் குறிப்பிட இயலாது. ஆயின் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் மீள் கண்டுபிடிப்பால் தமிழ்க் கலை, இலக்கியங்கள் பெற்ற புத்தெழுச்சியை மறுமலர்ச்சி எனக் குறித்தலே பொருந்தும் என்னும் பேராசிரியர் சி. இலக்குவனாரின் கருத்து முற்றிலும் ஏற்புடைய ஒன்றேயாகும். ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உவே. சாமிநாதையர் ஆகியோரின் அரும்பெரும் உழைப்பால் செவ்விலக்கியங்கள் அச்சுவடிவம் பெற்றமை தமிழ் மறுமலர்ச்சிக்குக் காரணமாக விளங்கியதெனினும் மறுமலர்ச்சி எனும் இயக்கம் ஒரு வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சியாக அமைந்தது என்பதை ஆய்வாளர்கள் மறந்துவிட இயலாது.

யமகம், மடக்கு, சித்திரகவி எனும் சிமிழ்களில் புலவர்கள் தமிழ்க்கவிதையைச் சிறைப்படுத்தி வைத்த ஞான்று சிந்து, கிளிக்கண்ணி, நாட்டுப்புறப் பாவடிவம் முதலிய பல எளிய வடிவங்களில் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய தமிழ்நடையில் பாடல்கள் யாத்து இவ்வகையில் பாரதியார்க்கும் முன்னோடியாக அமைந்த வடலூர் வள்ளலார் தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடிகளுள் ஒருவர் என்பதைப் பல ஆய்வாளர்கள் கருதிப் பார்த்திலர். ஆரியமே தொல்பெரும் மொழி எனத் தருக்கி நின்ற சமயத்தலைவரிடம் தமிழின் துணையினாலேயே ஆரியமும்

ஏனைய இந்திய மொழிகளும் தழைத்தன என்று அறுதியிட்டுரைத்த வள்ளலாரே இன்றைய செம்மொழி உணர்வெழுச்சிக்கு முன்னோடியாக அமைகிறார்.

தமிழைப் பாடமொழியாகவும், வழக்குமன்றங்களில் வழக்காடு மொழியாகவும், அலுவல் மொழியாகவும் அறிமுகப்படுத்துவதே தமிழர் விடிவுக்கு வழிவகுக்கும் என்பதனை அறிவுறுத்திய மாயூரம் மேதை வேதநாயகர் தமிழ் மறுமலர்ச்சி முன்னோடிகளுள் குறிப்பிடப்படவேண்டிய மற்றொருவர் ஆவார்.

தமிழன் தன் மொழியின் மேன்மையையும் உயர்வையும் உணர்ந்த வேறுபாடுகளை மறந்து இன ஒருமை கொள்ளவேண்டுமென அறிவுறுத்தி, கலைச்சொல்லாக்க முயற்சிகளை மேற்கொண்டு, மெய்ப்பொருள், வரலாறு ஆகிய துறைகளிலும் தமிழினத்தின் தனித்தன்மையை உணர்த்தப் பாடுபட்டு, மறைமலையடிகளாருக்குத் தக்க வழிகாட்டியாக விளங்கிப் பல்வேறு சிறப்புகளால் என்றும் போற்றத்தக்கவராகிய மனோண்மணியம் சுந்தரம் பிள்ளை தமிழ் மறுமலர்ச்சி முன்னோடிகளுள் சிறப்பு வாய்ந்த மற்றொருவர் ஆவார்.

தமிழ் மறுமலர்ச்சி வரலாற்றை விரித்துரைத்தல் நம் நோக்கமன்று எனினும் தமிழ் மறுமலர்ச்சிக்கு அடித்தளம் அமைத்த இப்பெருந்தகைகளைக் குறிப்பிடுவது இங்கு பொருத்தமாகும். இவர்கள் அறிவுறுத்தி நெறிப்படுத்திய பாதையில் தமிழ் மறுமலர்ச்சி விரைந்தியங்கக் களம் கண்டு இப் பெரியோர் கனவை நனவாக்கிய தமிழினத் தலைவர் அறிஞர் அண்ணா என்பதனைச் சுட்டிக் காட்டுவது நமது நோக்கமாகும்.

வேற்றுவர் வருகையும் மாற்றார் ஆட்சியும் தமிழர் தம் கலைகளை மறைக்கும் களைகளாகித் தமிழர் தம் மொழி, கல்வி, கலைகள் ஆகியவற்றை இழந்து அடிமைப்பட்டிருந்தக் காலத்தில் தமிழர் தன்மானம் கொண்டு எழுச்சியுறுவதற்குப் பெருங் காரணமாக விளங்கியது தந்தை பெரியார் தோற்றுவித்த தன்மதிப்பு இயக்கமேயாகும். வடநாட்டில் ஒடுக்கப்பட்டோர் உயர்வு பெறுதற்குத் தூண்டுகோலாக விளங்கிய மகாத்மா பூலே ஆற்றிய அரும்பணிகளுக்கு ஒப்பாகத் தந்தை பெரியார் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுவர். எனினும் பெரியார் ஆற்றிய பணிகள் சமூகநீதி பெறும் போராட்டமாக மட்டும் அமைந்துவிடவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பெரும்பான்மையினரின் உரிமைகளை மறுத்த அவர்களைக் கோயில், கல்விக்கூடம்

ஆகியவற்றிலிருந்து ஒதுக்கிவைத்து, முறையற்ற இப்பாகுபாட்டை "இறைவன் ஏற்பாடு" என்று அவர்களே நம்பும் வகையிலான புராணங்களையும் சடங்கு ஆசாரங்களையும் கற்பித்து, அடிமைகளே தம் விலங்குகளைச் செய்துகொண்டு தம்மைத் தாமே தளைப்படுத்திக்கொள்ளும் விந்தையான கொடுமையை வேரறச் செய்யும் புரட்சியைச் சாதித்து வெற்றி கண்ட சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியார் ஒருவரேயாவார்.

அத்தகைய புரட்சியாளரின் இயக்கத்தில் அண்ணா தம்மை இணைத்துக் கொண்டதால் தமிழ் மறுமலர்ச்சிபெற உழைக்கும் நோக்கமும் வேட்கையும் அவருக்குப் பொதுவாழ்வில் ஈடுபட்ட பொழுதே ஏற்பட்டுவிட்டது எனலாம்.

அண்ணா, தமது இளமைப் பருவத்திலேயே முசிறி வட்டம் துறையூரில் 22.08.1937இல் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்டார். அவர் தமது தலைமையுரையில், "தமிழ் மொழி-இதுவே நாம் தமிழர் என்பதைக் காட்டுவது. இதற்கு ஆபத்து வந்துவிட்டால், நமது ஒற்றுமை, கலை, நாகரிகம் யாவும் நாசம்! ஆகவே தமிழைக் காப்பாற்றுங்கள் (த.உ.த.உ.பக்.42) எனத் தமிழர்க்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அக்காலக்கட்டத்தில் ஆங்கிலம் அலுவல் மொழியாகவும் சமற்கிருதம் வழிபாட்டு மொழியாகவும் தெலுங்கும் கன்னடமும் இசையரங்கில் இசைப் பாடல்களுக்குரிய மொழியாகவும் கொலு வீற்றிருக்கத் தமிழ் வீட்டுமொழியாக முடக்கப்பட்டிருந்தமையே அறிஞர் அண்ணாவால் குறிப்பிடப்படும் "ஆபத்து"ஆகும்.

நூல்களிலும் இதழ்களிலும் வழங்கப்பட்ட தமிழ்நடை சமற்கிருதச் சொற்கள் நிறைந்த கலப்பு நடையாக விளங்கி வந்தது. மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் முதலான தமிழ் அமைப்புகளும் அவை உருவாக்கிய புலவர்களும், பரிதிமாற் கலைஞர், மறைமலை அடிகள், திரு.வி.க. கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், கா.சு. பிள்ளை முதலான எண்ணற்ற புலவர் பெருமக்களும், சமற்கிருதத்தின் வல்லாண்மையிலிருந்து தமிழை மீட்க மறைமலை அடிகள் தமது புதல்வி நீலாம்பிகை அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்கத் தனித்தமிழியக்கம் உருவாக்கினார். அத் தமிழியக்கத்தின் எழுச்சியினால் உருவாகிய மறுமலர்ச்சி, ஒரு மக்கள் இயக்கமாகப்

பரவி வெற்றியடைவதற்குத் தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் மேற்கொண்ட பணிகளே காரணம் எனலாம்.

"நான் தமிழுக்குத் தொண்டு செய்வது தமிழுக்காக என்று அல்ல. தாய்மொழியைப் பாதுகாத்தல் ஒவ்வொருவருடைய கடனாகும். நம் தமிழ்மொழி தாய்மொழி என்றமட்டிலும் அல்லாமல் எல்லா வளப்பங்களும் கொண்ட சிறந்த மொழி, இந்தியாவிலேயே பழமை வாய்ந்த பண்பட்ட மொழியாகும். அப்படிப் பெருமைக்குரிய மொழிக்கு ஏற்படும் ஆபத்துகளை எதிர்த்து அது மேன்மை அடையவேண்டும் என்றும் அதற்காகப் போராட்டங்கள் நடத்துகின்றோம் "(பெரியார் கணினி-44, மொழி, ப.896) எனக் கூறிய பெரியார் வடமொழி, இந்தி ஆகியவற்றின் மேலாண்மையால் தமிழ் தனக்குரிய முதன்மையை இழந்து நிற்பதை மக்களுக்கு உணர்த்திப் பல போராட்டங்கள் நடத்திச் சிறைசென்றதுடன் இயன்றவரை பிறமொழிகளின் வல்லாண்மையிலிருந்து தமிழ் விடுதலைபெற ஆவன செய்தார். அவர்தம் அடியொற்றிப் பொதுவாழ்வில் ஈடுபட்ட அண்ணா பின்னர் தனியொரு கட்சியைத் தொடங்கினாலும் தமிழ்மறுமலர்ச்சி காண்பதையே முதன்மைப் பணியாகக் கொண்டு ஒல்லும் வகையெலாம் உழைத்தார்.

அரசியல் களத்தில் பல போராட்டங்களை வகுத்து, ஆள்வோர் தமிழுக்கு ஆக்கம் பயக்கும் நடைமுறைகளைப் பின்பற்றக் குரல் கொடுத்தார். இந்தித்திணிப்பை எதிர்த்து அவர் நடத்திய பல போராட்டங்களும் அன்று சென்னை மாகாணம் என்றழைக்கப்பட்ட இம்மாநிலத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர்சூட்டவும் தமிழ் பயிற்சிமொழியாகவும் ஆட்சி மொழியாகவும் வழிவகுக்கும் சட்டங்களைக் கொணரவும் அவர் ஓயாது உழைத்தார். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் நாவன்மையால் சொற்பொழிவுக் கலை மலர்ச்சி பெறச் செய்தார்.

இலக்கிய அரங்கில் நாடகம், புதினம், சிறுகதை, உரைநடை ஆகியவை மறுமலர்ச்சி பெறவும் திரைப்படம் என்னும் கலைவடிவம் முழுமையும் தமிழ்நெறி தழுவி அமையும் வகையிலும் தமிழிசை செல்வாக்குப் பெறவும் அண்ணா உழைத்தமை வரலாற்றுச் சிறப்புமிக்க பெரும்பணி எனலாம். இங்ஙனம் ஒரு மொழியின் மறுமலர்ச்சிக்காக அரசியல் அரங்கில் போராட்டங்கள் நடத்தியும், ஆட்சிப் பொறுப்பேற்றுப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் அதே வேளையில்

படைப்பிலக்கியங்கள் பலவற்றைத் தம் எழுத்தாற்றலால் வழங்கியும் உழைத்த பெருமை வரலாற்றில் அறிஞர் அண்ணாவுக்கே உரியது எனல் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

வழக்குத் தமிழில் பிறமொழிக்கலப்புடன் மேடையில் பேசிவந்த காலத்தில் எழுச்சியும் உணர்ச்சியும் கலந்த பொழிவுகளை நிகழ்த்திய பெருந்தகை வ.உ.சி. அவர்களேயாவார். அவரது பேச்சைக் கேட்டால் உயிரற்ற உடலும் உணர்வு கொண்டடெழுந்து போராட்டத்திற்கு அணிவகுத்துவிடும் என விஞ்சுதுரை எழுதிய குறிப்பு மட்டுமே சான்றாக விளங்குகிறது. சிறைசென்று மீண்ட வ.உ.சி. அதன்பின், பதிப்புப் பணியிலும் எழுத்துப்பணியிலும் ஈடுபடும் சூழலுக்காளாயினார். அவரது பொழிவுகள் எழுத்து வடிவம் பெறவுமில்லை. பிறமொழிக் கலப்பின்றி அடுக்குத் தமிழில் இலக்கியச் சுவை ததும்ப உரையாற்றி மேடைப் பொழிவில் தனி முத்திரை பதித்தவர் திரு.வி.க. இவரது பொழிவுகள் அச்சுவடிவம் பெற்றுள்ளன. ஒலிப்பதிவும் பெற்றுள்ளன. ‘அ’ னாவில் தொடங்கினால் ‘அ’ னாவிலே அனைத்துச் சொற்களும் அமையும் வண்ணம் மோனைத் தமிழில் பேசிக் கூட்டத்தினரை மயங்கச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த மணி. திருநாவுக்கரசு முதலியார் மேடைப் பொழிவு வரலாற்றில் தனிச் சிறப்பு வாய்ந்தவர். அவர் எந்த எழுத்தில் முதல் சொல்லைத் தொடங்குகிறாரோ அதே எழுத்தில் தொடங்கும் சொற்களையே அந்தப் பொழிவு முழுதும் பயன்படுத்துவாராம். ஒன்றரை மணி நேரத்துக்குக் குறையாமல் அவரது பொழிவு அமைந்திருக்குமாம். இங்ஙனம் தமது பொழிவைக் கேட்பவர்கள் மோனைத் தமிழ்ச் சொல்லகராதியைக் கற்றுக்கொள்ள வழிவகுப்பதாகவும் தமிழ் இலக்கியங்களின் இனிமையைத் தெரிந்துகொள்ள ஆற்றுப்படுத்தும் ஆற்றலுடையதாகவும் அமைந்த அவரது சொற்பொழிவுகள் பதிவுபெறாமல் போயின. தந்தை பெரியாரின் பொழிவுகள் எளிய வழங்குத் தமிழில் கேட்போரின் சிந்தனையைத் தூண்டி அறிவைக் கூர்மைப்படுத்தும் ஆற்றல் மிக்கவையாக அமைந்தன.

வ.உ.சி.யின் உணர்வு வேகமும் திரு.வி.க.வின் இலக்கிய இனிமையும் அடுக்குத் தொடரும் மணி. திருநாவுக்கரசு முதலியாரின் மோனை நயச் சிறப்பும் காப்பிய மேற்கோள்களும் பெரியாரின் பகுத்தறிவுப் பரப்புரையும் ஒருங்கே இணைந்த அண்ணாவின் சொற்பொழிவு நூறாயிரக்கணக்கான மக்களை ஈர்த்தது: இளைஞர்களைக் கவர்ந்து இயக்கத்தில் இணைந்து

பணியாற்றவைத்தது; தமிழ் மறுமலர்ச்சியும் அரசியல் விழிப்புணர்ச்சியும் தழைத்தோங்கச் செய்தது.

புராண நாடகங்களும் சேக்சுபியர் நாடகங்களின் மொழிபெயர்ப்பாயமைந்த நாடகங்களும் நாடகமேடையில் அரங்கேறிவந்த வேளையில் அண்ணா சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் அடித்தள மக்கள் மனத்தில் பதியும் வண்ணம் படைத்த நாடகங்கள் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்தின.

''அண்ணா விரும்பிய பயன்படுத்திய இலக்கியவடிவம் நாடகமாகும். சமுதாயச் சீர்திருத்தம், அரசியல் எள்ளல், உண்மை நிகழ்ச்சிகள், வரலாற்று நிகழ்ச்சிகள், இலக்கியச் செய்திகள் இவற்றின் அடிப்படையில் கற்பனைத் தன்மையுடன் ஓரங்க நாடகங்களை எழுதியுள்ளார். பெரு நாடகங்கள் எட்டும் ஓரங்கநாடங்கள் நாற்பதற்க்கும் மேற்பட்டவையும் எழுதியுள்ளார். ''(அறிஞர் அண்ணா படைப்புகள்: பன்முகப் பார்வை'' தொகுதி.2 அறிஞர் அண்ணாவின் நாடகங்களில் சீர்திருத்தக் கருத்துகள் - சு. தாமரைச் செல்வி, ப.396)

''சாதி அடியாக வளர்ந்த ஆணவம். தீண்டாமைக் கொடுமை, மடாதிபதிகளின் உல்லாச வாழ்வு, மத குருமார்களின் ஆதிக்க வெறி, மேட்டுக்குடிகளின் சுரண்டல் முறை, தொழிலாளியின் துயரம், புரட்டு வாழ்விற்காக இழிவான செயல்களில் ஈடுபடல் முதலான பல்வேறு சமுதாயப் பிணிகளையும் எடுத்துக்காட்டி, அவற்றின் ஊற்றுக்கண்ணாக உள்ளவர்களே திருந்தும் சூழ்நிலைக்கு ஆளாகும் வகையைச் சித்திரிப்பன அண்ணாவின் நாடகங்கள்''. (அறிஞர் அண்ணா படைப்புகள்:: பன்முகப் பார்வை ''தொகுதி 1, அண்ணாவின் நாடகத்திறன் - ம. பானுமதி, ப.510) என்னும் ஆய்வாளர் தம் பார்வைகள் இங்குக் குறிக்கத்தக்கன. எனினும் அண்ணாவின் நாடகப் புலமையையும் படைப்பாற்றலையும் அவரது நாடகங்களைப் பார்க்கும் நல்லவாய்ப்புப் பெற்றவரே நன்கு போற்றமுடியும் அங்ஙனம் பார்க்கும் வாய்ப்புப் பெற்ற தந்தை பெரியாரும் எழுத்தாளர் கல்கியும் வாயாரப் புகழ்ந்துள்ளமை வரலாற்றுப் பதிவுகளாக விளங்கி அவர் புகழை எடுத்துரைக்கின்றன. 'தென்னாட்டுப் பெர்னார்டு சா' என்று கல்கி அண்ணாவைப் போற்றியமை அவரது அன்பை வெளிப்படுத்தும் ஊக்கவுரையன்று. அண்ணாவின் நாடங்களில் வெளிப்பட்ட அரசியல் அங்கதம், சமூகமுரண்கள் குறித்த எள்ளல், சிரிக்கவைத்துப் பின் சிந்திக்கத்தூண்டும் நகைச்சுவை. நடப்பியல்

சார்ந்த நிகழ்ச்சியமைப்பு, இலக்கிய நயம் செறிந்த உரையாடல் ஆகியன அண்ணாவின் நாடகங்களை அணிசெய்யும் திறன் நோக்கியே கல்கி அங்ஙனம் பாராட்டினார்.

நாடகத் தமிழில் மறுமலர்ச்சி கண்ட அண்ணா, திரைப்படத் துறையிலும் பெரும் மாறுதல்களைச் செய்தார். இங்ஙனமே சிறுகதை, புதினம், உரைநடை ஆகியவற்றில் அவர் செய்த புரட்சிகளும் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அவர் கால்கோளாக விளங்கியமையும் விரிக்கிற் பெருகும். ஆயின் இருபத்தோராம் நூற்றாண்டு வரை, தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அவர் வழிகாட்டியாக படைப்பு நெறிகள் உற்றதுணையாக விளங்கும் என்னும் உண்மையும் மாற்றுத் தரப்பினரும் மனமுவந்து ஏற்கும் உண்மைகளாகும்.

அண்ணா உருவாக்கிய மறுமலர்ச்சியைச் சுருங்கக் கூறுவதானால் பேராசிரியர் சி. இலக்குவனார் கூற்றுப் பொருத்தமாக அமையும்..

''இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று புதுமைப் பாவலர்கள் முழக்கம் செய்தனர். எங்கு நோக்கினும் இன்பத் தமிழ்; செந்தமிழ்; இதழ்களில் செந்தமிழ்; மேடைப் பேச்களில் நற்றமிழ்; மாநாடுகளில் வண்டமிழ்; நற்றமிழில் பேசுதலே நற்புலமைக்கு அடையாளம் என்ற எண்ணம் உருப்பெற்றுவிட்டது. நமஸ்காரம் போய் வணக்கம் வந்தது; சந்தோஷம் மறைந்து மகிழ்ச்சி தோன்றியது; விவாஹம் விலகித் திருமணம் இடம்பெற்றது; வருஷம் கழிந்து ஆண்டு நிலைபெற்றது. இவ்வாறு தமிழ் மீண்டும் மலரத் தொடங்கியது''. (பழந்தமிழ்:ப.214) இன்றைய சூழலில் அண்ணா தோற்றுவித்த மறுமலர்ச்சி மெல்லமெல்லத் தேய்பிறையாகும் நிலையைக் காண்கிறோம்.

பெருகிவரும் ஆங்கிலக்கல்வி, உலகமயமாதல், வெளிநாட்டுப் பணியின் மீது விருப்பு, ஊடகங்களின் தமிழ் வெறுப்பு, பிழைமலிந்த தமிழ் உரையாடல் திரைப்படங்களில் பெறும் செல்வாக்கு ஆகியவற்றைக் காரணங்களாகக் கூறலாம்.

அண்ணா உருவாக்கிய மறுமலர்ச்சி தமிழ் மொழியையும் தமிழரையும் ஒருங்கே உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் மிக்கது எனத் தெளிந்து அவர்தம் கொள்கைகளைப் போற்றி அவர் வழியைப் பின்பற்றித் தமிழும் தமிழரும் தக்காங்கு உயர்ந்திட ஒல்லும் வழியெலாம் ஓயாது உழைத்தலே நாம் அவருக்கும் நாட்டுக்கும் ஆற்றவேண்டிய கடனாகும்.

# துணைநூற் பட்டியல்

1, இலக்குவனார், சி. பழந்தமிழ், இலக்குவனார் இலக்கிய இணையம், சென்னை, 2009.

2. தமிழனை உயர்த்திய தலைமகன் உரைகள், தொகு:வேள்நம்பி, கோ. சீத்தை பதிப்பகம், சென்னை-4, 2009.

3. பெரியார் கணினி, நன்னன், மா. ஞாயிறு பதிப்பகம், சென்னை-15. 1996.

4. அறிஞர் அண்ணா படைப்புகள்; பன்முகப் பார்வை, தொகுதிகள், 1&2 தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 2009.

# அறிஞர் அண்ணா
# பண்பாட்டு மறுமலர்ச்சியின் தாய்

பேரா. முனைவர். அருணா. இராசகோபால்

### தோற்றுவாய்

இடைக்கால ஐரோப்பிய மக்களின் மனதில் மூட நம்பிக்கைகள் மண்டிக்கிடந்தன. கண்மூடித்தனமாக எதையும் பின்பற்றும் இயல்பினராய் இருந்தனர். கால வளர்ச்சி காரணமாக அவர்கள் உள்ளத்தில் கருத்து வளர்ச்சி ஏற்படலாயிற்று. கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களைக் குருட்டுத்தனமாகப் படிப்பதை விட்டுவிட்டு ஏன்? எப்படி? என்ற கேள்விகளை எழுப்பிப் படிக்கத் தொடங்கினர். பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் ஒட்டாமன் துருக்கியப் பேரரசு உரோமப் பேரரசின் பல பகுதிகளைக் கைப்பற்றியது. கி.பி.1453ஆம் ஆண்டில் கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தையும் கைப்பற்றினர். அந்நகரில் வாழ்ந்த கிரேக்க அறிஞர்கள் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்குத் தங்களின் அறிவுச் செய்திகளுடன் சென்றடைந்தனர். இத்தாலியே உலக மறுமலர்ச்சியின் தாயகம். மறுமலர்ச்சி, தொழிற் புரட்சிக்கு வழிவகுத்தது. தொழிற் புரட்சி வேளாண்மைப் புரட்சியை உருவாக்கியது. இலக்கியத் துறை மாற்றங்கள் வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் புதிய மாற்றங்களை உருவாக்கின.

இந்தியாவின் மறுமலர்ச்சித் தந்தை மராத்தியத்தில் பிறந்த மகாத்மா ஜோதிஃபாபூலே. சமய, சமுதாயத் தளங்களில் வேதங்களின் ஆதிக்கங்களை வீழ்த்த விரும்பினார். பார்ப்பன-பணியா ஆதிக்கத்தை அழிக்க விரும்பினார். திராவிட தமிழ் நிலத்தில் ஆசிவகம், பௌத்தம், சமணம், வள்ளுவம், சங்க மரபுகளின் துலக்கங்களால் உருவானது புதிய விழிப்பு. தமிழ் இயக்க மூலவர்கள்: வள்ளலார், மனோன்மணியம் சுந்தரனார், மாயுரம் வேதநாயகம் ஆகியோர். திராவிட இயக்க மூலவர்கள் தவறத்து மாதவன் (மலையாளி), மரு.நடேசனார் (தமிழர்) வெள்ளுடைவேந்தர், தியாகராயர் (தெலுங்கர்). தந்தை பெரியார் வகுப்புரிமையை ஏற்காத இந்திய பேராயக் கட்சியை விட்டு 1925ல் வெளியேறி தன்மான இயக்கம் கண்டார்; 1938ல் நீதிக் கட்சியின்

தலைவரானார். திராவிட மக்களின் சமுதாய நீதி (வகுப்புரிமை) கோரிய தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி) தனது படிமலர்ச்சியில் திராவிடர்க் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய தளங்களில் அவற்றின் கொள்கை செழுமைக்கு மறுமலர்ச்சியை இணைத்துக் கொண்டன. அமைப்பு வழியில் மாற்றங்களும் பெற்றது. அண்ணாவின் மறுமலர்ச்சி பணிகளை (1) சமுதாயம், (2) சமயங்கள், (3) மொழி உரிமை, (4) திராவிட நாடு விடுதலை, (5) கலை, இலக்கியம் பண்பாடு ஆகிய உட்தலைப்புகளில் நோக்குதல் நலம்.

## (1) சமுதாயம்

### இந்திய சமுதாய அமைப்பு

இந்திய சமுதாயங்கள் (என்று சொல்லப்படுபவை) வரலாற்றுக் காலந்தொட்டு வேதாந்த–இந்து சமுதாயமாக படிமலர்ச்சி பெற்றிருக்கின்றது. இந்து வாழ்வு முறையே இந்தியாவில் நிலவுகிறது. "இந்து என்ற சொல்லிற்கு பொருளோ (அர்த்தமோ) வரலாற்று மூலமோ இல்லை யென்றாலும் பொதுவாக நாம் ஆரியர் என்று அழைக்கும் மக்களின் வளர்ச்சிப் படிமலர்ச்சியாக விரிந்திருக்கும் சாதி முறையின் ஒரு பகுதியே அது" (டாங் கே, 1972/249–272). "கதம்பக் கருத்துகள் நிறைந்ததே இந்துமதம் ...... இது வேதமதமாகயிருந்து, ஆரிய மதம் என்றாகி, பிராமண மதம் ...கடைசியில் இந்து மதம் என்று சொல்லப்படுவதாகும் (பெரியார், 1973/5). இவர்களின் கருத்துகளின் பின்புலத்தில் கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்தலாம்:

ஆரிய வாழ்வுமுறை → வேத வாழ்வுமுறை → வேதாந்தம்

↓

இந்துத்துவா ← இந்துசமயம் ← பிராமண (பார்ப்பன) சமயம்.

பொதுவுடைமையின் தந்தை கார்ல்மார்க்ஸ் (1853/7) "(இந்திய) இந்த சிறு சமூகங்கள் சாதி வேற்றுமையாலும், அடிமை முறையாலும் கெட்டிருந்தன" என்றார். "இந்தியாவின் ஏற்றத் தாழ்வுகள் சமுதாயப்படிகளாக இறுகிவிட்டன. இந்நிலையில் குறிப்பிடத்தக்க வெளிப்பாடே சாதிமுறை" (குணார் மீர்டால், 1967/258–259). "....இயங்காத ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் (இந்தியர்கள்) ஆன்மீக வழியினர் என்று அழைத்துக் கொள்கின்றனர் (நேரு, 1967). அறிஞர் அண்ணா (1989/13–14) இந்திய சமுதாயங்களின் ஒரு பகுதியான திராவிட சமுதாயம் பற்றிய மதிப்பீட்டில் "சின்னாபின்னமாக்கப்பட்ட சமுதாயம், சிதறிக்கிடக்கும் சமுதாயம் .... ஜாதிக் கொள்கையில் ஒருவித கேவலமான இறுமாப்பு இருக்கிறது..... சிலர் பயனற்ற கர்வங் கொள்கிறார்கள். பலர் சிறுமையும் அதைரியமும் அடைகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

இந்திய சமுதாயம் பற்றிய மதிப்பீட்டில் அறிஞர் அண்ணா, உலக அறிஞர்கள் கருத்துக்களோடு இணைந்து நிற்கிறார். இந்திய சமுதாய அமைப்பு உலகின் ஆன்மீகச் சமுதாயம், இந்தியர்கள் ஆன்மீகவாதிகள் என்று ஆளும் குழுமம் (Ruling class) அரசு ஆதிக்கம், கோயில் ஆதிக்கம், சமுதாய ஆதிக்கம் ஆகியனவழி பரப்புரை செய்கின்றது.

**ஆதிக்கங்களின் வடிவங்கள்**

"ஆதிக்கம் செலுத்தும்போக்கு ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் விதமான வடிவம் கொள்ளுகிறது .... எளியோர்தமை வலியோர் சிலர் வதை புரிவதுதான். இனம், மதம், மொழி, நிறம், பணம் என்பதை ..... ஆதிக்கக் கருவியாகப் பயன்பட்டு வருவதாகக் காண்கிறோம்." (அண்ணா, 1981அ/ 74-75). உலகின் ஆதிக்கங்களின் வடிவங்களை இனங்கண்டார் அண்ணா. இந்தியாவில் இனம், மதம், மொழி, நிறம், பணம், கல்வி அறிவு, அரசியல் அனைத்தும் ஆதிக்கங்களின் வடிவங்களாக நின்று நிலவுகின்றன.

அண்ணா, ஆரிய உயர்வுச் சிக்கல், இந்துமத ஆதிக்கம், இந்திமொழி ஆதிக்கம், வடநாட்டு வணிக ஆதிக்கம், கல்வி வாய்ப்பு பெற்ற உயர்சாதிகள் ஆதிக்கம், பார்ப்பன-பணியா கட்சியான பேராயக் (காங்கிரஸ்) கட்சியின் அரசியல் ஆகிய அனைத்தையும் எதிர்த்துப் போராடினார்.

பார்ப்பனரல்லாத திராவிட மக்களின் (சூத்திரர்கள் - தாழ்த்தப் பட்டோர்) உரிமைகளுக்குப் போராடிய நீதிக்கட்சி, திராவிடர்க் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய தளங்களில் போராடியவர் அண்ணா. இந்தியாவின் ஆதிக்கங்களை எதிர்த்துப் போராட அண்ணா அழைப்பு விடுத்தார். "சாதியினை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த வாரீர், அது மக்களாட்சி நெறியோடு ஒன்றி வாழாதது; மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த வாரீர், அது அறிவியலோடு ஒன்றி வாழாதது; அனைத்துச் சுரண்டல்களையும் எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த வாரீர், இவை சமன்மை; உடன்மை, உரிமை ஆகியவற்றோடு ஒன்றி வாழாதது" என்று அறிவுக் குரல் எழுப்பினார் அண்ணா (மேற்கோள் மூர்த்தி & சங்கரன், 1971/33) ஆரிய, அக்கிரகாரக் கொடுமைகளைச் சுட்டிய அண்ணா (1981/43) "சேரியும் கூடாது அக்கிரகாரமும் ஆகாது" என்று சமனியம் முழங்கினார். அதே சமயம் அண்ணா சூத்திரர்களின் ஆரியத்தைக் கண்டிக்கத் தவறவில்லை. "எட்டிப்போடா சூத்திரபயலே என்ற ஐயர் பேச்சும் ஆரியம்தான்! கிட்டவராதே சேரிப்பயலே! என்று முதலியார் மிடுக்கும் ஆரியம்தான்! படையாச்சிக்கு இவ்வளவு உயர்வா என்று கேட்கும் பேச்சும் ஆரியம்தான்! மறவர் முன்பு மட்டுமரியாதையோடு நட! தேவர் வருகிறார் எழுந்து நில்! நாடார் அழைக்கிறார் ஓடிவா! செட்டியார்

கேட்கிறார் தட்டாமல் கொடு! என்று ஆரியம் பல முறைகளில் தலைவிரித்தாடுகிறது ...நமது பணி அக்கிரகாரத்தை ... பஸ்மீகரம் செய்துவிடப் போவதாகக் கூறுவதன்று; ஆரியம் இருக்குமிடம் எல்லாம் அறிவுச் சுடர் கொளுத்தி அதன்மூலம் ஆரியத்தை ஒழிப்பதாகும்" (விவேகானந்தன், 1984 மேற்கோள்/ 216).

**சாதிய ஒடுக்குமுறைகள்**

இந்தியாவின் ஊரகக் குடியரசுகள் (கிராமங்கள்) அறியாமையின் தாழ்வாரங்கள், கொடியவர்களின் கூடாரங்கள். "கீழ்த்திசைக் கொடுங்கோன்மைக்கு வலுவான தளம் அமைத்தவை இந்தியாவின் சமுதாயங்கள்" (கார்ல்மார்க்ஸ், 1853/1978-40),

இந்தியாவில் பன்னெடுங்காலமாக நிலவி வரும் சாதியக் கொடுமைகள், ஒடுக்குமுறைகள், ஒதுக்குமுறைகள் பலவகைப்பட்டவை. அண்ணல் அம்பேத்கர் (1989/21-22). அவர்கள் பல வகைகளைப் பட்டியலிடுகிறார்: (1) தாழ்த்தப்பட்டோருக்கு தனி குடியிருப்புகள் (2) ஊரில் தென்திசை வாழிடம், (3) அவர்களின் உடலும், நிழலும் தீட்டு ஏற்படுத்தும், (4) செல்வம் பெற்றிருக்கக் கூடாது, (5) ஓட்டு, காரை வீடு கூடாது, (6) நல்ல உடை உடுத்தக் கூடாது, (7) குழந்தைகளுக்கு மொழிவளம் கொண்ட பெயர் கூடாது, (8) உயர்சாதியார் முன்பு நாற்காலியில் அமர்க் கூடாது, (9) குதிரையில் விழாவின்போது வீதி உலா போகக் கூடாது, (10) தெருக்களில் ஊர்வலம் கூடாது, (11) மற்றவர்களை வணங்கவேண்டும், (12) பண்பாடு கொண்ட மொழி பேசுவது குற்றம், (13) புனிதத் திருவிழாக்கள்போது தாழ்த்தப்பட்டோர் ஊருக்குள் வரக்கூடாது, (14) பிறரின் சமயக்குறியீடுகளைப் பூணக்கூடாது, (15) வாழ்நிலையில் உயர்ந்தவர்களாகக் காட்டக் கூடாது, (16) கோவில் விழாவின்போது தாழ்த்தப்பட்ட பெண்களை, நகைச்சுவை இழிமை (ஆபாசம்) நிகழ்ச்சிகளுக்கு ஒப்படைக்க வேண்டும், அறிஞர் அண்ணா (2008அ/36-37) "மனத்தை வாட்டும் சேதி மனிதத் தன்மையைப் பரிகசிக்கும் சேதி" என்று குறிப்பிட்டு குவாலியர் சமஸ்தானத்தில் கொண்டாடப்படும் ஜம்லா பண்டிகைபோது தாழ்த்தப்பட்ட பெண்மக்களை கேலி பேச வர மறுத்ததற்கு அம் மக்களைத் தாக்கிய செய்தியைக் கடுமையாகக் கண்டித்தார்.

பரமக்குடியில் சாதியவன்மம் கொண்டவர்களால் கொலையுண்ட திரு. இமானுவேல் அவர்களுக்குப் புகழாரம் சூட்டினார் "திரு. இமானுவேல் ... தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல. தமிழ் நாட்டிற்கே ஒரு பெரிய தியாகம் செய்திருக்கிறார். இமானுவேல் ராமநாதபுரத்து மண்ணிலே மறைந்த மாவீரன் மட்டுமல்ல, உலகமே புகழும் ஒரு வீரனாகவே

அவரைக் கருத வேண்டும். நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு தன்னையே பலியாக்கிக் கொண்ட தியாகியை இழந்தோம். அவர் பெயர் இந்நாட்டு சரித்திரத்திலே பொறிக்கப்பட வேண்டியது. இது அண்ணாவின் 1957 சட்டமன்ற பேச்சு (அறிஞர் அண்ணா, 1977/99). எளிய மக்கள் பிரிவின் மனித உரிமைப் பேரொளியை உலகம் புகழும் வீரனாக, நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபட்ட தியாகியாக, தமிழ்நாட்டிற்கே பெரிய தியாகம் செய்தவராக அண்ணா போற்றிப் புகழ் அஞ்சலி செலுத்தினார்,

## உள்நாட்டு அரட்டல் (Terrorism)

இந்தியாவை அண்மைக் காலங்களில் அச்சுறுத்தும் எல்லை தாண்டிய அரட்டல் கொடுமை முறைக்குக் காரணியம்:

### கொடுமை முறைக்கே காரணியம்

சாதி → சாதிக் கொடுமைகள் → சமய மாற்றம் (இசுலாம் நோக்கி)

↓

அண்டை நாட்டு இசுலாமியர் ← பாபர் மசூதி உடைப்பு ← பழி வாங்கும் இந்துத்துவா கோட்பாடு

↓

அயலக அரட்டல் (Terrorism). சான்று : மீனாட்சிபுரம் மதமாற்றம் (1980) உள்நாட்டு சாதிய அரட்டல் (பயங்கரவாதம்) ⇆ எல்லை தாண்டிய சமய அரட்டல் (பயங்கரவாதம்).

அறிஞர் அண்ணா (.....) "தலைமுறை தலைமுறையாக அவர்கள் (தாழ்த்தப்பட்டவர்கள்) ஏதோ குற்றம் செய்ததற்குத் தண்டனையாக அல்லது அவர்கள் தமக்கு (தங்களுக்கு) இழைக்கப்படும் கொடுமைக்காக நம்மை தண்டிக்கும் சக்தியைப் பெறாத காரணத்தால்", என்று குறிப்பிடுகிறார். அதாவது கொடுமை இழைக்கும் இந்துக்களைத் தண்டிக்க வேண்டும், வன்முறைகளை வன்முறைகளால் சந்திக்க வேண்டும் என்பது அண்ணாவின் நோக்கம் என கருதலாம். "மனப்புண்ணை .... ஆற்றிக் கொள்ள அந்த மக்களில் பலர் சிலுவை சூரணமோ, இஸ்லாமிய முறையையோ நாடுகின்றனர் .... மக்களிடையே காட்டிய பேத உணர்ச்சி கடவுள் வரை சென்று விட்டது".

அண்மைக் காலங்களில் தென் தமிழகத்தில் வன்முறையாளர்களின் வன்முறைகளை, வன்முறைகளால் சந்தித்த உழைக்கும் எளிய தாழ்த்தப்பட்ட இயக்கத்தின் செயல் திட்டங்களால் –

எதிர்த்தாக்குதல்களால், அங்கு சாதிக் கலவரங்கள் பெருமளவு நின்றன; சமய மாற்றமும் நின்றுவிட்டது. சாதிக் கொடுமைகள் நிற்க 'எதிர்த் தாக்குதல் தேவை' என்றார் தந்தை பெரியார். ஆடுகளை மட்டுமே பலியிடுவார்கள்; சிங்கங்கள் பலியிடப்படுவதில்லை என்றார் அண்ணல் அம்பேத்கர். தாழ்த்தப்பட்ட மக்கள் / பழங்குடி மக்கள் மீதான அண்மைக் கால வன்கொடுமை தடுப்புச் சட்டம் (சட்ட எண் 33/1989) பிரிவு 23, உபபிரிவு (1)ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு நடுவண் அரசு கலவரப் பகுதிகளில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துப்பாக்கி (சுடுகருவி) உரிமம் வழங்க பரிந்துரை செய்துள்ளது (தலித் ஆய்வு மையம், 1996). இவை அனைத்தும் அண்ணாவின் கருத்தியலுக்கு அணி செய்கின்றன.

**சமுதாய நீதி – சரிசம வாய்ப்பு**

இந்தியாவின் முதல் மக்களாட்சி முறை வழி மலர்ந்த நீதிக் கட்சி அரசு வேலை வாய்ப்பில் அனைவருக்கும் பங்கு வழங்கக் கோரி செயலாற்றி வந்தது. இரட்டை ஆட்சி முறையில் 1920ல் பொறுப்பேற்ற நீதிக்கட்சி வகுப்புவாரி முறைக்கான அரசு ஆணைகளை வெளியிட்டது. டாக்டர் சுப்பராயன் தலைமையில் உருவான சுயேட்சை அமைச்சரவையில் (1926) இடம்பெற்ற முத்தையா முதலியார் தேவையான அரசாணைகளை வெளியிட்டார். 'பறையன்' இதழ்வழி தாழ்த்தப்பட்ட தலைவர் இரெட்டமலை சீனிவாசன் கோரிக்கையால் அவர் சார்ந்த மக்கள் இடம்பெற வாய்ப்பேற்பட்டது. பிராமணர் அல்லாதார் தொகுப்பில் முற்பட்ட பிரிவினர் ஆதிக்கம், பிற்படுத்தப்பட்டோரால் சுட்டிக்காட்டப்பட்டது; 1947ல் பிற்படுத்தப்பட்ட பிராமணர் அல்லாதார் பிரிவு உருவாக்கப்பட்டது.

தொழிற்கல்விக்கு மனு செய்ததாக (செய்யாமல்) வழக்கு தொடுத்து, வகுப்புவாரி முறையால் வாய்ப்பு மறுக்கப்பட்டதாக தீர்ப்புபெற்று, சமுதாய நீதி முடக்கப்பட்டது. பெரியாருடன் இணைந்து அண்ணா கிளர்ச்சியில் பங்கு கொண்டார். இந்திய பேராயக் கட்சியில் இடம்பெற்ற திராவிடர்களான ஓமாந்தூர் இராமசாமி போன்றோர் வகுப்புரிமையை ஏற்று செயல்பட்டனர். அறிஞர் அண்ணாவின் எழுத்துகளும், வலிவான பேச்சுகளும் சமுதாய நீதிக்கு உதவின. முடிவில் இந்திய அரசியல் சட்டத்தில் முதல் சட்டத் திருத்தம் வழி வகுப்புரிமை (சமுதாய நீதி) சட்ட வடிவம் பெற்றது. அண்ணா மாநிலங்கள் மேலவையில் 'சமத்துவம் என்பது சரிசமமாக நடத்தப்படுவதல்ல, சரிசம வாய்ப்புகளை நல்குவதுதான்' என்று, பிரித்தானிய நாட்டு அரசியல் வித்தகர் கெரால்ட் லாஸ்கியை மேற்கோள் காட்டிபேசினார். சமுதாய நீதியைச் செயல்படுதளத்தில் எதிர்ப் புரட்சியாளர்கள் தோற்கடிப்பதைச் சுட்டினார் முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர்.நாராயணன் (1998). நடுவன் அரசு துறைகளில்

பிற்படுத்தப்பட்டோர் வாய்ப்பும், மத்திய – மாநில அரசு துறைகளில் தாழ்த்தப்பட்ட/ பழங்குடி மக்கள் பங்கும் மறுக்கப்பட்டு வருவது அவலமாகும்.

## பொதுவுடைமை

அறிஞர் அண்ணா பொதுவுடைமைக் கோட்பாட்டை விரும்பினார்; மண்ணுக்கேற்ற அறிவியல் பொதுவுடைமை நாடினார். ஆரியர் பிறவி முதலாளிகள், திராவிடர் பிறவிப் பாட்டாளிகள் என்பது அண்ணாவின் கருத்து. "திராவிட இயக்கமே இந்தியாவின் பொதுவுடைமை இயக்கம்" என்பது கெயில் ஆம்வெட் (1976/28) அவர்கள் கருத்து. பாலதண்டாயுதம் (1964/25–27), பாண்டியன் (1967/8–9) ஆகியப் பொதுவுடைமையர் சாதி, ஒழிப்பை ஏற்காத அவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்கள் அண்ணாவின் கருத்துகளுக்கு அணி செய்கின்றன.

## மக்கள் தொகைக் கட்டுப்பாடு

அறிஞர் அண்ணா ஒரு பொருளாதார அறிஞராக மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை விரும்பினார். இந்தியர்கள் ஆண்டிற்கோர் ஆஸ்திரேலியாவை உருவாக்குவதாகக் கருத்தறிவித்தார். அண்ணாவின் இக்கருத்தியலை விளக்க சில தகவல்கள்: ஒரு கிலோ அரிசிக்குத் தேவைப்படும் நீர் – 4000 லிட்டர்; ஒரு பூவன் வாழைப்பழத்திற்கு – 50 லிட்டர்; அரசதாளி பழத்திற்கு – 100 லிட்டர். தமிழகம் போன்ற பல்கேரிய நாட்டின் மக்கள் தொகை : 95 இலட்சம்; இந்தியாவிற்கேற்ற மக்கள் தொகை – 16 கோடி; தமிழகத்திற்கு ஏற்ற மக்கள் தொகை – 1 கோடி (ஐரோப்பிய அளவீடுப்படி)

## (2) சமயங்கள்

மக்களைப் பொதுநெறிகள், வழமைகள், ஒழுகலாறுகள், நம்பிக்கைகள் வழி இணைக்கும் பணியை சமயங்கள் ஆற்றி வருகின்றன. அண்ணல் அம்பேத்கர் (1989/178–180) துர்க்கேம்மை மேற்கோள்காட்டி "உண்மையில் சமய நம்பிக்கைகள், வரையறுக்கப்பட்ட குழுவிற்கு எப்பொழுதும் பொதுவானவை. இதனால் அவர்களைச் சார்ந்த தொழில்களும், பின்பற்றப்படும் சடங்குகளும் இவற்றோடு கூடிய நம்பிக்கைகளோடு இணைந்தவை. இவை ஒரு குழுவின் எல்லா உறுப்பினர்களாலும் தனித்தனியாகப் பெறப்படுவதில்லை; அந்த குழுவிற்கே சொந்தமானவை; இவை அவர்களை ஒன்றிணைக்கின்றன. தனி மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்திருக்கிறார்கள். இதன் காரணம்: அவர்கள் பொது நம்பிக்கை கொண்டுள்ளனர். ... சமுதாயம், சமயம் ஆகியன புனித நம்பிக்கைகளோடு (Sacral beliefs) நெருங்கிப்

பின்னப்பட்டுள்ளன. சமயத் தன்மைகள் சமுதாயத் தன்மை யுடையவை; எல்லா சமுதாயத் தன்மைகளும், சமயத் தன்மையுடையவை அல்ல" என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

உலகின் அறச் சமயமான கிருத்துவம், சமயம் என்னும் வரையறை கொண்டது. ஆசிய, ஆஃப்ரிகா, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் அடித்தள விளிம்பு மக்களுக்கு கல்வி, மருத்துவம், விழிப்புணர்வு வழி பாடுபட்ட சமயம். இசுலாம் அரபு மக்களின் பிற்போக்கு நிலைகளைக் களைந்து உருவான சமயம்; பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறவழி கொண்டது. வேத வேள்விகளையும், உயிர்ப் பலிகளையும் எதிர்த்து உருவான சமயம் பௌத்தம். அரச வாழ்வைத் துறந்து சித்தார்த்தர் அறிவுத் தேடலை மேற்கொண்டு உலகின் அறிவுச் சமயம் கண்டார், புத்தரானார். கீழை இந்தியாவின் இன்னோர் அறிவுச் சமயம் ஜைனம் (சமணம்?). பௌத்தமும் சமணமும் அறிவுச் சமயங்கள்; நாத்திக சமயங்களும் கூட.

இந்து சமயம் வருணக்கோட்பாடு, சாதி முறை, முன்வினைப் பயன் (கர்மம்), குலத்திற்கேற்ற கடமை (தர்மம்) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. "சமுதாய முறைமையில் (system) வருணவகைப்பாடு சமுதாயத்தின் முழுமைக்கும் உரித்தாகும். ... இவ்வமைப்பு ஒருவருக்கும், மற்றவருக்கும் இடையில் பிரிவினை உணர்வை உருவாக்குகிறது; உயர்வு தாழ்வு கற்பிக்கிறது ...இது மக்கள் ஒழுங்காக வாழ்வதற்கு உருவாக்கப்பட்ட ஏற்பாடு, புகழ் மிக்கதும், முழுமையானதும், தனித்தன்மை வாய்ந்ததுமாகும். சமுதாய வாழ்க்கை முழுவதும் அமைதியான பயணத்திற்குரியது இந்த அமைப்பு" என்ற அல் – சமுதாய கருத்துகளைப் பொழிந்தவர் சங்கராச்சாரிய சுவாமிகள். பல கடவுள்களை நியாயப்படுத்தும் அதே சமயவாணர் "நமது இந்து மதத்தில் ….. நின்று நிலவும் சனாதன தர்மத்தின்படி அதே கடவுள் பல்வேறுபட்ட வழிகளிலும், வடிவங்களிலும் ... மன உணர்வுக்கும் ஏற்ப வழிபடப்படுகிறது (ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், 1981a/,108, 144–145). மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் (இராசகோபால் மேற்கோள் – 2007/126) "ஆதித்தர் பன்னிருவர், உத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், அசுவினியர் இருவர் ஆகத் தேவர் முப்பத்துமூவர் என கணக்கிட்டு அவரை முப்பத்துமுக்கோடியாகப் பெருக்கினர்" என்று கடவுள் பற்றிய தெளிவினைக் கருதிட வேண்டும்.

இந்து சமயத்தில் பல கடவுள்களைப் போற்றி வணங்கும் இந்துக்களும், சமய வாணர்களும் கடவுள் மறுப்பையும் கொண்டுள்ள புதிரும் சிந்திக்கத் தக்கது. "ஒருவர் இந்துவாகவும் இருக்கலாம் ஆயினும் இறுதி உண்மையான கடவுளை நம்பத் தேவையில்லை" (மகாதேவன், 1982/1–7). இந்து சமயம் சாதிகளின் கூட்டுக் கலவையாகவும்,

முரண்பாடுகளின் தொகுப்பாகவும், வெற்றுச் சடங்குகளையும், தீண்டாமையின் நிலைக்களனாகவும் நிலவும் நிலையை அண்ணா வெறுத்தார். "உருவமற்ற ஆண்டவனை உள்ளன்போடு வணங்கி, ஒருவரை ஒருவர் தாழ்த்தாமல் ஒன்றே குலம் என்ற தத்துவத்தோடு வாழுகின்ற இஸ்லாமியர்களைக் கண்ட பிறகு, ஆண்டவன் சந்நதியை கள்ளர் குகை ஆக்காதீர்கள் என்று பூசாரிகளைக் கடிந்துரைத்த ஏசுநாதரின் வரலாற்றைப் படித்த பிறகு, புனிதமான எண்ணமும் நிராசையும் தேவையே தவிர, நீரில் மூழ்குவதும், நீண்டதூரம் செல்வதும் ஆரியப் புரோகிதர்களின் ஆணைக்கு அடங்குவதும் ஆண்டவனை அடையும் மார்க்கங்களல்ல என்ற அறிவுரையை, சுகபோகத்தைத் துறந்து, ஆரண்யத்தில் அலைந்து, அறிவின் எல்லையைக் கண்டு அவனுக்கு எடுத்துரைத்த புத்தபிரானின் வரலாற்றைப் படித்த பிறகு, எப்படி நம்முடைய பழைய கால ஏற்பாடாகிய – பார்ப்பனிய பலிபீடமாகிய – இந்து மதத்தை ஏற்றுக் கொள்ள முடியும்" (அண்ணா, 2008/103) என்று சமயங்களின் நிறை, குறைகளை மதிப்பீடு செய்தார். ஜைன சமயத்தின் தீர்த்தங்கரர்களில் ஒருவரான கோமட்டீசுவரரின் சிலை முன்னால் அமைதியில் திளைத்தார் அண்ணா என்பது அறியப்படுகிறது.

"அறிவிற்குப் பொருந்தாத ஆபாசங்களை அல்லவா ஆண்டவனின் பெயருடன் இணைத்து இங்கே மத நூல்களாக்கி விட்டனர்... அந்த பழைய, நம்ப முடியாத ஆபாசமான கதைகளை நம்பத்தான் வேண்டும். அதுதான் மதவாதி என்பதற்கு இலட்சணம் என்று கூறினால் யாரால் எடுத்துக் கொள்ள முடியும்" (அண்ணா, 1989/17). இந்து சமயத்தின் இழிமையும் (ஆபாசம்), கடவுள்களின் கயமைத் தன்மை ஆகிய கட்டமைப்புகளைக் கட்டுடைத்து, தகர்த்தெறிந்தார்

**கோயிலும் கடவுளும்**

அறிஞர் அண்ணா கோயில்களைப்பற்றி பேசும்போது "மிகப் பழங்காலத்தில் தமிழ்நாட்டில் ஆலயங்கள் இல்லை. அசோக அரசர் தூபிகள் அமைத்த புத்த கோயில்களும் கல்வெட்டு உருவங்களும் நிறுவியதைக் கண்டு நம்மவரும் ஆரியர் தூண்டுதலால் அவற்றைப் பின்பற்றி கோவில்களைக் கட்டினர் .... தமிழரசர் அவையில் ஆதிக்கம் பெற்றிருந்த ஆரியர் (பிராமணர்) மொழி கேட்டு அரசர் பல கோவில்களை உண்டாக்கினர்" என்றார் அண்ணா (2008 அ). இதே கருத்தை இந்திய இயல் அறிஞர் பாஷம் (1991) அவர்களும் உறுதிப்படுத்துகிறார். "பழந்தமிழர் இயற்கையையே தெய்வமாக வணங்கி வந்தனர் ... கடவுள் வேண்டுதல், வேண்டாமை இல்லாதவர் ... அவர் அருளுக்குரியவர் ... கடவுள் நம்மிடமிருந்து எதையும் வேண்டுகிறாரில்லை ... தமிழர் கடவுள் இல்லை என கூறவில்லை ... தம் வரவுக்கு வழிகோலிக் கொண்டு

சமயப்பற்றால் செய்யும் பயனற்ற செலவுகளைச் செய்யாமல் சிக்கன முறையைக் கையாளுவதாற்றான் ஆரியர் செல்வந்தராய் நாளுக்கு நாள் உயர்வடைகின்றனர். அஃதில்லாமல்லாமையால் தமிழர் சீர்கேடுற்று வறிஞராய் வாடுகின்றனர். ... தமிழர் அறப்பணத்தில் ஆரியருக்கு மறைபயிலும் பள்ளிகள் உண்டாக்கி அன்னமிட்டு மேலும் ஆக்கம் அளிக்கின்றனர்" (அண்ணா, 2008/43-47). மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரும், பிராமணர் பெற்ற எல்லா வசதிகளையும் பட்டியலிட்டுள்ளார் (தேவநேயன், 1972). அறிஞர் அண்ணா மதஞ்சாரா நாத்திகர், தன் கட்சிக்காரர் களுக்கும் பொதுமக்களுக்கும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் கோட்பாட்டைப் பரிந்துரைத்தார்.

## இந்து இலக்கியங்கள்மீது போர் தொடுத்தார்

இந்து சமய இலக்கியங்கள் இழிமை (ஆபாசம்) நிறைந்தவை. முனிவர்கள் பார்த்ததும் சூல் கொண்ட மான், பார்வதி அழுக்கில் ஒரு மகன் - யானைகள் புணர்ந்த கதை, இந்திரன் × அகல்யை உறவு, இந்திரன் × வசிஷ்டமை உறவு, இந்திராணி மகாவிஷ்ணுவிடம் காம உறவு வேண்டுதல், பெற்ற மகளை பெண்டாண்ட பிரம்மா, புரோகிதம் செய்த இந்திரன் பார்வதியின் காலைக் கண்டு காமுற்றது, மேல்சாதி பக்திமான் தாசியிடம் சென்றவுடன் சிவனின் தாராளம்; கீழ்சாதி பக்தனுக்கு வறுமை, சூரியன் வலுவிழந்த மனைவியிடம் குதிரை வடிவில் காமியம்; இங்கும் எங்கும் இழிமை, எதற்கும் இழிமை, இவையே இந்து சமய இலக்கியங்களின் உள்ளடக்கங்கள்.

தமிழர் வாழ்வில் கற்பனையும் இயல்பானதாக அமைவதே தமிழ் இலக்கியக் கோட்பாடு. 'மரத்தைப் பிடுங்கி அவுணர்கள் மீது வீசிய வீரவாகு, ஆயிரம் தலைகளையும், இரண்டாயிரம் கைகளையுமுடைய சிங்கமுகசூரன், வாலுக்கு இரையான சூரபத்மன் அண்டமுகட்டை தொடும்படியாக உயர்ந்து பூமி உருக் கொண்டது, தேவர்களும், அவுணர்களும் அமுதம் கடைந்தது, பானுகோபன் கூரையின் வழியாக சூரிய கிரகணம் பட்டமையால் சூரியனைப் பிடித்து காலில் கட்டிவைத்தது போன்ற பொய்யியல் கதைகள்' இந்து சமய இலக்கியங்களில் இடம் பெற்றதை நகையாடினார் அறிஞர் அண்ணா (1989/18-33).

## அண்ணாவின் தீயில் இராமாயணம்

இந்தியாவில் இராமாயணம் ஒரு புனித சமய இலக்கியம். இது ஒரு கற்பனை படைப்பு. விந்தியமலை அல்லது ஜார்கண்ட் பகுதியில் நிகழ்ந்த செய்திகளின் பின்னணியில் படைக்கப்பட்ட கற்பனை. "இராமாயணத்தை உண்மையில் எழுதியது சியவான மகரிஷி (Chyavana Mahzrishi) ; ஆனால் வால்மீகியால் எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டது"

(ஸ்ரீதரமூர்த்தி, 2008). வால்மீகி இராமாயணத்தின்படி இராமன் என்ற கற்பனைத் தலைவன், குடிகாரனாகவும், காமுகனாகவும், மாமிசம் உண்பவனாகவும், வாலியை மறைந்திருந்து கொன்ற கோழையாகவும், தவமிருந்த சூத்திர சம்புகனைக் கொன்ற வருணாசிரம கயவனாகவும் காட்டப்படுகின்றான் (அம்பேத்கர், 1989/462~464).இந்தியாவில் பல இராமாயணங்கள் உள்ளன என்பதும் ஒரு முதன்மைச் செய்தி.

## இழிமை படைத்த இழிமைப் புலவன் கம்பன்

வால்மீகியின் இழிமைகளையெல்லாம் மறைத்து புனிதமாக இராமாணயத்தைக் கம்பர் படைத்ததாகக் கதைப்போர் உண்டு. அண்ணா (1986ஆ) "புலவரின் பாடலை ஒரு சாமான்யனின் கண்கொண்டு பார்த்து பகுத்தறிவாளனின் நோக்குடன் ஆராய்ந்து பார்க்கிறோம்" என்று தொடங்கி மறுமலர்ச்சி நோக்கில் கம்பராமாயணத்தைத் திறனாய்வு செய்தார். 'சீதையின் பரவிய அகலமான அல்குல், இராமனின் வெற்றியால் மகிழ்ந்த சீதையின் அல்குல் வீங்கி மேகலாபரணம் அறுந்து வீழ்ந்தமை, காம வெறியில் தன் துணையை காலால் உதைக்கும் மகளிர், புணர்ச்சிக்குரிய பெண்களின் ஆடைகளை எடுத்தெரிந்துவிட்டு நிறைந்து அகன்ற அல்குலை நெருங்கிச் சூழ்ந்திருந்த மேகலாபரணத்தை வீசி எறிந்த ஆண்கள்' இப்படி இழிமையைத் தேடி அலையும் இழிமைப் புலவன் கம்பன்' என சாடுகிறார் அண்ணா. "நல்ல படமெடுக்கும் கருவி, தேர்ச்சி பெற்ற படப்பிடிப்பாளன், எடுத்த படங்கள் சிற்றின்ப வர்ணனைகள்" என்று கம்பனை மதிப்பீடு செய்தார் அண்ணா (1986). "இலக்கியம் எழுச்சிக்குத் தேவை ஆனால் பருகிடும் இனத்தையே இளித்தவாயாராக்கி ஏய்த்துப் பிழைக்கும் கூட்டத்தின் பாதந்தாங்கிகளாக்கிடவன்றோ ... பயன்படுகிறது" என்றார் அண்ணா மூட்டிய தீயில் இராம கதை வெந்தது. இராம அரசுகாண விழைந்த காந்தியடிகளோ "என் இராமன் வேறு (அண்ணா, 298/38); என்று இராமப்பெருமை பேசுவதில் பின் வாங்கினார் இதற்குக் காரணியம்: அண்ணா பெரியாருடன் இணைந்து இராமாயணத்திற்கெதிராகத் தொடுத்தப் போரேயாகும்.

## தேவருலகில் தேவதைகள் / தன் வரலாறு கூறும் கடவுள்கள்

இந்துக்களின் சமய நம்பிக்கைகளின்படி சொர்க்கம், நல்லவர்கள் இறந்தபின் சென்றடையும் இன்ப உலகம்; சிற்றின்பங்களுக்கும் (அங்கு) பஞ்சமில்லை. தேவருலக பெண்கள் மூவரைச் சுட்டுகிறார் அண்ணா. அவர்கள் ரம்பை, திலோத்தமை, மேனகை ஆகியோர். இவர்களின் மிகுதியாக இன்னல் சுமந்தவள் மேனகை. தேவருலக மகளிரின் முதன்மைப் பணிகள்: அடுத்த கடவுள்களை அல்லது முனிவனை காமிய வழியில் கெடுப்பது; விரும்புகிற கடவுளுக்கும், விரும்பும் வழியில் காமிய விருந்தளிப்பது ஆகியன.

மேனகை விசுவாமித்திரன் என்ற முனிவனைக் கெடுக்க அனுப்பப்பட்டவள்; ஆடிப்பாடி, இடைகாட்டி, கடைகாட்டி நோக்கம் நிறைவேறுகிறது; விளைவு மேனகை தாயானாள். குழந்தை பெற்ற மேனகையை உசாவும் ரம்பை "வாரி அணைத்துக் கொண்டு, உச்சிமோந்து, முத்தமிட்டு கானகத்தில் கிடைத்த கட்டழகி பெற்றெடுத்த கனியமுதே! காவிய கர்த்தாக்களுக்கும் – ஓவிய வித்தகர்களுக்கும் களிப்பூட்டிக் கற்பனையைச் சுரக்கு வைக்கும் கலைவடிவே ... ஓம குண்டத்தருகே கிளம்பிய வேத ஒலியே ... சர்வலோக இரட்சகன் என் தவத்துக்கு மெச்சி வரம் உன்வடிவில் அருளியிருக்கிறார். அன்பொழுகும் குழந்தாய் அரும்செல்வமே" என்ற குழந்தையிடம் கொஞ்சினாளா? என்று கேட்க, சோகமே உருவான மேனகா "... என் செல்வத்தை அவனுடைய காதல் விளையாட்டில் கனிந்த இன்பத்தருவை தொடவும் மறுத்தானடி ... இன்பம் பெற்றானதும் மீண்டும் தவத்தின் மீது நினைவு சென்றது ... என் பாதம் வருடி காமம் கக்கினான் ... கோழியும் அதன் குஞ்சுகளைக் கொத்த வந்த வல்லூறு வட்டமிடக் காணும்போது சீறுகிறது. நான் என்ன செய்ய முடிந்தது?" (அண்ணா, 2008/11–29) என்று கூறி விம்மினாள் மேனகை; இவள் மகள் (சகுந்தலை) பெற்ற மகனே 'பரதன்', பாரதத்தின் தலைமகன்; கற்பனை கதை வழி ஒரு நாடு – நிலைக்குமா?. அண்ணல் அம்பேத்கர் (1936/1979 149–150) 'வேதங்கள், சாத்திரங்கள் ஆகிய புனிதப் படைப்புகளைச் சட்டப்படி தடைசெய்ய வேண்டும்; பரப்புரை செய்வோர் தண்டிக்கப்பட வேண்டும்" என்று கருத்தறிவித்தார்.

சமயமாக இல்லாத சமயத்தை நிலைநாட்ட கடவுள்களே சுயசரிதை (தன் வரலாறு) சொல்வதாக கட்டமைத்து இந்து சமயப் பரப்புரை செய்கின்றனர் (டேனிலா பெர்ட்டி, 2006); இவர் ஒரு பிரஞ்சு நாட்டுப் புறவியல் ஆய்வாளர். வான்வழி 'அசீரரை', சுயம்பாக வெளிவரும் தெய்வ 9கடவுள்) சிலைகள் இங்ஙனம் புதிய தெய்வங்கள், தெய்வ ஆலயங்கள் மூலைமுடுக்கெல்லாம் எழுப்பப்படுகின்றன.

### (3) மொழி உரிமை

#### தமிழின் பெருமை

தமிழின் தொன்மை பெருமை, தாய்மை, பிற இந்திய மொழிகளுக்கும், உலக மொழிகளுக்கும் தமிழ் வழங்கிய சொல்வளம் ஆகியன குறித்த ஆய்வு முடிவுகளை பாவாணர் போன்ற மொழி அறிஞர்கள் வெளியிட்டனர். தமிழும் பிற இந்திய மொழிகளைப்போல் சமக்கிருதத்தின் வழிவந்தது என்ற கருத்தையும் சொல்லி வந்த சமக்கிருதப் பற்றாளர்களும் இருந்தனர். தமிழ் மொழிக்கு, சமக்கிருதத்திற்கு இணையான இடத்தையும் தர மறுத்தனர். சமுதாய, அரசியல் தளங்களில்

தமிழின் இருப்பை உறுதி செய்ய பெரும் போராட்டங்களை மேற்கொள்ளும் தேவை உருவானது. அறிஞர் அண்ணா தமிழ்மொழியின் சிறப்புகளை மக்கள் மன்றத்திற்கும் கொண்டு சென்றவர்களில் முதன்மையானவர். மொழியைத் தனியாகக் கருதாமல் சமுதாயம், மனித உரிமை, வாழ்வுரிமை, பண்பாட்டு நயற்சி (cultural diplomacy) ஆகியவற்றோடு உறவு படுத்தி சொல்ல வேண்டியத் தேவையை ஈடு செய்தவர் அண்ணா. "தமிழ்மொழி காலத்தால் மிகமிகத் தொன்மையானது, இலக்கண விதிகளையும், வரைமுறைகளையும் செவ்வனே கொண்டது; தூயது, தூய்மையானது, துல்லியமாக எண்ணங்களை வெளிப்படுத்துவது, சொல்வளம் மிக்கது .... இனியது, அழகியது, ஆற்றல் மிக்கது. சொற்சுவையும், பொருட்செறிவும், நாகரிக நயமும், நேர்த்தியும் கொண்டது சீரிளமை திறமிக்கது ... நம் தாய்மொழியாகிய தமிழ் ஒரு உயர் தனி செம்மொழி .... தமிழ் தமிழர்களுக்குப் பேச உதவும் கருவி மட்டுமல்ல. அது தமிழர்களுக்கு வழிகாட்டியாகவும், ஆசானாகவும், துணைவனாகவும் இருக்கிறது. ... தமிழர் முன்னேற்றத்து மூலப் பொருள்" (அறிஞர் அண்ணா, 2008 ஈ). சாதிய அமைப்பில் இந்தியாவில் மொழி மட்டுமே உரிய மொழி பேசும் மக்களை ஒருங்கிணைக்கும் ஆற்றலாகும்; தமிழுக்கும் இது பொருந்துவதாகும்; இந்த ஆற்றல் சாதியத்தை எதிர்கொள்ள முடியவில்லை.

தமிழ் மொழியின் சிறப்பை உலகுக்கு எடுத்துரைத்த "கால்டுவெல்தான் தன் ஆய்வின் மூலம் முதன் முதலில் திராவிட மொழிகளின் தனித்தன்மையை நிலை நாட்டியவர்; தமிழின் தொல் பழஞ்சிறப்பை வியந்து கூறியவர். அதற்கு மேலாக பிற திராவிட மொழிகளின் பெருவாரியான சிறப்புச் சொற்கூறுகளையெல்லாம் தன்னகத்தே கொண்டிருக்கும் தனிச் சிறப்பு தமிழுக்கு உண்டு என்று கண்டறிந்து நம்மைப் பெருமிதப்படுத்தியவர்" (கவிதா சரண், 2006/5-14).

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தமிழ் மொழியின் பரவலைப் புலப்படுத்தியுள்ளார். "தமிழ் அல்லது திராவிட(ம்) என்பது தென்னிந்தியாவின் ஒரு மொழி மட்டுமே என்பதில்லை. ஆனால் ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியாவின் முழுமைக்கும் உரிய மொழி; காஷ்மீர் முதல் குமரிமுனை வரை பேசப்பட்ட நாகர்களின் மொழி இது" (அம்பேத்கர், 1990/298), "பண்டைக் காலத்தில் ஆரியர் வருமுன்னர் இந்தியா முழுவதும் பலமொழி வழக்குகளாக வேறுபட்ட ஒரே மொழி (தமிழ்) வழங்கினதாகச் சில தொல்காப்பியக் குறிப்புகளாலும் மொழி நூல் ஆராய்ச்சியாலும் அறியக்கிடக்கிறது" (தேவநேயப் பாவாணர், 1940). "இந்தியப் (பன்முகப்) பண்பாட்டின் இணையான பங்காளியான தமிழ் 20க்கும் மேற்பட்ட திராவிட மொழிகளின் தலையூற்றாகும்" (அர்ஜுன் சிங், 2007). உலக

சிந்தனையாளரும் மொழியியல் அறிஞருமான நோம்சோம்ஸ்கி 'உலகில் இயற்கையாக அமையப்பெற்ற இரு மொழிகளில் தமிழும் ஒன்று என்று கருத்தறிவித்தார்'. 'உலகின் மூத்த மூன்று மொழிகளில் தமிழும் ஒன்று' என்பது அண்மைக்கால செய்தி.

"இந்திமொழியை ஒரு சித்தாந்த கருவியாகப் பயன்படுத்தும் முயற்சி வட இந்தியாவில் ... 1922 லிருந்தே தொடங்கியது .... இந்திமொழி, அன்று வளர்ச்சி யடைந்து கொண்டிருந்த இந்து மேட்டுக் குடியினரின் ஆர்வங்களையும் அவர்கள் .... விரும்பிய அடையாளத்தையும் வெளிப்படுத்துகிற ஒரு குறியீடாக விளங்கத் தொடங்கியது" (ராஜதுரை,1993/136-137). வட இந்திய பெருமுதலாளியின் வணிக ஆதிக்கம் சமத்கிருத மொழியின் பண்பாட்டு மேலாதிக்கம், சமத்கிருதமொழியின் இயலாமையைச் சமாளிக்க சமத்கிருதமயமான இந்திமொழி ஆதிக்கம் ஆகியன விடுதலை வேள்விப் புகைமூட்டத்தின் ஊடே நடந்தேறிய 'இந்து - இந்தி - இந்திய' ஆதிக்க முனைப்புகள்.

## இந்திய விடுதலைக்கு முன்னரே இந்தி

இந்திய பேராயக்கட்சி (காங்கிரஸ்) 1918-1922 ஆம் ஆண்டுகள் போது சென்னை பெருமாநிலத்தில் 40 இந்தி பரப்பு மையங்களை உருவாக்கியது. நீதிக்கட்சி ஆங்கில மொழிக்குச் சார்பாக செயல்பட்டது. அதே சமயம் இந்திக்கும் துணையாகப் பங்காற்றியதாகவும் அறியப்படுகிறது. 'இந்திமொழி பண்பாட்டு ஆதிக்க மொழியாகிய சமத்கிருதத்தின் இன்னொரு வடிவமே' என்று பிராமணர் அல்லாதார் சமுதாய இயக்கமான இயக்கமும் தனித் தமிழ் இயக்கமும் போராடின. இந்தியப் பேராயக் கட்சி 1937ல் ஆட்சிக்கு வந்தபின், பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாகத் திணித்தது.

தமிழறிஞர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் இந்தி எதிர்ப்பை ஒருங்கிணைக்க 1938ல் இந்தி எதிர்ப்பு வாரியம் தொடங்கப்பட்டது; இவ்வாரியம் அறவழிப் போராட்டங்களை மேற்கொண்டது. அரசின் அடக்கு முறைகளுக்கு எதிரான மக்கள் உணர்வு பல்வேறு போராட்ட வடிவங்களை உருவாக்கியது. திருச்சி முதல் சென்னை வரை மேற்கொள்ளப்பட்ட இந்தி எதிர்ப்புப் பேரணி, 42-வது நாளில் சென்னை வந்தடைந்தது. சென்னை கடற்கரையில் நடந்த கூட்டத்தில் 70,000 பேர்கள் கலந்து கொண்டு இந்தி எதிர்ப்பை வெளிப்படுத்தினர். சென்னை கடற்கரை கூட்டத்தில் பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முழக்கமிட்டார். மொழிப்போரில் நடராசன் (தாழ்த்தப்பட்டவர்), தாளமுத்து (பிற்படுத்தப்பட்டவர்) ஆகியோர் சிறையில் இறந்தனர். அடித்தள மக்களின்

ஈகையர், ஈகை மக்களை துலக்கம் பெறச் செய்தது. இரண்டாம் உலகப் போருக்கு ஆங்கில அரசுக்கு உதவிட இந்தி எதிர்ப்பு வாரியம் கட்டாய இந்தியை நீக்கிட வற்புறுத்தியது. பெரியாரும், அண்ணாவும், பிறரும் பங்கு பெற்ற வேலை திட்டக் குழு உருவாக்கப்பட்டது (பொதிகை தமிழரசன், 1996/116).

**இந்திக்கெதிரான தொடர் போராட்டம்**

திராவிட தமிழ் அறிஞர்கள் போராட்டங்களின் விளைவாக கட்டாய இந்தி விலக்கிக் கொள்ளப்பட்டது (21.02.1940); விருப்பப் பாடமாக கற்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. விடுதலைக்குப் பின்னர் ஓமாந்தூர் இராமசாமி அரசு (பேராயக் கட்சி) இந்தியைக் கட்டாயப் பாடமாக்க முயன்றது. தமிழ்ப் பகுதிகளில் இந்தியைக் கொண்டு வரவில்லை. சென்னை பெருமாநிலத்தின் கன்னட, தெலுங்குப் பகுதிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது.

பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., அண்ணா ஆகியோர் பங்குபெற்ற, சென்னை செயின்ட்மேரி அரங்கில் நடந்த கூட்டத்தில் 'ஆரியத்தைத் திராவிடர்பால் திணித்து வருண, சாதியக் கொடுமைகளைத் திணிக்கும் சூழ்ச்சி' என்று கருத்தறிவிக்கப்பட்டது. அறிஞர் அண்ணா திராவிடர் கழகத்தின் தளபதியாகவும், 1949 முதல் திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளராகவும் இந்தியை எதிர்த்துத் தொடர்ந்து போராடினார். இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் விளைவாக 18.07.1950-ம் நாள் கட்டாய இந்தி பேராயக்கட்சி அரசால் அகற்றப்பட்டது.

**தில்லியில் இந்தி ஆதிக்கத் திட்டங்கள்**

இந்திய அரசமைப்பு மன்றத்தில் மொழி தொடர்பான வாக்கெடுப்பில் இந்திக்கும் – ஆங்கிலத்திற்கும் சம வாக்குகள் கிடைத்தன; மன்றத்தின் தலைவர், பீகாரைச் சேர்ந்த இராசேந்திர பிரசாத் அவர்களின் – தலைவர் வாக்கால், இந்தி ஒருவாக்கில் வென்றது. அரசியல் சட்டப் பிரிவு 17ன்படி இந்தியாவின் ஆட்சி மொழியாக தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட 'இந்தி' ஆட்சிமொழியாக இருக்கும். அரசியல் கூட்டம் செயல்படு நாளிலிருந்து 15 ஆண்டுகள் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கும்; அதற்குப் பின்னர் இந்திய நாடாளுமன்றம் மீள்பார்வை செலுத்தும். இந்தியை எதிர்த்து தொடர் (இரயில்) வண்டி நிலையங்களில் இந்தி எழுத்துகள் அழிப்பு, (தி.க., தி.மு.க.) போராட்டம், இந்திய அரசியல் சட்ட எரிப்பு போராட்டம் (தி.க.) ஆகியன நடத்தப்பட்டன.

**இந்தி ஆதிக்கத்திற்கு நல்லடக்கம்**

இந்தியைத் திணிக்க நடுவன் அரசு மும்மொழித் திட்டம் என்ற திட்டத்தை முன்வைத்தது. தி.மு.க. மும்மொழித் திட்டத்தை ஏற்கவில்லை.

இந்தியை 1938ல் புகுத்திய இராசகோபாலாச்சாரியார், பலரிடம் இந்தியை எதிர்க்க வேண்டிக் கொண்டார்; ஆங்கிலத்தை ஆதரிக்க வேண்டினார். சட்டமன்றத்தில் தி.மு.க. அலுவல் மொழியாக காலவரம்பின்றி நீடிக்க வேண்டியது; இத்தீர்மானம் தோல்வி கண்டது. பெரியார், இந்திக்கெதிராக துக்கநாள் (05.06.1966) அறிவித்தார். தடுப்புக் காவல் சட்டப்படி கைதானார். தி.மு.க. 31.07.1960 சென்னை கோடம்பாக்கத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டியது. இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி 26.01.1965க்குப் பின் நடைமுறைக்கும் வரும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தி எதிர்ப்பு வேகம் பெற்றது; இந்நாளை தி.மு.க. துக்க தினமாக நிகழ்த்தியது.

நாடாளுமன்றத்தில் இந்திக்கெதிராக அண்ணா பேசும்போது உரோமானிய அடிமைகளை (பிளிப்பிஷியன்களை), ஆண்டைகள் (பேட்ரிஷியன்கள்) வட்டரங்குகளில் சிங்கம், புலி போன்ற கொடிய விலங்குகளோடு போராடவிட்டு பொழுதுபோக்காக கண்டு மகிழ்வதுபோல் எங்கள் குழந்தைகள் இன்னல்படும்; வாஜ்பேயின் குழந்தைகளுக்கு இச்சிக்கல் இல்லையென்றார். 'நான் திருமணமே ஆகாதவன்' என்று வாஜ்பேய் பேசும்போது அண்ணா 'முதலில் நீங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள்' என்று நயமாகச் சொன்னார். தமிழகத்தில் மாணவர்கள் எழுச்சியும், மக்கள் கிளர்ச்சியும் ஒன்றிணைந்து பெரும்போராட்டம் எழுந்தது. துப்பாக்கிச் சூட்டிலும், உடலுக்குத் தீயிட்டும், நஞ்சருந்தியும் பலர் உயிரிழந்தனர். "கேரளத்திலும், கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும், வங்காளத்திலும் இந்திக்கெதிரான போராட்டங்கள் நடந்தேறின" (தியாகு, 1993).

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் (1967) இருமொழிக் கொள்கை செயல்படுத்தப்பட்டது. தமிழகம் மட்டுமின்றி தென்மாநிலங்களும் பயன்பெற்றதைப் பல அறிவாளர்கள் நாளிதழ் ஆசிரியர்க்குக் கடிதங்களாக எழுதினர். பலமொழிகள் நிலவும் நாட்டில் ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்க முடியும்; இதற்குச் சான்று சிங்கப்பூர் ; மாற்றுத் திட்டமாக ஆங்கிலம் – இந்தி – தமிழ் என அமைய வாய்ப்புள்ளது. இந்தி ஆதிக்கம் தமிழகத்தில் 'நல்லடக்கம்' பெற்றது. நெருக்கடி காலத்தில் பொதுப்பட்டியலில் எடுத்துக் கொள்ளப்பட்ட கல்வித்துறை வழி மழலையர் – பதின் வகுப்பு (Matriculation) பாடத் திட்டங்கள்வழி மும்மொழிக் கொள்கையாக இந்தி, சமத்கிருதம், பிரெஞ்சு ஆகிய மொழிகள் முதல்மொழியோடு (தமிழ்/இந்தி; தமிழ்/சமத்கிருதம்; தமிழ்/பிரெஞ்சு) என பிஞ்சு உள்ளங்களில் மொழிச்சுமை ஏற்றப்படுகின்றது. "பெரிதும் தி.மு.க., இந்தி இந்தியாவின் இணைப்பு மொழியாவதை எதிர்த்ததால்தான் 1965க்குப் பின்னரும் ஆங்கிலம்

அலுவல் / தொடர்பு மொழியாகத் தக்கவைக்கப்பட்டுள்ளது" (சாமுவேல் ஸ்ட்ரேன்ட் பர்க், 1980).

## (4) திராவிட நாடு விடுதலை

### இனங்களும் மொழிகளும்

இந்தியா பல இனங்களின் வாழ்விடம். இந்தியாவின் மக்களினங்களில் குறிப்பிடத்தக்கவர்கள் : தொல்குடிகளான திராவிடர்கள், குடியேறிய ஆரியர்கள்; இவர்களின் கலப்பால் உருவான கலப்பின மக்கள்; வடகிழக்கு இந்தியப் பகுதியில் மஞ்சள் நிற மங்கோலிய இனத்தவர்களும் வாழ்கின்றனர். இனம் சார்ந்த மொழிகளை அடிப்படையாகக் கொண்டால் இந்தோ ஆரிய மொழிகளைப் பேசுவோர் வட இந்தியாவின் பெரும் பகுதியில் வாழ்கின்றனர். தென்னாட்டில் திராவிட இனத்தவர் வாழ்கின்றனர். திராவிட மொழிகள் இந்தியாவின் இரண்டாவது பெரும் மொழிக் குடும்பமாகவும் விளங்குகிறது. திராவிட மொழிகள் தென்னாட்டிலும், விந்திய மலைப் பகுதியிலும், வங்கத்தின் விளிம்புப் பகுதியிலும், நேபாள எல்லையிலும், பாக்கிஸ்தானின் பலுச்சிமொழிப் பகுதியிலும், திராவிட மொழிக் குடும்பத்தின் கிளைமொழி பேசப்படுகிறது.

### மையச் சிக்கல்கள்

அண்ணல் அம்பேத்கர் (1990/298) அறிஞர் ஓல்ட்கேம் அவர்களை மேற்கோள்காட்டி "திராவிட நாடுகளின் மொழிகளுக்கும், வடபுல வட்டார மொழிகளுக்கும் (vernaculars) தொடர்பு இருப்பதாக சமத்கிருத இலக்கணவாணர்கள் கருதினர். இம்மொழிகள் பேசும் மக்கள் அசுர குடிகளின் வழிவந்தவர்கள் என்பதும் இவர்கள் கருத்து. இம்மக்கள் பேசும் ... மொழிகளில் மிக அருகியே சமத்கிருத ஊடாட்டம் உள்ளது" என்பதைக் குறிப்பிட்டார். தேவமொழி எனப்படும் சமத்கிருதம், தேவ மொழி பேசும் (பெயரளவில்) நிலத் தேவர்கள் – கடவுள்கள். இவர்கள் கட்டமைக்கும் சமுதாய, சமய, அரசியல் கருத்தாக்கங்கள் இந்தியாவின் மையச் சிக்கல்கள். வடபுல உயர்குடிகள் திட்டமிட்டு உருவாக்கி, செயல்படுத்திய இந்திமொழி ஆதிக்கம் 'தனித்தமிழ்நாடு', கோரிக்கைக்கு வித்திட்டது. மொழி சார்ந்த சமய, சமுதாய, அரசியல் கோட்பாடுகள்' திராவிடநாடு கோரிக்கைக்கு 1935ல் வழிவகுத்தன.

### தேயம் – தேசம்

Nation: People marked off by Common descent, language, culture or historical tradition; the people of a state (Chambers English Dictionary) 'ஒரு தேசம் – தேயம் – நாடு என்பது பொதுவான கால்வழி (பிறப்புவழி), மொழி, பண்பாடு, வரலாற்று மரபுகள் கொண்டுள்ள மக்களை உள்ளடக்கிய நாடு (State) என்பதாக அறிகிறோம்.

இந்தியாவில் திராவிட இனம் இளங்கருப்பு வண்ணம் மக்கள் திரளில் அடிநிலையாக (substratum) உள்ளது. இந்த இனத்தின் ஓர் அழிக்க முடியாத அடையாளம் இளம் கருப்பு வண்ணம். தவிட்டு நிறம் (Brown colour). இந்நிறம் ஆரிய இனம், ஆரிய இன வழிபட்ட சிந்தனைகளில் இழிவாகக் கருதப்படுகிறது. சமத்கிருத இலக்கியங்களில் திராவிட மக்கள் 'தாசர்கள்' என்றும் 'மூக்கே இல்லாதவர்கள்' என்றும் குறிப்பிடப்படுவதாக அறியப்படுகிறது.. ஆரியமே உயர்ந்தது, திராவிடம் என்பது தாழ்ந்தது என்றும் கருத்தியல்கள் பரப்பப்பட்டன. ஆரியர்கள் (கலப்பினத்தவர்) தங்களை உயர்ந்தவர்கள் என்பதைவிட, இளம் கருப்பு வண்ண திராவிடர்கள் தங்களையே தாழ்ந்தவர்கள் என்ற கருத்தை உருவாக்கிக் கொள்வதைக் கருதிட வேண்டும்.

ஆரியர்கள் அல்லது கலப்பின மக்கள் திராவிடர்களின் நிலப்பகுதிகளுக்குப் புலம் பெயர்ந்தபோது உருவான முரண்பாடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இராமாயணத்தில், திராவிடர்களைக் குரங்குகளாகச் சித்தரித்துள்ளனர். சீதையின் உடல்பகுதிகளை உண்ண விரும்பியதாக இராவணனின் காவல் பெண்டிர் காட்டப்படுகின்றனர். கம்பராமாயணம் இன தாழ்வுச் சிக்கலின் அடையாளம்; காம வரைவியல் படைப்புச் (Poronography) சாதனை. இராமாயணக் கதை விந்தியமலை அல்லது ஜார்கண்ட் பகுதியை மையமாகக் கொண்ட கற்பனை என்பது வரலாற்றறிஞர். ரொமிலா தாப்பர் கருத்தாகும். அண்மைக் காலங்களின் சமுதாய, சமய அரசியல் தளங்களில் உருவான கொந்தளிப்புகளுக்கு மூலகாரணம் : முன்னாள் தலைமை அமைச்சர் இராஜீவ் காந்தியின் இராமாயணம்–மகாபாரதம் தொலைக்காட்சி திரைப்படங்களே. மின்னணுவியல் ஏந்துகள், இந்திய சமய சமுதாய வாழ்விற்கு மீளாத் துயரங்களைச் சேர்க்கப் பயன்படுவது ஆரிய – வேத – வேதாந்தா – பிராமணிய–(மென்மையான) இந்துத்துவா கோட்பாடுகளின் விளைவுகளாகும்.

**பாரதி பாடிய பாப்பாப் பாட்டில்**

'ஆரியர் தேசமடி பாப்பா' என்று முதலில் எழுதிவிட்டு பிறகு 'ஆன்றோர்கள் தேசமடி பாப்பா' என்று மாற்றினார்.

'சாதிகளில் உயர்வு இல்லை பாப்பா' என்று முதலில் எழுதிவிட்டு பின்னர் மாற்றிக் கொண்டு 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பின்னர் எழுதினார் (முனைவர். இளவரசு அளித்த தனி செய்தி, 2009). பாரதியும் ஆரியம், சாதி ஆகியவற்றின் இருப்பை ஏற்றுக் கொண்டது அறியப்படுகிறது. ஆக 'ஆரியம்' என்பது இன உயர்வு, ஆரியமொழி உயர்வு, ஆரியப் பண்பாட்டு உயர்வு, நால் வருண, மற்றும் சாதியம் ஆகியவற்றில் முடிகின்றது. இழிவுபடுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட, திராவிட

இனத்திற்கு அடையாளம் தந்து, திருத்தி, மானமுடையவர்களாக ஆக்கி, உலகத்தில் மற்ற இனங்களுக்கு சரி நிகர் சமானமாக ஆக்கும் முயற்சியில் ஈடுபட்ட தந்தை பெரியாரின் தன்மான, இனமான கருத்தியலுக்கு உருவாக்கப்பட்ட அரசியல் செயல்வடிவமே 'திராவிட நாடு' கோரிக்கை.

**மாக்ஸ்முல்லரும் – சர்ஜான் மார்ஷலும்**

செருமானிய நாட்டு அறிஞர் மாக்ஸ்முல்லர் வேத, சமத்கிருத, ஆரிய பெருமிதத்தை உருவாக்கினார். சர்ஜான் மார்ஷல் அரப்பா – மொகஞ்சதாரோ நாகரிகத்தைத் தோண்டி எடுத்து உலகுக்குக் காட்டினார்; இது திராவிட நாகரிகம் என்று விளக்கமளித்தார் திருதந்தை ஹிராஸ். அண்ணா (2008இ/29) இவை தொடர்பான கருத்தாடலை முன்வைத்தார் "…. கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் மாக்ஸ்முல்லர் வந்தபோது ஆரியவேதம், வடமொழி எங்கள் மொழி, தேவ பாஷை என்று கூறி குதூகலமடையவில்லையா? பூரிப்படையவில்லையா? ….. ஜெர்மானியர் போரில் ஜெயித்துக் கொண்டிருந்தபோது என்ன ஜம்பம் பேசினீர்கள்? அவாளும் ஆரியாள் என்று அகங்குழையவில்லையா …. நாங்கள் ஆரியர் என்று (வெளிப்படையாக) கூறிக்கொள்ள அச்சப்படுகிறீர்களே ஏன்?" என்று வினா எழுப்பினார். சமயம் என்ற பெயரில் பொய்களையும், இழிமைகளையும் கட்டமைத்து அவற்றை ஊடகங்களில் வெட்கமின்றி பரப்புரை செய்வதில் வல்லவர்கள் இந்துத்துவா (மென்மையான + வன்மையான) குழுக்கள், இதற்குச் சான்று 'ஆர்த்தி என்ற முனிவனின் மனைவி அம்மணமாக வந்து முக்கடவுள்களுக்கும் உணவு விருந்தோடு காமிய (Erotic) விருந்தும் படைத்தார்; அம்மையாரின் முலைகளில் பால் குடித்து குழந்தைகளாக மாறிய கதை நகைச்சுவையும், காமச்சுவையும் கூட.

பண்பாட்டுத் தளத்தில் மனித உரிமை மறுப்பு, பெண்ணடிமை மனித மாண்புகளை மதிக்கா போக்கு ஆகியன இந்திய தேசிய உணர்வாளர்களின் இழிந்தபோக்குகள். பெற்றோர்களின் தோளிலும், மடியிலும் தவழும் மழலையர்க்கு மணம் செய்து வைக்கின்றனர். கணவனை இழந்து, இளமைக்குக் காமம் விரும்பும் பெண்களுக்கு– சதி எரியூட்டல் அல்லது விதவையாக வாழ அவலக்கட்டளைகள். மதுராவில் விதவையர்களைப் பக்தியில் ஈடுபடுத்திக் கட்டுப்படுத்தும் கோயில் நிர்வாகம் உள்ளது. இவர்களில் பலர் சிவந்த வங்கத்தின் விதவைகள். காமப் பசியால் கருவுற்ற பெண்கள் காப்பகங்களில் இருந்து விரட்டப்படுவதை இக்கட்டுரையாளர் மதுராவில் (1971) பயணத்தின்போது அறிய முடிந்தது.

ஆட்சி வெள்ளையரிடமும், வணிகம் வடநாட்டாரிடமும், சமயம் ஆரியர்களிடமும் இருப்பதை அண்ணா இனங்கண்டார். ஏகபோக வணிகக் குழுமங்கள் (monopoly houses) வடநாட்டாரிடம் இருந்தது. 'வடக்கு

வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' என்ற அண்ணாவின் முழக்கத்தை அப்போதைய குடியரசுத் தலைவரே ஏற்றுக் கொண்டார். அரசியல், மொழி, பொருளியல் தளங்களில் ஆதிக்கம் செலுத்திய ... "இந்தி பேசும் மாநிலங்களில் கல்வி வளர்ச்சி குறைவாக உள்ளது. பெண்களுக்குக் கல்வி புகட்டுவதில் தீவிர கவனம் செலுத்தாத அம்மாநிலங்கள் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன" என்றார் தமிழ்நாடு தேசிய அணியின் அரசியல் தலைவர் சுப்பிரமணியம் (1999/8).

தென்னாட்டில் (அன்றைய சென்னை பெருமாநிலத்தில் வாழ்ந்த சூத்திரர்கள் (தாழ்த்தப்பட்டோர் உட்பட), இசுலாமியர், கிருத்துவர், அனைவரும் திராவிடரே. பிராமணர் ஆரியர் என்று கருதப்பட்டு, திராவிடர் என்ற வரையறைக்குள் ஏற்கப்படவில்லை. பிராமண எதிர்ப்பும், வெள்ளையர் துதிபாடுதலையும் கொள்கைகளாகக் கொண்ட நீதிக் கட்சியினரை இனமான அரசியல் வயப்படுத்த முயன்றார் அண்ணா; வெள்ளைய அரசால் வழங்கப்பட்ட பட்டங்களைத் துறக்கவேண்டி தீர்மானம் கொண்டு வந்தார்; நீதிக் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றினார்.

"திருச்சிப்புத்தூரில் கூடிய திராவிடர் கழக மாநாட்டில் (29.09.1945) திராவிட நாடு விடுதலைப் போராட்ட உணர்வு கொழுந்துவிட்டெரிந்தது. திராவிட சமுதாயம் பொருளியல் தொழில் துறை, வணிகத் துறையில் வளர திராவிட விடுதலை தேவையாக அறிவிக்கப்பட்டு, சுரண்டல், அயலார் ஆதிக்கம், சாதி, வகுப்பு வேறுபாடு சமயம், சமயம் சார்ந்த பழக்கவழக்கம், மூடநம்பிக்கை அழிக்க திராவிடம் விடுதலை பெறவேண்டுமென அறிவிக்கப்பட்டது". ... கடலூரில் (14.10.1947) திராவிட நாடு பிரிவினை மாநாடு முத்தையா முதலியார் தலைமையில் நடந்தேறியது (பொதிகை தமிழரசன், 1996/,208-209). திராவிடநாடு கோரிக்கை அடித்தள மக்களைக் கவர்ந்தன. "தாழ்த்தப்பட்வர்கள் வாழும் சேரிகளே திராவிட இயக்கத்தின் தொடக்ககால தொட்டிலானது" (கருணாநிதி அரசுகோ மேற்கோள் - 1984/159-171).

சமுதாய பழமைச் சிறையில் பூட்டப்பட்டு விடியலை எதிர் நோக்கிய கற்றோர், அறிவாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், விழிப்பு பெற்ற உழைக்கும் மக்கள், தாழ்த்தப்பட்ட பரப்புரைகளில் தலைவர்கள் திராவிட நாடு பிரிவினையை ஏற்று இயன்ற வழிகளில் பரப்புடிரகளில் ஈடுபட்டனர். தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் வரை திராவிட நாட்டை சமுதாய வாழ்வின் முழு விடுதலையாகக் கண்டனர். தி.க., தி.மு.க. மேடைகளில் கருத்து மழை பொழிந்தது. இந்தி திணிப்பும், அதற்கான எதிர்ப்பும் திராவிட நாடு கோரிக்கைக்கு மறைமுகமாக வலு சேர்த்தது.

இந்தியாவின் வறுமைக்குக் கட்டியங் கூற வந்த குனார் மீர்டால் (1967/258-259) "இந்த நாட்டின் (இந்தியாவின்) அளவு (size) நாட்டின் ஒருங்கிணைப்புக்குச் சுமையானது. முதற்கண் ஓர் ஒன்றிணைந்த (unitary) நாடாகத் தெரிந்தாலும், புது தில்லி வெறும் நிர்வாகக் கூம்பாகமட்டுமே உள்ளது; நடைமுறையில் இல்லை" என்று கருதினார். அறிஞர் அண்ணாவும் (1974/3) "மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில் .... மொகலாய சாம்ராஜ்யத்தில் ..... பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஆனால் இன்று அந்த சாம்ராஜ்யங்கள் எங்கே? ... சாம்ராஜ்யங்களுக்கு அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவுதான் ஏற்பட்டது" என்பது மணங்கொள்ளத் தக்கது.

அண்ணல் அம்பேத்கர் (1955/1979/149-50) இந்தியாவில் கூட்டாட்சித் தொடர்பாகக் குறிப்பிடும்போது "இந்தியா என்பதை மனத்தளவிலும், தார்மீக அடிப்படையிலும் இந்திய மாநிலங்களின் ஒன்றியம் (United States of India) என்று கூட சொல்ல முடியாது. ஆனால் வடக்கை வலுப்படுத்தி, தென்னகத்தை ஓரங்கட்டுவது சரியான வழி அல்ல .... வடக்கிற்கும் தெற்கிற்கும் பெரும் வேறுபாடு உண்டு. வடக்கு பழமைப் போக்கு கொண்டது. தெற்கு முற்போக்கானது. வடக்கு மூடநம்பிக்கை கொண்டது. தெற்கு பகுத்தறிவு உடையது. தெற்கு கல்வியில் முன்னேற்றம் உடையது. வடக்கு கல்வியில் பின்னடைவு கொண்டது. தென்னாட்டின் பண்பாடு புதியது. வடக்கின் பண்பாடு பழமையானது .... முதல் தலைமை அமைச்சர் நேரு, பிராமணர்கள் நடத்திய யாகத்தின்படி 'அரச தண்டத்தை' (செங்கோல் அல்ல) ஏற்றுக் கொண்டார் .... திரு.இராசகோபாலாச்சாரியார் என்னிடம் நீங்கள் பெரிய தவற்றைச் செய்து விட்டீர்கள் என்று குறிப்பிட்டார். இந்தியா அனைத்திற்கும் ஒரு கூட்டாட்சி (Federation) ... செயல்பட முடியாது. இதனால் இந்தியாவின் தலைமை அமைச்சர் இந்தி பகுதியிலிருந்துதான் வருவார். வடக்கிற்கு ஒரு கூட்டாட்சியும், தெற்கிற்கு ஒரு கூட்டாட்சியும், மூன்று அதிகாரங்களை மட்டும் கொண்ட பெருங்கூட்டாட்சி (confederation) அமையும் நிலையில் சம பிரதிநிதித்துவம் (Equal representation) என்ற அவரின் வருங்கால முன்னுரைப்பை நான் மதிக்கின்றேன் .... வடக்கிற்கும் தெற்கிற்கும் பெரும் பண்பாட்டு வேறுபாடுகள் உள்ளதை மறக்கக் கூடாது; இது (தீ) பற்றி எரியும் தன்மை கொண்டது" என்பது குறிப்பிடத் தக்கது; அண்ணாவின் கோரிக்கைக்கு அம்பேத்கரின் கருத்துகள் அணி செய்கின்றன.

**மாநிலங்களின் மேலவையில் முழக்கம்**

காஞ்சிபுரம் சட்ட மன்ற தொகுதியில் பண பலத்தால் தோற்கடிக்கப்பட்ட அண்ணா நாடாளுமன்ற மேலவையில் இடம்

பெற்றார். அவ்வவையில் 01.05.1962-ம் நாள் அண்ணா நிகழ்த்திய கன்னிப் பேச்சு அரசியல் அரங்கில் அதிர்வுகளை உருவாக்கின; தன்னாட்சி உரிமை (Self determination) – தனி நாடு கோரிக்கை கேட்டு மன கலக்கம் கொண்டனர் ; ஆனால் அவர் அழகு ஆங்கில உரையில் மயங்கினர். இத்தகுப் பேச்சுகள் இங்கு அனுமதிக்கப்படல் கூடாது என்று கருத்தறிவித்தார் ஏ.டி.மணி என்ற நாடாளுமன்ற உறுப்பினர். அண்ணாவின் பேச்சுக்கு அஞ்சி ச.பி.இராமசாமி ஐயர் (திருவாங்கூர் சமஸ்தானத்தைத் தனி நாடாக அறிவித்தவர்) தலைமையில் குழு அமைத்து பரிந்துரை பெற்றனர். அண்ணாவையும், தி.மு.க. வையும் இக்குழு கலந்து பேசவேயில்லை; பிரிவினை கோரும் கட்சிகளைத் தேர்தலில் பங்கு பெற தடைசெய்ய வேண்டுமென்று சீனப்போரின்போது (1963) அரசியல் சட்டப்பிரிவு 16யைத் திருத்தி சட்டம் கொண்டு வந்தனர். அண்ணாவின் பேச்சிணைக் கண்டு அஞ்சியவர்கள் கடைகெட்டவழியில் செயல்பட்டனர். (திராவிட நாடு) பிரிவினைக்கு எதிரான சட்ட வரைவை எதிர்த்துப் பேசிய அண்ணா (1986அ/63-73) "... தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் முன்பு எங்கள் நோக்கத்தை எடுத்துரைக்கும் வாய்ப்பு அளிக்கவுமில்லை. எங்களை உங்கள் நம்பிக்கைக்கு உரியர்களாக்கிக் கொள்ளவுமில்லை ... தி.மு.கவை எதிர்த்து பிரச்சாரம் செய்ய ஏன் எல்லா மக்களாட்சி சக்திகளும், தேசிய சக்திகளும் ஒன்றுபடக் கூடாது? மக்கள் என் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்களா? என்பதைக் கண்டறிய விரும்புகின்றேன் .... கருத்துப்போர் நடத்துவதிலிருந்து நழுவி விடுகிறீர்கள் ...." என்று அறைகூவல் விடுத்தார் ; அதனைச் சந்திக்க ஆளில்லை; அரசியல் களம் ஆதிக்கச் சூழலாகியது, அறிவுப்போருக்கு அணியமாகவில்லை.

**திராவிட நாடு பிரிவினைக்கு எதிரான காரணிகள்**

திராவிட நாடு விடுதலைப்பெற எதிராக அமைந்த காரணிகள்: சமுதாய தேக்கம், பொருளியல் வறுமை, பிழைப்பு தேடி புலம் பெயர்தல், மக்கள் வாழ்வில் நம்பிக்கையின்மை, இந்து சாதிய மயக்கம், பெரும் வடக்கு நிலவெல்லை ஆகியன. மக்கள் தொகைப் பெருக்கமும், மதவெறி இணைந்த அரசியல் ஆகியனவும், இன்னொரு பிரிவினையைத் தாங்காது என்பதும் மக்கள் கருத்தாகத் தெரிகிறது. திராவிடநாடு விடுதலைக்கான காரணங்களை அப்படியே தக்கவைத்துக் கொண்டு ;திராவிட ஒன்றியம் (Dravidian Union), என்னும் கூட்டாட்சித் திட்டத்தை முன் வைத்தார். ஒரு வழியில் 'திராவிட நாடு விடுதலை' ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதுவே மாநில தன்னாட்சிக் கருத்தாக மலர்ந்துள்ளது; நடுவண் அரசு மாநில கட்சிகளின் துணையால் வாழ்ந்து வருகிறது. தமிழ் நிலத்தில் அண்ணாவின் மாநில தன்னாட்சியோடு அண்ணா உருவாக்கிய மறுமலர்ச்சி உணர்வு செயல் வடிவம் பெற வேண்டும். "இந்திய சமுதாயம்

கீழைக்கொடுங்கோன்மைக்கு வலுவான தளம் அமைத்தது" (மார்க்ஸ், 1853/40) என்பது தொடர்வதாகக் கருதினால், 'இந்துத்துவா ஆட்சி தில்லியில் தொடருமானால், மேற்கு வங்காளம் இந்தியாவிலிருந்து பிரிந்து போகும்' என்ற மார்க்சிய அரசியல் வித்தகர் ஜோதிபாசுவின் கருத்தில் நயன்மை (Justfication) இருப்பதாகக் கருதினால் 'திராவிடநாடு' அண்ணாவின் அரசியல் நயற்சி (Political Diplomacy) எனக் கருதிட வேண்டும்.

## (5) இலக்கியம், கலை – பண்பாடு

அறிஞர் அண்ணா தமிழ்மொழியில் சங்க இலக்கிய உள்ளடக்கங்கள் மனித வாழ்வை எளிமையாகவும், எதார்த்தமாகவும் அமையப்பெற்ற நிலைகள் அண்ணாவைக் கவர்ந்திருப்பதாகக் கருதலாம். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா ஆங்கிலப் பேருரையில் புறநானூற்றுப் பாடலை மேற்கோள் காட்டி சுவைபட விளக்கினர்; வள்ளுவத்தின் மாண்புகளில் அண்ணா மயங்கினார்.

அண்ணா உலகு தழுவிய பார்வை கொண்ட ஆங்கில இலக்கியங்களைக் கற்றறிந்தார்; அவற்றில் ஈடுபாடு கொண்டார். 'அன்பான தன் கணவனுக்காகத் தலைமுடியை விற்று, அவன் கைக்கடிகாரத்திற்கு இணைப்பட்டை வாங்கிய மனைவி' (டெல்லா), தன் கைக் கடிகாரத்தை விற்று விட்டு மனைவிக்கு யானைத் தந்தத்தாலான சீப்பு வாங்கிவரும் கணவன் (ஜிம்); இவர்களின் காதலன்பைக் காட்டும் ஒகென்றியின் 'கிப்ட் ஆப் தி மேகி' (Gift of the Magie) சிறுகதையில் சுவை, அமைப்பில் எதிர்பாரா திருப்பம் ஆகியவற்றைச் சுட்டுகிறார் அண்ணா. அமெரிக்க புதின ஆசிரியர் இர்விங் காலஸ் (1974) படைத்த 'மனிதன்' (The Man) நாவலைத் தன் தம்பிகளுக்குக் கடிதம் வழி கதைச் சொன்ன வரலாறு தமிழிலக்கிய தளத்தில் புதியப் போக்கு. தமிழ் சங்க இலக்கிய அடித்தளத்தில், மறுமலர்ச்சி இலக்கிய படைப்புகளைத் தட்டியெழுப்பினார்.

அண்ணாவின் இலக்கியப் படைப்புகளைக் கீழ்க் கண்டவாறு தொகுக்கலாம்:

(1) கடித இலக்கியம்

(2) கட்டுரை இலக்கியம்

(3) சிறுகதை இலக்கியம்

(4) புதின, குறும்புதின இலக்கியம்

(5) நாடக இலக்கியம் (கலை)

(6) திரைப்பட இலக்கியம்

(7) திறனாய்வு இலக்கியம் மற்றும்

(8) சொற்பொழிவு இலக்கியம்

**கடித இலக்கியம்**

'திராவிட நாடு', 'காஞ்சி' வார இதழ்களில் அண்ணா எழுதிய கடிதங்கள் சமுதாய, சமய, பொருளியல், அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கியவை. தம்பிக்கு என தொடங்கி ஆற்றோட்ட அழகு தமிழ் நடையில் தனது கருத்துகளைக் கதைப்பாங்கிலும், நாடகப்பாங்கிலும் விளக்கிச் சொல்லும் திறம்படைத்தவர்.

அமெரிக்காவின் துணைக் குடியரசுத் தலைவர் முன்பே ஒரு விபத்தில் இறந்து பட்டார். குடியரசுத் தலைவரோ செருமானிய நாட்டின் அல்டாமின்சார் வளமனை இடிந்ததால் மாண்டார். அடுத்து மூப்பாளர் அவையின் (Senate) மூத்த உறுப்பினர், ஒரு கருப்பர் குடியரசுத் தலைவராகிறார். வெள்ளை மாளிகையில் வெள்ளையர் என்பதற்கு பகிரங்கமாக ஒரு கருப்பர் இருப்பதை ஒப்புக் கொள்ளாத வெள்ளையர் வஞ்சனையால் வீழ்த்த முயல்கின்றனர். வெள்ளை மாளிகையின் வெளிநாட்டு செயலர் விழாச் செயலருக்குக் கொடுத்த கட்டிலறை உறுதிமொழியோடு திட்டத்தை செயல்படுத்த, விழாச் செயலரைப் பஞ்சணைக்கு அழைத்ததாகக் குற்றச்சாட்டு. கருப்புக் குடியரசுத் தலைவர் வீழ்ந்தவுடன், குடியரசுத் தலைவராகத் தன் மனைவியோடு ஒத்திகை நடத்த, இதனைப் பொறுக்காத விழாச் செயலர் உண்மையைச் சொல்கிறாள். அவள் தந்தை, மூப்பாளர்அளித்த வாக்கால் குற்றச்சாட்டு தோற்கடிக்கப்படுகிறது. கருப்பு மனிதர் வென்றார். அண்ணல் அம்பேத்கரை மேற்கோள் காட்டி இந்தியாவில் கற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் படும் துயரங்களைச் சுட்டிக் காட்டினார் அண்ணா (1981 ஆ/150).

**கட்டுரை இலக்கியம்**

அறிஞர் அண்ணா, கட்டுரைகள் வழி பல சீரிய கருத்துகளை முன்வைத்தார். சமுதாயத் தளத்தில் சமத்துவத்தை விரும்பிய அண்ணா "நாம் யாருக்கும் மேல் அல்ல; யாரும் நமக்கு மேலோர் அல்ல. நாம் ஆள ஆட்கள் வேண்டாம். மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்" என்ற அண்ணாவின் (1981அ/43) சமுதாய, சமய, பொருளியல் கருத்தாடல்கள் சிந்தனைக்குரியவை. "இந்த சமுதாயம் சரிந்து கொண்டிருக்கிறது .... நாம் வீறுகெட்ட சமுதாயத்தில் வாழ்கிறோம். சமுதாயம் ஆட்டம் கொடுத்து ஆடுகிறது". அண்ணாவின் (1989/13-14)வின் இக்கருத்துகள் மார்க்ஸ், குணார்மீர்டால், நேரு ஆகியோரின் கருத்துகளோடு உடன்படுகின்றன.

**சிறுகதைகள்**

மேலைநாட்டு இலக்கியத் தூலக்கத்தால் உருவான சிறுகதை இலக்கியம் அண்ணாவின் கைவண்ணத்தில் தன்மான, இனமான

செய்திகளை ஏந்திச் சென்றது. பல்லவ மன்னனின் படைத்தளபதி 'சிங்கம் சிறு முயலாக்கப்பட்டு விபூதி பூசப்பட்டு சிவனுக்கு பிள்ளைக்கறி சமைத்த சிறு தொண்டனான' கதை படைத்தார்.

தாசி வீடு சென்ற தவசியும் மாறினான்; தாசியும் மாறினாள் என்ற புதியப் போக்கு அண்ணாவால் உருவாக்கப்பட்டது. உண்மைக் காதல் பிரிக்கப்பட்டால் சமுதாய நீதியே மாற்றப்படும் என்று ஒரு சிறுகதைவழி எச்சரித்தார். வஞ்சிக்கப்பட்ட காதலியின் மகள் இந்திய ஆட்சிப் பணி, தேர்வு வழி மாவட்ட ஆட்சியராவது, வயோதிகனை மணம் புரிந்த இளம்பெண் இடம் தாவும் போக்கு, இசைவாணரின் மகனுக்கும் சாஸ்திரியின் மகளுக்கும் திருமணம் அதுவும் சாஸ்திரியே நடத்திவைப்பது போன்ற சிறு கதைகளை அண்ணா படைத்தார். வண்டியில் பூட்டப்பட்ட குதிரைக்கு இணையாக வாழ்வில் பூட்டப்படும் பெண்ணும் ஒன்றே என்று பெண்ணடிமையைச் சுட்டுகிறார் அண்ணா. 'பெண்ணுரிமை, விதவை மணம், காதல் மணம், கலப்பு மணம் போன்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு கதை படைத்தார்' (வேலுசாமி, 1989/57-71). ஆட்சி பொறுப்பேற்றவுடன் கலப்புமண இணையோர்க்கு பொற் பதக்கம் வழங்கி பாராட்டினார். புறமணத்தில் (கலப்பு மணத்தில்) பிறந்த குழந்தைகள் உடல் வளமும், மன வளமும், அறிவு வளமும் பெற்றிருப்பதாக அறிவியல் - கால்வழி இயல் (Genetic) செய்திகள் காட்டுகின்றன.

**நாடகங்கள் (கலை)**

நாடகம் திரைப்படங்களுக்கு முன்னர் மக்களைக் கவரும் வலிமையான ஊடகம். கடந்த - அண்மைக் காலங்களில் (Recent past) இந்து சமய தெய்வீகப் படைப்புகளை - பழமைக் கருத்தினைப் பரப்புரை செய்ய நாடகங்கள் பயன்படுத்தப்பட்டன. அதே நாடகக் கலை வடிவத்தைப் பயன்படுத்தி மறுமலர்ச்சிப் போக்கில் மக்களிடம் உண்மைகளைச் சொன்னார். அறிஞர் அண்ணா, நாடக ஆசிரியராகவும், நாடக உரையாசிரியராகவும், நடிகராகவும் பங்கேற்று சாதனை படைத்தார். அண்ணாவோடு மாற்று கருத்துடைய கல்கி கிருஷ்ணமூர்த்தி அண்ணாவை 'தென்னாட்டு பெர்னாட்ஷா' என்று புகழ்ந்து பாராட்டினார்.

தோல்பாவை கூத்து வழி இராமாயணம் தமிழ்நாட்டில் குறிப்பாக சோழ மண்டலத்தில் பரப்பப்பட்டது. இராமன், இராவணனை, ஆண்குறியால் இடித்து வீழ்த்துவதாகக் காட்டினர். இதற்கெதிராக மக்கள் இராமனை இழிக்கும் எதிர் உரையாடலை நடத்தினர். இராமனை, இக்கால சார்லஸ் (டயானாவின் கணவர்) போன்றவராக அக்காலத்தில் பேசினர். 'நீதிதேவன் மயக்கம்' என்ற நாடகத்தில் அண்ணா இராவணனாக நடித்தார்; ஆசிரியரும் அவரேயாகும். "இரக்கமின்றி என் தங்கையைப் பங்கப்படுத்தி, வாலியை மறைந்திருந்து கொன்ற இராமன் தெய்வமென்று

கொண்டாடப்படுவது! தேன் தமிழிலே இந்த கம்பனுக்குப் பாட்டுக் கட்டத் தெரிந்ததால், நீதிதேவா! இது சரியா" என்று குற்றவாளிக் கூண்டில் நின்ற கம்பனைச் சாடினார் அண்ணா (1980/29-30). அம்பேத்கர் (1996/459-464). "வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு இராமன் செய்த கொலைகள். அன்பு காட்டும் மனைவியைத் துன்புறுத்தியது, மது, மாமிசம், மாதுகளோடு நடனம், பல பெண்களோடு உறவு ஆகியவற்றை வெளிக்காட்டினார்" கற்பனைக் கதைக்கென்ன கட்டுப்பாடு; கவர்ச்சியிருந்தால்தானே இதிகாசம் இனிக்கும்.

"சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" நாடகம் வழி சிவாஜியின் சூத்திர அடிமைப் பண்பை வெளிக்காட்டினார். தில்லி ஔரங்கசீப்பின் மேலாதிக்கத்தை, பழங்குடி மக்கள் துணையுடன் வென்ற சிவாஜி காகப்பட்டரிடம் பொன்னும் பொருளும் கையூட்டாகக் கொடுத்து சத்திரியப்பட்டம் சூட்டிக் கொண்டான். "மராட்டிய மண்டலத்தைக் கமண்டல நீர் தெளித்து அவர்கள் உண்டாக்கவில்லை; மராட்டியரின் ரத்தத்தைச் சிந்தி இந்த மண்டலத்தைப் பெற்றோம்; யாக குண்டத்தின் விளைவல்ல; மராட்டியம் தியாகத்திலே தோன்றிய தேசம்" (அண்ணா, 1980ஆ/96) என்ற உரையாடலுக்கு பதில் சொல்லவில்லை; ஆனால் தன் முடிவையும் மாற்றிக் கொள்ளவில்லை. "அண்ணா படைத்த வேலைக்காரி, ஓர் இரவு, சொர்க்கவாசல் ஆகியன அண்ணாவின் நாடக இலக்கியப் பணிக்கான மணிமகுடங்களாக அமைந்தன" (வேலுசாமி, 1989/97).

### புதினங்கள் /குறும்புதினங்கள்

அண்ணாவின் குறும்புதினமான "கோமளத்தின் கோபம்" பெண்கள், இணைவிழைச்சு (sexuality) வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எல்லை மீறுவதைக் கண்டனம் செய்தார். பெண்ணுரிமை நாடிய அண்ணா 'பெண்வழிச் சேரலை' ஏற்கவில்லை. காதலின் மேன்மையை விளக்கும் அண்ணா 'கபோதிபுரக்காதல்' கதையில் கதைத் தலைவி உண்மைக் காதலைப் புறக்கணித்து, பணக்கார கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு, கிழவன் இறந்துபட நிற்கதியானாள்; அவள் வாழ்க்கைப் படகு ஓட்டைப்படகு என்று சித்தரித்தார். சாதியமும் வைதீகமும் ஒழிக்கப்படவேண்டுமென எழுதப்பட்ட புதினம் 'சந்திரோதயம்'. மனித உறவுகள் முரண்படுவதைச் சொல்லும் கதை 'வண்டிக்காரன் மகன்'. போரில் ஈடுபடும் சூழ்க்களிடையே (நாடுகளிடையே) நாடுகளைச் சேர்ந்த ஆடவர், பெண்டிர் காதல் வயப்படும் உண்மையைக் காட்டுகிறது இரும்பு முள்வேலி (அண்ணா, 1980இ/5-48). இந்திய 'சாதி நாடுகள்' இடையேயும் காதல் உண்டு. "கலிங்கராணி" திராவிட இன ஒற்றுமையைக் காட்டும் புதினம். "குமரிக்கோட்டம்" பெண்ணுரிமை நாடிய படைப்பு.

**கவிதைகள்**

தமிழர் வாழ்வில் கவிதை (பாடல்) ஒரு தொன்மையான தொடர் மரபு. நாட்டுப்புறப் பாடல்களான தாலாட்டு, ஒப்பாரி, தமிழ் மரபின் கவிதைப் பகுதிகள். அண்ணாவின் உரைநடையில் கவிதை வளம் ஊடாடுவதைக் காணமுடியும். அண்ணாவின் உரைநடை, உரைநடைக் கவிதையாகப் படிப்போர்க்கு அமையும். தமிழின்பால் அண்ணாவின் பற்றை வெளிப்படுத்தும்போது

> **இன்று நீ பறந்திடு – தமிழரின் தூதனாய்**
> **நின்றிடு ஓர்புறம். கூறிடு இம்மொழி ...**
> **ஓர்புறம் இருந்து ஒழிக இந்தி**
> **மறுபுறம் கண்டேன் பெரியார் வாழ்க**

இந்தி ஆதிக்கம் சுட்டினார் அண்ணா. இலங்கை மலையகத் தமிழர்படும் துயரைக்கண்டு "அவர் அனைவரும் தேய்வதா–அடுப்பிலிட்ட கட்டை போல்?" என்று கேள்வி எழுப்பினார். இந்து சமயம் வளர்த்த காந்தியடிகள் இந்துவெறி பிராமணனால் சுட்டுக் கொல்லப்பட்டபோது

> அநியாயம்தானுங்கோ
> அவனிக்கடுக்காதுங்க!
> அக்ரமக்காரன் பேரு
> கோட்சேதானுங்க

என்று பாடினார் அண்ணா (1987/17, 35, 41).

"அண்ணாவின் கவிதைகளில் சங்கச் செய்யுள் இலக்கியச் சாயலும், இடைக்கால இலக்கியத் தாக்கமும் பின்னிப் பிணைந்துள்ளன. அண்ணாவின் கவிதைகளில் ஆடி நாதமாக விளங்குவது சமுதாய சீர்திருத்தமும், சமதர்மமுமேயாகும்" (வேலுசாமி, 1989/124-134).

**திரைப்படங்கள்**

அறிஞர் அண்ணா திரைப்பட ஊடகத்தை வளப்படுத்தி கருத்துப் பரப்புரைக்குப் பயன்படுத்திக் கொண்டார். அண்ணா நவீன கால உள்ளடக்கங்களைக் கொண்ட திரைப்படங்களைப் படைத்தார். உழைப்பின் பெருமை பேசும் 'வேலைக்காரி' திரைப்படத்தில் 'நீ வேலை செய்வதால் வேலைக்காரி .... இதில் மானக்கேடு ஏதுமில்லை' என்றார். 'சட்டம் ஓர் இருட்டறை, அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; ஏழையால் அந்த விளக்கைப் பெறமுடியாது' என்பது அண்ணாவின் கூற்று; பெருவயிறு படைத்தவர்களே சட்டத்தை விலை கொடுத்து வாங்குவது இன்றைய நிலை. எளிய மக்கள் – தாழ்த்தப்பட்ட / பழங்குடிமக்கள் (SC/ST) மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டம் நடைமுறைபடுத்த முடியாமை

அண்ணாவின் கருத்துக்கு மற்றொரு சான்று. சொர்க்கவாசல் திரைப்படத்தில் 'நாட்டிலே நரகம் இருக்கிறது—நாற்ற மடித்துக் கொண்டு அதை ஒழிக்காமல் சொர்க்க வாசல் காட்டுவது படுமோசம்' என்று அறைந்து மொழிந்தார். 'நல்லதம்பி' திரைப்படம் மதுவிலக்கு பரப்புரை செய்தது. "... அவர்களின் (தி.மு.க) திரைப்படங்களில் சமத்கிருதமில்லாத தமிழ் உரையாடல்கள் பிராமணர்களின் ஊடக ஆதிக்கத்தை வெளிக்காட்டின. (கதைகள்) சுயமரியாதைத் திருமணங்களில் முடிவுற்றன" (தியோடர் பாஸ்கரன், 1981/18).

### திறனாய்வு இலக்கியம்

ஆரியமேன்மை, வேத, வேதாந்த, பிராமணிய உள்ளடக்கங்களைக் கொண்டு சமயம், சமுதாயம், இலக்கியம், மற்றும் பண்பாட்டுத்தளங் களில் மேலாதிக்கம் நடத்தப்பட்டது; இன்றும் தொடர்கிறது. பிரஞ்சு நாட்டு கிருத்துவ அறவாணர் 'அபிடியூபா' கண்டறிந்த உண்மைகளை மையமாகக் கொண்டு அண்ணா ஆரிய (பிராமணிய–இந்துத்துவா) மேலாதிக்கத்தைத் திறனாய்வு செய்தார். இந்து சமயத்திற்கு முட்டுக் கொடுக்கும் 'இந்து (The Hindu) நாளேடும்' அப்பாதிரியார் கூறிய நிலையிலேயே இங்கு மக்கள் இன்றும் உள்ளனர் என்று எழுதியதையும் மேற்கோள் காட்டினார். பார்ப்பனரான பாரதியும் 'சூத்திரனுக்கோர் நீதி; தெண்டச்சோறுண்ணும் பார்ப்புக்கு நேரோர் நீதி' என்று கண்டனம் செய்தது அண்ணாவின் கருத்துகளுக்கு அணி செய்கின்றது. இந்துக்களின் ஆபாச கடவுள்களைத் தோலுரித்துக் காட்டினார். "ஒன்றே பரம்பொருள்; நாம் அதன் மக்கள்" என்று ஐரோப்பாவின் மாஜிக் கடவுள்கள் வழி தெளிவுப்படுத்தினார் (அண்ணா, 1978/172–190).

### சொற்பொழிவு இலக்கியம்

தமிழ் மேடைப் பேச்சுக்கு அண்ணா புகழ் சேர்த்தார்; அவரைப் பின்பற்றி பல மேடைப் பேச்சாளர்கள் உருவானார்கள். அவர் மேடைப் பேச்சுகளில் பலதுறை அறிவும், அரசியல், பண்பாட்டு, பொருளியல் நயற்சியும் (Diplomacy) வெளிப்படும். தமிழ் அறிஞர்கள் சொல்லின் செல்வர். இரா.பி.சேது (பிள்ளையையும்), பசுமலை சோமசுந்தர பாரதியையும் இராமாயண பட்டிமன்றத்தில் வென்றார். அண்ணாவின் நாடாளுமன்ற மேலவை பேச்சுகளில் மாற்று கருத்துடையோரும் மயங்கினர். அழகு ஆங்கில உரையால் கவரப்பட்டனர். திராவிடர்களுக்கு 'தன் ஆட்சி முடிவு (நிர்ணய) உரிமை' கேட்டபோது பலர் அதிர்ந்தனர். ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்களை பட்டித் தொட்டிகளிலும், அவர்களின் இல்லத் திருமணங்களிலும் சந்தித்து உரையாற்றினார்.

"அண்ணா .... புலவர் மொழியாக எழுதவில்லை (பேசவில்லை) .... அண்ணாவின் மற்ற பணிகளைவிட அரசியற்பணி பரந்துபட்டது; தீவிரமானது, ஒப்புயர்வற்றது என்பதுதான். அரசியல் மக்களுக்காக ஆதலால் அன்றாட வாழ்க்கையில் பேசுவதுபோல் வேற்றுமொழி கலப்புடனும் கொச்சை வழக்குடனும் பேச வேண்டியவரானார்" (விவேகானந்தன், 1984/141).

## பண்பாடு

திராவிடர்களின் உழைக்கும் பாட்டாளிய, பிறவிப் பொதுவுடைமைப் பண்பாடு, உலகப் புலவரின் வள்ளுவப் பண்பாடு ஆகியவற்றைப் புகழ்ந்த அண்ணா தனிமனித வாழ்விலும் பண்பாடு பேணினார். தந்தை பெரியாரின் கடுமையான தாக்குதல்களுக்கு அண்ணா ஆளானார். 'தன் ஒரே தலைவர்' எனப் போற்றிய பெரியார் நிலைபற்றி விளக்க ஒரு சீன நாட்டு கதையைச் சொன்னார். அங்கு கிழத்தந்தைகளும், கிழமகன்களும் பொதுவிடங்களில் கூடியிருப்பார்கள். கிழத்தந்தை இட்ட கட்டளையை நிறைவேற்றாத கிழமகனைக் குச்சியால் அடித்துத் துன்புறுத்துகிறார். அழுத கிழமகனைக் காட்டி மற்ற கிழத்தந்தைகள், அடித்த கிழத்தந்தை மீது குறைகண்டனர். 'நான் அடித்ததால் வலித்ததா?' என்று கிழத்தந்தை கேட்க, 'அப்பா! அடித்த வலியால் அழவில்லை அடித்த ஒரு அடிகூட வலிக்கவில்லை; உங்களுக்கு முதுமை வந்துவிட்டதே; என்னைப் பிரிந்து விடுவீர்களே என்றுதான் அழுதேன்' என்றான் கிழமகன். பிறகு கிழத்தந்தையும், கிழமகனும் அமைதி பெற்றனர். கோவை, சிதம்பரம் பூங்கா பொதுக் கூட்டத்தில் 1967, தேர்தலுக்குமுன் பேசி தன் இயக்கத் தந்தையின் தள்ளாமைக்கு வருந்தினார்; அண்ணா பெரியாரை என்றும் மதித்தார்.

## முடிவுரை

அறிஞர் அண்ணா தமிழ் இலக்கிய மரபுகள், பௌத்த, சமண, வள்ளுவ மாண்புகளை உள் வாங்கிக் கொண்ட சிந்தனையாளர். ஐரோப்பிய மறுமலர்ச்சியையும் முழுமையாக ஏற்றுக்கொண்டவர். இந்திய சமுதாயத்தின் அடித்தளம் முறையாக அமையாமல் ஆட்டங்காணுவதை அண்ணா இனங்கண்டார். உலக அறிஞர்களான கார்ல் மார்க்ஸ், ஆபிடி யூபா, குணார் மிர்டால், நேரு ஆகியோர் இதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். எங்கும் இல்லாத சாதி முறை இந்தியாவில் இருப்பதை அண்ணா சுட்டிக் காட்டியுள்ளார்; அண்ணல் அம்பேத்கரும் சாதி முறையைக் கடுமையாகச் சாடினார். இந்தியாவில் உள்ள வேதாந்த சமுதாயம், சமுதாய வரையறைக்கு உட்படாத சமுதாயம்; கீழைக் கொடுங்கோன்மைக்குத் தளமும் கூட. இந்தியாவின் இந்துசமயம் சமயமாக இல்லாமல் சாதிகளின் கூட்டுக்கலவையாக விளங்குகிறது; சாதியும் தீண்டாமையும் இந்துசமயத்தின் அடிப்படைகள்.

இந்துசமய இலக்கியங்கள் நம்ப முடியாத பொய்க்கதைகள் இழிமை (ஆபாச)ப் படைப்புகளையே புனிதங் களாக்கிவிட்டனர். பொய்களையும், புனைவுகளையும், வதந்திகளையும் குழறுபடை (குதர்க்க) உரையாடல்கள் வழி, இந்துசமய வாணர்கள் நிலைநாட்ட முயன்று வருகின்றனர். அண்ணா கிருத்துவ, இசுலாமிய சமயங்களை மதித்தார்; சாதிய வன்முறையால் இன்னல்படும் மக்கள் 'எதிர் தாக்குதல்' நடத்த விழைந்தார்; மதம் மாற்றம் பெற வேண்டினார். இந்திய மொழிகளில் மூத்த மொழியான தமிழ், செம்மொழி; உலகப் புலவர் வள்ளுவரின் மொழி; தமிழை அழிக்க இந்தி மொழி வழிமுயன்ற ஆதிக்கம் தமிழ் அறிஞர்கள், பெரியார், அண்ணா ஆகியோர் போராட்டங்கள் வழி முறியடிக்கப்பட்டது. சமுதாய, சமயத்தளங்களின் கொடுங்கோன்மையிலிருந்து தன் திராவிட இனத்தைக் காக்க முனைந்தார்; ஈழத்தமிழர்கள அண்ணாவின் தமிழ் பண்பாட்டு இயக்கத்தைப் பின்பற்றினர். மலையகத் தமிழர்களுக்குக் குரல் கொடுத்தார் அண்ணா. இனம் காக்கும் போராட்டத்தில் இலக்கை எய்த முடியாமல் திராவிட நாடு கொள்கைக்குப் பகிரங்கமாக 'திராவிட ஒன்றியம்' என்ற கருத்துருவை முன்வைத்தார்;திராவிடநாடு விடுதலை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகக் கருதலாம். அண்ணா திராவிட பொதுவுடைமை சமுதாயமும் நாடும் உருவாக்க விரும்பினார். கலை, இலக்கிய, பண்பாட்டுத் தளங் களில் பெரும் பங்களித்தவர்; மறுமலர்ச்சிப் போக்குகளை முன்னெடுத்துச் சென்றார். பெரியாரின் புரட்சிக் கருத்துகளுக்கு அண்ணாவின் மறுமலர்ச்சிக் கருத்துகள் வளம் சேர்ப்பவை. அண்ணா பண்பாட்டு மறுமலர்ச்சியின் தாய்; பிற இந்திய மாநிலங்கள் பண்பாட்டு மறுமலர்ச்சியைப்பெற அண்ணாவின் கருத்துகள் பயன்படும். அண்ணாவின் மறுமலர்ச்சிக் கருத்துகளைச் செயல்திட்டமாக்க வேண்டும்; இல்லையேல் தமிழ் நிலத்தில் மொழி, பண்பாடு, அரசியல் ஆகிய தளங்களில் தற்கொலையாகவே அமையும். மகாராஷ்ட்ர அரசு அண்ணல் அம்பேத்கர் நூல்களை வெளியிட்டதுபோல், அண்ணாவின் படைப்புகள் அனைத்தும் தொகுத்து வெளியிடப்படவேண்டும். ஆங்கிலம், இந்தி, திராவிட மொழிகள், வங்காளம் ஆகிய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும்.

## துணைநூற்பட்டியல்

1. அம்பேத்கர், பி.ஆர், 1996, இராமன் கிருஷ்ணன் பற்றிய புதிர் (பின் இணைப்பு:1), டாக்டர். பாபா சாகேப் அம்பேத்கர் எழுத்துக்களும் பேச்சுகளும், மகாராஷ்ட்ர அரசு வெளியீடு, பம்பாய், தமிழ்த் தொகுதி:8, பக்:459−464, (English Vol.4).

2. அறிஞர் அண்ணா, ....அண்ணா பேசுகிறார், பாரதி பதிப்பகம், சென்னை-600 017, பக்.88-95.

3. அறிஞர் அண்ணா, 1955 (விவேகானந்தன்,கு. மேற்கோள் காட்டியவாறு) ஆரியம் இருக்குமிடம், அண்ணாவின் கடிதங்கள் 1955, மலர் 14, இதழ் 14, அண்ணாயியம், சென்னை, ப.216.

4. அறிஞர் அண்ணா, 1974, அண்ணா அழைக்கின்றார், நண்பர்கள் கழகம், சென்னை, ப.3.

5. அறிஞர் அண்ணா, 1977, அண்ணாவின் சட்டசபை சொற்பொழிவுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.99.

6. அறிஞர் அண்ணா, 1978, மாஜிக்கடவுள்கள், பாரி நிலையம், சென்னை, பக்.172-190.

7. அறிஞர் அண்ணா,1980, அ. நீதிதேவன் மயக்கம், பூம்புகார் பிரசுரம் பிரஸ், சென்னை, பக்.29-30.

8. அறிஞர் அண்ணா, 1980, ஆ.சந்திரமோகன் (சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்), பூம்புகார் பிரசுரம், சென்னை, ப.96.

9. அறிஞர் அண்ணா, 1980, இ.இரும்பு முள்வேலி, பூம்புகார் பிரசுரம், சென்னை, பக்.5-48.

10. அறிஞர் அண்ணா, 1981, அ.ஆரியமாயை, திராவிடப் பண்ணை, திருச்சிராப்பள்ளி, பக்.10-11. 19,26,27,38,43, 62-63.

11. அறிஞர் அண்ணா, 1981, ஆ.வெள்ளை மாளிகையிலே, பூம்புகார் பிரசுரம், சென்னை, ப.150.

12. அறிஞர் அண்ணா, 1986, அ. இராஜ்ய சபையில் அண்ணா, பாரதி பதிப்பகம், சென்னை, பக்.63-73.

13. அறிஞர் அண்ணா, 1986, ஆ. கம்பரசம் தொகுதி-I, பாரதி பதிப்பகம், சென்னை,பக்.3-4.

14. அறிஞர் அண்ணா, 1987, பேரறிஞர் அண்ணாவின் கவிதைகள், பூம்புகார் பிரசுரம்,சென்னை, பக்.17,35,41.

15. அறிஞர் அண்ணா, 1989, புராண மதங்கள், பாரதி பதிப்பகம், சென்னை, பக்.13-14,33.

16. அறிஞர் அண்ணா,2008அ, பழந்தமிழருக்கு கோவில்கள் உண்டா? அறிஞர் அண்ணாவின் கட்டுரைகள் 5, சீதை பதிப்பகம், சென்னை,பக்.43-47.

17. அறிஞர் அண்ணா, 2008இ, திராவிடர் நிலை, தமிழரின் தனிப்பண்பு, சீதை பதிப்பகம், சென்னை, ப.29.

18. அறிஞர் அண்ணா, 2008ஈ (மாணிக்கவாசகன், ஞா. தொகுத்தவாறு) பேரறிஞர் அண்ணா பொன்மொழிகள், மொழி, உமா பதிப்பகம், சென்னை, பக்.26–35, 36–37, 103.

19. அறிஞர் அண்ணா, 2008 உ. கௌமாரீஸ்வரி, எஸ். (2008) தொகுப்பு, சொர்க்கத்தில் நரகம், தேவ லீலைகள், சென்னை பக்.11–29.

20. அறிஞர் அண்ணா, வேலுசாமி, ந. 1989, மேற்கோள் காட்டியவாறு அண்ணாவின் சிந்தனைகள், ஈரோடு, ப.86.

21. கருணாநிதி, 1984 1/159–171, அருணா அரசுமேற்கோள் அறிஞர் பார்வையில் கலைஞர் மணிவிழா மலர், சென்னை.

22. கவிதாசரண், 2006, ஆதிக்கச்சாதிகளின் அதிகாரக் கொள்முதலும் தன்மான விற்றொழிப்பும், கவிதாசரண் (இதழ்), சூலை–டிசம்பர் 2006, பக்.5=14.

23. கார்ல்மார்க்ஸ்–பிரிடரிக் எங்கல்ஸ், 1853, இந்தியாவைப்பற்றி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பக்.7 (தமிழாக்கம் எஸ். ராமகிருஷ்ணன் மற்றோர், 1971).

24. சுப்பிரமணியம், சி. 1999, ஹிந்தி பேசும் மாநிலங்களே வளர்ச்சிக்குத் தடை தினமணி 02.03.99, ப.8.

25. டாங்கே, எஸ்.ஏ. 1972, இந்திய வரலாற்றை உருவாக்கிய சக்திகள், மத்திய பிரதேச வரலாற்றுக் கருத்தரங்கில் ஆற்றிய துவக்க உரை ஆராய்ச்சி, மலர் 2, பக்.249–272.

26. தலித் ஆய்வு மையம், 1996, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995, தமிழ்நாடு இறை இயல் கல்லூரி, மதுரை.

27. தேவநேயப் பாவாணர், 1940, ஒப்பியன் மொழிநூல், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

28. தேவநேயன், 1972, தமிழர் மதம், நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு, பக்.113–115.

29. தியாகு, 1993, முடியவில்லை, மொழிப்போர், தமிழக மாணவர் இயக்கம், சென்னை, பக்.18-19.
30. பாண்டியன், தா. 1967, கலை இலக்கியத்துறையில் தி.மு.க. ஒரு மதிப்பீடு, தாமரை, 8(12):8-9.
31. பாலதண்டாயுதம், கே. 1964. ஜாதி ஒழிப்பு ஜாம்பவன், விடுதலை, பெரியார் 88ம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர், பக்.25-27.
32. பெரியார், ஈ.வே.ரா. 1973, உயர் எண்ணங்கள் II, பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, திருச்சிராப்பள்ளி, ப.5.
33. பொதிகைத் தமிழரசன், 1996, தமிழக மறுமலர்ச்சி, சரயு பப்ளிகேசன்ஸ், தென்காசி, ப.166, 208-209.
34. ராஜதுரை, எஸ்.வி. 1993, இந்து-இந்தி-இந்தியா, அறிவகம், சென்னை, பக்.136-137.
35. மாணிக்கவாசகன், ஞா. 2008, பேரறிஞர் அண்ணா பொன்மொழிகள், உமா பதிப்பகம், சென்னை, ப.105.
36. விவேகானந்தன், கு. 1984, அண்ணாயியம், குமரன் வெளியீடு, சென்னை, ப.141.
37. வேலுசாமி, ந. 1989, அண்ணாவின் சிந்தனைகள், ஈரோடு, பக்.96-97, 124-134.
38. Ambedkar, B.R. 1955/1979, Thoughts on Linguistic States, Dr. Babasaheb Ambedkar Writings and Speeches, Ibid., Vol. I, pp: 149-150.
39. Ambedkar, B.R. 1936/1979, Annihilation of Castes, Ibid., Vol. I, pp:76-77.
40. Ambedkar, B.R. 1989a, The Indian Ghetto, The Centre of Un-touchability Ibid., Vol.5, pp. 21-22.
41. Ambedkar, B.R. 1989b, The rock on which it is Built. Ibid., Vol.5, pp. 179-180.
42. Ambedkar, B.R. 1990, The Untouchables: Racial Difference Ibid., Vol.7, p.298.
43. Arjunsingh, 2007, Speech delivered by the Honourable Minister for HRD in the Inaugural function of Central Institute of Classical Tamil at Chennai (18.08.2007).

44. Anna, 1971, (Quoted by Moorthy, K. and G. Sankaran, 1971), Convocation Addresses of Anna, Appar Book Stall, Thanjavur, p.3.

45. Basham, A.L. 1991, The Wonder that was India, Rupa & Co., Calcutta, pp.144 , 202, 265-266.

46. Daniela Berti, 2006, Memory of Gods from a Secret Autobiography, Indian Folk Life, Serial No.24 (Oct. 2006).

47. Gail Omvedt. 1976, Cultural Revolt in Colonial Society, Scientific Socialist Education Trust, Bombay, p.281.

48. Gunnar Myrdal, 1967, Asian Drama, penquin Books, Vol. I, pp.258-259.

49. Hutton, J.H. 1961, Caste in India - its nature, function and origin, Oxford University Press, Bombay, pp.205-207.

50. Irving Wallace, 1974, The man, Bantam Books Inc., New York.

51. Karl Marx. 1853, The British Rule in India, On Colonialism Progress Publishers, Moscow (1978), p.40.

52. Mahadevan, T.M.P. 1982, What is Hinduism? World Hindu Conference (Souvenir) held at Colombo from 21.04.1982 to 25.04.1982, pp.1-7.

53. Narayanan, K.R. 1998, Secularism, foundation of our polity, The Hindu, 16.08.1998.

54. Nehru, 1967, Quoted by Gunnar Myrdal, Ibid., p.100.

55. Shridharamurthy, 2008, The non-sense called Ramsethy, Dalit Voice, 27(3): 24-27.

56. Sri Sankaracharya Swamigal, 1981, The Voice of the Divinity, Vol.I, pp.118, 144-145.

57. Samuel Strandberg, 1980. Indien Istortoc Hsmatt Ett U-land under 30 ar 1950-1980 av Samuel Strandberg i Samarbete. med Margaveta Strandberg (Swedish).

58. Theodore Baskaran, 1981, as quoted by Pratt, D.B. 1994. "We must make the Government Tremble". Political Film making in the South Indian State of Tamil Nadu, The Velvet Light Trap No.34, Fall 1994, p.18.

# மகளிர் முன்னேற்றத்தில் அண்ணாவின் பங்களிப்பு

திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நிகழ்த்துகின்ற அண்ணா நூற்றாண்டு விழாத் தொடர் கருத்தரங்கில் நான் கலந்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தியாவில் குறிப்பாய் தமிழ்நாட்டில் அண்ணாவின் தாக்கம் அற்றவர்கள் அரிது. எந்த வகையிலாவது பேரறிஞர் அண்ணாவின் தாக்கம் ஒவ்வொரு மனிதரிடமும் இருக்கத்தான் செய்கின்றது. அண்ணா பிறந்து நூற்றாண்டுகள் ஆனால்கூட அவர் நமது உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அதற்கு அவர் வாழ்ந்த முறைதான் காரணம். யாரொருவர் மக்கள் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அதற்குக்காரணம் அவர்களின் வாழ்க்கைமுறை என்பதை பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை முறையில் இருந்து நம்மால் தெரிந்துக்கொள்ள முடிகின்றது.

இதே அறையில் அறிஞர் அண்ணாவைப்பற்றி பலரும் பேசியிருக்கக் கூடும். நான் அறிந்த அண்ணா என்கின்ற வரையில் மகளிர் முன்னேற்றத்திற்கு அண்ணா அவர்கள் எந்த அளவிற்கு கவனம் செலுத்தினார் என்பதை உங்களுடன் பகிர்ந்துக் கொள்வதில் நான் மிகமிக மகிழ்ச்சி அடைகின்றேன். தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே நான் பிறந்திருந்தாலும் கூட கல்லூரிக் காலம் வரை தந்தை பெரியாரையும், அறிஞர் அண்ணாவையும் நேரடியாக அறிந்தவள் அல்ல. காரணம் எனது தந்தை ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். எனவே எங்களை காங்கிரஸ் பாதையில்தான் வளர்த்தார் என் தந்தை. காங்கிரசுக்கு மறுபக்கமாக இருந்த நீதிக்கட்சியைப் பற்றியோ, சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியோ, தந்தை பெரியாரைப் பற்றியோ அறிஞர் அண்ணாவைப் பற்றியோ கல்லூரிக்கு வரும் வரை எனக்குத் தெரியாது. கல்லூரிக்கு வந்த பின்னால் அண்ணாவைப் பற்றியும்

பெரியாரைப் பற்றியும் அறிந்தேன். தந்தை பெரியாரின் நூல்களைப் படித்து என்னை சுயமரியாதை இயக்கத்தின் பால் ஈடுபடுத்திக் கொண்டேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967இல் திராவிடக் கழகம் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிப் பெற்றது. அறிஞர் அண்ணாவின் உள்ளத்தில் மக்கள் நம்மிடம் மிகப்பெரியப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த பொறுப்பை சரியான படி நிறைவாக நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. நீண்ட நாட்கள் பெரியாருடன் கருத்துவேறுபாடு கொண்டிருந்தாலும் இந்த நாட்டின் முதல்வராக பொறுப்பேற்ற பின்பு "ஐயா" அவர்களை சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஐயா அவர்கள் தங்கியிருந்த திருச்சிக்கு வருகிறார்கள். திருச்சிக்கு வந்த பின் ஐயாவும் அண்ணாவும் ஒரு இரதத்தில் ஏறி ஊர்வலமாக வருகிறார்கள். அந்த ஊர்வலத்தை தொலைவில் இருந்துப் பார்த்தவள் நான். அப்போதே திருச்சியில் இரண்டாம் ஆண்டு பட்டப்படிப்பு படித்துக்கொண்டிருந்த நான் அந்த ஊர்வலத்தைப் பார்த்தேன். அப்போதுதான் முதன்முதலாக ஐயா அவர்களையும் அண்ணா அவர்களையும் நான் நேரிலே பார்த்தது. அதனைத் தொடர்ந்து கல்லூரிப் படிப்பு, ஆசிரியருக்கானப் படிப்பு, பின் ஆசிரியர் பணி என அமைந்ததால் மற்றவர்களைப் போன்று பெரியாருடனும் அண்ணாவுடனும் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பும் மாணவர் போராட்டங்களில் கலந்துக் கொள்கின்ற வாய்ப்பும் இல்லாமல் போனது. காரணம் பெண்கள் என்றாலே அன்று சில கட்டுப்பாடுகள் உண்டு. அன்று பெண்களுக்கு அரசியல் என்பது மிகமிக அரிதான ஒன்று.

பெரியார் சுயமரியாதைக் குடும்பத்தில் பிறந்தவர்கள் அல்லது என் தந்தை சுயமரியாதை இயக்கத்தில் கலந்துக்கொண்டவர் என்றால் அந்த வீட்டில் உள்ள ஒரு சில பெண்மணிகள் வீட்டுக்கு வெளியே வருவார்கள். அரசியல் பணிகளில் ஈடுபடுவார்கள். ஆனால் எங்களுடையதோ, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த குடும்பம் எனவே எனக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் இல்லை. ஆனால் அவர்களுடன் பழகுகின்ற வாய்ப்புதான் இல்லை என்றாலும் பெரியார், அண்ணா அவர்களின் ஒவ்வொரு கொள்கையும் எனது உள்ளத்திலும், உணர்விலும், உதிரத்திலும் ஊறிப்போயுள்ளது. அதன் காரணமாகத்தான் முப்பது ஆண்டுகாலமாக தொடர்ந்து

மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் பணியாற்றுகிற ஒரு வல்லமை வலிமை இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நான் தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவின் கருத்துக்களை உள்ளத்தில் ஏந்திக் கொண்டிருப்பதால்தான்.

இந்த நாடு சங்ககாலத்தில் பெண்களுக்கு மிகமிக முக்கியத்துவம் கொடுத்த நாடு. நமது பண்பாடு அப்படித்தான். அன்று தாய்வழி மரபுதான் இருந்தது. தாய்க்குத்தான் குடும்பத்தை நடத்துகின்ற உரிமை, தாய்க்குதான் சொத்துக்களைக் கையாளுகின்ற உரிமை என்று தாய்வழி மரபுதான் நமது மரபு. அன்று பெண்களுக்கு கல்வி கற்றுத்தரப்பட்டது. பெண்களில் பலர் அன்று நாட்டை ஆளுகின்ற வல்லமை உடையவர்களாகவும் விளங்கினார்கள்.

பெண்களின் இத்தகைய அறிவும் மதிநுட்பமும் இடையே ஆரியத்தின் வருகையால் தடைப்பட்டது. வர்ணாசிரமம் என்ற பெயரால் பெண்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டது. குறிப்பாக கல்வி மறுக்கப்பட்டது அன்று வர்ணாசிரமம் என்பதன் பெயரால் குறிப்பிட்ட ஒரு வகுப்பினர்தான் கல்வி கற்கத் தகுதியானவர் என்றும் மற்றவர்கள் எல்லாம் கல்வி கற்கத் தகுதியுடையவர் அல்ல என்றும் சூத்திரர்கள் என்றும் புறக்கணிக்கப்பட்டார்கள். சூத்திரர்கள் அடிமையாக்கப் பட்டார்கள். அன்றும் பெண்களின் நிலை அத்தகைய சூத்திரர்களாகிய அடிமைகளுக்கு அடிமை என்று இருந்தது கல்வி அறிவு இல்லாமல் வெளியுலக அறிவு இல்லாமல் நாட்டிலே என்ன நடைபெறுகிறது என்பதைத் தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல், உனக்கு விதிக்கப்பட்டது எல்லாம் குழந்தையைக் கவனித்துக் கொள்வது. குழந்தையைப் பெறுவது, அவற்றை வளர்ப்பது, கணவனின் தேவையைப் பூர்த்திச் செய்வது என்று சொல்லி நான்கு சுவர்களுக்கு இடையே கொண்டுவந்து பெண்களின் அறிவை ஆற்றலை அத்தனையும் நான்கு சுவர்களின் மத்தியில் அடைத்து வைத்து விட்டார்கள்.

பெண்கள் தன்னிச்சையாக எதனையும் செய்ய முடியாது சிறுவயதில் தனது தகப்பனை அண்டியிருக்க வேண்டும். திருமணம் ஆனபிறகு தனது கனவனை அண்டி வாழவேண்டும். அதன் பின்பு வயதானக் காலத்தில் தான் பெற்ற பிள்ளைகளை அண்டி வாழவேண்டும். இதுதான் அன்றைக்குப் பெண்ணுக்கு

கொடுக்கப்பட்டிருந்த நிலைமை. இதனைத்தான் அன்றைக்குப் பெரியார் கடுமையாகச் சாடினார். அந்த பெரியாரின் தாக்கம்தான் அண்ணாவிற்கு இருந்தது.

பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கையினை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி அவரின் கல்வி. அதாவது பள்ளியிலும் கல்லூரியிலும் அவர் படித்தக் காலம். இரண்டாவது, பதினான்கு ஆண்டுகாலம் தந்தை பெரியாருடன் இணைந்து பணியாற்றிய காலம். மூன்றாவது தந்தை பெரியாரிடம் இருந்து பிரிந்து 1949இல் திராவிட முன்னேற்றக் கழகத்தை உண்டாக்கி 1967இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை மக்களிடம் தனது கருத்துக்களைச் சொல்லியும் தனது உணர்வை மக்களிடம் விளக்கி எப்படிப் பட்ட சமதர்ம சமுதாயம் இந்த மண்ணிலே உருவாக வேண்டும் என்பதை மக்களிடம் வலியுறுத்துவதற்கும் நீண்ட ஆண்டு காலம் அவர் உழைத்த உழைப்பு இருக்கிறதே அது மூன்றாவது காலம். இன்றைக்கு சிறந்தப் போக்குவரத்து வசதிகள் உள்ளன. தனது கருத்துகளைச் சொல்லுவதற்கு ஊடக வசதிகள் உள்ளன. ஆனால், அன்று அத்தகைய வசதிகள் இல்லை. மக்களுக்காக அன்று அண்ணா அவர்கள் தனது கருத்துகளைப் பரப்பிவந்த காலங்களில் போக்குவரத்து வசதி என்பது கிடையாது. எனவே அண்ணா அவர்கள் எந்த வாகனம் கிடைக்கிறதோ அந்த வாகனத்தில் ஏறிச் செல்வார். பாராங்கல் ஏற்றிச்செல்கின்ற லாரிகளில் ஏறிச்செல்வார். தொண்டர்கள் ஒரு ஊரில் இருந்து மற்றோர் ஊருக்கு சைக்கிளில் ஏற்றிச் செல்வார்கள். அதிலே செல்வார் அண்ணா. இப்படி வசதிகள் இல்லாதக் காலத்தில் கூட தன்னுடைய சிரமங்களை கொஞ்சம் கூட பொருட் படுத்தாமல் இந்த நாட்டு மக்கள் அனுபவிக்கிற சிரமங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக முதலில் நாட்டு மக்கள் விழிப்புணர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காகசெல்வார்.. அந்தக் காலத்தில் பெண்கள் சுலபமாக வெளியே வரமாட்டார்கள். பெண்கள் வீட்டை விட்டுவெளியே வரமாட்டார்கள். அரசியலில் நிர்வாகத்தில் பங்கு கொள்ள மாட்டார்கள். கல்வி கற்க மாட்டார்கள் அப்படியே பெண்களிடம் இவற்றைப் பற்றி கேட்டால் அவை எல்லாம் ஆண்களுக்கு உரியது பெண்களுக்கு உரிய தர்மம் அல்ல என்பார்கள் அத்தகைய மனநிலையைப் பெண்களிடம் உருவாக்கி இருந்தது வர்ணாசிரம தர்மம்.

இத்தகைய உணர்வை மாற்றவேண்டும் என்பது சுலபமான காரியம் அல்ல. அதற்காக அண்ணா அவர்களும் தந்தை

பெரியாரும் பட்டப்பாடு கொஞ்சம் நஞ்சம் அல்ல. இப்படி இருக்காதீர்கள். இது மூடத்தனம் பகுத்தறிவோடு இருங்கள். சுயமரியாதையோடு வாழுங்கள் என்று ஐயா அவர்களும் அண்ணா அவர்களும் கிராமம் கிராமமாகப் போய் பேசினார்கள். எந்த மக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்று பேசுகிறார்களோ அந்த மக்களே இவர்களுக்கு எதிராகக் கோஷம் போடுவார்கள். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் எந்த மக்களுக்காகப் பேசுகிறார்களோ அந்த மக்களே ஐயாவையும் அண்ணாவையும் நோக்கி நீங்கள் துரோகிகள் இந்த நாட்டின் பண்பாட்டைச் சிதைக்கிறீர்கள். நீங்கள் தர்மத்தைச் சிதைக்கிறீர்கள் என்று துன்பங்களுக்கு உள்ளாகியிருக்கிற மக்களே சொல்லுகிறார்கள் என்றால் அந்த மக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்று பாடுபட்டத் தலைவர்கள் மனதை எந்த அளவிற்குப் பாதிக்கும். வேறுயாராக இருந்தாலும் நாம் இவர்களுக்காகப் பாடுபட்டது போதும் வேறு தொழிலைப் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதியிருப்பார்கள். ஆனால், அண்ணா அப்படிப் பட்டவர் அல்ல; எவ்வளவு கஷ்டப்பட்டாவது இன்று மக்கள் கீழ் நிலையில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்துக் கொள்ள வேண்டும்; அவர்களை மேல்நிலைக்குக் கொண்டு வருகிற பணியை நாம் ஆற்றவேண்டும்; அதுதான் நமது கடமை என்பதற்காக அவர்கள் கடுமையாகப் பாடுபட்டார்கள். அதன் விளைவுதான் இன்று இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் சுயமரியாதை, மூடபழக்க வழக்கங்களுக்கு எதிரான பகுத்தறிவு நிலை, அறிவியல் முன்னேற்றத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற பாங்கு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில் அதிகம் இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் தந்தை பெரியார் வழியிலே அறிஞர் அண்ணா ஆற்றிய பணிகள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அண்ணா அவர்கள் படிக்கின்ற காலத்திலேயே தன்னுடைய அறிவைப் பெருக்கிக்கொள்வதற்காக தனது பாடப்புத்தகங்களை மட்டும் படித்தவர் அல்ல. ஏராளமான நூல்களைப் படித்தார். இவ்வாறு படிக்கின்ற பழக்கம் அவர்களுக்கு எப்படி வந்தது என்றால் அவர் பள்ளியில் படித்து வந்த காலங்களில் மற்ற மாணவர்களைப் போன்று வீதியில் சென்று விளையாடமாட்டார் அதற்குக் காரணம் அவர் "தொத்தா" என்று அன்புடன் அழைக்கிற சிற்றன்னையார். அவருக்கு ஓர் மூடப்பழக்கம் இருந்தது பையன் மண்ணை மிதித்தால் ஆயுள் குறைந்து விடும் என்று யாரோ

சொல்லியிருக்கிறார்கள். உடனே சிற்றன்னையார் அண்ணா அவர்களை தெருவில் அனுமதிப்பதே இல்லை. பள்ளியிலிருந்து வந்ததும் சகமாணவர்களுடன் விளையாட நினைப்போர் வீட்டில் அனுமதிக்காததால் கஷ்டமாக இருக்கும். எனவே, பாடப் புத்தகங்களை எல்லாம் படித்து தீர்த்துவிடுவார். மளிகைக் கடையில் பொருள் வாங்கி வருகின்ற பொட்டலங்கள் தாள்களை எடுத்து அவற்றில் உள்ளவற்றை வரிக்குவரி படிப்பார். படிப்பது மட்டும் அல்லாது அந்தத் தாள்களில் உள்ளவற்றைப் பற்றி தன் சிற்றன்னையுடன் பகிர்ந்துக் கொண்டு, அவற்றைப் பற்றி சிந்திப்பார். அதைப் பற்றி விவாதிப்பார் அந்தப் பழக்கம் தொடர்ந்து கல்லூரிக்கு வந்த பின்னும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஏற்பட்டது. கல்லூரியில் படிக்கிற மாணவர்கள் எப்படி படிக்கிறார்கள்; மற்ற நேரங்களை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இன்று எத்தனை மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று படிக்கிறார்கள் என்பது பேராசிரியப் பெருமக்களுக்குத்தான் தெரியும். கல்லூரி நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் கூட கல்லூரியை (கட்டடித்து) விட்டு வெளியே செல்கின்ற மாணவர்கள்தான் அதிகம். சிறுவயதில் இருந்தே அண்ணா அவர்களுக்கு கேளிக்கைகளில் நாட்டம் இல்லாது இருந்ததன் காரணமாக வகுப்பறை, வகுப்பறை முடிந்தால் நூலகம், பாடம் சம்பந்தப்பட்ட மற்றும் அல்லாது, நூலகத்தில் கிடைக்கிற அத்தனை நூல்களையும் படித்தார். அதன் காரணமாகத் தேர்வு எழுதுகின்ற போது பாடத் திட்டத்தில் இருந்த கருத்துக்களை மட்டும் அல்லாது தாம் படித்த கேட்டறிந்து பிறகருத்துகளையும் எழுதினார். இதன் காரணமாக ஆசிரியப் பெருமக்களின் பாராட்டுகளைப் பெற்றார். இந்தப் பாராட்டு மெல்லமெல்ல அவருக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. மேலும் படிக்க வேண்டும் என விரும்பினார். அவர் படித்தக் கருத்துக்களைச் சகமாணவர்களுடன் பகிர்ந்துக் கொண்டார். அதன் காரணமாக அண்ணாவை ஒரு மாணவர் கூட்டமே சுற்றியிருக்கும்.

பிறகு கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகளில் பங்குக் கொள்வதற்கு தூண்டு கோலாக அமைந்தது. இதன் காரணமாக ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகச்சிறப்பாக நேர்த்தியாக தாம் சொல்ல வந்தக் கருத்துக்களை மற்றவர் மனதில் ஆழமாகப் பதிய வைக்கிற அளவு பேசுகின்ற ஆற்றலைப் பெற்றார். இந்தப் பேச்சாற்றலானது பல்வேறு தலைவர்களை அண்ணாவின் பக்கம்திரும்பிப் பார்க்க வைத்தது. கல்லூரியில் படித்துக்

கொண்டிருந்த காலங்களில் அவர் முதலில் கலந்துக் கொண்ட கூட்டங்கள், தொழிற் சங்கக் கூட்டங்கள். அந்த தொழிற் சங்கக் கூட்டங்களில் கலந்துக்கொள்ள காரணமாக இருந்தவர்கள் தொழிலாளர் அமைப்புகளைச் சார்ந்த பொதுவுடமை வாதிகளான தோழர் பாசுதேவ், மற்றும் தோழர் ஆல்பிரட் ஜேசுதாஸ் அவர்கள்தான். பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சாற்றலை அறிந்து அந்த தொழிற் சங்க நிகழ்ச்சிகளில் அழைத்துப் பேசவைத்தார்கள். வடநாட்டில் இருந்து வருகின்ற தலைவர்கள் பேசுவதை அவர் தொழிலாளர்கள் எளிதில் விளங்கும் வண்ணம் மொழிபெயர்ப்புச் செய்வார்கள். அப்படி மொழிபெயர்ப்புச் செய்கின்ற போது தொழிலாளர்கள் புரிந்துக் கொள்ளும் வண்ணம் தலைவர் பேசுவதை அப்படியே மொழிபெயர்க்காமல் தமிழில் தகுந்த வார்த்தைகளைத் தேடி மொழிபெயர்த்துச் சொல்வார்கள். அதன் அடிப்படையில் அவர் ஓர் சிறந்த தொழிற்சங்கவாதி எனப்பெயர் பெற்றார்.

இந்த நேரத்தில் ஒரு தேர்தல் வருகின்றது. அத்தேர்தலில் அண்ணாவைப் பணியாற்றச் சொல்லி தொழிற்சங்கத்தைச் சார்ந்த தோழர்கள் எல்லாம் கேட்கிறார்கள். அதற்கு அண்ணா எனக்கும் அதற்கு ஆசைதான், ஆனால் என் சிற்றன்னையார் என்ன சொல்வார்கள் என்று தெரியவில்லை அவர் அனுமதித்தால்தான் நான் இதில் பணியாற்றச் செல்வேன் என்றார். எந்த அளவிற்குத் தன்தாயிடம் அவர் மதிப்பும் மரியாதையும் பெரியவர்கள் சொல்லுகின்றதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற மரியாதை உணர்வு அண்ணாவின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்திருந்ததால் தான் பின்னால் பெண்களுக்கு இந்தச் சமுதாயம் அளித்திருக்கிற பல்வேறு கொடுமைகளைஅண்ணா அவர்களால் புரிந்துக் கொள்ள முடிந்தது. நான் போய் என் சிற்றன்னையிடம் கேட்பதற்கு கூச்சமாக இருக்கிறது. நீங்கள் போய் என் சிற்றன்னையிடம் கேளுங்கள் என்று தலைவர்களிடம் சொல்லுகிறார். அந்தத் தலைவர்கள் போய் சிற்றன்னையிடம் கேட்கிறார்கள். சிற்றன்னை, "அரசியலா! அவன் நன்கு படித்து உத்தியோகத்திற்கு வரவேண்டும் என்று நான் விரும்பினேனே, ஆனால் இவ்வளவுப் பெரியதலைவர்கள் இவ்வளவு தூரம் வந்து கேட்கிறீர்கள். அழைத்துச் செல்லுங்கள்" என்று அனுமதிக்கொடுத்தார்.

அதே காலத்தில் அண்ணா சொற்பொழிவுகளுடன் நிறுத்திக் கொள்ளாமல் தனது கருத்துக்களை பத்திரிக்கைகளுக்கு

கட்டுரையாக எழுதத் தொடங்குகின்றார். அந்த வகையில் பத்திரிக்கையில் வெளிவந்த அண்ணாவின் எழுத்துக்களைப் படித்து விட்டுப் பலரும் பாராட்டுகிறார்கள். பிறகு கட்டுரைகள் மட்டும் அல்லது சிறுசிறு நாடகங்கள் சிறுகதைகள் எழுதத் தொடங்குகின்றார். அப்படி அவர் எழுதியதுதான் பெண்களின் நிலையினைக் குறிக்கிற "ஓர் இரவு", "வேலைக்காரி" போன்ற நாடகங்கள். "ஓர் இரவு" நாடகத்தில் ஒரு விதவைப் பெண் எப்படி எல்லாம் சமூகத்தில் சீரழிக்கப்படுகிறார்கள், எப்படி எல்லாம் சமூகத்தில் தண்டிக்கப்படுகிறாள் என்பதைப் பற்றி எழுதுகின்றார். இந்த நாடகத்தைப் பார்த்த அமரர் கல்கி அவர்கள் பேரறிஞர் அண்ணாவைப் பாராட்டிச் சொல்கிறார். "இவர் தென்னகத்தின் பெர்னாட்ஷா" என்று, அந்த அளவிற்கு சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அவலங்களை எடுத்துச் சொல்லி சமூகத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என தந்தை பெரியார் அவர்கள் காண விரும்பிய சமூகத்தை அடைய வேண்டும் என்ற ஆர்வம் அறிஞர் அண்ணாவிடம் இருந்தது.

கட்சிப்பணி என்ற கடின உழைப்பிற்குப் பின் தமிழக முதல்வராகப் பணியேற்றுக் கொண்டார். முதலமைச்சராக பணியேற்ற நேரம் நீண்ட காலம் அவரின் சேவை இந்தத் தமிழகத்திற்குக் கிடைக்க இயலாமல் போய்விட்டது. அவர் எப்படிப்பட்ட சமுதாயத்தைக் காண விரும்பினாரோ அந்த மூன்றையும் அவர் நிறைவேற்றினார். தமிழ் மொழிக்கு, தமிழ் நாட்டிற்கு, தமிழ் இனத்திற்கு ஆகிய மூன்றிற்காகத்தான் அவர் பாடுபட்டார்; அவர் பணியாற்றினார். இந்த மூன்றிலும் முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் அண்ணாவின் நோக்கம். அந்த மூன்று நோக்கமும் அவர் பதவியில் இருந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்றப்பட்டது தான் நமக்கிருக்கிற மகிழ்ச்சி. ஒன்று மதராஸ் பட்டினம் என்று அழைக்கப்பட்ட நம் நாட்டிற்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டி இந்த நாட்டிற்கு இந்த மக்களுக்கு கவுரவத்தை ஏற்படுத்தித் தந்தது. இரண்டாவது, மொழிக்குப் பாதுகாப்பு. எந்த நேரத்திலும் இந்தி ஆதிக்கம் தமிழகத்திலே புகுந்துவிடும் அந்த இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக அண்ணா அவர்கள் காட்டிய வேகம் பெரியது. அதன் அடிப்படையில் சட்டமன்றத்தில் இருமொழிக் கொள்கையை அமல்படுத்தினார். இதன் மூலம் தமிழ்மொழிக்கு ஓர் பாதுகாப்பை

ஏற்படுத்தித் தந்தார். மூன்றாவது, அவர் சட்டமன்றத்தில் நிறைவேற்றியது சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படிச் செல்லுபடியாகும் என்பது ஆகும்.

அன்று சுயமரியாதைத் திருமணத்தை பெற்றோர் ஏற்றுக் கொள்ளாத நிலை இருந்தது. சமூகமும் அதனை அங்கிகரிக்க வில்லை. ஆனால், இந்த இனத்திற்கு சாதி மத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் அண்ணாவின் குறிக்கோள். இந்தக் குறிக்கோள் நிறைவடைய வேண்டுமென்றால் சுயமரியாதைத் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள் நிகழ்ந்தாக வேண்டும் என்று விரும்பினார்கள். எனவே, அதனையும் சட்டப் பூர்வமாக ஆக்கி சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகும் என்ற நிலையினை உருவாக்கி இந்த இனத்தின் பெருமையை நிலைநாட்டிப் போனார் அண்ணா. அண்ணா அவர்கள் முதல்வராக வாழ்ந்த காலம் சிறிது என்றாலும் இந்த நாட்டிற்கும் இனத்திற்கும் மொழிக்கும் பெருமை சேர்த்துச் சென்றவர் அவர்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று அவர் தொண்டர்களுக்குச் சொல்லவில்லை. அவர் சொன்னது தமிழ் நாட்டில் இருக்கிற ஒவ்வொருவருக்கும்தான். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பது நம் ஒவ்வொருவரிடமும் இருக்குமானால் சமீபத்தில் உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் நடந்தேராமல் இருந்திருக்கும். இத்தகைய நிகழ்வுகள் எதிர்வரும் தலைமுறை எப்படி இருக்கும் என்ற கேள்வி மனதிற்குள் எழுகின்றது. எனவே சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்களின் நிலையும் உயர்ந்தால்தான் ஒரு சமுதாயம் முன்னேறும் என்பதிலே அண்ணா அவர்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. ‘எப்படி முகத்தில் இரண்டு கண்கள் சரியாக அமைந்து முகத்திற்கு ஒரு பொலிவை ஏற்படுத்துகிறதோ, அதுபோல் சமூகத்தின் இரண்டு கண்களாக அமைந்த ஆண்களும் பெண்களும் சமமான உரிமைப் பெற்றால்தான் சமூகம் பொலிவு பெறும். அது அல்லது இரண்டு கண்களில் ஒன்று பார்வை குன்றியும் மற்றொன்று சுடர்பொருந்தியும் இருந்தால் எப்படி முகத்திற்கு பொலிவு ஏற்படாதோ; அதுபோல் அத்தகைய முகத்தைப் பார்க்கின்ற போது மற்றவர்க்கு எப்படி ஒரு அருவருப்பு ஏற்படுமோ அப்படித்தான் இந்தச் சமுதாயம் கெட்டுப்போகும்’ என்று சொன்னார் அண்ணா. அந்த அடிப்படையில் தம் எழுத்தாலும் பேச்சாலும் பெண்களை உள்ளடக்கிய இந்தச் சமுதாயம்

முன்னேற வேண்டும் என்பதுதான் பேரறிஞர் அண்ணாவின் குறிக்கோள். அந்த குறிக்கோளை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் அண்ணா சொன்னது. இந்த மண்ணிலே பிறந்த ஒவ்வொருவரும் போற்றவேண்டிய குணங்கள் உண்மை, உழைப்பு, உயர்வு. பின்பற்ற வேண்டியவை கனிவு, பணிவு, துணிவு. பேணப்பட வேண்டியவை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு. பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டில் ஆண்டு முழுவதும் கொண்டாடி பல்வேறு அறிஞர்களை அழைத்து அண்ணாவின் பலதிறப்பட்ட திறமைகளை அறிந்து கொள்ளுவது மட்டும் போதாது, அண்ணா ஒரு தனிமனிதர் எப்படி வாழ வேண்டும் என விரும்பினாரோ அப்படி அவர் சொன்ன கருத்துக்களை நம் உள்ளத்தில் தாங்கி, செயல்பட வேண்டும்.

அண்ணா சொல்லுவார் "நான் எப்படி இந்தச் சமூகத்திற்குப் பயன்பட வேண்டும் என்று நினைக்க வேண்டுமோ அப்படி அல்லாது இந்தச் சமுதாயத்திற்கு பாடுபடவேண்டும் என்பதற்குத் தான் நாம் இருக்கிறோம் என்ற உணர்வு ஒவ்வோர் உள்ளத்திலும் இருக்கவேண்டும்" என்று சொல்லுவார். அந்த உணர்வோடு நம் ஒவ்வொருவர் வாழ்விலும் வெற்றி பெறவேண்டும் என்ற குறிக்கோள் ஒவ்வொருவருக்கும் இருந்தாலும் அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டாலும் அதே சமயத்தில் இந்தச் சமுதாயமும் உயரவேண்டும் இந்த நாடும் உயர வேண்டும் என்ற பொது நோக்கோடு நாம் இந்தச் சமுதாயத்திற்காக சில பணிகளை ஆற்ற முன்வருவோம். ஆனால் நிச்சயமாக பேரறிஞர் அண்ணா காண விரும்பிய சமதர்ம சமுதாயத்தை, பாரதி சொன்னாரே "மங்கையராய் பிறப்பதற்கே மா தவம் செய்திட வேண்டுமம்மா" என்ற அந்த நிலையினை உருவாக்குவதற்கு நாம் எல்லோரும் கருத்தினைச் செலுத்த வேண்டும்.

தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் காண விரும்பிய ஒரு சமுதாயத்தை இன்று நமது ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பெண்களின் முன்னேற்றத்திற்காக சட்டத்தின் மூலமாகவும் அரசின் மூலமாகவும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் கல்வியில், வேலை வாய்ப்பில், தொழிலில் முன்னேற வேண்டும் என்பதற்காக இன்றைக்கு எத்தனையோ திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அவை எல்லாம் தமிழ் உலகம் நன்கு அறிந்ததுதான். அவற்றை எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை

இல்லை. இன்று மத்திய அரசும் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைக்கின்ற வகையில் எத்தனையோ சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. வரதட்சனை தடுப்புச்சட்டம், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் என்று பல சட்டங்களை மத்திய அரசு இயற்றினாலும் கூட சட்டத்தை மட்டும் கொண்டு பெண்களுக்கு எதிரானக் கொடுமைகளைத் தடுத்துவிட முடியாது. சட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும் நம் உள்ளத்தில் மாற்றம் தேவை. அந்த மனமாற்றம் ஏற்பட்டால் ஒழிய இந்த சமுதாயத்தில் ஒரு சமதர்ம நிலையை உருவாக்க முடியாது. எனவே ஆணாதிக்கம் அற்ற, பெண்களையும் சமமாகப் போற்றுகிற ஒருசமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்தக் காலத்தில் நாம் எல்லாம் சபதம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

# அறிஞர் அண்ணாவின் மக்களாட்சி நோக்கு

திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்

**அண்ணா! நாவினிக்கும் நல்ல பெயர்!**
**இரத்தப் பாசத்துடன், உரிமையுடன் அழைக்கும்**
**உறவுப்பெயர்!**
**கோடானு கோடி தமிழர்களைத் 'தம்பி' என்றழைத்து,**
**குடும்ப பாசம் காட்டி ஓரியக்கத்தைத் தோற்றுவித்து,**
**வளர்த்து**
**நாடாள வைத்த நாயகன் தான் நம் அறிஞர் பெருந்தகை**
**அண்ணா!**

இவர் தனிமனிதரல்ல! இன எழுச்சியின் ஏந்தல்! இவர் பெயரைச் சொல்லாமல் தமிழகத்தில் எவரும் அரசியல் நடத்த முடியாது என்பது எழுதப்படாத சட்டமாம்!

காஞ்சிபுரத்தில் நெசவாளர் குடும்பத்தில் நடராசன், பங்காரு அம்மாள் என்ற தம்பதியருக்கு மகனாக 1909ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் பிறந்தார். அண்ணாதுரை என்ற அருமையானப் பெயர் சூட்டப்பட்ட இவர் இளமையில் பச்சையப்பன் தொடக்கப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் படித்தார். மற்ற பிள்ளைகள் ஆடி, ஓடி விளையாடும் நேரங்களிலும் இவர் புத்தகத்தைப் பிரித்து படித்துக் கொண்டே இருப்பார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இன்டர் மீடியட் படித்தப்பின் பி.ஏ. முடித்ததும் 1930இல் இராணி அம்மாளைத் திருமணம் செய்துக் கொண்டார். இவருடைய கூர்த்த மதிநுட்பத்தைக் கண்டு மேற்கல்வி பயில உதவித் தொகையும், பாடபுத்தகங்களையும் இலவசமாகக் கல்லூரி முதல்வரே வழங்கினார்.

**பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும் சிறப்வொவ்வா**
**செய் தொழில் வேற்றுமையான்**

என்ற குறள் நெறியில் ஈர்க்கப்பட்டார்.

இச்சமுதாயம் சாதிப் பிடியிலிருந்து இன்னும் விடுவித்துக் கொள்ளவில்லையே! சாதி இருந்தால் என்ன என்று கேட்பவர்களும் இருக்கிறார்களே என ஆதங்கப்பட்டார்.

நம்மிடம் உள்ள திறமை எதுவும் நமக்காக மட்டுமல்ல! நாட்டு மக்கள் அனைவருக்காக! அந்த வகையில் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம் என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தார்.

'சாமி சிலைக்கு ஆயிரக் கணக்கில் ஆபரணங்கள் அணிவித்தும், எண்ணெய் கொட்டி, பல வேறு பொருட்களால் அபிஷேகம் செய்வது தான் மார்க்கம் என்றால் நான் மார்க்கவாதி அல்லன்! தெய்வத்தைப் புகழ்ந்து மனிதனை இகழ்வதுதான் மார்க்கம் என்றால் நான் மார்க்கவாதி அல்லன்! ஆனால் மனிதனுக்குத் தொண்டு செய்து அதில் தெய்வத்தைக் காண்பது என்றால் நான் மார்க்கவாதிதான்' என்று தன்னை வருணித்துக் காட்டியவர் அண்ணா!

ஈரோட்டுச் சிங்கம், பகுத்தறிவுச் செம்மல் தந்தை ஈ.வெ.ரா. பெரியாரின் பகுத்தறிவு, சுயமரியாதைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, பெரியாரின் தொண்டரானார். மிகச் சிறந்த மேடை சொற்பொழிவாளர். மொழிபெயர்ப்பாளரும் கூட! சர்.ஏ. இராமசாமி முதலியார் அவர்களின் ஆங்கிலப் பேருரையை அண்ணா அவர்கள் மொழிபெயர்த்துப் பேசிய பாங்கு கற்றோர் முன்பு அண்ணாவைப் பிரபலமடைய வைத்தது. அவரின் ஆங்கிலப் புலமையைக் கண்டு வியந்த சர்.ஏ. இராமசாமி அவர்கள் அண்ணாவைத் தன்னுடன் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று அவர் அலுவலகத்தில் ஐ.நா. சபையில் பணியாற்றிட விரும்பி அழைத்தாராம். தன் சுய வாழ்வு உயர்ந்திட எண்ணிடாத அண்ணா, தமிழ் மாந்தரின் வாழ்வு உயரப்பாடுபடுவதே தன் குறிக்கோள் என உரைத்து மறுத்து விட்டாராம்! சர்.ஏ. இராமசாமி அவர்கள் பின்னாளில் தன் ஆங்கில உரைக்கு வாரிசு அண்ணாதான் என்று மொழிந்தார்.

மக்களின் அறிவுக் கண்கள் திறக்கப்பட வேண்டும். கருத்தைக் கெடுக்கும் கயமை எந்தப் பெயருடன் உலவினாலும், எத்துணை உயரத்தில் ஏறிக் கொண்டு இருந்தாலும் அதனை அழித்தொழிக்கும் ஆண்மையாளர்கள் முன்வர வேண்டும் என்று விரும்பினார். அத்தகைய ஆண்மையாளராகவும் திகழ்ந்தார் நம் இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா.

1935ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி தேர்தலில் பெத்துநாயக்கன் பேட்டை பகுதியில் நீதிக்கட்சி வேட்பாளராக அண்ணா போட்டியிட்டார் காங்கிரஸ் கட்சி சார்பில் பாலசுப்பிரமணிய முதலியார் போட்டியிட்டார். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் காங்கிரஸை வேட்பாளரை ஆதரித்துப் பேசும் போது 'ஒரு பூந்தோட்டம் போல காங்கிரஸ் இருக்கிறது. அதில் ஒரு நாய் செத்து கிடக்கிறது என்றால் நாயை அப்புறப்படுத்தி விட்டாலே போதுமானது. கெட்ட செயல் ஏதும் இருந்தால் அதை வெளியேற்றி விட்டாலே போதும். எனவே பெரிய இயக்கமான காங்கிரசை ஆதரியுங்கள்' என்று பிரச்சாரம் செய்தாராம். நீதிக்கட்சி சார்பில் போட்டி கூட்டம் நடத்திய போது அண்ணா அவர்கள் பதிலுரைக்கையில் ''உயிருடன் பூந்தோட்டத்துக்குள் நுழைந்த நாய் செத்து விட்டது என்றால் அத்தோட்டத்து மலர்கள் விஷ மணம் வீசுகின்றன. எனவே செத்துவிட்ட நாயை மட்டும் அப்புறப்படுத்தினால் போதாது. அந்த தோட்டத்தையே அழித்து மக்களைக் காத்திட வேண்டும். எனவே காங்கிரசை ஆதரிக்கக் கூடாது'' என்று பேசி மக்களின் பாராட்டைப் பெற்றார். தமிழ்த் தென்றல் திரு.வி.க. பேசி மக்களின் பாராட்டைப் பெற்றார். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் வாதத்தைத் தன் அறிவுக் கூர்மையால் வென்று காட்டினார். 1943ஆம் ஆண்டு சேலத்தில் ஒரு சொற்போர் நடந்தது. அதில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும் சர்.ஆர்.கே. சண்முகம் அவர்களும் அண்ணா அவர்களும் பங்கேற்றார்கள். கம்பராமாயணம் மக்களுக்குப் பயன் தருமா தராதா என்ற கருத்தில் அமைந்த சொற்போரில் அண்ணா அவர்களின் கருத்தே வென்றது. ''நான் தோற்றேன் நான் தோற்றேன்'' என்று நாவலர் சோமசுந்தர பாரதியாரே கூறினார் என்றால் பேரறிஞர் அண்ணாவின் பேச்சாற்றல் எத்துணை சிறப்பு வாய்ந்தது என்பதை நாம் உணரலாம்.

1944இல் சேலத்தில் நீதிக்கட்சி மாநாடு நடந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். ஆங்கிலேய ஏகாதிபத்யத்தை எதிர்க்கின்ற கொள்கையுள்ள நாம் அவர்கள் வழங்கிய சர், ராவ் பகதூர் போன்ற பட்டங்களைத் திராவிடராகிய நாம் ஏற்பது சரியல்ல! அப்பட்டங்களைத் துறந்திட வேண்டும் என்றார். மேலும் நீதிக்கட்சி என்ற பெயரை மாற்றி திராவிடர் கழகம் என்று இயக்கத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது, இந்த மாநாட்டில் தான்! பணக்காரர்களின் புகலிடமாக இருந்த நீதிக் கட்சி இத்தீர்மானத்தின் மூலம் திராவிடரின மக்கள்

அனைவருக்கும் உரிய இயக்கமாக உருவெடுத்தது இதனால் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. **"துள்ளி வருகுது வேல்; தூர விலகி நில்லுங்கள்"** என்ற பொருத்தமான தலைப்பில் ஏடுகளில் இச்செய்தி வெளியிடப்பட்டது.

1947 தந்தை பெரியார் இந்தியா ஆங்கிலேய சர்வாதிகார பிடியிலிருந்து விடுபட்ட நாளைச் சுதந்திர நாளல்ல! நமக்கு இது துக்கநாள் என்று திராவிட நாடு, விடுதலையை எதிர்பார்த்திருந்த எண்ணத்தில் தன்னுடைய குடியரசு ஏட்டில் தலையங்கம் எழுதி வெளியிட்டார். அதே அலுவலகத்தில் பணியாற்றி கொண்டிருந்த அண்ணாவின் மனம் அதனை ஏற்கவில்லை. தன் மனதில் பட்ட கருத்தை வலியுறுத்தி பெரியாரின் கருத்தை எதிர்த்து, ஆங்கிலேயே ஏகாதிபத்யம் விலகிச் சென்றது, நம் தோளின் சுமை குறைந்தது "நமக்கு இது மகிழ்ச்சி நாளே" என்று துணிந்து கட்டுரை எழுதினார் என்றால் இவரது சிந்தனை வளமும், மனத்திடமும் நம்மல் உணரமுடியும். 1949ஆம் ஆண்டு ஒரு கசப்பான சம்பவம்; தந்தை பெரியாரின் மறுமணம். மணியம்மை என்ற 20 வயது பெண்ணை 60 வயதான பெரியார் மணம் செய்துக் கொண்டது தோழர்கள் மத்தியில் பெரும் விமர்சனத்திற்கு ஆளானது. மேலும் கொள்கைகளை நடைமுறை படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சனைகள் கழகத்தில் விரிசலை உண்டாக்கியது. தந்தை பெரியாரை விட்டு விலகி புதிய இயக்கம் உருவாக்கிடும் முயற்சியில் அண்ணா ஈடுபட்டார். புதிய இயக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகம் என்று அறிவித்தார். தொடக்க விழா சென்னை இராயபுரம் இராபின்சன் பூங்காவில் 1949 செப்.17ஆம் நாள் பொதுக் கூட்டமாக நடைபெற்றது. அண்ணா பிறந்தநாள் செப்.15 அண்ணா விரும்பியிருந்தால் செப்.15ஆம் நாளில் இயக்கத்தைத் தொடங்கியிருக்கலாம். ஆனால் தந்தை பெரியார் பிறந்த செப்.17இல் தொடங்கியதே தந்தை பெரியாரை எப்போதும் நினைவில் கொள்ளவே என்பது அறிகிற போது நெஞ்சம் சிலிர்க்கிறது.

பகுத்தறிவுச் செம்மல், சுயமரியாதைச் சுடர், திராவிடர் இனத்தின் விடிவெள்ளி தந்தை பெரியாரைப் புறந்தள்ளி விலகுவதா? அது சாமானிய செயலா!

**தாழ்ந்து கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயம் விழிப்புற்றெழ!**
**தமிழருக்கென ஓர் ஆட்சி உதயமாகிட!**
**தமிழர்களின் முன்னேற்றம் சட்டரீதியாக நடந்திட!**
**அரசியல பேரியக்கமாக கழகத்தை மாற்றியமைத்திட!**

புதிய கட்சி உருவாக்கப்பட்டது!

வர்ணாச்சிரம வர்க்கத்தார், தந்தை மகனுமாய் இருந்தவர் பிரிந்து விட்டனர். தலைவரும் தொண்டருமாய் இருந்தவர் எதிர் எதிராக மாறிவிட்டனர், என்றதும் தம்மை எதிர்த்த இயக்கமே பிளவு பட்டுவிட்டது. எதிர்ப்பு வலிமை குன்றிவிட்டது; என்று எக்களிப்புக் கொண்டனர். ஆனால் நம் அண்ணா அவர்கள் அந்த ஆனந்தத்தை அற்பாயுசு ஆக்கி விட்டார். ஆம்; தி.கவும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக தற்குறித்தனத்தை, சனாதனத்தை, மூட நம்பிக்கையை விரட்டி அடிக்கும். என்றார்.

பெரியாரின் பேச்சு நோய் தீர்க்கப் பயன்படும் கசப்பு மாத்திரை! அண்ணாவின் பேச்சோ நோய் தீர்க்கப் பயன்படும் கேப்சூல்! குழந்தை முதல் பெரியவர் வரை உட்கொள்ள, நோய்தீர்க்க முன்வருவர் என்பது போல அண்ணாவின் உரைகேட்க பாமரரும், படித்தவரும் திரண்டு வருவர். ஊமையாய் உறங்கிக் கிடந்த தமிழனை உசுப்பி எழவும், பேசவும் வைத்தார் பெரியார்! அவனை முன்னேற்றப் பாதையில் நடக்க வைத்தார் அண்ணா! அடுக்குச் சொல்லேருழவன் அண்ணா இளைஞர்களின் இதய ஏந்தலானார்.

கண்ணீர் சிந்தி வெளியேறியவர்கள்; இளையவர்கள், இவர்கள், எதை சாதிப்பார்கள் என்று அலட்சிய படுத்தியோரை இவர்பணி ஆச்சரியப் பட வைத்தது! கேலி செய்தவர்கள் அடக்கத்தோடு பாராட்டலாயினர். கிண்டல் பேசியோர் வாழ்த்த தலைப்பட்டனர், ஏசியவர்கள் வியந்து வணக்கம் கூறிட வந்தனர். இளைய தலைமுறையினர் இவரின் செல்வ தம்பியரானார். அவரது எழுத்துக்களம் வலிமை மிக்கவை. ஆணித்தரமான எடுத்துக்காட்டுகள், வரலாற்றுச் சம்பவங்கள், கிரேக்க தத்துவ ஞானி போன்ற செயல் திறமைகள்! தமிழரசு, ஆனந்தவிகடன், நவயுகம், விடுதலை, குடியரசு, ஜஸ்டீஸ், திராவிடநாடு, காஞ்சி போன்ற ஏடுகளில் தலையங்கம், கட்டுரை, கடிதம் எழுதி பெயர் பெற்றது போலவே ஒரு புதுமை நடையைப் புகுத்தியும் பெயர் பெற்றார்! அவருடைய கம்பரசம் ஏடு இன்றும் விமர்சிக்கப்படும் நூலாகும் ஆரியமாயை ஏடு எழுதியமைக்காக 6 மாத காலம் சிறைவாசம் பெற்றவர்! இவருடைய திசை, சித்திரங்கள், வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, நீதி தேவன் மயக்கம், சந்திரோதயம், சிவாஜி கண்ட இந்து ராஜ்யம், ரங்கோன் ராதா, சொர்க்கவாசல் ஆகியன பலதரப்பட்ட மக்களாலும் பாராட்டப்பட்டவை! திரை உலகில் புதிய வரலாற்றைத் துவக்கிய புரட்சியாளர்கள். 1956இல் தி.மு.க.வின் 2வது மாநில மாநாடு-

திருச்சியில் 2 நாட்கள் நடந்தது. அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் தமிழகத்தில் வர உள்ளது. தேர்தலில் தி.மு.கழகம் போட்டியிட வேண்டுமா? வேண்டாமா? என்ற கருத்துக் கணிப்புக்காக வாக்கெடுப்பு நடத்திட முன்வந்தார் அண்ணா. நுழைவு வாயிலில் கறுப்பு நிறப் பெட்டியும், சிகப்பு நிறப் பெட்டியையும் வைத்திருந்தனர். மாநாடு பார்க்க வருபவர்கட்கு நுழைவு சீட்டுடன் வாக்குச் சீட்டும் தரப்பட்டது. தேர்தலில் போட்டியிட வேண்டும் என நினைப்போர் சிகப்புப் பெட்டியிலும், வேண்டாம் என நினைப்போர் கறுப்புப் பெட்டியிலும் வாக்களிக்கச் செய்தார். பல்லாயிரக்கணக்காண மக்கள் தி.மு.க. தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றே ஆதரவு வாக்களித்தனர். மக்களாட்சியில் மக்கள் கருத்தே ஏற்கத்தக்கது என்பதில் ஆழமான நம்பிக்கை வைத்திருந்த அண்ணா தன் கட்சிக்குள்ளும் தேர்தல் நடத்தி கிளைக்கழகம் துவங்கி மேலிடம் வரை பொறுப்பாளர்களை நிர்வாகிகளாக்கினார். ஏன்! தான் வகித்த பொதுச் செயலாளர் பொறுப்பையே நாவலர் நெடுஞ்செழியனுக்கு நல்கி **"தம்பி வா! தலைமை ஏற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு இருப்பேன் வா"** என்று அழைத்தாரென்றால் சொல் மட்டுமல்ல! மக்களாட்சி முறைக்கு தன் கட்சியிலும் எடுத்துக் காட்டாய் திகழ்ந்தவர் பண்பாளர் அண்ணா!

1957 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வை முதல் முதலாக களம் இறக்குகிறார் அண்ணா. காஞ்சிபுரத்தில் வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டப் பேரவை உறுப்பினராகிறார். தன்னுடன் வெற்றிபெற்ற கலைஞர் உட்பட 15 பேர்கள் சட்டமன்றம் நுழைகின்றனர்.

தூங்கி வழிந்த சட்டமன்றம் உதயசூரியனின் உட்புகுதலால் சுறுப்பாகிறது. சூடான விவாதங்கள் நடைபெறுகின்றன. தொகுதி மேம்பாடு காண வழிவகைகள், திட்டங்கள் மக்கள் அறியுமாறு எடுத்தியம்பப்படுகின்றன. ‘மோட்டாருக்கு பிரேக் போல, வண்டி மாட்டுக்கு தார்குச்சி போல’ ‘யானைக்கு அங்குசம் போல, ஆற்றுக்கு கரை போல’, எதிர்கட்சி செயல்பட்டால் தான் ஆட்சியும் சீரானப்பாதையில் செல்லும்’ என்பதை விளக்கினார். ‘எதிர் கட்சிதானே தவிர எதிரிக்கட்சி அல்ல! இக்கரையில் இருப்போர் அக்கரைக்கு வரமுடியும். அப்போது எதிர் வரிசையில் இருப்போர் ஆளும் வரிசைக்கு வர முடியும். எனவே எதிர் கட்சி என பேதம் பாராட்டாதே!’ என்றார்.

1962ஆம் ஆண்டு தேர்தலில் அண்ணா வெற்றி பெற வில்லை. பண நாயகம் அறியாமை, ஏழ்மையைப் பயன்படுத்தி வென்று விட்டது. அண்ணா நாடாளுமன்ற மேலவைக்குத் தேர்வு செய்யப்பட்டார். 'மிட்டா, மிராசுகளால் அனுப்பப்பட்ட பளபளப்பானவர்கள் மத்தியிலே பிளாட் பாரங்களில் படுத்துறங்கி கூலித் தொழில் செய்து வாழும் ஏழை மக்களின் பிரதியாக நான் வந்துள்ளேன்' என்ற கன்னிப்பேச்சின் எடுப்பே அவையோரை நிமிர்ந்துப் பார்க்கச் செய்தது!

பிரதமர் நேருஜி அவர்கள் அண்ணாவை நாட்டைத் துண்டாட வந்த கலகக்காரர் என்றே கேள்விப்பட்டிருந்தார். ஆனால் அண்ணாவின் அடுக்குச் சொற்களால் மெருகூட்டப்பட்ட ஆங்கில உரையால் ஈர்க்கப்பட்டு, திராவிட நாடு பெற விழையும் காரணங்களைப் பிசிறு இல்லாமல் அடுக்கடுக்காய் எடுத்து விளங்க வைத்த நேர்த்தி கண்டு அண்ணாவின் மேல் கொண்டிருந்த அவநம்பிக்கையை மாற்றிக் கொண்டார் என்றால் அண்ணாவின் அணுகுமுறையே அலாதி என அறிகிறோம்.

சீன நாடு இந்தியாவின் மீது படையெடுப்பை நடத்தி இந்தியாவில் நெருக்கடி ஏற்படுத்திய போது பேரறிஞர் அண்ணா "வீடு இருந்தால் ஓடு மாற்றிக் கொள்ள முடியும் வீட்டைக் காப்பாற்ற ஒன்றுபடுவோம்" என காங்கிரசுக்கு தன் கட்சி ஆதரவை நல்கினார். எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம் என எண்ணாமல் உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற நிலையைக் கடைப்பிடித்தால் தேசப்பற்றாளர் என்றே நிரூபித்தார். அண்ணா ஆட்சியில் அரும் பெரும் சாதனைகளைச் செய்தார். தமிழ்நாடு என்று பெயர் மாற்ற சட்டம் கொண்டு வந்தார். தமிழ், ஆங்கிலம் இருமொழிக் கொள்கையே இந்நாட்டுக்கு என்ற சட்டம் தந்தார்.

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்று சட்டம் கொண்டுவந்தார். கோட்டை முன்பு "சத்தியமேவ ஜெயதே" என்றிருந்த வாசகத்தை மாற்றி 'வாய்மையே வெல்லும்'. என்றெழுதச் செய்தார். தலைமைச் செயலகம் என்ற தமிழ்ப் பெயர் பலகை பொறிக்கச் செய்தார். அரசு ஆவணங்களில் திரு, திருமதி, செல்வி என்ற குறியீடுகள் பயன்படுத்திட உத்தரவு! வடமொழிச் சொற்கள் ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி, குமரன் நீக்கப்பட்டன. பொதுப்பணியில் இளைஞர்களை ஈடுபடுத்திட **சீரணி** என்ற அமைப்பு தொடங்கினார்.

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா பேருரையைத் தமிழில் ஆற்றினார். அதுவரை ஆங்கில உரைதான் படிக்கப்பட்டு வந்ததாம். உலகத் தமிழ் மாநாட்டை 1968ஆம் ஆண்டு தமிழகத்தில் சிறப்புற நடத்திக் காட்டினார். அதன் நினைவாக உலகப் புகழ் வாய்ந்த கடற்கரை சாலையில் 10 சிலைகளை அமைத்தார். ஒரு படி அரிசி 1 ரூபாய்க்கு வழங்கப்படும் என்று அறிவித்து செயல்படுத்திக் காட்டினார். கலப்புத் திருமணம் செய்து சாதி மறுப்புக்கு மதிப்பளிப்பவர்களை அரசு பாராட்டி தங்கப் பதக்கம் வழங்கிடச் செய்தார்.

அமெரிக்க யேல் பல்கலைக்கழகம் அண்ணாவுக்கு "சப்பெல்லோஷிப்" பட்டம் தந்து பாராட்டியது! அமெரிக்கர் அல்லாத ஒருவர் இப்பட்டம் பெறுவது அண்ணா மட்டுமே என்பது எத்துணை சிறப்புக்குரியது!

இத்தாலிக்குச் சென்று போப் ஆண்டவரைச் சந்தித்தார் அண்ணா! தங்களுக்கு என்ன உதவி வேண்டும் என்று போப்ஆண்டவர் கேட்ட போது அண்ணா தன் சொந்த வாழ்வுக்கு எதையும் கேட்டவில்லை. மாறாக கோவா சிறையில், விடுதலை வீரன் **ரானடே** சிறைபட்டு பல்லாண்டுகளாக வாடுகிறார். அவரைத் தாங்கள் போர்ச்சுக்கல் அரசிடம் கூறி விடுதலை செய்ய வேண்டும் என்றார். என்னே அவரின் மனித நேயம்! விடுதலை உணர்வுள்ள வீரன் எந்நாட்டவன் ஆயினும் அவனைப் பாராட்டவும், அவனுக்காக பரிந்துரை செய்யவும் தயங்காத அண்ணா, ஏகாதிபத்யம் எங்கிருந்தாலும் எதிர்ப்புக் குரல் கிளம்புமானால் மக்கள் எண்ணத்திற்கு மதிப்பு கொடுப்பதே மாண்பு என வலிந்துரைப்பார் அண்ணா. அமெரிக்கா செல்லும் முன் டெல்லி விமான நிலையத்தில் அரசு மூத்த அதிகாரி ஒருவர் அண்ணாவிடம் ஓர் ஆங்கிலப் புத்தகத்தைத் தந்து அமெரிக்காவில் நீங்கள் பேசுவதற்கு இப்புத்தகத்திலுள்ள குறிப்புகள் பயன்படும் என்றாராம். அதனைப் பெற்றுக் கொண்ட அண்ணா கூறினாராம், 'இப்புத்தகத்தை நான் 20 ஆண்டுகட்கு முன்பே படித்துவிட்டேனே' என்று கூறியதைக் கேட்டு மூத்த அரசு அதிகாரி வியந்து போனாராம்!

சென்னையிலுள்ள மிகப்பெரிய நூலகம் கன்னிமேரா நூலகமே! 10,000 த்திற்கும் மேற்பட்ட பலதரப்பு, நூல்கள் உண்டு. அவை அத்தனையையும் படித்து முடித்தவர் அண்ணா என்று அறிகின்றபோது ஆச்சரியம் நம் விழிகளில் தேங்குமே! கொஞ்சம் படித்தாலே குதியாட்டம் போடுபவர் மத்தியில் மெத்தப் படித்த

அண்ணா அடக்கத்துடன் காட்சியளிப்பது "கற்றது கையளவு, கல்லாதது உலகளவு" என்பதை உணர்த்தவா? அபிரகாம் லிங்கன் தான் அமெரிக்காவின் 50 மைல் சுற்றளவுள்ள நூலகங்கள் உள்ள நூற்களைப் படித்தவர் என்பார்.

அத்தனை நாடுகளின் வரலாறும், பண்பாடும், நாகரிகமும், மொழி வளர்ச்சியும் படித்தறிந்த அண்ணா தான் 'தமிழர் மனைகளில் பஞ்சாங்கம் இருக்கும்; பாரதக் கதை இருக்கும் இராமாயணமும் இருக்கும்; அல்லி அரசாணி மாலை இருக்கும் அபிமன்யூ வீரக்காதையும் இருக்கும் . அறநெறி கூறும் திருக்குறள் நூல் இருக்குமா?' என்று கேட்டார்.

'நம்முடைய பரம்பரை பெரிது! நமது தமிழினம் மானமே பெரிதென மதித்த இனம்; எவ்வுயிரையும் தன்னுயிர் போல காத்து வந்தனர் தமிழர்! பிறரை எதிர்பார்த்து எதற்கும் வாழாதவர் தமிழன்! சுயநலத்தைப் பற்றி துளியும் நினைப்பின்றி, சபலத்திற்கு இடங்கொடுக்காது வீரத்துடன் நின்றால் கோடி ஈட்டிகள் மார்புக்கு நேரே நீட்டப்படினும் எதிரி வெல்ல முடியாதே! என்று இளைஞர்கட்கு எடுத்தியம்பினார் அண்ணா.

வாக்குச் சீட்டின் மகிமை தெரியாதிருந்த பாமர மக்களுக்கு அதன் மதிப்பை உணர வைத்தார். பண்ணையாராக இருந்தாலும் விவசாயிடம் நேரில் வந்து வணங்கி வாக்கு கேட்க வேண்டும், என்ற ஜனநாயக நெறியை வளரச் செய்தார் ஆலை அதிபராக இருந்தாலும் ஜனநாயக உணர்வுக்கு மதிப்பளித்து தொழிலாளிடம் நேரில் வந்து கைகூப்பி வாக்கு பெற வேண்டும் என்ற நிலையைக் கொண்டு வந்தார். ஒவ்வொரு குடிமகனும் யார் சொல்வதையோ கேட்டு வாக்களிக்க முனைந்திடக் கூடாது சுயமாக சிந்தித்து 5 ஆண்டு கால வாழ்வு வளம்பெற யார் உழைப்பார்களோ அவருக்கு 1967இல் அண்ணாவின் கட்சி தி.மு.க. மெஜாரிட்டி பலத்துடன் ஆளும் கட்சி என்ற அங்கீகாரத்துடன் சட்டமன்றம் செல்லுகிறது. அறிஞர் அண்ணா சட்டமன்ற மேலவை உறுப்பினராகிறார். ஆட்சியின் நாயகனும் ஆகிறார்.

1965ஆம் ஆண்டு இந்தியாவின் பொதுமொழி இந்தியே என்ற சட்டம் அமுலாக்கம் செய்யப்பட்டது. அண்ணா, தமிழ்ப் பற்றாளர்களுடன் போராட முன்வந்தார். தமிழர்கள் இரண்டாம் குடிமக்களாக ஆக மாட்டோம் என அறிவிக்க இந்த நாள்-ஜனவரி 25 தமிழர்கட்குத் துக்க நாள் என்று அறிவித்தார். எல்லா இடங்களிலும், இல்லங்களிலும் கறுப்புக் கொடி ஏந்திட, கறுப்புச் சின்னம் அணிந்திட ஆணை இட்டார். மாணவர்களும்

நேரடியாகப் பாதிக்கப்படுபவர் தாங்களே என்றெண்ணி தம் கல்வி நிலையைப் பாதுகாத்திட படைவரிசையாக எழுந்து புறப்பட்டு வந்தனர். எதிர்ப்பை தாங்கமாட்டாமல் தமிழகம் தத்தளித்தது. இறுதியில் பிரதமர் வாக்குறுதி தரவே தமிழகம் அமைதியானது. ஆனால் சுதந்திரப் போருக்குப் பின் மிகப்பெரிய ஒற்றுமை, எழுச்சி, தமிழருக்கு நிரந்தரப் பாதுகாப்பு தமிழகத்தில் ஏற்பட்டது எனில் மிகையன்று அதன் விளைவாகவே தி.மு.க. ஆட்சி அதிகாரம் பெற தகுந்ததாக மக்களால் 1967இல் ஏற்கப்பட்டது என்பது உண்மையே! அன்று அந்நியனிடமிருந்த விடுபட்ட 1947 ஆகஸ்டு 15 நமக்கு மகிழ்ச்சி நாள் என்று அறிவித்த அண்ணா தான் 1965 இந்தி ஆதிக்கம் பெற்றால் தமிழர் தாழ்வுறுவர் என எண்ணி ஜனவரி 25ஆம் நாள் துக்கநாள் என அறிவித்தார் என்றால் ஆதிக்க சக்திக்கு அடிபணிபவர் அல்ல அண்ணா என்பதை உணருகின்றோம்.

தன்னை அரசியலில் அடையாளம் காட்டி, ஆதரித்து தளபதி அண்ணாவாக வளர்த்து விட்ட தந்தை பெரியாரை முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்ட அண்ணா, திருச்சிக்குச் சென்று நேரில் பார்த்து வாழ்த்துப் பெறுகிறார். இந்த ஆட்சியே உங்களுக்குக் காணிக்கை என்றார். காணிக்கை கடவுளுக்குச் செலுத்துவர் பக்தர்கள். அண்ணா இவருக்கு தன் ஆட்சியைக் காணிக்கையாக்குகிறார் என்றால் விலகி வந்த பின்னும் பெரியார் மீது மாறாத பாசம், பக்தி கொண்டிருந்தார் என்பதும் நன்றி உணர்வு கொண்டவர் என்பதும் புலப்படுகிறது.

பெரியாரோ தனிக்குடித்தனம் சென்ற மகன் புதுவீடு கட்டி குடித்தனம் போனால் தந்தை எப்படி மகிழ்வாரோ அப்படி மகிழ்கிறேன் என்றாராம்! என்னே இவர்களின் இதயப்பிணைப்பு! வாக்களித்திட முன்வரவேண்டும் என்று மக்களாட்சி முறைக்கு வழிகாட்டியாக விளங்கினார் நம் அண்ணா!

ஆளும் கட்சியை எதிர்க்க நம்மால் முடியுமா? என்ற சந்தேக வினாவைக் காட்டிலும், நலம் சேர்க்கும் ஆட்சிக்கு நல்வரவு கூறிட நம்பிக்கையுடன் ஒன்று படுவோம் என்ற எண்ணமும் செயல்பாடுகளும் ஓங்கிட வேண்டும் என்றார்.

**இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்**
**கெடுப் பாரிலானும் கெடும்**

என்ற ஐயன் வள்ளுவரின் வாக்கை நினைவுறுத்தியவர் அண்ணா!

"மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு"! என்ற திருவாசகம் பகைமையை குறைத்து பழி வாங்கும் உணர்வை தடுக்க வைத்தது.

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற பொன்மொழி எண்ணற்ற இளைஞர்களின் நெஞ்சத்தை எஃகுகோட்டையாக்கி வாழும் வழி காண வைத்தது.

தென்னாட்டு காந்தி அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காப்போம்" என்ற உறுதிமொழி மூலம் இயக்கத்தவரை எல்லாம் அமைதி வழியில் அகிம்சை வழியில் நம்பிக்கை கொள்ள வைத்தது.

"மறப்போம், மன்னிப்போம்" என்ற சொற்றொடர்கள் எதிர்தரப்பினரை இளக வைத்து, இணையச் செய்த தாரக மந்திரம்!

ஜனநாயகம் வாக்குகளால் பெரும்பான்மையுடன் உருவாக வேண்டுமேயொழிய வன்முறைகளால் அல்ல" என்ற உறுதிப்பாடு ஒழுக்கத்தை நிலைநாட்டப் பயன்பட்டது.

அண்ணாவின் ஆட்சி சில மாதங்களாக இருந்தாலும் எந்நாளும் என்றென்றும் எண்ணங்களால் இலட்சியங்களால் இந்தத் தமிழகம் மணம் வீசி தமிழர்களை நன்கு பாதுகாக்கும்.

# அறிஞர் அண்ணாவின் படைப்புகள்

**பேரா. முனைவர் சா. வளவன்**

நான்கடி இமயம் என்றார் வைரமுத்து. உண்மைதான். பேச்சில் எழுத்தில் பண்பில் உயர்ந்து நின்றவர் அண்ணா. ஓயாத படிப்பாளி. எந்த நேரத்திலும் எந்தத் தலைப்பிலும் பேசுகின்ற எழுதுகின்ற அறிஞர் அவர். மருத்துமனையில் மிகப்பெரிய அறுவைச் சிகிச்சைக்கு மருத்துவர் நாள் குறித்தார். அண்ணா அவரிடம் ஒரு நாள் தள்ளி வைத்துக் கொள்ளுமாறு கேட்டார். காரணம் கேட்ட மருத்துவருக்கு, "என் கையில் இன்றுதான் இந்தப் புத்தகம் கிடைத்தது. நாளை இரவுக்குள் முடித்து விடுவேன். நாளை மறுநாள் அறுவைச் சிகிச்சையை வைத்துக் கொள்ள முடியுமா?' என்று கேட்டார். நோயின் கடுமையிலும் உயிர்ப் போராட்டத்திலும் கூட படிப்பதை விரும்பியவர் அண்ணா.

படிப்பதிலும் சிந்திப்பதிலும் சிறந்து விளங்கியமையால் படைப்பதிலும் சிறப்பை எய்தினார். அண்ணா நடந்தால் நாடகம்; இருந்தால் நாடகம்; குறும்பு கொப்புளிக்கப் பேசும்போது கண்ணும் சேர்ந்து நடிக்கும். சிறந்த சொற்பொழிவாளர், இதழாசிரியர், இதழாசிரியராக இருந்ததால் பலவற்றையும் தாமே கையாள வேண்டிய சூழல். அதனால் பன்முகத்திறன்கள் வெளிப்பட்டன. நல்ல ஓவியர், கட்டுரையாசிரியர், கவிஞர், சிறுகதை ஆசிரியர், புதின ஆசிரியர், நல்ல மொழிபெயர்ப்பாளர். உடனுக்குடன் பேச்சையும் மொழிபெயர்த்தவர்; நூல்கள், கட்டுரைகளை மொழிபெயர்த்தவர். எல்லாவற்றிலும் நாடகக் கூறுகள் மிகுந்திருக்கும். நாடக ஆசிரியராகவும் நடிகராகவும் விளங்கியபோது நாடகக் கூறுகள் அவற்றுள் முழுமையாக அமைந்திருந்தன எனக் கூறத்தேவையில்லை.

உலகத்திலுள்ள பொருளியல், அறிவியல், அறிவியல், படையியல், இலக்கியவியல் முதலியவற்றையெல்லாம் நூல்களின் வழி அறிந்து சிந்தித்தவர் அண்ணா. அவர்க்கு உகந்த இலக்கியச் செல்வம் இந்திய மண்ணில், குறிப்பாகத் தமிழ் மண்ணில்தான்

கிடைத்தது. அச் செல்வத்துள் செல்வம் திருக்குறள் என்பதை உணர்ந்து உலகம் முழுதும் பரப்பினார். ஒருமுறை, இராணிமேரி கல்லூரியில் (8.9.1967) உரையாற்றினார். அப்போது,

> உருசியாவுடன் போர்க்கருவிகளில் நாம்போட்டி போட முடியாது. ஆனால், இலக்கியத்தில் போட்டி போடமுடியும். அப்படிப்பட்ட இலக்கியச் செல்வம் நம்மிடத்திலே உள்ளது. அதில் தலையாய செல்வம் திருக்குறள். அந்தக் குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல் உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும். குறளைக் கற்றுக் கொள்வதால் நீங்கள் செம்மைப்பட்டு, நீங்கள் செம்மைப்படுவதால் நாடு செம்மைப்பட்டு, நாடு செம்மைப்படுவதால் உலகு செம்மைப்படச் செய்ய வேண்டும்

என்று உரையாற்றினார். உலகத்தார் உள்ளங்களில் இடம் பெறத் தம்மால் ஆன முயற்சிகளை மேற்கொண்டார். நடந்துகாட்டினார்.

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் உரையாற்றவும் மாணவர்களுடன் கலந்துரையாடவும் சென்றார். அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் வாடிகன் நகரில் போப்பாண்டவரை ஐந்து மணித்துளிகள் காண அனுமதிப்பெற்றுச் சந்தித்தார். அவரைக் கண்டு வணக்கம் செலுத்தியபோது கையுறையாக அண்ணா தந்த பொருள் திருக்குறள். உலகத் தலைவரிடம் உரியமுறையில் திருக்குறள் சேர்ந்ததால் எளிதாக உலகில் பரவும் நிலை ஏற்பட்டது. அவரோடு பேசிய சில மணித்துளிகளில் அண்ணா வைத்த வேண்டுகோள் எவரும் எதிர் பாராதது. கோவா விடுதலைக்குப் பாடுபட்டுச் சிறையில் வாடிக் கொண்டிருந்த மோகன் ரானடே என்பாரை டச்சு அரசின் சிறையிலிருந்து விடுவிக்க உதவுமாறு கேட்டுக் கொண்டார் அண்ணா. தம் மொழி, நாடு, இனம் எனும் எல்லையில் குறுகாமல் பரந்த நெறியை வழங்கிய திருக்குறளைப் போல் நடமாடும் திருக்குறளாய் அண்ணா விளங்கினார். உலக அரங்கில் தமக்கு அறிமுகம் இல்லா இளைஞர் பொருட்டு வேண்டிய உயர்பண்பாளர் அண்ணா. விடுதலை பெற்று வந்த ரானடே அண்ணாவைக் காண ஓடோடிவந்தார். ஆனால், அதற்குள் மறைந்தார் அண்ணா. எதிர்ப்பார்த்துச் செய்பவரல்லர் அவர்; எதிர்பார்த்து நன்மை செய்யக் கூடாது எனும் குறளாக

வாழ்ந்து காட்டியவர் அண்ணா என்பது இந்நிகழ்ச்சியால் நன்கு விளங்குகின்றது. நாடகக் கூறுகள் அவர் படைப்புகளில் மிகுந்திருப்பன போன்றே திருக்குறளும் இடம்பெற்றிருக்கின்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் பயின்றபோது ஆசிரியர் வரதராசன் என்பார் (மு.வ.அல்லர்) அண்ணாவின் திறமைகளை அறிந்து தோழமையோடு பழகினார். வரதராசன் ஆசிரியராக இருந்து கொண்டே சட்டக்கல்லூரி மாணவராகவும் இருந்தார். சென்னை நகரின் பார்ப்பனரல்லாத இளைஞர்க்குத் தலைவராகவும் சர்.ஏ. இராமசாமி முதலியாரின் தேர்தல் பணிக்குழுத் தலைவராகவும் விளங்கியவர். அவர்தம் அறைக்கு அண்ணாவும் சென்றார். திட்டங்கள் தீட்டும்போது சிறப்பாகப் பலவற்றைக் கூறுவார் அண்ணா. பல அரசியல் செயல் திட்டங்கள் அந்தச் சிறிய அறையில் முடிவு செய்யப்பட்டு மாநகராட்சியிலும் சட்டப்பேரவையிலும் இடம்பெற்றன. பொது வாழ்க்கையில் ஈடுபடத் தூண்டியன இச்சிற்றறை நிகழ்வுகள்தாம் எனக் கொள்ளலாம். இச் செயல் திட்டங்கள் பற்றிய சிந்தனை அண்ணாவின் மென்மையான உள்ளத்தில் வளர்ந்தது. மக்கள் இயக்கமாக மாறி மெல்லவே வரவேண்டிய திட்டங்கள் இவை என்பதை உணர்ந்தார் அண்ணா. அதனால் பெரியாரின் பாசறையைச் சரியாகத் தேர்ந்தார், சேர்ந்தார், சிந்தனைகள் மக்களைச் சென்றடையும் வழி பல கண்டார்; வென்றார்.

இயக்கத்தின் வழியே அண்ணாவோடு பழகியவர் பலர். அவர்கள் அவர்தம் இலக்கியங்களைப் பற்றியும் எழுதியுள்ளனர். இலக்கியங்களை இலக்கிய ஆய்வாளர்களும் பேராசிரியர்களும் அணுகினார்கள். அவர்கள் குறித்த தகவல்கள் சிதறிக்கிடக்கின்றன. முனைவர் இரா. சனார்த்தனம், முனைவர் இரா. சேது, முனைவர் கு. விவேகானந்தன், முனைவர் பா. உதயகுமார், முனைவர் ப. ஆறுமுகம் ஆகியோர் அண்ணாவின் படைப்புகளை ஆராய்ந்தவர்கள். 2001ஆம் ஆண்டு "அறிஞர் அண்ணா" எனும் தலைப்பில் அவர்தம் படைப்புகளை முனைவர் சு. சண்முகசுந்தரம் சாகித்திய அகாதெமிக்காக ஆராய்ந்து வெளியிட்டார். ஒவ்வொருவரும் ஒருதுறையைத் தேர்ந்து ஆராய்ந்து முத்தெடுத்தனர். சு.சண்முகசுந்தரம் அண்ணாவின் படைப்புகளைத் தொகுத்தளித்து முழுமையாக்க முனைந்து வெற்றி கண்டுள்ளார். பேராசிரியர் முனைவர் இரா. குமரவேலன் முதலியோர் தாம் சார்ந்த ஆய்வுத்துறையில் துறை போகியவர்கள்.

நாடக ஆய்வைத் தொடர்ந்து நிகழ்த்தி வரும் முனைவர் இரா. குமரவேலன் அண்ணாவின் நாடகங்களை நன்கு ஆராய்ந்து தமிழ்நாடக வளர்ச்சி எனும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

தி.அ. விமலநாதன் எனும் பொறியாளர் அண்ணாவின் முதல் படைப்புகளைப் பட்டியலிட்டுள்ளார். இவை 1931 முதலே தொடங்கி விடுகின்றன. இருபத்திரண்டாவது வயதில் தொடங்கியபணி 1969இல் நிறைவுற்றது. '1500க்கும் மேற்பட்ட கட்டுரைகளைப் படைத்த அண்ணா தம் முதற் கட்டுரையான மகளிர்கோட்டம் என்பதைத் "தமிழரசு" இதழில் 1931இல் வெளியிட்டார். 117க்கும் மேற்பட்ட கதைகளை எழுதியவர் அண்ணா. "கொக்கரக்கோ" என்பது முதற் சிறுகதை. 1934இல் "ஆனந்தவிகடன்' வெளியிட்டது. 3000 பக்கங்களுக்கு மேலாக அமையுமாறு கடிதங்களைப் பத்திரிகையில் எழுதி வெளியிட்டார் அண்ணா. 290 கடிதங்கள் எழுதியதாகக் கூறுவர். "தம்பிக்குக் கடிதம்' எனும் தலைப்பில் எழுதிவந்தார். "ஆடி அடங்கினீரே அலகாபாத் பண்டிதரே' எனும் முதல் கடிதம் 1938இல் விடுதலை இதழில் வெளியானது. 23 குறும் புதினங்களை எழுதினார் அண்ணா' என்பார். முதற் குறும் புதினம் "கோமளத்தின் கோபம்" என்பதாகும். "குடியரசு" இதழில் 16.7.39 முதல் 6.8.39 வரை தொடர்கதையாக வந்தது. முதல் புதினம் 'வீங்கிய உதடு' என்பதாகும். 1940இல் "குடியரசு" இதழில் வெளியானது. 5 புதினங்களை எழுதியுள்ளார். ரங்கோன்ராதா நூலாக வந்த முதல் புதினமாகும். 80 கவிதைகளை எழுதிய அண்ணாவின் முதற்கவிதை 1937இல் "விடுதலை" இதழில் இடம்பெற்றது. "காங்கிரசு ஊழல்" எனும் தலைப்பில் அமைந்த இசைப்பாடல் இதுவாகும்.

நாடகத்திறன் மிக்க அண்ணா 8 நாடகங்களைப் படைத்தார். ஓரங்க நாடகங்களாக 40க்கும் மேலாகப் படைத்துள்ளார். முதலில் அரசியல் ஓரங்க நாடகத்தைக் "குடிஅரசு' இதழுக்கு எழுதினார். அது "காங்கிரசு வாலா 1936 மாடலும் 1938 மாடலும்" என்பதாகும். 1943இல் சந்திரோதயம் என்னும் நாடகத்தை எழுதினார். அப்போதிருந்தே மேடையில் நடிக்கப்பட்ட பெருநாடகமாகும். தாமே மூன்று வேடங்கள் ஏற்று அந்நாடகத்தில் நடித்தார் அண்ணா. 1937இல் பாலபாரதி, நவயுகம் நாளிதழ்களின் ஆசிரியராக விளங்கினார். 1948இல் எழுதிய "நல்லதம்பி' நாடகத்தை 1949இல் திரைப்படத்திற்கு ஏற்ற வகையில் (கதை வசனம்) அமைத்தார். "வேலைக்காரி' 1949இல் திரைப்படமாயிற்று.

முதற்படைப்பே ஒப்பற்றதாக விளங்கும் சிறப்பினை அறியலாம். அண்ணாவின் எழுத்திலும், பேச்சிலும் முரண் உத்தி பெரிதும் இடம்பெற்றிருந்தது. அவருடைய நாடகம் "சந்திர மோகன்' அல்லது "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' நாடகம், "திராவிடத்தின் பெருமையும் வெங்காயத்தின் அருமையும்' என்னும் கட்டுரை நூல், "நிலையும் நினைப்பும்' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு ஆகியவற்றைச் சான்றுகளாகக் கொண்டு முரண் உத்தியை அண்ணா சிறப்பாகக் கையாண்டிருப்பதை அறியலாம். "அடுக்கு மொழிக்கு அண்ணா' எனும் கூற்று எல்லாம் மனத்திலும் பதிந்த ஒன்று. அந்த நடை இயல்பாகக் கைவரப்பெற்றவர் அண்ணா என்பதனால் அச்செய்தியை விடுத்து முரண் உத்தியும் எளிதாகக் கைவரப்பெற்றவர் என்பதை எண்ணிப் பார்க்கவே முயல்கிறது இக்கட்டுரை.

அண்ணாவிடம் நாடகத் தன்மை நிறைந்திருந்தமையால் நாடகம் அவர்க்கு எளிதாக வெற்றியைத் தந்தது. விரைந்தும் எழுத முடிந்தது. ஒரே இரவில் 49 காட்சிகளைக் கொண்ட முழுநாடகத்தை எழுதி முடித்தார். கதையும் ஒரே இரவில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்டதாக இருந்தது. ஓர் இரவில் எழுதி முடிக்கப் பெற்ற நாடகம், ஓர்இரவில் நிகழ்வன ஆகிய இரண்டுமே இன்று வரை சாதனைகளாக விளங்குகின்றன. கதைத் தலைவன் தலைவியை முதற்காட்சியிலே அறிமுகப்படுத்துவதே மரபு. ஆனால் அண்ணா எட்டாவது காட்சியில் அறிமுகப்படுத்தினார். சந்திரமோகன் நாடகத்திலும் எட்டாவது காட்சியில்தான் சிவாஜியை அறிமுகப்படுத்தினார். "ஓர்இரவும்', "வேலைக்காரி'யும் அண்ணாவைப் புகழின் உச்சிக்கே கொண்டுச் சென்ற நாடகங்கள். வேலைக்காரி நாடகத்திலும் முரண் உத்தி அழகாக முதற்காட்சியிலிருந்தே தொடங்குகிறது. அண்ணாவின் நாடகம் பகுத்தறிவை வலியுறுத்துவது என்னும் எண்ணத்தோடு வருபவர்களே எல்லாரும். ஆனால் முதற்காட்சி அவர்களை அதிர்ச்சி அடைய வைக்கும். முதலில் ஒலிக்கும் குரல் "காளி, மகமாயி, லோகமாதா" என்று ஒலிக்கும். ஜமீன்தார் மட்டுமல்லாமல் கதைத் தலைவன் ஆனந்தனும் ஊருக்குள் நுழைந்து காளி கோயிலைப் பார்த்தவுடன், "காளி, மகமாயி, மகேஸ்வரி இத்தனை வருஷத்திற்குப் பிறகு அப்பாவைப் பார்க்க முடிஞ்சுதே அது உன் கிருபை" என்றான். அருகே இருந்தவனோ "மகிமை வாய்ந்தவளப்பா இந்த மாகாளி' என்றான் "அவள் கண்கண்ட தெய்வமாச்சே" என்றான் மற்றொருவன். ஆனால்

அடுத்த காட்சியில் அதே ஆனந்தன் "கடவுளே, சண்டாளத் தெய்வமே உனக்குக் கண்ணில்லையா" என்று உரத்துக் கூறினான். இந்தக் குரல் நாடகம் காண எதிர்பார்ப்போடு வந்தவர்க்கு மேலும் மகிழ்வைத் தரும். இந்த முரண் உத்தி ஈர்ப்பினை ஏற்படுத்தி இருக்கையில் இருக்கவைக்கும்.

சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்துராஜ்யம் நாடகமும் குறிப்பிடத்தக்க மிகச் சிறந்த நாடகமாகும். சமூக நாடகங்களுள் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைச் சொல்வது எளிது. ஆனால், வரலாற்று நாடகத்தில் சமூகச் சீர்திருத்தத்தைச் சொல்லி வெற்றி பெற்றிருக்கின்றார் அண்ணா. வரலாற்று நாடகத்தில் சமூகச் சிந்தனையைச் சொல்லும் முரண் உத்தி பெரியவெற்றியை அண்ணாவுக்குத் தந்தது. திராவிட இயக்கத்தின் கொள்கையையும் எளிதாக வெளிப்படுத்திய நாடகம் இது.

எல்லாவற்றையும் தொன்றுதொட்டு நடந்து வருவதாகச் சொல்லும் மூடப்பழக்கத்தினை அவர்கள் வழியே சொல்லித்திருத்தும் அருமையான நாடகம் இது. ஆரியமாயையிலிருந்து விடுபட அவர்கள் வழியே சொல்வது அழகிய முரண். நாடகத்தைப் படைத்த அண்ணா, ஆரியத்தை எதிர்க்கும் அண்ணா, ஆரியத் துறவியாக நடித்தார். இந்த முரண் சிந்திக்கத் தக்கதாகும். ஆரிய மாயைக்கு எதிராகத் திராவிட இயக்கம் தான் செய்யும் பிரசாரத்திற்கு வரலாற்றின் பழைய பக்கங்களைப் புரட்டி, ஆரியத்தைப் புரட்டி எடுக்கும் உத்தி எண்ணி மகிழத்தக்கதாகும்.

மாவீரன் சிவாஜி மராட்டிய மண்டலத்தை எழுப்பி, அதன் மன்னனாக மணிமுடி சூட நினைத்தபோது காகபட்டரும் அவருடைய அடிவருடிகளும் குழப்பங்களை ஏற்படுத்தினர். ஆரியரின் கொடுமையால் வீரமிக்க அரசு வீழ்ந்துபட்டது. இதனைக் காட்டித் தமிழ்நாட்டுக்கு எச்சரிக்கை செய்தார் அண்ணா. சந்திரமோகன் சிவாஜியின் மெய்க்காப்பாளான். சிவாஜிதான் நாடகத் தலைவன். மெய்க்காப்பாளன் பெயரை முதலில் மொழிந்து சிவாஜியை அடுத்துக்கூறும், தலைப்பில் உள்ள முரண் அண்ணாவின் பாணி என உறுதிப்படுத்தும் கன்னி விதவையானாள்", "பக்த பக்காத்திருடன்", "நாட்டில்காடு", "சொர்க்கத்தில் நரகம்" முதலிய சிறுகதைத் தலைப்புகளும் இக்கருத்தை உறுதிப்படுத்தும்.

சூத்திரன் நாடாளக் கூடாது என்று கூறிய ஆரியத் துறவி காகப்பட்டர் அதனைத் தவிர்க்க முடியாத நிலை வந்தபோது

யாகம் செய்து அவனை ஷத்திரியன் ஆக்கிவிட்டதாகக் கூறினார். ஆரியன் நினைத்தால் சூத்திரன் ஷத்திரியன் ஆகிவிடுவான். அதற்கேற்ப விதிமாறும் என்பதை உணரவைத்தார் அண்ணா. சிவாஜி, சத்திரியன் ஆகிவிட்டதால் அரசாளும் தகுதிப் பெற்றான். ஆனால் அதற்காக அவன் தேடிய பொருள் அத்தனையும் இழந்தான். அதனால் நாடே ஆரியருக்கு அடிமையானது. ஒவ்வொரு கட்டத்திலும் பிறர் எவரும் மேலே வந்து விடாமல் விழிப்புடன் பார்த்துக்கொண்டதை உணர்த்தினார் அண்ணா.

காகபட்டரால் சிவாஜி அரசனாக்கப்பட்டவுடன் அவர்களில் விழப்போனான் சிவாஜி. அப்போது சந்திரமோகன்

"மராட்டியமே மண்டியிடாதே, வீரமே வீழ்ச்சியுறாதே" என்று பொங்கினான். இறுதியாக,

> ஒரு வார்த்தை உங்களுக்கு, ஆரியருக்கு அடிபணியாதீர்! அரசியலில் அவர்களுக்கு ஆதிக்கம் அளிக்காதீர்! அறமும் தழைக்காது! அரசும் நிலைக்காது! அவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள்! ஆறு, பத்து, இருபது தலையுடன் ஆமை வராகமுடையான், அண்ணன் தம்பி மகனுடையான், அந்தப்புரத்திலே அறுபதினாயிரம் பேருடையான் என்று கூறி, கடவுளையே நிந்திக்கும் கயவர்கள் அவர்கள். அவர்களுடைய கபட வேடத்தை நம்பி மோசம் போகாதீர் (காட்சி 2)

என்று அறிவுரை கூறினான்.

கடவுளைப் போற்றுவது போலவே அவர்களைக் காட்டி நிந்திக்கும் கயவர்கள் என்னும் முரண் இயல்பாக அமைந்துள்ளது. சந்திரமோகனை சிவாஜியே நாடு கடத்தினான். அவனை நாடு கடத்தியதற்குக் காரணத்தையும் கூறினான். சந்திரமோகன் விரும்பிய இந்துவை மணந்துகொள்ளத் தான் நாடு கடத்தியதாக இறுதிக்காட்சியில் (29) கூறினான் சிவாஜி. நாடு கடத்தியது நன்மணம் புரிய என்னும் முரண் அமைந்துள்ளது.

> தோழா! உன்னை நான் தண்டித்தேன் என்றுதானே கருதிக் கொண்டாய்! தண்டனை யல்லடா தம்பி அது. சாந்தாஜியின் மகளை நீ அடைய, உனக்கு விடுதலை தந்தேன். என்பொருட்டு அல்லவா இந்துவை நீ இழக்க நேர்ந்தாய்

என்றான். தண்டனை அல்ல விடுதலை என்பது எப்பேர்ப்பட்ட

முரண்? தண்டனை போன்றிருக்கும்; ஆனால் அது பரிசு. இது சிவாஜியை நன்கு உணர வைக்கின்றது. அரசன் போல அவன் இருக்கிறான். ஆனால் அவன் அடிமை. வீரம் இருக்கிறது மன்னனிடம். ஆனால் மக்களிடம் அரசு நிலைக்க வேண்டும் என்னும் அறிவு இல்லை.

இந்த முரண்தான் ஆரிய ஆதிக்கம் நிலைபெறக் காரணம் என்பதைக் காட்டினார் அண்ணா. சிவாஜி இதை அறிந்தே இருந்தான் என்பதையும் அவன் வாயாலே கூறவைத்தார். இறுதிக் காட்சியின் இறுதிப் பேச்சு இதுதான்.

> மோகன்! நான் ஏற்படுத்திய ராஜ்யம் நிலைக்கும் என்று நான் நினைக்கவில்லை. சந்தர்! மராட்டிய மண்டலத்திலே ஏரிகுளம், குட்டை, ஆறு எல்லாம் வறண்டு கிடக்கின்றன. போர்ச்செயலினால் மக்கள் ஏழைகளாயினர். இந்த நிலையிலே வறுமை தாண்டவமாடும் இந்த நேரத்திலே பதினோராயிரம் பிராமணர் குடும்பங்களுக்கு நான்கு மாதங்கள் சமாராதனை. தங்கள் உயிரை எனக்காக, அரசுக்காக அளித்த மராட்டிய வீரருக்கு என்னால் விருந்திட முடியவில்லை. என் செலவில் வீணர்கள் உண்டு கொழுத்தனர், துலாபாரம், அதனால் வேறு செலவு. சந்திரமோகன்! என் அரசு ஆரம்பமாகும் போதே பொக்கிஷம் சூன்யமாகிவிட்டது. ஒருகோடியே நாற்பத்தெட்டு லட்சமடா நான் கொட்டி அழுதேன். நம் தரணி இப்பாரத்தைத் தாங்காது. ஆகவே வீரனே! அஞ்சா நெஞ்சு படைத்த நீ, மக்களிடம் பரவி இருக்கும் மயக்கத்தைப் போக்கு. வாளால் அரசுகளை அமைத்துவிடலாம். ஆனால் அது நிலைக்க அறிவுதேவை. அந்த ஆயுதத்தை வீசு, நாடு முழுதும் வீசு, பட்டிதொட்டிகளெல்லாம் வீசு, மக்களை வீரர்களாக்கு.
>
> சந்திரமோகனா! சகலரையும் சந்திரமோகன்களாக்கு. போய் வா! ஜெயம் பெறுவாய்!"

என்று ஆற்றாமையுடன் இருந்தாலும் வாழ்த்தி அனுப்பினான் சிவாஜி. சந்திரமோகனை முதலில் மோகன் என விளித்தான். அடுத்த வாக்கியத்தில் சந்தர் என்று விளித்தான். ஆரம்பமாகும் போதே சூன்யமாகிவிட்டது என்றான். வறுமை தாண்டவமாடுகிறது எனக்காட்டி, முதலில் நானே கருவூலத்தைக்

காலியாக்கிவிட்டேன் என்று கூறும் முரனும் எண்ணிப் பார்க்கத்தக்கது. நேற்று தொடங்கிய வறுமை இன்று தொடர்கிறது என்பது நேரிய நடை. இன்று வறுமை, நேற்று அடித்தளமிட்டேன் என்று மாற்றிச் சொல்வது மாறுபட்ட நடை. வறுமையிலும் பதினோராயிரம் பிராமணர்க்கு நான்கு மாதங்கள் உணவிடவேண்டிய கட்டாயம் சிவாஜிக்கு. அவர்களால் எள்ளளவும் அவனுக்குப் பயன் இல்லை.

ஆனால் அவனுக்காக, அவனுடைய அரசுக்காகத் தங்கள் உயிரையும் அளிக்க முன்வந்த மராட்டிய வீரருக்கு ஒருவேளை விருந்திட முடியவில்லை என்னும் முரண், துன்பத்தை மேலும் கூட்டுவிக்கிறது. வாளால் அரசை அமைத்துவிடலாம். ஆனால் அது நிலைக்க வாள்மட்டும் போதாது. வாலறிவும் வேண்டும். ஆனால் வாலறிவன் பேரால் வாலறிவு மக்களிடம் வளராவண்ணம் பார்த்துக் கொண்டது ஆரியம். அந்த ஆரிய மாயையிலிருந்து மக்கள் விடுபடவேண்டும் எனக் கூறும் கருத்து அண்ணாவின் காலத்து மக்களுக்குப் போய்ச் சேர்ந்தது. மன்னன் சிவாஜி காலத்து மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. சிவாஜியைக் கொண்டு இன்றைய வரலாற்றை எழுதிய முரண் உத்தி அண்ணாவின் தனிச்சிறப்பாகும்.

பொதுவாக நாடகம் இன்பியல் நாடகமாக அல்லது துன்பியல் நாடகமாக முடிவது மரபு. அவலநாடகம் சிறப்பானது என்றாலும் மங்கலமாக முடித்து வைப்பதை மக்கள் விருப்பமாகக் கருதினர். அண்ணா, சந்திரமோகன் இந்துவை மணந்து கொள்வதுபோல் இன்பியலாக முடித்திருந்தாலும் சிவாஜியின் இந்துராஜ்யம் கனவாகவே இருக்கிறது என்ற துன்பியலை நிலைக்க வைக்கின்றார். சந்திரமோகன் வழி இன்பியலையும் சிவாஜிவழி துன்பியலையும் காட்டி, நாடகத்தலைப்பினை அமைத்த விதம் பற்றியும் அதில் உள்ள முரண்பற்றியும் விளங்க வைத்துள்ளார். சந்திரமோகனின் இந்துவும் சிவாஜியின் இந்துவும் முரண்பட்டிருக்கின்றமையையும் அறியலாம்.

கவிதை அல்ல ஆக்கிக்கொள்க என்னும் குறிப்போடு கவிதை பாடியவர் அண்ணா.

**பாடுகிறான் அண்ணன் ஓர் கவிதை என்று**
**பரிவாலே எண்ணிடாதீர் உடன்பிறந்தாரே**
**சீர்அறியேன் அணிஅறியேன் சிந்தைஉந்தும்**
**செய்திதனைத் தெரிவித்தேன் ஆசையாலே**

என்று பாடியவர். 1937 முதல் தொடர்ந்து எழுதினார் அண்ணா. கவிதைகளை மொழிபெயர்த்துமுள்ளார். வால்ட்விட்மன் கவிதையை மொழிபெயர்த்துள்ளமையைச் சான்றாகக் கூறலாம்.

**கவிஞர் ஓர் காலக்கண்ணாடி**
**பழமைச் சாயலின் பிரதிபலிப்பல்ல**
**உள்ளத்தின் ஆவேசம் உணர்ச்சியில் புயல்**
**எழுப்பிடும்; அவனது இதயகீதம்**
**எதுகைமோனை எழில்தரு உவமை**
**வசீகர வர்ணனை-பழமைக்கு மெருகு**
**இத்தனையும்தேடி எங்கெங்கோ எழ**
**வார்த்தைமுடையும் வலைஞன் அல்ல**

எனப் பொருத்தியே மொழிபெயர்த்துள்ளார். அவர்தம் இதயத்தில் இயல்பாகப் பதிந்த இந்த உத்தி இருகவிதைகளிலும் வெளிப்படுவதை அறியலாம். கடிதங்களிலும் இந்தநடை இயல்பாக இடம்பெற்றிருக்கிறது.

**நாம் நடத்திவருவதோ அறப்போர்-நம்மை**
**எதிர்ப்போர் நடத்திவருவதோ அக்கப்போர்**

என்றும்

**குண்டுகள் உமது கரங்களுக்கு விளையாட்டுச்**
**செண்டுகள்**

என்றும் எழுதியுள்ளமையை எண்ணிப்பார்க்கலாம். சிறுகதைகளிலும் புதினங்களிலும் இந்த உத்தி நன்கு கையாளப்பட்டுள்ளது. "பரோபகாரம்' என்னும் குட்டிக்கதையில் பிச்சைக்காரரின் அவலநிலையையும் உணவு விடுதி நடத்துவோர் உணவை வீணாக்கும் நிலையையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார் அண்ணா. முரண் நகைச்சுவையைத் தோற்றுவிக்கும் என்பதால் அதனைச் சிறுகதையில் காட்டிச் சிரிப்பை வரவழைத்துள்ளார். "சொல்வதை எழுதேண்டா' சிறுகதை நல்ல எடுத்துக்காட்டாகும். ராகவாச்சாரி இருகடிதங்களை மண்டு என்று அழைப்பவரிடம் எழுதச் சொன்னார். அவர் கூறியவாரே மண்டுவும் எழுதினான். தீர்த்தகிரி என்பாருக்கு எழுதுமாறு சொன்ன கடிதத்தில் அவரைத் தர்மசிந்தனை, தயாளகுணம், பகவத் கடாட்சம் கொண்டவர் என்றெல்லாம் பாராட்டி ஐம்பது ரூபாய் தன்மகனிடம்

கொடுத்துதவ வேண்டியிருந்தார். தன் மகனுக்கு எழுதுமாறு சொன்னகடிதத்தில் 'அந்த தீர்த்தகிரி கொஞ்சம் முன்கோபி, வள்ளுனு விழுவன், முகஸ்துதியிலே ரொம்பப்பிரியம், பெரியகருமி, எப்படியும் பணத்தை வாங்கிடு, அசடாட்டம் இருந்துடாதே' என்றெல்லாம் கூறி எழுதவைத்தார். ஆனால், கடிதங்கள் முகவரி மாறிச்சென்றன. மகனுக்கு அனுப்பிய கடிதம் தீர்த்தகிரிக்கு அனுப்பவேண்டியதாகும். தீர்த்தகிரிக்கு அனுப்பிய கடிதம் மகனுக்குச் சேரவேண்டிய கடிதமாகும். மகன் வழி செய்தி அறிந்த ராகாவாச்சாரி நீ இல்லைடா மண்டு, நான் மண்டு என்று எழுதியவரிடம் சொல்லிவிட்டு, உன்னை விட்டாலும் எனக்கு வேறு கதியில்லை, போய் காகிதம் கொண்டுவா கடிதம் எழுத என்கிறார்.

பார்வதி பி.ஏ. புதினத்தில் சராசரிப் பெண்களில் இருந்த மாறுபட்டுச் சிந்திக்கிற பெண்ணாக டாக்டர் லலித்குமாரியைப் படைத்து எப்படி மாறுபட்டுச் சிந்திக்க வேண்டும் என்று காட்டியுள்ளார்.

> பால்ய விதவையான இந்தப் பெண்ணுக்குச் சந்தோஷம் எப்படி இருக்கமுடியும்? விசித்திரமான நிலைமை இது. அந்தப் பெண்ணின் நோய் போக வேண்டுமானால், அவளுக்கு நான் மருந்து கொடுத்துப் பிரயோசனமில்லை. சமூகத்தில் உள்ள பித்தம் தெளிய மருந்திடவேண்டும. அப்போதுதான் அபலைகளை அலைக்கழிக்கும் அந்தக் கொடிய நோய் ஒழியும்

என்கிறாள். நோயாளிக்கு மருந்துதராமல் இன்னொன்றுக்குச் சமூகத்திற்கு மருந்திடவேண்டும் என்று மாற்றிச் சிந்திக்க வைத்தார் அண்ணா.

"திராவிடத்தின் பெருமையும் வெங்காயத்தின் அருமையும்' என்னும் கட்டுரை நூலையும் இங்கேநினைவு கூரலாம். அரசியல் வேதாந்த மொழியாகப் பெரியார் வெங்காயம் என்பதைப் பயன்படுத்தியவர். அவர்பாணியிலேயே அன்றைய முதல்வர் காமராசர் "திராவிடநாடு-வெங்காயம்' என்று பேசிவந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் இந்நூலினை உருவாக்கினார் அண்ணா.

தோகையில்லை மயில்தான்; குளிர்ச்சி யில்லை
நிலவுதான்; ஒளியில்லை மணிதான்; சுவையில்லை
கனிதான்; அணியில்லை பாட்டுத்தான்; மழலை
இல்லை குழவிதான்; மணம் இல்லை மலர்தான்-
கூறுவரோ எவரேனும் ? கேட்டிடின் கைகொட்டிச்
சிரிப்பாரன்றோ ஆனால் தனி அரசு இல்லை
திராவிடர்தான் என்றன்றோ இன்றுள்ள நிலை

என முடித்துள்ளார் இந்த நூலை அண்ணா. இசையில் தோன்றும் பரவசம், அண்ணாவின் மேடைப்பேச்சிலும் தோன்றும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பச்சையப்பன் கல்லூரியிலும் பலமுறை பேசியவர் அண்ணா. பட்டி தொட்டிகளில் முழங்கியவர் அண்ணா. எல்லாரையும் ஈர்த்தவர் அண்ணா. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேரவைத் தொடக்கவிழாவில் (23.9.1947) 'நிலையும் நினைப்பும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். விடுதலைநாள் பற்றித் தாம் விடுத்த அறிக்கை சரி என்பதை விளக்கினார் அக்கூட்டத்தில். அதில்,

"நிலைக்கேற்றபடி நினைப்பு இருக்கும்; ஆனால், சிலவேளைகளில் நிலைக் கேற்றபடி நினைப்பு இருப்பதில்லை. மூன்றாவது அடுக்கு மேல் மாடியில் உலவுகிற தொழிலாளியின் நினைவு அவன் நிலை உயர்ந்திருக்கிற அளவு உயர்ந்திருப்பதில்லை. திருட்டுத்தனமாகக் கனிதேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படி இருக்கும்? எந்த அளவுக்கு அவனது நிலை உயர்ந்திருக்கிறதோ அந்த அளவு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்" என்று அடுக்கிக்கொண்டே போனார். இப்பேச்சுமுறை அவருக்குப் பெருவெற்றியைத் தந்தது.

ஆங்கில நடையிலும் இதனைக் காணலாம்.

Revolution-not by bullots but by ballots
North flourishes-South perishes
Determination leave, deviation never
Tap the rich and pat the poor

இறுதியாக,

**அண்ணாத்துரை என்னும்**
**அண்ணல் தமிழ்நாட்டு**
**வண்ணான் அழுக்கெடுப்பில்**
**வாய்மொழியில் பண்ணாவான்**
**சிற்பன்-எழுத்தோவியத்தில்**
**செவ்வரசு நாவால்!**
**அற்புதம் சூழ் மாலுமி என்று**
**ஆடு!**

என்னும் திரு.வி.க.வின் கவிதை அண்ணாவின் பன்முகத்திறனையும் நோக்கினையும் வெளிப்படுத்துவதையும் உணர்ந்து மகிழலாம். எல்லாத் துறையிலும் அண்ணாத் துரையே எனப் பாராட்டப்பெற்ற அண்ணா தமிழகத்தின் வரலாற்றை மாற்றியமைத்த பெருமைக்குரியவர் மட்டுமல்லர், தாமே வரலாறாகி நின்ற நான்கடி இமயம் அவர்.

# பேரறிஞர் அண்ணாவின் ஆளுமை

வழக்குரைஞர் வீ.சு. இராமலிங்கம்

திராவிடர் தலைவர், இந்த நாட்டின் செல்வம், சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடச் செய்யும் செந்தமிழ்க் காவலர், சிங்க நடையும் சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சிக் கவிநடையும், புதிய உரை நடையில் கண்ட பூமான். பூரிப்பால் தம்பிமார் படை மீது விழியோட்டும் கோமான் தங்கத்துள் தங்கம் தனித் தங்கம் அறிஞர் அண்ணா அவர் புகழ் வாழ்க!

அண்ணாவினுடைய ஆளுமை எனும் பொழுது, தலைவர் சொன்ன "Multiple Personality" என்ற பொருளில் சொன்னது தவறில்லை. ஆனால் நான் நினைத்தப் பொருள், அதற்கு நான் கூறும் பொருள், அண்ணாவினுடைய Personality. Total Personality யை சொல்வது எனது நோக்கம்.

மகாத்மா காந்தி சொன்னார்; வாழ்க்கை என்பது முழுமையானது. மனித வாழ்க்கையை நீங்கள் கூறு போட்டுப் பார்க்கக் கூடாது. என்று நான் பேசுகிறபோது பேச்சாளர் ஓர் இராமலிங்கம், வழக்கறிஞர் ஓர் இராமலிங்கம், ஒரு இராமலிங்கம் தந்தை, ஒரு இராமலிங்கம் படித்தவன், ஒரு இராமலிங்கம் அண்ணன், ஒரு இராமலிங்கம் தம்பி, ஒரு இராமலிங்கம் அரசியல்வாதி என்றில்லை. ஒரே இராமலிங்கம் தான் இத்தனையும் செய்கிறான். அப்படி வாழ்க்கையை முழுமையாகப் பார்க்க வேண்டும்.

அந்தப் பொருளிலே நான் அண்ணாவை முழுமையாகப் பார்க்கிறேன். முழுமையாக அறிய வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

ஏனென்றால், அண்ணாவின் வாழ்க்கை என்பது முழுமையாக அறியப்படவேண்டியது. அவருடைய வாழ்க்கையில் மறைக்கப்பட வேண்டியது எதுவுமில்லை. அவர் வாழ்க்கையில் பொய் சொல்ல வேண்டியதில்லை. அவர் வாழ்க்கையில் நடந்ததை நீங்கள் அப்படியே சொல்லுங்கள்.

எது தேவை, எது தேவையில்லை, அவர் பெரியவரா, சின்னவரா என்கிற விஷயத்தை கேட்பவர் முடிவு செய்வார். அண்ணாவின் வாழ்க்கையில் மறைத்துச் சொல்ல வேண்டியது எதுவுமில்லை.

அண்ணா எழுதியதும் பேசியதும் பொதுமக்களுக்காக அவர் இரகசிய கிரந்தம் எழுதவில்லை. அவர் பேனா எழுதியதெல்லாம் மக்களுக்காக, அவர் பேசியதெல்லாம் மக்களுக்காக, சொல்வதற்காகத் தான் அவர் வாழ்ந்தார். மறைப்பதற்கு என்று அவரிடம் ஒன்றுமில்லை. எனவே, அவரை முழுமையாகப் பார்ப்பது நல்லது. பார்க்க முடியும் பலருடைய வாழ்க்கையை முழுமையாகப் பார்க்க முடியாது. அதற்கு பயப்படுபவர்கள் பார்க்க முடியாமல் போகலாம்.

அவரைப் பற்றிய ஆளுமை என்ன என்று அறிய அவர் மறைவை நினைத்துப் பாருங்கள். இரண்டாண்டு காலம் மட்டுமே முதலமைச்சராக இருந்தார். அதில் கிட்டத்தட்ட ஓராண்டு காலம் நோயாளி. அவருடைய இறுதிக் காலத்தில் படுக்கையில் கிடந்தார். அவர் முழுமையாக ஆண்டது ஓராண்டு ஒன்றரை ஆண்டாக இருக்கலாம்.

ஆனால், அவர் மறைந்த பொழுது உலக வரலாற்றில் மிக அதிகமான மக்கள் கலந்து கொண்ட சவ ஊர்வலம் அண்ணாவின் இறுதி ஊர்வலம் என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

அவர் மறைந்த போது தமிழகம் அழுதது. இது வெறும் கற்பனையல்ல, அலங்காரமல்ல, பச்சை உண்மை. அண்ணா மறைந்த போதுதான் தமிழகத்தில் உள்ள அத்தனை மக்களும் சென்னைக்கு வரவேண்டுமென்று வந்தார்கள். யாரும் திட்டமிடாமல் யாரும் சொல்லிக் கொடுக்காமல், கிடைத்த வாகனத்தில் வந்தார்கள். லாரியிலே வந்தார்கள், பேருந்திலே வந்தார்கள், இரயிலிலே வந்தார்கள். இரயிலின் கூரை மீது வந்தார்கள். அதிகாரிகள் சொன்னதைக் கேட்காமல் வந்ததால் சிதம்பரத்தின் பக்கத்தில் 70 பேர் இறந்தனர். அண்ணா நோய்வாய்ப் பட்டுள்ளார் என்பது தமிழகத்திற்குத் தெரியும். அவர் இறந்துவிட்டதாக ஒரு வாரத்திற்கு முன்னதாகவே செய்தி வந்தது.

அங்கே இருந்த டாக்டர் சாந்தா, அவருக்கு செயற்கை சுவாசம் தந்து பிழைக்க வைத்தார். மீண்டும் ஒரு வாரம் உயிர்ப்பிழைத்தார். ஆக தமிழ்நாட்டு மக்களுக்கு அண்ணா

சாகக்கிடக்கிறார் என்பது தெரியும். இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டபோது மக்களால் அதைத் தாங்க முடியவில்லை.

அவர் உடலைப் பார்ப்பதற்கு லாரியிலும், பேருந்திலும், இரயிலிலும் வந்த கூட்டம் எவ்வளவு பெரிய கூட்டம். வந்தவர்கள் மட்டுமல்ல, என்னைப் போல் வராதவர்களும் உண்டு. இருந்த இடத்தில் எத்தனை பேர் செத்தனரோ?

அண்ணாவின் உடல் ராஜாஜி ஹாலில் உள்ளே வைக்கப்பட்டது. உள்ளே வைத்த உடனே கூரைமேல் ஏறி அவர்கள் கையாலேயே கூரையைப் பெயர்த்தனர். அண்ணாவின் உடம்பில் ஒரு கல் விழுகிறது. அதற்குப் பிறகுதான் நமது திருச்சி ராபின் ''என்னையா உள்ள வச்சிருக்கிங்க வெளியே வைங்க'' என்று சொன்ன பிறகு அண்ணாவை வெளியே கொண்டு வைத்தார்கள்.

அண்ணாவைப் பார்க்கவும் அண்ணாவின் உடலைத் தொட்டுவிடவும் அவ்வளவு ஆசை.

அடங்கொணாதப் பாசமும் அந்தப் பரிவும் இருந்ததால் அந்தத் துன்பத்தை அவர்களால் தாங்க முடியவில்லை.

வெளியே அண்ணாவின் உடலை வைத்தவுடன் கட்டுமஸ்தான உடலுடைய எட்டுப்பேர் அண்ணாவைப் பார்த்தவுடனே அந்த இடத்தில் செத்தனர். இது வரலாறு. பார்க்க வந்தவர் அண்ணாவின் உடலைப் பார்க்க முடியவில்லை. எத்தனை பேர் வந்தார்கள். கோடீஸ்வரன் வந்தான், பஞ்சைப் பராரி ஏழைகள் வந்தார்கள், கிறிஸ்தவன் வந்தான், முஸ்லீம் வந்தான், இந்து வந்தான்.

பரம நாத்திகனான அண்ணாவுக்கு எல்லா கோயில்களிலும் பூசை செய்து அவருக்குத் திருநீறும் பிரசாதமும் அனுப்பப் பட்டன. தேவலாயங்களிலே பிராத்தனை நடந்தது. பள்ளிவாசலிலே தொழுகை நடந்தது அந்த நாத்திகனுக்கு ஏன் அப்படி நடந்தது. P. இராமமூர்த்தி நாடாளுமன்றத்தில் அண்ணா இறப்பைப் பற்றி பேசும்போது, ''ஏழைகள் அடித்துக் கொண்டு அழுதார்களே அதைவிட என்ன மரியாதை'' நாம் செய்ய முடியும். என்றார். கேரளத்தின் அமைச்சர் நம்பூதிரி பாத் தலையில் துண்டுப் போட்டுக் கொண்டு அண்ணாவின் சவ அடக்கத்தில் வெய்யிலில் நின்றார். அவ்வளவு பேரும் கதறி, கதறி அழுதார்கள் அது ஏன்

நடந்தது? எப்படி இத்தனை மக்கள் கூடி அழுதார்கள் என்ற கேள்வியை நீங்கள் கேட்டால் எது வெளிப்படுகிறதோ அது ''அண்ணாவின் ஆளுமை''. அண்ணா யார் என்பதை அவர் மறைவிலே தெரிந்து கொள்ளலாம்.

உலக வரலாற்றில் இல்லாத அளவுக்கு இப்படி மக்கள் இறுதி ஊர்வலத்திற்கு வரக் காரணம் என்ன? ஒரே காரணம், இந்த மக்கள் நம்மை வாழ்விக்க வந்த, நம்மை கடைத்தேற்ற வந்த, நமக்கென்று பொது வாழ்க்கையில் உள்ள ஒரே தலைவன் பேரறிஞர் அண்ணா என்று அவர்கள் உள்ளத்திலே எழுதப்பட்டு விட்டது. அந்த நம்பிக்கையோடு அண்ணாவைப் பார்த்தார்கள். அவர் நெற்றியிலே எழுதப்பட்டிருந்தது. மக்களுக்கு முன்னால் நான்தான் உங்களுக்கு இருக்கிற மனிதன் என்ற அந்த நெற்றியில் எழுத்து பொறிக்கப்பட்டு இருந்தது அதைத் தான் மக்கள் பார்த்தார்கள்.

அண்ணா அவர்கள் அதை உருவாக்கி காப்பாற்றி வைத்திருந்தார். ஏனென்றால், அவர்களுக்காகவே பொது வாழ்க்கையில் இருந்தார். நமக்கென்று இருக்கின்ற ஒரே தலைவன் போய்விட்டானே இனி நமக்கு கதி யார்? எனக் கதறி அழுதார்கள்.

இனி அந்த அழுகையை வேறொரு தலைவனுக்கு இனியாரும் அழப்போவதில்லை. ஏன் அப்படி அழுதார்கள். அப்படி அழச் செய்தது என்ன?

அவர் என்ன கடவுளின் அவதாரமா? வரம் வாங்கி வந்தவரா? ஒரு ஏழை நெசவாளிக் குடும்பத்தில் பிறந்தவர். அவருக்கு என்று பின்னனி இல்லை, பெரிய வரலாறும் இல்லை. அவர் வீட்டில் யாரும் படித்தவர் இல்லை, அவருக்கு உயர்ந்த எண்ணங்களை உருவாக்கி பயிற்சி தர ஆளில்லை, மூன்று தாய்களுக்கு ஒரு ஆண்மகன் பட்டம்மாள், பங்காரம்மாள், இராசாமணி அம்மையார் என்ற மூன்று அக்காள் தங்கைக்கு கிடைத்த ஒரே பிள்ளை அண்ணா.

அவருக்கு எதிர்காலத்தில் புகழ் உறவு வரப்போகிறதோ என்னவோ, என தெரிந்தே 'அண்ணாதுரை' என்று பெயர் வைத்தனரோ, அந்தப் பெயரே உறவை மக்களிடம் உருவாக்கியது. அப்படிப்பட்ட ஏழைக் குடும்பத்தில் பிறந்த அண்ணா, இறக்கும்போது தமிழக மக்களின் அன்பை அள்ளிக் கொண்டு போனது அவர் வாழ்க்கையில் செய்த சாதனை.

இந்திய வரலாற்றில் யாருடனும் சண்டையிடாமல், பதவிக்குப் போட்டியிடாமல், வஞ்சனை செய்யாமல், பொய் சொல்லாமல், ஏமாற்றாமல், எந்த எத்துதனமும் செய்யாமல் தலைவர்களாக மலர்ந்தவர்கள் இரண்டே பேர், ஒன்று அண்ணா மற்றொருவர் மகாத்மா. தாமரை மலர் இருக்கிறது. அது மொட்டாக இருக்கிறது, மொட்டு மலர்ந்து பிறகு முழு மலராகிறது. மலர்வது என்பது அந்தத் தாமரைச் செடியின் பண்பு. அதனுடைய இயற்கை. தான் மலர்வதற்காக அது யாரையும் அழுந்துவதில்லை. யாருடனும் அது போட்டி போடுவதில்லை. தன்னுடைய உள்ளீடாக உள்ள பண்பு இருக்கிறது. அந்த பண்பு வெளிப்படுகிறது இயல்பாக அது மலர்வதற்காகச் சண்டை போடுவதில்லை. அவ்வாறு தலைவர்களாக மலர்ந்தவர்கள் தான் மகாத்மாவும், அண்ணாவும். அவர்கள் தலைவர்களாக மலர்ந்ததை மக்கள் அடையாளம் கண்டு கொண்டு தங்கள் தலையிலே வைத்துக் கொண்டார்கள். தலைவராக அவர்கள் போட்டி போட்டவர்கள் இல்லை. யாரை வஞ்சித்தார்கள். யாருடன் சண்டை போட்டார்கள் இல்லை. காங்கிரஸ் இயக்கம் அதற்கு முன்னதாகவே இருந்தது. இருக்கிற இயக்கத்துக்குள்ளே மகாத்மா வந்தார். தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவருடைய இறுதிக் காலத்தில் காங்கிரஸ் உறுப்பினர் கூட இல்லை. ஆனால், அவரில்லாமல் காங்கிரஸ் இல்லை என்ற நிலை உருவாகியது.

அதைப்போல தந்தை பெரியார்தான் திராவிடர் கழகத்தின் தலைவர். சுயமரியாதை இயக்கத்தின் தலைவர். அண்ணாவின் பொது வாழ்க்கை நீதிக்கட்சியில்தான் தொடங்கியது.

பெரியாரை தலைவராக்கி நீதிக்கட்சியை திராவிடர் கழகம் எனப் பெயரை மாற்றினர். திராவிடர் கழகம் என்ற பெயரைக் கொடுத்து அதற்கு கருப்பு வண்ணக் கொடியை உருவாக்கியவரும் அண்ணாதான். பெரியாரை வாழ்நாள் தலைவர் என அறிவித்து அதற்கு ஆதரவு திரட்டியவரும் அண்ணாதான். தான் பதவிக்கு வரவேண்டுமென்று அவர் எதுவுமே செய்யவில்லை. தனக்குத் தலைவர் பெரியார் என்று சொல்லிக் கொண்டார்.

அண்ணா, தமக்குத் தலைவர் பெரியார் என்று சொன்னால் மக்கள், தமக்குத் தலைவர் அண்ணா என்று ஏற்றுக் கொண்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார், வளர்த்தார், அவர் தான் எல்லாம் செய்தார். அண்ணா உருவாக்கிய குழந்தை, வளர்த்த குழந்தை அவர் கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த குழந்தை, திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆனால், அந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நான் தலைவன் என்று அவர் சொன்னதில்லை. என்னுடைய கட்சி என்று சொன்னதில்லை. என்னுடைய சொத்து என்று சொன்னதில்லை. அவர் வாழ்நாளிலே அவரால் உருவாக்கப்பட்ட நாராயணசாமியாக இருந்து இவரால் நெடுஞ்செழியனாக உருவாகியவரை தி.மு.கவிற்குப் பொதுச் செயலாளராக்கினார். பொதுச் செயலாளர்தான் மாநாட்டிற்குத் தலைமை தாங்க வேண்டும். எல்லா கூட்டத்துக்கும் தலைமை தாங்க வேண்டும்.

அந்த அடிப்படையில் திருச்சியில் நடந்த இரண்டாம் கழக மாநாட்டிற்குத் தலைமை ஏற்க வைத்து, தன்னால் உருவாக்கப்பட்ட நெடுஞ்செழியனை தன்னுடைய தம்பியை தலைமை ஏற்க வைத்து இரண்டு வாக்கியம் தான் பேசினார். "தம்பி வா, தலைமை தாங்க வா, ஆணையிடு உம் வழி நடக்கிறோம்" என்று சொன்னார். மூன்றே மூன்று சின்ன வாக்கியம். அந்த வாக்கியத்தில் உள்ள பொருள் என்ன? நெடுஞ்செழியன் தம்பிதான்.

ஆனால் அண்ணா சொன்னார், ''நான் ஒரு கட்சியின் உறுப்பினர். எனவே உன்னுடைய ஆணைக்கு நான் கட்டுப்படுகிறேன்'' என்றார். இந்தக் கட்சி என்னுடையது என்று அவர் சொல்லவில்லை, கருதவில்லை.

தி.மு.க. ஒவ்வொரு கட்சித் தொண்டனுக்கும் சொந்தம் என்றுதான் வளர்த்தார். உழைப்பு, அறிவு, ஆற்றல் எல்லாம் அண்ணாவுடையது. ஆனால், அந்தக் கழகம் கட்சித் தொண்டனுக்கு சொந்தமானது. பிறகு கட்சித் தொண்டனுக்கும் தாண்டி மக்களுக்குச் சொந்தமானது. அண்ணா அறிவித்தார்: ''இந்த இயக்கம் உங்களுடையது நீங்கள் விரும்பினால் இதுசெயல்படும், நீங்கள் விரும்பாவிட்டால் இது செயலற்றுப் போகும்'' என்று அண்ணா சொன்னார். ஏனென்றால் கழகமே பொது மக்களுக்காக, கழகமே பொதுமக்கள் சொத்து.

அப்படி உருவாக்கப்பட்டது கழகம். அவர் பொதுவாழ்விற்கு வந்தது எதற்காக? அந்தப் பின்னணியைப் பாருங்கள், அவரைப் படிக்க வைத்தது எதற்காக? அவர் பண்டித நேரு அல்ல, டாக்டர் மோகன் குமாரமங்கலம் அல்ல, கோடிக்கணக்கான ரூபாய் குவித்து வைத்த மோதிலால் நேருவின் செல்லப்பிள்ளை பண்டித நேரு. அவர் சம்பாதித்து, வீட்டில் அடுப்பு எரிய வேண்டாம். எல்லாம் கோடிஸ்வர வீட்டுப்

பிள்ளைகள். அது தியாகம் இல்லை என்று சொல்லவில்லை. ஆனந்தபவனையே கொடுத்தார்கள். அந்தத் தியாகத்தில் அவர்கள் வீடு பட்டினி கிடக்காது. வறுமை இருக்காது.

ஆனால் அண்ணா ஏழை வீட்டிலே பிறந்து, இந்தக் குடும்பத்தை வாழ வைப்பார் என்று படிக்கவைக்கப்பட்ட பிள்ளை. பச்சையப்பன் கல்லூரியில் கிடைத்த உதவித்தொகையை வைத்துக் கொண்டு எம்.ஏ. படித்தார் அண்ணா. அவருக்குப் பணம் தேவை, வேலை தேவை, அந்தக் குடும்பத்துக்கு சம்பாத்தியம் தேவை. அப்படிப்பட்டச் சூழலில் அண்ணா வேலை தேட முயற்சி செய்தார்.

குமாஸ்தா வேலை பார்த்தார், பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்தார், அவ்வளவு பெரிய ஜீனியஸ், அங்கே போய் வேலை செய்ய இயலுமா? பாசுதேவ் என்கிற நீதிக்கட்சி மற்றும் தொழிற்கட்சித் தலைவராக இருந்தவருக்கு மொழி பெயர்ப்பாளராக இருந்தார். இவர் இல்லாமல் அவர் பேசுவதே இல்லை. இப்படி வளர்ந்தவர், பிறகு நீதிக்கட்சியில் செயலாளராக வந்தார். வேலை வேண்டும் என்கின்ற போது குமார ராஜா சர் முத்தையா செட்டியார் தமக்கு உதவியாளராக இருக்கச் சொன்னார். ஆனால், அண்ணா அவர்கள் ஏழ்மையில் இருந்தாலும் கோடிஸ்வரன் பக்கத்தில் இருக்க முடியவில்லை.

இவர் மக்களுக்குச் சேவை செய்ய வந்த தலைவர். அவர் எப்படி மற்றவரிடம் கைகட்டி வேலை செய்வார். இறுதிக்காலம் வரை எந்தப் பணக்காரனுக்கும் கையாளாக வாழவில்லை. இறுதிவரை பணக்காரருடைய ஆதரவில் அவர் வாழவில்லை என்பது மட்டுமல்ல தன்னுடைய கழகத்தை எந்த பணக்கார ஆதரவாளனாலும் வளர்க்க வில்லை. அவர் காலத்தில் எந்த பணக்காரனிடமும் ரூ.5000/- ரூ.10,000/- என்று நிதி சேர்த்தது இல்லை. இது வரலாறு.

இன்றைய தேர்தலில் நிற்கிற வேட்பாளரிடம் அறிவிக்கப்பட்ட சொத்து கணக்கில் அறுவரில் ஒருவர் கோடிஸ்வரன். நமது இந்திய ஜனநாயகம் ஏழை மக்களுக்காக உருவானது. பாமர மக்களுக்காக உருவாக்கப்பட்டது. இதில் அறுவரில் ஒருவர் கோடிஸ்வரன் என்பது அறிவிக்கப்பட்ட கணக்கு.

கோடிஸ்வரனாக இருந்தால்தான் தேர்தலில் சீட்டுக் கிடைக்கும். இது எல்லாக் கட்சிக்கும் இலக்கணம். எந்தக் கட்சியும் விதிவிலக்கல்ல. ஆனால் ரூ.5000/- ரூ.10,000/- என்று ஒரு பணக்காரனிடமும் அண்ணா பணம் வாங்கவில்லை. அதுமட்டுமல்ல 'பணக்காரன் கையிலிருந்து வாங்குகின்ற பணம் குஷ்ட ரோகியின் கையிலிருந்து வாங்கும் வெண்ணெய்க்குச் சமம்' என்றார். இது அவர் கடைப்பிடித்தக் கொள்கை.

அவர் சொன்னார் ''ஆங்கிலேயர் வீட்டில் ஒரு வாசகம் இருக்கும். Long Live the king என்று எழுதப்பட்டிருக்கும். படம் மாறிக் கொண்டே இருக்கும். ஆனால் அந்த வாசகம் அப்படியே இருக்கும். அதுபோல் இந்த நாட்டில் பணக்காரனுடைய வீட்டில் ஒரு வாசகம் இருக்கிறது. அது 'நாங்கள் அரசாங்கத்தின் பக்கம்'. என்று அரசாங்கம் மாறிக்கொண்டே இருக்கும் ஆனால் அந்த வாசகம் அப்படியே இருக்கும்'' என்று சொன்னார்.

அப்படி பணக்காரர்கள் யாரிடமும் கையேந்தவில்லை. வெளிப்படையான ஒரு செய்தி, விருகம்பாக்கம் மாநாட்டில் 1967இல் முழு வெற்றி அடைவதற்கு முன்னால் கூடிய மாநாட்டில் அப்போது தி.மு.க.வின் ஒட்டுமொத்த தேர்தல் நிதி வெறும் 11 இலட்சம் ரூபாய். 234 தொகுதிக்கான தேர்தல் நடத்த நிதி 11 இலட்சம்.

அகில இந்திய காங்கிரஸ் அகில இந்தியாவையும் ஆட்டிப்படைக்கும் சக்தி, கோடிஸ்வரன்களின் கட்சி அதை எதிர்த்து நிற்கும் தி.மு.க.வுக்கு 11 இலட்சம் மட்டுமே தேர்தல் நிதியாக இருந்தது.

அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். விருகம்பாக்கம் மாநாட்டில் மேடையில் 'நான் கழகத்திற்குத் தேர்தல் நிதியாக இரண்டு இட்சம் ரூபாய் தருகிறேன்', என்று அறிவித்தார்.

அண்ணா அவர்கள் மாநாட்டில் நீங்கள் கொடுக்கும் இரண்டு இலட்சம் வேண்டாம் என்றார். கழகத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக 'நீங்கள் முகத்தை காட்டினால் முப்பது இலட்சம் ஓட்டு கிடைக்கும். நடந்து போங்கள் நாற்பது இலட்சம் ஓட்டு கிடைக்கும்' என்று இங்கிதமாகச் சொன்னார்.

நான் இதை மேடைகளில் பல இடங்களில் எம்.ஜி.ஆர். கொடுத்தப் பணத்தை வேண்டாம் என்றார் என்று

சொல்லியிருக்கிறேன். ஏன் சொன்னார் என்று பலருக்குத் தெரியாது.

நான் சொன்ன விளக்கம் இதுதான், எந்த ஒரு தனிமனிதனிடமும் தி.மு.க. அடகு வைக்கப்படக் கூடாது என்று அண்ணா கருதினார் என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். நேரே தெரியாது. அது நேரே உறுதி செய்யப்பட்டது. அண்ணா மறைந்து பல ஆண்டுகள் கழித்தபின் அன்பில் தர்மலிங்கம் என்னிடம் சொன்னார். இது வெளியே தெரியாது, யாரும் பதிவு செய்யாதது. அவர் சொன்னது. அண்ணாவுடைய செல்லப் பிள்ளை அன்பில் மறுநாள் காரில் சென்று கொண்டு இருக்கும் போது, 'என்னங்க அண்ணா நீங்க நம்பகிட்ட பணமே இல்லை, அவருக்குப் பணத்துக்கு பஞ்சம் இல்லை, பணம் தரேன்னு சொன்னார், வேண்டாமுன்னு சொல்லிட்டிங்களே' என்றார் அன்பில்.

அண்ணா, 'அறிவு இருக்கா, இன்னிக்குப் பணம் கொடுப்பார்கள். நாளைக்கு கட்சி எனக்கு சொந்தம் என்பார்கள்' என்றார் அவர். அந்த இரண்டு லட்சத்திற்குப் பின்னால் கழகம் அடிமைப்படுவது அண்ணாவுக்கு தெரிந்தது. இன்றைக்குப் பணம் தெரிகிறது. இலட்சியம் தெரியவில்லை. கூட்டம் தெரிகிறது, கொள்கை தெரியவில்லை. எவ்வளவு உன்னிப்பாக இருந்தார். பணம் வேண்டாம் என்றார்.

'நாம்' என்று ஒரு சின்ன தொகுப்பு இருக்கும். அண்ணா எழுதியது. அதில் நமக்கு பணம் முக்கியமில்லை, மக்கள் மனம் முக்கியம் என்பார். 2000 வேண்டும் என்றால் எட்டணா வசூல் செய்யுங்கள். பணத்தை எங்கு வேண்டுமானால் வாங்கலாம் பணத்துக்குப் பின்னால் உள்ள அந்த மனம் முக்கியம். இதில் இன்னொரு விஷயம் உண்டு. அதைச் சொன்ன பிறகு மக்களோடு இணைந்து விட்டார். எனவே பணத்தை நம்பி அரசியல் நடத்தவில்லை.

அவர் பணக்காரர் இல்லை. அண்ணா அவர்கள் பணம் இல்லாதவர்தான். புகழ்மிக்க தலைவராக விளங்கியவர். உலகத் தமிழ் மக்களுக்கு எல்லாம் அண்ணா தலைவர். மில்லர் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யும் முன்னால் அவருக்கு ஆயிரக்கணக்கில் தந்தி வந்தது. ஒன்றும் புரியவில்லை. தமிழகத்தில் இருந்து தந்தி சென்றால் பரவாயில்லை. உலகத்தில் உள்ள எல்லா திக்குகளிலிருந்தும், இலங்கை, மலாய், தென் ஆப்பிரிக்காவிலிருந்து

அந்த உயிர் தேவை என்று தந்தி அடித்தார்கள். மில்லருக்குப் புரியவில்லை. 'என் வாழ்நாளில் இப்படியொரு மனிதனுக்கு சிகிச்சை செய்யவில்லை' என்று சொன்னார். உலகத் தமிழர்களின் அடையாளம் அண்ணா. ஏனென்றால் தமிழர்களுக்கு தமிழன் யார் என்று அடையாளம் காட்டியவர். நமக்கு நம்மைப் பற்றி சொன்னவர் அண்ணா.

ஏன் அப்படி. அவர் இறந்த பொழுது அழுதார்கள் அவருடைய திறமை, அறிவு, ஆற்றல் நமக்காகவே கொடுத்தார். முழுமையாகக் குடும்பத்திற்கு என்று கூட வைத்துக் கொள்ளாமல் தன்னுடைய வாழ்க்கை முழுவதும் மக்களுக்காக அர்ப்பணித்த ஒரு தலைவர் அண்ணாதான்.

அதனால்தான் அந்த மக்களுக்குத் தெரிந்தது அண்ணாவினுடைய சுட்டுவிரல் அசைவுக்குத் தமிழகம் நடந்தது. கற்பனையாகச் சொல்லவில்லை. இரண்டு மூன்று நிகழ்ச்சிகளை சொல்ல விரும்புகிறேன்.

கடற்கரையில் அண்ணா பேசுகிறார், பேசுகிறபோது நான் என் சுண்டுவிரலை காட்டுவேன், நீங்கள் எழ வேண்டும். மறுபடியும் காட்டுவேன். உட்கார வேண்டும் என்று சொன்னார். எப்போது என்றால் நேருவுக்கு கருப்புக்கொடி காட்டும் போராட்டம் நடந்தது அப்போது F.V. அருள் சென்னையின் அப்போதைய கமிஷனர் அண்ணாவை காவல் நிலையத்தில் வைத்து சாதாரண குற்றம் சாட்டப்பட்டவனை நடத்துவது போல நடத்தினார்கள். அவர் மரியாதைக்குத்தான் துண்டு போட்டு இருப்பார். அதை எடுத்தார் அருள். அப்புறம் விடுதலையாகி வந்த பிறகு நடந்தது கடற்கரைக் கூட்டம். அப்பொழுதுதான் அந்த சர்க்கஸ் நடத்தினார்.

அப்படி எல்லாம் அண்ணா செய்பவரில்லை. 'இதை நான் ஏன் செய்தேன் என்றால் ஆளுகிறவர்களுக்கு எனது சக்தி என்ன வென்று தெரிவிக்க நான் விரும்பினேன். நம்முடைய போலிஸ் கமிஷனருக்கு அருள் இருக்கிறது பெயரிலேதான். அவர் குணத்தில் அது இல்லை' என்றார். இதைக் காட்டுவதற்காக அந்தக் கூட்டம் எழுந்து நின்றது.

அண்ணாவின் ஒவ்வொரு அசைவும் செயலும் சொல்லும் ஒவ்வொரு தொடர்களும் பொதுமக்களுக்குப் போய் சேர்ந்தது.

1962ஆம் ஆண்டு தேர்தலிலே, இன்றைய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் வாக்கு எண்ணுகிறார்கள். நெடுஞ்செழியனுக்கு உதவியாளனாக நான் இருந்தேன். தேர்தல் முடிவுக்கு வெளியே உட்கார்ந்திருந்தோம். ஒரு தோழர் பேசிக் கொண்டிருக்கும்போது 'எங்கள் பகுதியில் ஒரு சோமாறி இருக்கிறான் சார். அவன் காங்கிரஸ். அடிக்கிறான் சார்' என்றார். "நீயும் அடிக்க வேண்டியது தானே' என்றேன். 'அடிச்சிடலாம் ஆனால் அண்ணா மனசு நோகுமே' என்றார்.

இவர் ஏதோ ஒரு மூலையில் இருக்கிறார். தான் அடித்தால் அண்ணா மனம் நோகுமென்று ஒரு தொண்டன் நினைத்தான். அவர் காந்தியை தலைவராகச் சொன்னதில்லை. ஆனால், உண்மையான காந்திய அஹிம்சைவாதி. அண்ணா, அஹிம்சை என்று வாயால் சொல்லவில்லை. ஒவ்வொரு தொண்டனையும் அஹிம்சையைப் பின்பற்ற வைத்தார். அதற்கு இது சாட்சி. அடிக்க கூடாது என்று ஒவ்வொரு தொண்டன் மனதிலும் விதைத்தார் அண்ணா.

ராஜ்ய சபையில் ஒரு உறுப்பினர் மக்களின் நாடித் துடிப்பை தெரிந்த ஒரே தலைவர். மகாத்மாவுக்குப் பின்னால் அண்ணாதான் என அந்த வடநாட்டுத் தலைவர் சொன்னார். எனவே ஒவ்வொருவர் உள்ளத்திலும் தன்னை அவர் ஐக்கியப் படுத்திக் கொண்டார்.

அப்படி மக்களோடு ஐக்கியப்படுவதற்கும் மக்கள் இவரோடு ஐக்கியப்படுதற்கும் காரணம் அவரிடம் இருந்த உண்மை. அவர் தாம் நம்பாத விஷயத்தை மக்களுக்குச் சொல்லவில்லை. தாம் நம்புவதற்குரிய செய்திகளைச் சொல்ல பயந்ததில்லை. இவர் திராவிட நாடு பிரிவினைக் கேட்டார். பிரிவினையை கைவிட்டார். மீண்டும் தி.மு.க. இருந்தது.

திராவிட நாடு பிரிவினை என்பது எங்கள் இரத்தத்திலே ஊறிப்போனக் கொள்கை. இன்று வரையில் எனது இந்தியா என்று நினைக்க முடியவில்லை. பிரிவினை பேச முடியாது. கேட்டா ஜெயிலுக்குப் போகனும். நான் ஜெயிலுக்குப் போகத் தயார். அது இரத்தத்தில் ஊறிப்போன ஒன்று. ஆனால், என்னை அந்தக் கழகத்தை விட்டு அண்ணா போகவிடவில்லை.

'நண்பர்கள் கேட்பதற்கு' என்று புத்தகம் எழுதினார். நான் சொன்னால் கேள் என்று சொல்லுகிற தலைவர் அல்ல. நான் இதைச் செய்தேன். இதில் என்ன லாபம் இந்தக் கழகத்தைக்

காப்பாற்ற வேண்டும் தமிழர்களுக்கு இந்தக் கழகம் வேண்டும். உலகத் தமிழர்களுக்கு அடையாளம் வேண்டும். அதற்கு தி.மு.க. வேண்டும்.

இன்று இலங்கைத் தமிழர்கள் இவ்வளவு துன்பப்படும் போது யாரைப் பார்த்து கேள்வி கேட்கிறார்கள், கலைஞரைக் கேள்வி கேட்கிறார்கள். ஏன்? கலைஞர் என்பதால் அல்ல. அவர் தமிழனுக்கு என்றிருக்கிற பேரியக்கத்தின் தலைவர். உனக்கு கடமை இருக்கிறது. ஏன் இதைச் செய்யவில்லை என்று உரிமையுடன் கேட்கிறான். இந்த முத்திரையை அண்ணா கொடுத்தார்.

அதைக் காப்பாற்றும் போது அண்ணா வாழ்வார். இலங்கையில் சிங்களவர்கள் சிங்கள எழுத்தான ஸ்ரீயை, பெண்களின் மார்பில் சூடுபோட்டார்கள். இலங்கைத் தமிழர்களின் கறி விற்கப்படும் என்று கடை போட்டான். அண்ணா, தி.மு.க. தொண்டர்களுடன் இலங்கை தூதரகத்துக்கு ஊர்வலமாய்ச் சென்று குரல் எழுப்பினார். இலங்கை இறையாண்மை என்று சொல்கிறார்கள் அது உள்நாட்டு விஷயம் நான் பேச முடியாது என்று சொல்கிறார்கள்.

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் ஈடுபடாதே என்று சொன்னபோது அண்ணா ஒரு உவமை சொன்னார். "பக்கத்து வீட்டில் கணவன்-மனைவிக்கு இடையே பல தகராறு நடக்கலாம்". தொல்லை நடக்கலாம். அதில் தலையிடுவது நாகரிகமல்ல, ஒத்துக் கொள்கிறேன். ஆனால், இரவு 12 மணிக்கு கழுத்தை அறுக்கிறான். உயிர் போகிறது என்று சத்தம் போட்டால் போய்ப் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டார்.

உலகத்தில் தமிழர்கள் பர்மாவில் இருந்து செட்டியார்கள் சொத்து பிடுங்கப்பட்டு இந்தியா வந்தபோது குரல் கொடுத்தவர் அண்ணாதான்.

'மார்வாடி வந்தால் விட்டு இருப்பாயா? குஜராத்தி வந்தால் விட்டு இருப்பாயா? தமிழன் மட்டும் அவன் சொத்தை விட்டு விட்டு வரவேண்டுமா' என்று கேட்டார். தந்தையாக தமிழனுக்கு என்ன வேண்டும் என்று தெரிந்து. பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து தமிழனுக்குப் பாடுபட்டார் அவ்வளவு திறமையும் ஆற்றலும் காங்கிரசுக்குப் போயிருந்தால் அவர் பொது வாழ்விற்கு வரும் காலத்தில் காங்கிரஸ் ஓர் உன்னதமான ஒரு விடுதலை இயக்கம். மகாத்மா என்ற தனிநபர்

தலைமையில் நடக்கும் இயக்கம். புகழ் வேண்டுமானால் அதற்குப் போயிருக்க வேண்டும். பொருள் வேண்டும் என்றால் நீதிக் கட்சித் தலைவருடன் போயிருக்க வேண்டும். நீதிக் கட்சியின் செயலாளராக இருந்து ஆங்கிலேயரின் பதவி பட்டங்களை ஏற்கக் கூடாது என்று ஆணை போட்டார்.

நீதிக்கட்சியில் இருக்கும்போதே வெள்ளையர் ஆதிக்கம் கூடாது என்றார். 1945இல் பேசுகிறபோது "அரசியலை ஆங்கிலேயரிடத்திலும், பொருளாதாரத்தை வட இந்தியனிடத்திலும், ஆத்மாவை ஆரியனிடத்திலும் ஒப்படைத்துவிட்டு அடிமையாக இருக்கிறோம்" என்றார்.

இலங்கையில் தமிழர்கள் வாடுகிறார்கள் என்று சொல்லும்போது 'நம் இரத்தத்தின் இரத்தம், தசையின் தசை அங்கே வாடுகிறது' என்று பேசினார். இதெல்லாம் யாரும் சொல்லிக்கொடுத்தோ, இதையெல்லாம் ஓட்டு கிடைக்கும் என்றோ பேசியதில்லை. அக்காலகட்டத்தில் வாக்கு கேட்கவில்லையே. 1949ல் தி.மு.க.வை தொடங்குகிறபோது அது தேர்தலில் நிற்கிற கட்சியல்ல 1957ல்தான் தேர்தலில் நிற்பதாக முடிவு.

பெரியாருடைய அதே சமூக சீர்திருத்தக் கொள்கைகளுடன் அண்ணா கட்சியை வளர்த்தார். அண்ணாவை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றால். அண்ணாவின் காலத்துடன் பார்க்க வேண்டும். இன்றைய நிலையை வைத்துக் கொண்டு அண்ணாவை மதிப்பிடாதீர்கள்.

அண்ணா என்பவர் சராசரி அரசியல் தலைவரில்லை. அவர் தமிழர்களை வாழ்விக்க வந்த மகான் என்ற உணர்வுடன் பார்த்தால் தான் புரியும். நீங்க பக்தியே இல்லாம திருவாசகத்தை படித்தால் இதில் என்ன இருக்கிறது? என்று கேட்டால் எப்படி இருக்கும். பைபிள் படிக்க வேண்டும் என்றால் கிறித்தவனாக இருக்க வேண்டும், குரான் படிக்க முஸ்லிமா இருக்க வேண்டும், தேவாரம் படிக்க சைவனா இருக்க வேண்டும். சைவ நூலைத் தெரியாமல் அதைப் படித்தால் எப்படி விளங்கும்.

'எவன் ஒருவன் மக்களுக்குத் தலைவனாக இருக்கிறானோ அவன் அவனுக்கு அடிமை செய்யட்டும்' என்று ஏசு சொன்னார். அப்படி உழைப்பதற்கு என்று தன்னை பலி கொடுப்பதற்கு என்று வந்தவர் அண்ணா.

# இந்திய மெய்யியல் வரலாற்றில் அறிஞர் அண்ணா

பேரா. முனைவர் க. நெடுஞ்செழியன்

இந்திய மெய்யியல் வரலாறு இன்று புதிய எல்லைக்குள் நுழைந்துள்ளது. இந்திய வரலாற்றை ஆரியரின் வருகையோடு தொடங்கியதைப் போலவே, இந்திய மெய்யியல் வரலாற்றையும் வேதங்களில் இருந்தே தொடங்கினர். வேதங்களே இந்தியாவின் அறிவியல் - கலை - பண்பாடு - மெய்யியல் என அனைத்து அறிவு மரபுகளுக்கும் மூல ஊற்றாய்க் கருதப்பட்டும் நம்பப்பட்டும் வந்தன. இந்தச் சூழலில் இன்றைய மெய்யியல் ஆய்வாளர்கள், இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்தனைப் போக்குகளை அடையாளம் கண்டுள்ளனர். அந்தச் சிந்தனைப்போக்கு வேதங்களுக்கு முற்பட்டது என்றும் ஆரியர் அல்லாதாருக்கு உரியது என்றும் உறுதி செய்துள்ளனர்.

வேதங்களுள் முதன்மையானதும், பழமையானதும் என "இருக்கு" வேதத்தைக் குறிப்பிடுவர். தமிழ்மரபில் இது "மூலவேதம்" எனும் பொருளில் "நால்வேதமாகக்" குறிக்கப்பட்டிருப்பதை அறிஞர்கள் அடையாளம் காட்டுகின்றனர். இவ் இருக்கு வேதத்தை நான்கு கூறுகளாகப் பகுத்து ஆராயும் அறிஞர் வாசெக், "முதல் கூறும், நான்காம் கூறும் இடைச் செருகல்கள் என்றும், இரண்டு - மூன்றாம் கூறுகளில் திராவிடச் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன' என்றும் ஆய்ந்துரைப்பார். டி.டி. கோசாம்பி, "இருக்கு வேதம் கி.மு.14ஆம் நூற்றாண்டில் தென்னாட்டில் தொகுக்கப்பட்டது என்றும், எழுத்து வடிவில் தொகுத்துக் குறிப்புரையும் எழுதப்பட்டது என்றும், ஆனால் காலப் போக்கில் வேதப்பாடல்களை எழுத்து வடிவில் அமைப்பதைத் தடுத்து விட்டனர் என்றும், பின்னர் வாய்மொழியாகவே வழங்கத் தலைப்பட்டனர்' என்றும் ஆய்ந்துரைப்பார். டி.டி. கோசாம்பியின் கருத்தோடு அதாவது "தென்னகத்தில்தான் இருக்கு வேதம்

தொகுக்கப்பட்டு முதன்முதலாக எழுத்து வடிவம் பெற்றது' எனும் கருத்தோடு, தொல்காப்பியப் பாயிரத்தை ஒப்பிட்டால் பல புதிர்களுக்கான விடையைக் காணமுடியும்.

"அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசானுக்கு', "மயங்காமரபின் எழுத்து முறையைக்' காட்டியவர் தொல்காப்பியர். இவர் "ஐந்திரம் நிறைந்தவர்' என்பது பனம்பாரானாரின் கூற்று.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது.

"நான்மறை முற்றிய அதங்கோட்டாசானுக்கு, தொல்காப்பியர் ஏன் எழுத்து முறையைக் காட்டவேண்டும்? என்பதுதான். இதனால் டி.டி. கோசாம்பி கூறுவது போலத் தென்னாட்டில் தொகுக்கப்பட்ட இருக்கு வேதமாகிய மூல மறையை, எழுத்து வடிவில் கொண்டு வருவதற்கான முயற்சியில் தமிழகம் வழங்கிய கொடையை பங்களிப்பைப் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழ் எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு வேத மொழிக்கான எழுத்துவடிவத்தை உருவாக்கும் முயற்சியில் தமிழ் மக்களின் சார்பாகத் தொல்காப்பியர் உதவினார் என்பதே அந்தச் செய்தி. அதனால் தொல்காப்பியரின் காலம் மட்டுமல்ல, அறிஞர் வாசெக் அவர்கள் கூறியதைப் போல, வேதத்தின் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் திராவிடச் சொற்கள் (தமிழ்ச் சொற்கள்) மிகுதியாக இடம் பெற்றிருப்பதற்கான காரணமும் நமக்குத் தெளிவாகின்றது. தொல்காப்பியத்தின் பன்முகத் தன்மைகளைப் புரிந்துகொள்ள நாம் இந்திய எழுத்தியல் வரலாற்றையும் கற்றாக வேண்டும்.

**ஐந்திரம்**

தொல்காப்பியத்தின் தலையாய திறவுகோல்களில் ஒன்று "ஐந்திரம் நிறைந்த' எனும் இருசொற்களாகும். அதங்கோட்டாசான் வேதத்தில் வல்லவர் என்றால் தொல்காப்பியரோ "ஐந்திரம் நிறைந்தவர்'. அப்படியானால் அந்த ஐந்திரம் யாது?

**சாரிபுத்தன்**

புத்தரின் சம காலத்தவன்; புத்தரால் பௌத்த சங்கத்தில் இணைக்கப்பட்டுப் பின்னர் பௌத்த சங்கத்தின் தலைமைக்கு வந்தவன் "சாரிபுத்தன்' ஆவான். வைதிக மரபைச் சார்ந்த இவன் தென்னாட்டில் "ஐந்திரம் கற்றவன்' என அவதான சாதகம் கூறும்.

அவன் ஏன் தென்னாட்டில் ஐந்திரம் கற்றான்? அவன் தாய்வழிப் பாட்டன் மாதவன்; மகதநாட்டில் இராசகிருகம் அருகே உள்ள ஓர் ஊரினன்; இவன் ஐந்திரம் கற்பதற்காகத் தென்னகம் வந்து இங்கேயே தங்கி விட்டான்; இங்கே அவனுக்கு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் பிறந்தனர். பெண்மகவின் பெயர் சாரி. அவளுக்கு இங்கேயே மணம் முடித்தான். சாரிக்குப் பிறந்த ஆண்மகவிற்குச் சாரிபுத்தன் என்பது பெயர். ஆதலால் பாட்டனைப்போல அவனும் தென்னகத்திலேயே ஐந்திரம் கற்றான். இந்த வரலாறு, தொல்காப்பியத்தை நாம், எப்படி அணுக வேண்டும்? ஆராய வேண்டும்? என்ற "முறையியலை' உணர்த்துகிறது.

தொல்காப்பியம் இலக்கணநூல் மட்டுமன்று; தமிழரின் அறிவுமரபின் அடையாளம். தமிழரின் வாழ்வியலை, மெய்யியலைப் பாதுகாத்த காலப்பேழை. இதில் பொதிந்துள்ள தருக்கவியல் கூறுகள் இந்தியத் தருக்கவியல் வரலாற்றின் மூல வடிவங்கள். இந்தப் பின்னணியில் ஆராய்ந்தால்,

இந்தியமெய்யியல் ஆராய்ச்சி அறிஞர்கள் குறிப்பாகப் பொருள்முதல் சிந்தனையாளர்கள் மூல எண்ணியத்திற்கு (எண்ணியம் - சாங்கியம் -Original sankhiyas) - அஃதாவது கடவுள் மறுப்பு எண்ணியத்திற்கு (நிரீச்சுர சாங்கியம்) தொடக்ககாலச் சிறப்பியத்திற்கு (வைசேடிகம்) உரியன என்றும் ஓக, உலகாய்த மெய்யியல்களைச் சார்ந்தவை என்றும் எவற்றைக் குறித்துள்ளனரோ அவற்றையெல்லாம் தொல்காப்பியம் விரிவாகவும் செறிவாகங்வ கூறிச் செல்கிறது.

படிமுறைக் கோட்பாடு (Theory of Evolution)

அண்டவியல் கோட்பாடு (Theory of Universe)

அளவையியல் கோட்பாடு (Theory of Logic)

காரண - காரியக் கோட்பாடு (Theory of cause and Effect)

இன்பியல் கோட்பாடு (Theory of Helonism)

ஆகிய அறிவுசார் இடங்களைக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம்

"நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

"என்ப"

"என்மனார் புலவர்"

"நுனித்தகு புலவர் கூறிய நூலே"

எனத் தொல்காப்பியம் சுட்டுவது மேலே குறிப்பிட்ட மூலவர்களை எனும் உண்மைகள் புலனாகின்றன.

மேலே காட்டிய கோட்பாடுகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது அண்டவியல் கோட்பாடாகும். இன்றைய வான்இயற்பியல்துறை (Department of Astrophysics) மேற்காள்ளும் ஆய்வான இடம் காலம் பற்றிய ஆய்வே அதுவாகும். இடம் - காலம் பற்றிய அந்த ஆய்வே தொல்காப்பியத்தில் முதல்பொருள் பற்றிய இலக்கணமாகும்.

**முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்**
**இயல் பென மொழிப இயல்புணர்ந் தோரே**

எனவும்,

**கரும் நிகழ்வது இடமென மொழிப**

எனவும்,

**இறப்பே எதிர்வே நிகழ்வே தென்னுந்**
**திறத்தியல் மருங்கின் தெரிந்தனர் உள்ளப்**
**பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்**

எனவும்,

**இமையோர் தேயத்தும் எறிகடல் வரைப்பினும்**
**அவையில் காலம் இன்மை யான**

எனவும் வரும் நூற்பாக்கள் யாவும் இடமும் காலமுமாகிய முதல் பொருள் பற்றிய ஆய்வுகளுக்குச் சான்றாகும். தொல்காப்பியர் கூறும் மேற்காட்டிய நூற்பாக்கள் குறிப்பிடும் அறிவியல் உண்மைகளில் பல. 40 அல்லது 50 ஆண்டுகளுக்கு முன்னர்தான் இன்றைய அறிவியல் உலகிற்கு அறிமுகமாயின என்பதும் இங்கே எண்ணத்தகும்.

மேலே நாம் காட்டிய கோட்பாடுகள் அனைத்தும் கி.மு. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அல்லது எட்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் எண்ணியக் கோட்பாடாக வடிவம் கொண்டன. 24 எண்களை அடிப்படையாகக் கொண்ட காரணத்தால் தமிழர்கள் அத்ற்கு எண்ணியம் என்றனர். வடமொழியாளர்கள் இதனைச் சாங்கியம் என்றனர். சாங்கியம் என்ற வடசொல்லிற்கு எண்கள் என்பது பொருளாகும். இக்கோட்பாட்டை உருவாக்கியவர் கபிலர் ஆவார். இக்கால

கட்டத்தில்தான் உலகாய்தம் அல்லது பூதவாதம், ஓகம் (யோகம்) ஆகிய அறிவுமரபுகளும் தனித்தனியே கிளைத்தன.

எண்ணியம், உலகாய்தம், ஓகம் ஆகிய மூன்றும் ஐந்திரத்திலிருந்தே கிளைத்தன. எனினும் ஐந்திரத்திற்கும், எண்ணியம் முதலான பிற கோட்பாடுகளுக்கும் இடையேயுள்ள தலையாய வேறுபாடும் உண்டு. அவ்வேறுபாடே, ஐந்திரத்தில் இடம் பெற்றிராத,

1. வேத வேள்வி எதிர்ப்பு.
2. கடவுள் மறுப்பு ஆகிய இரண்டும் ஆகும்.

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் காலத்தில் ஆரியர்க்கென்று இருந்தது இருக்கு வேதம் மட்டுமே. அஃதும் தொகுக்கப்படாமல் வாய்மொழியாகவே வழங்கி வந்தது. அதனால் அஃதோர் கோட்பாடாக வடிவம்கொள்ளும் வாய்ப்பு நேரவில்லை. இம்மண்ணில் செழித்து நின்ற அறிவுமரபுகளைக் கற்கும் நிலையில் அவர்கள் இருந்ததால் அவர்களையோ, அவர்தம் கோட்பாடுகளையே எதிர்க்கவேண்டிய தேவை ஐந்திரமரபாளர்களுக்கு ஏற்படவில்லை. எதிரிகளே இல்லாதபோது போருக்கான வாய்ப்பும் இல்லாமல் போய்விடுமல்லவா ஆனால் இந்நிலை நெடுங்காலம் நீடிக்க வில்லை. வைதிகர்கள் சமூகநிலையிலும், அரசியல் நிலையிலும் தங்களை நிலைப்படுத்திக் கொள்ளப் புதிய வழிமுறைகளைக் கண்டனர். அவ்வழிமுறைகளை வழங்கியவை "உபநிடதங்கள்' என்பவை.

**பிரம்மாணங்கள் - ஆரண்யங்கள் - உபநிடதங்கள்**

அறிவுவளர்ச்சி என்பது கொள்கைகளுக்கு இடையே நிலவும் முரண்பாடுகளால் - உண்மையை நிலைநாட்டும் வழிமுறைகளால் ஏற்படுவதாகும். இந்த வளர்ச்சிக்குத் துதிப்பாடலாகவும், போற்றிப் பாடல்களாகவும் திகழ்ந்த வேதப்பாடல்கள் போதுமான வகையில் உதவவில்லை. இதனால், வேதங்களை மேலும் விளக்கும் வகையிலும் காலச் சூழலுக்கேற்பப் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும் அவற்றிற்குப் புது விளக்கங்கள் கொடுக்க முனைந்தனர். அவ்விளக்கங்களே "பிராம்மணங்கள்' என்பன, பிராம்மணங்கள் பின்னர் ஆரண்யங்களாகிப் பின்னர் உபநிடதங்களாக முதிர்ச்சிப் பெற்றன.

இந்த உபநிடதங்கள் எதைப் போதித்தன? அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் நோக்கங்கள் எவை? என்பன பற்றி அறிஞர்கள் மிக விரிவாக ஆராய்ந்துள்ளனர். தேவிபிரசாத் சட்டோபாத்தியாயாவின் விளக்கம் நம் கவனத்தை ஈர்ப்பதாய் உள்ளது.

> உபநிடதங்களில் காணப்படும் தத்துவச் சிந்தனைப் போக்குகளில் கண்கூடாகத் தெரியும் குழப்பதினூடே, கருத்து முதல்வாதம் வெளிப்படும் இயல்புகள் அனைத்தும் மிகவும் தெளிவாகவே தெரிகின்றன; அந்த நூல்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த பெயரிலேயே அவற்றை அறியும் சூசகங்கள் இருக்கின்றன.
>
> "உபநிஷத்" என்ற சொல், அதன் பகுதி, விகுதிப் பிரிப்பாலும் அதே பொருள் கொண்ட இரகசியம் என்ற சொல்லுடன் ஒப்பிட்டு ஒத்துப் போவதாலும், இரகசியமான அறிவு - ஞானம் என்று பொருள்படுகிறது. . . . . . அறிவு - ஞானம் என்ற மனக்கோள் உபநிஷத்துகளில் புதியதும் நம்ப முடியாத கட்டுக்கதை போன்றதுமான - சிறப்பான பொருளைக் கொள்கிறது. அறிவு -அதிகமாகப் படிப்பது அன்று; பண்டை இயற்கைச்சாத்திரம் கூறும் உண்மைகளை (அறிவியல் அடிப்படையிலன்றி பெரும்பாலும் கற்பனையால் கோத்து வைத்தவை) தெரிந்து கொள்வதுதான் உபநிஷத்துச் சிந்தனையாளர்களைத் தூண்டும் எண்ணமாக இருந்தது, என விவரிப்பார். மேலும், உபநிஷத்துக்கால இந்தியாவில் சமுதாயம் ஆளும்வர்க்கம் என்றும் உழைக்கும் வர்க்கம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. முக்கியமாக அரசர்களும் பிரபுக்களுமே இருந்த ஆளும் வர்க்கம், உழைப்போர் உற்பத்தி செய்த உபரியானவற்றை வலுக்கட்டாயமாகப் பிடுங்கிக் கொண்டனர். இப்படி நிலைத்துவிட்ட இந்த உண்மை நிலையைப் பழைய காலத்து தர்மசாத்திரக்காரர் ஒருவர் காரண - காரியம் காட்டி நியாயப்படுத்துவதையும் காணமுடிகிறது. அரசரும் பிரபுவும் வாழ்ந்த மிக

> "மேலான" வாழ்க்கை முறையை அவர் இப்படி வருணிக்கிறார். அவன் (அரசரும் செல்வரும்) இந்த வரியை வசூல் செய்வதில் எப்போதும் சிறப்பான கவனம் செலுத்தவேண்டும். உற்பத்தியாவதில் தேவைக்கு அதிகமானதைக் கொண்டே அவன் வாழ்க்கை நடத்த வேண்டும்

என மேற்கோளுடன் விவரிப்பார்.

இத்தகைய சுரண்டல்நிலை என்பது குமுக அமைப்பை இரண்டு நிலைகளில் பாதித்தது. அவற்றில் ஒருவகையே நாம் மேலே கண்ட செல்வநிலையில் ஏற்பட்டது. மற்றொருவகை அறவுத்துறையில் ஏற்பட்டதாகும்.

தங்களின் மிகைப்பட்ட கற்பனைகளை அல்லது தருக்க முறைகளில் நிலைநாட்ட முடியாதக் கருத்துகளை மக்கள் மனதில் திணிக்கச் செய்வதற்காக மேற்கொண்டசெயல் முறைகளையே இங்கே நாம் அறிவுத்துறையில் ஏற்பட்ட தாக்குதல் அல்லது சுரண்டல் எனக் கூறுகின்றோம். அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்துவார் தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா.

1. **உலகை மாயை எனல்**

   உலகம் உண்மையில் இல்லை என்று சாதிப்பதே இதன் நோக்கம். இதைக் குமரிலபட்டர் வெளியில் எப்பொருளும் இல்லை; அதாவது அறிவுக்குத் தொடர்பான இயற்கைப் பொருள் யாதும் இல்லை என மறுத்தல்

2. **இயற்கையைத் தவிர்த்தல்**

   இயற்கை என்ற கருதுகோள் நிலைநாட்ட முடியாத ஒன்று என நிரூபித்துக் காட்டவே இதன் கருத்து முதன்மை பெறுகிறது. அதாவது ஐம்பூதக் கோட்பாட்டை மறுத்தல்.

3. பகுத்தறிவையும் பட்டறிவையும் ஏற்க மறுத்தல். வேறு வகையாகச் சொன்னால் அறிவுக்கானத் தடைகளை வற்புறுத்தியதாகும்.

இந்தியமெய்யியல் வரலாற்றில், கருத்து முதல்வாதத்திற்கும், அதற்கு எதிரானக் கொள்கைக்கும் இருந்த அடிப்படையான சர்ச்சையும் சண்டையும்தான், பட்டறிவு (அநுபவம்) பகுத்தறிவு இரண்டையும் இகழ்ந்து நீக்கும் கொள்கைக்கும் அவற்றை ஏற்று ஒப்புக்கொள்ளும் கொள்கைக்கும்

இடையே நடந்த சர்ச்சையும் சண்டையுமாக இருந்தது. சுருங்கச் சொன்னால் மூடநம்பிக்கைக்கும் அறிவியலுக்கும் இடையே நடந்த மோதல் எனலாம்.

இந்தச் சூழல் உருவானபோது சமூக அமைப்பிலும் நிறைய சல சலப்புகள் தோன்றின. ஒன்றுபட்டிருந்த மக்கள் வருணத்தால் பிளவு பட்டனர். அனைவருக்கும் பொதுவாக இருந்த அறிவும் - கல்வியும் ஒருசிலர்க் கென்றாயின. ஒரு சிலரோ முற்றாகத் தடுக்கப்பட்டனர். ஏற்றத்தாழ்வுகளும் சுரண்டல்களும் மலிந்தன. அறிவு வளர்ச்சி தடைக்குள்ளானதால், மூடநம்பிக்கையும் அறியாமையும் இருளாய்ப் படியத் தொடங்கின. இச் சூழலில்தான் அறிவு மறுமலர்ச்சியை வேண்டி அறிவுக்கான விடுதலை இயக்கம் தோன்றியது.

சமூக அமைப்பில் மாற்றத்தைக் காணவும், ஏற்றத்தாழ்வை அகற்றவும், தளைப்பட்ட அறிவை விடுதலை செய்யவும் அந்த இயக்கம் வீறு கொண்டு எழுந்தது. அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களை வடமொழிகளில் "பரிவிராசகர்கள்' என்றனர். தமிழில் நாம் இரவலர்கள் என யாரை என்ன பொருளில் கூறுகின்றோமோ அவர்கள் தாம் பரிவிராசகர்கள் என அழைக்கப்பட்டனர்.

**பரிவிராசகர்கள்**

ஒரே இடத்தில் இருந்து மக்கள் பணி ஆற்றாமல் நாடோடிகளைப் போல நாடு விட்டு நாடு, ஊர் விட்டு ஊர் சென்று மக்களிடம் அறிவுப் புரட்சியை ஊட்டியவர்கள் என்பதே பரிவிராசகர் எனும் சொல்லின் பொருளாகும். கிடைக்கக் கூடிய சான்றுகளைக் கொண்டு இவர்களின் வரலாற்றை ஆராய்ந்தால் இவ் இயக்கத்தைத் தொடங்கியவர் கபிலராகக் கூட இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், ஐந்திரமரபு போற்றி வந்த அறிவுத் துறைகளை அப்படியே ஏற்றுக்கொண்ட அவர், கூடுதலாக

வைதிக வேள்விச் சடங்குகளை எதிர்ப்பது
கடவுள் கோட்பாட்டை மறுப்பது

எனும் இரண்டையும் தம் கோட்பாட்டில் இணைத்துள்ளார். இந்த இரண்டு கூறுகள்தாம் பரிவிராசகர் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாகவும் இடம்பெற்றுள்ளன. இவ் அமைப்பின் செயல்பாடுகளையும், அவற்றின் விளைவுகளையும் விரிவாக ஆராய்ந்துரைப்பார் பிரேம்நாத் பசாசு.

> கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சமயப்பணி அமைப்பு ஒன்று தோன்றியது. பரிவிராசகர் (நாடோடிகள்) என்றழைக்கப்பட்ட அந்த அமைப்பில் இருந்த அறிஞர் பெருமக்கள் அனைவரும் மெய்யறிவுத் தேடலில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள். தங்கள் இல்லங்களைவிட்டு வெளியேறிய அவர்கள் ஊர் ஊராகச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களிடையே சமய மறுப்புவாதத்தைப் பரப்பினார்கள்.... வைதிகச் சமயத்திடமிருந்து வந்த எதிர்ப்பை அவர்கள் பொருட்படுத்தவில்லை. நடைமுறையில் இருந்த கோட்பாடுகள் மக்களது வாழ்க்கைக்குப் பயனற்றவை; சீராட்டிப் பாதுகாக்கப்படும் நம்பிக்கைகள் மூடத்தனமானவை என்று அறை கூவல் விடுத்தார்கள். தாராளச் சிந்தனைக்கான சூழ்நிலையை உருவாக்கினார்கள். அறிவுப்புரட்சி நடைபெறுவதற்கான களம் அமைத்தார்கள். இது பற்றி ரைஸ்டேவிட்ஸ் கூறுகிறார். "பரிவிராசகர்களோ அவர்களில் தலையாயவர்களோ யாருமே பார்ப்பனர்கள் இல்லை. நாடோடிகளும், புரோகிதர் அல்லாதவர்களும் மக்களிடையே ஆற்றிய உரைகளுக்குப் பெரும் வரவேற்பிருந்தது. மன்னர்கள், சான்றோர்கள் அரசு அலுவலர்கள், வணிகர்கள், கைவினைஞர்கள், உழவர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் பரிவிராசகர்களை வரவேற்றுப் பெருமதிப்புச் செய்தனர்.

எனத் தக்க மேற்கோள்காட்டி விளக்குவார்.

வைதிகர்களின் கருமக் கோட்பாட்டை - அதாவது இந்தப் பிறவியில் நன்மை செய்தால் அடுத்தப் பிறவியில் நன்மைகளைப் பெறலாம் எனக் கூறும் நல்வினை - தீவினைப் பற்றியக் கோட்பாட்டை மறுத்தனர். வேள்வித்தீயில் ஆயிரக்கணக்கில் பசு - காளை - ஆடு இவற்றைப் பலியிடுவதைக் கண்டித்தனர். பார்ப்பனர்கட்கு வழங்கப்பெறும் தானங்கள் மனிதர்களை நரகத்தில் விழாமல் தடுக்கவல்லன எனக் கூறியக் கோட்பாட்டைப் புறந்தள்ளினர். இவ்வாறு அனைத்து நிலைகளிலும் மனிதர்களிடையே நிலவிய சுரண்டலை, மனிதநேயமற்ற

போக்குகளைக் கண்டித்த பரிவிராசகர்கள் எனும் அறிஞர் பெருமக்களின் அறிவார்ந்த - தன்னலமற்ற பெருந்தொண்டின் காரணமாக ஏற்பட்ட விளைவுகள் பல. இவர்கள் வேதங்களை - அவற்றின் மேலாண்மையை - முற்றாக மறுத்தவர்கள். அதன் காரணமாக "நாத்திகர்கள்' என அழைக்கப்பட்டனர். நாத்திகர் எனும் சொல்லிற்கு வேத மறுப்பாளர்கள் என்பது பொருளாகும். இப் பரிவிராசகர் அமைப்பின் பெருந்தொண்டால் ஏற்பட்ட சூழல் பற்றி,

> வேதங்களை விடாப்பபடியாக நம்பியவர்கள் ஆத்திகர் என்றும், வேத மரபோடு ஒத்துப்போகாதவர்கள் (வேத விரோதிகள்) நாத்திகர் என்றும் அழைக்கப்பட்டனர். தாமாகச் சிந்திக்கக் கூடிய சிந்தனையாளர்கள் மீது வெறுப்பைத் தூண்டிவிடவேண்டும் என்ற சூழ்ச்சியான உள்நோக்கத்துடன் பார்ப்பனர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட சொற்பிரயோகமே ஆத்திகம் நாத்திகம் என்ற சொற்கள் என்று வரலாற்று அறிஞர் ஆர்.சி. மஜீம்தார் கூறுகிறார்.
>
> "பழமைச் சேற்றில் உழன்றவர்கள் ஆத்திகர். புதுமை நாடிய எதிர்க் கோட்பாட்டாளர்கள் நாத்திகர். இந்து இலக்கிய வாதிகள் புனைந்துருவாக்கிய பலபொருள்தரும் தனிச்சொற்களே இவை...... "வேதமத எதிர்ப்பாளர்கள் வேதங்களின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளமறுத்து அறைகூவல் விடுத்ததோடு இயங்காவியல் சிந்தனை அனைத்தையம் எள்ளி நகையாடினார்கள். இருப்பது பிரம்மம் மட்டுமே என்ற வேத வாதிகளின் வாதத்திற்கு மறுமொழியாக, இயங்காத் தன்மையுள்ள, சான்றாதாரம் காட்ட முடியாத பிரம்மம் இருப்பது அவர்களின் கற்பனைக் கருத்துருவில் மட்டுமே என்று அவர்கள் மீதே திருப்பி அடிக்கப்பட்டது.

என விவரிப்பார்.

இவ்வாறு அறிவுச் சுடரேந்தி மக்களின் அறியாமயைப் போக்க, வைதிக இருட்காட்டைக் குலைத்த இந்தத் திசையாசிரியர்களின் அமைப்பைச் சார்ந்த தலைவர்களே,

**பக்குடுக்கை நன்கணியார்**
**நரிவெருஉத் தலையார்**
**நல்வெள்ளை(ளி) யார்**
**மதுரை ஓலைக் கடையத்தர் நல்வெள்ளையார்**

முதலிய சங்கப் புலவர்கள் ஆவர். இத்தகைய அறிஞர்களின் கூட்டு முயற்சியால் உருவானதே **ஆசீவகம் என்னும் தமிழர் சமயமாகும்**.

கபிலர் உருவாக்கிய அந்த அறிவு மரபாகிய எண்ணியத்தின் பிழிவாக அமைந்ததே திருக்குறள். திருக்குறளின் அவாவறுத்தல் எண்ணியக் கோட்பாட்டின் ஆசைகளைத் துறத்தல் எனும் கருத்தையும், கொல்லாமை அதிகாரம், வைதிகர்களின் வேள்விப் பண்பாட்டை மறுத்தும் அமைந்த அதிகாரங்களாகும்.

**எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்**

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும்**

என வரும் குறட்பாக்கள் அறிவுக்கான விடுதலையை வற்புறுத்தி அமைந்தவை. இத்தகைய சிந்தனைப் போக்கு - அதாவது அறிவுக்கானத் தடைகளை உடைத்து மனிதவிழுமியங்களை மீட்டெடுக்கும் முயற்சிதான் சங்க இலக்கியப் பரப்பு முழுவதும் விரவிக்கிடக்கிறது. ஆய்அண்டிரனை,

**அறவிலை வணிகன் ஆய்அலன்**

என மோசிகீரனார் போற்றுவதும், பேகனின் கொடையை **மறுமை நோக்கின்றோ வன்றே பிறர் வறுமை நோக்கின்று அவன்கை வண்மையே. . . .** எனப் பரணர் பாராட்டுவதும் வைதிக மரபை எதிர்த்தத் தமிழ் மரபின் போர்முழக்கம். இதன் உச்சம்தான் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் வருணப்பாகுபாட்டைத் தகர்த்துக் கல்வி நீரோட்டையை அனைவருக்குமான பாசனப்பகுதியாக அறிவித்த அறிவிப்பாகும்.

பரிவிராசகர்கள் எனும் இரவலர்களின் - திசையாசிரியர்களின் நோக்கங்களை - அவர்களின் இலட்சியங்களைப்- பதிவு செய்துள்ள ஆவணங்களாகச் சங்க இலக்கியங்கள் மிளிர்கின்றன. அதன் காரணமாகவே சங்க இலக்கியங்களைப் பயில்வதற்குச் சைவர்கள் தடைவிதித்திருந்தனர். இச்சூழலில் சங்க இலக்கிய மரபு எப்போது

எப்படி வீழ்ச்சி அடைந்தது என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது. எனினும் ஆசீவகத்தின் வீழ்ச்சியோடு சங்க இலக்கிய மரபுகளும் காட்சிப்பொருளாய் மாறின எனலாம்.

சைவ சமய உட்பிரிவுகளில் ஒன்றான காபாலிகம் வேதத்தை - வேத நெறிகளை எதிர்த்து ஆகம் வழியில் சென்றது. அதன் வீச்சு தான் திருநாவுக்கரசின் வைதிக எதிர்ப்பாக எதிரொலித்தது. திருமந்திரம் அடிப்படையில் வேத எதிர்ப்பை உள்ளடக்கியதுதான். எனினும் சங்க இலக்கியங்களின்

**மனித விழுமியங்களைப் பேணல்**
**உலக வாழ்வை மேம்படுத்துதல்**
**வைதிக எதிர்ப்பு**
**கடவுள் மறுப்பு - அறிவு விடுதலை**

முதலான அறிவு மரபுகள் முற்றிலுமாக மறைந்துவிட்டன.

இச் சூழலில்தான் இந்தியச் சமூகம் கிட்டத்தட்ட வைதிகத்தின் ஏகபோகமாகி அறிவு விடுதலைக்கான குரல்வளை நெறிக்கப்பட்டு வருணத்தால் - சாதியால் பிளவுபட்டுச் சிதைந்தது. மனிதன் உயிரோடு இருக்கும்போதுதான் வஞ்சிக்கப்பட்டான் எனில் இறந்துபோன பிறகு தனக்கு இடம் கிடைக்கும் என நம்பிக் கொண்டிருந்த வீடுபேறு கூட இல்லை என்றானது. இத்தகைய சட்டவிதிகளை உருவாக்கிய நூல்கள் தரும சாத்திரங்கள் என அழைக்கப்பட்டன. இத் தருமசாத்திரங்களில் தலையாயது - மற்றவர்களால் தலையிட இயலாதது - மனுதருமம் என்பதாகும். "மனு கூறுவதெல்லாம் மருந்து" என இதனைப் போற்றுவார் ஆதிசங்கரர். மனுவிற்குப் பின்னர் வைதிக நெறியினர் போற்றும் மாமேதை ஆதிசங்கரர். அவர் எதைப் புகட்டினார்? அவர் பேண விரும்பிய குமுக அமைப்பு எத்தகையது? சட்டோபாத்தியாயா கூறுவதைக் கேளுங்கள்.

> சங்கரர் கூறும் சமுதாய முறையைத் தரும சாத்திரங்களில் உள்ள அதேசொற்களால் அதே மாதிரித்தான் விவாதிக்க வேண்டும். அவரும் அதே சொற்களைத்தான் கையாள்கிறார்.அந்தச் சொற்களின்படி சமுதாயம் இரண்டு பிரதானமான வகுப்புக்களாகப் பிரிக்கப்படுகிறது. அவை இரு பிறப்பாளர்கள், சூத்திரர்கள் என்பதாகும். சங்கரரின் நூல்கள் அனைத்திலுமே இருபிறப்பாளர்களே

மிகவும் மேம்பட்டவர்கள் என்பது முடிவான கருத்தாகவே கொள்ளப்படுகிறது. நாம் இங்கு அவர் சூத்திரர்களைப் பற்றி நினைத்ததைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டும். பிரம்ம சூத்திரஉரையில் இதற்கெனவே ஒரு பிரிவு முழுவதையும் அமைத்திருக்கிறார்.

சங்கரர் கருத்துப்படி சூத்திரன் மெய்யியல் அறிவு (தத்துவ ஞானம்) பெறுவதற்கு உரியவன் இல்லை. இப்படிச் சொல்வது மிகவும் சாதாரணமானது. சங்கரர் கருத்துப்படி இதன் உண்மையான உட்குறிப்பு மிகப்பெரிய அழிவில் முடியும் என்பது. இந்தத் தத்துவ ஞானம்தான் இது ஒன்றேதான் ஒருவனுக்கு மோட்சம் என்ற விடுதலையை அளிப்பது என்பதும் அவர் கருத்து. அப்படியானால் அவர் கூறும் தத்துவ ஞானத்தைப் பெறுவதற்கு உரியவனே இல்லை என்று அவனை விலக்குவதன் நோக்கம் யாது? சூத்திரன் விடுதலையே பெறுதல் என்ற பிரச்சினை எழுவதற்கு இடமே இல்லை என்பதே அது. அவனுக்கு உண்மையான விடுதலையே கிடையாது. ஆமாம் சூத்திரன் சாசுவதமான தளையில் அடிமைத்தனத்திலேயே வாழ்ந்து கொண்டு சாசுவதமாகவே இருபிறப்பாளர்களுக்குத் தொண்டு செய்துகொண்டே இருக்க வேண்டும். மனுதான் சொல்லிவிட்டாரே; தொண்டைத் தவிர சூத்திரன்வேறு எதைச் செய்தாலும் அவனுக்குப் பயனில்லை என்று! மேலும் சூத்திரர்க்கு ஞானம் பெறும் உரிமை ஏன் இல்லை? சங்கரர் கூறும் விடை வருமாறு : அவர்கள் வேதம் படிக்க வில்லை. ஞானம் வேதத்தில் உள்ளது. வேதம் படித்து அதன் பொருளையும் தெரிந்து கொண்டவனே வேதம் கூறுவதைத் தெரிந்துகொள்வதற்குத் தகுதி பெறுகிறான். வேதம் படிப்பதற்கு முன் உபநயனம் ஆகவேண்டும். சூத்திரனுக்கு உபநயனம் கிடையாது.

இவை மட்டுமா? சங்கரர் கூறுவதை மேலும் கேளுங்கள். சூத்திரர்களுக்கு வேதத்தைக் காதால் கேட்கும் தகுதி கூட இல்லை. அவர்கள் வேதம்

படிக்கவோ, வைதிகக் காரியங்களைச் செய்யவோ கூடாது. முன்னரே அதற்கான தண்டனையைக் காட்டி இருக்கிறோம். சூத்திரன் சுடுகாட்டிற்குச் சமம். அவன் இருக்கும் இடத்தில் வேதம் ஓதக் கூடாது. சூத்திரனுக்கு ஞானத்தை உபதேசிக்கக் கூடாது. வேதம் கற்பதும், யாகங்கள் செய்வதும், தானம் பெறுவதும் இருபிறப்பாளர்கட்கு மட்டுமே அதாவது பார்ப்பனனுக்கு மட்டுமே உண்டு.

என்பதாகும். ஆதிசங்கரரின் இத்தகைய தடைகள் - தடைகளுக்கான விளக்கங்களைப் பற்றிச் சட்டோபாத்தியாயா,

இதில் உள்ள அப்பட்டமான காட்டுமிராண்டித் தனத்துடன் பண்பாடே இல்லாத வகையில் பண்டைய கிரேக்கநாடும் ரோமாபுரியும் கூட ஆதரித்துப் போட்டி போட முடியாது. சங்கரரை ஒரேயடியாகப் புகழும் நம் காலத்து அறிஞர்களில் சிலர் அவருடைய தத்துவத்தில் இருக்கும் மனிதாபிமானம் பற்றி எழுதுவதில் மிகவும் பிரியமுள்ளவர்களாய் இருப்பது நமக்கு வியப்பளிப்பதாகவே உள்ளது. சங்கரரோ நாட்டின் உழைப்பாளிகளான இலட்சக்கணக்கான மக்களுக்கு எதிரான, மனித நேயம் சிறிதும் இல்லாத சட்டநியதிகளையும் தண்டனைகளையும் மிக்க அக்கறையுடன் எடுத்துக்காட்டுகிறார்.

எனத் தக்க சான்றுகளுடன் விளக்குவார்.

கி.மு. ஏழாம் நூற்றண்டில் தொடங்கிய அறிவுப்புரட்சி மெல்ல மெல்லத் தன் வீரியத்தை இழந்து வந்து முடிவில் மறைந்தே போனது. இதன் விளைவுகள் எப்படியெல்லாம் இருந்தன என்பதை வரலாற்றில் மிக விரிவாகவே காணலாம். அறிவு இல்லாத இடத்தில் அறியாமை ஆட்சி செய்யும். இந்த விதிதான் நமது குமுக அமைப்பை நெடுங்காலம் ஆட்டி வைத்தது. இச்சூழலில்தான் "வரலாறு மீண்டும் திரும்பும்' என்பார்களே அப்படிப்பட்ட ஒரு சூழல் உருவானது. பரிவிராசகர்களின் அமைப்பைப் போன்ற அமைப்பாக அது விளங்கியது. அந்த அமைப்பின் பெயர்தான் சுயமரியாதை இயக்கம்.

சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட சூழல், அதன் பணிகளின் தன்மை, நோக்கம், விளைவு இவையாவும் அந்தத் திசையாசிரியர்களின் இயக்கங்களை நம் கண்முன்

கொண்டுவரவனவாய் உள்ளன. சுயமரியாதை இயக்கம் எதற்காகத் தொடங்கப்பட்டது என்பதனை,

> மனிதனுக்கு வெட்கமும் ரோஷமும் ஏற்படுத்துவதற்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது. சுயமரியாதை இயக்கம் மனித சமூகத்தையே மாற்றி அமைக்க ஏற்பட்டதாகும். இந்தக் காரியம் ஒரு சமூகப் புரட்சியில் ஏற்படவேண்டியதே ஒழிய, சிரிப்பு விளையாட்டில் ஏற்படக் கூடியதில்லை. இதற்காக அனேகத் தொல்லைகளை அனுபவிக்க வேண்டிவரும்.
>
> அனேகக் காரியங்களில் மற்றவர்களால் நாம் துன்பமும் இழிவும் அடையாமல், நம்மாலேயே நாம் இழிவுக்கும் கீழ்நிலைக்கும் ஆளாகி வருகின்றோம். நம்மை நாம் திருத்திக் கொள்ளாமல், நமக்குள் ஒரு பெரிய மனமாறுதல் ஏற்படாமல் நமது சமூகம் மாறுதலடைதல் என்பது ஒரு நாளும் முடியாத காரியமாகும்.
>
> சமூகத்தில் மேல்சாதி, கீழ்சாதி, அடிமைசாதி என்பவர்கள் இருப்பதோடு, ஆண்-பெண் தன்மைகளில் உயர்வு - தாழ்வும் இருந்து வருகிறது. இவை தவிர ஏழை-பணக்காரன், முதலாளி - தொழிலாளி தன்மைகளும் இருந்து வருகின்றன.
>
> மூட நம்பிக்கைகள்தாம், வெகுகாலமாக மனித சமூகத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படுவதற்கு இல்லாமல் தடுத்துக் கொண்டு வருகின்றன.
>
> சாதி வித்தியாசங்களுக்கும் சாதிக் கொடுமைகளுக்கும் கடவுள்தான் காரணம் என்று எண்ணிய பிறகு யாரால் பரிகாரம் தேட முடியும்? அஸ்திவாரத்தில் கையை வைத்துச் சாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தவிர வேறு எந்த இயக்கமும் இல்லை என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.

எனத் தந்தை பெரியாரே விளக்குவார்.

இவ்வாறு, இந்தச் சமூகத்தின் சீர்கேட்டிற்கான காரணத்தை நன்கு ஆராய்ந்து, அதனைத் தீர்க்க முனைந்த தந்தைபெரியார், அதில் தாம் ஈடுபட நேர்ந்தது ஏன்? என்பதற்கும் விடைதருகிறார்.

> ஈ.வே.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு "யோக்கியதை' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணிசெய்ய யாரும் முன்வராததினால்தான் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகின்றேன்.
>
> இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும் பகுத்தறிவையே அடிப்படையாய்க் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத் தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.

சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன், என்பது அவரின் விளக்கம்.

இந்த அடிப்படை நோக்கத்தில் உருவாக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் தோன்றி ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரைச் சந்திக்கின்றார். அச்சந்திப்பு நிகழ்ந்தபோது அண்ணா முதுகலை மாணவர்; தேர்வு எழுதி விட்டு முடிவுக்காய்க் காத்திருக்கும் நிலை. இச்சூழலை அண்ணா சுவைபட விவரிப்பார்.

> எனக்கு அவரோடு தொடர்பு ஏற்பட்டது 1935ஆம் ஆண்டில்தான். அப்போது நான் பி.ஏ. (ஆனர்சு) தேர்வு எழுதி இருந்தேன். தேர்வு முடியாத நேரம் அது.
>
> அப்போது கோவைக்கு அடுத்த திருப்பூரில் ஒரு வாலிபர் மாநாடு நடந்தது. அங்கேதான் பெரியாரும் நானும் முதன் முதலில் சந்தித்துக் கொண்டோம்.
>
> அவர் மீது எனக்கும் பற்றும் பாசமும் ஏற்பட்டன. அவருடைய சீர்திருத்தக் கருத்துகள் எனக்குப் பெரிதும் பிடித்தன.
>
> பெரியார் என்னைப் பார்த்து என்ன செய்கிறாய்? என்று கேட்டார். "படிக்கிறேன்; தேர்வு

எழுதியிருக்கிறேன் என்றேன். "உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?" என்றார். "இல்லை! உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை! பொது வாழ்வில் ஈடுபட விருப்பம்! என்று பதிலளித்தேன். அன்று முதல் என் தலைவரானார். நான் அவருக்கு வளர்ப்பு மகனா (சுவீகாரப்புத்திரர்)னேன்.

தமிழக முதல்வரான பின்னர், தம் பொதுவாழ்வின் தொடக்கத்தை "அந்த வசந்தம்" எனக் குறிக்கும் அண்ணா தாம் எதிர்கொண்ட சவால்கள் எப்படி இருந்தன என்பதைச் சுவைபடத் தருகின்றார்.

வசந்தகாலம் என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் காடு மேடு பல சுற்றி வந்த நிலை. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றிய போது, வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன். நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது "கலவரம் எழாமல்" ஒரு பொதுக்கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடிந்திட முனைந்தால் போதும்-பெரியவெற்றி என்றே பெருமிதம் தோன்றும். புறப்படும் முன்னர், "தலைபோகும்- தாடிபோகும் - தடிபோகும் - உயிர்போகும்" என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திடவேண்டிய நிலை.

என விவரிக்கும் அண்ணா, தம் தொண்டின் விளைவுகளை,

"வருகிறாயா?" என்று என்னைக் கேட்கமாட்டார். வருவேன் என்பது அவருக்கு நன்கு தெரியுமாதலால் செல்வோம். பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில் உருட்டல், மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின், அடுத்த கூட்டத்திற்கு அவர் ஐயாவிற்காக "மாலை" வாங்கிக் கொண்டுதான் வருவார். அத்தகைய தெளிவுரை பெற்றுப் பெற்றுத் தமிழரில் பலர், பலப்பலர் திருந்தினர் என்பது மட்டுமல்ல. தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது".

## அறிவுப் புரட்சி

2700 ஆண்டுகளுக்கு முன்னர் உருவான பகுத்தறிவு இயக்கம் போன்றே சுயமரியாதை இயக்கமும் அறிவுப் புரட்சியை முன்னெடுத்துச் சென்றது. தன்னைச் சுதந்திரச் சிந்தனை சுதந்திர நினைப்புக் கொண்டவராகக் குறிப்பிடும் பெரியார், அத்தகைய சுதந்திர நினைப்பையும், சுதந்திரச் சிந்தனையையும் கொண்டவர்களாக மாறும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார். இந்த அணுகுமுறைதான் அறிவுக்கான தடைகளை உடைத்த விடுதலைப் போரின் அடையாளம். வள்ளுவர் சொன்ன,

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு**

என்ற அறிவு விடுதலையின் முழுமையான வரைவிலக்கியம். அறிவு விடுதலைக்குத் தடையாய் இருந்த அனைத்தையும் தகர்க்க முற்பட்டார். தகர்த்தெறிவதோடு நின்றுவிடாமல் சம உரிமையும் - சம உடைமையும் நிலவும் ஓர் ஒப்புரவுச் சமுகத்தையும் உருவாக்க முனைந்தார். இந்த அறிவுவழியினை முழுமையாக ஏற்றுக் கொண்டிருந்த அறிஞர் அணணா, சங்க இலக்கிய மாண்பினை - அதன் மெய்யியல் உள்ளடக்கத்தைப் - பெரியாரின் சுயமரியாதைக் கோட்பாடுகளுடன் இணைத்த பாங்கே மகத்தானதாக உள்ளது.

கௌதமபுத்தர் ஓர் உலகப் பேரரசனை உருவாக்க முனைந்தார். அதன் குறியீடுதான் அறவாழி எனும் தருமச்சக்கரம். அத்தருமச்சக்கரம் காட்டிய வழியில் சென்றதனால்தான் அசோகன் சக்கரவர்த்தியானார். இதனை விளக்குவது சக்கரவர்த்தி சூக்தம். புத்தர் காணவிரும்பிய அந்த உலகப்பேரரசன் எப்படிப்பட்டவன்? இக் கேள்விக்கு,

> உலகப் பேரரசனாகிய இச் சக்கரவர்த்தி, அறவாழி பயந்தோனாகிய புத்தரின் சமயச் சார்பற்ற சார்பாளன் ஆவான். சக்கரவர்த்தி ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ, நாட்டிற்கோ தலைவன் என்றால் புத்தர் இந்த உலகிற்கே ஆசிரியராவார். புத்தரின் தருமச்சக்கரம் பார்ப்பனர்களின் தருமத்தைப் போல உயர்ந்தவர்கட்கு மட்டுமே உரியதன்று; மாறாக எவ்வித வேறுபாடும் இன்றி உலகம் முழுமைக்கும் அமைதியையும் நல்லுறவையும் வளர்ப்பதாகும்.

என விடைதருவர் என்ரிச் சிம்மர். ஆனால், தந்தை பெரியாரோ, இனம், நாடு, மொழி எனும் எல்லைகளைக் கடந்த மனிதம் நிறைந்த

மனிதனை உருவாக்க முனைந்தார். அதனால் 'கடவுளை மற; மனிதனை நினை' எனக் கட்டளையிட்டார். அப்படி அவரால் உருவாக்கப்பட்ட மனிதன் எப்படி இருப்பான்? இருக்கவேண்டும்? இதனைப் பெரியார் நடத்திய "குடிஅரசு' இதழ் அட்டையில் இடம் பெற்ற கவிதை விளக்குகின்றது.

**அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி**
**அரும்பசி எவர்க்கும் ஆற்றி**
**மனத்துளே பேதா பேதம்**
**வஞ்சம் பொய்களவு சூது**
**சினத்தையும் தவிர்ப்பா யாகில்**
**செய்தவம் வேறொன் றுண்டோ**
**உனக்கிது உறுதி யான**
**உபதேசம் ஆகுந் தானே!**

என்பதாகும். ஆயினும், இவற்றையெல்லாம் தாண்டிய மனிதநேயம் மிக்க மனிதனை கட்டற்ற சிந்தனையாளனை, நல்லொழுக்கம் வாய்ந்த ஒரு மாமனிதனை உருவாக்க முனைந்தார் என்பதே உண்மை.

**அண்ணா**

பெரியார் அவர்களின் கொள்கைகளை ஏற்றதுடன் இல்லாமல், அவரின் கோட்பாடுகளுக்குக் கலை இலக்கிய வடிவம் வழங்கிய மிகச் சிறந்த படைப்பாளியாகவும் அறிஞர் அண்ணா திகழ்கின்றார். இதனை,

> அலங்க மலங்க விழித்து, உண்மை தெளியாத நிலையில் தந்தை பெரியாரை, வைதிகர் வசைமொழியின்படி வகுப்பு வாதியாக, புராணநிந்தகராக, கடவுள் எதிர்ப்பாளராக, நாத்திகராகக் கருதி அவரது சமத்துவக் கொள்கையை ஏற்கத் துணியாத நிலையினராகப் பெரும்பான்மை மக்கள் இருந்தனர். அவர்கள் பெரியாரின் கொள்கைகளின் நியாயத்தைப் புரிந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் நிகரற்றப் பணி ஆற்றியவர் அறிஞர் அண்ணா.

எனப் பேராசிரியர் க. அன்பழகன் ஆய்ந்துரைப்பதால் அறியலாம்.

இவ்வாறு தந்தை பெரியாரின் கொள்கைகளை ஏற்று மக்களிடம் பரப்பி அவற்றிற்கு இலக்கிய வடிவம் தந்த பேரறிஞர்

அண்ணா, தமிழ் மரபுகளை அடையாளம் கண்டு அவற்றின் மாண்புகளை உணர்ந்த, அதனைத் தமிழர்க்கு உணர்த்தியதில்தான் அவரின் வரலாற்றுப் பங்களிப்பு இருப்பதாக நாம் உறுதிசெய்யலாம்.

## ஆரியம் கண்டாய்; தமிழன் கண்டாய்

தமிழ்மரபின் வீச்சில் தன்னைப் புதுப்பித்துக் கொண்ட வைதிகம் தமிழுக்கே எதிராய் மாறியது. சமற்கிருதம் தேவபாடையானது. பார்ப்பனர்கள் பூசரர்கள் ஆயினர். தமிழோ நீசர்களின் மொழியானது. இம்மோதல் எப்போது முதன் முதலாக வடிவம் கொண்டது என்பது தனித்த ஆய்விற்குரியது. ஆயினும், சங்க இலக்கியங்களின் அடிப்படைக் கோட்பாடுகளில் வைதிக எதிர்ப்பு இழையோடி இருப்பதால் சங்க காலத்திலேயே இந்த மோதல் வந்துவிட்டது எனலாம். பரிவிராசகர் அமைப்பைச் சார்ந்த அறிஞர்களுள் இந்தியா முழுமையிலும் புகழ்பெற்று விளங்கிய நிறுவனத் தலைவர்கள் எழுவரில் நால்வர் தமிழ் நாட்டவர்களாகவும், சங்கப் புலவர்களாகவும் இருந்தவர்களாவர். அவர்கள்,

**பக்குடுக்கை நன்கணியார்**
**நரிவெரூஉத் தலையார்**
**அறப்பெயர் சாத்தனாகிய ஐயனார்**
**பூரணகாயபர்**

(இவரும் ஐயனார் மூவருள் ஒருவர்) ஆவர்.

புத்தரின் சமகாலத்தவர்களாகிய இவர்களின் கோட்பாடுகளின் மூலவடிவங்கள் தமிழில் மட்டும் உள்ளன. சங்க இலக்கியங்களில் "தமிழ்' எனும் சொல் வைதிக எதிர்ப்பு எனும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளது. நான்மறையாளர்களை விளித்து,

**தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலர்**
**கொள்ளாரிக் குன்று பயன்**

எனக் கூறும் பரிபாடல் வரி அதற்குச் சான்றாகும். நக்கீரர், "ஆரியம் நன்று தமிழ் தீது" எனக் கூறிய ஒருவனைச் சாவித்ததாக வருவதும், மொழிவழி வந்த இனப்பகை மோதலேயாகும்.

கடவுளின் படைப்பாகக் கருதப்பட்டச் சமற்கிருதத்திற்கு மொழி என்ற நிலையில் அதற்கு இணையானதாகவும், பண்பாட்டு நிலையில் வடமரபிற்கு எதிரானதாகவும், தமிழ் கருதப்பட்டது. இந்த நிலைதான் பின்னர் தமிழின் வீழ்ச்சிக்கும் காரணமானது.

படிப்படியாயத் தன்னிலை இழந்து நின்ற தமிழை - அதன் கோட்பாட்டு நிலையோடு மீட்டெடுத்தவராக அறிஞர் அண்ணா திகழ்கிறார்.

**மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கம்**
**பாவாணரின் தமிழ் மொழி ஆய்வு**

இவை தமிழன் தனித்தன்மையை - உயர்வை - சிறப்பை - நிலைநாட்டின. ஆனால் அறிஞர் அண்ணாவோ தமிழினத்தின் அடையாளக் குறியீடாக - அறிவு மரபின் கருவூலமாகத் தமிழையும் சங்க இலக்கியங்களையும் காணுகின்றார். இந்தத் திருப்பத்திற்குக் காரணமாக அமைந்தது சர். ஆர்.கே. சண்முகம் செட்டியாரின் ஒரு சொற்பொழிவு என்பது மிகவும் வியப்பாக உள்ளது. 1943 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் நிகழ்த்திய பேருரையே அத்திருப்பத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது. அப்பேச்சை செய்தி இதழ்களின் வாயிலாகவோ அல்லது வேறு வழிகளிலோ அறிந்த அறிஞர் அண்ணா அவர்கள் அவருக்குரிய புனைபெயர்களில் ஒன்றான பரதன் எனும் பெயரில் வருணாசிரமம் எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதன் வாயிலாகத் தமிழினத்திற்குத் தலைமையேற்று வழிநடத்தி வருமாறு ஆர்.கே.சண்முகம் செட்டியாருக்கு அழைப்பு விடுக்கின்றார். அதற்கான காரணத்தை,

> அன்பர்கட்கு ஒரு வார்த்தை; வர்ணாஸ்ரமம் என்ற மிகப்பெரிய கேட்டினைக் களைந்தாக வேண்டிய பெரிய, பாரமான, ஆபத்தளிக்கக் கூடிய பொறுப்பு நமக்கு இன்று இருக்கிறது. வர்ணாஸ்ரமத்தின் கோர விளைவுகளை நாம் நன்கு புரிந்துகொள்ளும்படி நமது தலைவர் பெரியார் நமக்குப் பேருதவி செய்துள்ளார். அவருடன் துணைநின்று, வர்ணாஸ்மரத்தைத் தாக்கித் தகர்க்க வீரர்கள் தேவை. சர். சண்முகத்தை இத்தகு வீரப்படைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லுமாறு நான்- உங்கள் சார்பில் - அனுப்பும் அழைப்புத்தான் இது,

எனவும் விளக்குவார். அதற்கான அழைப்புத்தான்-வர்ணாஸ்ரமம் எனும் கட்டுரை. மதுரை மருதன் இளநாகனாரின் அகப்பாடல் ஒன்று, வினைமுற்றி மீளும் தலைவனின் கூற்றாய் அமைந்தது. அதன் கருத்து, தன் ஆருயிர் மனைவி தனக்காகக்

காத்துக்கொண்டிருப்பாள்; நான் எப்பொழுது வருவேன் என்ற எதிர்பார்ப்பில் தான் வளர்க்கும் செல்லக்கிளியைத் தன் முன்கையில் ஏந்தி, வீட்டாருக்குத் தெரியாமல் நம் தலைவர் எப்பொழுது வருவார் என்று எனக்கு மட்டும் கேட்குமாறு மெதுவாகச் சொல் என அந்தக் கிளியிடம் கேட்கும் நாணம் நிறைந்த அவளைக் கூடி மகிழவேண்டும் எனவே தேரை விரைவாகச் செலுத்து என்பதாகும்.

இம் மேற்கோள் வழியாக வினைமுற்றித் திரும்பிவரும் தலைவனாக சர். சண்முகம் அவர்களும், காத்துக் கொண்டிருக்கும் தலைவியாகத் தமிழக மக்களும் உருவகப்படுத்தப்பட்டுள்ளனர். அப்படி அண்ணா அவர்களின் கருத்தை ஈர்க்கும் வகையில் அப்படி என்னதான் அவர் பேசினார்? அதுவும் பட்டமளிப்பு விழாவில் அதன் ஒரு பகுதி,

> இந்தியாவிலே வர்ணாசிரமம் ஏற்பட்டதனால், ஆளும்சாதி தனது அதிகாரத்தை அனுபவித்து வருகிறது. இந்த வகுப்பு தனது ஏகபோக உரிமையையும் பேராசையையும் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகக் கைவிடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு துரிதமாக இந்தியாவுக்குச் சுதந்திரமும் சனநாயகமும் ஏற்படும்.

என்பதாகும்.

கொச்சி அரசின் திவானாக இருந்தவர், இந்தியாவின் முதல் நிதியமைச்சராக இருந்தவர். பல்வேறு பொறுப்புகளில் முத்திரை பதித்தவர் சண்முகம் செட்டியார். அத்தகைய பெரியார் தாம் நிகழ்த்திய பட்டமளிப்பு விழாவில், இந்தியச் சமூகத்தில் படர்ந்திருந்த நோயை அடையாளங்காட்டி அதனை அகற்ற வேண்டிய தேவையை வற்புறுத்தியது அண்ணா அவர்களை வியக்கவைக்கிறது. இந்தச் சொற்பொழிவு நிகழ்த்தி 25 ஆண்டுகளுக்குப் பின்னர், அதே மன்றத்தில் அது போன்றதொரு பட்டமளிப்பு விழாவில் தமிழக முதல்வராகக் கலந்து கொண்ட அண்ணா அவர்கள் தம் சொற்பொழிவு முழுக்கவும் சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியாரின் பட்டமளிப்பு விழாப் பேருரையையே முன்மாதிரியாகக் கொள்கிறார். அதனையே பட்டம்பெறும் இளைஞர்களுக்கான வாழ்வியல் நெறியாகவும் வழங்குகின்றார்.

பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றேன்: ஆனால் தமிழ் இலக்கியங்களைப் படித்தேனில்லை. அவற்றை அடியோடுஅலட்சியப் படுத்தி விட்டேன்- ஒதுக்கிவிட்டேன் ! உண்மையில் வெறுத்தும் வந்தேன். ஆங்கிலமொழி இலக்கியங்களைக் குறிப்பிடும் அளவுக்குச் சீராகக் கற்றுத் தெளிந்தேன். ஆங்கில வரலாற்று அறிவிலும் - வல்லவன் என்று சொல்லிக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல, பழங்கால ஆங்கில மொழியான ஆங்கிலோ சாக்சன் மொழியோடு கிழக்குச் செர்மனியின் பழங்குடிகளின் மொழியான கோதிக் மொழியையும் ஓரளவுக்குக் கற்றுக் கொண்டேன். கிறித்துவர் வேதமான விவிலிய நூலைப் படித்தேன் - அதுவும் கோதிக் மொழியில். ஆனால் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைப் படித்ததே இல்லை. சாசரின் இலக்கியங்களைப் படித்துப் போற்றினேன்; ஆனால் இளங்கோவடிகள் என்பது ஒருவரது பெயர் என்பதைத் தவிர அவரைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாமல் வாழ்ந்தேன். கல்லூரி நாட்களுக்குப் பிறகும் படிப்பதில் பேரார்வமும் பேரூக்கமும் செலுத்தி வந்தேன். நூல்நிலையம் ஒன்றையும் எனக்கெனவே அமைத்துக் கொண்டேன்! ஆனால் எனது நூல் நிலையத்தில் எனக்கென வாழ்ந்திட்ட தனியொரு உலகில் வாழ்க்கை என்பது என்ன என்பது பற்றிய கவலையும் பொறுப்புணர்ச்சியும் விழிப்புணர்ச்சியும் அறவே அற்றநிலையில் - எனது இளமைப்பருவம் கழிந்தது. ஆனாலும் எனது ஆங்கில அறிவுப்புலமை குறித்துமட்டும் மெத்தவும் இறுமாந்து மகிழ்ந்து கிடந்தேன்.

## ஆண்மைத் தமிழனானேன்

இளமை கழிந்தது - பொறுப்பற்ற தன்மை அகன்றது! முழு வளர்ச்சியுற்ற ஆண்மை விழிப்புற்றது; பொறுப்பு மேலிட்டது - மனிதனானேன். வாழ்வின் பொறுப்புச் சுமைகளை - நடைமுறைச் சிக்கல்களை உணரத் தலைப்பட்டேன். உலகம் தெரிந்தது - புரிந்தது எனக்கு ......

> உலகப் பேரிலக்கியங்கள் என்றும் அழியாக் கருத்துக் கருவூலங்கள் எந்த நாட்டுமொழி நூல்களுடனும் ஒப்பிடத்தக்க - தன்னிகரற்ற - தன்னேரிலாப் புகழ்சான்ற ஏடுகளாக நமது இலக்கியப் படைப்புகள் அமைந்துள்ளது கண்டு வகையடைந்தேன்!
>
> நம்மகத்தே - நம் தமிழகத்தே உள்ள கருத்துக் கருவூளக் களஞ்சியத்தை அறிவுப் புதையல் தன்னை ஏறெடுத்தும் பாராது இருந்தோமே! இத்துணை நாளாக அக்கறையற்று - அலட்சியப்படுத்தி விட்டோமே! வெறுத்து ஒதுக்கித் தள்ளி விட்டோமே என்றெல்லாம் ஏங்குகின்றேன்; மெத்தவும் மனம் வெதும்புகின்றேன்.

என சர். ஆர். கே. சண்முகத்தின் சொற்பொழிவை மேற்கோள்காட்டி விளக்குவார்.

சங்க இலக்கியம் முதலான தமிழ் இலக்கியங்களைக் கற்று "ஆண்மைத் தமிழனானேன்' எனவும், வருணாஸ்மரத்தை ஒழித்தால்தான் இந்தியாவில் சுதந்திரமும் சனநாயகமும் மலரும் எனவும் முழங்கிய சர். ஆர்.கே. சண்முகனாரின் முழக்கமே அண்ணா அவர்களிடம் பெரிய தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. அதனால்தான் தம் பேச்சில்

> Ours is not a case of starting from scratch - had that been the case the only thing needed would have been the intensity of effort to be put for the ours is a case of erosion of the mind-we are not in search of fields a but have to engage in the task of fertilizing it, irrigating it. We are not in search of ideals, but engaged in the more intricate task of classifying codifying and verifying layers of ideals. We are not wanting in culture but have to cleanse it Aroom the cob-web of time and de-adultrate it

என விளக்குகின்றார்.

அடித்தளம் இல்லாமலா நாம் இருக்கின்றோம்! இல்லை. நமக்கு ஏற்பட்ட சிக்கல்கள் எல்லாம் நமது சிந்தனையில் ஏற்பட்ட தேக்க நிலைதான். கடலரிப்பைப் போல நமது எண்ணங்களிலும் அத்தகைய அரிப்பு ஏற்பட்டுவிட்டது. வாழ்க்கை நெறியெனக்

கடைப்பிடித்திட வேண்டிய நல்ல பண்பாடு நம்மிடம் உள்ளது, தேவையென்று தேடிடும் நிலை இல்லை! காலத்தின் கோளாறினால் நமது பண்பாட்டின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கிட வேண்டும். தும்பு தூசு தட்டிப் பொலிவினை வெளிப்படுத்திட வேண்டும்.

"சுருக்கக் கூறுமிடத்து நம்மை நாமே உணர்ந்தாக வேண்டும்! நாம் யார்? நமது பாரம்பரியம் என்ன? நமது கலை கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை, வாழும் நெறி எத்தன்மையது? என்று மறுபரிசீலனை செய்து தீர வேண்டிய நேரமிது என அறிவுரை கூறுகின்றார். அதற்கான விடையாகத்தான், சங்க இலக்கியங்களை - திருக்குறளை - தொல்காப்பியத்தை அடையாளம் காட்டுகிறார்.

இந்தப் பெருமிதம் நிறைந்த பின்புலத்தைப் பெற்றிருப்பதால்தான், பாராளுமன்றத்தில் பேசிய போது அண்ணா, நான் திராவிட இனத்தவன் என்பதிலே பெருமிதம் கொள்கிறேன்' எனப் பூரித்தார். சில மாதங்களுக்கு முன்னர் "இந்தியன் எக்ஸ்பிரசு நாளேட்டில் திராவிட இயக்கத்தவர்களே வைதிக எதிர்ப்பில் தீவிரம் காட்டத் தவறினாலும் சங்க இலக்கியங்கள் இருக்கும்வரை வைதிக எதிர்ப்பு வீரியம் குறையாது எனும் பொருளில் ஒரு கட்டுரை வந்தது. சங்க இலக்கிய உள்ளடக்கத்தை முழுதாக உணர்ந்த உணர்வின் அடையாளமே அக்கட்டுரை. இந்த உண்மையை அண்ணா அவர்கள் உணர்ந்திருந்த காரணத்தால்தான் சங்க இலக்கிய மாண்புகளை - திருக்குறளின் சிறப்பை-தொல்காப்பியத்தின் உணர்வைப் பறை சாற்றினார் அதன் அடையாளமாக உருவானவை திருக்குறள் ஆய்வு மையங்களும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் ஆகும்.

**வாய்மையும் சத்தியமும்**

இந்தியச் சிந்தனை மரபில் மனிதநேயக் கோட்பாடு என்பது கடவுளுக்கு - வேதங்களுக்கு எதிரானதாக முன்வைக்கப்படுகிறது. இந்த மனித நேயத்திற்கான தலையாயவாயில் "வாய்மை' என்பதாகும். வைதிக நெறிக்கானஅடையாளம் "சத்தியம்'. அஃதாவது உண்மை - பட்டாங்கமான உண்மை. காந்தியடிகள் போற்றிய சத்தியம். ஒருவனுக்குச் சத்தியமாகத் தோன்றுவது மற்றவனுக்கு அப்படித் தோன்ற வேண்டிய கட்டாயமில்லை. அதனால்தான் பெரியார் சொன்னார் "ஒருவனுக்கு உணவாக இருப்பது மற்றவனுக்கு

நஞ்சாக இருக்குமே என்று. ஆங்கிலத்தில் இதனை Once man's meat is another man's poison எனக் குறிப்பார்கள். காந்தியடிகளின் சத்திய சோதனைகளுக்கு முன்னுதாரணமாக இருப்பது அரிச்சந்திரனின் வாழ்க்கை. அரிச்சந்திரனுக்கும் விசுவாமித்திரனுக்கும் நடந்த போராட்டம். நாம் அறிந்த போராட்டம், "சத்தியத்திற்காக அரிச்சந்திரன் நடத்தியதாகச்" சொல்லப்படுவது, அரிச்சந்திரனை எப்படியாவது பொய்சொல்ல வைத்திட வேண்டும் என விசுவாமித்திரர் தொடர்ந்து முயன்றதாக. ஆனாலும் உண்மை அதற்கு மாறானது.

> அரிச்சந்திரன் ஓர் அரசன், அவனுக்குத் திருமணமாகி நீண்டநாள் ஆகியும் குழந்தை இல்லை. அரிச்சந்திரனின் அரண்மனைப் புரோகிதனாக இருந்த வசிட்டன், "யாரேனும் ஒரு பெற்றோர் தம் ஆண் குழந்தையை நரபலி கொடுக்க முன்வந்தால், அரிச்சந்திரனுக்குக் குழந்தை பிறக்கும்" என்றான். அதன்படி நரபலிக்கான ஏற்பாடுகள் தொடங்கின. ஆனால் எந்தப் பெற்றோரும் தம் குழந்தையைக் கொடுக்க முன் வரவில்லை. இந்த நிலையில் செல்வ செழிப்பில் இருந்த ஒரு குடும்பத்தில் திடீரென வறுமை ஏற்பட்டுவிட்டது. அந்தக் குடும்பத்தில் மூன்று ஆண் குழந்தைகள். அந்தப் பெற்றோரை அரண்மனை அதிகாரிகள் அணுகி ஒரு குழந்தையை நரபலிக்குக் கொடுக்குமாறு வற்புறுத்துகின்றனர். மூத்த மகனை இழக்கத் தாய் இசையவில்லை. கடைசிமகனை இழக்கத் தந்தை முன்வரவில்லை. இச்சூழலில் நடு மகனை அளிக்க ஒருவாறு இசைந்தனர். அவன் பெயர் சுனச்சேபன். சுனச்சேபனை நரபலி கொடுக்க அவனை யாகத் தூணில் கட்டி வைத்தனர். பலி கொடுக்கும் நேரம் வரும்போது எதிர்பாரா வகையில் அங்கே விசுவாமித்திரர் வருகிறார். உண்மையை அறிந்து நரபலியில் இருந்த சுனச்சேபனைக் காப்பாற்றுகிறார் விசுவாமித்திரர்.

இந் நிகழ்ச்சிதான் விசுவாமித்திரர் - அரிச்சந்திரன் மோதலாகும். இந்த நிகழ்வே சத்தியத்திற்கு எதிரான மனித நேயம் தொடுத்த முதல் போராகும்.

தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் அண்ணா செய்த நுட்பமான செயல்களுள் ஒன்று தமிழக அரசுச் சின்னத்தில் பொறிக்கப்பட்டிருந்ததும் சமற்கிருதத்தில் எழுதப் பட்டிருந்ததுமான" "சத்தியமேவ ஜெயதே' என்பதை "வாய்மையே வெல்லும்' என மாற்றியதாகும். இம் மாற்றம் சட்டமன்றத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. பேராயக்கட்சி உறுப்பினர்கள் இம் மாற்றம் குறித்துக் கடும் எதிர்ப்பினைக் காட்டினார்கள்.

> *எந்த அதிகாரத்தின் கீழ் எந்தவிதியின் வீழ் அரசு சின்னத்திலுள்ள சமஸ்கிருதத்திலுள்ள "சத்திய மேவ ஜெயதே' என்னும் சமஸ்கிருதச் சொல்லை வாய்மையே வெல்லும் என மாற்றினீர்கள்? சட்டமன்றம் கலந்து யோசிக்கப்பட்டதா? என வினவியதோடு அமையாமல்,*
>
> *"சத்திய மேவ ஜெயதே' என்ற வார்த்தைக்கு நேரடியான பொருள் "வாய்மையே வெல்லும்" அல்ல வென்றும், அதற்குப் பதில் "உண்மையே வெல்லும்" என்றால் தான் நேரடியான பொருள் பிரதிபலிக்கும் என்றும் கூறப்படுகிறது. வாய்மை என்பது மேலே இருந்து வருவது. உண்மை என்பது உள்ளே இருந்து வருகின்ற வார்த்தை என்று சொல்லப்படுவது உண்மையா? அதுபற்றி ஏன் இந்தச் சட்டசபையில் கேட்காமல், யோசிக்காமல் நீங்களே முடிவுக்கு வந்திருக்கின்றீர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?*

என்றெல்லாம் கே. விநாயகம் வினவினார். இவ் விவாதத்திற்கு முற்றுப் புள்ளிவைக்கும் வகையில் அவை முன்னவரும் கல்வி அமைச்சருமாக இருந்த நாவலர் இரா.நெடுஞ்செழியன் நல்லதொரு விளக்கத்தை அளித்தார். அவர் விளக்கம்,

> *அவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூற விரும்புகின்றேன். உண்மை என்பதற்கும் வாய்மை என்பதற்கும் வேறுபாடு உண்டு. உண்மை என்பது உள்ளபடியே ஒன்று தவறாக இருந்தாலும், கேடாக இருந்தாலும், நன்மையாக இருந்தாலும் இருக்கின்ற ஒன்றை எடுத்துச் சொல்லுகின்ற ஒன்று உண்மை".*

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்**

என்று வள்ளுவர் அதற்கு இலக்கணம் வகுத்துச் சென்றிருக்கின்றார். "வாய்மை" என்பது மதிப்பளிக்கக் கூடிய ஒன்று "உண்மை" என்பது இருப்பது உள்ளவாறே எடுத்துச் சொல்லல். எனவே இரண்டு சொற்களில் "வாய்மை" என்பதுதான் பொருந்தி வரக்கூடிய சொல் என்ற கருத்தில் மொழிபெயர்க்கப்பட்டதே தவிர வேறு வகையில் அமைக்கப்பட்டதல்ல.

என்பதாகும்.

வாய்மை மனிதநேயம் சார்ந்தது என்பது கோட்பாட்டு நிலையாகும். "சத்தியமேவ ஜெயதே' என்பதைத் தமிழாக்கம் செய்ததாகக் கூறினாலும், அதனூடாக இருப்பது சமற்கிருத மேலாண்மையை எதிர்த்த எதிர்ப்பின் அடையாளம் என்பதில் ஐயமில்லை.

அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை நீக்கல், சுயமரியாதைத் திருமணச் சட்டம், கலப்பு மணம் புரிந்தோர்க்குத் தங்கப் பதக்கம் வழங்கல் ஆகிய யாவும் அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வழி வந்தவை. தாம் சார்ந்த மெய்யியலின் செயல்பாட்டு வடிவங்கள். வட மரபிற்கு மாறான தென்தமிழ் மரபினை உலகறியச் செய்ததன் வெளிப்பாடுகள்.

**அந்த வகையில் எந்த வைதிகம் தமிழ் அறிவு மரபைத் தலைப்படுத்தியதோ**

**எந்த வைதிகம், தமிழை இழிமொழியாக ஒதுக்கியதோ**

**எந்த வைதிகம் தமிழிசையை ஒதுக்கிப் புறந்தள்ளியதோ**

**எந்த வைதிகம் சங்க இலக்கியங்களைத் தடைசெய்ததோ**

**எந்த வைதிகம் வருண-சாதி முறைகளைப் புகுத்தியதோ**

**எந்த வைதிகம் மனித விழுமியங்களைத் தீய்த்ததோ**

அந்த வைதிகத்தைத் தகர்ப்பதே அண்ணாவின் குறிக்கோளாகவும் மெய்யியல் கோட்பாடாகவும் அமைந்தன.

**வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்**

**உள்ளுவரோ மனுவாதி**
**ஒருகுலத்துக் கொருநீதி**

எனும் சுந்தரானாரின் பாடலைக் காட்டி

**இந்த ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்னும் முறையினைக் காலம் கூடத்தகர்க்காதபடி,**

**அவ்வப்போது உரம் ஊட்டி வருவனவே - புராண, இதிகாசங்கள், அவற்றை நம்பியதாலேயே நாடு நலிவுற்றது.**

**நாட்டின் நலிவு நீங்கி மக்கள் நல் வாழ்வு பெறுவதற்காக வள்ளுவர் குறளை, மறுவற நன்கு உணர்ந்தார் ஆறல் வேண்டும் மக்கள்.**

என அறிவுறுத்துகின்றார். வைதிக இருட்காட்டைக் குலைக்க 2700 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டத் திசையாசிரியர்களின் அமைப்பு கி.பி. இரண்டாயிரத்தில் தந்தை பெரியாரால் மீண்டும் சுயமரியாதை இயக்கமாக வடிவம் கொண்டது. அதனைத் தமிழரின் மரபோடு இணைத்து மாபெரும் எழுச்சியைத் தந்தவர் அண்ணா, கலை இலக்கிய வடிவங்கள் இனத்தை மொழியைச் சீர் குலைத்த போது, அத்தகைய கலை வடிவங்களை மாற்றி அகற்றிப் புதிய எழுச்சி மிக்கக் கலைப்படைப்புக்களை வழங்கினார்.

தந்தை பெரியாரின் கோட்பாடுகளுக்குக் கலைவடிவம் தந்தார். இழந்த புகழ் மீட்க,

**கயலெழுதி வில்லெழுதி -**
**கடுஞ்சினத்துப் புலியெழுதி,**
**புயலெழுதும் இமயத்துப்**
**பொற்கோட்டில் தமிழ்வீரச்**
**செயலெழுதி வையத்தின்**
**திசையெல்லாம் மானமெனும்**
**உயிலெழுதிச் சென்றவர்கள்**
**உன்முன்னோர் அறிவாயா?**
**அறமெழுதி காதலெனும்**
**அகமெழுதி நாள்தோறும்**
**புறமெழுதி களந்தோறும்**
**புகழெழுதி விழுப்புண்ணின்**
**திறமெழுதி நடுகல்லாய்ச்**
**சீரெழுதி வாளெடுத்து**

மறமெழுதி வாழ்ந்தவரின்
வழித்தோன்றல் நீதானா ?

பண்டைநலம் அறிவாயா? உனது முன்னோர்
படைக்கலத்தால் கடல்கலக்கி ஞால முற்றும்
கொண்டபுகழ் தமையெல்லாம் அடகா வைத்தாய் ?
கூறுகெட்டுப் போனாயோ ? அன்றோர் நாளில்
அண்டவியல் அறிந்தவனின் வழியா வந்தாய் ?
அணுவியலைப் பகர்ந்தவனின் தோன்ற லாநீ ?
விண்டுரைக்க முடியாத கலையில் வாழ்வில்
வியப்பளிக்கச் செய்ததெலாம் மறந்தா போனாய்?

என நினைவூட்டியவரே அறிஞர் அண்ணா. அவர் புகழ் காப்போம். அவர் காட்டிய வழியில் செல்வோம்.

# அண்ணா நாடகங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

வழக்குரைஞர் அ. அருள்மொழி

பகுத்தறிவு என்ற சொல் நாம் வாழ்க்கையில் அதிகமாக பயன்படுத்துகின்ற சொல்லாடல். பகுத்தறிவு என்பதற்கு நாம் பல்வேறு விளக்கங்களை வைத்துள்ளோம். சிலரின் பகுத்தறிவு கடவுள் மறுப்புடன் நின்றுவிடுகின்றது. பின் சாதிப் பார்ப்பதில் பகுத்தறிவு அவ்வளவு செயல்படுவதில்லை. பலரின் பகுத்தறிவு இன்று வாஸ்து சாஸ்திரம் வரைக்கும் அனுமதிக்கின்றது. சிலரிடம் அதிர்ஷ்ட மோதிரம் அணிந்துக்கொள்ளும்வரை பகுத்தறிவு செயல்படுகின்றது. ஆனால், எல்லோருக்கும் ஏதோ ஒன்றில் மட்டும் உறுதியான நம்பிக்கை உண்டு. அந்த அளவிற்கு இன்று வாஸ்து சாத்திரம், நியூமராலஜியும், அதிர்ஷ்ட மோதிரம், சாதி என்பனவற்றில் நம்பிக்கை வளர்ந்துள்ளன.

இந்நிலையில் அண்ணாவின் நாடகங்களில் பகுத்தறிவைப் பற்றிப் பார்ப்பதற்கு தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவு என்பதற்கு தரும் விளக்கத்தை அறிந்துக்கொள்வது என்பது அவசியமாகின்றது.

தந்தை பெரியார் குறிப்பிடுகின்றார், 'மாட்டுக்கு மனிதனுக்கு எல்லாம் ஒன்றுதான் அவரவர்க்கு உரிய உணவைதான் சாப்பிடுகிறார்கள். நீங்கள் மாற்றிக் கொடுத்தால் நாயும் சாப்பிடாது. அதற்கு வேண்டிய உணவு என ஒரு தேர்வு இருக்கிறது. அவைகளுக்குள்ளே ஒரு வாழ்க்கை இருக்கிறது. அந்த வாழ்க்கை முறையில் ஒரு ஒழுங்கு இருக்கிறது. மனித வாழ்க்கை முறை வேறு, விலங்கு வாழ்க்கை முறை என்பது வேறு என்பதில் தான் முரண்பாடு இருக்கிறதே தவிர அவைகளுக்கு என்று வாழ்க்கை முறை இல்லை, உணவில்லை என்று நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் அந்த விலங்கிற்கும் மனிதனுக்கும் என்ன வேறுபாடு என்றால், நல்ல ஒரு பொலிகாளையை மண்ணில் சாய்த்துக் கட்டிப் போட்டு அதை காய அடிப்பதற்காக அதன் கொட்டைகளை ஒரு கல்லில் வைத்து

அதன் நீர் எல்லாம் கண்ணீராகிப் போனால் கூட. அந்த மாடு வலியால் துடித்துக் கதறும். அப்படித் துடித்துக் கதறினால் கூட அய்யோ! இப்படிச் செய்வதால் நமக்கு குழந்தைப் பிறக்காமல் போய்விடுமே, நமக்கு குழந்தைப் பிறக்காமல் போய் விட்டால் நம்மை மலட்டு மாடு, என்று பேசுவார்களே என்கின்ற அவமான உணர்ச்சியால் அது துன்புறாது. மாடு உடலின் வலி என்பதற்காக தான் துன்புறுமே தவிர தன்னை மலடு என்பார்களே என்பதான மான உணர்ச்சியால் அது துன்புறாது என்கின்றார்.

பகுத்தறிவு என்பது அறிவியலைப் புரிந்துக் கொள்வது, கடவுள் நம்பிக்கையை மையமாக வைத்து பகுத்தறிவுக்கு ஒவ்வாத அனைத்தையும் மறுப்பது என்பதாகும். கால மாற்றத்திற்கு ஏற்ப தனது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொண்டு கால மாற்றத்தின் நிகழ்வுகளை ஏற்றுக்கொண்டு வாழலாம். அதற்குத் தடையாக உள்ள தடைகளைத் தகர்த்து முன்னேறுவது என்பதுதான் பகுத்தறிவு ஆகும்.

இந்தியாவைப் பொருத்த அளவில் இங்குக் காணக் கூடிய சாதி ஒழிப்பானது, பெண் அடிமைத்தனத்தை ஒழிப்பது; பெண் உரிமைக் காகக் குரல் கொடுப்பது ஆணும் பெண்ணும் சமம் என்று நிறுவுவது என்பதாகப் பகுத்தறிவுச் சிந்தனைகள் விளக்கப்படுகின்றன. மேற் சொன்ன பகுத்தறிவுக் கருத்துகள் எவ்வாறு அண்ணா அவர்களின் நாடகக் காட்சிகளில் வெளிப்படுகின்றன. என்பதை சில நாடகக் காட்சிகள் கொண்டு விளக்க முனைகின்றேன்.

அண்ணாவின் நாடகங்களைப் புரிந்துக்கொள்வதற்கு அவரின் நாடக ஆற்றலைப் பற்றித் தெரிந்துக் கொள்ளவேண்டும். அப்படித் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுபவை இரண்டு நாடகங்கள். ஒன்று: "ரங்கோன் ராதா", மற்றொன்று "அந்திக் கலம்பகம்". இந்நாடகங்களைப் படிக்கின்றபோது நாம் அண்ணாவின் நாடக உத்திகள் எந்த அளவிற்கு நுட்பமானக, ஆழமாக அமைந்திருக்கின்றன என்பதை அறிந்துக் கொள்ள முடிகின்றது.

"ரங்கோன் ராதா" என்ற நாடகத்தின் தொடக்கம் பின்-நவீனத்துவப் பாணியில் அமைந்திருக்கிறது. ராதாவை பார்த்து நீங்கள் யார் என்று ஒரு இளைஞன் கேட்கின்றான். "நானா? ரங்கம்மாள் நான் எரிந்து விட்டேன், இறந்துவிட்டேன் நான் இறந்தக் காட்சியை நானே பார்த்தேன். என் பிணம் எரிக்கப்

பட்டது. அந்த ஊர்வலத்தில் நானே நடந்துச் சென்றேன்.... இப்படியாக அது தொடர்கின்றது. பின் நவீனத்துவம் பேசுபவர் சொற்சிலம்பத்தில் நான் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால், அண்ணாவின் நாடகங்கள் அதையும் கொண்டு உள்ளதைக் காணமுடியும்.

இவ்வாறு ஒரு பெண் தான் இறந்ததாகக் கூறுவதாக நாடகம் தொடங்கி பின்னோக்கிச் சென்று, அந்தப் பெண் தன் கணவனால் துன்பப்பட்டு, அதன் உச்சக்கட்டமாக அவள் வீட்டில் ஒரு பெண் கொலையாவதும், அக்கொலையில் இருந்து தன்னையும் தன் கணவனையும் காப்பதற்காக அந்தப் பெண் அதாவது "ரங்கம்மாள்" மொட்டை அடித்துக் கொண்டு காவி உடுத்திக் கொண்டு ஒரு தடியுடன் வீட்டைவிட்டுக் கிளம்புகிறாள். கொல்லப்பட்ட பெண்ணை ரங்கம்மாளின் பிணம் என்று சொல்லுங்கள் என்கிறாள். ரங்கம்மாள் என்றால் அவளைப் பார்க்க விடுவார்கள். எனவே, அவள் அம்மை வந்து இறந்துவிட்டாள் என்று சொல்லி முகத்தை மூடிவிடுங்கள் என்கிறாள். அவ்வாறே கொலையுண்ட பெண்ணின் உடல் ரங்கம்மாள் என்பதாகச் சொல்லி சவ அடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அந்த ஊர்வலத்தில் ரங்கம்மாள் காவி உடை உடுத்திக்கொண்டு கலந்துக் கொள்கின்றாள். கூட்டத்திலிருப்பவர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

> என்ன இருந்தாலும் புண்ணியவதி, வெள்ளிக் கிழமை அதுவும் பூவும் பொட்டுமாகப் போய்ச் சேர்ந்து விட்டாள்.

என்கிறார்கள். அதனை ரங்கம்மாள் கேட்கிறாள்; பின் சவம் எரிக்கப்படுகின்றது. ரங்கம்மாள் அங்கிருந்து பர்மா செல்கிறாள். அங்கிருந்து ரங்கூன் வந்து அங்கு ஒரு தொழுநோயாளியை திருமணம் செய்துகொள்கின்றாள். அந்த தொழுநோயாளி அவளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தி விடுகின்றான் என்றவாறு அண்ணா நாடகத்தைப் படைக்கின்றார். விபச்சாரம் என்றால் அந்த தொழு நோயாளியுடன் பழகநேர்ந்ததைத் தான் அவ்வாறு ரங்கம்மாள் பேசுகின்றாள் என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால், அவள் உண்மையாகவே விபச்சாரத்தில் ஈடுபட்டாள் என்பதாக அந்த பாத்திரம் கூறுவதாக அமைகின்றது.

இந்தக் கதையின் முக்கிய அம்சம் என்னவென்றால் கதாநாயகியான ரங்கம்மாள் விபச்சாரத்தில் ஈடுபட்டாள் என்பதாகும். இதுபோன்ற நிகழ்வுகளைக் கொண்டு நாடகம்

படைப்பது தமிழ்ச் சமூகத்தில் புதிதாகும். ஆனால், இந்த நாடகக் காட்சி திரைப்படமாக எடுக்கும்போது நீக்கப்பட்டு எடுக்கப்பட்டது. இதுபோன்ற காட்சிகள் பட வெற்றியைப் பாதிக்கும் என்பதால் அவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் அண்ணாவின் அறிவின் வீச்சு இயல்பாக நாடகத்தில் வெளிப்படும்.

மேலும், ரங்கோன் ராதா நாடகத்தில் ராதா தன் அண்ணனுக்கு கடிதம் எழுதுகின்றாள். தான் நாடகத்தில் நடிக்கப் போவதாகவும், தனக்கு வேண்டிய பொருட்களை வாங்கித் தரும்படி பட்டியல் இட்டும் எழுதியிருப்பாள்.

இத்தனைப் பொருட்கள் உனக்கு எப்படித் தெரியும் என்று நீ கேட்கலாம். 'நான் கல்லூரியில் படிக்கிற காலத்தில் கெட்ட பேர் வாங்கினவளாக்கும்' என்பதாக எழுதுகிறாள். இத்தனைச் செய்திகளையும் அந்த அண்ணன் தன் நண்பனிடம் சொல்லித் தன் தங்கையின் மறுமணத்திற்கு ஏற்பாடு செய்கின்றான். இவ்வாறு அண்ணா தனது நாடகத்தின் வாயிலாக விதவை மணத்தை ஆதரித்தவர்.

"காதல் ஜோதி" என்று ஓர் நாடகம், அதில் "பொன்னன்" என்ற ரவுடி "பொன்னி' என்ற விதவைப் பெண்ணுடன் பழகி அந்த பெண்ணை ஏமாற்றி விடுகின்றான். அதன்பின் பொன்னன் அப்பெண்ணை மணம் செய்ய மறுக்கிறான். அதனை "பக்கிரி" என்பவன் பொன்னனிடம் கேட்கின்றான். அதற்கு "பக்கிரி நீ பேசாம பொன்னியை கல்யாணம் செய்துகொள்'' என்று பொன்னன் சொல்கின்றான்.

'பொன்னியையா! அவ தாலி அறுத்தவளாச்சே!' என்று பக்கிரி கேட்கிறான். இருக்கட்டுமே! மறுதாலிக் கட்டினா கழுத்து மாட்டேன் என்கிறதா! என்கின்றான் பொன்னன். மேலும் பொன்னன் சொல்கிறான். "ஊர்ல இழிவாதானே பேசுவாங்க. அறுத்துவுட்டவளுக்கு கல்யாணம் என்று".

அப்படியாக ஊரில் பேசுவதுபோல அண்ணாப் பேச வைக்கிறார். அதற்கு அந்த பக்கிரி, "பொன்னா தாலி அறுத்தவ! தப்பு வழியில நடந்து சோரம் போனவ என்று கேவலமா பேரெடுக்கிறதுதான் தாங்க முடியாத அவமானம். சகிக்க முடியாத வேதனை. மறு கல்யாணம் தவறானதும் அல்ல. கேவலமானதும் அல்ல. விதவா விவாக பாட்டு நான் கூட மேடையில் நிறைய பாடியிருக்கிறேன். "பக்கிரி மேடையில் நடிக்கக்

கூடியவர் - ஒவ்வொரு தடவை பாடுறபோதும் ஜனங்க அது சரி, அது ஞாயம் சொல்லி சந்தோஷப்படரதும் பார்த்திருக்கிற, மறுமணம் செய்யறதுதான் அறிவுள்ள செயல் என்று இப்போது மேதாவிங்க எல்லாம் பேசறாங்க, எழுதுறாங்க பல இடங்களில் நடக்கிறது. இதை ஏன் நீ தப்புன்னு சொல்ற? அந்தப் பெண்ணை கெடுத்தியே அப்ப உனக்குத் தப்புனு தோணலையா? அவளை கல்யாணம் பண்ணிக்கிறப்ப ஜாதி போயிடும் என்று கவலைப்படுறயே, இது நியாயமா? நீ காப்பாத்த வேண்டிய தர்மம் நீ அங்க விட்டுட்ட இந்த தர்மத்தைக் காப்பாத்தனும்னு பேசறயே இது என்ன நியாயம்" என்று கேட்கிறார்.

அந்திக் கலம்பகம் என்ற நாடகத்தில் பெண்கள் பெரிதும் மதிக்கப்படாதக் காலத்தில் பெண்கள் அறிவு வளத்துடன் எப்படி அமைத்திருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்தும் விதத்தில் நாடகத்தைப் படைத்திருப்பார் அண்ணா.

நாடகம் இரண்டாம் உலகப்போர் நடந்துக் கொண்டிருக்கும் காலத்தை ஒட்டி அமைந்திருக்கிறது. உலகப் போரின் காரணமாக வங்கிகள் திவால் ஆகிவிட்டன. அந்த நிலையில் "பெண்கள் கிளப்'பில் பெண்கள் பொருளாதார நிலைமைகளைப் பற்றியும் அதனை ஒட்டி வங்கியின் மீது வழக்குத் தொடுக்க வேண்டும் என்பதாகவும் பேசிக் கொள்கிறார்கள். இடையில் ஒரு பெண் வந்து "என்ன ஒரே கேஸைப் பற்றி பேச்சா இருக்கே?" என்று கேட்கிறாள். உடனே அந்த கூட்டத்திலேயே விவரமான ஒரு பெண் சொல்கிறார் "இது என்ன பெரிய கேஸ்! அமெரிக்காவிலே ஒரு பெரிய கேஸ் நடக்குதாம் தெரியுமா? அதுல தீர்ப்புக்கூடச் சொல்லிட்டாங்க". "என்ன கேஸ் நடக்குது?", "லேடீஸ் சாட்லீஸ் லவ்வர்ஸ்" என்ற புத்தகம் "டி.எச். லாறன்ஸ்" எழுதித் தடைச்செய்யப்பட்ட நூல். அந்த புத்தகத்தைக் கல்லூரியில் படித்தாலே நீ என்ன இந்த மாதிரி அசிங்கமான புத்தங்களெல்லாம் படிக்கிறாயே என்று பேராசிரியர்களே கேட்பார்களாம். அந்த அளவிற்கு விவாதங்களை டி.எச். லாறன்ஸின் நூல்கள் ஏற்படுத்தின. "லேடீஸ் சாட்லீயின் காதலர்கள்" என்ற நூல் அமெரிக்க அரசால் தடை செய்யப்பட்டது. அது வழக்கு மன்றத்துக்கு வந்து அந்நூல் ஜூரிகளுக்கு படிக்கத் தரப்பட்டு, அவர்கள் 'இந்த நூலைத் தடை செய்ய வேண்டியதில்லை' எனத் தீர்ப்பளித்தனர் - இந்த செய்திகளை அப்பெண்கள் பேசுவது போன்று அண்ணா நாடகம் அமைத்து அதில் இருந்து இந்த நூலைத் தடை செய்வதற்கானக்

காரணம் என்ன அப்படியானால் அதைப் போன்றே உள்ள மகாபாரதத்தை தடைச் செய்ய வேண்டாமா? அதற்குக் காரணங்கள் என்ன? இத்தனைக் காரணங்கள் இருக்க நாம் மகாபாரத்தைத் தடைச்செய்ய வேண்டி கேஸ் போட்டால் என்ன" என்று அந்த பெண் பேசிய உடனே மற்றொரு பெண், "உடனே நீ இந்த பேச்சை ஆரம்பிச்சுடுவையே" என்று பேசுவதாக நாடகம் அமையும். இவ்வாறு பெண்கள் அறிவுடையவராக கதாப்பாத்திரங்களை அமைப்பதாக அண்ணாவின் நாடகம் அமைந்திருக்கும். இத்தகையத் தன்மையுடன் மற்றவர்கள் நாடகங்கள் அமைத்தது கிடையாது.

அண்ணாவின் நாடகங்களில் "கற்பு என்றால் என்ன? அது அருந்ததி கற்பா? நளாயினி கற்பா? சீதைக் கற்பா? என்றால் அதை ஆராய்ந்து கற்பு என்று சொல்வது அயோக்கியத்தனம் என்பதாக முடிப்பார்கள். அண்ணா அவர்கள் கற்பு என்பது பற்றி நாடகங்களில் பழமையான முறையில் கையாண்டாலும் பொதுக் கூட்டங்களில் பேசும் போது அத்தகையப் பழமை எண்ணத்துடன் தமது சொற்களை பயன்படுத்தியதில்லை என்பதைக் காண முடிகின்றது.

நீதிதேவன் மயக்கம் என்று ஒரு நாடகம். இராவணன் நாடகத்தின் நாயகன் இராவணன் "மறு ஆய்வு மனு' என்பது போன்ற ஒன்றை நீதிதேவனிடம் எடுத்து வருகின்றான். புராணங்களில் இருந்து புதிய முறையாக எமதர்மனை நீதிமானாக படைத்துள்ளார். வழக்கு விசாரணைக்கு வருகிறது. இராவணன் நீதிதேவனிடம் கேட்கிறான். "எனக்கு ஏன் அரக்கன் என்று பட்டம் கட்டீனீர்கள். இவர்களை தேவர்கள், நாயன்மார்கள் என்று பட்டம் கட்டி கூப்பிடுகிறீர்களே, என்னை மட்டும் ஏன் அரக்கன் என்று அழைக்கிறீர்கள் என்கிறான். எமன் 'நாங்களா சொன்னோம்' என்கிறார். இராவணன், இல்லை 'கம்பர்தான் அப்படிச் சொன்னார்' என்கிறார். உடனே கம்பரை அழைத்து வரச் சொல்கிறார்கள். கம்பர் வந்து இராவணன் எதிரே நிற்கிறார். இராவணன் கம்பரைப் பார்த்துக் கேட்கிறான் "என்னை இப்படி ஒரு அரக்கன் என்று சொன்னால், நான் யார்? இரக்கம் எனும் ஒரு பொருள் இலா அரக்கன். இரக்கம் இரக்கம் என்று என்னைக் கொன்ற எதுகை மோனை வணிகரே" என்கிறார்.

கம்பனிடம் நாம் மயங்குவதற்குக் காரணம் கம்பனிடம் உள்ள எதுகை மோனை உத்தி, அத்தகைய எதுகை மோனை உத்தியைக் காட்டியே இராவணன் தன்னைப் படைத்தக் கம்பனை

நோக்கி கேள்வி கேட்பதாக ஒரு நாடக உத்தியை அண்ணா படைத்துள்ளார்.

இராவணன் தன்னெதிரில் உள்ள முனிவர்களையும், தேவர்களையும் பார்த்துப் பேச ஆரம்பிக்கிறான். எதிரே துரோணாச்சாரியார் இருக்கிறார். அவரைப் பார்த்து ஏகலைவன் 'உன்னை நம்பியவன் இல்லையா, உன் சிலையை வழிபட்டவன் இல்லையா? நீ எதைக் கேட்டாலும் கொடுக்கின்றேன் என்று சொன்னவன் இல்லையா? அவனைப் பார்த்து உனக்கு என்ன தோன்றியது. இவனைப் பார்த்து கட்டைவிரலைக் கேட்போம் இல்லையென்றால், கொலை செய்வோம் என்று நினைத்தாயா இல்லையா?' என்று கேட்கிறான். துரோணாச்சாரியார் பேசாமல் இருக்கிறார். அதற்கு என்ன செய்வது? என்கிறார். இராவணன் நீ என்ன செய்தது என்று கேட்காதே துரோணாச்சாரியே அவன் உம்மைத் தோற்கடித்தான் அவன் ஒடித்தது கைவிரல். நீர் இடித்தது கண்ணியம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை ஏதோ நாம் நேரம், உடை, கட்டுப்பாடு என்பதாக நினைத்துக் கொள்கின்றோம். ஆனால், கண்ணியம் என்பதனை சரியான இடத்தில் கையாண்டு அதற்கான சரியான விளக்கத்தை தந்தவர் அண்ணா. மேலும் சொல்கிறார், "கவனம் இருக்கட்டும் இரக்கம் அற்ற நெஞ்சுடையவன் நீர் என்பதை உலகிற்கு உரைத்தான் அந்த உத்தமன் சொல்லால் அன்று செயலால்".

கோட்புலி நாயனார் சிவனுக்கு உணவுப் படைப்பதற்காக பண்டக சாலை வைத்திருந்தார். அந்த பண்டக சாலையில் இருந்து பஞ்சத்தால் உணவு எடுத்துண்ட மக்களை வாளால் வெட்டி வீழ்த்துகின்றார். அப்படி வெட்டி வீழ்த்தும் போது ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என எல்லோரையும் வெட்டி வீழ்த்துகின்றார். பால் குடிக்கும் குழந்தை ஒன்று, அது பண்டக சாலையில் இருந்து தன் தாய் உண்ட உணவிலிருந்துதானே பால் குடித்திருக்கும் என்று எண்ணி அக்குழந்தையைக் காற்றில் எறிந்து அது தரையில் வீழ்வதற்குள் வாளால் வெட்டி வீழ்த்தினார். அத்தகையத் தன்மையுடையவர் கோட்புலி நாயனார். இவர்கள் எல்லாம் நாயனார்கள்.

கட்டை விரலை வெட்டி வாங்கியவர்கள், ஆச்சாரியர்கள் பெற்ற மகளை, காதலியை கைவிட்ட விசுவாமித்திர ரிஷி ஆகியோர் அனைவரும் போற்றத்தக்கவர்கள். அரசியல் காரணமாக சிறை வைத்தல் பெண்ணை மதிப்போடு நடத்திய நான் அரக்கனா? என்ற கேள்வியை இராவணன் கேட்கின்ற

போது நீதி தேவனுக்கு மயக்கம் வருகிறது. இராவணன் நீதிதேவனை நோக்கி நான் அரக்கனா சொல்லுங்கள் சொல்லுங்கள் என்று நீதிதேவனின் இருக்கையைப் பிடித்து ஆட்டுகிறார். இந்த நிலையில் நீதிதேவன் என்ன சொல்வான். அதனால் அவன் மயக்கம் அடைந்தான் என்பதாக நாடகம் அமைகின்றது. இந்த நாடகத்தில் இராவணனாக அண்ணா அவர்களே நடித்தார்கள். அப்படி இருக்க அவர் எப்படி வசனங்களை பேசியிருப்பார் என்பது ஆராய்ந்துச் சொல்லக் கூடிய ஒன்று.

இந்த நாட்டில் முக்கியமானக் கேடு சாதி. சாதியை அண்ணா அவர்கள் எப்படிப் பேசுகிறார் என்பதை அவர்தம் நாடகங்கள் நமக்கு நன்கு விளக்குகின்றன. "சந்திரோதயம்" என்ற நாடகம் நாடகத்தில் 'புத்துலகக் கழகம்' என்று ஒன்றை நண்பர்கள் சேர்த்து ஆரம்பிப்பார்கள். அதில் பச்சை என்ற தாழ்த்தப்பட்டவர். குளத்தில் இறங்கி குளிப்பார். அதனை பார்த்த "கேசவபட்டர்' என்பவர் அவனை அடிப்பார். உடனே அந்த பச்சை சொல்வார்,

> நான் வயலில் இறங்கி வேலைச் செய்தேன். குளத்தில் இறங்கி குளித்தால் சேறு போகும் என குளத்திலே குளிச்சேன். ஆனால் ஒடம்பெல்லாம் இரத்தமா போச்சு. இந்த கொளத்திலே குளிச்சா பாவம் போகும் என்பாங்க. என். பாவம் எல்லாம் இரத்தமா வழியுது. நம்ம ஊர்ல எங்க தாத்தாவே யாரோ வெட்டின கொளம் என்று யாரோ சொல்றாங்க அந்த குளத்திலே நான் எறங்கி குளிக்க முடியல

என்று இப்படி ஆரம்பித்து அடுத்தக் காட்சியில் சொல்கிறார்கள். இல்லை இல்லை நீங்கள் தீண்டத் தகாதவர்கள் என்று சொல்லும் பொழுது.

> ஆமாம். நாங்கள் பொய்ம்மையைத் தீண்டாதவர்கள். வஞ்சனையைத் தீண்டாதவர்கள், துரோகத்தைத் தீண்டாதவர்கள். நாங்கள் அதனை எல்லாம் தீண்டாதவர்கள்தான்

என்று சாதியைப் பற்றி தனது பல நாடகங்களில் பல இடங்களில் அண்ணா அவர்கள் வைத்திருப்பார்.

"காதல் ஜோதி" என்ற நாடகத்தில் கிழவர் ஒருவர் கலப்பு மணம் என்பதை ஏற்கமாட்டார். அவரிடம் "சம்பந்தம்" என்பவர் பேசுவார்,

கலப்பு மணம் எல்லாம் ஒத்துவராதுன்னு பேசறீங்களே. நீ மூக்குக் கண்ணாடி போட்டிருக்கீங்களே உங்க தாத்தா காலத்திலே மூக்குக் கண்ணாடி இருந்ததா? அதை இன்னிக்கு நீங்க ஏத்துக்கலையா, தாத்தா காலத்திலே அது இல்லை என்றால் அதுக்கு ஒரு காரணம் காட்டி அதை போடாமலா இருக்கிறோம். அது மட்டும் அல்ல; இராமர் காலத்தில இரயில் ஓடலை, தர்மராஜர் காலத்தில ரேடியோ இல்லை, அரிச்சந்திரன் காலத்திலே போஸ்டு ஆபிசு இல்லை. இது எல்லாம் இன்னிக்கு வந்துடுச்சி சினிமா படம் கூட வந்திடுச்சி. நீயும் நானும்கூட சினிமா கூடபோய் பார்த்தோம். இல்ல. ஆமாம் சினிமாக்குப் போனோம் அது அதிசயம்பா'' என்றார். (பெரியவர் உடன் செல்கிறார்). இது எல்லாம் வந்திடுச்சி இதையெல்லாம் ஒத்துக்கிட்ட நீங்க ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் பண்ணிக்கிறது மட்டும் ஒத்துக்க மாட்ட என்கிறாய்" என்பதாக எங்கெல்லாம் இடம் அமைகிறதோ அங்கெல்லாம் சாதிய நிலையினை எடுத்துச் சொல்லி காலமாற்றம் குறித்த அறிவினை வளர்த்தெடுத்திருப்பார் அண்ணா.

அண்ணா அவர்களின் "சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்" என்ற நாடகத்தை அரசியல் காப்பியம் என்று சொல்லலாம். கம்பராமாயணத்தை அரசியல் காப்பியம் என்று சொல்வார்கள். ஆனால், அது தவறு சந்திரமோகன் நாடகத்தை தான் நாம் அரசியல் காப்பியம் என்று சொல்ல வேண்டும் அந்த அளவிற்கு ஆரிய மாயையால் ஒரு நாடு அழிந்துப் போகின்றது என்பதை தமது நாடக ஆக்கத்தால் அண்ணா அவர்கள் இந்த நாடகத்தின் வழி எடுத்துக் காட்டியிருப்பார்கள். பகுத்தறிவு என்கின்றபோது கடவுள் மறுப்பு என்பதை மட்டுமே எடுத்துரைக்கிறார்கள். ஆனால், பகுத்தறிவு என்பது அதனுடன் முடிவதில்லை. பகுத்தறிவு என்பது காலமாற்றம் பெண் உரிமை இவற்றோடு இணைந்த புதுமையை சொல்லி பழமையை ஆராய்ந்து மக்களை நல்வழிப்படுத்துவது ஆகும். இத்தகைய தன்மை எங்ஙனம் அண்ணாவின் நாடகங்களில் அமைந்திருக்கிறது என்பதனை வெளிப்படுத்தும் விதமாக அண்ணாவின் நாடகங்களின் ஒரு சில கொண்டு விளக்கினேன். அண்ணாவின் நாடகங்கள் கடல் போன்றது. அதில் அமைந்தக் கருத்துகளை நேரடியாக நாம் படித்து பயன்கொள்ளும்போதே அதனை நம்மால் முழுமையாக உணர முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும்

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் மாமனிதர்கள். நான் திராவிட இயக்க மாணவர்களில் ஒருவன். அதன் அடிப்படையில் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள் சிலவற்றை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். அதன் மூலம் அவர்கள் எத்தகைய பொது வாழ்க்கை நெறியினை வாழ்ந்து காட்டினார்கள் என்பதை இங்கு எடுத்துக்காட்ட விழைகின்றேன்.

இன்று எளிமையான மக்கள் எல்லாம் கல்வி கற்று சிறப்பான நிலையினை அடைந்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் ஐயா தந்தை பெரியார் அவர்கள். அன்று குலக்கல்வி முறையைத் திணித்திட முயற்சி செய்யப்பட்டது. அந்த குலக்கல்வி முறையின் குறிக்கோள் என்னவென்றால், ஒருவன் எந்த சாதியைச் சார்ந்தவனோ அதன் அடிப்படையிலான வேலையினைப் பகுதி நேரமாகச் செய்ய வேண்டும் என்பதே ஆகும். அத்தகைய கல்வி முறையினை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் ஐயா அவர்கள். அதே போன்று சாதிய முறை குறித்தும் பெண் அடிமைத்தனம் குறித்தும் பேசி, அத்தளைகளிலிருந்து பெண்கள் விடுதலையைப்பெற வழிவகைகளைச் செய்தவர் ஐயா அவர்கள். தந்தை பெரியார் அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தத் தமிழனைத் தட்டி எழுப்பியவர். அப்படி எழுந்த தமிழன் மீண்டும் தூங்கிவிடாமல் எதைச் செய்தால் தமிழன் தலை நிமிர்வான்; எதனைச் செய்தால் அவன் நிமிர்ந்து நடப்பான் என எண்ணி அதற்காகச் சூறாவளியாகச் செயல்பட்டவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

பெரியார் அவர்கள் அதிகம் படிக்காதவர். அவர் ஐந்தாம் வகுப்புவரைதான் படித்தார் என்பது நமக்குத் தெரியும். அவரே சொல்லியிருக்கிறார்: "நான் படிக்கச் சென்றகாலம் சிறிது; அதிலே நான் படிக்காமல் "இம்போசிஷன்" எழுதியதும் மற்ற மாணவர்களை அடித்துவிட்டு வீட்டுக்கு வந்த காலமே அதிகம்" அவ்வளவு குறைந்த காலமே பள்ளிக்குச் சென்றாலும், இந்த

நாட்டுமக்கள் நலம் பெறவேண்டும் என்பதற்காக அவர் பேசிய பேச்சும் எழுதிய எழுத்துகளும் மிகமிக அதிகம். அவை படிக்கப் படிக்க நமக்கு தெவிட்டாத அறிவு ஊட்டுபவை. அதனால்தான் 'அஞ்சாநெஞ்சன் அழகிரி' சொன்னார் 'பெரியார் யார்? என்று கேட்டால் நான் சொல்வேன்; 'பெரியார் தமிழனுக்குக் கிடைத்த ஒரு சாணைக்கல். எப்பொழுதெல்லாம் தமிழனுக்கு மூளை மழுங்கி விடுகின்றதோ அப்போதெல்லாம் அந்தக் கல்லில் சாணைத் தீட்டிக் கொள்ளலாம். அப்போது மூளை கூர்மையாகும்' என்றார். அது உண்மையான ஒரு வைரமொழி ஆகும்.

அண்ணா அவர்கள் எம்.ஏ. வரை படித்தவர். நிறைந்த அறிவாற்றல் படைத்தவர். முத்தையா செட்டியார் போன்றவர்கள் எல்லாம் அண்ணாவின் ஆங்கிலப் பேச்சாற்றலைப் பார்த்து அவரைத் தன்னிடம் வேலையில் அமர்த்திக் கொள்ள விரும்பிக் கேட்டார்கள். ஆனால் 'நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர்தான்' என்று அண்ணா அவர்கள் பெரியாரின் குருகுலத்திலேயே இருந்து தமிழ் மக்களின் உரிமைக்காகப் பாடுபட்டார். அந்தக் காலங்களில் 'ஆனந்த விகடன்' இதழ்களில் 'உபயகுசலோபரி' என்று எழுதுவார்கள். ஆனால், அண்ணாவின் அழகுத் தமிழின் வளர்ச்சியால் இன்று 'வணக்கம்' என்று தொடங்குகின்றனர். அத்தகைய மாற்றத்திற்குக் காரணமாக இருந்தது அண்ணாவின் பேச்சும் எழுத்தும் ஆகும்.

அண்ணா அவர்கள் ஈரோட்டிலே விடுதலை இதழின் துணையாசிரியராகப் பணியாற்றிய போது நடந்த நிகழ்வைச் சொல்ல விரும்புகின்றேன். அண்ணா அவர்கள் 'ரிப்பன் மாளிகைச் சீமான்கள்' என்ற கட்டுரையை எழுதினார். அது அன்று இரவு ஐயாவின் பார்வைக்கு வந்திருக்கிறது. அதனைப் படித்துவிட்டு அந்த கட்டுரையின் சிறப்பும், சொல்ல வந்த கருத்தில் இருந்த தெளிவும் பார்த்து, ஐயா அவர்கள் மகிழ்ச்சியடைந்து உடன் இருந்தவர்களிடம், 'அண்ணாதுரை எங்கே?' அவரை பாராட்டவேண்டுமே! என்று கேட்டிருக்கிறார். உடன் இருந்த நண்பர்கள் இரவு மணி பதினொன்று பனிரெண்டு ஆகியிருந்த காரணத்தால் 'அவர் படுக்கச் சென்றிருப்பார் அல்லது படிக்கச்சென்றிருப்பார்' என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே ஐயா அவர்கள் அண்ணா அவர்கள் தங்கி இருந்த மூன்றாவது மாடிக்குச் சென்று அண்ணாவை அழைத்திருக்கிறார். அண்ணா அது ஐயாவின் குரல் என்பதைத் தெரிந்து, ஏதோ அசம்பாவிதம்

கீழே நடந்திருக்கிறது என்று பதறிப்போய் எழுந்து வந்து கதவைத் திறந்திருக்கிறார். அப்போது பெரியார் அண்ணாவிடம் ‘என்னஅழகாய் எழுதியிருக்கிறாய் கட்டுரையை. நான் பத்துக் கூட்டங்களில் சொல்ல வேண்டியதை நீ ஒரே கட்டுரையில் எழுதிவிட்டாயே!’ என்று பாராட்டிச் சொல்லியிருக்கிறார்.

உடனே அண்ணா அவர்கள் ‘என்னய்யா, இது! நான் காலையில் எழுந்து கீழே வரும்போது பாராட்டிச் சொல்லியிருக்கலாமே. இதற்குப் போய் மூன்று மாடிகள் ஏறி வந்திருக்கிறீர்களே! இது சரிதானா?’ என்று கேட்டிருக்கிறார். உடனே ஐயா சொன்னார். ‘இதோ பாருய்யா, தமிழனுக்குப் பாராட்டுகிற புத்தி கிடையாது. அதனால் உடனே பாராட்டிடணும் என்று வந்தேன். இல்லையானா மறந்திடும். அல்லது ஏன் பாராட்டணும் என்ற எண்ணம் தோன்றி தொய்வு வந்திடும். அதனால்தான் உடனே பாராட்டணும் என்று வந்தேன்’ என்றிருக்கிறார்.

மேலும், அண்ணா அவர்களுக்கும் ஐயா அவர்களுக்கும் இடையில் இருந்த உறவைப் புரிந்துகொள்ள மேலும் ஒரு நிகழ்வைச் சொல்ல நினைக்கின்றேன். பெரியார் அவர்கள் மாலையில் சிறிது ஓய்வு எடுப்பது வழக்கம். அப்படி ஓய்வு எடுக்கிறபோது உடன் இருப்பவர்கள் வெளியில் சென்று விடுவார்கள். அண்ணா அவர்களும் அப்படி மாலையில் வெளியில் செல்லும் போது ‘ஹிக்கிம் பாதம்’ புத்தகக் கடைக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களை படித்துவிடுவார். அப்படிப் படிக்கின்றபோது ஓர் ஐரோப்பிய எழுத்தாளர் எழுதிய ஆங்கிலப் புத்தகத்தை எடுத்துப் படித்திருக்கிறார். அது நல்ல வரலாற்றுப் புத்தகம் என்பதால் அண்ணா அவர்கள் தினமும் சென்று அப்புத்தகத்தை எடுத்துப் படித்து வந்திருக்கிறார். புத்தகக் கடைக்காரரும் போனால் போகிறது என்று விட்டுவிட்டு இருக்கிறார். அண்ணா அவர்கள் அப்புத்தகம் நன்றாக இருப்பதால் அப்புத்தகத்தை நமது விடுதலை பத்திரிக்கை நூலகத்திற்கு வாங்கினால் நன்றாக இருக்கும் என்று நினைத்து பெரியாரிடம் வந்து சொல்லியிருக்கிறார். உடனே பெரியார் அண்ணாவிடம் ‘நீங்கள் புத்தகத்தில் எவ்வளவு படித்திருக்கிறீர்கள்’ என்று கேட்டிருக்கிறார். அண்ணா "பாதியளவிற்குப் படித்திருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார் அண்ணா. அதற்குப் பெரியார் ‘நான் இன்னும் நேரம் வேண்டுமானால் அதிகம் தருகிறேன். புத்தகத்தை முழுதாகப் படித்துவிட்டு வந்துவிடுங்கள். புத்தகத்தை வாங்க

இயலாது' என்று சொல்லியிருக்கின்றார். அந்த அளவிற்குப் பெரியார் சிக்கனமாகப் பணத்தைச் செலவழிப்பவர் ஆவார்.

ஒருமுறை ஐயா அவர்கள் பேசுவதற்கு கூட்டம் ஒன்றை தோழர்கள் ஏற்பாடு செய்தனர். ஐயா அவர்கள் இரயிலில் வருவதற்கான முதல் வகுப்புப் பயணச்சீட்டிற்குரியப் பணத்தை மணியார்டர் அனுப்பியிருக்கிறார்கள். கூட்டம் நடைபெறும் அன்று ஏற்பாட்டாளர்கள் இரயில் நிலையத்தில் முதல் வகுப்புப் பெட்டி வந்து நிற்கும் இடத்தில் மாலைகளுடனும் துண்டுகளுடனும் நின்று கொண்டிருக்கிறார்கள். இரயில் வந்து நிற்கின்றது. பெட்டியில் ஐயாவை தேடுகிறார்கள்; அவரைக் காணவில்லை. சரி ஏதோ காரணத்தால் ஐயா வரவில்லை போல் இருக்கிறது. நாம் போன் செய்து என்னவென்று கேட்கலாம் என்று நினைத்துக் கொண்டு பெட்டியில் இருந்து இறங்கி வருகிறார்கள். அப்போது ஐயா அவர்கள் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் இருந்து கூட்ட நெரிசலில் அல்லல்பட்டு இறங்கி கொண்டிருப்பதைப் பார்த்து, அவரிடம் ஓடோடிச் சென்றார்கள். அவர்கள் 'என்ன கொடுமை அய்யா இது, நாங்கள் முதல் வகுப்பிற்குப் பணம் அனுப்பினோம். உங்களுக்கு முதல் வகுப்பு இடம் இல்லையென்றால் இரண்டாம் வகுப்பிலாவது உங்களை அனுப்பியிருக்கலாமே' என்றிருக்கிறார்கள். அதற்கு ஐயா, 'நானும் இரயிலடிக்குப் போனேன். நான்காம் வகுப்பு இருக்கிறதா என்று கேட்டேன். இல்லையென்று சொல்லி விட்டார்கள். அதனால் மூன்றாம் வகுப்பிற்கு டிக்கட் வாங்கி வந்திருக்கின்றேன்' என்றாராம். அதுபோல் ஐயாவின் வாரிசான அண்ணா அவர்களும் சிக்கனமான எளிய வாழ்வை நடத்தியவர்.

ஒருமுறை வைதிக நெறியைச் சார்ந்தவர்கள் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் அண்ணா கலந்துக்கொண்டார். அது வைதிகம் சார்ந்த மண்டபம் என்பதால் செருப்புகளை வெளியே விட்டுவிட்டு கூட்டத்தில் பேசுவதற்கு உள்ளே சென்றிருக்கின்றார். கூட்டம் முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள். அங்கிருந்து அண்ணா விடைபெறும் போது கீழே தனது செருப்பைத் தேடியிருக்கிறார். உடன் இருந்தவர் என்ன என்று கேட்டிருக்கிறார். செருப்பைக் காணவில்லை என்றிருக்கிறார். அதற்கு உடன் இருந்தவர் செருப்பு வெளியில் விட்டுவிட்டு அல்லவா உள்ளே வந்தோம். எந்த வண்ணச் செருப்பு உங்களுடையது என்று சொல்லுங்கள் நான் எடுத்து வருகின்றேன் என்று சொல்லியிருக்கிறார். 'என் செருப்பு பிஞ்சிப்போய்

இருக்கும். அதை யாரும் தொடமாட்டார்கள். எவரும் தொடாமல் எதனை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்களோ அதுதான் என் செருப்பு. அதை எடுத்துகிட்டு வா' என்று சொல்லியிருக்கிறார் என்றால் அவரின் வாழ்க்கை எத்தகைய எளிமையுடையதாக அமைந்து இருந்தது என்பதைப் புரிந்துக்கொள்ள முடிகின்றது.

தஞ்சை, சேலம் போன்ற மாவட்டங்கள் பெரியாரின் கோட்டையாக இருந்தது. அப்படி இருந்தபோதும் அந்த இடங்களில் கூட்டம் நடைபெறும்போது அங்குள்ள எதிரிகள் ஐயா அவர்களைப் பேசவிடாமல் கல்லை எறிவது, அழுகிய முட்டையை வீசுவது போன்ற செயல்களைச் செய்து கூட்டத்தைக் கலைக்க முயல்வது வழக்கம். அப்படியிருக்க தஞ்சையில் முன்தினம் கூட்டம் ஒன்றில் பேசிவிட்டு ஐயா தங்கி இருந்தார். கால்நடை மருத்துவர் ஒருவர் கால்நடை மருத்துவர்களைக் கொண்டு ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அதில் ஐயா பேசுவதற்காக அவரைச் சந்திக்க வந்தார். அந்த மருத்துவர் ஐயாவிடம் 'ஐயா, நான் நேற்று நீங்கள் பேசியகூட்டத்தில் கலந்து கொண்டேன். அதில் உங்களை நோக்கி எதிரிகள் கல்லையும் அழுகிய முட்டையையும் எறிந்ததைப் பார்த்தேன். நீங்கள் எங்கள் சொத்து. நீங்கள் நெடுநாளைக்கு எங்களுக்குத் தேவை. எனவே இதுபோன்ற இடங்களில் நீங்கள் குறைவாகப் பேசி கூட்டத்தை முடித்துக் கொள்ள வேண்டும்' என கேட்டுக் கொண்டார். அதற்கு ஐயா 'நீங்கள் யார்'? என்றார். 'நான் கால்நடை மருத்துவர்' என்றார் வந்தவர். ஒரு மாட்டுக்கு 'கோமாரி நோய்' வந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். 'கோமாரி' என்பது மாட்டின் தொண்டையை புண்ணாக்குகிற நோய். நீங்கள் அந்த மாட்டிற்கு மருந்துதர அதன் அருகில் போவீர்கள், அது முட்டும். கொஞ்சம் இடம் கிடைத்தால் உங்களை உதைக்கப்பார்க்கும். இருந்தாலும் நீங்கள் மருந்தை அதன் வாயில் திணித்து விடுவீர்கள். அதுபோலத் தான் இன்று தமிழன் மாடுபோன்று அறிவில்லாமல் உள்ளான். கல்லை எறிவான், முட்டையை வீசுவான். இவை எல்லாம் பொதுவாழ்வில் சகஜம்; இவற்றை ஏற்றுத்தான்ஆக வேண்டும். அவனுக்கு நான் மருந்தைக் கொடுத்துத்தான் தீரவேண்டியிருக்கிறது' என கரடுமுரடானப் பாதையில் நடந்து நமக்கெல்லாம் சரியானப் பாதையைக் காட்டியவர் ஐயா அவர்கள்.

அண்ணா அவர்கள் அதே வழியில் நடை போட்ட தலைமைத் தொண்டர். அண்ணா ஓர் ஊரில் கூட்டத்தில் பங்குக்கொண்டார். அது சிற்றூர் என்பதால் சிற்றுண்டி

சாலைகளுக்கு வழியில்லை. கூட்ட ஏற்பாட்டாளர் தன் மனைவியிடம் சொல்லி அண்ணாவிற்கும் மற்றவர்க்கும் உணவு ஏற்பாடு செய்யச் சொல்லியிருந்தார். அப்படியே அவரின் மனைவியும் உணவுகளைத் தயார் படுத்தி வைத்தார்கள். அப்படி உணவு தயார்செய்த போது, அவர்களுக்கும் தெரியாமல் மண்ணெண்ணை குழம்பில் கலந்து விட்டிருக்கிறது. அதனை அறியாத கூட்ட ஏற்பாட்டாளரின் மனைவி அண்ணாவும் உடன் இருந்த நண்பர்களும் வந்ததும் உணவு பரிமாறினார். உணவு உண்ண அமர்ந்த அண்ணாவின் நண்பர்களான சி.வி. ராஜகோபாலைப் போன்றோர் உணவைப் போட்ட மாத்திரத்திலேயே அதில் மண்ணெண்ணை கலந்திருப்பதை அறிந்து சாப்பிடுவதுபோல் பாசாங்கு செய்து விட்டு கைகழுவி வந்துவிட்டனர். ஆனால், அண்ணா அவர்கள் சாப்பாட்டை நன்கு பிசைந்து சாப்பிட்டு, உணவு ஏற்பாடு செய்திருந்த அத்தோழரை அழைத்து முதுகில் தட்டிக்கொடுத்துப் பாராட்டி விட்டு வந்தார். அண்ணா அவர்களிடம் சி.வி. ராஜகோபால் ‘சாப்பாட்டில் உங்களுக்கு மண்ணெண்ணை வாசனை வரவில்லையா? பாராட்டிவிட்டு வந்தீர்களே, எப்படி’ என்று கேட்டிருக்கிறார். அதற்கு அண்ணா, ‘எனக்கும் மண்ணெண்ணை நெடி தெரிந்தது. ஆனாலும் அந்தத் தோழரின் மனம் வருந்தக்கூடாது என்பதற்காக நான் அப்படி முழுதும் உண்டேன்’ என்றாராம். அந்த அளவிற்கு கட்சித் தொண்டர்களின் மனம் அறிந்து நடந்தவர் அண்ணா அவர்கள்.

1949இல் அண்ணா அவர்கள் பெரியாரிடம் கொண்ட கருத்து மாறுபாட்டின் காரணமாக திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். அந்தக் கூட்டத்தின் மேடையின் நடுவே ஒரு நாற்காலி காலியாக போடப்பட்டிருந்தது. அப்போது அண்ணா பேசினார். ‘இந்த நாற்காலி ஐயா அவர்களுக்கானது. அவர் எங்களிடம் திரும்ப வருவார். எங்களுக்குத் தலைமைத் தாங்குவார் என்று நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்’ என்றார். பெரியார் அவர்கள் அண்ணாவை ‘கண்ணீர்த் துளிகள்’ என்றார். பல கூட்டங்களில் ‘பாம்பையும் கண்ணீர்த் துளிகளையும் கண்டால் முதலில் பாம்பை அடிக்காதீர்கள்’ என்பது போன்றெல்லாம் பேசிவந்தார். அதனைப் பலரும் அண்ணா அவர்களிடம் வந்து சொன்னார்கள். அதற்கு அண்ணா அவர்கள் சொன்னது ‘அவர் நமது ஐயா. அதற்கு நாம் வருந்தலாமா? தாய்ச் சிங்கம் இருக்கிறதே, அது தனது குட்டியைக் கடித்து தூக்கி

எறியும். அது தனது குட்டிகளைக் கொல்வதற்காக அல்ல, அது தனது குட்டிகளுக்குப் பயிற்சி தருவதற்காக. யானை தனது கன்றை முட்டும். மண்ணில் போட்டுப் புரட்டும் எதற்கு என்றால் அந்த கன்றிற்குப் பயிற்சி தருவதற்காக. அதுபோல்தான் ஐயா அவர்கள் திட்டுவது நமக்குப் பயிற்சி அளிப்பதற்காக என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். நமக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்று சக தோழர்களிடம் பேசிப் புரியவைப்பார் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்கள் 1967 சட்டமன்றத் தேர்தலில் வெற்றிப்பெற்று அமைச்சரானார். அப்போது ஐயா திருச்சியில் இருந்தார். உடனே அண்ணா அவர்கள் திருச்சிக்குச் சென்று ஐயாவைப் பார்த்து மாலை அணிவித்து, இந்த அமைச்சரவையே உங்களுக்குக் காணிக்கை' என்றார். அந்நிகழ்வைப் பற்றி பின்நாளில் ஐயா அவர்கள் நெகிழ்வுடன் 'நான் அன்று அண்ணாவைப் பார்த்துப் புதுப்பெண்ணைப் போல வெட்கப்பட்டேன்' என்றார்.

1967 பொதுத் தேர்தலில் பெரியார் அவர்கள், காமராஜர் வெற்றி பெறவேண்டும். அண்ணா தோற்கவேண்டும் என்று சூறாவளிப் பிரச்சாரம் செய்துக்கொண்டிருக்கிறார். அண்ணா அவர்களும் தனது அணியினருடன் சேர்ந்துப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார். தஞ்சையில் ஒரு பொதுக் கூட்டம். அக்கூட்டத்தை முடித்துவிட்டு அண்ணா நாகப்பட்டினத்திற்கு நகர செயலாளர் நடராஜனுடன் காரில் சென்று கொண்டிருக்கின்றார். பெரியார் அவர்கள் அதே நேரம் நாகப்பட்டனத்தில் கூட்டத்தை முடித்துக் கொண்டு தஞ்சையில் நடைபெற உள்ள கூட்டத்திற்கு தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார். இடையில் ஒரு இரயில்வே கேட்டில் எதிர் எதிர்ப் புறங்களில் ஐயாவின் வேனும் அண்ணாவின் காரும் நின்று கொண்டிருக்கின்றன. அண்ணாவும் நடராஜனும் பெரியாரின் வண்டி என்பதை தெரிந்து கொண்டனர். உடனே அண்ணா அவர்கள், 'ஐயா அவர்கள் சாப்பிட்டார்களோ இல்லையோ, வண்டியில் ஏதேனும் சாப்பிடுவதற்குப் பழங்கள் உள்ளதா' என்று கேட்டு வண்டியில் இருந்த பழங்களையும் ரொட்டிகளையும் பையில்போட்டு நடராஜனிடம் கொடுத்து ஐயாஅவர்களிடம் தரச்சொன்னார். அதற்கு நடராஜன், 'அண்ணா நீங்களே இதனை அவரிடம் தந்தால் என்ன? நான் உங்கள் உடன் வருகின்றேன்'' என்று சொல்லியிருக்கின்றார். அதற்கு அண்ணா அவர்கள், ''நான் ஐயா விடம் சென்றால் பிறகு உங்களிடம் வருவேனா என்று

எனக்கு தெரியாது, பிறகு நீங்கள் வேறு ஆளை ஏற்பாடு செய்துதான் நாகைக் கூட்டம் நடத்தியாக வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். அந்த அளவிற்கு அண்ணா அவர்கள் பெரியாரின் மீது பற்றுவைத்திருந்தார்கள்.

அண்ணா அவர்கள் 1967 தேர்தலில் வெற்றி அடைந்தார். அதனைத் தொடர்ந்து வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் தி.நகரில் இருக்கிற எஸ்.ஜி.எஸ். திருமணமண்டபத்தில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் அமர்ந்திருக்கின்றோம். அண்ணா அவர்களுக்கு வெற்றிபெற்ற தம்பிமார்கள் யார்? யார்? என்று தெரிந்தாலும் அவர்கள் யார்? யார்? என்பது பிற தம்பிமார்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக ஒவ்வொருவரையும் எழுந்து அறிமுகப்படுத்திக் கொள்ளச் சொன்னார். எம்.எஸ்.மணி 'நான் திருச்சியிலிருந்து வெற்றி பெற்று வந்திருக்கின்றேன்' என்கிறார். அதுபோல 'வெள்ளக்கோயிலில் இருந்து சாமிநாதன்' என்கின்றார் ஒருவர் 'பொன்னேரி நாகலிங்கம்' என்று வணக்கம் சொல்கின்றார் ஒருவர். 'கும்மிடிப்பூண்டி கா.வேழவேந்தன்' என்று நான் வணக்கம் சொல்கின்றேன். இப்படி வரிசையாகப் போகின்றபோது, 'விருதுநகர் பெ. சீனிவாசன்' என்று தன்னை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டார். விருதுநகர் என்றதும் எல்லோரும் பலமாக ஆரவாரம் செய்தார்கள்; விருதுநகர் காமராசர் நின்ற தொகுதி; அவரைத் தோற்கடித்தவர் சீனிவாசன். உடனே அண்ணா தனது கையை உயர்த்தி 'இருங்கையா' என்றார். பின் மனம் திறந்து சொன்னார்: 'இப்ப சொல்றேன் அவர் வெற்றிபெறாது தோற்றுவிட்டால் அது நமக்கு மகிழ்ச்சியான செய்தியா? ஏதோ ஜனநாயகப் போட்டிக்காகத்தான் மாணவரணித் தலைவரை நிற்கவைத்தோம். ஆனால் அடித்த சூறாவளியில் பெருந்தலைவர் காமராசரும் தோற்றது நமக்குத்தான் மாபெரும் இழப்பு; சட்டமன்றத்தில் அவருடைய அனுபவ ஆலோசனைகள் நமக்குக் கிடைக்குமா?' பெ. சீனிவாசன் அவர்கள் தேர்தலில் நிற்கவைத்தவுடன் அண்ணாவிடம் சென்று 'என்னை ஏன் விருதுநகரில் நிற்கவைத்தீர்கள்? நான் நாவலரிடம் சென்று தேதி கேட்டேன். அவர் 'போய்யா அப்புறம் பார்க்கலாம் என்று அனுப்பி விட்டார். பின் கலைஞரிடம் போனேன்; அவரும் என்னைப் பார்த்துப் 'பிறகு பார்க்கலாம்' என்று சொல்லி அனுப்பி விட்டார். பேராசிரியரிடம் சென்றாலும் அப்படியே நடந்துக் கொள்கின்றார். யாரும் என் தொகுதிக் கூட்டத்திற்கு

வரமாட்டேன் என்கிறார்கள்' என்று சொல்லியிருக்கின்றார். அதற்கு அண்ணா, 'அப்படியா, எல்லோரையும் அழைத்து வரமாட்டேன் என்று சொல்லி விட்டார்களா? நீ என்கிட்ட கேள், நானும் வரமாட்டேன் என்று சொல்வேன்' என்றாராம். 'காமராசர் கோட்டைக்கு வந்தால் இது வரை நடந்த நிர்வாகங்களைப் பற்றிச் சொல்வார். எதை எதை விட்டு விட்டோமோ அதனைச் செய்ய நமக்கு வழிகாட்டுவார். அவர் தோற்றுவிட்டார் என்பதற்காக நான் இரவு பகல் தூங்காமல் இருக்கிறேன். நான் மனம் புண்பட்டு கிடக்கின்றேன். நீங்கள் கைதட்டலின் மூலமாக அதனைக் கிளறிவிடுகின்றீர்கள். இது நியாயம் தானா? அவர் வெற்றிபெற்று வந்திருக்க வேண்டும். அவர் தோற்றார் என்பதற்காக நான் பதைபதைத்துக் கொண்டிருக்கின்றேன்' என்று சொன்னார். இது தான் அறிஞர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்கள் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டசபை செல்கின்றார். ஆதித்தனார் அவர்கள் சட்டசபை அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமர்ந்திருக்கின்றார். அவர் சிங்கப்பூரில் வழக்கறிஞராகப் பணியாற்றியவர். அவரை ஒவ்வொருவராகப் பாராட்டிப் பேசுகிறார்கள். இறுதியில் அண்ணா அவர்கள் ஆதித்தனாரை நோக்கிப் பேசுகின்றார்: 'ஆதித்தனார் அவர்களே! நீங்கள் யார்? 'பாரட்லா' படித்தவர். சிங்கப்பூரிலே வெற்றிகரமாக ஆங்கிலத்தில் வாதாடியவர். உலகப் புகழ் பெற்ற ஒரு வழக்கறிஞர். ஆனால், அப்படிப்பட்ட நீங்கள் தமிழ் நாட்டின் சட்டமன்றத் தலைவராக ஆகியிருக்கிறீர்கள். இப்போது நீங்கள் உங்கள் பழைய முறைகளை எல்லாம் மாற்றிக்கொள்ள வேண்டும். சிங்கப்பூரிலே நீங்கள் ஆங்கிலத்திலே வாதாடியிருக்கலாம். ஆனால் இங்கு இனி நடைமுறை எல்லாம் தமிழாக இருக்க வேண்டும். சீராகவும் சிறப்பாகவும் இந்த அவையை திருக்குறளுடன் தொடங்க வேண்டும்'. தினம் ஒரு பொருத்தமான திருக்குறளைச் சொல்லிவிட்டு ஆரம்பிக்க வேண்டும் என்று அண்ணா சொன்னது இன்றும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. அவைத் தலைவர் திருக்குறளைப் படித்தபின்பே அவை தொடங்குகின்றது.

'தமிழ்நாட்டிற்கு உரியவர்கள் நாம். தமிழோடு இருக்கவேண்டியவர்கள். எந்த மொழியோடு நாம் பிறந்தோமோ, எந்த மொழியோடு நாம் வளர்ந்தோமோ, எந்தமொழி நம்மை உலகிற்கு அறிமுகப்படுத்தியதோ, எந்த மொழியால் நாம்

வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோமோ, எந்த மொழியோடு நாம் மறையப் போகின்றோமோ அந்த மொழிக்குத் துரோகம் செய்யக் கூடாது. இனி நமது நடைமுறை முழுவதும் தமிழாக இருக்க வேண்டும்' எனச் சொல்லி எப்படி எல்லாம் தமிழோடு அவையை நடத்த வேண்டும் என்ற மிகுந்த முயற்சியோடு செயல்பட்டார் அண்ணா. அதன் காரணமாக 'சட்டமன்ற ஆட்சிச் சொல் பேரகராதி' ஆதித்தனார் அவர்களால் கொண்டு வரப்பட்டது. 'கனம்' என்பது 'மாண்புமிகு' என மாற்றப்பட்டது. 'பில்' (Bill) என்பதை மசோதா என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்; அது 'சட்ட முன்வடிவு' என்று மாற்றப்பட்டது. 'ஸ்ரீ' என்பதைத் 'திரு' என்றும், 'ஸ்ரீமதி' என்பதைத் 'திருமதி' என்றும், 'குமாரி' என்பதை "செல்வி' என்றும் தமிழ்ப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றது இதற்கெல்லாம் வழிவகையைச் செய்தவர் அண்ணா அவர்கள்.

ஒரு காலத்தில் அரசு அலுவலக அறைகளில் அலுவலரின் மதத்திற்கு ஏற்பக் கடவுள் படங்கள் மாட்டியிருக்கும். இந்த நிலையை மாற்றி அரசு அலுவலகங்களில் திருவள்ளுவர் படம் தவிர்த்து மற்ற படங்கள் இருக்கக் கூடாது என்ற நிலையினை உருவாக்கியவர்கள் அறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் ஆவர். திருவள்ளுவர் படத்தை அவரவர் சிந்தனைக்கு ஏற்றாற் போன்று மதசாயல்களுடன் பூணூல் போட்டும் உத்திராட்சைக் கொட்டை இட்டும் பல படங்கள் வரைந்து வைக்கப்பட்டிருந்த நிலை இருந்தது. இந்த நிலையினை மாற்ற அண்ணா அவர்களும் கலைஞர், நாவலர் போன்றோரும் சேர்ந்து 'வேணுகோபால் சர்மா' என்ற ஓவியரைக் கொண்டு இன்று நாம் பார்க்கின்ற திருவள்ளுவர் படத்தை எந்த மதத்தின் சாயலும் இல்லாமல் வரையச் செய்து அதனை அரசு அலுவலகங்களிலும் பிற பொது மண்டபங்கள் அமையச் செய்தனர். இது அண்ணா அவர்கள் பதவி ஏற்றதும் செய்த பணிகளில் முக்கியமானப் பணிகளில் ஒன்றாகும்.

அண்ணா அவர்கள் அமைச்சராக இருந்தபோது சட்ட மன்றத்தில் நடந்த நிகழ்வு ஒன்றைச் சொல்ல நினைக்கின்றேன். காங்கிரஸ் கட்சியை சார்ந்த உறுப்பினர் ஒருவர் எழுந்து 'நாடோடிகளாக நடுவீதியில் அலைந்து கொண்டிருந்த நீங்கள் எல்லாம் நாடாள வந்து விட்டீர்கள்; இது நாட்டிற்கு மிகப் பெரிய கொடுமை. தமிழன் செய்த தவறு' என்று சொன்னார். எங்களுக்கு எல்லாம் அவரை அடித்து விட வேண்டும் என்னும் அளவிற்குக் கோபம் வந்தது. ஆனால், அண்ணா அவர்கள் எழுந்து அவரை

நோக்கி, 'நீங்கள் நல்ல கருத்தை எடுத்து வைத்து சட்டமன்றத்தை நடத்திச் செல்வீர்கள் என்று நினைத்தேன். 'என்ன சொன்னீர்கள்? நாடோடிகளாகிய நாங்கள் எல்லாம் நாடாள வந்தது மிகப்பெரிய தவறு. மிகப்பெரிய கொடுமை என்றல்லவா சொன்னீர்கள். ஆமாம்! நாங்கள் நாடோடிகள்தான். நடு வீதியில் அலைந்து கொண்டிருந்த எங்களை நாடாள மக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அது பெருமை; ஆனால் நாடாண்டு கொண்டிருந்த பிரபுக்களே உங்களை ஒரே அடியாகத் தூக்கி எறிந்து நடுவீதிக்கு அனுப்பியிருக்கிறார்களே, இதுதான் கொடுமை' என்று அந்த உறுப்பினர் சொன்ன வார்த்தையாலேயே அண்ணா அவர்கள் பதில் சொன்னார்கள். அதுதான் சிறப்பு.

அண்ணா ஆட்சிக் காலத்தில் மாணவ நண்பர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு அதன் காரணமாக வில்லிவாக்கம் அருகில் இரண்டு இரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்டன. மறுநாள் சட்டசபை கூடியது. எதிர்கட்சியினர் அண்ணாவிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தயாராக இருந்தனர். சட்டசபை ஆரம்பித்தது. எதிர்கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவர் எழுந்து அண்ணாவைப் பார்த்து 'நான் உங்களை கோழை என்று சொல்வேன்; போயும் போயும் இந்தச் சின்னப் பசங்களுக்கு இவ்வளவு பயப்படுகிறீர்களே? அவன் பெட்டியையே கொளுத்திவிட்டான்; நாளைக்கு ஏன் நாட்டையே கொளுத்த மாட்டான்; நாளைக்கு உங்க வீட்டை ஏன் கொளுத்த மாட்டான்; நாளைக்கு எங்க வீட்டை ஏன் கொளுத்த மாட்டான்; அப்படியே விட்டுவிட்டீர்களே, இது கோழைத்தனமான ஆட்சி, கையாலாகாத ஆட்சி' என்று சொன்னார். அத்தனையையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த அண்ணா அவர்கள் எழுந்து, 'நேற்று நடந்தவைகளை நான் அறிவேன். நீங்கள் சொன்னவற்றை எல்லாம் நான் ஏற்றுக் கொள்கின்றேன். நேற்றைய நிகழ்வைப் பொறுத்தவரை நான் கோழைதான். கையாலாகாதவன்தான். அப்படித் தான் இருக்க வேண்டும் என நினைக்கின்றேன்' என்று சொல்லிவிட்டு, 'மாணவர்கள் தீயைக் கையில் எடுத்தார்கள். அதற்கு எதிராக நான் துப்பாக்கியைக் கையில் எடுத்தால் பல உயிர்கள் போயிருக்கும். இரண்டு இரயில் பெட்டிகளுக்குப் பதிலாக அழகான இரயில் பெட்டிகளைச் செய்து இரயில்வே துறையிடம் கொடுத்துவிட முடியும். ஆனால், துப்பாக்கியை மாணவர்களின் மீது திருப்பிவிட்டு இரண்டொரு

மாணவர்கள் இறந்திருந்தால் அந்தப் பெற்றோருக்கு அந்த மாணவர்களின் உயிரைத் திருப்பித்தரமுடியுமா? எனவே, இது போன்ற நேரத்தில் நான் கோழையாக இருப்பதில் தவறில்லை' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஒரு பிரச்சனையை எப்படி அணுகவேண்டும் என்பதை அறிந்து அதன்படி செயல்படுபவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்கள் இந்தி மொழி ஆதிக்கத்தை மறுத்து தமிழகத்தில் இருமொழிக் கொள்கையைக் கொண்டு வந்தார். அதனைப் பற்றிய ஒரு செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ள நினைக்கின்றேன். அது இதுவரை செய்தித் தாள்களிலோ நூல்களிலோ வராதது. இருமொழிக் கொள்கை குறித்த சட்ட ஆக்கத்திற்கான திட்டவரைவை சமர்ப்பிப்பதற்கு முன் அச் சட்டவரைவைக் குறித்துப் பேச கிரின்வேஸ் சாலையில் இருந்த சட்ட அமைச்சர் மாதவன் இல்லத்தில் அண்ணாவும் பிற சட்டமன்ற உறுப்பினர்களும் கூடினோம். அண்ணா அவர்கள் இந்தி மொழியை நீக்குவதற்கான சட்ட வரைவைப் பற்றி எதிரில் இருந்தவர்களை நோக்கிச் சொன்னார், 'இது என்ன தெரியுமா? இது இந்தியை அறவே நீக்குவதற்கான தீர்மானமாகும்' என்று சொல்லிவிட்டு இந்திமொழியை நீக்குவதற்கான தீர்மானம் இப்படி இருக்கலாம் என்று தீர்மானத்தைப் படித்துக் காட்ட ஆரம்பித்தார். அங்கு அமர்ந்திருந்த சட்டமன்ற உறுப்பினர் பொன் சொக்கலிங்கம் எழுந்து எழுந்து உட்கார்ந்துக் கொண்டிருந்தார். சிதம்பரம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர். அண்ணாவிடம் ஏதோ சொல்ல வேண்டும் என எழுந்திருக்கிறார். பின் தைரியம் இல்லாததால் உட்கார்ந்து விடுகின்றார். அதனை அண்ணா பார்த்து விட்டார். 'என்ன பொன்சொ? என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?' என்று கேட்டார். 'சொல்லலாமா' என்று தயங்கிக் கொண்டே பொன்சொ பேச ஆரம்பித்தார் 'இந்தியை அறவே ஒழிக்கணும் என்று தீர்மானம் கொண்டுவரப் போறீங்க இல்லையா? இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தால் என்னவாகும்? டெல்லிகாரன் நம்ம சீட்டைக் கிழிச்சு நம்ம எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பிடுவான். எந்த ஜென்மத்தில நான் எல்லாம் எம்.எல்.ஏ. ஆக முடியும். எப்படியோ எம்.எல்.ஏ.வாக வந்துட்டேன். ஒரு ஆறு மாதம் எங்களை எம்.எல்.ஏ.வாக வைச்சிருங்க; அதுவரை நாங்கள் எம்.எல்.ஏ. என்றாவது சொல்லிக் கொள்கின்றோம். ஒரு ஆறு மாதமாவது தீர்மானத்தை தள்ளிப் போடுங்கண்ணா' என்று

சொன்னார். சிலர் அதனை ஆமோதிக்கும் வகையிலே சிரித்தார்கள். உடனே அண்ணா சொன்னார்: 'உட்காருய்யா.... நாம் என்ன பிறக்கும் போதே மினிஸ்டராகவா பிறந்தோம் அல்லது மாதவன் தான் பிறக்கும் போதே சட்ட அமைச்சராகப் பிறந்தாரா? இல்லை நான்தான் காஞ்சிபுரத்தில் பிறக்கும் போதே முதல்வரா பிறந்தேனா? இவை எல்லாம் இடையில் மக்கள் கொடுத்தப் பதவி' என்று சொல்லி விட்டு, 'நீங்க என்ன நினைக்கிறீங்க, டெல்லிக்காரன் தலையிடுவான் அப்ப அவன் தலையிட்டு ஆட்சியைக் கவிழ்த்து விடுவான் என்று நினைக்கிறீங்க அப்படியே நடக்கட்டும். ஆட்சி கலைந்தா அப்படியே விட்டுவிடுவாங்களா? 'இந்தியன் கான்ஸ்டிடியுஷன்' என்ன சொல்லுது? ஆட்சியைக் கலைச்ச ஆறு மாதத்திற்குள்ளாக மறுதேர்தலை நடத்தியாகனும். ஆகவே மறுதேர்தல் வரும். இதே பொன்சொவை சிதம்பரத்தில் நிற்க வைப்போம். இதே மாதவனை இராமநாதபுரத்தில் நிற்கவைப்போம். நாம் எல்லாம் மக்களிடம் போய்ச் சொல்வோம். நீங்க எங்களைத் தேர்ந்தெடுத்ததால் நமது தாய்மொழி பாதுகாப்பிற்காக இந்தியை அறவே நீக்கினோம். எங்களை டெல்லி அரசாங்கம் வீட்டிற்கு அனுப்பிவிட்டது. நாங்கள் மறுபடியும் உங்களிடம் வந்து கேட்கின்றோம். நீங்கள் எங்களுக்கு மறுபடியும் ஓட்டுப் போடுங்கள் என்று கேட்போம். நாம் மீண்டும் வருவோம். பொன்சொ மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக வருவார். பயப்படவேண்டாம். இவை மக்கள்தான் தீர்மானிப்பதே அல்லாமல் அரசு தீர்மானிப்பது அல்ல' என்று சொன்னார். அதன்படி இருமொழிக் கொள்கைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால், பயப்பட்டமாதிரி இன்று வரை ஒன்றும் நடக்கவில்லை. அந்த அளவிற்குத் தான் எடுத்துக் கொண்ட கொள்கையில் உறுதியுடன் திகழ்ந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

திரு. பி.எஸ். சோமசுந்தரம் அவர்கள் மாவட்டக் குற்றவியல் நீதிபதியாக இருந்து உயர்ந்து உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆகியவர். அவர் அண்ணாவின் இரங்கல் கூட்டத்தில் பேசுகையில், 'இந்தி எதிர்ப்பிற்காக அண்ணா அவர்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டார். இந்தி எதிர்ப்புக் குற்றத்திற்காக மூன்றுமுதல் ஆறுமாதம் வரை தண்டனை தரலாம். நான் அண்ணா அவர்களுக்கு அதிகபட்சத் தண்டனையான ஆறுமாத காலத் தண்டனையை வழங்கினேன். அதனை அப்படியே அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அண்ணா அவர்கள் ஒரு சிறந்த பண்புக் கருவூலம். அவரை இழந்ததை எனது சொந்த இரத்தத்தின்

இழப்பாகவே கருதுகிறேன்' என்றார். அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் உயர் நீதிமன்றப் பதவிக்கான பெயர்களின் பட்டியல் வந்திருந்தது. அதில் பி.எஸ். சோம சுந்தரத்தின் பெயரும் இருந்தது. உடனிருந்த மற்றவர்கள் அவரைப் பரிந்துரைக்க வேண்டாம் என்றனர். ஆனால், அண்ணா அவர்கள் சொன்னார்கள்: 'எப்போது அவர் சட்டப்படி நடந்துகொண்டு நமக்கெல்லாம் தண்டனை வழங்கினாரோ அவர்தான் உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆகவேண்டும்' என்று பி.எஸ்.சோமசுந்தரத்தைப் பரிந்துரை செய்தார். அந்தளவிற்கு அண்ணா அவர்கள் ஓர் நடுநிலைமையான தலைவர் ஆவார்.

அண்ணா அவர்கள் மிகவும் எளிமையானவர். அவர் சட்டைப்பையில் மணிபர்சை நம்மால் பார்க்கமுடியாது. அவரின் கைகளில் கடிகாரத்தை நம்மால் பார்க்க முடியாது. தேவையானால் பக்கத்தில் இருப்பவரிடம் மணியைக் கேட்டுக்கொள்வார். அந்த அளவிற்கு எப்பொழுதும் எளிமையாக இருந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய அவரின் எளிமையினை எடுத்துக்காட்ட ஒரு நிகழ்வினைச் சொல்ல முனைகிறேன். ஒருமுறை அண்ணா அவர்கள் இரவு காஞ்சிபுரத்தில் இருந்து சென்னைக்குக் கிளம்பி வந்துகொண்டிருந்தார். இரவில் காரிலும் பேருந்துகளிலும் செல்பவரை கத்திகளைக் காட்டி மிரட்டி வழிப்பறி செய்கிறார்கள் என்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருந்த காலமது. அண்ணாவின் வண்டி சுங்குவார் சத்திரம் தாண்டியிருக்கும். அப்போது உடன் இருந்த அரங்கண்ணல் சும்மா இல்லாமல் ஓட்டுநரைப் பார்த்துச் சொல்கிறார்: 'ஏம்பா டிரைவர், எவனாவது கையைக்காட்டி நிறுத்துவான். நீ உடனே நிறுத்திடாதே. அவன் வழிப்பறிக்காரனா இருக்கப்போறான்; அதனால் நீ நிறுத்தாம போயிக்கிட்டே இரு' என்று சொன்னார். உடனே பக்கத்தில் இருந்த தில்லை வில்லாளன் சும்மா இல்லாமல், 'ஆமா, இவர் உடனே நிறுத்திட்டா கொள்ளைக்காரன் கேட்பான், நாமெல்லாம் பிரபுக்கள். இங்கே ஆளுக்குப் பல லட்சம் சட்டைப் பையில் வச்சுருக்கோம் எடுத்துக் குடுத்துட்டு போவப்போறோம்; நிறுத்துயா நீ! ஒன்றுமில்லைன்னு சொல்லிட்டு போயிட்டே இருக்கலாம்' என்றார். உடனே தூங்கிக் கொண்டிருந்த அண்ணா பாதி தூக்கத்தில் எழுந்து என்னய்யா சொன்னீங்க என்று கேட்டு, 'நான் இப்ப சொல்றேன் தீர்ப்பு' என்று சொல்லி டிரைவரைப் பார்த்து 'நீ நிறுத்தாம போய்யா'

என்றார். 'அண்ணா நீங்களும் பயந்துட்டீங்களா' என்று வில்லாளன் கேட்டார். அதற்கு அண்ணா 'இல்லைய்யா... அவன் நிறுத்துவான். எல்லாரையும் பார்த்து வரிசையா இறங்கச் சொல்லுவான். சட்டைப்பையில் எவ்வளவு இருக்குன்னு துழாவுவான். சட்டைப்பையில் ஒன்றுமிருக்காது. தடவித்தடவிப் பார்த்த அவனுக்கு ஆத்திரமா வரும். உடனே அவன் சொல்லுவான் 'பைசா காசு சட்டைப்பையில் வைக்காதவர்களுக்கு காரு ஒரு கேடா?' அப்படினு சொல்லிட்டு அதிகமான ஆத்திரத்தோடு நம்மை ஓங்கி ஓங்கி அடிப்பான். என் முதுகு தாங்காது . அதனால தயவு செய்து நிறுத்தாமல் போ' என்று சொன்னார். இதுதான் அண்ணாவின் நகைச்சுவை உணர்வும் எளிமையான வாழ்க்கை முறையும் ஆகும்.

இதே அளவிற்கு நகைச்சுவை உணர்வோடு இருந்தவர் ஐயா அவர்கள். ஐயா, அவர்கள் தனது கூட்டத்தில், பலர் கேள்வி கேட்பதும் அதற்குப் பதில் சொல்வதும் ஒரு வழக்கமாக வைத்திருந்தார். ஒரு கூட்டத்தில் ஒரு பார்ப்பன இளைஞன் கேள்வி கேட்டிருந்தான். 'ஐயா, அவர்களே நீங்களே சொன்னீர்கள் பார்ப்பனர்கள் எத்தனை சதவீதம் என்று அதாவது மூன்று சதவீதம் என்றீர்கள். அந்த மூன்று சதவீதத்தைப் பார்த்து ஏன் தொண்ணூற்று ஏழு சதவீதம் பயப்படுகிறது. உங்கள் முழு ஆற்றலை எல்லாம் இந்த மூன்று சதவீதம் இருக்கிற மக்களை ஒழிப்பதற்கு ஏன் செலவு செய்கிறீர்கள்' என்று கேட்டான். அதற்குப் பெரியார் அவர்கள் சொன்னார்கள் 'இது நல்ல கேள்விதான்! மூன்று சதவீதம் பேருக்கு ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார். ஒரு திருவிழாக் கூட்டத்தில் எத்தனையோ பேர் வந்திருப்பார்கள். அதில் மூன்று சதவீதம் பேர் கத்திரிக்கோல், பிளேடுடன் மத்தவங்க பாக்கெட்டை பிக்பாக்கெட் அடிக்க வந்திருப்பார்கள். அங்கிருக்கிற போலீஸ்காரனின் வேலை அப்படி வந்திருக்கும் கூட்டத்தில் யார் யார் கத்திரிக்கோலுடனும் பிளேடுடனும் வந்திருக்கிறான் என்பதைப் பார்த்துக் கவனிப்பதே. அப்படித்தான் நான் ஒரு போலீஸ்காரன், அந்த மூன்று சதவீத ஜேப்படிக்காரர்களைக் கண் காணிப்பதுதான் எனது வேலை' என்று பதில் சொல்லியிருக்கிறார். இதுபோன்று உடனுக்குடன் நகைச்சுவையுடன் பதில் அளிப்பவர் ஐயா அவர்கள்.

ஐயா அவர்கள் ரஷ்யாவிற்கு சென்றுவந்தார். அதை நாம் நன்கு அறிவோம். ஐயா அவர்கள் ரஷ்யாவிற்கு சென்று வந்ததும் பல குழந்தைகளுக்கு 'ரஷ்யா', 'மாஸ்கோ' என்றெல்லாம் பெயர் வைத்தார். பொதுவுடைமைக் கருத்தால் ஈர்க்கப்பட்ட அவர்

குத்தூசி குருசாமியின் மகளுக்கு 'ரஷ்யா' என்று பெயர் வைத்தார். குழந்தை என்பவர் மகனுக்கு 'மாஸ்கோ' என்று பெயர் வைத்தார். கூட்டம் ஒன்றில் ஒருவர் கேள்வி கேட்டார்: ஐயா, 'நீங்கள் ரஷ்யாவிற்கு போய்விட்டு வந்து ரஷ்யா, மாஸ்கோ என்றெல்லாம் நாட்டின் பெயரை குழந்தைகளுக்கு வைக்கிறீர்கள். இது அநியாயமாக இருக்கிறது. நீங்கள் 'லெனின்' என்று பெயர் வைத்தால் கூட அதை ஏற்றுக்கொள்வோம். ஆனால் இப்படி ஊர்களின் பெயர்களை வைப்பது அநியாயம்' என்றார். அதற்கு ஐயா, அவர்கள் 'நீங்கள் மட்டும் திருப்பதி, சிதம்பரம், பழனி என்று ஊர்ப் பெயரை வைப்பீர்கள் ஆனால் நான் மட்டும் ரஷ்யா என்று வைக்கக்கூடாது என்று கேட்டார். அதேபோல் மற்றொரு கூட்டத்தில் நபர் ஒருவர் கேள்வி கேட்டார்; ஐயா, 'நீங்கள் கடவுள் இல்லை என்று பேசுகிறீர்கள், கூட்டம் நடத்துகிறீர்கள். கடவுள் உங்கள் முன் நேரில் வந்தால் என்ன செய்வீர்கள். கட்சியைக் கலைத்து விடுவீர்களா' என்று கேட்டார். அதற்கு ஐயா அவர்கள் சட்டென்று பதில் சொன்னார்கள். 'கடவுள் என் முன் வந்தால் நான் கடவுள் இருக்கிறார் என்று சொல்வேன். நீங்கள் முதலில் கடவுளை என் முன் கொண்டு வாருங்கள்' என்றார். ஏனென்றால் ஐயா, அவர்கள் கடவுள் என்பதைப் பற்றி நன்கு அறிந்தவர்.

இன்று பிள்ளையார் சதுர்த்தி தமிழகத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. பெரியார் அவர்கள் பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டத்தை நடத்தியவர். இப்படி பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டத்தை நடத்தியபோது கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள், 'பெரியார் அவர்கள் இப்படி சிலை உடைப்புப் போராட்டத்தை நடத்துகிறாரே இது எந்த விதத்திலாவது தொழிலாளர்களுக்கு உதவுமா?' என்று கேள்வி கேட்டார்கள்; அதற்கு பெரியார் அவர்கள் பதில் சொன்னார்கள் 'நீங்கள் (கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள்) பாடுபட்டு துறைமுகத்தில் பளுதூக்குகிற தொழிலாளியின் சம்பளத்தை பத்து ரூபாயிலிருந்து பனிரெண்டு ரூபாய்க்கு உயர்த்தப் பாடுபட்டு அதனை வாங்கித் தந்திருப்பீர்கள். ஆனால், அவன் என்ன செய்வான்? அதிகமாய் கிடைத்த இரண்டு ரூபாய் பிள்ளையாரால் கிடைத்தது என்று சொல்லி இரண்டு ரூபாய்க்கு கடையில் தேங்காய் வாங்கி தெருவில் உடைத்துவிட்டுச் செல்லுவான். ஆக அவன் பெற்ற இரண்டு ரூபாய் கூடுதல் சம்பளம் வீடு போய்ச் சேராது. ஆகவே, இந்தப் பிள்ளையார் சிலையை உடைப்பதால் அவன் திருந்துவான். அவன் பணம் வீடு போய்ச் சேரும். எனவே,

நான் பிள்ளையார் சிலைகளை உடைக்கின்றேன்' என்றார். பெரியார் அவர்கள் இப்படிப் பகுத்தறிவோடு செயல்பட்டவர்.

ஒருமுறை நான் விமானத்தில் வந்து கொண்டிருந்தேன். வாகினி ஸ்டுடியோவின் அதிபர் நாகிரெட்டி உடன் வந்தார். அவர் அண்ணாவைப் பற்றி என்னிடம் எடுத்துச் சொன்னார். 'உலகத் தமிழ் மாநாட்டை அண்ணா அவர்கள் நடத்திய காலமது. அப்பொழுது எல்லோரும் அண்ணாவை சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். எனவே நானும் (நாகிரெட்டி) அண்ணாவைப் பார்க்க அவர் இல்லத்திற்குச் சென்றேன். அவர் அப்போதுதான் சட்ட சபையிலிருந்து வந்தார். உடனே என்னிடம் வந்து நலம் விசாரித்தார். நான் 'மெயில்' பத்திரிக்கையில் வந்திருந்த அவரின் பொருளாதாரம் குறித்த உரையைப் பற்றிப் பாராட்டிச் சொன்னேன். அவர் உடனே 'நான் பதவியில் இருப்பதால் அப்படி இப்படியென்று என்னைப் பலரும் பாராட்டுகிறார்கள்; அந்தக் கூட்டத்தில் நீங்களும் சேர்ந்துவிடாதீர்கள். நீங்கள் மற்ற மாநிலங்களுக்கும் மற்ற நாடுகளுக்கும் செல்லக்கூடியவர்கள். எனவே, நீங்கள் அங்கிருக்கக் கூடிய நலத்திட்டங்களைப் பற்றியும் விவசாயத் திட்டங்களைப் பற்றியும் எனக்கு அறிந்து சொன்னீர்கள் என்றால் நலமாயிருக்கும். நேரில் இல்லையென்றாலும் கடிதம் மூலம் எழுதி அனுப்பினீர்கள் என்றால் படித்து அறிந்து கொள்வேன்' என்று தன்னைப் பாராட்டுவதைத் தவிர்த்தவர் அண்ணா என்று நாகிரெட்டி அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அந்த அளவிற்கு புகழ்ச்சியில் நாட்டம் இல்லாதவர் பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள் முதல்வராகப் பதவியேற்றதும் வீட்டிற்கு வந்தார். அங்கு அவரின் நாற்காலி மேசைகளெல்லாம் மாற்றப்பெற்று புதிய அலங்காரமான நாற்காலிகள் சோபாக்கள் போடப்பட்டிருந்தன. உடனே அவர் தனது மனைவி இராணியை அழைத்து 'என்ன இது?' என்றார். இராணி அவர்கள் 'இனி உங்களைப் பார்க்க வெளிநாட்டுத் தூதுவர்கள், பெரியவர்கள் எல்லாம் வருவார்கள். அப்படி வந்தால் உங்களின் பழைய நாற்காலிகளிலா உட்கார முடியும்? அதனால் புதிய நாற்காலிகளை அரசாங்கத்தில் போட்டிருக்கிறார்கள். அவர்கள் வேலையை அவர்கள் செய்கிறார்கள்' என்றிருக்கிறார். அதற்கு அண்ணா அவர்கள் 'இராணி, பதவி இப்போது வந்தது. பதவி எப்போதும் போய்விடும். அப்போது, இந்த நாற்காலிகளை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அப்பொழுது நாம் பழைய நாற்காலிகளை

எங்குப் போய்த் தேடுவது?. முதலில் இந்த நாற்காலிகளை எடுக்கச் சொல்' என்று சொல்லியிருக்கிறார். இது நடந்து பதினைந்து நாள்களுக்குப் பிறகு முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்களின் வீட்டில் இருந்து அண்ணாவின் வீட்டிற்குத் தொலைபேசி வந்திருக்கிறது. அண்ணாவின் உதவியாளராக இருந்த கஜேந்திரன் எடுத்திருக்கிறார். தொலைபேசியில் 'நாங்கள் பழைய முதல்வர் பக்தவத்சலம் வீட்டிலிருந்து பேசுகிறோம். அரசாங்க அலுவலர் வீட்டிலுள்ள நாற்காலிகளையெல்லாம் எடுக்க வேனுடன் வந்திருக்கிறார்கள். இவற்றை எடுத்துவிட்டால் வீடே வெறிச்சோடிப் போய்விடும். எனவே, எங்களுக்குப் பதினைந்து நாள்கள் அவகாசம் கொடுத்தால் நன்றாயிருக்கும்' என்று கேட்டிருக்கிறார்கள். இதனை கஜேந்திரன் அண்ணாவிடம் தெரிவித்திருக்கிறார். அதற்கு அண்ணா 'நம் அரசுக்கு இருக்கிற வேலைகளில் இதுதான் ரொம்ப பெரியவேலையென்று முதலில் அங்க போயிருக்கிறாங்க. உடனடியாக இதனை நிறுத்தச் சொல்லுங்கள். பக்தவத்சலம் அவர்கள் பயன்படுத்தியப் பொருட்களை யாரும் எடுக்கக்கூடாது. அரசாங்க வேன் அந்தப் பக்கம் இனி போகவே கூடாது' என்று சொல்லியிருக்கிறார். ஒரு புறத்தில் அண்ணா அவர்கள் தனது வீட்டில் அரசு பொருட்களை வேண்டாம் என்கிறார் மற்றொரு புறத்தில் பக்தவத்சலம் அவர்கள் பயன்படுத்தியப் பொருட்களை எடுக்கக் கூடாது என்று தடை விதிக்கிறார் என்றால் அதுதான் பேரறிஞர் அண்ணா அவர்களின் உயரிய பண்பு.

ஒருமுறை கூட்டம் ஒன்றில் பாரி செல்லப்பனின் மகன் அண்ணாவைப் பற்றி ஒருசெய்தி குறிப்பிட்டார்; 'அண்ணா அவர்கள் எழுத்தாளராக தனது புத்தகங்களை பாரி நிலையத்தின் மூலம் வெளியிட்டு வந்தார். மார்ச் மாதம் ஆனதும் எழுத்தாளர்கள் தங்களுக்குரிய பணத்தைத் தேடிவந்து காசோலைகளாக பாரி நிலையத்தில் இருந்து பெற்றுக் கொள்வார்கள். ஆனால், அண்ணா அவர்கள் அப்படி தேடி வருவதில்லை. நாங்களே அண்ணாவின் நூல்களுக்கு கணக்குப் பார்த்து பணத்தை காசோலையாக அனுப்பி விடுவோம். ஒருமுறை அப்படி அனுப்பிய தொகை இரண்டு மூன்று மாதங்கள் ஆகியும் அவரின் காசோலை மாற்றப்படாமல் வங்கியிலேயே பணம் இருந்தது. இதனை அறிந்து அண்ணாவிடம் போய் இதைப்பற்றி எடுத்துச் சொன்னேன்; அப்போது அவர் சொன்னார் 'ஆமாம், காசோலை வந்தது. அதனை அன்று

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் பக்க அடையாளமாக வைத்தேன்; அதை மறந்தேவிட்டேன் இனிதான் அதைத் தேடவேண்டும்' என்றார். அந்த அளவிற்குப் பற்றற்று இருந்தவர் அண்ணா.

அதேபோல் பெரியார் வாழ்வில் நடந்த நிகழ்வு ஒன்றைச் சொல்ல நினைக்கிறேன். என்.டி.சுந்தரவடிவேலு அவர்கள் ஐயாவைப் பார்க்கச் சென்றிருக்கிறார். மரியாதைக்காக ஆப்பிளை வாங்கிச் சென்றிருக்கிறார். அதனை ஐயாவிடம் கொடுத்திருக்கிறார். ஐயா அவர்கள் என்.டி. சுந்தரவடிவேலுவிடம் கேட்டிருக்கிறார்: 'இது எவ்வளவய்யா?' அதற்கு சுந்தர வடிவேலு 'அதற்கு என்னங்கய்யா?' என்றிருக்கிறார் 'பரவாயில்ல சொல்லு' என்றிருக்கிறார் பெரியார். 'நாலணா' என்றிருக்கிறார் சுந்தரவடிவேலு. 'நாலணாவா?! இதற்கு நீங்கள் இரண்டு சீப்பு வாழைப்பழம் வாங்கிக்கொண்டு வந்திருந்தால் இரண்டு மூன்று வாரம் வச்சிருந்து சாப்பிட்டுயிருப்பேனே' என்று சொன்னார் பெரியார். அப்படிப் பொதுவாழ்விலும் தொண்டர்களிடமும் சிக்கன வாழ்வை வலியுறுத்தியவர் தந்தை பெரியார் அவர்கள்.

நன்றியுணர்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர்கள் அண்ணா அவர்களும் தந்தை பெரியார் அவர்களும் ஆவர். தந்தை பெரியார் அவர்களுடன் நிகழ்ந்த ஒரு நிகழ்வைப் பற்றி கே.ஆர். இராமசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஒரு முறை ஆர்க்காடு பக்கம் ஒரு கூட்டம் நடந்திருக்கிறது. அதில் கே.ஆர். இராமசாமி அவர்கள் பேசிவிட்டு இரவில் திரும்பி வந்து கொண்டிருந்திருக்கிறார் வண்டி இராணிப்பேட்டையைத் தாண்டியதும் வழியில் ஐயா அவர்களின் வேன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து, தனது காரை நிறுத்தி விட்டு அங்கு சென்று பெரியாரைப் பார்த்திருக்கிறார். பெரியார் அவர்கள் 'வண்டி பழுதடைந்து நின்று விட்டது, யாரேனும் வந்து சரிசெய்தால்தான் இனி போக முடியும்' என்று சொல்லியிருக்கிறார். உடனே கே.ஆர்.இராமசாமி அவர்கள் தனது வண்டியில் போகலாம் என்று அவரை அழைத்திருக்கிறார். ஆனால், பெரியார் அவர்கள் 'உங்களுக்கு எதற்கு சிரமம்' என்று வர மறுத்திருக்கிறார். இரவு பனிக் காற்றாக இருப்பதால் பெரியார் உடல் நிலைக்கு ஏதேனும் தீங்கு வந்துவிடப்போகிறது என்று சொல்லி வற்புறுத்தி ஐயா அவர்களை அவர் வீட்டிற்கு கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார். அப்போது ஐயா அவர்கள் ராமசாமி அவர்களின் கைகளைப் பிடித்து நன்றி சொல்லியிருக்கிறார்.

இராமசாமி அவர்கள் ஐயாவிடம் 'நீங்கள் எதற்கய்யா எனக்கு நன்றி சொல்ல வேண்டும் நீங்கள் பார்த்து வளர்ந்தவன் நான்', என்று சொல்லி ஐயாவிடம் இருந்து விடைபெற்று வீட்டுக்கு வந்திருக்கிறார். மறுநாள் காலை கே.ஆர். இராமசாமி வீட்டை யாரோ தட்டியிருக்கிறார்கள். கே.ஆர்.இராமசாமியின் மனைவி போய் கதவைத் திறந்திருக்கிறார்; அங்கு ஐயா அவர்கள் பையில் பழங்களுடன் நின்றிருந்தார். கே.ஆர்.இராமசாமி தூக்கத்திலிருந்து எழுந்து வந்திருக்கிறார். பெரியார் அவர்கள் 'உங்களுக்கு நன்றி சொல்லலாம் என்று வந்தேன்' என்று இராமசாமி அவர்களின் கைகளைப் பிடித்து 'நேற்று நீங்கள் அழைத்து வரவில்லையென்றால் ஜுரம் வந்து உடல்நிலை சரியில்லாமல் போயிருக்கும்' என்று சொல்லி நன்றி சொல்லியிருக்கிறார் என்று கே.ஆர்.இராமசாமி அவர்கள் சொன்னார்கள் என்றால் எந்த அளவிற்குப் பெரியார் அவர்கள் தனக்கு உதவியவர்க்கு நன்றியுணர்வுடன் இருந்தார் என்பது நமக்குப் புலப்படும்.

அண்ணா அவர்கள் இறுதிக் காலத்திலும் ஈர நெஞ்சுடன் இருந்தார் என்பதை எடுத்துக்காட்ட ஒரு நிகழ்வைச் சொல்ல நினைக்கிறேன். அவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்க மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அப்போது கும்பகோணத்திலிருந்து ஒரு ஐயர் அண்ணாவிற்கு அஞ்சலட்டை ஒன்று எழுதியிருந்தார். அதில் 'முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு, நான் கும்பகோணத்திலிருக்கிற உங்கள் குடிமகன் எழுதுகிறேன். எனக்கும் உங்கள் வியாதிதான் இருக்கிறது. நானும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் முதலமைச்சராக இருப்பதால் அமெரிக்காவிற்குப் போய் சிசிச்சை பெறுகிறீர்கள். எனக்கு அந்த வாய்ப்பும் வசதியும் இல்லை. ஆகவே எனக்கு அந்த மருந்து கிடைக்க வழி செய்தால் நான் உங்களுக்கு நன்றி சொல்வேன்' என்று சுருக்கமாக அந்த கார்டில் எழுதப்பட்டிருந்தது. அண்ணா அவர்களே நோயின் கொடுமையால் பாதிக்கப் பட்டிருக்கிறார். மற்றவராக இருந்திருந்தால் கோபப்பட்டிருப்பார்கள். ஆனால், அண்ணா அவர்கள் அந்த அஞ்சல் அட்டையை பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டு தன்னை பார்க்கவந்த செழியனை, ராஜாராமைப் பார்த்து, 'நீங்கள் யார் முதலில் தமிழகத்திற்குப் போகப் போகிறீர்கள்' என்று கேட்டு 'கும்பகோணத்திற்கு இந்த மருந்துகளை கொண்டு சேர்த்துவிடுங்கள்' என்று சொன்னார் என்றால் அப்படியொரு அப்பழுக்கற்றத் தலைவரை நாம் என்று காண்போம்?.

அதனால்தான் அவர் மறைவிற்கு இலட்சோபலட்சம் மக்கள் தேடிவந்து கண்ணீர் சிந்தினார்கள். இன்றளவும் அவரின் எழுத்துகள் நம்மிடம் நீங்கா நிலைபெற்றிருக்கின்றன.

நமக்கு ஐயாவும், அண்ணாவும் கிடைத்தார்கள். சிலருக்கு அவர்கள் கிடைக்கவில்லை. அதனால்தான் பிள்ளையார் சிலை ஊர்வலங்களும், மௌடிகக் கூட்டங்களும் இன்று பெருகியிருக்கின்றன. இளைய தலைமுறை இத்தகைய மௌடிகக் கூட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு இளைய தலைமுறை ஐயாவின் எழுத்துகளையும் அண்ணாவின் எழுத்துகளையும் தேடிப் படிக்க வேண்டும். அவர்களின் இலட்சியங்கள் வெற்றி பெற்றால்தான் தமிழன் தமிழனாகத் தலை நிமிர்ந்து வாழ முடியும். ஐயா அவர்கள் 'பக்தி வந்தால் புத்தி போகும்' என்றார். 'மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு' என்று சொன்னார். அதே மாதிரி அண்ணா, 'கத்தியை தீட்டாதே தம்பி, புத்தியைத் தீட்டு' என்று சொன்னார். 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவை நமது உடைமையாக இருக்க வேண்டும்' என்று சொன்னார். 'தொட்டண்ணன் தோட்டத்தில் வெட்டண்ணன் மாடு வந்து மேய்வானேன்', 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று சொன்னார். 'நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்', 'மறப்போம் மன்னிப்போம்' என்று சொன்னார் 'வாழ்க வசவாளர்' என்று சொன்னார்.

இப்படி உயர்ந்த இலட்சியங்களைக் கூறிய பெருமக்கள் இன்று நம்மிடையே இல்லை. ஆனால் அவர்கள் விதைத்துச் சென்ற கருத்துகளும், சிந்தனைகளும் நம்மிடையே வாழ்கின்றன. அவை செழித்து ஓங்க வேண்டும். அப்போதுதான் தமிழகம் மீண்டும் புது ஒளிபெறும்.

# கலை வானில் அண்ணா

## இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன்

நான் பெரியாரைப் பார்ப்பதற்கு முன்பே நாத்திகன் ஆனவன். வத்திலகுண்டு பக்கத்தில் உள்ள சேடப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவன் நான். அப்பா ஒரு கல்வி அதிகாரி. ஒரு முறை அண்ணன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சொன்னார், 'நான் மிகவும் கஷ்டத்தில் வளர்ந்தவன். என் அம்மா வீட்டு வேலை பார்த்து எனக்குச் சாப்பாடு கொண்டு வருவார். ஆனால், தம்பி எஸ்.எஸ்.ஆர். அப்படி அல்ல, வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்' என்பார். அப்படி வசதியானக் குடும்பத்திலிருந்த என்னை ஊரிலிருந்தால் படிக்க மாட்டேன் என்பதற்காக வத்திலகுண்டில் உள்ள பள்ளியில் எம்.சி.சி. படிக்க வைத்தார். இது மதுரை அமெரிக்கன் கல்லூரியின் கிளையாகும். A.M.C.C. அந்தப் பள்ளியில் என்னைப் படிக்க வைத்து ஐ.ஏ.எஸ். ஆக்கவேண்டும் என்பது அப்பாவின் ஆசை.

அப்படி பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது "பாமா விஜயம்" என்ற ஒரு படம் வந்து மாணவர்களாகிய எங்களை அந்தப் படத்திற்குக் கொண்டு சென்று காட்டினார்கள். நானும் படத்தைப் பார்த்தேன். படத்தில் கிருஷ்ணன், ருக்குமணி வீட்டில் இரண்டு நாட்கள் தங்கிவிடுகின்றார். கிருஷ்ணன் பாமா வீட்டிற்கு வருவதற்கு தாமதம் ஆகிவிடுகின்றது. கிருஷ்ணனை எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்த பாமா தோழியிடம் கதவைச் சாத்திவிடு. அவர் வந்தாலும் திறக்காதே என்கிறாள். கிருஷ்ணன் வருகிறார். கதவெல்லாம் சாத்தியிருக்கிறது, அப்போது அவர் "காமினி சத்தியபாமா கதவைத் திறவாய்" என்று பாடுகிறார். பூட்டிய வீட்டிற்குள்ளேயே செல்ல முடியாதவன் இரண்டு பெண்டாட்டிகளை பார்க்கவே இவனுக்கு நேரம் போதவில்லை, இந்த கிருஷ்ணனைப் பார்ப்பதற்காக திருப்பதியில் கூட்டங்கூட்டமாக நிற்கின்றீர்களே அவன் எப்படி உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பான்? என்று கேட்பேன். அவ்வாறு பெரியாரைக் காண்பதற்கு முன்னமே கேட்டவன் நான்.

டிகே.எஸ். நாடகக் குழுவில் இருந்து சென்றவர்கள் தான் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், எஸ்.வி. சகஸ்ரநாமம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி ஆகியோர். அந்த நாடகக் குழுவில் கதாநாயகனாக நடித்தவன் நான் மட்டும்தான். கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பை நானே அவரிடம் கேட்டுப் பெற்றேன். அவ்வாறு நாடகங்களில் நடிக்கும்போது ஈரோட்டில் பெரியார் அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. நான் எப்போதும் முழங்கை வரையிலான கையுடைய சட்டையை போட்டுக்கொண்டு அதை கைமுட்டியின் மேல்வரை மடித்துவிட்டுக் கொள்வேன். ஒருமுறை பெரியார் என்னிடம் கேட்டார் "நான் வரும்போதேல்லாம் பார்க்கின்றேன், சட்டையை மடித்து மடித்துவிட்டு இருக்கீங்க, அதனை வெட்டிவிட்டால் இரண்டு கைக் குட்டை ஆகுமில்லையா" என்றார். அந்த அளவிற்குச் சிக்கனம் அவர்.

அந்தக் காலத்தில் அண்ணாவை சி.என். அண்ணாதுரை என்றால்தான் சிலருக்குத் தெரியும். அவரைப் பலரும் எழுத்துக்களில்தான் பார்த்திருக்கிறோமே அன்றி நேரில் பார்த்ததில்லை. நான் அண்ணாவின் எழுத்துகளை மிகவும் இரசிப்பேன். அவரின் எழுத்துகள் மிகுந்த கருத்துடையதாக இருக்கும். நான் அண்ணா அவர்களை முதன்முறையாகப் பார்த்தச் சம்பவம் குறித்து சொன்னால் மிகவும் சுவாரசியமாக இருக்கும். அப்போது ஈரோட்டில் டி.கே.எஸ். அவர்களின் நாடகக்குழு நாடகங்களை நடத்தி வந்தது. அப்போது ஈரோட்டில் பெரியார் தலைமையில் திராவிட நாடு பத்திரிக்கைக்காக "சந்திரோதயம்" நடத்தப்படவிருந்தது. அதனைப் பற்றிச் செய்திகள் திராவிட நாடு பத்திரிக்கையிலும் வெளி வந்தது. விதவைத் திருமணம் என்பது பற்றியது சந்திரோதயம் நாடகம். டி.கே. சண்முகம் அவர்கள் எங்களை அழைத்துச் சொன்னார். "அண்ணா நமது மேடையில் நாடகம் நடத்தப் போகிறாராம், நீங்க எல்லோரும் வந்துவிடவேண்டும். மேக்கப் போன்ற ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். நான் அண்ணாவை அதுவரை நேரில் பார்த்தது கிடையாது. எனவே அண்ணாவைப் பார்க்கப்போகிறோம் என்ற ஆவலால் எனக்கு இரண்டு நாட்கள் தூக்கம்கூட வரவில்லை. அந்த நாள் வந்தது. வந்தவுடன் டி.கே. சண்முகம், "நீங்கள் வருபவர்களுக்கு மேக்கப் போடவேண்டும்" என்றார். வந்தவர்களுக்கு நாங்கள் மேக்கப் போட்டோம். எனக்கும் ஒரு முகம் கிடைத்தது. நான் மேக்கப் போட்டுக்கொண்டிருந்தேன். சரியாக ஒத்துழைக்கவில்லை என்பதால் "இப்படித் திரும்புய்யா,

மேல... பாருய்யா, கழுத்துல போட வேண்டாமா? இந்தப் பக்கம் திரும்பு..." என்று திருப்பிக் கொண்டிருந்தேன். அங்கு ஈழத்தடிகள் என்று ஒருவர் இருந்தார். வயதானவர்; திராவிட நாடு பத்திரிக்கையில் எழுதுவார். அவர்தான் அண்ணாவோ என்று நான் நினைத்து அடிக்கடி அவரைப் பார்த்துக் கொண்டு இருந்தேன். என்னிடம் மேக்கப் போட்டுக்கொள்பவரிடம் என்னையா "அவர் தானே அண்ணா?" என்று கேட்டேன். அவர் அமைதியாக "இல்லை.. நான்தான்" என்றார் அண்ணா. இவ்வளவுக் கொடுமைப்படுத்துகிறாயே, நான்தான் அண்ணா என்பது போல் இருந்தது அவர் சொன்ன பதில்.

மறுநாள் பெரியாரின் வீட்டில் தங்கியிருந்த அண்ணாவைப் பார்க்க நாங்கள் எல்லோரும் சென்றோம். நாடகம் நன்றாக இருந்தது என்றோம். எனக்கு "இவன் மேக்கப் போடும்போது செய்த குறும்பு இருக்கிறதே தாங்க முடியலையா.." என்றார் என்னைப் பார்த்து. இதனை அவர் பல முறை என்னைப் பார்க்கும்போதெல்லாம் சொல்லியிருக்கிறார்.

"நான் வந்த பாதை" என்ற ஒரு நூலை எழுதிக்கொண்டு இருக்கிறேன். அதில் அண்ணாவைப் பற்றி பல மறக்க முடியாத செய்திகள் உள்ளன. நாடகக் கம்பெனியில் அண்ணாவுடன் பழகத் தொடங்கி கம்பெனி விடுமுறை நாட்களில் நான் அடிக்கடி அண்ணாவைப் பார்க்க காஞ்சிபுரம் போய் வருவேன். மேடைகளில் பேசுகின்றபோது அண்ணா, "தம்பி இராஜேந்திரன் அரைக்கால் சட்டை போட்டதிலிருந்து என் சுட்டு விரலைப் பிடித்துக்கொண்டு அரசியலுக்கு வந்தவன்" என்று அடிக்கடி சொல்லுவார். நாடகக் கம்பெனியில் இருந்தபோது எனக்கு "மாடர்ன் தியேட்டரி"லிருந்து சினிமாவில் நடிப்பதற்கான அழைப்பு வந்தது. நான் நடிக்கப் போனேன். அப்போது அண்ணா எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில்,

> தம்பி உன் கடிதம் கிடைத்தது. நான் பத்து நாட்களுக்கு முன் திருச்சி வந்தபோது நீ நாடகத்தில் நடிக்கவில்லை என்று கேள்விப் பட்டேன். சினிமாவிற்கு நடிக்க ஒப்புக் கொண்டது நல்லது. ஆனால் ரேட் விஷயத்தில் இரண்டொரு படங்களுக்கு ரேட் வீதம் எப்படியும் இருக்கலாம். மேலும் கான்ராக்ட் வரும்போது ரேட் விஷயம் தகுந்தபடி இருக்க வேண்டும். இப்போது ஒப்புக்கொண்டது ரொம்பவும் குறைவு. எனினும்

முதல்முறை பரவாயில்லை. படத்தில் நடிக்கும்போது வேறு படங்களில் நாடகங்களில் நடிக்க உனக்கு உரிமை இருக்க வேண்டும் என்பதாக அக்கிரிமெண்டு எழுதிக் கொள்ள வேண்டும். சினிமாத் துறையில் நீ மேலும் முன்னேற்றம் அடைந்து புகழுடனும் நல்ல வளுவுடனும் நல்ல வருமானத்துடனும் திகழவேண்டும். வேஷப் பொருத்தமும் நடிப்புத் திறனும் இல்லாதவர் எல்லாம் நல்ல தொகை வாங்குகிறார்கள். அதனால், நீ வெற்றி பெறுவாய். நீ இளைஞன். எனவே ஒப்பந்தங்கள் செய்யப்படும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வெற்றி நிச்சயம் பெறுவாய். ஓய்விருக்கும்போது இங்கு வந்துபோக வேண்டுகின்றேன். மற்றபடி உன் சுகத்தைப் பற்றி அவ்வப்போது எழுதவும். சேலத்தில் செவ்வாய் பேட்டை சுயமரியாதைச் சங்கம் உள்ளது. அங்கு சென்று விசாரித்தால் ஏ. சித்தையன் என்பவரை உனக்கு காட்டுவார்கள் அவர் உனக்கு உதவியாக இருப்பார்.

என்று எழுதியிருந்தார். மேலும்,

சினிமாவில் நடிக்க இப்போது ஒப்புக் கொண்டத் தொகை ரொம்பக் குறைவு இனிமேல் புதிய ஒப்பந்தங்கள் வந்தால் அவர்களை என்னிடம் அழைத்து வரவேண்டும் நான் அவர்களிடம் பேசுவது நல்லது. சினிமா உலகம்...... ஜாக்கிரதை; இளைஞன்; பாதுக்காக்கப்பட வேண்டிய பருவம்; இதனை உணர்ந்து, நடந்து, வெற்றியைத் தேடிப் பெற எனது வாழ்த்துக்கள்

என்றும் அவர் எழுதியிருக்கிறார்.

அண்ணாவுடன் மிக மிக நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை பெற்றவன் நான். ஐம்பதாவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகின்றபோது ஈ.வி.கே. சம்பத் அவர்களைச் சந்தித்தேன். அண்ணாவின் பிறந்த நாள் கொண்டாடுவது பற்றி பேசினேன். அதற்கு அவர் 'அண்ணாவை நான் சம்மதிக்க வைக்கிறேன்' என்று அவரிடம் சொல்லிவிட்டுப் போனார். அதன்படி அவரிடமிருந்தும் சம்மதமும் பெற்றேன். சொன்னபடி

விழா ஏற்பாடு செய்யப்பட்டது. 'அண்ணாவின் ஐம்பத்தொன்றாவது பிறந்தநாளையொட்டி ஐம்பத்து ஒரு பொருட்களைப் பரிசாகத் தருகின்றேன்' என்றேன். விழாத் தலைவராகப் பேராசிரியர் வந்திருந்தார். அவரிடம், மேஜை, நாற்காலி, கட்டில், தங்கத்தில் பொடி டப்பா என ஐம்பது பொருட்களைக் கொடுத்தேன். அவர் 'எங்கே ஐம்பத்து ஓராவது பொருள்' என்று கேட்டார். என் பாக்கெட்டில் "எனது உயிர்" என்று எழுதப்பட்டிருந்த சீட்டை எடுத்துக் கொடுத்தேன். அன்று இரவு எங்கள் வீட்டில் சாப்பாடு. சாப்பிடுவதற்காக நானும் அண்ணாவும், பேராசிரியரும் காரில் சென்றோம். அப்போது அண்ணா சொன்னார். 'இறுதியில் சரியா பேச்சுவரல...... என்னையா! செய்துட்ட என்னால் ஒன்றுமே பேசமுடியவில்லை நீ எவ்வளவு நாள் வாழவேண்டியவன் 51வது பொருள் என் உயிர் என்று சொல்லலாமா?' எனச் சங்கடப்பட்டார்.

சினிமாவில் நான் நடித்துக் கொண்டிருக்கின்றபோது அண்ணா அவர்கள் கூட்டம் ஒன்றிற்கு என்னிடம் தேதி கேட்டு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில்,

> பொன்னேரிக்கு அடுத்த ஆரணியில் பிப்ரவரி பதிநான்காம் தேதி நானும் தோழர் ஆற்காடு தங்கவேலன் எம்.என்.சி. அவர்களும் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியில் நீயும் கலந்துகொள்ள இசைவு தந்து அனுப்பவும். எஸ்.எஸ்.ஆர். கலந்து கொள்வார் என்று ஆரணியிலும் சுற்று வட்டாரத்தில் உள்ள ஊர்களிலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆகவே மேற்கண்ட நிகழ்ச்சியில் நீ கலந்து கொள்ள இசைவு தரவும்.
>
> சி.என். அண்ணாதுரை

என்று கையெழுத்துப் போட்டு, தேதியிட்டு அனுப்பியிருந்தார் அண்ணா.

அண்ணா மறைவை என்னால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தேன். பத்திரிக்கைகளுக்கு தெரியக்கூடாது, இரகசியமாக இருக்க வேண்டும் எனச் சொல்லியிருந்தேன். இந்த விஷயம் எப்படியோ "ஐயா' தந்தை பெரியாருக்குத் தெரிந்துவிட்டது. அவர் வந்து என்னைப் பார்க்கின்றார். எப்படி அவருக்குத் தெரிந்தது

என்று தெரியவில்லை. யாரோ அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். அப்போது ஐயா சொன்னார் "இந்த வயசுல நான் வந்து ஆஸ்பத்திரியில் படுத்திருக்கணும், நீங்க வந்து ஆஸ்பத்திரியில படுத்திருக்கீங்க. நான் வந்து பார்க்கின்றேன். இது உங்களுக்கே நியாயமா?... உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்றார். அவ்வாறாக அண்ணாவின் பிரிவை என்னால் அவ்வளவு சுலமாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஆக அண்ணா முதல் அமைச்சராக இருந்து மறைந்தாலும், கடனாளியாகவே மறைந்தார்.

அண்ணா எப்போதும் எளிமையை விரும்பக்கூடியவர். அண்ணா மறைவிற்குப்பின் எம்.ஜி.ஆர். என்னைக் கூப்பிட்டு "உனக்குத்தான் எல்லா விஷயங்களும் தெரியுமேய்யா (அண்ணாவிற்கு) என்ன கடன் இருந்தாலும் நாம் இருவரும் சேர்ந்து அடைத்துவிடுவோம்" என்றார். "வேண்டாம் அண்ணே" என்று கூறிவிட்டேன். அண்ணா கடனாளியாய் இறந்தார் என்று மற்றவர்களுக்குத் தெரியவேண்டும். ஆகவே, எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் சேர்ந்து அவர்களின் ஒரு மாத சம்பளத்தைக் கொண்டு அண்ணாவின் கடனை அடைக்க வேண்டும் என்றேன். அதன்படியே கடனை அடைத்தோம். அப்படியும் அவர் கடன் அடையவில்லை. அப்படியாக அரசியலில் நேர்மையுடன் வாழ்ந்தவர் அண்ணா அவர்கள்.

நாடகத்திலும் சினிமாவிலும் அக்கிரகாரத் தமிழே பேசப்பட்டு வந்தது. அதனை மாற்றி செந்தமிழை மேடைகளில் சினிமாவில் பேசவைத்தவர் அண்ணா. "சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்' என்ற நாடகத்தில் நான் சந்திரமோகனாக நடித்துவந்தேன். சிவாஜி கதாபாத்திரத்தில் சிவாஜி கணேசன் நடித்தார். காகப்பட்டர் வேடத்தில் அண்ணா அவர்கள் நடித்து வந்தார். மாவீரன் சிவாஜி பெரிய புரட்சி செய்து மக்களைத் திரட்டி மகத்தான சாம்ராஜ்ஜியத்தை அமைக்கின்றான். அவரின் தளபதியாகத்தான் நான் நடிக்கின்றேன். ஆங்காங்கு சில வேலைகளைச் செய்துவிட்டு நான் வருவேன். அங்கே சிவாஜி பட்டம் கட்டிக் கொள்ளக்கூடாது. ஏன் என்றால் அவன் சூத்திரன் என்று ஒரு கூட்டம் கிளம்புகின்றது. அதில் காகப்பட்டர் சொல்வார், 'பிரம்மனின் முகத்தில் தோன்றியவன் பிராமணன். நெஞ்சில் தோன்றியவன் சத்திரியன். முழங்காலில் தோன்றியவன் வைசியன். பாதத்தில் தோன்றியவன்தான் சூத்திரன். எனவே சூத்திரனான சிவாஜி முடிசூட்டக்கூடாது' என்று காகப்பட்டர் கூறுவதாக அண்ணா எழுதியிருப்பார்.

நான் (சந்திரமோகன்) வெளியில் இருந்து வருவேன். வீரர்கள் சொல்லுகிறார்கள்

> சந்திரமோகன், கேட்டாயா செய்தியை நமது மன்னருக்கு ஆளத் தகுதியில்லையாம்". நான் சொல்வேன் "சொன்னவன் நாக்கு நரம்பரக்கனும். கேட்ட உன் செவிகள்......ம், அப்படியே இருக்கின்றனவே, சொரணையற்ற சோற்றுத்துருத்திகளே எங்கே இருக்கிறது அந்த வஞ்சனைக் கூட்டம் என்னால் முடியவில்லை. இந்தச் சொல்லைக் கேட்க சகிக்கவில்லை. மாண்டு போன மானிலத்திற்குப் புத்துயிர் ஊட்டிய உத்தமனை ஆளத் தகுதி யில்லை என்பதும் தரணி முழுதும் ஆளத் தகுதியுடைய நமது தலைவனை; ஆளத் தகுதியற்றவன் என ஒரு ஆற்றல் அற்ற கூட்டம் சொல்வதா...? எதிலே தகுதியில்லையாம் வீரத்திலா.... தீரத்திலா.... விவேகத்திலா.... கம்பீரத்திலா... நமது தலைவருக்கு ஆளத் தகுதியில்லை என்றால் இந்த மண்டலம் மானிலத்தில் இருக்கவே தகுதியில்லையே!. கேவலம் இந்த மாமிசப் பிண்டங்கள் நாய் நரி தின்னவும் லாயக்கற்றவாயிற்றே, எனக்குக் கூறுங்கள், எந்த தகுதி குறைவாம் நமது ஈடில்லா தலைவருக்கு'.

இதுபோலவே,

> டார்ட்டாரி தேசத்துப் புரவிகள் மீதமர்ந்து, தகதகவெனக் கவசம் பூண்டு, பளபளக்கும் கட்கம் ஏந்தி, போர்க்குணம் படைத்த மக்கள் புயலெனப் புகுந்தபோது, காய்ந்த புல்லைக் கையிலேந்தி பிடித்துத்திரிந்தக் கூட்டம் என்ன செய்தது? தாங்கள் யார்? தங்களுடைய வீர தீரம் எத்தகையது? மகாராஜ் எமது கண்களுக்கு மராட்டிய நாட்டிலே மார்தட்டி நின்று, மகத்தானப் போராட்டங்களை நடத்திய வெற்றி வீரராக காட்சியளிக்கிறீர். கட்கமெடுத்து, புரவி மீதேறி, காடுமலை கடந்து சென்று கடும் போரிட்ட வீரன். ஆனால் அவர்கள் கண்களுக்கு ஒரு சூத்திரராகத் தெரிகிறீர். கண்ணினும் கருத்திலும் கடும் விஷம் இருக்கிறது

> காவலா! மராட்டிய மண்டலத்தைக் கமண்டல நீர் தெளித்து அவர்கள் உண்டாக்கவில்லை. மராட்டியரின் ரத்தத்தைச் சிந்தி இந்த மண்டலத்தைப் பெற்றோம். யாக குண்டத்தின் விளைவல்ல மராட்டியம். தியாகத் தீயிலே தோன்றிய தேசம். இந்த வேலையை வேதம் ஓதும் அவர்கள் செய்யவில்லை. நாம் செய்தோம்; நம்மை நிந்திக்கிறார்கள் சூத்திரர்கள் என்று. அதனை நாம் ஏற்றுக் கொள்வது நமது வீழ்ச்சியின் அறிகுறி.

என்பேன்.

கதைத்தமிழில் அண்ணா முதல் பாகத்தைத் தொடங்கி வைக்கிறார் என்றால், இரண்டாம் பாகத்தை கலைஞர் தொடங்கி வைக்கிறார். கலை உலகத்தில் தமிழ் தமிழாகப் பேசப்பட்டது. பேரறிஞர் அண்ணா தொண்டர்கள் மீது நிறைய நம்பிக்கை வைத்திருப்பவர். கட்சி நிதிக்காக கடலூரில் நாடகம் ஒன்றை நடத்தித்தர அம்மாவட்டச் செயாளர் இரா. சாம்பசிவம் மாவட்டக் கழக நிதிக்காக ஒரு நாடகம் நடத்தித்தரும்படி என்னிடம் கேட்டுக் கொண்டார்.

நாடகம் நடத்துவது என்பது அதிகப் பொருட்செலவை ஏற்படுத்தும். எனவே "கண்ணகி வில்லிசை' நிகழ்ச்சியை நடத்தித் தருகின்றேன் என்றேன். அண்ணா "கண்ணகி வில்லிசை' நிகழ்வை ராஜேந்திரன் இலங்கையில் நடத்தியதை டேப்ரிக்கார்டரின் மூலம் தான் கேட்க முடிந்தது. அதனைக் கடலூரில் நடத்துவது என்றால் மகிழ்ச்சி" என்று சொல்லி அந்த நிகழ்வுக்கு ஒப்புக் கொண்டு தலைமையும் தாங்குவதாகச் சொன்னார் அண்ணா. அதன்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. மக்கள் பெரும் திரளாக வந்தார்கள். நிதியும் குவிந்தது. நிகழ்வின் இறுதியில் அண்ணா அவர்கள் பேசினார்கள்.

> தம்பி இராஜேந்திரனைப் பற்றி நான் ஏற்கனவே எழுதியிருக்கின்றேன். அவன் அரைக்கால் சட்டைப் போட்டக் காலத்திலிருந்து எனது சுட்டு விரலைப் பிடித்து அரசியலுக்கு வந்தவன் என்று. திராவிட முன்னேற்ற கழகத்தால் வளர்ந்தவன் அல்ல தம்பி இராஜேந்திரன். இந்த கழகத்தை வளர்ப்பதற்காக தன்னை ஒப்படைத்துக் கொண்டவன் என்று சொல்லிக் கொள்ளுவதிலே எனக்குப் பெரு

மகிழ்ச்சி. முதல் தடவையாக எனக்கு ஐம்பதாவது பிறந்த நாளை சர்வகட்சித் தலைவர்களை அழைத்து மாநாடு போன்ற மாபெரும் விழாவை எடுத்து எனக்கு ஐம்பது பவுன் கொடுத்தான். அந்த விழா நடத்த ஒப்புக்கொள்ள மறுத்திருந்தால் அவனால் தாங்கிக் கொள்ள முடியாது என எனக்குத் தெரியும். கொள்கை பெரிதெனச் சொல்பவன் மட்டும் அல்ல. தான் உழைத்துச் சம்பாதித்தப் பணத்தில் பெரும் பகுதியை கழக வளர்ச்சிக்காகவே கொடுத்தவன் தம்பி இராஜேந்திரன். கழகம் நடத்திய போராட்டங்களில் நடிகர்கள், வக்கீல்கள், டாக்டர்கள் ஆகியோர் பங்குகொள்ளக் கூடாது என்று கழகம் முடிவு எடுத்தப் பின்புகூட அப்படியானால் எனது நடிகர் தொழிலை விட்டுவிடுகிறேன் என என்னிடம் சொன்னவன் தம்பி இராஜேந்திரன். கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி கொடுத்தால்கூட எந்தப் புராணப்படத்திலும் நடிக்க மாட்டேன் என இறுதிவரை உறுதியாக இருந்து வரும் ஒரே நடிகன் தம்பி இராஜேந்திரன். தமிழகத்திலே ஏன் உலகத்திலே ஒரு நடிகர் தேர்தலில் நின்று வெற்றிப் பெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார் என்ற பெருமை தம்பி இராஜேந்திரனுக்கு உண்டு. தென்பகுதியில் கழகம் வளரக் காரணமாக இருந்தவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்களில் ஒருவராக இருப்பவர் தம்பி இராஜேந்திரன் என்றால் இதை யார் மறுக்கக்கூடும். கலைப்பணியை ஒதுக்கி விட்டு கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டவர். ஒரு சமயம் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சுதந்திர தினத்தைத் துக்க நாளாகக் கருதி அவரவர் வீட்டின் உச்சியில் கருப்புக் கொடியைக் கட்டி அவரவர் எதிர்ப்பைக் காட்டவேண்டும் என கழகம் முடிவெடுத்தது. அதன்படி தம்பி இராஜேந்திரன் வீட்டிலும் கருப்புக்கொடி கட்டப்பட்டது. உடனே காங்கிரஸார் கூடி கடுமையாகக் கூச்சலிட்டனர். வீட்டு முன்பு பெருங்கூட்டம் கூடிவிட்டது. அமைதிப் படுத்த வேண்டிய காவலரே அத்துமீறி

வீட்டில் புகுந்து மாடியில் இருந்த கருப்புக் கொடியைக் கழட்டி எடுத்து வந்தார்கள். இரவில் படப்பிடிப்புக்குச் சென்று திரும்பி வந்த தம்பி இராஜேந்திரனைக் காவலர் விவரம் கேட்கின்றனர். பின் போலிஸாரால் கைது செய்யப்படுகின்றார். பின் நீதிமன்றம், வழக்கு, முடிவில் எஸ்.எஸ்.ஆர். அவர்களுக்கு ஆறுமாத காலம் தண்டனை வழங்கப்படுகின்றது. பின் காவல் வண்டியில் ஏற்றப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப் படுகின்றார். தம்பி எஸ்.எஸ்.ஆர். அச்சமயத்தில் இருபத்தி இரண்டு படங்களில் கதாநாயகனாக நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார். பதினொரு காருடன் பங்களா வாசம், பணியாட்கள் பல பேர், படத்தில் நடித்தால் ஒரு நாளுக்குப் பல ஆயிரங்கள் ஊதியம், இவ்வளவையும் விட்டுவிட்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் அடைபட்டு மகழ்ச்சியோடு இருக்கிறான் தம்பி இராஜேந்திரன். காங்கிரஸ் தலைவர் காமராஜர் போன்றோர் அல்லது என் போன்றோரோ அரசாங்கத்தை எதிர்த்துப் போராட்டம் செய்து சிறையில் அடைக்கப்பட்டால் அதனால் நாங்கள் பாதிக்கப்படுவதில்லை. வீட்டுச் சாப்பாட்டை விட சிறைச்சாலையில் போடுகின்ற சாப்பாடு திருப்தியாக இருக்கும். ஆகவே இது தண்டனை அல்ல, பெரிய தியாகம் அல்ல. வெள்ளையனை எதிர்த்து நமது நாடு விடுதலைப் பெற பண்டிதர் நேரு போராடினார். யார் அந்த நேரு? இந்தியாவில் பெரிய கோடீஸ்வரக் குடும்பத்தில் பிறந்தவர். இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தபோது கல்லூரியில் நான்கு வாசல்கள் இருக்குமாம், நான்கு வாசல்களிலும் நான்கு கார்கள் நிறுத்தப்பட்டிருக்குமாம் அவருக்காக. நேரு அவர்கள் எந்த வாசலில் வந்தாலும் அங்கு நிறுத்தப்பட்டுள்ளக் காரில் சென்றிடுவாராம். அப்படி சீமான் வீட்டுப் பிள்ளை பண்டிதர் நேரு. வெள்ளையனின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிச் சிறையில் அடைக்கப்பட்டுப் பல கொடுமைகளை அனுபவித்திருக்கின்றார். அவர் செய்தது உண்மையில் மிகப் பெரிய தியாகம். நமக்கு

> கிடைத்திருக்கிற நேரு உண்மையிலேயே தம்பி இராஜேந்திரன் என்று', தம்பி முன்னாளில் சிறைச்சாலையில் அடைபட்டு கிடந்தபோது நான் தம்பி பற்றி சொல்லிக் கொள்வேன்.

என்றார். பின் கண்ணகி வரலாற்றையும் நிகழ்ச்சி பற்றியும் எனது கலை நிகழ்ச்சி கழகத்திற்கும் கழகத்தினருக்கும் எவ்வாறு தேவைப்படுகின்றது என்று கூறி பாராட்டினார். அண்ணாவின் பாராட்டு என்னை கழகத் தொண்டில் இன்றும் ஈடுபட உரமாக அமைந்தது எனலாம். அண்ணாவும் அவரைத் தொடர்ந்து கலைஞரும் கலைத்துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

அண்ணா அவர்களுக்கு "அறிஞர்" என்ற பட்டத்தை யார் கொடுத்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்று தெரியவில்லை. தஞ்சையில் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, சிவாஜி போன்றோர்தான் முதலில் நடித்துக் கொண்டிருந்த நாடகக் கம்பெனியுடன் தகராறு செய்து விட்டுத் தனியே பிரிந்து, காஞ்சிபுரம் வந்துவிட்டனர். அண்ணாவிடம் வந்து தனியே நாடகக் கம்பெனி நடத்த வேண்டும், அதற்கு நாடகம் ஒன்றை எழுதித்தாருங்கள் என்று கேட்டிருக் கிறார்கள். அண்ணா யோசித்தார். நாடகம் நடத்த வேண்டும் என்றால் திரைகள் வேண்டும், உடைகள் வேண்டும், லைட்டுகள் வேண்டும். இன்னும் சீன் மற்றப் பொருட்கள் வேண்டும். இவை இல்லாமல் வெற்றிகரமாகச் செய்ய முடியாது. ஆகவே, ஒரே இரவில் அந்தக் கதை முடியனும். ஒரே இரவுதான். கதை முடிவதால் அதிக லைட், சீன்கள் தேவையில்லை, உடை மாற்றமும் கிடையாது அதனால் அண்ணா இரவு எட்டு மணிக்கு அறைக்குள் சென்று காலை விடிவதற்குள் ஒரு நாடகத்தை எழுதி முடித்தார். அதுதான் "ஓர் இரவு" என்ற நாடகம். தஞ்சாவூரில் தொடர்ந்து ஆறுமாத காலம் வரை நடந்தது. நான் அதில் முக்கியமான ஒரு பாத்திரமாக நடித்தேன். நாடகத்திற்கு கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகிக்கிறார். அப்படி அவர் வந்தபோது அந்த நாடகத்தை அவர் அணுஅணுவாய் இரசிக்கின்றார். ஒரு பெரிய பணக்காரன் ஒரு அறியாப் பெண்ணை கற்பழித்துவிட்டு வயிற்றில் குழந்தையையும் கொடுத்துவிட்டு, "இனிமேல் போய்விடு' என்பான். அதனை ஓர் விவசாயி பார்த்துக் கொண்டிருப்பான். அப்போ அவள் கேட்பாள் "இப்படி விட்டுவிட்டு போறீங்களே இது நியாயமா?" என்பாள். அதற்கு அவன் "பணம் தரேண்டி

உனக்கு. வேண்டுமென்றால் பணம் எவ்வளவு வேண்டுமோ கேளு" என்பார். பார்த்துக் கொண்டிருந்த விவசாயி வந்து அந்த பணக்காரனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு கேட்பான். "பணமா தரே நீ", "நான் கேட்கிற பணத்தைத் தவிர உன்கிட்ட வேற என்ன இருக்கு சொல்லு.. பார்க்கலாம்". அப்போது அவன் சொல்வான். "இரும்புப் பெட்டிக்கும் இதயத்திற்கும் சம்பந்தம் வைக்கலாமா" என்பான். இது போன்ற கருத்துள்ள வசனங்களைப் பார்த்த கிருஷ்ணமூர்த்தி - அன்று எதெச்சையாக அண்ணாவும் வந்திருந்தார் - பேசினார், "தமிழ் நாட்டில் நான் ஒரு பெர்னாட் ஷாவைப் பார்க்கின்றேன். அவர்தான் அண்ணா என்றார்'. நான் போஸ்டர்களைப் பார்த்தேன் அதில் சி.என். அண்ணாதுரை என்று எழுதியிருக்கு. நாடக ஆசிரியரையும் மற்றவரையும் பார்த்துக் கேட்டுக் கொள்கின்றேன். இனிமேல் அவரை "அறிஞர் அண்ணா" என்று அழைக்க வேண்டும்' என்று சொன்னார் கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

நண்பர்களே! உங்களுக்கு ஒரு செய்தியைச் சொல்கிறேன். அதைக் கேட்டால் நீங்கள் வருத்தப்படுவீர்கள். நான் எனது சொந்தத் தயாரிப்பில் டைரக்டராகவும் கதாநாயகனாகவும் நடித்து ஒரு படத்தை எடுத்துக் கொண்டிருந்த சமயம் அது. படம் எடுத்துக் கொண்டிருந்தபோது பிலிம் தீர்ந்துவிடும் என்ற நிலை வந்தது கைவசம் பிலிம் எதுவும் இல்லை. எனவே பிலிம் ரோல் வாங்கிவர பி.டி. கார் ஒன்றை அனுப்பிவைத்தேன். நிறைய மக்கள் நடிக்கிற காட்சி அது. கார் வெகுநேரம் ஆகியும் வரவில்லை. எனக்கு கோபம் வந்தது. எனவே மேனேஜரை அழைத்து சத்தம் போட்டேன். போன கார் இன்னும் வரவில்லை என்றார். உடனே எனது காரை அனுப்பி வைத்து பிலிம் ரோல் வாங்கிவரச் சொல்வோம் என்று சொல்லி எனது காரை அனுப்பி வைத்தேன். ஷூட்டிங் நன்றாகவே நடந்தது. பிரேக் டைமில் நான் வெளியே வந்தேன். அந்த கார் டிரைவர் வெளியே நின்று கொண்டிருந்தார். மேனேஜர் சொன்னார். "உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும்" என்றார். "என்னையா விஷயம் முதலில் வீட்டுக்கு அனுப்பு" என்றேன். மீண்டும் அவர் அண்ணா உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும் என்றார். "சரி மேக்கப் ரூமுக்கு வா'' என்றேன். அவர் ரூமுக்கு வந்தார். "சொன்னால் நீங்கள் சங்கடப்படுவீர்கள், அது யார் காரு என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். "யார் காரு?" என்று கேட்டேன். "அண்ணியாருடைய கார்'' என்றார். அண்ணியார் அவர்கள் பி.டி.கார் வைத்து வாடகைக்கு விட்டு

சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். வருத்தப்பட்டுப்போய் மறுநாள் ஷூட்டிங்கை நிறுத்திவிட்டு, அந்த காரை ரிப்பேர் செய்ய டிவி.எஸ்.க்கு அனுப்பிவிட்டு, கையில் பத்தாயிரம் ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டு போனேன். பக்கத்தில் அடையார் கே.ஆர். ராமசாமி அவர்களின் வீட்டிற்குப் போய்விட்டு போகலாம் என்று நினைத்து அவர் வீட்டிற்குச் சென்றேன்.

நான் பணத்தை எனது மேனேஜரிடம் கொடுத்து வைப்பது வழக்கம். எனது மேனேஜர் தட்சிணாமூர்த்தி, முன்பு கே.ஆர்.ஆர். இடம் மேனேஜராக இருந்தார். கே.ஆர்.ஆர்., தட்சிணாமூர்த்தி நூறு ரூபாய் பணம் கொண்டுவா என்றார். பையனிடம் கொடுத்து அனுப்பி டிபன் வாங்கி வரச் சொல்லியிருக்கிறார் - இது எனக்குத் தெரியாது-டிபன் வந்தது, நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது கே.ஆர்.ஆர். சொன்னார். "தம்பீ- இந்த டிபன் நீ கொடுத்த நூறு ரூபாய் தான்" என்றார். நான் சொன்னேன் அண்ணே நான் மாதம் ஐந்தாயிரம் ரூபாய் அனுப்பிவிடுகிறேன் என்றேன். இதனை எல்லாம் அண்ணன் எம்.ஜி.ஆரிடம் சொன்னேன் நானும் மாதம் ஐந்தாயிரம் தரேன் என்றார். அதன்படி அண்ணியார் அவர்களுக்கும் பணம் அனுப்பி வந்தேன். எம்.ஜி.ஆர். காலத்தில் அண்ணியார் அவர்களுக்கு வரவேற்பு தரப்பட்டு சிறப்பு செய்யப்பட்டது. ஏன் இதனைச் சொல்கின்றேன் என்று கேட்டால் அண்ணாவைப் பற்றி பேசுகின்ற இந்தக் காலத்தில் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு அண்ணாவின் குடும்பம் எப்படி இருந்தது என்பதை நீங்கள் தெரிந்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகதான். பிறகு அண்ணாவின் பெரிய மகன் "பரிமளம்' வீட்டிற்கு வந்தான். "அண்ணே இப்ப பணம் வேண்டாம். நான் சம்பாதிக்கின்றேன், வேண்டுமென்றால் உங்களிடம் வந்து கேட்கின்றேன். அம்மா சொல்லி அனுப்பிச்சாங்க. பணம் வேண்டாம் அண்ணே" என்று சொன்னார்கள். அண்ணா ஒரு சகாப்தம்.

அண்ணாவுடன் சில வேடிக்கையான சமாச்சாரங்கள் நடந்தது உண்டு. அண்ணா என்னிடம்தான் பெரும்பாலும் காரை கேட்பார். மற்றவர் காரில் போக மாட்டார். ஒரு முறை நாடகக் குழுவில் இருந்த நண்பர் வீட்டுத் திருமணத்திற்கு தலைமைத் தாங்க அண்ணாவை அழைத்திருந்தார்கள். அண்ணாவுடன் திருமணம் நடைபெற உள்ள சேலத்திற்கு நானும் போனேன். அண்ணா டிரைவரின் பக்கத்து சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

என்னை பின் சீட்டில் சென்று தூங்கச் சொன்னார். அண்ணாவிற்கு தெருக்கூத்து என்றால் ரொம்பப் பிடிக்கும். கள்ளக்குறிச்சியைத் தாண்டியதும் அங்கு தெருக்கூத்து (சத்தியவான் சாவித்திரி) நடந்து கொண்டிருந்தது. அதனைப் பார்த்த அண்ணா டிரைவர் அர்ச்சுனனை பார்த்து சொல்லியிருக்கிறார். "அர்ச்சுனா, காரை இப்படியே ஓரமா நிறுத்து' என்று சொல்லி விட்டு அண்ணா கூத்து பார்க்கச் சென்று விட்டிருக்கிறார்கள். தூங்கிக் கொண்டிருந்த எனக்கு என்னடா இது கார் அசைவது மாதிர தெரியவில்லை. சத்தம் வேறு கேட்கிறது என்று கண்திறந்துப் பார்த்தேன். கூத்து நடந்து கொண்டிருந்தது. நானும் போய் கூத்தைப் பார்க்க உட்கார்ந்துக்கொண்டேன். எவனோ ஒருவன் சொன்னான். "இதோ பார் எஸ்.எஸ்.ஆர்." என்றான். கூட்டம் கூடிவிட்டது. பிறகுதான் அண்ணாவைப் பார்த்தேன். அவர் முண்டாசு பனியனுடன் இருந்தார். அப்படியும் மக்கள் அடையாளம் கண்டுகொண்டனர். பின் மேடைக்கு ஏறினோம். எமதர்பார் காட்சிமேடையில் அண்ணா பேசினார். அப்போது வேடிக்கையாகச் சொன்னார். "எங்களுக்கு ஆயுள் இன்னும் அதிகமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். அதனால் இத்தோடு விட்டுவிடுங்கள். நாங்கள் சேலம் போகின்றோம். போய்விட்டு வருகின்றோம்" என்றார். பிறகு நானும் அவர்களிடம் பேசி விடைபெற்றுச் சென்றோம்.

இன்னும் ஓர் நிகழ்ச்சி. கோயம்புத்தூரில் ஒரு பொதுக் கூட்டம் அண்ணா வந்திருக்கின்றார். அவரிடம் ஒரு பை இருக்கும். ரொம்பவும் பழைய காலத்துப் பை அது. பெரியாருடன் இருந்த காலத்தில் வாங்கிய பை அது. கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த தோழர்கள் எல்லாம் வந்திருந்தார்கள் அவர்களிடம் அண்ணா போய் "கூட்டத்தை ஆரம்பியுங்கள். நான் குளித்துவிட்டு வருகிறேன்" என்றார். அண்ணா பையைத் திறந்து பார்த்தார். அதில் வேட்டி இருக்கிறது, சட்டையைக் காணோம். சட்டையை எடுத்துவைக்க மறந்துவிட்டார். கடைக்குச் சென்று சட்டையை வாங்கி வர நேரமும் இல்லை. ஏனென்றால் கூட்டம் ஆரம்பித்து விட்டது. எனவே, எனது சட்டை ஒன்றை வாங்கிப் போட்டுக் கொண்டார். அது அவருக்குத் தொளதொள என்றிருந்தது. சட்டையின் கை அவரின் கையையும் தாண்டித் தொங்கிக் கொண்டிருந்தது. கூட்டத்திற்கு வந்தார். எல்லோரும் ஒரு மாதிரியாகச் சிரித்தார்கள். அண்ணா பேசினார். எல்லாம் ஒரு

மாதிரி என்னைப் பார்க்கிறீர்கள் என்னவென்று தெரிகின்றது. எனக்கு ஒன்றுமில்லை. சட்டையை எடுத்துவைக்க மறந்து விட்டேன். தம்பி இராஜேந்திரனின் சட்டையைத்தான் போட்டிருக்கின்றேன் என்றார். இது போன்று அண்ணாவுடன் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

முதலில் நான் "பராசக்தி'யில் நடித்தேன். பின் "பணம்" என்ற படம். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுடையது. அடுத்தது "சொர்க்க வாசல்'. அதில் கே.ஆர்.ஆர்., பத்மினி, அஞ்சலி தேவி போன்றோர் நடித்தனர். அதில் அஞ்சலி தேவி அம்மாவுக்கு ஜோடியாக நான் தான் நடிக்க வேண்டும் என்பதை மனதில் வைத்து கதை எழுதியிருக்கிறார் அண்ணா. அஞ்சலி தேவி அந்தக் காலத்திலேயே பெரிய நடிகை. அண்ணா என்னைக் கூப்பிட்டார். "வா ஸ்டுடியோவிற்கு போவோம்' என்றார். போனேன். அங்குத் தயாரிப்பாளர் சோமுவை அழைத்து, "இராஜேந்திரன் ஷூட்டிங் இல்லையா" என்றார். "அவரைப் போட்டால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால், அஞ்சலிதேவி பெரிய நடிகை அவர்களிடம் சொல்வதற்குத் தயக்கமாக இருக்கிறது" என்றார். அப்போது அஞ்சலி தேவியின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. நீயே போய் அந்த அம்மாவிடம் பேசு" என்றார் அண்ணா. கோயம்புத்தூரில் எடிசன் தியேட்டரில் நாங்கள் நாடகம் நடத்தி வந்தோம். அந்த நாடகங்களை அஞ்சலிதேவி தொடர்ந்துப் பார்த்திருக்கிறார்கள். அந்த அம்மாவும் ஒரு நாடக நடிகைதான். நான் அந்த அம்மாவிடம் போய் சொன்னேன். "இந்த தடவை உங்களுக்கு ஜோடியாக என்னை தான் நடிக்கத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்" என்றேன். "அப்படியா, வெரி குட். நல்ல செலக்ஷன், வாய்ஸ் ரொம்ப பிரமாதமாக இருக்குமே" என்றார். சோமுசார், கோவையில் இவர் நடித்த நாடகங்களை நான் பார்த்திருக்கிறேன். நல்ல தோற்றம். துடி துடிப்பான நடிப்பு இந்த வேடத்துக்கு அண்ணாவின் வசனங்களைப் பேசி நடிப்பதற்கு மிகப் பொருத்தமானவர். பிறகென்ன! நான் நிமிர்ந்து நின்றேன் பிறகு அண்ணாவோடு வீட்டுக்குத் திரும்பினேன்.

**அண்ணா புகழ் வாழ்க!**

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| நவீன நாடகங்களும் ஊடகங்களும் | 50.00 |
| மொழிபெயர்ப்பு ஒரு கவின் கலை | 75.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மூவர் தமிழ் – மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |

**671 அறிஞர்களின் பார்வையில் பேரறிஞர் அண்ணா 145.00**